தாய் நாட்டிலும் மேலை நாடுகளிலும் தமிழியல் ஆய்வு

பதிப்பாசிரியர்

முனைவர் கு. பகவதி
முனைவர் செ. ஜீன். லாரன்ஸ்

International Institute of Tamil Studies
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தமிழ்நாட்டில்

இக்கால இலக்கிய ஆய்வுகள்

முனைவர் சு. வேங்கடராமன்

முன்னுரை

ஐரோப்பியர் வருகையின் விளைவாக ஆங்கிலக்கல்வி காரணமாக நம் தமிழகத்தில் தமிழாய்வு நாற்பதுகளில் தொடங்கியது. பின்னர் எழுபதுகளில் தமிழியல் ஆய்வாக விரிந்த தளங்களுக்குச் சென்றது. அறுபதுகளில்தான் இக்கால இலக்கிய வகைகளான நாவல், சிறுகதை, கவிதை, நாடகம் போல்வன ஆய்வுப் பொருளாகப் பல்கலைக் கழக நிறுவனங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. நம் நாட்டுப் பல்கலைக்கழகங்களில் மட்டுமின்றி இன்று மேலை, கீழை நாட்டுப் பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும் முனைவர் பட்ட ஆய்வுகளுக்குப் (நம் பல்கலைக் கழகங்களில் பி.லிட்., எம்.ஏ., எம்.ஃபில். பட்டங்களுக்கும் இலங்கை, மலேசியா போன்ற கீழை நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களில் எம்.ஏ. பட்டத்திற்கு உரிய ஆய்வுகளுக்கும்) பரவலாக இக்கால இலக்கியம் ஆய்வுப்பொருளாகி உள்ளது; ஆகி வருகின்றது. எழுபதுகளில் முனைவர் பட்ட ஆய்வைச் சனநாயகப்படுத்தி, விதிமுறைகளைத் தளர்த்தி டாக்டர் மு.வ. அவர்கள்,

அனைவரும் ஆய்வு செய்ய வழிவகுத்தார். பல்கலைக் கழக நிதி நல்கைக் குழுவும் வேலைவாய்ப்பு, பதவி உயர்வு இவைகளுக்கு எம்.ஃபில்., பிஎச்.டி. பட்ட ஆய்வுத் தகுதிக்கு முன்னுரிமையும் பின்னர் இன்றியமையாத ஒனறு எனவும் விதிவகுத்து நிதிகளையும் வாய்ப்புகளையும் தரலாயிற்று. இதன் தொடர் விளைவாக நம்நாட்டுக் கல்வி நிறுவனங்களில் ஆய்வுகள் மிகு உற்பத்தியாகப் (mass production) பெருகின. வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் நம் நாட்டுக் கல்வி நிறுவனங்களிலும் நிகழ்ந்துள்ள, நிகழ்ந்துவரும் இக்கால இலக்கிய ஆய்வுகளை மதிப்பிட்டு இவைகளின் இன்றைய நிலையையும் வளர்ந்துவரும் அறிவியல் உலகின் போக்கிற்கு ஏற்ப நாளைய சமூகத்தேவைக்கு ஈடுசெய்யும் வகையில் இந்த ஆய்வுகள் இனி எவ்வாறு அமையவேண்டும் என்றும் பரிந்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பாரதியாரிலிருந்து தமிழ் இலக்கியப் பரப்பின் இக்காலப்பகுதி (modern period) தொடங்குகிறது. நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், உரைநடை, திறனாய்வு ஆகியன இக்காலப்பகுதிகளில் அடங்கும். இவைகளுடன் இதழ்களில் வெளிவந்த படைப்புகள் என்ற நிலையில் தொடர்பு சாதனங்கள் பற்றியும் கணக்கில் கொள்ள வேண்டும். தனி ஆய்வுகளாகவும் பிறமொழி இலக்கியங்களுடனோ ஒரே மொழி இலக்கியங்களுக்குள் வேறு ஒரு படைப்பாளருடனோ ஒப்பிட்டு ஆராயும் ஆய்வுகளும் இப்பிரிவில் அடங்கும். தனிநிலை ஆய்வு, ஒப்பாய்வு, பிறதுறை சார்ந்த பல்துறை அணுகுமுறை (inter disciplinary approach) என்ற நிலைகளில் இவ்வாய்வுகள் நிகழ்கின்றன. கல்வி நிறுவனங்களில் பட்டங்களுக்காக மட்டுமின்றி, வேறுபல நிலைகளிலும் இவ்வாய்வுகள் நிகழ்கின்றன. அவைகளும் இங்கு மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுகின்றன. அவைகளுடன் அமையாமல், கல்வி நிறுவனஞ்சாராத நிலையில் தனிப்பட்ட ஆர்வம் காரணமாகப் படைப்பாளர்கள், திறனாய்வாளர்கள், இதழியலாளர்கள் போன்றோர் தொடர்ந்து இக்கால இலக்கிய ஆய்வில் ஈடுபட்டு இடையின்றிப் பங்களிப்பு செய்து வருகின்றனர். நம்மைப் போன்ற கல்வியாளர்களுக்கு முன்னமே இவர்களின் ஆய்வுகள் தொடங்கி, இன்றுவரை நடைபெற்று வருகின்றன. இத்தகைய ஆய்வுகளும் இங்கு மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுகின்றன.

நிகழ்ந்துள்ள ஆய்வுகள்

இக்கால இலக்கிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட தொடக்க காலத்தில் ஒரு குறிப்பிட்ட படைப்பாளரின் படைப்புக்களை ஆய்வு செய்தனர். இத்தகு ஆய்வுகளில் முன்மாதிரியான இயல் பகுப்புமுறையும் அணுகுமுறையும் வகுத்துத் தரப்பட்டன. இவைகளுடன் கூட, ஒரு கால அடிப்படையில் வெளியான ஒன்றுக்கு மேற்பட்ட படைப்பாளர்களின் ஓர் இலக்கிய வகை (நாவல்/ சிறுகதை/ கவிதை) பற்றிய ஆய்வுகளும் அமைந்தன. இத்தகைய ஆய்வுகளில் கவிதை, நாடகம், நாவல், சிறுகதை ஆகிய வகைகளை உள்ளடக்கம், உருவம், உத்தி அடிப்படைகளில் ஆராய்ந்தனர். எனவே, ஒரு முன்மாதிரியான இயல் பகுப்பு முறையும் அணுகுமுறையும் மேற்கோள்களைத் தந்து விளக்கிக்காட்டும் விளக்கமுறையும் (descriptive method) பகுப்பு முறையும் (analytical) இவ்வாய்வுகளில் காணப்பட்டன. இன்றுவரை, இக்கால இலக்கிய ஆய்வுகளில் இந்த நெறிமுறை நீக்கமற நிறைந்து பின்பற்றப்படுகிறது. இதன் விளைவாக, துறை ஒழுங்குசார்ந்த (discipline oriented) நெறிமுறை - ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வோர் அணுகுமுறை என்ற நிலைமாறி, ஒரே அச்சில் வார்த்தெடுத்தாற்போல, இக்கால இலக்கிய ஆய்வுகள் அமைந்தன. இதன் அடுத்த நிலையில், உள்ளடக்க அடிப்படையில் பரந்த அளவில் ஒரு தலைப்பைத் தேர்வது (விடுதலைக்கு முந்திய தமிழ்ச் சமூக நாவல்கள், தமிழ் நாவல்களில் பாலுறவுச் சிக்கல், இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகளில் அகத்திணை மரபுகள், தாமரைச் சிறுகதைகளில் உள்ளடக்கம் போல்வன), இயக்கங்களின் தாக்கம் (தமிழ்க் கவிதைகளில் மார்க்சியத் தாக்கம், தமிழ் நாவல்களில் காந்தியத்தாக்கம், தமிழ்ப் புனைகதைகளில் பெண்ணியம் போல்வன) என்று ஆய்வுகள் விரிந்த நிலைக்குச் சென்றன. மார்க்சியம், காந்தியம், பெரியாரியம், மேலை இலக்கியத்தாக்கம் என்ற ஆய்வுகளில் அக்கோட்பாடுகளை இக்கால இலக்கிய வகைகளுக்குப் பொருத்திக் காட்டி ஆராயும் நெறி இவ்வகை ஆய்வுகளில் வளர்ந்தது. அரசியல், சமூக, பொருளாதார இயக்கங்களின் கோட்பாடுகளைப் பழுதறக் கற்று இக்கால இலக்கிய வகைகளுக்குப் பொருத்தி ஆராய்ந்ததும் தனிப்பட்ட படைப்பாளர் ஒருவரின் படைப்புக்களில் அக்கோட்பாடுகளின் தாக்கம் பற்றியும் படைப்பாளரின் தனித்தன்மை பற்றியும் மதிப்பிட்டதும்

இவைகளின் சிறப்புக்கள். மரபுவழியான உள்ளடக்க, உருவம், உத்தி அடிப்படையிலான பகுப்புநெறிகளை விடுத்து உள்ளடக்கக் கூறுகளை அரசியல், சமூக, பொருளாதாரக் காரணிகளோடு இணைத்து ஆராயும் நெறி இவற்றில் வெளிப்பட்டது. சமூக உணர்வு, சமூகச்சிக்கல்கள், பெண்கள் படைப்புக்களில் சமூகம், குடும்பச் சிதைவு, அலுவல் மகளிர் சிக்கல்கள், குடும்ப உறவுகள், பெண்மாந்தர் எதிர்கொள்ளும் சிக்கல்கள், சமுதாய மாற்றம், மதிப்புகள் போன்ற ஆய்வுகள் அனைத்தும் இக்கால இலக்கிய வகைகளைச் சமூக நோக்கில் ஆராய்வன. படைப்புக்களின் உள்ளடக்கக் கூறுகளைச் சமுதாயவியல் நோக்கில் ஆராய்வன. சமூகவியலார் இந்தியச் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு கூறிய கோட்பாடுகளைப் படைப்பிலக்கிய ஆசிரியர்களின் எழுத்துக்களுக்குப் பொருத்தி விவாதித்து, தமிழ்ச் சமூக அமைப்பில் ஏற்பட்டுள்ள பண்பாட்டு மாற்றங்களை விளக்கமாக ஆய்ந்துள்ளனர். தமிழ்ஆய்வாளர் இலக்கிய ஆராய்ச்சிகளுக்கு மிக அதிகமாகச் சமூகவியலையும் உளவியலையும் இணைத்துப் பிறதுறை இணைவு ஆய்வுகளாக ஆய்வை ஆக்கியுள்ளனர். இந்த அடிப்படையில் தமிழில் இக்கால இலக்கிய ஆய்வுகள் பாராட்டிற்குரியன. கல்வியாளர் அல்லாதோர் எழுதிவரும் இக்கால இலக்கிய ஆய்வுகளில் காணமுடியாத அறிவியல் நெறிக்குட்பட்ட துறை ஒழுங்குடைய ஆய்வுகள் இவை. பிறநாடுகளில் நிகழ்ந்துள்ள ஆய்வுகளிலும் சமூகவியல், உளவியல் கோட்பாடுகளைப் பொருத்தி விளக்கும் இத்தகு நெறிமுறை இந்த அளவு விரிவாகவும் அழுத்தமாகவும் காணப்படவில்லை. மேலும், இத்தகைய ஆய்வுகளில், சமூகவியல் துறைக்கு உரிய கள ஆய்வு, வினாநிரல், பேட்டி, தனிநிலை ஆய்வு போன்ற தரவுகளைத் திரட்டும் உத்திமுறைகளை இக்கால இலக்கிய ஆய்வுகளில்பயன்படுத்தி வருவதும் பாராட்டத்தக்க பணியாகும். படைப்புகளிலுள்ள தரவுகளைச் சுவைஞர்களிடம் கருத்துக்கணிப்பு செய்து மதிப்பிடவும் தம் ஆய்வு உண்மைகளை வலியுறுத்தவும் இந்த நெறிமுறையைப் பயன்படுத்தி வருகின்றனர். இக்கால இலக்கிய ஆய்வு என்றாலே எளிமையானது என்னும் பண்டித மனப்பான்மையைத் தகர்த்து, அறிவியல் நெறி மிக்க உயர்தர ஆய்வாக இப்பாங்கு ஆக்கியுள்ளது.

உள்ளடக்கம் ஆராயப்பட்ட அளவிற்கு உத்திகள் பற்றியோ வடிவம் (form) பற்றியோ ஆய்வுகள் மேற்கொள்ளப் படவில்லை. அப்படி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலும் உத்தி பற்றியும் படைப்பிலக்கிய வடிவம் பற்றியும் கூறப்பட்டுள்ள மேனாட்டுக் கோட்பாடுகளைப் பொருத்திக் காட்டும் ஆய்வுப் போக்குதான் உள்ளது. நம்முடைய படைப்பிலக்கிய வகைகளைக் கொண்டு இலக்கணம் காணும் முயற்சிகள் அருகியே காணப்படுகின்றன. தொடக்கக் காலத்தில் நிகழ்ந்த தமிழில் சமூக நாவல்கள் பற்றிய ஆய்வு, கல்கியின் சிறுகதைகள் ஆகியவைகளில் கதைப்பின்னல் (plot) குறித்து இம்முறையில் விளக்கம் காணப்பட்டது. 'அகிலன் சிறுகதைகள் ஒரு திறனாய்வு' என்னும் ஆய்விலும் 'தமிழ்ச் சிறுகதைகளில் உருவம்' என்னும் நூலிலும் சிறுகதைகளைக் கொண்டே அவற்றின் அமைப்பு, உருவம் பற்றிய வகைப்பாடும் வரைவிலக்கணமும் காணும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால், பின்வந்த சிறுகதை ஆய்வுகளில் இத்தகு முயற்சி தொடரப்படவில்லை. 'புதுக்கவிதைகளில் முப்பெரும் உத்திகள்' என்ற நூலில் காணப்பட்ட இம்முறை, கவிதை ஆய்வுகளில் தொடரப்படவில்லை. இக்கால இலக்கிய வகைகளை ஆராயும் ஆய்வாளர் ஒவ்வொருவரும் இவ்வாறு செயல்பட்டிருந்தால் தமிழ்ப் படைப்பிலக்கியங்களின் பொதுவான வடிவ, உத்திக் கோட்பாடுகள், தனித்திறன்கள், தமிழ்ப் படைப்பிலக்கியங்களில் மட்டும் காணப்படும் தனிப்பண்புகள், பழமையான வாய்மொழி, செவ்விலக்கிய மரபு சார்ந்த உத்திகள், வடிவக் கூறுகள் என்று பாகுபடுத்தி விளக்கிச் சொல்லியிருக்கலாம். மலேசியா, இலங்கை போன்ற நாடுகளில் தோன்றியுள்ள இக்கால இலக்கிய ஆய்வுகளிலும் இத்தகு ஆய்வு காணப்படவில்லை. 'தமிழ்ப் புனைகதைகளில் நனைவோடை உத்தி' (புதுதில்லி பல்கலைக் கழகம்), நா.பா., மு.வ., ராஜம்கிருஷ்ணன், ஜெயகாந்தன் நாவல்களில் பாத்திரப்படைப்பு ஆகிய ஆய்வேடுகளில் மேனாட்டு இலக்கியக் கோட்பாடுகளைக் கூறி வகைப்படுத்துவதுடன் தமிழ்ப் படைப்பிலக்கியங்களின் தனித்தன்மைகளை வேறுபடுத்தி எடுத்துக்காட்டி, தன்திறன்களை (originality) வெளிப்படுத்தி உள்ளனர். நலம் புனைந்துரைக்கும் நெறியில் இருந்து வளர்ந்து கோட்பாடுகளைப் பொருத்தி ஆராயும் நெறியையும் இலக்கணம் காணும் நிலையையும் இவ்வாய்வுகளில் காண்கிறோம்.

கல்வியாளர்களின் ஆய்வுகள் இளம் முனைவர், முனைவர் பட்டங்களுக்கான ஆய்வுகளாகவும் ஆர்வம் காரணமாக நேரடியான கட்டுரைகள், நூல்கள் என்று வெளியிட்டு வரும் ஆய்வுகளாகவும் இருவகைகளில் அமைகின்றன. அகவயமான திறனாய்வு, மனப்பதிவு ஆய்வு, ரசனை முறை ஆய்வு என்னும் நிலைகளில் நின்றுவிடாமல் காரண காரிய இயைபுடன், அறிவியல் நெறி சார்ந்ததாக நடுநிலையில் வரலாற்றுப் பார்வையும் கொண்டு கல்வி நிறுவன ஆய்வுகள் அமைகின்றன. சான்றுகளை முழுமையாகத் திரட்டல், பதிவு செய்தல், வகைப்படுத்தல், கருத்து விளக்கம் கூறல், கோட்பாடுகளைப் பொருத்திக் காணல் என்ற படிநிலைகளிலான வரன்முறைக்குட்பட்ட ஆய்வியல் நெறியுடன் கூடிய துறை ஒழுங்குடைய கல்வி நிறுவன ஆய்வுகள் - தகவல் திரட்டலில் முழுமையான சான்றுப் பதிவின் ஒரு பகுதியாகக் கல்வியாளர்கள் ஆய்வடங்கல் என்னும் குறிப்பு விளக்கத் தொகைநூல் ஒன்றை நூலாகவோ (அகிலன், மு.வ., ஜெயகாந்தன், ந. பிச்சமூர்த்தி, பாரதியார், திரு.வி.க., பாரதிதாசன்) ஆய்வேட்டின் பின்னிணைப் பாகவோ (கல்கி, முன்ஷி, டி.கே.சி., ராஜம் கிருஷ்ணன், நா.பா., புதுமைப்பித்தன்) உருவாக்கித் தந்தனர். இவை ஆய்வுகளுக்குரிய அடிப்படைக் கருவி நூல்களாகவும் அமைகின்றன. மெய்ம்மைகளை முதன் முதலாகவும் நம்பகத்தன்மையுடனும் தரும் இத்தன்மையால் கல்வியாளர் ஆய்வுகள் சிறப்பும் தனித்தன்மையுமுடையன ஆயின. இதுவரை இக்கால இலக்கிய ஆய்வு செய்தோர் ஒவ்வொருவரும் இத்தகைய கருவிநூல்-ஆய்வடங்கல் ஒன்று உருவாக்கியிருந்தால், இக்கால இலக்கிய வகைகளுக்கு விரிவான நூல் விவரக்கோவை முழுமையானதாகக் கிடைத்திருக்கும். அதன் அடிப்படையில் முழுமையான, சரியான இக்கால இலக்கிய வரலாறு உருவாக்கலாம். ஆயின், பெரும்பாலான ஆய்வுகளில் கிடைத்தவற்றைக் கொண்டு நிறைவடையும் ஆய்வாளர் மனநிலை காரணமாக இப்போக்கு, தமிழ் ஆய்வுலகில் அருகிய முயற்சியாகவே உள்ளது. ஒவ்வொரு படைப்பாளரின் முழுமையான படைப்புக்களையும் ஆய்வாளர் தொகுத்தால் படைப்பிலக்கியவாதியின் கலைக் கொள்கையை உருவாக்கவும் காலந்தோறும் ஏற்பட்ட ஆளுமை வளர்ச்சிக்கு ஏற்ற கலை வளர்ச்சியை அறியவும், படைப்பாக்க நெறி வளர்ச்சி, மொழிப் பயன்பாட்டுத் திறன்

வளர்ச்சி, இதழ்களின் தன்மை, வாசகர்களின் சுவையுணர்வு எழுத்தறிவு மட்டத்திற்கு ஏற்ற படைப்பாக்க நெறி வளர்ச்சி ஆகியவற்றை மதிப்பிட்டு ஆராய இந்த ஆவணப்பதிவு பெரிதும் துணைபுரியும். கல்வியாளர் ஆய்வு இத்தகு விரிந்த பரிமாணங்களையுடையதாக அமையும்.

கல்வி நிறுவனம் சாராத படைப்பாளர், திறனாய்வாளர், பத்திரிகையாளர் போன்றோர் தொடக்கம் முதலே தம் ஆர்வம் காரணமாக முழு ஈடுபாட்டுடனும் அர்ப்பணிப்பு உணர்வுடனும் இக்கால இலக்கியத் திறனாய்வில் ஈடுபட்டு வருகின்றனர். இதழ்களில் கட்டுரைகளாகவும் நூல்களாகவும் இவை வெளிப்படுகின்றன. கல்வியாளர்களுக்கு இருப்பது போன்ற பொருளாதார வசதிகளும் பிறவாய்ப்புகளும் இல்லாத சூழலில் இவர்களின் பங்களிப்பு தொடர்ந்து உள்ளது. அல்கல்வியாளர்களின் (non academicians) ஆய்வுகள் ரசனைமுறையில், மனப்பதிவு ஆய்வுகளாகவே உள்ளன. குழு மனப்பான்மையும் அகவயப்பார்வையும் பிறரைக் கடுமையாக ஏசலும் இலாவணி பாடலுமாகவே இவர்கள் ஆய்வுகள் அமைந்தன. ஆய்வு நெறியின்மை, அணுகுமுறை பின்பற்றப்படாமை, சரியான சான்றுத் தொகுப்பு இன்மை, வரலாற்றுணர்வின்மை, உண்மைகளைத் திரித்தும் மாற்றியும் கூறும் பாங்கு ஆகிய போக்குகளை இவர்கள் ஆய்வுகளில் காணலாம். சிறு பத்திரிகைகளின் வழியாகவே பெரும்பாலும் அல்கல்வியாளர் ஆய்வுகள் தொடர்ந்து வெளிப்பட்டுப் பின் நூல்களாயின. எழுபதுகளின் இறுதி முதல் இவர்களில் ஒருபிரிவினர் முழுவதும் புதிய திறனாய்வுக் கோட்பாடுகளையும் (அமைப்பியல், குறியியல், மார்க்சிய அழகியல், நவீனத்துவம், பின் நவீனத்துவம், பெண்ணியம், தலித்தியம் என) பிறதுறை சார்ந்த அணுகுமுறைகளையும் இக்கால இலக்கிய ஆய்வுகளில் செயன்முறைப்படுத்தினர். இவை சிறு பத்திரிகைகள் வழியாக வெளிப்பட்டுப் பின் நூல்களாக வெளிப்பட்டன. எண்பதுகளிலும் தொண்ணூறுகளின் தொடக்கத்திலும் இப்போக்கு இன்னும் பரவலாகவும் தீவிரத் தன்மையுடனும் செயற்பட்டு வந்தது. சிறுபத்திரிகைகள் வழியாக இவை கல்வியாளர்களின் ஆய்வுகளில் தாக்கம் ஏற்படுத்தின. சிற்றிதழ்களுடன் தொடர்பு கொண்டு அவைகளில் எழுதிப் பங்களிப்புச் செய்துவரும் கல்வியாளர் இப்புதிய காற்றை நிறுவன ஆய்வுகளில் வீசச் செய்தனர். கல்வியாளர்களுடன்

அல்கல்வியாளர்களை இணைக்கும் பாலமாகச் சிறு பத்திரிகைகள் விளங்கி வருகின்றன. இதன் விளைவாக அண்மைக் காலமாக இக்கால இலக்கிய ஆய்வுகளில் மேற்குறிப்பிட்ட பெண்ணியம், தலித்தியம், அமைப்பியல், குறியியல், நவீனத்துவ-பின்நவீனத்துவக் கோட்பாடுகளைப் பொருத்திக் காட்டும் ஆய்வுகள் நிகழ்ந்து வருகின்றன. குறிப்பாகப் பெண்ணியம், அமைப்பியல் சார்ந்த ஆய்வுகள் மிகுதியாகவும் தலித்தியம் அடுத்த நிலையிலும் இக்கால இலக்கிய ஆய்வுகளில் இடம்பெற்று வருகின்றன. சிறுபத்திரிகைகளில் பிற துறைசார்ந்த அணுகுமுறைகளுடன் இக்கோட்பாடுகளை எழுதும் படைப்பாளர், திறனாய்வாளர், கல்வியாளர் போன்றோர், அனைவருக்கும் புரியும் எளிமையான நடையில் குழப்பமற்ற மொழியில் எழுதுவதில்லை. மாறாகத் திட்டமிட்டுச் செயற்கையான நடையில் குழப்பமும் சிக்கலுமிகுந்த நடையில் எழுதி வாசகனை மருட்டுகின்றனர். எவ்வளவு கடினமான கருத்தாயினும் உள்வாங்கிச் செரித்து, தமிழ்மொழியின் இயல்புக்கு ஏற்ற, மொழியமைப்பைச் சிதைக்காத நடையில் அனைவருக்கும் புரியுமாறு எழுதலாம்; எழுதவேண்டும். மாறாக எளிமையாகவும் புரியுமாறும் எழுதினால் நவீனத் திறனாய்வுக் கோட்பாடாக இருக்காது என்னும் செயற்கைக் கற்பித நிலையில் வாசகனை மருட்டும் வண்ணம் இவை மீண்டும் மீண்டும் எழுதப்படுகின்றன. இதன் காரணமாக இத்தகு ஆய்வுகள் குறுகிய வாசகர் வட்டத்திற்குள் நின்று விடுகின்றன. மொழி கடுமையாகக் கடுமையாக இப்புதிய கருத்துக்களின் வீச்சு சுருங்கிப்போகிறது. ஆயினும் கல்வியாளர் சிலர், சிறுபத்திரிகை தளத்திலுள்ள இச்சிந்தனைப்போக்கை உள்வாங்கி, எளிய நடையில் அனைவருக்கும் புரியும் நடையில் எழுதி வருகின்றனர்.

இக்கால இலக்கிய ஆய்வுகள் இனி எதிர்வரும் காலங்களில் பிறதுறைக் கல்வியுடன் ஒருங்கிணைந்த ஆய்வுகளாக அமைய வேண்டும். சமூகவியல், உளவியல், தகவல் தொடர்பியல், மொழியியல், அரசியல், சமூக வரலாறு, பண்பாட்டு மானுடவியல், பெண்ணியம், தலித்தியம் போன்ற பல்துறைக் கல்வி அறிவோடு தொடர்புபடுத்தி இனி ஆய்வுகள் நிகழவேண்டும். மாந்தர் படைப்பாக்க நெறியைப் புனைகதைகளிலும் நாடகங்களிலும் இருந்து அறிவதற்கு அடிமனப்பகுப்பாய்வு, உளவியலாய்வு, தனிமனித சமூக

உறவுநிலைக் கோட்பாடு, சமூக உளவியல் ஆய்வு, கனவுகள்-பாலுறவு குறித்த கோட்பாடுகள் என்பன பெரிதும் துணைபுரியும். இந்தியச் சூழலில், தமிழ்ப்பண்பாட்டுச் சூழலில் கதைமாந்தர் படைப்பாக்க நெறிகளை உருவாக்க நம் தொல்மரபுக் கதைகள், வாய்மொழி இலக்கிய மரபுகள் என்பவை எப்படி உதவியுள்ளன என்று கண்டறியும் ஆய்வுகள் நிகழவேண்டும்.

நம்முடைய சமகால வாழ்க்கையின் சமூகச் சிக்கல்கள், தனிமனிதச் சிக்கல்கள், குடும்பச் சிக்கல்கள், அடிப்படையான பொருளாதார அடித்தளச் சிக்கல்கள், பண்பாட்டு உருவாக்கத்திற்கான காரணிகள், பின்புலம், அரசியல், அதிகார மையங்கள், மாறிவரும் அறிவியல்-தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப மாறும் மதிப்புகள் போன்றவை நம் படைப்பிலக்கியங்களில் வெளிப்பட்டுள்ள பாங்கை ஆராயச் சமூகவியல் கோட்பாடுகள் இன்றியமையாதன. சமூகவியல், அரசியல், பொருளாதாரம் பற்றிய அடிப்படைகூட இன்றி இவற்றை ஆராயமுடியாது. மார்க்சியக் கோட்பாடுகள், காந்தியம், பெரியாரியம் போன்ற கோட்பாடுகளும் இந்தியச் சூழலுக்கு ஏற்ற சமூகவியல் ஆய்வுக்கோட்பாடுகளும் உள்ளடங்கிய அணுகுமுறை இக்கால இலக்கிய ஆய்வுகளுக்கு இன்றியமையாதன.

நம் சமூக அமைப்பில் காலங்காலமாகப் பெண்கள் உரிமை மறுக்கப்பட்டவர்களாக, சார்புநிலையில், இரண்டாந்தரக் குடிகளாகவே இருந்து வருகின்றனர். பாரதி, பாரதிதாசனுடன் தொடங்கும் இன்றைய இலக்கியப் படைப்பாளர்களின் படைப்புகள்தான் பெண் விடுதலையை முன்னெடுத்துச் சென்றன. சகல தளைகளிலிருந்தும் விடுதலை பெற்றுச் சரிநிகர் சமானமாக வாழும் சமூக அமைப்பு உருவாக இப்படைப்புகள் துணை நிற்கின்றன. இவற்றை ஆராய்வதற்கு இந்தியச் சமூகச் சூழலும் காலங்காலமாக இருந்துவரும் பண்பாட்டு மரபுகளும் சமூக, வரலாற்று, அரசியல், பொருளாதாரக் கோட்பாடுகளும் தெரிந்திருக்க வேண்டும். வாசகர் ஏற்புக் கோட்பாடு போன்ற திறனாய்வுக் கோட்பாடுகளை இவைகளில் செயற்படுத்தி, கள ஆய்வு மூலம் இப்படைப்புகளைச் சுவைக்கும் வாசகர் கருத்துக்களை அறியலாம். வாசகர் கருத்துக்களையும் படைப்பின் வழி இலக்கிய கர்த்தா கூறும் சமூகப் பார்வையையும் ஒப்பிட்டு ஆராய்ந்து முடிவுகளை-பரிந்துரைகளை எடுத்துரைக்கலாம்.

இத்தகைய கள ஆய்வு சார்ந்த அணுகுமுறைக்கு நமக்குத்தான் வாய்ப்பும் சூழலும் சாதகமாக இருக்கும். எனவே, இத்தகு அணுகுமுறைகளில் இக்கால இலக்கிய ஆய்வுகளை ஆழமும் நம்பகத்தன்மையுமுடையதாக உருவாக்கிடும் நுட்பமும் திறனும் வெளிநாட்டு ஆய்வாளர்களைக் காட்டிலும் அக ஆய்வாளர்களுக்குத்தான் ஏற்றதாக உள்ளன. அத்துடன், இன்றைய அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி, தொலைத் தொடர்புக் கருவிகள் வருகை காரணமாகப் படைப்பிலக் கியங்களை வாசிக்கும் பழக்கம் குறைந்துவிடும் தற்கால வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்பப் படைப்பிலக்கிய வகைகள் பெற்றுவரும் வடிவ மாற்றம், வெகுசன கலாச்சாரச் சூழல் உருவாக்கும் போலியான மதிப்புகள், உள்ளடக்கம் நீர்த்துப்போகும் தன்மை ஆகியவற்றை மையமிட்டு விரிவான தளங்களில் காலத்தேவைக்கு ஏற்ப ஆராயும் வாய்ப்பும் அக ஆய்வுகளுக்கே (home research) மிகுதி.

படிக்கும் சுவைஞர்களின் பொழுதுபோக்கை முதன்மைப்படுத்தி, வணிக நோக்கில் உற்பத்தி செய்யப்படும், சமூகத் தீமைகள், பாலுறவு வக்கிரங்களை விவரிக்கும் பாக்கெட் நாவல், மர்ம, துப்பறியும் நாவல்களின் ஒரேபடித்தான கதையமைப்பு, வாய்ப்பாட்டு கதைப்பின்னல், படிப்பவரை மயக்கத்தில் ஆழ்த்தும் கனவுலக போதை நிலைக்கு அடிமைப்படுத்தும் மொழிப்பயன்பாடு இவற்றை மொழியியல், சமூக உறவியல், குறியியல், அமைப்பியல் கோட்பாடுகளைப் பொருத்தி ஆராய நிறைய வாய்ப்புகள் உள்ளன. இக்கால இலக்கியப் படைப்புகள் அச்சானவுடன் பலதரப்பு வாசகர்களையும் ஒரே நேரத்தில் சென்று அடைகிறது; பாதிக்கிறது. பொதுநிலையில் அனைவரையும் ஈர்க்கவும் ஒவ்வொரு சுவைஞனையும் தன் அனுபவ வேர்களைக் கண்டு, தன்னை அதனுடன் அடையாளங்கண்டு கரைத்துக்கொள்ளவும் கூடிய தனித்தன்மையுடன் நவீன இலக்கிய வகைகள் உதவுகின்றன. புதிய சமூக அமைப்பு உருவாவதற்கும் எழுத்தறிவு வளர்ச்சிக்கும் இவ்விலக்கிய வகைகள் உதவுகின்றன. சமூகத்தின் எழுத்தறிவு மட்டமும் வாசிப்பு தரமும் கூட இவை துணைபுரிகின்றனவா என விரிந்த நோக்கில் ஆராயும் வாய்ப்பு அக ஆய்வாளர்களுக்கே கூடுதல் ஆக உள்ளது. கல்வி உளவியல் துறைக்கு உரிய களஆய்வு நெறிகளைக் கொண்டு இத்தகைய ஆய்வுகளைச் செய்யவேண்டும்.

நாடக ஆக்கம், திரைப்பட ஆக்கம், சின்னத்திரை வடிவாக்கம் பெறும் புனைகதை நாடகப்பிரதிகளை இலக்கிய ஆய்வாளர்கள் அவ்வத்துறை சார்ந்த தகவல் தொடர்புக் கோட்பாடு, சமூக உளவியல், வாசகர் ஏற்புக் கோட்பாடுகளைப் பொருத்தி ஆராயலாம். இத்தகு ஆய்வுகள் ஒருசில நம் பல்கலைக் கழகங்களில் தான் நடந்துள்ளன.

முடிவுரை

நம்முடைய இக்கால இலக்கிய வகைகளைப் பிறநாட்டுக் கல்வி நிறுவன ஆய்வாளர்கள் ஆய்ந்து உள்ளனர்; ஆய்ந்து வருகின்றனர். இலங்கை, மலேசிய நாட்டு ஆய்வுகளில் அங்குத் தோன்றிய இக்கால இலக்கியப் படைப்புகளை ஆராயும் ஆய்வுகள் சாதாரண நிலையில் அமைந்தவை. அவை பெரும்பாலும் நயம்பாராட்டும் ஆய்வுகளாக உள்ளன. இலங்கைக் கல்வியாளர்கள் தமிழக இக்கால இலக்கியம் குறித்துச் செய்துள்ள ஆய்வுகள் சமூகவியல் கோட்பாடுகளை மார்க்சிய அணுகுமுறையில் பொருத்தி ஆராய்ந்ததன் காரணமாக விரிவான பாராட்டை-தாக்கத்தை ஏற்படுத்தின. துறை ஒழுங்கு சார்ந்த ஆய்வு நெறிமுறை அவ்வாய்வுகளின் அடிப்படைச் சிறப்பாகும். 'தமிழ்ச் சிறுகதை: பொதுமக்கள் குரல்; தனிமனிதக்குரல்' என்ற தலைப்பில் ரிச்சர்ட் ஸ்டாண்டன் கென்னடி மேற்கொண்ட, தமிழ்ச்சிறுகதை வளர்ச்சியை மணிக்கொடி காலம், தேசிய உணர்வுக்காலம் எனக் கால அடிப்படை வேறுபாட்டில் ஆராய்ந்த ஆய்வேடு (கலிபோர்னியா பல்கலைக் கழகம், 1980) குறிப்பிடத்தக்க முயற்சி. ஆயின், அருகிய வழக்காகவே மேனாட்டுப் பல்கலைக் கழகங்களில் இத்தகைய இக்கால இலக்கிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாறாக, நம் பல்கலைக் கழக ஆய்வுகள் பல இந்த வரையறைகளுக்கு மேலே சென்று பல்துறை ஒருங்கிணைப்பு ஆய்வுகளாகத் தரமுடன் உள்ளன. அடுத்தகட்ட வளர்ச்சிக்கு நம்முடைய ஆய்வுகள் செல்ல அடிப்படைத் தேவை பிறதுறைக் கல்வியும் பல்வேறு திறனாய்வு அணுகுமுறைகளும் ஆகும். நயம்பாராட்டலை விடுத்து, விரிந்த தளங்களுக்கு ஆய்வைக் கொண்டு செல்ல வேண்டும்.

தமிழில் ஒப்பியல் இலக்கிய ஆய்வு

முனைவர் ம.செ. இரபிசிங்

ஐரோப்பாவில் 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் பழமை விரும்பிகளுக்கும், முற்போக்குச் சிந்தனையாளருக்கும் இடையே, ஏற்பட்ட மோதல்களின் எதிரொலி; 18ஆம் நூற்றாண்டில் பிரஞ்சு இலக்கியப் படைப்பாளர்களுக்கு ஐரோப்பாவிலுள்ள உயர்நிலை மக்களிடம் கிடைத்த செல்வாக்கு; புனைவியல் இலக்கிய வளர்ச்சியின் தாக்கம்; 1749இல் ஏற்பட்ட பிரஞ்சுப் புரட்சி ஆகியவற்றால் வெளிநாட்டு வடிவங்களுக்கு வரவேற்பு, ஒருமைப்பாடுடைய இலக்கியச் சுவை, பிறர் கருத்தை மதித்து வரவேற்றல், சமத்துவ உணர்வு, பிறநாட்டுத் தொடர்பு, கருத்துப் பரிமாற்றங்கள், மொழி பெயர்ப்புக்கள் ஆகியவை ஏற்பட்டன. இவையே ஒப்பியல் இலக்கியம் தோன்றுதற்குரிய பின்புலமாக அமைந்தன என்பார் உல்ரிச் உயிஸ் டெயின் (Ulrich Weistein, 1973:190-98).

பிரஞ்சு இலக்கியத்தில் காலூன்றிய ஒப்பியல் இலக்கியத்திற்கு வித்திட்டவர்கள் அமரேயும் (Amere), ஏபல் பிரான்கெயிசும் (Abel Francoies) ஆவர். வளர்த்த முன்னோடிகளில் பால்வான்தீகமும், பெட்சும் (Betz)

குறிப்பிடத்தக்கவர்கள். அமெரிக்காவில் அறிமுகப்படுத்தி, உலகளாவிய நிலையில் செல்வாக்கை ஏற்படுத்தியவர் சால்ஸ்.எம். கேய்லே (Charles.M. Gayley) என்பவர்.

ஒப்பியல் என்பதே ஓர் ஆய்வு முறை. அது அறிவியல் சார்ந்தது. அறிவியல் அந்தஸ்து பெற்றது. இலக்கிய ஆய்வை ஓர் அறிவியல் பரிசோதனைப் போல நடத்தவும், அதனைச் சரிபார்க்கவும், மேலும் மேலும் திருத்தமுறச் செய்யவும் ஒப்பியல் இலக்கிய ஆய்வால் இயலும் என்று கருதினார் தெயின் (கைலாசபதி, 1969:43).

ஒப்பியல் இலக்கியம் தனியொரு துறையாகப் பல்கலைக் கழகங்களின் அங்கீகாரத்துடன் தொடங்கப்பட்டது பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில்தான். 1871இல் அமெரிக்காவிலுள்ள கார்னல் (Cornel) பல்கலைக் கழகத்தில் ஒரு பாடமாகும் தகுதி பெற்றது. 1890இல் ஹார்வார்ட் (Harward) பல்கலைக் கழகத்தில் ஒப்பியல் இலக்கியத்திற்கென ஓர் இருக்கை நிறுவப்பட்டது. இன்று நூற்றுக்கணக்கான அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் ஒப்பியல் இலக்கியத் துறை உள்ளது. பிரான்சு நாட்டில் முக்கியமானப் பல்கலைக் கழகங்கள் அனைத்திலும், செர்மனியில் 7 பல்கலைக் கழகங்களிலும், ஆஸ்திரியா, சுவிச்சர்லான்ட், கிழக்கு ஐரோப்பிய நாடுகளான போலந்து, ஹங்கேரி, யுகஸ்லேவிக்கியா, உருசியா போன்ற நாடுகளிலுள்ள பெரும்பான்மையான பல்கலைக் கழகங்களிலும் ஒப்பியல் இலக்கியத் துறை நிறுவப்பட்டுள்ளது (அமியதேவ், 1989:79, 80).

இந்தியப் பல்கலைக்கழகங்களில் மேற்கு வங்காளத்தில், ஜாதாவப்பூர் பல்கலைக்கழகத்தில், 1956ஆம் ஆண்டு ஒப்பியல் இலக்கியத் துறை தொடங்கப்பட்டது. தமிழகப் பல்கலைக் கழகங்களுக்கு அந்த வாய்ப்பு இதுகாறும் கிட்டவில்லை. மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில், தமிழ்த் துறையின் ஒரு பிரிவிலும், ஆங்கிலத் துறையிலும், தெலுங்குத் துறையிலும் ஒப்பியல் என்ற பெயர் இணைக்கப்பட்டுள்ளதே தவிர, ஒப்பியல் முதுகலை வகுப்போ, முழு அளவில் ஒப்பியல் ஆய்வோ அங்கு நடைபெற்றதாகத் தெரியவில்லை.

தமிழில் ஒப்பியல் பண்பையும், பயனையும் முதற்கண் எடுத்துரைத்தவர் ஜி.யு. போப். ஒப்பியல் களங்களையும் வாய்ப்புக்களையும் அடையாளம் காட்டியவர்களுள் வ.வே.சு. ஐயர், எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், எஸ். வையாபுரிப்

பிள்ளை, என்.கே. சித்தாந்தா, ஜே.ஆர். மார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் கிரேக்க இலக்கியங்களுடன் உள்ள ஒற்றுமைகளையே சுட்டினர். எனவே தொடக்ககால ஆய்வுகளெல்லாம், ஹோமரது காப்பியங்களுடனும், கிரேக்க இலக்கியங்களுடனுமே நிகழ்த்தப்பட்டன. அடுத்த நிலையில் நமக்கு அறிமுகமான ஆங்கிலப் புலவர்களான மில்டனும், ஷெல்லியும், கீட்சும் பெருமளவில் ஒப்பிடப்பட்டனர்.

இந்திய இலக்கியப் படைப்பாளர்களுள் இரவீந்திர நாத்தாகூரும் காண்டேகரும், வியாசரும் வால்மீகியும் முக்கியப் பங்குபெற்றனர். அண்டைமொழிகளில், மலையாள இலக்கியப் படைப்பாளர்களுடன் தமிழ்ப் படைப்பாளர்கள் பெருமளவில் ஒப்பிடப்பட்டுள்ளனர். அவர்களுள் தகழி சிவசங்கர பிள்ளை, கேசவதேவ், வள்ளத்தோள், குமரன் ஆசான் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பொதுவாக நோக்கும்பொழுது, தமிழ்ப் படைப்பாளர்களில், பாரதியார்தான் அதிக அளவில் ஒப்பிடப்பட்டுள்ளார். ஷெல்லியோடும், கீட்சோடும், விட்மனோடும், தாகூருடனும், வள்ளத்தோளுடனும், குமரனாசானுடனும் இன்னும் பல பிறமொழிக் கவிஞருடனும் பாரதி ஒப்பிடப்பட்டுள்ளார்.

தொடக்க காலத்தில், தனிநிலையிலுள்ள இலக்கிய அறிஞர்களான, வ.வே.சு. ஐயர், சிதம்பர இரகுநாதன், எஸ். இராமகிருஷ்ணன் போன்றோர் ஒப்பியல் இலக்கிய ஆய்வில் ஈடுபட்டனர். பல்கலைக்கழகப் பேராசிரியர் நிலையில் முழுமையாக முதலில் ஈடுபட்டவர் க. கைலாசபதி. அதன்பின்னர், கா. செல்லப்பன், வி. சச்சிதானந்தம் போன்ற ஆங்கிலப் பேராசிரியர்கள் ஒப்பியல் இலக்கிய ஆய்வில் அறிமுகமாயினர்.

அறுபதுகளில், ஒப்பியல் இலக்கியம், பல்கலைக் கழகப் பாடத்திட்டத்தில், விருப்பப் பாடமாகவும், கட்டாயப் பாடமாகவும் இடம்பெற்றது. அதன்பின்னர், ஒப்பியல் இலக்கியம் பல நிலையில் வளர்ச்சி அடையத் தொடங்கியது.

பல்கலைக் கழகங்களில் நடத்தப்பட்ட தேசியக் கருத்தரங்குகளிலும், உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்குகளிலும் உரிய இடம் கொடுக்கப்பட்டமை மேலும் வளர வாய்ப்பை நல்கியது.

தமிழ் ஒப்பியல் இலக்கிய ஆய்வில் நம் கவனத்தைப் பெரிதும் ஈர்ப்பவர் பேராசிரியர் கைலாசபதி. அவரது பங்களிப்பு கணிசமானது. கிரேக்க வீரயுகப் பாடல்களுடன் பழந்தமிழ்ப் பாடல்களை ஒப்பிட்டு ஆய்ந்த *Tamil Heroic Poetry* ஒப்பியல் ஆய்வில் ஒரு கலங்கரை விளக்கு. 'ஒப்பியல் இலக்கியம்' எனும் நூல் ஒப்பியல் இலக்கியத்திற்கு ஓர் இலக்கணம். 'இருமகா கவிகள்' ஒப்பியல் ஆய்வாளர்க்கு ஒரு முன்னோடி. தவத்திரு. சேவியர் தனிநாயகம் அடிகளாரின் பணியும் மகத்தானது. அவரது *Landscape Poetry in Tamil* எனும் அரிய ஆய்வு, ஒப்பியல் ஆய்வு மேற்கொள்ள விழைவோருக்கு ஒரு கையேடு. அடுத்த நிலையில் நம் கவனத்திற்குரியவராகத் திகழ்பவர் பேராசிரியர் கா. செல்லப்பன். இளங்கோ, பாரதி, பாரதிதாசன் ஆகியோரை, சேக்ஸ்பியர், ஷெல்லி, கீட்சு போன்ற மேலைநாட்டுப் படைப்பாளர்களுடன் ஒப்பிட்டதோடு அமையாது, தொல்காப்பியரின் இயற்கைப் பாகுபாடுகளை நார்த்திராப் பிரையினது (Northrop Frye) இயற்கை பற்றிய பாகுபாடுகளுடன், கொள்கை ரீதியில் ஒப்பிட்டும், அகப்புறப்பாகுபாடு, உள்ளுறை இறைச்சி ஆகியவற்றின் சிறப்புத் தன்மை எவ்வாறு உள்ளது என்பதனை, ரெனவெல்லக் கோட்பாடுகளிலிருந்து சமஸ்கிருதக் கோட்பாடுகள் வரையில் ஒப்பிட்டும் இவைபோன்று செய்துவரும் ஒப்பியல் பணி தமிழுக்குச் செய்துவரும் பெரும் பணியாகும்.

சென்ற 10 ஆண்டுகளாக நடைபெற்றுள்ள ஒப்பியல் இலக்கிய ஆய்வுகளை, எண்ணிக்கை அளவில் கணக்கிட்டால், இந்திய மொழிகளிலேயே தமிழில்தான் அதிக அளவில் ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன என்பது போன்ற ஓர் உணர்வை ஏற்படுத்தும். ஆனால் வங்காளம், மலையாளம், கன்னடம் ஆகிய மொழி இலக்கியங்களில் ஒப்பியல் ஆய்வு அடைந்த வளர்ச்சி தமிழில் இல்லை என்பது புலப்படுவதோடு, மேற் குறிப்பிட்ட ஆய்வுகளில் 80 விழுக்காட்டுக்கு மேல் ஒப்பியல் ஆய்வினுள் அடங்காதவை. கைலாசபதி குறிப்பிடுவதுபோல் "பெரும்பாலானவை போலியானவை" (1969:50) . இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

அண்மைக்காலங்களில் ஒப்பியல் ஆய்வு செய்ய விழைவோரில் பெரும்பான்மையோர், முதுகலைப் பட்டம்

பெற்றபின்னர் மேலும் தன்னைத் தகுதிபடுத்த வேண்டும் என்ற வேட்கையில், எந்த ஒரு ஈடுபாடும் இன்றி ஆய்வு செய்கின்றனர். இவர்களுக்கு ஒப்பியல் இலக்கியம் பற்றிய அறிவு, முதுகலையில் தாம் கற்ற பாடம் அளவில்தான் உள்ளது. பாடத்திட்டமோ, 35 ஆண்டுகளாக எந்த ஒரு மாற்றமு மில்லாத பெருமைக்குரியதாகத் திகழ்கிறது. அறுபதுகளில் அச்சிடப்பட்ட பார்வை நூல்கள் இன்று கிடைப்பதில்லை. இன்னொரு நூலின் துணைநூல் பட்டியலைப் பார்த்துத் தவறாகக் குறித்துள்ள ஆங்கில நூல்களின் ஆசிரியர் பெயரிலும், நூலின் பெயரிலும் தவறுகளுக்குப் பஞ்சமில்லை. அவையும் தமிழகத்தில் கிடைக்குமா என்பது ஐயமே!

எனவே வேறு வழியின்றி, (வணிக நோக்கு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, கல்வித் தரத்தை அழித்துவரும்) பல்கலைக் கழக அஞ்சல்வழிக் கல்வித் துறையினர், மிகவும் தரம் குறைந்த நிலையில் அச்சிடும் பாடக் குறிப்புக்களையே முதுகலை மாணவர்கள் பெரிதும் நம்பியிருக்கின்றனர். அவற்றில் குறிக்கப்பட்டுள்ள வினா விடைகளை மட்டுமே கற்கின்றனர். அதில் 'ஒப்பியல் இலக்கியம்' பற்றிய விளக்கமே தவறாக உளது. ஒப்பியல் கொள்கைகள், அவற்றிற்குரிய எடுத்துக்காட்டுக்கள் ஆகியவற்றில் காணப்படும் பிழைகள் ஒப்பியல் பற்றிய தவறான கருத்துக்களை வழங்குவனவாக உள்ளன. இவற்றைக் கற்ற மாணவனிடம் உண்மையான ஒப்பியல் ஆய்வை எதிர்பார்ப்பது கடினமே.

மேலும், இலக்கியத்திறனாய்வு, இலக்கியக் கொள்கை, ஒப்பியல் இலக்கியம் ஆகிய முதுகலைக்குரிய மூன்று பாடத் திட்டங்களும், "பிடித்தால் லட்டு, விட்டால் பூந்தி" என்ற நிலையில் தலைப்புக்களைத் தவிர, உள்ளடக்கங்களில் பெரும்பாலும் வேறுபாடற்ற தன்மையிலேயே அமைந் துள்ளன. ஒரு விடையையே மூன்றுக்கும் பயன்படுத்தக்கூடிய நிலையுள்ளது. அதேபோல், இலக்கியங்களின் வரலாறு, இலக்கிய வரலாறு என்ற பெயரிலேயே வெளிவருகின்றது.

எனவே, ஒப்பியல் துறையில் இன்றளவு வளர்ச்சி யடைந்துள்ள கொள்கைகளும், மாற்றங்களும் இடம்பெறத் தக்க வகையில் பல்கலைக் கழக முதுகலை பாடங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

ஒப்பியல் பற்றிய அறிவோ, அக்கறையோ, ஈடுபாடோ, தொடர்போ இல்லாத ஒருவர் ஒப்பியல் ஆய்விற்கு நெறியாளராகச் செயல்படும் பரந்த மனப்பான்மையைத் தவிர்த்தால், உண்மையான ஒப்பியல் ஆய்வுகள் நிகழ வழி கோலும்.

அறிவியலில், அண்மைக்கால அளவில், வளர்ச்சி பெற்ற புதியதொரு துறையாக அல்லது பிரிவாக இருந்தாலும்கூட அது தொடர்பான ஆய்விதழ் உடனே தொடங்கப்படுகிறது. அதுவே அவர்களது தகவல் தொடர்புச் சாதனமாகத் திகழ்வதோடு, அத்துறையின் ஆய்வு வளர்ச்சியிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. பல்கலைக்கழகங்களின் ஒருங்கிணைப்பில் 'ஒப்பியல் இலக்கியம்' எனும் ஓர் இதழ் தொடங்க வேண்டும். உலகளாவிய நிலையில் அவ்வப்பொழுது ஒப்பியல் ஆய்வுகள் பற்றியும், கொள்கைகள் பற்றியும், தமிழில் நிகழ்ந்து கொண்டிருக்கும் ஆய்வுகள் பற்றியும் உடனுக்குடன் தகவல் தரும் பணியை அந்த இதழ்மூலம் செய்ய இயலும். மேலும் ஒரே தலைப்பில் பலர் ஆய்வு செய்யும் சூழலையும் தவிர்க்கலாம். அறிவியலில் கடைபிடிப்பதைப்போல, ஆய்வாளர் ஆய்வு செய்து கொண்டிருக்கும் காலத்திலேயே ஆய்வுக்கட்டுரைகளை வெளியிடும் வாய்ப்பும் அமையும்.

ஒப்பியல் பற்றிய தரமான நூல்கள், ஆய்வுகள் தமிழில் வெளிவரும் வாய்ப்பைப் பல்கலைக் கழகங்களின் பதிப்புத்துறைகள் உருவாக்க வேண்டுவது மிக அவசியம்.

ஒப்பியல் இலக்கிய ஆய்விற்கென ஆண்டுதோறும் பட்டறைகள் நடத்துவது ஒப்பியல் ஆய்வை அறிவியல் பூர்வமாக வளர்ப்பதற்குப் பெரிதும் துணை செய்யும். இன்றைய ஆய்வுகளில் காணப்படும் பெரும் குறை, 'ஒப்புமைக்கான காரணங்களைக் கண்டறிதல், ஒப்புமைகள் தோன்றக் காரணமாயிருந்தப் புலங்களைப் புரிந்து கொள்ளுதல், இலக்கியப் படைப்பாளர்க்கும் சூழலுக்குமுள்ள பரஸ்பரத் தொடர்பினை அறிந்துகொள்ளுதல்' போன்ற ஒப்பியல் ஆய்வுக்குத் தேவையான எவற்றையும் பின்பற்றாமையேயாகும். பட்டறைப் பயிற்சிகளின் மூலம், இத்தகைய குறைகளை நீக்க இயலும். அறிவியல் ஆய்வுகளில் பட்டறை பயிற்சி முக்கியமாகக் கருதப்படுகிறது.

அறிவியல் வளர்ச்சியிலும், இலக்கிய வளர்ச்சியிலும், சமூக மாற்றத்திற்கு அடிப்படையான கருத்துப் பரிமாற்றங்களிலும், மொழிபெயர்ப்பின் பங்கு தலையாயது.

ஐரோப்பாவின் தொடர்பு மொழியாக இருந்த இத்தாலியில் விவிலியம் மொழிபெயர்க்கப்பட்டமை, சமய நம்பிக்கையின் அடிப்படையிலான ஓர் ஒற்றுமையை ஏற்படுத்தியது. கீப்ரு மொழிப் பேராசிரியர் பெஞ்சமின் ஜோவட் என்பவரின் மொழிபெயர்ப்பே பிளேட்டோவை உலகறியச் செய்தது என்பர். ஏனைய இந்திய மொழிகளை ஒப்பிடும்பொழுது, தமிழில்தான் மொழிபெயர்ப்பு மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளது. இந்திமொழிக்கு அடுத்த நிலையில் ஒரு மொழியின் வளர்ச்சிக்கென பல்கலைக் கழகம் உட்பட ஆறு நிறுவனங்கள் தமிழிற்கு உள்ளன. இருப்பினும் மொழிபெயர்ப்பின் வளர்ச்சிக்குச் சிறப்பு கொடுக்கப் படவில்லை.

ஒப்பியல் இலக்கியத் தோற்றத்திலும், வளர்ச்சியிலும் மொழிபெயர்ப்பிற்கு முக்கிய பங்குண்டு. எனவே மொழி பெயர்ப்புகள் தாராளமாக வெளிவரும் வாய்ப்பு ஏற்பட வேண்டும்.

அன்றாட வாழ்க்கையை எண்ணற்ற வகையில் பாதித்துள்ள அறிவியல், வாழ்க்கையின் விளைபொருளாகிய இலக்கியத்தையும் பெரிதளவு பாதித்துள்ளது. இன்றைய இலக்கியப் போக்கிலும், நோக்கிலும், ஆய்விலும் அளவிடற்கரிய மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. 'இலக்கியம் வாழ்க்கையின் காலக்கண்ணாடி, பிரதிபலிப்பு' என்ற அன்னால்டு போன்றோரின் கருத்துக்களின் நிலை மாறி, ருசியத் திறனாய்வாளர், மிக்கேல் ஹேஸ்லட் குறிப்பிடுவது போல், 'இலக்கியத்தின் பிரதிபலிப்பாகச் சமுதாயம் காணப் படுகிறது'. இலக்கியத்தின் ஊடுபொருளாகப் பலதுறைகள், பின்னிப் பிணைந்துள்ளன. எனவே, இன்று, இலக்கியத்தின் ஒரு பிரிவைத் தெரிந்துகொள்வதற்கே பல்துறை அறிவுத் தேவைப்படுகிறது. சங்க இலக்கியங்களில் 'தோழி பெறும் இடம்' என்பது பற்றி ஆய்வு செய்ய விழைவோருக்குச் சங்க இலக்கியப் பயிற்சி மட்டுமிருந்தால் போதாது, உளவியல், சமூகவியல், மானிடவியல், நிலவியல் போன்ற பிற துறை அறிவோடு, பெண்ணியக் கோட்பாடும் தெரிந்திருக்க வேண்டும். ஒப்பியல் ஆய்விற்குப் பிறதுறை அறிவு என்பது அடிப்படையான ஒன்று. வங்க மொழியில் இயற்பியல் பேராசிரியர் ஒருவர், இயற்பியல் கருத்துக்களின் அடிப்படையில் ஒப்பியல் இலக்கிய ஆய்வை மேற்கொண்டு, புதிய விளக்கம் தந்துள்ளார்.

கிரேக்கத்துடன் தொடங்கி, இங்கிலாந்து வரை சென்று, இந்தியாவிற்குள் நுழைந்து, அண்டை மாநிலங்களோடு மட்டும் தொடர்புகொண்டு, தமிழ் நாட்டிற்குள்ளேயே அடைக்கலம் புகுந்து, 'பாரதியும் பாரதிதாசனும் - ஓர் ஒப்பியல் ஆய்வு', 'பாரதியின் தேசியப் பாடல்களும் பக்திப்பாடல்களும் - ஓர் ஒப்பியல் ஆய்வு', என்ற நிலையில் சுருங்கி, தேய்ந்து, ஒப்புமை ஆய்வாக உருமாறிக்கொண்டிருக்கும் நிலையைக் கவனத்தில் கொள்ளவேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டுள்ளது.

கிரிம் சகோதரர்கள் உலகெங்கும் வழங்கிய நீதிக்கதை களைத் தொகுத்து, அவைகளிடையே உள்ள ஒற்றுமை களையும், அவை பரவிய முறைகளையும், அவை தோன்றிய நாடுகளின் பண்பாட்டுச் சிறப்புத் தன்மைகளையும், நம்பிக்கை களையும், புதிய நோக்கில் ஒப்பியல் ஆய்வின் மூலம் வெளியிட்டனர். தவத்திரு. தனிநாயகம் அடிகளார், உரோமர் ஸ்டாயிக் சிந்தனைகளுடன் சங்க இலக்கியங்களையும் திருக்குறளையும் ஒப்பிட இயலும் என்றும், கிரீஸின் தொன்மைக்கால கவிதைகளுடன், ஔவையாரின் சமூக நீதிக் கருத்துக்கள் ஒப்பிடத்தக்கன என்றும் பல ஒப்பியல் ஆய்வுக் களங்களை அடையாளங் காட்டியுள்ளார்.

ஐதராபாத்திலுள்ள மத்திய ஆங்கில மொழிக் கல்வி நிறுவனத்தில் பணிபுரியும் பேராசிரியர் சூசிதாரு என்பவர், ஔவையார் உட்பட இந்தியப் பெண்பாற் புலவர் பலரை ஒப்பிட்டு, ஒப்பியல் ஆய்வு மேற்கொண்டு, புதிய பெண்ணியக் கோட்பாடு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இன்றையச் சூழலில் தலித் சாகித்தியம் என்பது ஒரு புதிய எழுச்சியாக, மராத்தியில் தொடங்கி, கன்னடத்தில் ஒரு சக்தி வாய்ந்த இலக்கிய வகையாக உருவாகியுள்ளது. தமிழில் அரும்பிக்கொண்டிருக்கும் இவ்விலக்கிய வகையைச் சமூக இயல், வரலாற்றியல், அரசியல், பொருளாதாரம், சமயம், உளவியல் அடிப்படையில் ஒப்பியல் ஆய்வு செய்யும் வாய்ப்பும் தேவையும் இன்று உருவாகியுள்ளது.

இலக்கியத்தின் நிலைக்களனான பண்பாட்டில் தென்படும் ஒற்றுமை பற்றிய ஒப்பியல் ஆய்வுகள் மூலம் பல உண்மைகளை வெளிப்படுத்த இயலும்.

இந்தியாவின் வடபுலங்களில், குறிப்பாக உத்திரப் பிரதேசம், பீகார் போன்ற பகுதிகளில், தமிழகத்தின் கிராமப்

புறங்களில் தொன்றுதொட்டுச் சிறுவர்களால் விளையாடப் பட்டுவரும் விளையாட்டுக்கள் பல எந்தவித மாற்றமுமில்லாமல் விளையாடப்படுகின்றன. 'கிட்டிப்புள்', 'குல்லி தண்டா' என்று அழைக்கப்படுகிறது. 'தண்டு' என்பதுதான் 'தண்டா' என வழங்குகிறது. 'நொண்டி' விளையாட்டை 'லங்கடி டாங்' என்ற பெயரில் விளையாடுகிறார்கள். 'லங்கடி' என்றால் 'நொண்டி'; 'டாங்' என்றால் 'கால்'. சிறுவர் ஒளிந்து விளையாடும் 'கண்ணாமூச்சி' 'சுப்பம் சுப்பாயி' என்ற பெயரில் ஆடப்படுகிறது. 'சுப்பம்' என்றால் 'ஒளிதல்'. 'நாலுமூலதாச்சி' எனும் விளையாட்டு 'ஊஞ்சுநீச்' என்ற பெயரிலும், 'ஊஞ்சல்', 'ஜுலா' என்ற பெயரிலும், 'பாண்டி' ஆட்டம், 'ஸ்டாப்பு' என்ற பெயரிலும் அழைக்கப்படுகின்றன. இவை மிகவும் பிற்பட்ட கிராமப்புறங்களில் பின்தங்கிய மக்களாலேயே விளையாடப்படுகின்றன. இவைகளை ஆய்வு செய்தால் ஒப்பியல் ஆய்வின் மீட்டுருவாக்கம் கொள்கையின் படி சில உண்மைகளை வெளிப்படுத்த இயலும்.

தமிழர்களின் திருநாளான பொங்கல் உருமாறிப் பல மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் கொண்டாடப்படுகின்றது. வடமாநிலங்களில் கொண்டாடப்படும் சங்கராந்தியிலும், புத்தரிசியைப் பயன்படுத்தி 'கிச்சடி' செய்கின்றனர். பஞ்சாபில் 'போகி'பண்டிகையை 'லோடி' (எரியவிடுதல்) என்று கொண்டாடுகின்றனர். 'சப்பானில், கோஸ்கோகட்சு என்ற பெயரில் (Koshogatsu) பொங்கலைக் கொண்டாடுவதாகச்' சுசுமு ஓநோ (Susumu Ohno) குறிப்பிடுகிறார் (1985:20). இவற்றை ஒப்பிட்டு ஆராயும்பொழுது ஒப்பியல் ஆய்வால் வெளிப்படும் பொதுப்பண்புகளையும் நுண்ணிய வேறு பாட்டால் வெளிப்படும் சிறப்புப் பண்புகளையும் அறிய இயலும்.

ஒப்பியல் நோக்கு இலக்கிய படைப்பாளர்களிடம் தொன்றுதொட்டே காணப்படுகிறது. அறிவியல் துறைகளிலும், மொழி ஆராய்ச்சியிலும் சிறப்புப் பண்பாகத் திகழ்ந்த ஒப்பியல் ஆய்வு, இலக்கிய ஆய்வில் வந்து புகுந்த ஒரு புதிய முறை. அறிவியலை அடித்தளமாகக் கொண்டுள்ளது.

ஒப்பியல் ஆய்வின் காரணமாகப் பல புதிய கோட்பாடுகள் உருவாகியுள்ளன. மில்மன்பரியின் ஆய்வால், ஹோமரின் படைப்புக்கள் வாய்மொழி இலக்கியங்களின்

தொகுப்பு என்று நிரூபிக்கப்பட்டதோடு, உலகப்பெரும் காப்பியங்களெல்லாம் வாய்மொழி இலக்கியங்களின் தொகுப்பெனும் புதிய கோட்பாட்டை உருவாக்கியது.

ஒரே மாதிரியான காரணங்கள் ஒரே மாதிரியான பயனையே நல்கும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில், வீரயுகப் பாடல்களுக்குப் பின்னர் அறநூல் தோன்றும் வாய்ப்பைக் கிரேக்க வீரயுகப் பாடல்களுடன் தமிழ்ப் பழம்பாடல்களையும் ஒப்பியல் ஆய்வு செய்து நிரூபித்தார் கைலாசபதி. இத்தகைய ஆய்வுகள் ஒப்பியல் துறையில் வளரும் வாய்ப்பு ஏற்படுமானால் தமிழ் ஒப்பியல் ஆய்வு வளம் பெறும்.

பயன்பட்ட நூல்கள்

1. கைலாசபதி.க., ஒப்பியல் இலக்கியம், சென்னை, 1969.

2. செல்லப்பன், கா., இலக்கியத்தில் புதுக்கோட்டை பழம்புதுமையும் புதுப்பழமையும் (முதல் படிவத் திறனாய்வு), 1986.

3. Dev, Amiya (Ed)., **Comparative Literature** (Theory and Practice), Shimla, 1989.

4. Ohno, Susumu, **World view and Rituals among Japanese and Tamils**, Japan, 1985.

5. Weistein, Ulrich, Reprint, **Comparative Literature and Literary Theory** (Survey and Introduction), London, 1973.

இலக்கண ஆய்வு

முனைவர் செ.வை. சண்முகம்

1. இலக்கண ஆய்வு

இலக்கண ஆய்வு என்பது இன்று இரண்டு பொருள்களில் வழங்கப்படுகிறது. அவை:

(i) மொழியின் அமைப்பை ஆராய்வது; இதுவே இன்று மொழியியல் என்ற சிறப்புப்பெயரால் அழைக்கப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டுக்கு முன்னர் இலக்கண ஆய்வு மொழி அமைப்பு ஆய்வாகக் கருதப்பட்டது. அதற்குக் காரணம் மொழி ஆய்வு என்பதே மொழி அமைப்பு என்று மட்டுமே கருதப்பட்டு, தனிமொழிக்கு இலக்கணம் எழுதுவதே தலையாய பணியாகக் கருதப்பட்டது. மொழியின் பொதுப் பண்புகள், மொழி அமைப்பின் பொதுப்பண்புகள், மொழி மாற்றம், மொழிக்கும் பிற துறைகளுக்குமுள்ள தொடர்பு ஆகியவைகளைத் தீவிரமாக ஆராய்ந்து தனி ஆய்வுத் துறையாக இது ஆக்கப்படவில்லை.

(ii) ஒரு மொழியில் எழுதப்பட்ட இலக்கண நூல்களை ஆராய்வது; இது இன்று 'இலக்கணவியல்' என்ற சிறப்புப் பெயராலும் குறிப்பிடப்படுகிறது (சண்முகம் 1994).

உலகளாவிய நிலையில் மொழி அமைப்பையும், மொழியின் பண்புகளையும் ஆராய்கிற ஆய்வு மொழி ஆய்வு. Linguistics - மொழியியல் என்று வழங்கப்படுவதாலும் பல மொழிகளுக்கு முன்னரே இலக்கணங்கள் இருப்பதாலும் இலக்கண ஆய்வு என்பதைக் குறுகிய புதுப்பொருளில் கையாளலாம் என்று கருதியே இரண்டாவது பொருள் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டுரை இரண்டாவது பொருளை ஏற்றுக் கொண்டு அதன் அடிப்படையிலேயே எழுதப்பட்டுள்ளது.

2. பரிமாணங்கள்

இன்று இலக்கண ஆய்வு பல நோக்கிலும் பரவலாகவும் விரிவாகவும் செய்யப்படுவதாலும் பல வகையான இலக்கண நூல்கள் இருந்து, காலங்காலமாக ஆராயப்பட்டு வருவதாலும் தமிழில் பலவகையான நோக்கீட்டு (Reference) நூல்கள் வெளிவந்துள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்தது. இதுவே இலக்கண ஆய்வு பன்முகநோக்கு உடையது என்பதைப் புலப் படுத்துகிறது. எனவே முதலில் இலக்கண ஆய்வுத் தொடர்பாக எழுந்துள்ள நோக்கீட்டு நூல்களைப் பார்ப்போம்.

2.1. நோக்கீட்டு நூல்கள்

நோக்கீட்டு நூல்களில் அடிப்படையானது இலக்கண வரலாற்று நூல்கள். இவைகளே தமிழில் எழுந்துள்ள எல்லா இலக்கண நூல்களையும் தொகுத்து அவைகளின் வரலாற்றையும், பொருளையும், உள்ளடக்கத்தையும் தருகின்றன.

தமிழில் இலக்கண வரலாற்றைக் குறிப்பிட்ட பெருமை இத்தாலி நாட்டு பெஸ்கி என்ற வீரமாமுனிவரையே (1684-1742) சாரும். அவரே தன்னுடைய 'செந்தமிழ் இலக்கணம்' என்ற இலத்தீன் மொழி நூலில் (1730) தமிழில் கிடைக்கும் இலக்கண நூல்களின் வரலாற்றை மிகச்சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார் (சண்முகம், 1993-105) .

இலக்கண வரலாறு என்ற தலைப்பில் இதுவரை இரண்டு நூல்கள் (இளவரசு, 1963; இளங்குமரன், 1988) வெளிவந்துள்ளன. அவை இரண்டும் புற வரலாற்றையே விளக்குகின்றன. ஆராய்ச்சியால் பெற்ற தெளிவுகளைக் கோடிட்டுக்கூடக் காட்டவில்லை. மேலும், மொழியின் சொற்

களஞ்சியத்தை ஆராயும் 'நிகண்டு நூல்களின் வரலாறு' இரண்டிலும் சேர்க்கப்படவில்லை. எனவே, அவை தனி நூல்களாகவே வெளிவந்தன (சுந்தர சண்முகனார், 1965, ஜெயதேவன், 1985). இந்த நூல்கள் தமிழில் இலக்கணம் என்பது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, பாட்டியல், நிகண்டு என்ற ஏழு பகுதிகளை உடையது என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

மேனாட்டார் பிறமொழியில் குறிப்பாக ஐரோப்பிய மொழிகளில் எழுதிய பல இலக்கணங்கள் பதினேழாம் நூற்றாண்டிலிருந்து உண்டு (இன்னாசி, விக்டோரியா, 1990). இவை நம்முடைய மரபிலக்கணங்கள் கூறாத - குறிப்பிடாத பல மொழி அமைப்பு உண்மைகளை விளக்குகின்றன. எனவே அவையும் இலக்கண வரலாற்றில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் (சண்முகம், 1993).

தமிழில் ஒவ்வொரு இலக்கணப் பகுதியைப் பற்றியும் பல நூல்கள் இருப்பதால் ஒவ்வொரு இலக்கணக் கூறுகள் பற்றிய கருத்துகளைத் தொகுத்து 'இலக்கணத்தொகை' என்ற பொதுத் தலைப்பில் எழுத்து, சொல் பற்றிய தனி நூல்களைச் சுப்பிரமணியன் (ச.வே. சுப்பிரமணியன், 1967, 1971) வெளியிட்டுள்ளார். 'இலக்கணத்தொகை : எழுத்து' என்ற நூலின் ஆசியுரையில் மீனாட்சிசுந்தரனார் குறிப்பிட்டபடி "இலக்கண நூல்களின் இடையே ஒற்றுமை வேற்றுமை அறிவதற்கு இவை பயன்படும்; இந்த மாறுபாடுகளுக்கு உரிய காரணம் வரலாற்றின் வழியே விளங்கலாம். பல இலக்கணக் கொள்கைகள் வேற்றுமைகளின் வழியே நாம் காணலாம்". அதாவது மொழி வரலாற்று ஆய்வு, கோட்பாட்டு வரலாற்று ஆய்வு இரண்டுக்கும் இந்த நூல்கள் வழி காட்டுவன. இந்த நூல்களில் செம்மை செய்ய இடம் இருக்கிறது என்பது முன்னரே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (சண்முகம், 1980; 281). எனவே, இந்த நூல்களின் திருந்திய பதிப்புகள் வெளிக் கொணரப்பட வேண்டும்.

ஒரு நூலுக்கே பல உரைகள் உள்ளன. அவைகளை ஒருங்கு சேர்த்துப் படிப்பதற்கும், ஆய்வதற்கும் வசதியாக முதன் முதலில் சொல்லதிகார நான்கு இயலுக்கு ஆபிரகாம் அருளப்பனும், வி.ஐ. சுப்பிரமணியனும் இணைந்து சொல்லதிகார உரைக்கோவை (1963) வெளியிட்டுள்ளார்கள்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆ. சிவலிங்கனாரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு, எழுத்ததிகார, சொல்லதிகார இயல்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி நூலாக உரைவளம் 1980களிலிருந்து 18 தொகுதிகள் வெளியிட்டுள்ளது. அவைகளில் சமீபகால ஆய்வுக் கருத்துக்கள் முழுமையாகத் தொகுக்கப் படவில்லை. ஒரு சீர்மை பின்பற்றப்படவில்லை, இருந்தாலும் அவையும் ஆராய்ச்சிக்கும் இலக்கியக் கல்விக்கும் பயன்படு பவையே. மறுபதிப்பு கொண்டு வரும்போது செம்மைப்படுத்தி வெளியிட வேண்டும். இந்தப் பதிப்புகள் இலக்கணக் கல்வியின் பழங்கால வரலாற்றையும் கல்வியில் ஏற்பட்ட முன்னேற்றத் தையும் புலப்படுத்தும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் எழுத்து, சொல் பற்றிய ஆய்வடங்கல் நூலை (பட்டாபிராமன், 1992) முதல் பகுதியாக வெளியிட்டுள்ளது. இதில் 1985 வரை வெளிவந்த கட்டுரைகள் மட்டுமே தொகுக்கப்பட்டுள்ளன. எனவே, ஏனைய பகுதிகள் வெளிவந்தால்தான் இலக்கண ஆய்வின் முழுப்பரிமாணமும் அறிந்துகொள்ள முடியும். இந்த நிலையில் இருபதாம் நூற்றாண்டில் ஆய்வின் பரப்பை இந்த ஆய்வடங்கல் ஓரளவே புலப்படுத்துகிறது.

ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள தமிழ் மொழியியல் ஆய்வடங்கலில் (Ramaiah, 1995) பல இலக்கணக் கட்டுரை களும் நூல்களும் தொகுக்கப்பட்டுள்ளன.

தனிப்பட்ட நூல்களின் ஆய்வு வரலாறும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தத் துறையில் தொல்காப்பிய ஆய்வின் வரலாறு (கிருட்டிணமூர்த்தி, 1990) சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்தது. இலக்கணக் கொள்கைகளைச் சரியாகப் புரிந்துகொள்ள இலக்கண ஆசிரியர்கள் கலைச்சொற்களின் தொகுப்பு உதவியாக இருக்கும். பொற்கோவின் இலக்கணக் கலைக் களஞ்சியம் (1985) கலைச் சொற்களைத் தொகுத்து அவைகளுக்கான விளக்கத்தையும் தருகிறது. அதே முறையில் உரையாசிரியர்களின் உரைகளில் காணப்படும் இலக்கணக் கலைச்சொல் விளக்கங்களும் தொகுக்கப்பட்டுள்ளன (கிருட்டிணமூர்த்தி 1985) . எனவே, இலக்கண ஆராய்ச்சிக்குப் பல நோக்கீட்டு நூல்கள் வெளிவந்துள்ளமை பயன் உடையது. இன்னும் முக்கியமாக வரவேண்டியது தொல்காப்பிய அகராதியே (Word Index) .

2.2. ஆய்வின் பிற பரிமாணங்கள்

இலக்கண ஆய்வுப் பரிமாணங்கள் பற்றி முன்னரே கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன (சண்முகம், 1994:20-21). இங்கு அவை நான்கு பெரும் பிரிவுகளில் அடக்கப்பட்டுள்ளன. அவை: (i) நூல் பதிப்பும் மூலபாட ஆய்வும், (ii) மறு வருணனை ஆய்வு-மொழி அமைப்பு மறு வருணனை, (iii) இலக்கணக் கோட்பாட்டு ஆய்வு, (iv) ஒப்பீட்டு ஆய்வு (அ) தமிழ் இலக்கணங்களுக்குள் ஒப்பீடு, (ஆ) தமிழ் பிறமொழி இலக்கணங்கள்; (a) வடமொழி, (b) பிற திராவிட மொழி இலக்கணங்கள், (c) உலக அளவில் முக்கியமான இலக்கணங்கள் (இ) இலக்கணம்-மொழி ஒப்பீடு (தமிழ் இலக்கியம், பிற திராவிட மொழிகள்). இவைகள் பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

i. நூல் பதிப்பும் மூலபாட ஆய்வும்

பழைய இலக்கண நூல்களின் சுவடிகள் கண்டுபிடிக்கப் பட்டு, சில இலக்கண நூல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. 1975இல் 'சுவாமிநாதம்' என்ற ஐந்திலக்கண நூலை அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் 1989இல் இலக்கணச் சூடாமணி என்ற நூலைத் தமிழ்ப் பல்கலைக்கழகமும் (கிருட்டிணமூர்த்தி 1989) வெளியிட்டுள்ளன. முழு நூலாகக் கிடைக்காமல் உரைகளில் மேற்கோள் காட்டப்பட்ட அவிநயம், காக்கைப்பாடினியம் போன்ற நூல்கள் தனி நூல்களாகத் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளதும் இலக்கண ஆராய்ச்சிக்குப் பெரிய அளவில் உதவுவனவே.

முன்னரே பதிப்பிக்கப்பட்ட நூல்கள் திருந்திய பகுப்புக்கும் மூலபாட ஆய்வுக்கும் வழி வகுத்துள்ளன. அடிகளாசிரியரின் இளம்பூரணம் சொல்லதிகாரப் பதிப்பு, சுந்தரமூர்த்தியின் தொல்காப்பிய உரைப் பதிப்புகள் முதலியவை குறிப்பிடத்தகுந்தவை. 1994இல் டாக்டர் ந. மகாலிங்கத்தைப் பதிப்பாசிரியராகவும், மு. இராமலிங்கம், பகீரதன் ஆகிய இருவரை ஆராய்ச்சியாளர்களாகவும் கொண்டு இராமலிங்கர் பணி மன்றம் தொல்காப்பியத்தை இரண்டு தொகுதிகளாக வெளியிட்டுள்ளது. இந்தப் பதிப்பின் வெளியீட்டை ஒட்டி, திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகம் அந்த நூலை ஒரு கருத்தரங்கில் விவாதித்துக் கட்டுரைத் தொகுப்பை வெளியிட்டுள்ளது. இதில் உள்ள 14

கட்டுரைகளில் ஒரு கட்டுரை தவிர ஏனையவை இந்தப் பதிப்பைக் கண்டனம் செய்துள்ளன. உதாரணத்துக்குச் சில.

கோபாலையர் (ப.6): 'நூற்பாக்களை இணைத்தமை தொல்காப்பிய நெறிக்கே முரணானது. (சூத்திரங்களின்) இடமாற்றம் பல இடங்களில் பொருந்துவதாக இல்லை'. சுந்தரமூர்த்தி (ப.28): 'இவ்விரு ஆராய்ச்சியாளர்களாலும் திணிக்கப்பட்டிருக்கும் கருத்துக்கள் உடையது ஒன்றைத் தொல்காப்பியம் எனும் புனிதப் பெயரிட்டு அழைப்பது பொருத்தம் இன்றாம்!'.

சிவலிங்கனார் (ப.34): 'ஆராய்ச்சியாளர்களின் தொல்காப்பிய வெளியீடு தமிழுக்குச் செய்யும் தீமையாகும்'.

பரிமணம் (ப.56): 'நூலினைத் தொல்காப்பியமாகவும் அதன் ஆய்வு விளக்கமாகவும் ஏற்பதற்கு இல்லை'.

தமிழண்ணல் (ப.70): 'இப்பதிப்பு நூல்கள் வெளியில் பரவுதல் கூடாது. அருட்செல்வர் அவர்கள், விரைவில் இந்தப் பதிப்பு நூல்களைப் போட்டெரித்துவிட்டுப் புதிய பொன்னான பதிப்புக்களைக் கொணர்ந்து கழுவாய் தேட வேண்டும்'.

சாரங்கபாணி (ப.73): 'இவ்வாய்வாளர்கள் முதனூல் ஒன்றற்கு விளக்கம் தருகிறோம் என்னும் கருத்தின்றித் தாமே நூலாசிரியராகக் கருதிச் சில நூற்பாக்களைப் படைத்துச் சேர்த்துள்ளனர். நூற்பாவை இயல் மாற்றம் செய்துள்ளனர். பல நூற்பாக்களைத் தொகுத்து ஒன்றாக்கியுள்ளனர். வேண்டாத நூற்பிரிப்பும் தவறான சொற்பிரிப்பும் உள. இக்குறைகள் நீங்கி இந்நூல் வெளிவரின் சிறப்புறும் என்பது என் உள்ளக்கிடக்கை'.

சுப. அண்ணாமலை (ப.74): 'இப்பதிப்பு ஏற்று வரவேற்க இயலாது. இதனை வரவேற்றால் பழந்தமிழ் நூல்கள் அத்தனையும் வடிவம் மாறிப் பதிப்பிக்கப்படும்.'

இவைகளுக்குமேல் விளக்கம் தேவையில்லை. இப்போது பதிப்பகத்தாரே இந்நூல் விற்பனையை நிறுத்தி விட்டார்கள் என்பது குறிப்பிடத்தகுந்தது.

நன்னூல் சிவஞானமுனிவர் உரை, பதிப்பு முறை இப்போது விவாதத்திற்கு உள்ளாகி இருக்கிறது (தாமோதரன், 1995). முனிவருடைய உரை சங்கரநமச்சிவாயர் உரையின்

திருத்த உரை. இன்றைய பதிப்புகளில் முனிவர் செய்த திருத்தம் சரியாகப் புலப்படுத்தப்படவில்லை. எனவே, அவருடைய திருத்தத்தைத் தெளிவாக வெளிப்படுத்தும் படியான செம்பதிப்பும், முனிவரால் எழுதப்பட்ட விருத்தி உரையும் மூலக் கையேட்டைக் கண்டுபிடிக்கும் முயற்சியும் தேவை என்பது கட்டுரையாளரின் கருத்து (ப.115).

வீரமாமுனிவரின் தொன்னூல் விளக்க உரையும், சந்தேகத்தை எழுப்பியுள்ளது. மூலநூலின் கருத்தை உரை சரியாகப் பிரதிபலிக்காததால் வீரமாமுனிவரே உரையும் எழுதி இருக்க முடியுமா என்ற ஐயம் எழுப்பப்பட்டுள்ளது (சண்முகம், 1993:116-22). ஆனால் இராசமாணிக்கம் (1995) உரையில் இடைச்செருகல் இருப்பதாகக் கருதுகிறார். 'நூலைப் பதிப்பித்த வேதகிரி முதலியார் நூலை உள்ளவாறு பதிப்பியாமல் பல மேற்கோள்களைச் சேர்த்து அச்சிட்டு இருக்கிறார். இதனால் எது முனிவர் எழுதியது? எது வேதகிரியார் சேர்த்தது என்று தெரியாமல் எல்லாம் கலந்து இருக்கின்றன. எனினும் அச்சாகாத சுவடிகள் இருப்பதால் அவற்றின் துணை கொண்டு முனிவர் எழுதியபடி நூல் வெளிவரலாம்' (ப.125) என்பது அவரது வாசகம்.

எனவே முன்னரே பதிப்பிக்கப்பட்ட நூல்களுக்கும் செம்பதிப்புத் தேவை என்பது வலியுறுகிறது.

இந்த நிலையில் மூலபாட ஆய்வு இலக்கண ஆய்வில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. தொல்காப்பிய மூலபாட ஆய்வு - தொல்காப்பிய பாட வேறுபாடுகளாக மட்டும் பழனியப்பனால் (1990) மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது பாடபேதங்களை மட்டுமே ஆராய்கிறது. ஆனால் மூலபாட ஆய்வு என்பது இடைப்பிறழ்ச்சி, இடைவீழ்ச்சி, இடைச் செருகல், ஒன்றாக்கல், பலவாக்கல், பாடவிளக்கம், பாடப் படைப்பு, கடைச்செருகல் போன்ற பல தலைப்புகளில் ஆராயப்பட வேண்டும் என்ற கருத்து இப்பொழுது தெளிவாக்கப்பட்டுள்ளது (மாணிக்கம், 1984; சண்முகம், 1989, 1992). இந்த முறையில் செய்யப்படும் ஆராய்ச்சியே செம்பதிப்புக்கு வழிவகுக்கும். திருவனந்தபுரம் இந்திய திராவிட மொழியியல் கழகம் தொல்காப்பிய பாட வேறுபாடு தொகுப்புடன் ஒரு நூலைத் தயாரித்துள்ளது (Variorium Edition). ஆனால் அது இன்னும் விற்பனைக்கு வரவில்லை.

ii. மறுவருணனை ஆய்வு

மொழியியலின் செல்வாக்கால் இலக்கண நூல்கள் மறுவருணனை செய்யப்பட்டு மொழி அமைப்புப் பற்றிப் பல புதிய உண்மைகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. இன்றைய பெரும்பாலான ஆராய்ச்சி மறுவருணனை ஆராய்ச்சி என்று கூடக் கூறலாம். எண்பது வரை நடந்த எழுத்ததிகார மறுவருணனை ஆய்வு முன்னரே (சண்முகம், 1983) விளக்கப் பட்டுள்ளது. கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் எழுத்ததிகாரம் பற்றி நூல் எதுவும் வந்ததாகத் தெரியவில்லை.

சொல்லதிகாரத்தைப் பொறுத்தவரையில் தொல் காப்பிய ஆய்வின் வரலாற்றில் (கிருட்டிணமூர்த்தி, 1990) 1981 வரை நடந்த ஆய்வு தொகுத்து வகுத்துக் கொடுக்கப் பட்டுள்ளது. அதற்குப் பிறகு வந்தவைகளாகக் கீழ்க்கண்டவை களைக் கூறலாம்.

அகத்தியலிங்கம், ச., (1985) - தொல்காப்பிய சிந்தனை

காமாட்சி,அ., (1989) -தொல்காப்பியத்தில் வினைக்குறிப்பு

சண்முகதாஸ், (1982) -தமிழ்மொழி இலக்கண இயல்புகள்

சண்முகம், செ.வை., (1984, 1986, 1992) -
சொல்லிலக்கணக் கோட்பாடு I, II, III.

மல்லிகா, பா., (1981) - இலக்கண மரபில் இடைச்சொற்கள்

முதலானவை குறிப்பிடத்தகுந்தவை. மறுவருணனை ஆய்வு வரலாற்றுக் கிளைமொழி ஆய்வுக்கும் வழிவகுத்துள்ளது (சண்முகம், 1989).

iii. கோட்பாட்டு ஆய்வு

இலக்கணக் கோட்பாட்டு ஆய்வும் மொழியியல் தாக்கத்தால் ஏற்பட்டதே. அதைத் துவக்கி வைத்த பெருமை தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரைச் சாரும். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட தொல்காப்பிய மொழியியல் (அகத்தியலிங்கம் & முருகையன் 1992) என்ற நூல் எழுத்து சொல் இலக்கணக் கோட்பாடுகளை விளக்கியுள்ளது. ஆசிரியருடைய எழுத்திலக்கணக் கோட்பாடு, சொல்லிலக்கணக் கோட்பாடு வரிசை நூல்களும் இந்தத் துறையில் குறிப்பிடத்

தகுந்தவையே. தொல்காப்பியக் கோட்பாட்டு ஆய்வே பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிற இலக்கணங்களின் கோட்பாட்டு ஆய்வு அதிக அளவில் மேற்கொள்ளப்பட வில்லை. ஆனாலும் எழுத்திலக்கணத்தில், நேமிநாதம், வீரசோழியம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய நூல்களில் காணப்படும் கோட்பாடுகளைக் கண்டறிய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது (சண்முகம், 1980).

வீரசோழியம் பற்றி ஒரு தனி நூலே (இராசாராம் 1992) வெளிவந்துள்ளது. அது ஒரு புடை மாற்று (Transfer) என்ற புது வகையைச் சார்ந்தது என்றும் கண்டறியப் பட்டுள்ளது. மேலும் அந்த நூல் சோழர் கால மொழிச் சூழல், இலக்கணக் கல்விச் சூழல் ஆகியவைகளை ஆராய்ந்ததன் மூலம் இலக்கண உருவாக்கக் கோட்பாட்டை விளக்கி வரலாற்றுச் சமூக மொழியியல் (Historical Sociolinguistics) என்ற ஆய்வுக்கு அடித்தளம் வகுத்துள்ள பெருமை உடையது.

ஆனால் தமிழில் சொல்லிலக்கணக் கோட்பாட்டு வளர்ச்சி ஆராய்ச்சிக்கு இன்னும் பிள்ளையார் சுழி கூடப் போடவில்லை என்று கருதவேண்டியிருக்கிறது. உரையாசிரியர் களின் இலக்கணக் கோட்பாடுகள் தனியாகவும் (நச்சினார்க்கினியர் எழுத்ததிகார உரை, சண்முகம் 1967) கட்டுரைகளாகவும் எழுதப்பட்டுள்ளன.

iv. ஒப்பாய்வு

அ. தமிழ் இலக்கணங்களுக்கு இடையே ஆய்வு

தமிழ் இலக்கண்ங்களை ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டு ஆராயும் ஆராய்ச்சியில் தொல்காப்பிய-நன்னூல் ஒப்பாய்வே பழமையானது. சாமுவேல் பிள்ளை 1855இலேயே ஒரு நூல் வெளியிட்டுள்ளார். அடுத்து வெள்ளைவாரணன் எழுத்து, சொல் என்ற இரண்டுக்குத் தனித்தனி நூல்கள் (1962, 1963) வெளியிட்டுள்ளார். நன்னூல் அதற்கு முன்னர் எழுதப்பட்ட நூல்களில் ஏற்படுத்திய தாக்கத்தை விஜயவேணுகோபால் (1968), சுப்பிரமணியன் (1977) ஆகியவர்கள் விரிவாக ஆராய்ந்துள்ளார்கள். பல இலக்கண நூல்களின் செல்வாக்கு பற்றி விளக்கும் ஆராய்ச்சியாகவே இவை அமைந்துள்ளன.

உண்மையில் செம்மையாகச் செய்யப்படும் தமிழ் இலக்கண ஆராய்ச்சி, தமிழ் மொழி வரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்களையும் இலக்கணக் கோட்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களையும் விளக்கும் ஆய்வாக அமைய வேண்டும். இந்த முறையில் வந்த ஆராய்ச்சி குறைவாகவே உள்ளது.

ஆ. தமிழ் - பிறமொழி ஒப்பிலக்கண ஆய்வு

a. தமிழ் - வடமொழி

உரையாசிரியர்களே தமிழ் - வடமொழி இலக்கணக் கோட்பாடுகளை ஒப்பிட்டுச் சில கருத்துகளைச் சொல்லியுள்ளார்கள். இந்த நூற்றாண்டில் சுப்பிரமணிய சாஸ்திரி (1934)' காட்டிய வடமொழி-தமிழ் இலக்கண ஒற்றுமையும் வேற்றுமையும் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் ஒற்றுமை வடமொழிக் கருத்துகளைக் கடனாண்டதால் ஏற்பட்டது என்பது இன்று ஒத்துக்கொள்ளப்படுவதில்லை. சில ஒற்றுமை உலகப் பொதுமையானது என்று அறியப்பட்டுள்ளது. மொழியியல் ஆராய்ச்சி மிகுந்தபோது பாணினி - தொல்காப்பிய ஒற்றுமை வேற்றுமை இன்று ஓரளவு பரவலாக மேற்கொள்ளப் பட்டு, தொல்காப்பியரின் தனித்துவம் நிறுவப்பட்டுள்ளது (மீனாட்சி 1971, 72, 73; முருகையன் 1982; பாலசுப்பிரமணியன் 1987). வடமொழி பிராதிசாக்கியங்களும் தொல்காப்பியப் பிறப்பியலும் விரிவாக ஆராயப்பட்டு, தொல்காப்பியர் நேரடியாக வடமொழி கருத்துகளைக் கடனாண்டிருக்க முடியாது என்றும் நிரூபிக்கப்பட்டுள்ளது (ராஜம் 1981).

b. தமிழ்-பிற திராவிட மொழிகள்

மலையாள மொழி இலக்கணங்களைத் தமிழ் இலக்கணங்களோடு ஒப்பிடும் முயற்சியும் மீனாட்சிசுந்தரனார் (1965 அ, 1965 ஆ), இளையபெருமாள் (1971) ஆகியவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நான்கு திராவிட மொழிகளில் காணப்படும் ஒரு சொல் வகைப்பாடும் ஒப்பிட்டு ஆராயப் பட்டிருக்கிறது (சண்முகம் 1986).

c. தமிழ் - உலகமொழி இலக்கணங்கள்

உலக மொழிகளிலும் (பாபிலோனியா, வடமொழி. கிரேக்கம்) நடைபெற்ற இலக்கண ஆய்வின் வளர்ச்சிப்பாதை. வளர்ச்சிக் காரணங்கள் ஆகியவைகளின் அடிப்படையில்

தொல்காப்பியத் தோற்றத்துக்கான காரணங்களை ஊகித்தறியும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு அதற்கு இலக்கணச் சமூகவியல் (Sociology of Grammar) என்று பெயரிடலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது (சண்முகம் 1989, 1992 ஆ). இது மலையாள மொழியின் முதல் இலக்கணத்தை ஆராயவும் (சண்முகம், 1992 ஆ), பல்லவர் - பாண்டியர் கால இலக்கணங்களை ஆராயவும் (சண்முகம் 1994) வழிவகுத்து இலக்கணச் சமூகவியல் ஆய்வுக்கு உரம் சேர்த்திருக்கிறது. இந்தத் துறையில் சிறிது வேறுபட்ட நோக்கில் முன்னரே வெளி வந்துள்ள சிவத்தம்பி ஆய்வும் (1983) கவனத்துக்கு உரியது. இலக்கண ஆராய்ச்சியில் கோட்பாட்டு நிலையிலே இது ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்த்திருப்பதாகக் கருதலாம். ஆனாலும் இன்னும் சோழர் கால இலக்கணங்கள், பிற்கால இலக்கணங் களை இந்த முறையில் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

இ. இலக்கணம் - மொழி ஒப்பீடு

a. இலக்கணம்-இலக்கிய மொழி ஒப்பு

தொல்காப்பியம் கூறும் மொழி அமைப்பை இலக்கிய மொழிகளோடு ஒப்பிட்டு ஆராயும் ஆராய்ச்சி மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தாரால் மேற்கொள்ளப்பட்டது. அதன் விளைவாகத் தொல்காப்பியமும் சங்க இலக்கிய மொழியும் ஒப்பு நோக்கில் நடராசன் (1977) ஆராய்ந்துள்ளார். அந்த முறையில் பிற இலக்கியங்களும் ஆராயப்பட்டுள்ளன.

b. இலக்கணம் - பிற திராவிட மொழி ஒப்பாய்வு

தமிழ் இலக்கணத்தைச் சரியாகப் புரிந்துகொள்ள பிற திராவிட மொழி - குறிப்பாகப் பழங்குடி மக்கள் பேசும் திராவிட மொழி ஒப்பு ஆய்வு துணை செய்யும் (இசரயேல் 1994). உகரச்சுட்டு அண்மைக்கும் சேய்மைக்கும் இடைப் பட்ட இடப்பொருளை உணர்த்துவதாக உரையாசிரியர் கூறுவது பொருந்தாது என்பது சங்க இலக்கிய வழக்கும் பழங்குடி மக்கள் பேசும் திராவிட மொழி வழக்கும் காட்டுவதாக இசரயேல் விளக்கியுள்ளார். உகரச்சுட்டு மிகச் சேய்மையைக் குறிக்கும். ஒப்பிலக்கண நோக்கில் தொல்காப்பிய மொழியை ஆராய்ந்தால் தமிழில் இலக்கிய வழக்குகளில் ஏறாத ஒரு கிளைமொழி வழக்கு சங்ககாலத்தில் இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்க இடம் கொடுத்துள்ளது (சண்முகம் 1989 : 199 தொ.).

3. முடிவுரை

தமிழில் இலக்கண ஆய்வு ஓரளவு பரந்தும் விரிந்தும் செய்யப்பட்டிருப்பது உண்மைதான். இருந்தாலும் கோட்பாட்டு அளவில் ஆராய்ச்சி சிறக்கும்போதுதான் இந்திய அளவிலும் உலக அளவிலும் தமிழ் இலக்கணங்கள் மொழியியல் வரலாற்றில் இடம்பெற முடியும்.

அதற்கு முன்னோடியாகச் செய்ய வேண்டிய பணிகளை அண்ணாமலை (*1984*, சண்முகம், *1984* முன்னுரை) சுட்டிக்காட்டியிருப்பது எடுத்துக் காட்டத்தகுந்தது.

'தற்காலத்தில் ஆங்கில மொழி நூல் மரபுகளின் தாக்கம் பரவியிருக்கும்போது தொல்காப்பிய ஆராய்ச்சி முனைப்பாக நடைபெறுகிறது........ பல ஆராய்ச்சி நூல்கள், கட்டுரைகள், பட்ட ஆய்வேடுகள் எழுதப்பட்டிருக்கின்றன; கருத்தரங்குகள் நடத்தப்பட்டிருக்கின்றன. வளர்ந்துவரும் தொல்காப்பிய இலக்கியத்தை அளவீடு செய்து, நிறுவப்பட்ட உண்மைகளை வகைப்படுத்தி இன்னும் ஆராய வேண்டிய பகுதிகளை இனங்காண்பது இன்றைய தேவையாகும்' என்ற அவருடைய வாசகம் எல்லாத் தமிழ் இலக்கண நூலுக்கும் பொருந்தும் உண்மையாகக் கொள்ளலாம். இதற்குப் பாணினி ஆராய்ச்சியை வகைப்படுத்திக் கர்டோனா (Cardona 1976) எழுதியிருப்பது முன்மாதிரியாகக் கொள்ளத்தகுந்தது.

பயன்பட்ட நூல்கள்

1. அகத்தியலிங்கம், ச., தொல்காப்பியச் சிந்தனைகள், அண்ணாமலைநகர், 1985.
2. அகத்தியலிங்கம், ச., முருகையன்.க., தொல்காப்பிய மொழியியல், அண்ணாமலை நகர், 1972.
3. அண்ணாமலை, இ., அணிந்துரை. சொல்லிலக்கணக் கோட்பாடு (சண்முகம் 1984), 1984.
4. ஆபிரகாம் அருளப்பன் & சுப்பிரமணியம், வி.ஐ., சொல்லதிகார உரைக்கோவை, பாளையங்கோட்டை, 1963.
5. இராசமாணிக்கம், ச., 'வீரமாமுனிவர் அருளிய இலக்கண நூல்கள்' எட்டாவது உலகத் தமிழ் மாநாடு சிறப்பு மலர், 123-26, தஞ்சாவூர், 1995.

6. இராசாராம், சு., வீரசோழிய இலக்கணக் கோட்பாடு, நாகர்கோவில், 1992.

7. இளங்குமரன், இலக்கண வரலாறு, சிதம்பரம், 1985.

8. இளவரசு, சோ., இலக்கண வரலாறு, சிதம்பரம், 1963.

9. காமாட்சி, அ., தொல்காப்பியத்தில் வினைக்குறிப்பு, நாகர்கோயில், 1989.

10. கிருஷ்ணமூர்த்தி, கோ., தொல்காப்பிய ஆய்வின் வரலாறு, சென்னை, 1990.

11. கிருஷ்ணமூர்த்தி, நா., (பதிப்பு), இலக்கணச் சூடாமணி உரையுடன், தஞ்சாவூர், 1989.

12. கிருஷ்ணமூர்த்தி, சா., உரைச்சொற்களஞ்சியம், சிதம்பரம், 1985.

13. கோதண்டராமன், பொன். (பொற்கோ), இலக்கணக் கலைக்களஞ்சியம், சென்னை, 1985.

14. சண்முகதாஸ், அ., தமிழ்மொழி இலக்கண இயல்புகள், யாழ்ப்பாணம், 1982.

15. சண்முகம், செ.வை., எழுத்திலக்கணக் கோட்பாடு, அ.நகர், 1980.

16. ” 'தொல்காப்பியம்-எழுத்து- மொழியியற் கூறுகள் - நூல்களின் அளவீடு' - Journal of Annamalai University, 1984.

17. ” சொல்லிலக்கணக் கோட்பாடு I, அ. நகர், 1984.

18. ” (அ) 'திராவிட மொழி இலக்கணச் சொல்வகை', புலமை, 12.2, 1986.

19. ” (ஆ) சொல்லிலக்கணக் கோட்பாடு II, அண்ணாமலை நகர், 1986.

20. ” மொழி வளர்ச்சியும் மொழி உணர்வும் (சங்ககாலம்), சென்னை, 1989.

21. ” (அ) சொல்லிலக்கணக் கோட்பாடு III, சென்னை, 1992.

22. ” (ஆ) மலையாள மொழியின் முதல் இலக்கணம், சென்னை, 1992.

23. ” கிறித்துவ அறிஞர்களின் இலக்கணப்பணி, சென்னை, 1993.

24. ” இலக்கண உருவாக்கம் I பல்லவர்- பாண்டியர் காலம், சென்னை, 1994.

25. சாமுவேல் பிள்ளை, ச., தொல்காப்பிய நன்னூல், சென்னை, 1858.

26. சிவத்தம்பி, கா., இலக்கணமும் சமூக உறவுகளும், சென்னை, 1982.

27. சிவலிங்கனார், ஆ. (பதிப்பர்) தொல்காப்பிய உரைவளம் எழுத்து & சொல், சென்னை, 1980.

28. சுந்தர சண்முகனார், தமிழ் அகராதிக் கலை, இரண்டாம் பதிப்பு, சென்னை, 1965.

29. சுப்பிரமணியம், ச.வே., இலக்கணத் தொகை, எழுத்து, நாகர்கோவில், 1967.

30. ” இலக்கணத் தொகை - சொல், நாகர்கோவில், 1931.

31. தாமோதரன், அ., ‘நன்னூல் விருத்தியுரைக்கு ஒரு திருத்தப் பதிப்பு’ எட்டாவது உலகத் தமிழ் மாநாடு சிறப்பு மலர், பக். 115-9, தஞ்சாவூர், 1995.

32. தொல்காப்பியக் கருத்தரங்கு - கருத்தரங்கக் கட்டுரைகள் இரண்டாம் தொகுதி, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி, 1994.

33. பட்டாபிராமன், துரை., இலக்கண ஆய்வடங்கல்: எழுத்தும் சொல்லும், முதல் தொகுதி, அண்ணாமலை நகர், 1992.

34. பழனியப்பன், வெ., தமிழ்நூல்களில் பாடவேறுபாடுகள், அண்ணாமலை நகர், 1990.

35. பாலசுப்பிரமணியன், க., ‘தொல்காப்பியமும் பாணினியமும் ஓர் ஒப்பாய்வு’, மொழியியல் (10, 1 & 2), 1987.

36. மகாலிங்கம், நா., (பதிப்பர்), தொல்காப்பியம் (எழுத்துப்படலம், சொல்படலம்), சென்னை, 1994.

37. மல்லிகா, பா., இலக்கண மரபில் இடைச்சொற்கள், பாலக்காடு, 1981.

38. *மாணிக்கம், வ.சுப., **தொல்காப்பியத் திறன்**, சிதம்பரம், 1984.*

39. *வெள்ளைவாரணன், க., **தொல்காப்பியம்-நன்னூல் எழுத்ததிகாரம்**, அண்ணாமலை நகர், 1962.*

40. " *தொல்காப்பியம்-நன்னூல்-சொல்லதிகாரம், சிதம்பரம், 1968.*

41. *ஜெயதேவன், வ., **தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு**, சென்னை, 1985.*

42. Cardona, G., **Panini A Survey of Research,** The Hauge, 1976.

43. Elayaperumal.M., 'The Influence of Tolkappiyam in Liilatilakam' **Proceedings of the First Conference of Dravidian Linguists** Ed. Subramaniam.V.I, pp.170-3, Trivandrum, 1971.

44. Israel, M., **'Presidential Address to Dravidian Linguistics", IJDL** XXIII, No.1, 1-6, *1994.*

45. Meenakshi, K., **Treatment of Cases in Astadhyayi and Tolkappiyam,** *ஆய்வுக்கோவை, 3.255-8, அண்ணாமலை நகர், 1971.*

46. " 'Treatment of Compounds in Astadhya:yi and Tolkappiyam', ***ஆய்வுக்கோவை,*** *நான்காவது கருத்தரங்கு மலர், பக்.469-74, திருவனந்தபுரம்,* 1972.

47. " 'Treatment of finite verb in Asta:dhya:yi and Tolkappiyam', ஆய்வுக்கோவை*-5, 746-51, சென்னை,* 1973.

48. Meenakshi Sundaranar, A., **Liilatilakam - A few glimpses-Seminar on Grammatical Theories** in Malayalam (Unpublished), Trivandrum, *1965.*

49. " **Tamil and Telugu Grammars- Seminar on Grammatical Theories in Telugu**, Hyderabad, 1965.

50. Murugaiyan, K., 'Did Tolka:ppiyar translate Pa:niniya Siksha', ***ஆய்வுக்கோவை,*** *5.589-606, சென்னை, 1965.*

51. Natarajan, T., **The Language of Sangam Literature and Tolkappiyam,** Madurai, 1977.

52. Rajam, V.S., **A Comparative Study of two ancient Grammatical Traditions. The Tamil Tolkappiyam Compared with Sanskrit Rik Pratskiya, Taittyireya Pratioakhya 0and Asta:dhya:yi,** Unpublished Ph.D. dissertation, University of Pensylvania, 1981.

53. Ramaiah, L.S., **Tamil language and linguistics,** Madras, 1995.

54. Shanmugham, S.V., **Naccinark Kiniyar's Concept of Phonology,** Annamalai Nagar, *1967.*

55. Subramaniyam, S., **Phonology - A Critical Study of Tolka:ppiyam - Nannul,** Nagercoil, 1977.

56. Subramaniya Sastri, P.S., **History of grammatical Theories in Tamil in relation to the grammatical literature in Sanskrit,** Madras, *1934.*

57. Vijaya Venugopal, K., **A Modern evaluation of Nannul,** Annamalai Nagar, *1968.*

கலைச்சொல்லியல்

முனைவர் இராதாசெல்லப்பன்

இந்தியாவில் அறிவியல்-தொழில்நுட்ப வளர்ச்சி இன்று வரையிலும் ஆங்கிலம் வழியாகத்தான் நடைபெற்று வந்திருக்கிறது. ஆங்கிலமோ, இந்தியாவின் மக்கள் தொகையில் ஒரு சிறு பங்கினரால் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடிய மொழி. இந்நிலையில் தகவல் தொடர்புச் சாதனமாக மாநில மொழிகளை மேம்படுத்துவது இன்றியமையாததாகிறது. தாய்மொழிக் கல்வியின் பங்கை உணர்ந்த கல்வியியலார், அனைத்துத் துறைகளிலும் மாநில மொழிகளே பயிற்று மொழிகளாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினர். அறிவியலைத் தமிழ் மூலம் எல்லா நிலைகளிலும் பரப்புவதன் வாயிலாகத் தன்னறிவைப் பெருக்கலாம் என்பது அனைவரும் ஒப்புக்கொண்ட உண்மை. அறிவியல் தமிழின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், அறிவியல் தமிழாக்க முயற்சிகள் தோன்றிக் கிட்டத்தட்ட 150 ஆண்டுகள் கழிந்துள்ளதை அறிகிறோம். இந்த நீண்ட காலகட்டத்திற்குப் பிறகும், அறிவியல் தமிழ் வளர்ச்சி தேவைக்கேற்றவாறு அமையவில்லை என்பதுதான் உண்மை. அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டைகளாக உள்ளவற்றை ஆராயும்போது, சமூக விழிப்புணர்ச்சியின்மை, அறிவியல் எழுத்தாளர்க்குப் போதிய

பயிற்சியளிக்காமை, வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தப் போதிய நிதி கிடைக்கப்பெறாமை எனப் பல காரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். இவையேயன்றி, கலைச் சொல்லாக்கப் பணிகளில் நிகழ்ந்துள்ள சில செயல்முறைக் குறைபாடுகளையும் காரணமாகக் காட்டலாம்.

சமூக விழிப்புணர்ச்சி

பல ஆண்டுகளாகக் கற்றோர் தொகை மிகக் குறைவாக இருந்து கல்லாதவரை அடிமைப்படுத்துதலே கல்வியின் குறிக்கோள் என எண்ணப்பட்டதால், பெரும்பான்மையான மக்களுக்குப் புரியாத மொழியில் கற்பதே உயர்வு என்ற கருத்து இன்றும் நிலவியுள்ளது. இது ஒரு சமுதாயச் சிக்கல். தேவையான நூல்கள் தமிழில் இல்லாததாலும், கற்பிக்க ஆசிரியர் முன்வராததாலும், தமிழ் மூலம் பயிலும் திட்டத்திற்குப் பெற்றோரும் மாணவரும் முழுமையான ஆதரவு தராததாலும், அறிவியல் தமிழாக்க முயற்சிகள் இந்த நூற்றாண்டின் இடைப்பகுதி வரையிலும் எதிர்பார்த்த பலனைத் தரவில்லையெனலாம். தாய்மொழியில் அறிவியல் தொழில் நுட்பங்களைக் கற்றல், பிற மாநிலங்கள், அயல் நாடுகள் முதலியவற்றில் வேலை தேட முடியாது என்பது சிலர் கூறும் காரணம். ஆனால், தற்போது இந்த நிலை மாறி வருகிறது. தமிழில் அறிவியல் நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆசிரியர்களும் ஒத்துழைப்பு தருகின்றனர். ஒரு நாட்டு மக்கள் பிற மாநிலங்களுக்கு அல்லது அயல் நாடுகளுக்குச் செல்வதற்குப் பஞ்சம், வறுமை முதலியவை தான் காரணமென்பர் ஆராய்ச்சியாளர். அறிவியல் வளர்ச்சி யில்லையேல் ஒரு நாட்டில் வறுமை ஒழியாது என்பர். அறிவியல் பரப்பலுக்கு நல்ல கருவி தாய்மொழிதான். தமிழில் அறிவியலைச் சொல்லிக் கொடுக்க வேண்டும் எனும்போது, ஆங்கிலம் போன்ற பிற மொழிகளை விலக்க வேண்டுமென்பது பொருளல்ல. இங்கு மொழிப் பயிற்சி என்பதையும் பயிற்சி மொழி என்பதையும் சிறிது விளக்க வேண்டியுள்ளது. இவ்விரு கருத்துக்களும் வெவ்வேறானவை. மொழிப் பயிற்சி எனும் சொல் மொழிகளைப் படிப்பதைக் குறிக்கும். பயிற்றுமொழி என்பது அந்த மொழியை ஊடகமாகக் கொண்டு பிற துறைகளைக் கற்பது. இங்கு, மொழிப் பயிற்சி என்ற நிலையில் ஆங்கிலம் போன்ற பிற மொழிகளைப் படிக்கலாம். ஆனால், பயிற்று மொழியாகத் தாய்மொழியே இருக்க வேண்டும் என்பதே இங்கு வலியுறுத்தப்படுகிறது.

கலைச்சொல்லியல் - ஒரு பாடத்துறை

அறிவியலைத் தமிழில் தர முனையும் அறிவியல் எழுத்தாளர்கள், முறையான பயிற்சி பெற்றவர்களாக இருந்தால்தான் அறிவியல் தமிழ் வளர்ச்சி நிலையை அடைய வாய்ப்புண்டு. கலைச்சொல்லியல் அறிவும் மொழிபெயர்ப்புப் பயிற்சியும் உடையவர்களை இப்பயிற்சியில் ஈடுபடுத்தினால் அறிவியல் தமிழாக்கம் விரைவாக நடைபெறும். மொழிபெயர்ப்பியலையும் கலைச்சொல்லியலையும் பல்கலைக்கழக அளவில் பாடத்துறைகளாக ஏற்படுத்துவது நல்ல பயன் தரும். உலக அளவிலே கலைச்சொல்லியல் ஒரு பாடத்துறையாகக் கருதப்படுகிறதா? என்ற கேள்வியும் எழக் கூடும். ஆஸ்டிரியாவிலும், தென்னாப்பிரிக்காவிலும் பல்கலைக் கழகங்களில் கலைச்சொல்லியல் இளங்கலைப் பட்டமும், முதுகலைப் பட்டமும் தரப்படுகின்றன. கனடாவில் இளங்கலை வகுப்பில் கலைச்சொல் விருப்பப்பாடமாக உள்ளதாக அறிகிறோம். அறிவியல் தமிழின் ஒரு பிரிவாகக் கலைச்சொல்லியலைக் கொண்டு பாடத்திட்டங்களை வகுக்கலாம். இப்பிரிவில் அறிவியல் மொழிபெயர்ப்புக் கோட்பாடு (*Theory of Science Translation*), சிறப்புப் பயன்பாட்டுத் தமிழ் (*Tamil of Special Purpose*) கலைச்சொல் கோட்பாடு (*Theory of Terminology*) கணிப்பொறிப் பயன்பாடு முதலியவற்றைக் கற்பிக்கலாம்.

மேலைநாடுகளில் சிறப்புப் பயன்பாட்டு மொழி மாநாடுகள் உலகளாவிய நிலையில் ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றன. அதுபோன்றே, *Terminology and Knowledge Engineering* என்ற தலைப்பிலும், மாநாடுகள் நடைபெறுகின்றன. இம்மாநாடுகளில் உலக மொழிகளில் கலைச்சொல்லாக்கம் நடைபெறும் வழிவகைகள் விவாதிக்கப் பெறுகின்றன.

கலைச்சொல் குழு

தமிழில் கலைச்சொல்லாக்க வரலாற்றை நோக்கும்போது, 1850 தொடக்கம் இன்றுவரை பலவகை முயற்சிகளும் நடந்து வருவது புலனாகும். இவற்றுள் சில தனியார் முயற்சிகள்; சில குழு முயற்சிகள். ஆனால், இக் குழுக்கள் நிரந்தரமானதொரு அமைப்பாக இல்லாமல், ஓரிரண்டு ஆண்டுகள் மட்டுமே செயல்படும் தற்காலிக

அமைப்பாக இருப்பது ஒரு பெரிய குறைபாடு. இந்த அறிவியல் யுகத்தில் நாளுக்குநாள் கண்டுபிடிப்புகள் பெருகி வருவது கண்கூடு. இங்ஙனம் புதிய புதிய கருத்துக்கள் தோன்றும்போது, அவற்றை உடனுக்குடன் தமிழாக்கம் செய்ய, புதிய கலைச்சொற்கள் தேவைப்படுகின்றன. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய ஒரு நிரந்தரமான கலைச்சொல் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். உலக நாடுகளைப் பார்க்கும்போது, கலைச்சொல்லாக்கத்தில் பெரும்பாலும் குழு முயற்சிகளே காணப்படுகின்றன. சில நாடுகளில் நூற்றுக் கணக்கான குழுக்கள் உள்ளன. இவை ஆண்டொன்றிற்குச் சராசரி ஐம்பது தொகுதிகளை வெளியிடுகின்றன. அரபு நாடுகளில் சுமார் ஐம்பது பல்கலைக்கழக ஆசிரியர்களைக் கொண்ட குழு அமைக்கப்பெற்றுள்ளது. இக்குழு கலைச் சொற்களை உருவாக்கவும், தரப்படுத்தவும் முயலுகின்றன. பிரான்சிலுள்ள கலைச்சொல் குழு கடன் சொல்லைத் தவிர்ப்பதையும், ஆங்கிலத்திலிருந்து கடனாகப் பெற்ற கலைச் சொற்களுக்குப் பதிலாக, பிரெஞ்சுச் சொற்களைப் பயன்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டது. மேற்குறிப்பிட்டது போன்று, தமிழ் மொழியிலும் கலைச்சொல் குழுவை நிறுவ வேண்டும். ஒவ்வொரு துறைக்கும் தனித் தனியாகக் குழுக்கள் நிறுவப்பட வேண்டும். இக்குழுவில் துறை அறிஞர், தொடர்புடைய துறை அறிஞர், கலைச்சொல்லியலார், மொழியியலார், தமிழ் அறிஞர் ஆகிய ஐவகை அறிஞர்களும் இடம்பெற்றிருத்தல் வேண்டும்.

ஒருங்கிணைப்புப் பணி

பல நாடுகளிலும் வாழும் தமிழரின் கலைச் சொல்லாக்க முயற்சிகளை ஒருங்கிணைக்கும் பணியும் செய்யப்பட வேண்டும். ஜெர்மன் பேசப்படும் நாடுகளான ஜெர்மனி, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளிலுள்ள தரநிறுவனங்கள் ஒருமைப்பாடுடைய ஜெர்மன் கலைச்சொற்களை உருவாக்கும் நோக்கத்துடன் தமது முயற்சிகளை ஒருங்கிணைக்கின்றன. கலைச்சொல் திட்டங்கள் பலவும் அவர்களால் இணைந்து செய்யப்படுகின்றன. பிரான்சிலும், கியூபக், செனகல் போன்ற பிரெஞ்சு மொழி பேசும் பகுதிகளிலும் கலைச்சொல் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களின் பணியை ஒருங்கிணைத்துத் தரப்படுத்தும் பொறுப்பைப் பிரான்சிலுள்ள பிரெஞ்சு மொழிக் கழகம் ஏற்றுள்ளது. தமிழ் மொழியைப் பொறுத்த வரையில் அறிவியல் தமிழ்க் கலைச்சொல்லாக்க

முயற்சிகள் பரவலாக நடைபெற்று வருகின்றன. குறிப்பாக இலங்கையில் அதிகமான அளவில் கலைச்சொல் பணிகள் நடந்துள்ளன. ஆனால், தமிழகப் பணிகளும் பிற நாடுகளில் நடக்கும் பணிகளும் ஒருங்கிணைக்கப்படவில்லை. அதனால், ஒரு நாட்டில் நிலை பெற்ற கலைச்சொல் பிறிதொரு நாட்டில் வழக்கில் இல்லாத நிலை ஏற்படுகிறது. ஒருங்கிணைப்பு முயற்சி இல்லாத காரணத்தால் ஏற்கெனவே வழக்கிற்கு வந்து நிலை பெற்ற சொற்கள் இருக்கும்போதே அதை அறியாது புதிய சொற்களைத் தேடும் அல்லது உருவாக்கும் வீண் முயற்சி செய்யப்படுகிறது. இதனால் கால விரயம் ஏற்படுகிறது.

கலைச்சொல்லியல் கொள்கைகள்

கலைச்சொல்லாக்கப் பணியில் ஈடுபடுவோர், பொதுவாக ஆங்கிலக் கலைச்சொற்களைத் தனித்தனியாக எடுத்துக்கொண்டு அவற்றிற்குரிய தமிழாக்கங்களைச் செய்யும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். ஆனால், இது அறிவியல் பூர்வமான ஓர் அணுகுமுறையாக இருக்காது. கலைச்சொற்களை உருவாக்க இரு வழிமுறைகள் தற்போது கையாளப் படுகின்றன. ஆங்கிலக் கலைச்சொற்களைத் தனித்தனியாக எடுத்துக்கொண்டு, (பொதுவாக அகரவரிசையில்) அவற்றிற்குரிய தமிழ்ச் சொற்களை ஆக்குவது என்பது ஒன்று. ஒரே கருத்துத் தொகுதியைச் சேர்ந்த (*Conceptional domain*) கலைச்சொற்களை ஒருசேரப் பார்த்து அவற்றிற்கான கலைச்சொற்களை ஆக்குவது மற்றொன்று. தமிழகத்தில் பெரும்பாலும் முதலில் கூறிய வழிமுறையைப் பின்பற்றியே பல கலைச்சொல் பட்டியல்கள் வெளிவந்துள்ளன எனலாம். இதில் இரண்டாவது கூறப்பட்ட வழிமுறையை முதன் முதலாகக் கையாண்ட பெருமை பா.வே. மாணிக்க நாயக்கனாருக்கு உரியது. ஒரே கருத்துத் தொகுதியைச் சேர்ந்த கருத்துக்களுக்குரிய தமிழ்க் கலைச்சொற்களைக் காண அவர் பெரிதும் முயன்றார். சான்றாக, *proteid, plumule, radicle*- ஆகிய ஒரே கருத்துத் தொகுதியைச் சார்ந்த கலைச் சொற்களுக்கு இணையான தமிழாக்கங்களை உருவாக்க அவர் கண்ட முறையைச் சுட்டலாம். எந்த ஒன்றிலும் அடிப்படைத் தேவையாக அல்லது முதல் தேவையாக இருப்பதை முதல் என்று கூறுவது தமிழ் வழக்கு. இதை மனதில் கொண்டு, ஊட்டச்சத்தின் மிகவும் அடிப்படைப் பொருளாய் அமைவதை உணாமுதல் (*proteid*) என்றும், வேர் வளர்வதற்குரிய

அடிப்படைப் பகுதியை வேர்முதல் என்றும் (Radicle), முளை தோன்றும் பகுதியை முளைமுதல் (plumule) என்றும் குறிப்பிட்டார்.

முதலில் கலைச்சொல்லாக்கக் கொள்கைகளை வகுத்துக் கொண்டு, அதன் அடிப்படையில் சொற்களை உருவாக்குவது தான் சிறந்த முறை. மொழிபெயர்ப்புக் கொள்கைகளையும், சொல்லாக்கக் கொள்கைகளையும், ஒலிபெயர்ப்புக் கொள்கை-களையும் உருவாக்கிக் கொண்டால், கலைச்சொல்லாக்கப் பணியை இன்னும் எளிதாகச் செய்ய முடியும்.

இலங்கைக் கலைச்சொல்லகராதிக் குழுவினர் தமக்கென்று சில கொள்கைகளை வரையறுத்துக்கொண்டு சொற்களை உருவாக்கினர். மரபிலக்கணத்தை முழுவதுமாகப் பின்பற்றிச் சொற்களையமைத்தல், கிரந்த முதலான கொள்கைகளின் அடிப்படையில் அவர்தம் சொல்லாக்கங்கள் இருந்தன. ஒலிபெயர்ப்போ, மொழிபெயர்ப்போ, புதுச்சொற் படைப்போ எதுவானாலும் ஒரு விதி முறையை ஆக்கிக் கொண்டால், பின் அதற்கு மாறுபடாமல் சொற்களை ஆக்கிக் கொள்ளும் முறையில் சீர்மை காணப்படுகிறது. இலங்கைக் கலைச்சொல்லகராதிகளிலுள்ள சீர்மை தமிழகக் கலைச்சொல்லகராதிகளில் இல்லை என்ற உண்மையும் இங்குக் குறிப்பிடத்தக்கது. இலங்கையில் கலைச்சொல்லாக்கப்பணி அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட ஒரே குழுவினரால் ஆக்கப்பட்டது. ஆனால், இங்கோ, அரசு, பல்கலைக்கழகம், தனியார் அமைப்புகள் ஆகிய பல்வேறு முயற்சிகளின் பயனாகத் தோன்றியவை தமிழகக் கலைச்சொல் தொகுதிகள். எனவே, இலங்கை முயற்சியில் கலைச்சொல் சீர்மை காணப்படுவதில் வியப்பில்லை.

கலைச்சொல் தரப்படுத்தல்

கலைச்சொல்லாக்கத்தில் கடந்த பல ஆண்டுகளாகப் பல முயற்சிகள் நடந்திருப்பினும், இவற்றால் எதிர்பார்த்த பலன் கிட்டாததற்கு முக்கியமான ஒரு காரணம் உண்டு. தமிழில் பல கலைச்சொல்லாக்கப் பட்டியல்கள் வெளி வந்திருப்பினும், இவற்றை ஆதாரமாகக் கொண்டு தரவுருத் தொகுதி உருவாக்கப்படவில்லை. இதனால், ஒரே கருத்திற்குப் பல்வேறு கலைச்சொற்கள் பயன்படுத்தப்பட்டன. ஒரே நிறுவன வெளியீடுகளில்கூட, கலைச்சொல் ஒருமைப்பாடு

இல்லை. தரப்படுத்தல் என்பது கலைச்சொற்களைச் சீர்மைப் படுத்தவும், அவற்றிற்கு நிலைபேற்றைக் கொடுக்கவும் உதவுகிறது. அறிவியல் தகவல் தொடர்பில் பங்கு பெறுவோர், சிக்கனத்தையும் சரிநுட்பத்தையும் பெறத் தரப்படுத்துதல் பெருமளவிற்கு உதவும். தரப்பாட்டுப் பணியில் குழு முயற்சி பலன் தரும். கலைச்சொல் பணியில் உலகத்தர நிறுவனத்தின் (ISO) பங்கு குறிப்பிடற்குரியது. ஜெனிவாவில் அமைந்துள்ள இந்நிறுவனத்தின் ஒரு பகுதியான TC/37 கலைச்சொல் பணிகளில் ஈடுபட்டுள்ளது. இக்குழு ஆஸ்டிரியாவைத் தலைமையகமாகக் கொண்டு செயல்படுகிறது. கலைச்சொல் கொள்கைகள், அகராதி அமைப்பு, கணிப்பொறி வழித் தொகுப்பு ஆகிய இதன் பணிகளை முறையே ரஷியா, கனடா, ஆஸ்டிரியா நிறுவனங்கள் செய்கின்றன. இந்நிறுவனத்தினு-டைய உறுப்பு நாடுகளின்கலைச்சொல் தரப்பாட்டுப் பணியையும் இந்நிறுவனமே ஏற்று நடத்துகிறது. இந்தியாவின் தர நிறுவனமும் (ISI) ஒவ்வொரு மாநில மொழிக்கும் ஒவ்வொரு பிரிவை அமைத்து இப்பணியைச் செய்யலாம். தமிழ்ப் பிரிவில் தமிழ்க் கலைச்சொற்களைத் தரப்படுத்தும் பணி செய்யப்பட வேண்டும். தமிழ்க் கலைச்சொல் குழு, தமது கலைச்சொற்களைப் பரிந்துரையாக இந்நிறுவனத்திற்கு அனுப்பலாம். இதன் தமிழ்ப் பிரிவு தகுந்த விவாதத்திற்குப் பின் இவற்றைத் தரவுருக்களாக அறிவிக்கலாம். இவை கால முறை வெளியீடுகளாக அமையவேண்டும். பட்டறிவின் பலனாகவும், தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனாகவும் ஏற்படும் கருத்து வளர்ச்சியின் அடிப்படையில் அவை செம்மைப்படுத்தப்பட வேண்டும்.

கலைச்சொல்லகராதிகள்

அறிவியல் தமிழாக்கத்திற்குரிய கருவி நூல்கள் கலைச் சொல் அகராதிகள். இக்கருவி நூல் தேவையைத் தற்போது தமிழில் உள்ள கலைச்சொற்கள் நிறைவு செய்கின்றனவா? என்ற கேள்விக்கு எதிர்மறை விடையைத்தான் கொடுக்க முடியும். தமிழிலே விரிவான தொகுப்பு இல்லை. போதிய கலைச்சொற்கள் கிடைக்காத காரணத்தால், கட்டுரை எழுதும் முயற்சியைக் கைவிடுவாரும் உண்டு. இவர்களுக்குப் பயன்படும் வகையில் கலைச் சொல்லகராதிகள் வெளியிடப்பட வேண்டும். தற்போதுள்ள கலைச்சொல் தொகுதிகளை ஆராயும்போது, ஒரே பாடத் துறைக்குப் பல தொகுதிகளும் சில பாடத்

துறைகளுக்குத் தொகுதிகளே தயாரிக்கப்படாத நிலையும் இருப்பதை அறியலாம். கலைச்சொல் குழுவினரும், கலைச் சொல் பட்டியல்களை உருவாக்குவதில் ஈடுபடும்போது, ஏற்கெனவே வெளிவந்த பட்டியல்களிலுள்ள சொற்களில் ஒரு சில மாற்றங்களை ஏற்படுத்துவதில் மட்டுமே முனைகின்றனரே தவிர, நாளுக்கு நாள் வளர்ந்துவரும் அறிவியல் கண்டுபிடிப்புகளை, கருத்துக்களைக் குறிக்கும் புதிய புதிய கலைச்சொற்களை உருவாக்குவதில் ஆர்வம் காட்டவில்லை யென்பது தெரிகிறது. கலைச்சொற்கள் தமிழில் பெரும்பாலும் அகரவரிசைப் பட்டியலாகவே அமைந்துள்ளன. (இப்போது ஓரிரு தொகுதிகள் விளக்கங்கள் அகராதி வடிவில் வெளிவந்துள்ளன). இப்பட்டியல்களில் கலைச்சொற்களின் கருத்து வரையறையோ விளக்கமோ தரப்படவும் இல்லை. அதிலும் பெரும்பாலாக, ஆங்கிலம், தமிழ்ப் பட்டியல்களே உள்ளன. இலங்கை அரசு ஒருசில தமிழ்-ஆங்கிலம் பட்டியல்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இனிமேல் தமிழில் நடைபெற வேண்டிய கலைச்சொல் வரைவுப் பணிகளைப் பார்க்கலாம். கலைச்சொல் பதிவுகளை அவற்றின் பதிவு முறைகளுக்கேற்ப, அகராதிப் பதிவு, தொகுதிப் பதிவு என இரண்டாகப் பிரிக்கலாம். அகராதிப் பதிவுகள் கலைச்சொற்களை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றில் கலைச்சொற்களின் விளக்கமும் அவை இடம்பெறும் பாடத்துறை பற்றிய குறிப்புகளும் இடம்பெற வேண்டும். தொகுதிப் பதிவுகள் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டவை. துறை வல்லுநர்களின் ஒத்துழைப்போடு செய்யப்பெறும் இப்பதிவுகள் அறிவியல் பூர்வமான அணுகுமுறையாகும். இருமொழியகராதிகள் மட்டுமன்றி, பன்மொழி அகராதிகளும் தேவை. தற்போது, ரஷியர்களும், ஜெர்மனியர்களும், ஜப்பானியர்களும் தம் கண்டுபிடிப்புகளைத் தத்தம் மொழிகளில் வெளியிடுகின்றனர். இவற்றை நேரடியாகத் தமிழாக்கம் செய்ய இவ்வகை அகராதிகள் உதவும். கணிப்பொறியின் உதவியுடன் கலைச் சொல்லகராதிகளைச் செம்மையாகத் தொகுக்க முடியும். இதற்குத் தமிழில் பலவகை மென்னீடுகள் (software) தயாரிக்கப்பட வேண்டும். தமிழிலே விண்டோஸ் போன்ற பயன்பாட்டு மென்னீடுகள் (Application Software) தயாரிக்கப்பட வேண்டும். தமிழிலே விண்டோஸ் ஒன்றினை மேலைநாட்டில் வாழும் தமிழர் தயாரிப்பதாக அறிகிறோம்.

ஆனால், அது பற்றிய முழு விவரமும் கிடைக்கவில்லை.

ஆங்கிலம் போன்ற பிறமொழிகளிலே encarta போன்ற கணிப்பொறித் தொகுப்புகள் உள்ளன. தமிழிலும் இத்தகைய தொகுப்புகள் வெளிவர வேண்டும். பிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளிலே இத்தகைய முயற்சிகள் தொடர் பணியாக நடைபெற்று வருவதை அறிகிறோம்.

அது போலவே, மின்னணு அகராதித் (Electronic Dictionary) தொகுப்பிலும் பல்வேறு மொழி அறிஞர்கள் கவனம் செலுத்துகின்றனர். தமிழில் இத்தகையதொரு மின்னணுவியல் அகராதித் தொகுப்பில் பாரதியார் பல்கலைக்கழகத்தின் மொழியியல்துறை ஈடுபட்டுள்ளது. அண்ணாப் பல்கலைக் கழகத்தின் கணிப்பொறி மையத்திலும் கணிப்பொறி வழி அகராதித் தொகுப்பு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. மலேசியாப் பல்கலைக்கழகம் தமிழ்க் கலைச்சொல் பணியிலும், அகராதித் தொகுப்புப் பணியிலும் ஈடுபட்டிருப்பதை அறிகிறோம். இன்றையக் கால கட்டத்தில், அறிஞர்கள் ஆர்வம் காட்ட வேண்டிய ஒருசில துறைகள் வருமாறு:

1. அகராதித் தொகுப்பு மட்டுமன்றி, அறிவியல் எழுத்தாளர் களுக்கு உதவும் வகையில், தமிழிலே கலைச்சொல் தரவு மூலங்கள் (Data Base) ஒன்று அமைக்கப்பட வேண்டும். இம்முயற்சியில் பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழியல் துறை ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் கலைச்சொல் வங்கி ஒன்றினை ஏற்படுத்துவதிலும் இப்பல்கலைக்கழகம் ஆர்வம் காட்டுகிறது.

2. ஏற்கெனவே அறிமுகமான சொற்களுக்கு அகராதி உருவாக்கம் செய்வதுடன் கலைச்சொல்லாக்கப்பணி முடிவடைவதில்லை. கலைச்சொல்லுருவாக்கப் பணியிலும் வல்லுநர்கள் ஆர்வம் காட்ட வேண்டும். கணிப்பொறியைப் பயன்படுத்திச் சொல்லாக்கம் செய்யும் வழியமைப்பு ஆணைகளை (Programme) உருவாக்குவதில் வல்லுநர்கள் ஆர்வம் காட்ட வேண்டும்.

3. பொருண்மைப் பகுப்பிகள் (Semantic Parsers) சொல் பகுப்பிகள் (Morphemic Parsers) ஆகியவை உருவாக்கப் படவேண்டும்.

4. encarta போன்ற பல்லூடகத் தொகுப்புகள் (Multi Media packages) உருவாக்குவதில் ஆர்வம் செலுத்தப்பட வேண்டும்.

5. கருத்தடிப்படையில் சொற்களுக்கான கிளை வரைபடங்கள் உருவாக்கப்படவேண்டும்.

6. பல்வேறு தரவுத் தொகுதிகள் (corpora) கலைச் சொற்களின் கால வரிசைப்படி, துறை அடிப்படையில் உருவாக்கப்பட வேண்டும்.

கணிப்பொறி கலைச்சொல்லாக்கத்திற்கும் கலைச் சொல் வரைவிற்கும் பெரிதும் பயன்படும் ஒரு பொறியமைப்பு. கணிப்பொறி வல்லுநர்களும் மொழியறிஞர்களும், தமிழறிஞர்களும், துறை வல்லுநர்களும் ஒன்றாக இணைந்து செயலாற்றினால் கலைச்சொல் ஆய்வு சிறக்கும்.

தமிழ்ப் பாடநூலாக்கம்

முனைவர் த. பரசுராமன்

முன்னுரை

இந்தியா மற்றும் உலகில் பல நாடுகளில் தமிழர்கள் வாழ்கிறார்கள். அந்நாடுகள் பெரும்பாலானவற்றில் தமிழைக் குழந்தைகளுக்குக் கற்பிக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது. இவ்வாறு தமிழ் கற்பிக்கப்படும் நாடுகளில் தமிழர்களின் வாழ்வு நிலை ஒரே மாதிரி இல்லை. இதனால் தமிழ் கற்பித்தல் சூழலும் ஒரே மாதிரி இல்லை. சில நாடுகளில் பல நூற்றாண்டுகளுக்கு முன் குடியேறித் தமிழைப் பெரும்பான்மையானோர் இழந்துவிட்ட நிலையில் மீண்டும் உயிர்ப்பிக்கத் தமிழ் கற்பிக்கப்படுகிறது (மொரீசியஸ், ரீயூனியன்). சில நாடுகளில் வேலைக்காகச் சென்று, குடியமர்ந்தோர் குழந்தைகளுக்குத் தாய்மொழித் தொடர்பு விட்டுப்போகாமல் இருக்கத் தமிழ் கற்பிக்கப்படுகிறது (ஆஸ்திரேலியா, அமெரிக்கா). இலங்கைச் சிக்கலின் காரணமாகப் புலம் பெயர்ந்தோர் குழந்தைகளுக்குச் சில நாடுகளில் தமிழ் கற்பிக்கப்படுகிறது (கனடா, நார்வே). தவிர மலேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளில் அந் நாடுகளின் மொழிகளுள் ஒன்றாகத் தமிழ் கற்பிக்கப்படுகிறது. இங்கெல்லாம் அந்தந்த நாடுகளின் கல்வித் திட்டத்திற்கு உட்பட்டுப் பள்ளிகளில் அல்லது கல்வித் திட்டத்திற்குத்

தொடர்பற்ற நிலையில் தமிழ்ச் சங்கங்கள் மூலம் கற்பிக்கப் படுகிறது. இதேபோன்று தமிழ்ப் பாடநூல்களும் திட்டமிட்டு உருவாக்கப்படுவது ஒருபுறமும் கற்பிப்போர் தாங்களாகவே பாடங்களைத் தயாரித்துப் பயன்படுத்துவது மற்றொரு புறமும் நடக்கிறது.

இந்நிலையில் இந்த நாடுகள் எல்லாவற்றிலும் நடைபெறும் தமிழ்ப் பாடநூலாக்கத்தை இந்தியச் சூழலோடு ஒப்பிடுவது பொருத்தமாக அமையாது. ஆனால் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய தமிழர்கள் அதிகம் வாழ்கின்ற, தமிழ் மொழிக்குக் குறிப்பிடத்தக்க இடம் கொடுத்துள்ள நாடுகளில் நிகழும் தமிழ்ப்பாட நூலாக்கத்தை ஒப்பிடுவது பொருத்தமாக அமையும். இருப்பினும் இந்தக் கட்டுரைக்குத் தேவையான இலங்கைப் பாடநூல்கள் கிடைக்காமையால் சிங்கப்பூர் மலேசிய சூழ்நிலைகள் மட்டுமே கணக்கில் கொள்ளப்படுகின்றன. இந்தியாவில் தமிழ்நாடு, புதுவை, கேரளம், கர்நாடகம், ஆந்திரம், மற்றும் அந்தமானில் தமிழ் பள்ளி நிலையில் அதிக அளவில் தாய்மொழியாகக் கற்பிக்கப்படுகிறது. இவற்றில் புதுவையிலும் ஆந்திரத்திலும் தமிழ்நாட்டுப் பாடநூல்களே பயன்படுத்தப்படுகின்றன. அந்தமானில் சொந்தப் பாடநூல்கள் தமிழ்நாட்டுப் பாடநூல்கள் இரண்டும் பயன்படுத்தப்படுகின்றன. கர்நாடகத் திலும் கேரளத்திலும் அந்தந்த மாநிலத்திற்கென்றே தமிழ்ப் பாடநூல்கள் உருவாக்கப்படுகின்றன. இந்தச் சூழ்நிலையில் தமிழ்நாட்டுப் பாடநூல்களை முன்னிறுத்தித் தமிழ்ப் பாடநூலாக்கம் சிங்கப்பூர், மலேசியா நாடுகளின் தமிழ்ப் பாட நூலாக்கத்தோடு ஒப்பு நோக்கப்படுகிறது. தேவையான இடங்களில் கேரள, கர்நாடக, அந்தமான் பாடநூல்களும் எடுத்துக்காட்டப்படுகின்றன.

எழுத்து அறிமுகம்

எழுத்துகளைக் கற்பிக்கும்போது முன்பு முதலில் உயிர் எழுத்துகள் பிறகு மெய்யெழுத்துகள் அதன்பிறகு உயிர்மெய் எழுத்துகள் என மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு வந்தன. உயிர் எழுத்துகளில் தொடங்கும் சொற்களைச் சொல்லச் செய்வதும் உயிர் எழுத்துகளை மட்டும் சொல்லச் செய்வதும் என ஓரளவு ஒலிப்புப் பயிற்சியும், பார்த்து அடையாளம் காணும் பயிற்சியும் கொடுத்துவிட்டுப் பிறகு எழுத்துகள் வரிசையாக எழுதக் கற்பிக்கப்பட்டன. இதே

போன்று மெய்யெழுத்துகளும் கற்பிக்கப்பட்டன. அதன் பிறகு அகரமேறிய உயிர்மெய்கள், ஆகாரம் ஏறிய உயிர்மெய்கள் என வரிசையாகக் கற்பிக்கப்பட்டன. இப்போது இந்த நிலை மாறிவிட்டது. எளிமையிலிருந்து கடினத்திற்குச் செல்தல் கொள்கை காரணமாக வடிவ ஒற்றுமையின் அடிப்படையில் எழுத்துகள் கற்பிக்கப்படுகின்றன.

இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்பிக்கும்போது எழுத்துகளைக் கற்பித்து அவற்றைக் கொண்டு சொற்களைக் கற்பிக்கிறோம். எடுத்துக்காட்டாக டபம மற்றும் ட் ப் ம் கற்பித்துப் பின் இவற்றால் அமையும், படம், பட்டம், மடம், மட்டம் போன்ற சொற்களைக் கற்பிக்கலாம். அதாவது எழுத்திலிருந்து சொல், தொடர், வாக்கியம் என்ற முறை பயன்படுத்தப்படுகிறது. இம்முறையில் வரிவடிவ ஒற்றுமை யையும் எளிமையிலிருந்து கடினம் என்ற வரிசையையும் முழுமையாகக் கடைபிடிப்பதில் அதிகம் சிக்கல் ஏற்படாது. தாய்மொழியைப் பொறுத்தவரை கற்போருக்கு ஏற்கெனவே ஓரளவு தமிழ் தெரியும். எனவே தெரிந்ததிலிருந்து தெரியாத தற்குச், செல்தல் எனும் அடிப்படையில் மாணவர்களுக்குத் தெரிந்த சொற்களைப் பயன்படுத்தி எழுத்துகளைக் கற்பிக்கலாம். அறிந்தோ அறியாமலோ இம்முறையே நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பாடநூல்களில் பின்பற்றப் பட்டுள்ளன. இந்த முறையைப் பின்பற்றும்போது தக்க சொற்கள் கிடைக்காமல் போகலாம். அதனால் வரிவடிவ ஒற்றுமை - எளிமையிலிருந்து கடினம் முறையில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியதிருக்கும். இந்த மாற்றங்கள் எவ்வாறு செய்யப்பட்டிருக்கின்றன என்பதைப் பொறுத்தே முதல் வகுப்புப் பாடநூல் சிறப்பாக அமையும்.

தமிழ் எழுத்துகளின் அடிப்படை வடிவங்களை அவற்றின் வடிவ ஒற்றுமையின் அடிப்படையிலும் எளிமையிலிருந்து கடினம் என்ற வகையிலும் பின்வரும், பத்துக் குழுக்களாகப் பிரிக்கலாம்.

1	ட ப ய ம ழ
2	ஈ ர ச க த
3	ந ங
4	எ ஏ ஞ
5	ள ன ண
6	வ ல
7	அ ஆ இ
8	உ ஊ

9 ஒ ஓ ஔ
10 ற ஐ

எழுத்துகளை அறிமுகப்படுத்தும்போது மற்ற இந்திய மொழிகளுக்கு இல்லாதஒரு பிரச்சினை தமிழுக்கு ஏற்படும். தமிழில் கூட்டெழுத்து முறை இல்லாததால் மெய்யெழுத்து களையும் அறிமுகப்படுத்த வேண்டியிருக்கும். இதனால் தமிழில் பொதுவாக மெய்யெழுத்தையும் அதன் அகர உயிர் மெய்யெழுத்தையும் சேர்த்தே அறிமுகப்படுத்துவது வழக்கம். எடுத்துக்காட்டாகப் படம், பட்டம் என்ற சொற்களின் வழியாக ட ப ம, ட் ப் ம் ஆகியவற்றை அறிமுகப்படுத்து வார்கள். சிங்கப்பூர் பாடநூலில் இவ்வாறு செய்யாமல் தொடக்கத்தில் சொற்களில் வரும் எழுத்துகளை மட்டுமே அறிமுகப்படுத்துகிறார்கள். சிங்கப்பூர் சிறுவர் தமிழ் ஒன்றில் முதலில் படம், பட்டம் ஆகிய சொற்களைப் பயன்படுத்தி, ட, ட், ப, ம் ஆகிய எழுத்துகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. அடுத்த பாடத்தில் ப், ம ஆகியவை (ர, ர் - உடன்) அறிமுகப்படுத்தப்படுகின்றன. இது நல்லதுதான்; ஆனால் எல்லா எழுத்துகளும் அவ்வாறு அறிமுகம் செய்யப்படவில்லை. ய், ழ், வ் போன்றவை சொற்கள் இல்லாமல்தான்அவற்றின் அகர உயிர்மெய்களுடன் இணைத்து அறிமுகப்படுத்தப்படுகின்றன. இரண்டில் ஒரு முறையை முழுவதும் பின்பற்றியிருக்கலாம்.

இந்நூலில் ட ப ம-வுக்குப் பின் ர அறிமுகம் செய்யப் பட்டுத் தொடர்ந்து ச க த ந அறிமுகம் செய்யப்படுகின்றன. எளிமையிலிருந்து கடினம் எனில் ட ப ம-வுக்குப் பின் ய அல்லது ழ அறிமுகம் செய்யப்பட வேண்டும். ய-வை அறிமுகப் படுத்தப் படம் போட்டுக் காட்ட வாய்ப்பில்லாத பயம் என்ற சொல்தான் இருக்கிறது என்பதால் அதைப் பின்னுக்குக் கொண்டு போயிருக்கக் கூடும். ஆனால் பழம் என்ற சொல்லைப் பயன்படுத்தி ழ-வை அறிமுகம் செய்திருக்க முடியும். மேலும் ர ர் அறிமுகப்படுத்துவதை ஒட்டி ஆவின் மாற்று வடிவம் (ா) அறிமுகம் செய்யப்பட்டிருந்தால் பாய் வழியாக ய-வை முன்பே அறிமுகம் செய்திருக்க முடியும். மேலும் ங-வை ந-வுக்கு அருகிலேயே (மாங்காய் எனும் சொல்லைப் பயன்படுத்தி) கொண்டு வந்திருக்கவும் இயலும். இப்போது ங பதினைந்தாவதாக உள்ளது.

மலேசியத் தமிழ்ப் பாடநூலில் தமிழ் எழுத்துகள் சொற்களின் வழியாக அறிமுகப்படுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு தொகுதியிலும் ஐந்து பாடங்கள் என ஐந்து தொகுதிகளாக எழுத்துகள் கற்பிக்கப்படுகின்றன. முதல் பாடத்தில்

அம்மா	அப்பா	அணில்
ஆடு	ஆணி	படம்
பாடம்	பால்	மாடு

ஆகிய சொற்களின் வழியாக,

அ, ஆ, ப், பா, ம், மா, ட, டு, ப, ணி, ல் ஆகிய எழுத்துகள் அறிமுகம் ஆகின்றன. இந்த முறையில் எழுத்துகள் எளிமையிலிருந்து கடினம் என்றோ ஏதாவது ஒரு வரிசையிலோ அமையவில்லை. மேலும் எல்லா பாடங்களிலும் இடம் பெறும் எழுத்துகளையும் தொகுத்துப் பார்க்கும்போது பின்வரும் எழுத்துகள் அவற்றுள் இல்லை.

ணா - யீ லீ ழீ ளீ றீ - ஹு ழு னூ
யெ ரெ லெ றெ னெ - டே ழே
டொ ணொ வொ ழொ ளொ றொ னொ -
நோ வோ ழோ ளோ
டௌ ணௌ தௌ நௌ யௌ ரௌ லௌ
வௌ ழௌ றௌ னௌ

இவற்றில் சில இன்று பயன்பாட்டில் இல்லையென்றாலும் வேறு சிலவற்றைக் கற்பிக்காமல் ஒதுக்கிவிட முடியாது. எடுத்துக்காட்டாக ணா (அண்ணா) லீ (கல்லீரல்) ஹு (தாவூத்) ரெ (ஊரெல்லாம்) லெ (பல்லெல்லாம்) நோ (நோய்) போன்றவற்றைச் சொல்லலாம்.

தமிழ்நாட்டு முதல் வகுப்புப் பாடநூலில் முதலில் படம், மடம், பட்டம், மட்டம் ஆகிய சொற்களின் வழியாக ட் ட ப ம் ம ஆகியவை அறிமுகம் செய்யப்படுகின்றன. சிங்கப்பூரைப் போலவே இங்கும் ப-வுடன் ப் அறிமுகம் ஆகவில்லை, அடுத்த பாடத்தில்தான் அறிமுகம் செய்யப் படுகிறது. ஆனால் பிறகு இந்த முறை கைவிடப்பட்டுவிட்டது. ய, சா போன்றவை சொற்கள் இல்லாமலேயே அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இரண்டாவது பாடத்தில் ழ, ழ், ய், ப், ர், ர, பா, மா, யா ஆகிய எழுத்துகள் அறிமுகம் செய்யப் படுகின்றன. ஒரு பாடத்தில் இவ்வளவு எழுத்துகள் அதிகம். இதை இரண்டு மூன்று பாடங்களாகப் பிரித்திருக்கலாம்.

இதேபோல் மற்றொரு பாடத்தில் ல, ல், வ், வ, ஞ, ஞ், லா, வா, ஞா என அதிக எழுத்துகள் உள்ளன. உவையும் அதன் உயிர்மெய்களையும் ஒரே பாடத்தில் அறிமுகப்படுத்தி யுள்ளனர். இது மாணவர்களுக்கு மிகவும் கடினமாக இருக்கும். ஏனென்றால் உகர உயிர்மெய்களுள் மூன்று வகைகள் (கு, து, சு) உள்ளன. இதற்குப் பதிலாக வகைக்கு ஒன்றாய் மூன்று பாடங்களாக எளிமைப்படுத்தித் தந்திருக்கலாம். றவை அறிமுகப்படுத்த நாற்றம், கற்றார், மாற்றம் ஆகிய சொற்கள் உள்ளன. இவற்றைவிடக் குழந்தைகளுக்கு எளிய பற, மற போன்ற சொற்கள ஈப் பயன்படுத்தியிருக்கலாம். மேலும் பாடநூலில் ற அறிமுகப்படுத்தியபின் பல பாடங்கள் வரை (31ஆம் பக்கம் வரை) ற தனித்து வரும் சொல்லே இல்லை, ற்ற வரும் சொற்களே உள்ளன. றவின் தனியான ஒலிப்பிற்கும் ற்றலில் அதன் ஒலிப்பிற்கும் வேறுபாடு உண்டு. எனவே ற அறிமுகப்படுத்தும்போதே அதன் தனி ஒலிப்பையும் அறிமுகப்படுத்தவும் பற, மற போன்ற சொற்கள் உதவும். இகர உயிர்மெய்களை அறிமுகப்படுத்தும் பாடத்தில் பி, மி ஆகிய எழுத்துகளோ அவை இடம்பெறும் சொற்களோ இல்லை. இதேபோல் றூவும் அதற்குரிய பாடத்தில் இல்லை.

முதல் வகுப்பில் எழுத்துகள் கற்பிப்பதில் மலேசிய முறை சரியாக அமையவில்லை. வரிவடிவ அடிப்படையிலும் இல்லை. வழக்கமான வரிசை முறையிலும் இல்லை. அறிமுகப் படுத்தும் சொற்களை வைத்தும் ஒருவித ஒழுங்கைக் காண முடியவில்லை. சிங்கப்பூர் இந்தியப் பாடநூல்களில் எழுத்து அறிமுகத்தில் பெரிய வேறுபாடு இல்லை. இரண்டும் இன்றும் செம்மைப்படுத்த வாய்ப்பு உள்ளனவாகவே இருக்கின்றன. கர்நாடக முதல் வகுப்புத் தமிழ்ப்பாட நூலான தமிழ் பாரதி1 இங்குக் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று. இதில் மட்டுமே கற்பிக்க வேண்டிய எழுத்துகளுக்கு மட்டுமல்லாமல் அவற்றைக் கற்பிக்கும் முறைக்கும் முக்கியத்துவம் தரப் பட்டுள்ளது. மாணவர்கள் அறிந்த சொல்லைப் படத்துடன் தந்து அதன்மூலம் சொல்லையும் சொல்லைப் பிரித்து எழுத்துகளையும் கற்பித்துவிட்டுப் பிறகு கற்ற எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை வாசிக்கும் விதத்தில் பாடம் அமைக்கப்பட்டுள்ளது. மற்ற பாடநூல்களில் படங்கள் மாணவர்களைக் கவர்வதற்காக மட்டுமே பயன்படுத்தப் பட்டுள்ளது போல் இருக்கிறது.

முதல் வகுப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களைப் பொறுத்தவரை குழந்தைகளுக்குக் கடினமான சொற்கள் மூன்று நாட்டு நூல்களிலுமே உள்ளன. சிங்கப்பூரில் நகர மண்டபம், தூபக்கால், ராகம், தாளம், சாரணர் போன்ற சொற்களும் தமிழ்நாட்டுப் பாடநூலில் மேன்மை, அகவை, வந்தனர்போன்ற சொற்களும் மலேசிய நூலில் பீலி, யூகம் போன்ற சொற்களும் உள்ளன.

இரண்டாம் வகுப்பு

முதல் வகுப்பு நூலில் எழுத்துகள் அறிமுகமும் அவற்றைக் கொண்டு சொற்களும் சிறு தொடர்களும் கற்பிக்கப்பட்டன. இரண்டாம் வகுப்பு நூல் இதன் தொடர்ச்சியாக அமையவேண்டும். சிங்கப்பூர் சிறுவர் தமிழ் இரண்டில் எந்தப் பாடமும் பனிரெண்டு வாக்கியங்களுக்குக் கூடுதலாக அமையவில்லை. தொடக்கத்தில் இரண்டு மூன்று சொற்களைக் கொண்ட தொடர்களும் அடுத்து மூன்று நான்கு சொற்களைக் கொண்ட தொடர்களும் இடம்பெறுகின்றன. பிறகு நீண்ட வாக்கியங்கள் உள்ளன. ஆறு, ஏழு சொற்களுக்கு மேல் கொண்ட வாக்கியங்கள் பாடநூலில் மிகக் குறைவாகவே உள்ளன. ஆக இந்த நூல் முதல் வகுப்பு நூலின் தொடர்ச்சி யாக அதைவிடச் சற்று உயர்ந்த நிலையில் அமைந்திருக்கிறது. மலேசிய இரண்டாம் நூலில் முதல் பாடம் படங்களையும் சொற்களையும் கொண்டு அமைந்துள்ளது. ஆனால் இரண்டாம் பாடத்தில் முதல் வாக்கியமே ஏழு சொற்களைக் கொண்டதாக உள்ளது. மேலும், நூலில் உள்ள பல வாக்கியங்கள் எட்டு, ஒன்பது சொற்களைக் கொண்டதாக உள்ளன. இருப்பினும் இரண்டாம் பாடத்திற்குப் பிறகு உள்ள எல்லா பாடங்களும் நீண்ட வாக்கியங்கள் நிறைந்ததாக இல்லை. பெரும்பாலானவை படங்களைப் பயன்படுத்தியும் இல்லாமலும் நிரப்புதல், இணைத்தல், சிறிய வாக்கியம் உருவாக்குதல் எனப் பயிற்சிகளைக் கொண்ட, பாடங்களாக-வேயுள்ளன. நிறைய வாக்கியங்களைக் கொண்ட பத்திகளையெல்லாம் நூலின் பின்பகுதிக்குக் கொண்டுபோய் படிநிலை சரியாக அமையுமாறு செய்ய இயலும்.

இந்தியப் பாடநூல்களில் முதல் வகுப்பில் வாக்கியங்கள் கூடச் சரியாகக் கற்றுக்கொள்ளாத நிலையில் இரண்டாம் வகுப்பில் திடீரெனப் பெரிய பாடங்கள் வந்து விடுகின்றன. தமிழ்நாட்டுப் பாடநூலில் இருபத்தைந்து வாக்கியங்களும் கேரளப் பாடநூலில் பனிரெண்டு

வாக்கியங்களும் கர்நாடகப் பாடநூலில் பதினாறு வாக்கியங்களும் முதல் பாடத்தில் உள்ளன. இவற்றில் ஐந்தாறு சொற்கள் கொண்ட வாக்கியங்கள் பல உள்ளன. இதனால் முதல் வகுப்புக்கும் இரண்டாம் வகுப்புக்கும் இடையே இடைவெளி இருக்கிறது என்ற உணர்வு பாடநூல் குழுக்களுக்கு இல்லை என்று சொல்லிவிடவும் முடியாது. ஏனென்றால் தமிழ்நாட்டுப் பாடநூல் இரண்டில் முதல் பாடத்திற்கு முன்பு படித்துப் பழகுக எனும் தலைப்பில் பசு, சட்டை, வானொலிப் பெட்டி, இந்தியா பற்றி ஐந்தாறு வாக்கியங்கள் தனித்தனியாக உள்ளன. இவற்றையே தொடக்கப் பாடங்களாகக் கொண்டு தொடர்ந்து கொஞ்சம் கொஞ்சமாக வாக்கியங்களைக் கூட்டிப் பெரிய பாடங்களுக்கு வந்திருக்கலாம். தமிழ்நாட்டுப் பாடநூலில் முதல் பாடத்தில் இருபத்தைந்து வாக்கியங்கள் இருக்க இறுதிப் பாடத்தில் முப்பது வாக்கியங்கள் இருக்கின்றன. அளவு அடிப்படையில் இதில் பெரிய வேறுபாடு இல்லை. ஆனால் கேரள, கர்நாடகத் தமிழ்ப் பாடநூல்களில் வேறுபாடு காணமுடிகிறது. கேரளப் பாடநூலில் பனிரெண்டு வாக்கியங்களில் தொடங்கி நாற்பது வாக்கியங்களிலும் கர்நாடகத்தில் பதினாறு வாக்கியங்களில் தொடங்கி முப்பத்து மூன்று வாக்கியங்களிலும் முடிகிறது. கர்நாடகத்தில் எழுத்து அறிமுகப் பாடத்திலேயே சிறிய வாக்கியங்களும் பிறகு சிறிய உரைநடைப் பாடங்களும் முதல் வகுப்பு நூலில் உள்ளதால் படிநிலை சரியாகவே அமைந்துள்ளது. சுமை அதிகம் என்றாலும் திடீர் தாவல் இல்லை. தமிழ் நாட்டுப் பாடநூல்கள் சிங்கப்பூர் பாடநூலை ஒப்பிடும்போது இந்தக் கூற்றில் இன்னும் முன்னேற்றம் காண வேண்டியுள்ளது.

பயிற்சி

மொழிப்பாடம் திறன் பாடம். திறனை வளர்க்கப் பயிற்சி இன்றியமையாதது. மொழி வகுப்புகளில் எவ்வளவு பயிற்சி கொடுக்கிறோமோ அவ்வளவிற்கு மாணவர்களின் மொழித்திறன் வளரும். சிங்கப்பூரில் பயிற்சிகளுக்குக் கொடுத்துள்ள முதன்மை இடத்தை அங்கு உருவாக்கப் படுகின்ற கற்பித்தல் கருவிகளைக் கொண்டே அறிந்து கொள்ளலாம். பாடநூல், பயிற்சிநூல் தவிர அங்குப் படவில்லைகள், மின்னட்டைகள், பாடங்களுக்கு உரிய பட அட்டைகள், கட்டுரைகளுக்கு உரிய பட அட்டைகள், சுவர்ப்படங்கள், விளையாட்டுகள், பாடல் - கதை - செய்யுள்-

உரையாடல் - நாடகம், கேட்டல் கருத்தறிதல் ஆகியவற்றிற்கான ஒலி நாடாக்கள், ஒளி ஊடுருவித்தாள் (கட்டுரைக்கும் பாடங்களுக்கும் தனித்தனியே) ஆகியவை தயாரிக்கப் படுகின்றன. மேலும் பாடநூலில் கேள்விகள், கோடிட்ட இடங்கள், நடவடிக்கை போன்ற சில பயிற்சிகளும் உள்ளன.

மலேசியாவைப் பொறுத்தவரை சரியாகச் சொன்னால் நாம் பாடநூல் எனக் குறிப்பிடுபவை உண்மையில் பயிற்சி நூல்களே. அங்கு இவை தவிரத் தனியாகப் பாடநூல்கள் இல்லை. விரிவான பாடத்திட்டம் அதையொட்டிய ஆசிரியர் கையேடு, இவற்றை அடிப்படை-யாகக் கொண்ட பயிற்சி நூல்கள் ஆகியவையே பாடக் கருவிகள். இதை இந்த நூல்களின் ஆசிரியர் உரையில் உள்ள பின்வரும் வாக்கியங்களால் அறியலாம்.

“.. இத்தமிழ்ப் பயிற்சி நூல் கல்வி அமைச்சு பரிந்துரைத்துள்ள ஆசிரியர் கையேட்டை அணுக்கமாகப் பின்பற்றித் தயாரிக்கப்பட்டுள்ளது”.

“ஆசிரியர்கள் இப்பயிற்சி நூலைப் பாடத்திட்டம், ஆசிரியர் கையேடு ஆகியவற்றின் துணையுடன் பயன்படுத்த வேண்டுகிறோம்” இந்த நூல்களில் ஒவ்வொரு பாடத்திலும் பாடப்பகுதி போல் கதை, கட்டுரை, செய்யுள், உரையாடல், படம் என ஒன்று இருப்பினும் பயிற்சிகள் முழுக்க முழுக்க அவற்றைச் சார்ந்தே அமையவில்லை. பாடக் கருத்தைச் சோதிக்கும்படியான பயிற்சிகளும் குறைவு. அவையும் புரிதலை மையமாகக் கொண்டு உள்ளனவே தவிர பாடக்கருத்தைக் கற்பிக்க வேண்டும் எனும் நோக்கில் இல்லை. இந்தியாவிலும் பயிற்சிகளைப் பொறுத்தவரை முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த முன்னேற்றம் பிற மாநிலங்களை ஒப்பிடும்போது தமிழகத்தில் குறைவு. இதற்கு ஒரு காரணத்தைச் சுட்டிக் காட்ட இயலும். கேரள, கர்நாடக, அந்தமான் பகுதிகளுக்கான தமிழ்ப் பாட நூலாக்கத்தில் இந்திய மொழிகளின் பாடப் பொருளாக்கப் பிரிவு (Materials Production Unit) இயன்ற அளவு நுழைந்ததே காரணம். கேரளத்தில் பாடநூல் தவிர தொடக்கநிலை வகுப்புகளுக்குப் பயிற்சிநூல் தனியாக உள்ளது. முதல் வகுப்பிற்கு மூன்றாவதாக வாய் மொழி நூல் ஒன்றும் உள்ளது. கர்நாடகத்தில் பயிற்சிநூல் தனியாக இடம்பெறாத சூழ்நிலையில் பாடநூல், பயிற்சி நூல், ஆசிரியர் கையேடு மூன்றும் சேர்ந்ததாகப் (Three in one)

பாடநூல் அமைக்கப்பட்டுள்ளது. அந்தமானில் பயிற்சி நூல் பாடநூலுடன் இணைந்தும் தனியாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது. ஒரே நூலாக அமைந்தவை அதிகப் பக்கங்களுடன் தடித்த நூலாக அமைந்துள்ளன.

தமிழ்நாட்டில் முன்பு வினாக்கள், கோடிட்ட இடம், வாக்கியத்தில் அமை, பிரித்து எழுது, சேர்த்து எழுது ஆகியவையே பெரும்பாலும் இடம்பெற்றன. இப்போது அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தக்கவாறு மாற்றி நிரப்புதல், படிக்கும் பயிற்சி, சொல் உருவாக்குதல், சொல்லெழுத்துப் (Spelling) பயிற்சி, சொற்களைத் தக்கவாறு மாற்றுதல் போன்ற பயிற்சிகள் கூடியுள்ளன. இருப்பினும் பயிற்சிகளை மேலும் கூட்டுவதற்கும் மேம்படுத்துவதற்கும் நிறைய வாய்ப்புகள் உள்ளன. அயல் நாடுகளையும் அண்டை மாநிலங்களையும் ஒப்பிடும்போது பயிற்சி அளவில் குறைவாகவே உள்ளது.

எடுத்துக்காட்டு:

வகுப்பு 3

நாடு/மாநிலம்	பாடநூல்		பயிற்சிநூல்	பிற
	பாடம்	பக்கம்		
தமிழ்நாடு	28	97	x	x
கேரளம்	32	149	✓	x
கர்நாடகம்	30	137	x	x
அந்தமான்	24	186	x	x
சிங்கப்பூர்	30	61	✓	✓
மலேசியா	71	246	x	x

மேலும் பயிற்சி பற்றிய தெளிவான கருத்து, பாடநூல் குழுக்களுக்கு இல்லை எனத் தோன்றுகிறது. ஒவ்வொரு வகுப்புப் பாடநூலிலும் பயிற்சி எவ்வாறு உள்ளது எனத் தமிழ்ப் பாடநூல் ஆய்வுத் தொகுப்பில் (1991) பார்க்கும்போது இதை உணர முடிகிறது. எடுத்துக்காட்டாக ஐந்தாம் வகுப்புப் பாடநூலில் பயிற்சியின் நிலை வருமாறு:

“..ஐந்தாம் வகுப்புத் தமிழ்ப் பாடநூலைப் பொறுத்த வரை ஆசிரியர் குழு பயிற்சி பற்றி ஒரு தெளிவான எண்ணம் கொண்டிருக்கவில்லை எனத் தெரிகிறது. பாடப் பகுதி

முடிந்ததும் வாய்விட்டுப் படிக்க, அருஞ்சொற்பொருள், எதிர்ச்சொல், பிரித்து அறிக, விடை எழுதுக போன்றவை பொதுத் தலைப்பு ஏதுமின்றி இடம்பெற்றுள்ளன. அதன் பிறகு மொழிப்பயிற்சி என்ற தலைப்பில் சொற்றொடர் அமைத்து எழுதுக, வேறுபாடு அறிக, சேர்த்து எழுதுக, பொருத்துக போன்றவை இடம்பெற்றுள்ளன. ஆசிரியர் குழு முன் பகுதியைப் பயிற்சி என்று ஒத்துக்கொள்ளவில்லையா? அப்படியானால் இலக்கணத்தின் பின் பயிற்சி என்ற தலைப்பில் வினாக்கள் இடம்பெற்றமை ஏன்? அதே போன்ற வினாக்கள் இருக்கும் இந்தப் பகுதி பயிற்சியாகாதா? ஒருவேளை முன் பகுதியைப் பாடப்பொருள் பயிற்சியாக நினைக்கிறார்களா? அப்படியானால் ஒலிப்பதற்குக் கடினமான புதிய சொற்களை வாசித்தல் பாடப்பொருள் பயிற்சியா? சொற்பொருள் அறிவது பாடப்பொருள் பயிற்சியா? முன் பகுதியில் சொற்கள் பிரித்துக் காட்டப்பட்டுள்ளன. மொழிப் பயிற்சியில் மாணவர்கள் சொற்களைப் பிரிக்க வேண்டிய திருக்கிறது. இரண்டுமே பயிற்சிகள்தாம். மேலும் செய்யுள் பகுதியில் முன்பகுதி பயிற்சிகள் என்றும் பிறகு மொழிப்பயிற்சி என்றும் வருகின்றன. அங்கே பயிற்சிகள் என்ற தலைப்பில் சேர்த்து எழுதுகவும் வருகிறது, வினாக்களுக்கு விடை எழுதுகவும் வருகிறது. எப்படிப் பார்த்தாலும் பயிற்சியைப் பாகுபடுத்தியுள்ள முறைமையைப் புரிந்துகொள்ள முடியவில்லை. பாடப்பகுதி முடிந்ததும் எல்லா வகைப் பயிற்சிகளையும் பயிற்சி என்ற தலைப்பில் அமைத்திருக்கலாம். அவற்றை வாய்மொழிப் பயிற்சி, படித்தல் பயிற்சி, எழுதுதல் பயிற்சி என்றோ பாடப்பொருள் பயிற்சி, மொழிப்பயிற்சி என்றோ அமைத்திருக்கலாம்" (1991:45,46) .

முடிவுரை

எந்த ஒரு பாடநூலும் நூறு விழுக்காடு நிறைவுடையதாய் இருக்க இயலாது. அதாவது எந்தப் பாடநூலும் மேலும் மேம்படுத்த வாய்ப்பு இல்லாத நிலையில் அமையாது. ஆனால் நடைமுறையில் இருக்கும் பாடநூலை விடப் புதிதாக எழுதப்படுகின்ற பாட நூல் சிறிதளவாவது மேம்பாடு உடையதாக அமையவேண்டும். பல சமயங்களில் தமிழ்நாட்டுப் பாடநூல்களை அவ்வாறு சொல்ல இயல வில்லை. தவறான கருத்துகள் பாடநூலில் இடம்பெறுவது, மாணவர்களை மையமாகக் கொண்டு பாடக் கருத்துகளைத் தேர்வு செய்யாமை, மொழியைவிடப் பாடப்பொருளுக்கு

முதன்மையளிப்பது, ஆட்சியாளர் சார்பு, நேரடி இலக்கணத்தை மூன்றாம் வகுப்பிலேயே தொடங்குவது போன்றவற்றில் தமிழ்நாட்டுப் பாடநூலில் மாற்றம் தேவை. இந்தக் கூறுகளில் அயல்நாட்டுப் பாடநூல்களும் பிற இந்தியப் பாடநூல்களும் தமிழ்நாட்டுப் பாடநூல்களைவிட நன்றாக இருக்கின்றன. பொதுவாகப் பார்த்தால் சில குறைகளை இந்தியப் பாடநூல்களும் அயல்நாட்டுப் பாடநூல்களும் பகிர்ந்து கொள்கின்றன. சில குறைகள் இந்தியப் பாடநூல்களில் மட்டுமே காணப்படுகின்றன. மிக அரிதாகவே இந்தியப் பாட நூல்களில் இல்லாத குறைகள் அயல்நாட்டுப் பாடநூல்களில் உள்ளன. ஆயினும் பாடநூலுக்கான முன் ஆயத்தங்கள், பாடநூலை எழுதுதல், அதன் தகுதிப்பாட்டைச் சோதித்தல், சோதனையடிப்படையில் திருத்துதல் எனப் பாடநூலாக்கம் அயல்நாடுகளில் தொழில் முறையில் (Professional) நடைபெற இந்தியாவில் ஆறேழு வருடங்களுக்கு ஒருமுறை மட்டுமே கவனம் செலுத்தப்படும் வகையில் (amateur) உள்ளது. இந்த நிலை மாறவேண்டும். அப்போதுதான் தமிழ் மொழிக்குத் தாய்நாட்டில் சிறந்த பாடநூல்கள் உருவாக உறுதியேற்படும்.

பாட நூல்கள்

அந்தமான்

தீவுமலர் 1, அரசுக் கல்வி நிறுவனம், போர்ட் பிளேயர் 1985.
தீவுமலர் 2, அரசுக் கல்வி நிறுவனம், போர்ட் பிளேயர் 1987.
தீவுமலர் 3, அரசுக் கல்வி நிறுவனம், போர்ட் பிளேயர் 1989.
தீவுமலர் 4, அரசுக் கல்வி நிறுவனம், போர்ட் பிளேயர் 1989.
தீவுமலர் 5, அரசுக் கல்வி நிறுவனம், போர்ட் பிளேயர் 1990.

கர்நாடகம்

தமிழ் பாரதி 1, கர்நாடக அரசு, 1990.
தமிழ் பாரதி 2, கர்நாடக அரசு, 1991.
தமிழ் பாரதி 3, கர்நாடக அரசு, 1992.
தமிழ் பாரதி 4, கர்நாடக அரசு, 1993.

கேரளம்

கேரளப் பாடநூல் 1, கேரள அரசு, 1985.
கேரளப் பாடநூல் 2, கேரள அரசு, 1986.

கேரளப் பாடநூல் 3, கேரள அரசு, 1987.
கேரளப் பாடநூல் 4, கேரள அரசு, 1988.
வாய்மொழி அறிமுகம் வகுப்பு 1, கேரள அரசு, 1985.
எழுத்து அறிமுகம் வகுப்பு 1, கேரள அரசு, 1985.
மொழிப் பயிற்சி வகுப்பு 2, கேரள அரசு, 1986.
மொழிப் பயிற்சி வகுப்பு 3, கேரள அரசு, 1987.
மொழிப் பயிற்சி வகுப்பு 4, கேரள அரசு, 1988.

சிங்கப்பூர்

சிறுவர் தமிழ் 1, சிங்கப்பூர் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகம், 1991.
சிறுவர் தமிழ் 2, சிங்கப்பூர் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகம், 1991.
சிறுவர் தமிழ் 3, சிங்கப்பூர் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகம், 1992.
சிறுவர் தமிழ் 4, சிங்கப்பூர் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகம், 1992.

தமிழ்நாடு

தமிழ் 1, தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், 1995.
தமிழ் 2, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1989.
தமிழ் 3, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1988.
தமிழ் 4, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1989.
தமிழ் 5, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1990.

மலேசியா

ஆசிரியர் கையேடு முதலாம் ஆண்டு, கல்வி அமைச்சு, மலேசியா, 1983.
ஆசிரியர் கையேடு இரண்டாம் ஆண்டு, கல்வி அமைச்சு, மலேசியா, 1983.
ஆசிரியர் கையேடு மூன்றாம் ஆண்டு, கல்வி அமைச்சு, மலேசியா, 1984.
ஆசிரியர் கையேடு நான்காம் ஆண்டு, கல்வி அமைச்சு, மலேசியா, 1985.
ஆசிரியர் கையேடு ஐந்தாம் ஆண்டு, கல்வி அமைச்சு, மலேசியா, 1986.
போதனைக் களஞ்சியம் முதலாம் ஆண்டு, கல்வி அமைச்சு, மலேசியா, 1983.
தமிழ் மொழி, இரண்டாம் ஆண்டு, உமா பதிப்பகம், கோலாலம்பூர், 1991.

தமிழ் மொழி, மூன்றாம் ஆண்டு, உமா பதிப்பகம், கோலாலம்பூர், 1992.

தமிழ் மொழி, நான்காம் ஆண்டு, உமா பதிப்பகம், கோலாலம்பூர், 1990.

தமிழ் மொழி, ஐந்தாம் ஆண்டு, உமா பதிப்பகம், கோலாலம்பூர், 1986.

பயன்பட்ட நூல்கள்

1. தமிழ்ப் பாடநூல் ஆய்வு (தொகுப்பு), தமிழாசிரியர் கழகம், ஈரோடு, 1991.

2. திண்ணப்பன், சுப., 'சிங்கப்பூரில் தமிழ்ப் பாடநூல் உருவாக்கப் பள்ளி - சில இடர்ப்பாடுகள்', புலமை 14:1, 1988.

3. பரசுராமன், த., 'தமிழ்ப் பாடநூலில் உள்ள குறைபாடுகள் நீங்குமா', தினமலர் 3.12.87.

RESEARCH ON TAMIL DIALECTOLOGY

Dr. V. Gnanasundaram

PROLOGUE : The existing Tamil situation has an Informal or Spoken and a Formal or Literary Varieties. The Informal variety is a variety through which Tamils speak with each other in Informal contexts. The Formal variety is that variety which has been used as a vehicle for Literary writing, which is learned through Formal education and which has been used for most written purposes and Formal spoken purposes. This variety namely the Formal variety is not used by any section of the community for ordinary conversations. The language situation that has been described is named as Diglossia by Ferguson (1959) and Tamil thus is a Diglossic language.

Tamil Dialects form part of the realm of informal Tamil. Since Tamil is a Diglossic language, dialect variation in Tamil is generally contrasted with the formal or what is called as literary Tamil (also the same is called as H by Ferguson). In other words formal Tamil is used as a point of reference to compare and contrast the other varieties of Tamil.

DIALECT : An accepted definition of dialect by many of the Linguists is as follows. "A Dialect is any set of one or more varieties of a language which share atleast one feature (or combination of features) setting them apart from other varieties of the language and which may appropriately be treated as a unit on Linguistic or non Linguistic grounds" (Ferguson and Gumperz, 1960).

DIALECT REGIONS DURING TOLKAPPIAR PERIOD

The earliest reference available regarding Tamil dialects and dialect regions, is Tolkappiam (3rd B.C.), the first grammatical treatise of the Tamil Language. Tolkappiar the author of the Grammar book Tolkappiam (Reprint 1981) has noticed dialect variations in Tamil and mentioned the same by the term **ticai-c-col** (Dialect words). Twelve divisions i.e., dialect regions of Tamil country are mentioned. The dialect regions seem to have been identified on the basis of the dialect differences at the lexical level. The dialect forms to the respective regions were pointed out by the Commentator, side by side with literary forms. Deviations from the Standard literary form were characterised as Vulgar and were warned against. From this we understand a historical fact that in Tolkappiar's time Kerala was included in Tamilnadu as Malayalam had not yet diverged from Tamil and that the Literary Tamil was prescribed as the standard language of that period. In some instances a dialect form in one region happened to be the standard form for another region. Dialectology in the name of 'Dialect geography' or 'Word geography' was begun in Germany by Georg wenker in 1876 and later in 1902 in France, 1925 in Switzerland, 1936 in USA, and then in England and Scotland. The spread of dialect forms over a region known as 'Isoglosses' were mapped. These kind of researches due to the influence of Philology were conducted to find out the dialect regions with the help of individual lexical items or words. "A lexical study of Tamil dialects in Lower Perak by Rama Subbiah (1966) is the only survey available in print, so far conducted for Tamil. It is a survey of the Tamil dialect of the immigrants of Tamilnadu. Lower Perak in Malaya was chosen because of its heavy concentration of the Tamils, and the place is also more or less completely cut off from

urbanisation" (Shanmugam pillai, 1987). The criticism against some of the Dialect Survey works conducted on the basis of lexical items are,

(1) not related with any Linguistic theory,

(2) lexical items are taken in isolation, not treated them as part of a system and

(3) try to identify only the older forms of the language as traditional dialectology has a bias towards historical linguistics. For traditional Dialectologists dialect means historically older forms.

TAMIL DIALECTS AT PRESENT : Broadly speaking Tamil dialects are (a) Region based (b) Social group based and (c) Style based.

REGIONAL DIALECTS : The traditional Dialectologist's view, namely Bloomfieldian view of dialect was borrowed in the case of Tamil Dialectology too especially with regional variation. Rivers, mountains and political boundaries separate groups and promote the development of linguistic differences what are called as "regional differences". The traditional Dialectologists as mentioned earlier are interested chiefly in the study of geographically varying linguistic forms, predominantly in rural areas. Therefore to study the geographical differences generally Informants of nonmobile, older, rural males are selected.

DIALECT REGIONS OF TAMILNADU : Zvelebil (1964) and others divide the Tamil linguistic area of continental India and Srilanka into the following dialect regions and sub regions.

Region	Sub region	Centres of Prestige
Northern	a. North east	Madras City, Chengleput
	b. North west	Velur, Chittur, Krishnagiri
	c. South Arcot (partly?)	
Eastern	a. Kaviri Delta	Tiruchi, Tanjore, Karur (?)
	b. Pudukkottai	

Western	a. West north	Salem, Erode (Bangalore?)
	b. West south	Coimbatore, Dindugul
Southern	a. Madurai	Tirunelveli, Nagercoil,
	b. South west	Ramnad, Tuticorin
	c. South east	
Srilanka	a. North	
	b. Colombo(?)	
	c. North east	Trincomalee
	d. South east	Batticola

DIALECT REGIONS AND DIALECT FEATURES

NORTHERN DIALECT AREA : The Northern dialect area consists of Madras, Chingleput, North Arcot and part of South Arcot districts. This dialect area is named as dialect area by scholars like T.P. Meenakshisundaran etc. The presence of voiced plosive sounds as phonemes such as **/b,d,ḍ,j,g/** is one of the special features observed almost in most parts of this region (Gnanasundaram, 1973). The reason may be due to contact with other languages. Andhra Pradesh where Telugu is spoken as a majority language is contiguous on one side and Karnataka where Kannada is spoken as a majority language is contiguous on another side to this region.

EASTERN OR CENTRAL DIALECT AREA: Tiruchirappalli, Tanjavur and South Arcot form part of this area. Middle class educated speech of this area according to Zvelebil (1964) supplies a model for the Standard Spoken Tamil. This dialect has retained the prestigious /ḻ/ sound of Tamil and Sakthivel (1981) who has surveyed the Tamil Dialects on the lines of Zvelebil and on available informations calls this dialect as ḻ dialect.

WESTERN DIALECT : Western dialect area consists of Salem, Dharmapuri, Coimbatore and Nilgiris Districts. In many of the varieties of this dialect one may come across the merger of the three lateral phonemes / ḻ ḷ l / to one phoneme viz /ḷ/. A distinct intonation prevalent in this dialect is another special feature.

Coimbatore variety is characterised by the greater frequency of the auxiliary **pōṭu,** Example **cāpṭupōṭu** (in other dialects it is **capṭuviṭu** meaning 'eat' (definitive) and the honorific form with **uṅka**. Still another feature is **-nr-** used as the genitive case suffix. Example **enra pustakam** 'my book' whereas in other dialects it is en/ennōṭe pustakam 'my book'. In Coimbatore area Kannada, Malayalam and Telugu languages are spoken besides the majority language Tamil. In Nilgiris many of the Tribal languages such as Toda, Kota, Irula, Paniya, Kurumba, etc., are spoken by the Tribals. Malayalam and Kannada are spoken in Nilgiris also.

SOUTHERN DIALECT : Southern dialect area consists of Madurai, Ramnad, Tirunelveli and Kanyakumari districts. One striking feature of this area is the merger of **/l̲/** phoneme with **/ḷ/**. In other words there is no **/l̲/** phoneme in this dialect. The phoneme **/r̲/** seems to be prevalent only in the Southern - Kanyakumari dialect, whereas in other dialects **/r̲/** has merged with **/r/**. **kōḷāru** means confusion in most of the dialects whereas in this dialect it is order or arrangement. The word **ammā** for addressing generally woman is common in all regions except in this region. In this dialect especially in Tirunelveli and Ramnad areas it is used only to address the mother. **Ayyā** is a respectable term only in this dialect.

Kanyakumari speech is considered to be a sub dialect within the Southern dialect area. Kanyakumari is border to Kerala state where Malayalam is spoken as the majority language. The phoneme **/c/** in words like **/ūci/** 'needle', **/pacu/** 'cow' etc. corresponds with **/y/** in the Kanyakumari as in the words **/ūyi/** 'needle' and **/payuvu/** 'cow' is one of the special feature of this sub dialect.

The Tamil dialect regions have been thus distinguished on the basis of available linguistic features mostly phonological and lexical. But now due to the advent of studies on several Tamil varieties, morphological features also have been taken into account to identify 'dialects'.

DIALECTS OF THE GREATER TAMILNADU : Of the regional dialects outside India, the Srilanka dialect with the unrounded **U**; in

the initial syllable and with its initial accent (Suseendararaja, 1967; Thananjeyaraja Singam, 1962) is of a class in itself.

The Tigalu dialect of Bangalore that omits the initial **V** amongst Tamil cultivators called Tigalavar, the dialects of the Harijans of Bangalore and the Sanketi dialect in Mysore, the Secunderabad dialect of the Brahmins settled down in Andhra Pradesh who still use the word **peṇṭāṭṭi** in the old sense of wife as in the Tamil land can also be mentioned here.

SOCIAL DIALECTS : To study social dialects one may have to take into account the variables caste, education, age, sex, residence, etc. The earlier studies of Tamil Dialectology gave much attention to the caste variable and enumerated some of the caste dialects and not much attention was given to the other social variables as listed above.

Indian society is the segmentation of population into ethnically distinct endogomous groups or castes. Like geographical factors social factors too play a role in determining linguistic variation. In this direction some attempts have been made to study the differences in speech by corelating them with differences in social hierarchy. Bloch (1910) in his pioneering study of Tamil social dialects reports a distinction between Brahmin, non-brahmin and untouchable speech. Scholars like Bright (1960), Bean (1974), etc., supports this contention, but others like Zvelebil (1964), Thirumalai (1978) etc., oppose the above mentioned view and claim that the dialect differences are only between Brahmin and non-Brahmin speech. What has been claimed as the features found in untouchable or Harijan speech by Bloch are nothing but the features found in the 'koccai' form of Tamil speech and the koccai forms of Tamil are prevalent among the uneducated Tamil speakers, irrespective of caste.

Some (Andronov, 1962; Ramanujan, 1968) claim that Brahmin Dialects show greater uniformity than do non-brahmin dialects. In other words one may come across lot of similarities in Brahmins' speech though they may belong to different Tamil regions such as

Chennai, Coimbatore, etc. Andronov examined Brahmins speech from various regions with respect to pronouns. Usually pronouns display significant amount of variation among Tamil Dialects. Andronov found that among the Brahmin Varieties they do not vary whereas non-b ahmin castes exhibit greater variations in their speech.

Lower caste Tamil varieties such as Kanyakumari fisherman (Shanmugam Pillai, 1965, 1968), Harijan (Rangan, 1964; Srinivasa Varma and Ramaswamy, 1976) etc., have been studied by scholars. Similarly some studies are available on upper castes (Meenakshi, 1975; Ramanakumar, 1974; Sankaranarayanan, 1980 etc.) also. But no attempt has been made to establish caste isoglosses in Tamil Dialectology other than the attempt made by Shanmugam Pillai (1965). Many have identified the features of Brahmin dialect and it seems that one can easily identify them.

The studies which are interested in caste dialects in Tamil generally start from the Caste and they do not indentify a cluster of Linguistic variables with social groups and define a social group. Again they are nothing but descriptions of the speech of a Caste based on data collected from a representative member of that Caste or at the most a few members selected for their representativeness of the Caste. Many such linguistic descriptions of the dialects of Castes may then be compared and the distinguishing linguistic features of a Caste which are not shared by other Castes may be identified and Caste dialect may be defined in terms of their features. This is a static approach to the study of Language varieties and it ignores the dynamics of speech. Any variation found within a caste dialect either between members or in the same member in different situations is usually kept aside. And such variations are generally considered to be falling outside the norm because due to the influence of other dialects, education, economic status etc. This approach infact assumes the existence of homogeneous Caste dialects and proceed with their description with 'abstracted data'. Many questions have already been raised about this approach (Pattanayak (1975) and its commentators).

Between Caste and Sub Caste there is a large number of Castes in most linguistic communities. We cannot say that the Dialectologists who describe the 'Caste dialects' believe that there are as many Caste dialects as there are Castes. Many studies in Tamil speak of a trichotomous classification of variation into Brahmin Dialect, Non-Brahmin Dialect and Harijan Dialect (Bright, 1960; Srinivasa Varma, 1977). These names are not at all the names of castes. Some include dialects based on religious differences such as Muslim dialect, Christian dialect, etc., under Caste dialects. It is quite evident from the above that Linguists use the term Caste in Caste dialect rather loosely and not in any precisely defined manner. Secondly from this stand point, it appears that Caste dialects do not have a Linguistic basis but only a Social basis (Annamalai (in Press) and Thirumalai, 1983).

Dialect differences are expressions of social identity also. The present trend among Tamils especially educated ones, are to choose a neutral variety which is free from the marked (dialect) features of caste, religion or region, for conversation in the mixed group situations. Among the Brahmins, Ayyar is a follower of Saivite Sect and the Ayyanagar is a follower of the Vaishnavite sect. There are some marked differences between Ayyars and Ayyangar varieities at the lexical level. Ayyars by tradition know vedas which are written in Sanskrit and Ayyangars again by tradition are well versed in **nālāyira tivya prapantam**, written in Tamil. This ethnic difference is generally reflected in their speech of these two castes. Some illustrations are as follows,

Ayyar	Ayyangar	Meaning of the Lexical item
derisaṉam	**sērve**	'sight of deity'
pāyasam	**tirukkaṇṇamudu**	'a kind of pudding'
uṭsavam	**tirunā**	'festival'
abiṣēkam	**tirumañjaṉam**	'anoitment'
varaṉ	**māpḷe**	'bride-groom'

Like Brahmins use Sanskrit words in their speech, Muslims use Arabic, Persian and Urdu words, Christians English words and Naiks

and Reddis Telugu words in their speech. These words become the marked features through which their social or religious identity could be made easily.

DIALECT STUDIES IN THE UNIVERSITIES : Many of the Tamil varieties are analysed every year to fulfill the requirements for M.A. and Ph.D., degrees in the universities like Annamalai University, Madurai Kamaraj University, Madras University etc. Most of the works are descriptive studies of different Tamil varieties (Neethivaran, 1973).

It may be mentioned here that a pilot dialect survey has been conducted in the Tondaimandalam area of Tamil Nadu to study the regional differences of Tamil and the results of the same are in the form of a Ph.D. dissertation. (Gnanasundaram, 1973). In this survey the usual traditional dialectology methods were followed. The study has been made to bring out the regional variation and so the other variable namely caste (Padayatchi caste has been taken) has been made constant. Descriptive studies of ten padaiyatchi Tamil varieties in ten chosen Tamil regions (points) have been accounted in the following way. An abstract common system known as a common core (Hockett, 1958) has been deduced by comparing all the ten Tamil varieties and from this abstracted common system, the individual systems at the (a) phonological and (b) morphological levels have been derived. Lexical items are listed and the equivalent literary Tamil items are given for comparison. Distinct features at the phonological, morphological and lexical levels have been presented by means of isogloss maps. The draw back of this study is that it has not pointed out the number of dialects that could be accounted for this area on the basis of isoglosses. Had this been done this would have given some scope for discussion related to the existing methods in accounting 'dialects' (dialect regions). Two more works may be mentioned here. Some of the regional differences in Tamil Nadu have been enumerated on the basis of educated Tamil speakers speech (Rajaram, 1966). Similarly the Diploma in Linguistics students, Madurai University have done a sample survey to study the regional variation. Distributional maps have been

prepared for hundred and two items or so. In this study also the informants are urban literates. On the basis of available isoglosses: phonological, morphological and lexical, some attempts have been made to distinguish the Tamil dialect areas (Karunakaran, Sakthivel 1981). But a full fledged dialect survey work is yet to be done for Tamilnadu.

Dialect survey work is conducted generally using elaborate questionnaires which covers a range of phonological, morphological and Lexical differences. Points are chosen enormously for the survey work. Isoglosses are prepared and bundles of isoglosses that are mapped, decide the dialects or dialect zones. This is one method.

Morrish Swadesh's '100 word list', which was originally designed to study the distance between languages in terms of time depth of their historical separation may be utilised to study the distance between dialects synchronically. In Central Institute of India languages, Mysore, Morrish Swadesh's 100 word basic vocabulary list is taken as a base for questionnaire and dialect differences are accounted on the basis of the changes that take place in dialects with respect to the 100 word list. Besides, Morrish Swadesh's vocabulary list, variables at the phonological and grammatical levels are also utilised. As an experiment, Gondi, Santali and Kurukh dialects are getting identified in this way. The merit of this approach is one need not have to prepare isoglosses and then decide the dialects or dialect areas. Rather, on the basis of the shared forms by points, dialect zones are decided.

In general Tamil dialects at present are being decided on the basis of (a) phonological (phonetic and phonemic) (b) morphological and (c) lexical isoglosses. Rarely Semantic isoglosses are being used. The Tamil word **pantal** means 'thatched shed' in many areas of Tamilnadu. But in Chettiyar dialect the word pantal means 'funeral shed'. Such differences in meaning, namely Semantic isoglosses are not in very much use in determining 'dialects'.

No theoretical discussion, related to which level or levels plays or play a crucial role in determining 'dialects' has begun in

Tamil dialectology field. To this extent Tamil dialectology is still in its infant's stage. The case may be perhaps true with other languages also (Chambers and Trudgill, 1980).

RECENT STUDIES ON SOCIAL AND URBAN TAMIL DIALECTS

Dialectology (in general) as it has been influenced by Linguistics, has been influenced indirectly by the social sciences. Some Dialectologists felt that ' social variation' is as common as 'regional variation'. So works on social dialects began to appear in the Tamil scene also, as elsewhere. It also gradually came to be realised that the focussing of traditional Dialectology on rural dialects had led to an almost total neglect of the speech forms used by sizable population who lived in towns. Hence a new sub branch of Dialectology Viz., Urban Dialectology has come into existence.

Most of the Social dialect studies in 'Traditional Dialectology' concentrate the speech behaviour with the existing caste system and named each speech variety thus studied as 'Caste dialect' or 'Social dialect'. Pattanayak's (1975: 102) criticism regarding the failure of scholars to look beyond caste in the determination of social dialects of Tamil and other Dravidian languages is worth mentioning here. Pattanayak catalogues the linguistic features which had been previously cited as differentiating among caste dialects and demonstrates that many of these are not categorically used by members of the castes with whom they are supposed to be associated. He notes that from linguistic point of view it is more important to study linguistic variation in different social contexts rather than making static categorical statements about linguistic differences, as numerous social variables exert varying influences on the utilization of various alternatives of linguistic variables.

Labov's (1969) revolutionary work namely the 'Social stratification of English in New York City' resulted in the evolution of techniques and methodology for the study of linguistic variation and its correlation with the social parameters of social group caste (in Tamilnadu), age, education, sex, etc., in a complex heterogeneous urban society. The impact of this as well as several

other related studies paved way for the Tamil Dialectologists to undertake similar studies in the urban situation of Tamilnadu. Karunakaran (1978), Karunakaran and Sivashanmugam (1981) etc., have worked in the area of urban dialectology related to Tamil sociolinguistics. In their studies some of the distinct social variables like caste, educational status, age, economic status and social contexts are taken into account. Groups are socially stratified into castes (such as Brahmin, Pillai, Nadar, Chettiar, etc.), economic groups (such as higher income group, middle income group, low income group), literacy level (such as primary, middle, higher) and age group (such as 25-40, 41-55, 56 and above). Social contexts are identified as careful style, casual style, informal style and formal style contexts. Linguistic variables are identified for instance as past tense suffix etc. and past tense suffix will have its variant realisations, for example **-c-**, **-t-**, etc.

In their studies, it is generally pointed out that which social group or groups uses or use a particular linguistic variant and in which social context or contexts?

Shivashanmugam's thesis on "Social stratification of Tamil in Coimbatore" (1982) is perhaps the first full scale attempt to analyse the speech behaviour of an urban society consisting of different socially stratified groups as mentioned above. This study attempts to provide sociolinguistic variation of different social groups and makes an evaluation of such linguistic differences in the light of the social hierarchical system as prevailing in Tamil Nadu.

STUDY OF STYLE DIFFERENCES: Tamil being a "diglossic language" has two styles namely literary or formal and colloquial or informal (Sometimes it is mentioned as spoken). Literary Tamil is not based on any current spoken form of the language but rather appears to be derived from that variety of 13th century Tamil described in the grammar Nannul.

Linguistically the informal and formal varieties differ from one another at the (a) phonological (b) morphological (c) morphophonemic (d) syntactic and (e) lexical levels.

Again within the norm called literary there are different styles such as 'rhetorical' (Pandit Tamil), Modern standard written Tamil etc. In spoken Tamil (or colloquial or informal or L variety) as we have seen there are regional and social varieties that would be used on informal contexts. Thus there is a polarity between two kinds of Tamil defined. That is there are varieties which are used only 'informally' and there are varieties which are used only 'formally'. Some of the formal varieties might never been used by certain speakers and they may not even understand some of them especially 'Pandit Style'. Similarly the informal varieties would not use most of the 'regional' and 'social' dialects that exist. But for all speakers of Tamil this polarity exists.

Tamil diglossia seems to have been existing for a longer period. Evidences for the existence of diglossia in earlier times could be found in ancient grammatical works, literatures, Inscriptions and folk literature.

Many scholars (Sethupillai, 1939; Shanmugam Pillai, 1960, 1972; Zvelebil, 1964; De Silva, 1976; Andronov, 1962; Shiffman, 1978; Ramanujam, 1968; Annamalai, Shanmugampillai, 1960; Thirumalai, 1978; Shiffman & Arokkianathan, Deivasundaram, 1981; Gnanasundaram, 1980; Ramaswami, 1979) have studied one or the other aspects of Tamil Diglossia in their studies. Mention may be made about the work of Ramaswami, (1979, 1986) where the formal and informal Tamil are compared in the generative Phonology model. It may be mentioned that Structural dialectology (Weinreich 1954) and Generative dialectology models are used by few scholars to explain Tamil dialects. Srinivasa Varma's 'Comparative dialectology', A study of Tamil dialects (1971) based on Weinrich's 'Dia system' is a good example.

A speaker cannot be identified as to caste or region by the variety of literary Tamil he uses. But the same is not true regarding his informal dialect. In modern times, in more number of contexts colloquial Tamil (Informal Tamil) is being used. In other words the number of contexts where literary Tamil (formal Tamil) was previously used, is now diminished.

Zvelebil's (1964) discussion of diglossia focuses on the common colloquial or what is called as the standard spoken Tamil, differing from 'regional' and 'social dialects'. As it stands today, the notion of standard spoken Tamil as expressed by Zvelebil seems to have gained some currency. Zvelebil (1969) claims that the standard spoken Tamil i.e. the informal standard is based on the common informal speech of (i) the educated Middle Class non-Brahmins who reside in the central part of Tamil Nadu comprising the areas of Thanjavur, Tiruchirappalli and some parts of South Arcot as well as (ii) the educated Middle Class residents of Madras. His further claim is that the differences between the informal Tamil used in the above variety and standard spoken Tamil are less than the differences between any other Tamil regional dialect and the Standard spoken. In other words by implication, a region based middle class educated non-brahmins speech is a model for the standard spoken Tamil. Kamil Zvelebil seems to have drawn inspiration from several other linguistic situations, such as English, French, Marathi, Telugu and Kannada. In all these language situations one can find in common, there is something like an educated urban middle class (and/or upper class) speech of a particular region (or regions). In other words in all the language situations, the model for standardisation seems to be one of the regional varieties (marked with education) of the respective languages.

There is also another school of thought in the area of Tamil Dialectology which questions the validity of Zvelebil's proposition with respect to standard spoken Tamil. According to this school of thought (Annamalai, 1976, Shanmugam pillai, 1968; Vasanthakumari, 1976; Gnanasundaram, 1980) standard spoken Tamil is not a representative speech of a region, caste or religion but it is a speech obtained by eliminating the stigmatized, stereo typed or marked features of the home dialect. This gives a set of neutral items in Standard spoken Tamil which are claimed to be nearer to formal Tamil. Standard spoken Tamil is not the speech of a privileged class. But irrespective of Caste, religion and region a person may acquire the standard spoken Tamil features provided

he or she gives up the marked features of his region, caste etc. Acquiring the standard spoken Tamil features may lead to social classes as follows: A set of Brahmins, Harijans, Pillais, Muslims, Christians, etc. who completely acquire the standard spoken Tamil features will form themselves into a class and those Brahmins, Harijans, Pillais, Muslims, Christians, etc. who do not acquire or still in the process of acquiring the standard spoken Tamil features will form into another class.

The existence of standard spoken Tamil and the process involved in acquiring the standard spoken Tamil as discussed have been demonstrated in a small way with limitations (Gnanasundaram, 1980); How the speakers in mixed group situations shift their style of speech to neutral variety (which is the basis for standardisation) by dropping their home dialect marked features (marked for region and/or Caste) are discussed. Besides demonstrating the existence of standard spoken Tamil, he further claims as how the gravitational pull of the literary or formal variety of the diglossic Tamil is responsible in evolving the Standard Spoken Tamil variety which is according to him is an approximation of the 'literary Tamil'. Perhaps a detailed study is required to study the standard spoken Tamil (which is in the process of evolving) and its features.

Zvelebil further optimistically claims that this standard Spoken Tamil (colloquial Common Tamil) which is evolving, will replace literary Tamil. Schiffman (1973) opposes this view. He asserts that Tamil Diglossia is rooted in a kind of 'purism' which is related to the strength of the purity pollution complex in South India. He points out that in Tamil there seems to be built in resistance to borrowing from outside the language. This coupled with the positive attitude of Tamils towards the literary variety, perhaps is the reason he asserts for maintaining the dichotomy.

CONVERGENCE STUDIES : Comparison of the informal and formal Tamil also led to what is known as convergence studies. How the formal variety influences the informal and vice verse at various levels have been studied (Shanmugampillai, 1965; Annamalai).

How negation in Mysore Tamil varies with the Tamilnadu Tamil because of the convergence of the former towards the Kannada language of Mysore city has been studied (Rangan and Gnanasundaram, 1977) using the Labovian sociolinguistic technique. Though both the Mysore Tamil form and the Tamilnadu Tamil form with respect to negation (Mysore Tamil: Verbal participle + Negative Suffix, e.g. **pōyille** 'does not / did not go'. Tamilnadu Tamil 'Infinitive + Negative Suffix, e.g., **pōkale** 'does not /did not go') are used both by the elder generation and younger generation irrespective of caste but the younger generation, seem to be more towards the Mysore Tamil form which is due to its convergence towards Kannada. Karunakaran (1980) has studied the convergence phenomena at various levels taking into account some of the Dravidian languages like Telugu, Kurba etc. in the contact Tamil language situation.

INSCRIPTIONAL DIALECTS : The existence of Inscriptions in Tamil according to Shanmugampillai (1987) "is perhaps as old as the available Tamil Literary texts". A study of the language of Tamil Inscriptions has gained momentum during sixties under the guidance of Meenakshisundaran (1965) though it starts as early as 1935 with Kanapathipillai's thesis. Shanmugam (1971) in his paper 'Dialects of Inscriptional Tamil' discusses geographical, social and stylistic differences at phonological and lexical levels in Inscriptional dialects and also the movements of Linguistic forms between regions. The form **tuṇṇu** for **tin̲n̲u** 'eat' was noticed in the northern dialects for the first time in the 17th century. The **n̲r̲ > ṇṇ** in forms like **on̲r̲u > oṇṇu** started in 1527 A.D. in Pudukkottai, Madurai and Tirunelveli areas and moved to the north. Velupillai's "study of the dialects in Inscriptions Tamil" (1976) is another work in this area. The dialect features available in Inscriptions help to account the phenomenon namely 'Language change' in Historical Linguistics sense.

DIALECT USED IN LITERATURE, MODERN TAMIL FICTIONS

A field of research in Synchronic dialectology of what Gleason calls 'eye dialects' i.e. reflection of local dialects in modern literature

and in contemporary 'belle letres' is very scantily attended by scholars in the Tamil Dialectology field. Some studies of a preliminary nature (Gnanasundaram, 1971; Gnanasundaram, and Perialwar; 1980; Natarasapillai and Vimala, 1984; Deivasundaram, 1985) are available. Tamil writers when they chose to write the conversational parts of their work, face problems due to the Tamil writing system. The writing system hither too has been used mainly for writing discourse in written or formal Tamil. In other words the present Tamil writing system is not fully equipped to handle this new situation. How various authors are left to their own devices to overcome the difficulty of representing the spoken forms in their texts are demonstrated. The various devices adopted by various authors in general are discussed.

PROFESSIONAL TERMS AND REGISTER : Professional terms related to 'Fishing operations' etc. in Tamil are available through the various dialect studies on Fisherman speech. Srinivasavarma (1992) has listed many terms related to this profession. Similar studies if undertaken definitely will help in enriching Tamil Lexicon. Scholars have started concentrating on Register studies, Register has been compared with the notion of dialect and the relationship between specialised vocabulary items (Register), style and language have been discussed in some of the studies (Thirumalai, 1976 etc.).

References

1. Andronov, M.S., Razgovornys, **Tamil's'kij Jazyk i Igo Dialekty (Colloquial Tamil and its dialects)** Izdatel'stvo vostocnoj Literatury, Moscow, 1962.

2. Annamalai, E., "Standard spoken Tamil : Some observations" in **Studies in Dialectology** Vol.1 No. 2 (ed.) R.V.K. Thampuran, (mimeo), Linguistics Department, Kariavattom, Trivandrum, 1976.

3. ----------------, "Convergence of Literary and Colloquial Tamil" **Pakha Sanjam,** University of Punjab.

4. ----------------, **Caste and variation in Language form and Language use** (in press).

5. Bean, Susan, S., "Linguistic Variation and the Caste System in South Asia" **IL** 35:4, 277-93, 1974.

6. Block, Jules, "Castes et dialectes en Tamoul", **Memoires de la societe de Linguistique de Paris,** 1910.

7. Bright, William, "Social dialect and Language history", **Current Anthropology** 1:5/6. 424-5, 1960.

8. Chambers, J.K and Peter Trudgill, **Dialectology** (Cambridge Textbooks in Linguistics), Cambridge University Press, Cambridge, 1980.

9. Deivasundaram, N., **Tamil Diglossia,** Nainar Pathippagam, Tirunelveli, 1981.

10. ------------------, "Tamilcciru Kataikalil irattai valakku" **Inraiya Tamil** (Ilakkiya Moliyiyal Ayvukal) Nayinar Patippakam, Tirunelveli, 1985.

11. De Silva, Sugathapala M.V., **Diglossia and Literacy,** CIIL Adult Literary series, Central Institute of Indian languages, Mysore, 1976.

12. Ferguson, Charles A., "Diglossia" Word 15:2. 325-40, 1959. Reprinted in Language in culture and society, pp.429-37 Dell Hymes (ed.) NewYork : Harker and Row, 1964, Also in Language structure and Language use : Essays by Charles A. Ferguson pp. 1-26. Selected and introduced by Anwar S.Dll, Standford University Press, Standford, 1971.

13. Ferguson, Charles A. and Gumperz, John J. (eds.) **Linguistic diversity in South Asia : Studies in Regional, Social and Functional variation,** IJAI 26:3, 1960.

14. Gnanasundaram, V., "A study of eye dialect in tamil", **Ayvukkovai,** Trivandrum, 1971.

15. ------------------, A Pilot dialect survey of Tondaimandalam, Ph.D. thesis, Annamalai University, Annamalainagar, 1973.

16. ------------------, "Standard spoken Tamil: What and how?" in **sociolinguistics and dialectology,** S. Agesthialingam and K. Karunakaran (eds.) Annamalai university, Annamalainagar, 1980.

17. ------------------, "The role of Diglossia in the emergence of Standard spoken Tamil". Paper presented at the **Second International Conference on South Asian Languages and Linguistics** held in the Departments of Linguistics, Osmania University, Hyderabad, January, 1980.

18. Gnanasundaram, V., "Pāratiyār urainaṭaiyil irunilai", **pārati āyvu (āyvukkaṭṭuraikaḷ) tokuppu.** (eds.) Dr. Ki. Karunakaran and Dr. Ira. Cantirasekaran, Paratiyar palkalaikkalakam, Coimputtur, 1986.

19. Gnanasundaram, V. & Perialwar, "Spoken Tamil in Contemporary fiction" (paper presented in the seminar on Language and Literature at CIIL, Mysore in 1975) **Pakha Sanjam**, Patiala, 1980.

20. Hockett, C.F., "Common core and overall pattern", **A course in Modern Linguistics,** Macmillan company, New York, 1958.

21. Karunakaran, K., "A study of social dialects in Tamil : Methods and practices" **Studies in Tamil sociolinguistics,** Malar pattippu, Annamalainagar, 1978.

22. ----------------, **Linguistic convergence,** All India Tamil Linguistics Association, Annamalainagar, 1980.

23. Karunakaran and Sivashanmugam, **Study of social dialects in Tamil,** All India Tamil linguistics Association, Annamalai nagar, 1981.

24. Labov, William, **The social stratification of English in New York city,** Centre for applied Linguistics, Washington, 1969.

25. Meenakshisundaran, T.P., **A History of the Tamil language,** Linguistic Society of India, Deccan College, Special Publications No.2, Poona, 1965.

26. Natarasapillai and Vimala, "Vaḻakku vērupāṭukaḷ - vaḻakku Ilakkiyaṅkal - vaḻakkilakkiya eḻuttukkuṭṭalkal", **Moziyiyal** 8:1 and 2, 1984.

27. Neethivanan, J., "A Survey of dialect works done in India", in **Seminar on dialectology** (ed.) V.I. Subramoniam, University of Kerala, Trivandrum, 1973.

28. Pattanayak, D.P., "Caste and Language" **IJDL** Vol. IV No. 3 and Vol. II. No. 1, 1975.

29. Ramanujam, A.K., "The structure of Variation : A study in caste dialects" in **SCIS**, pp. 461-74, 1968.

30. Ramasubbiah, **A Lexical study of the Tamil dialects in Lower Perak,** Department of Indian studies, University of Malaya, Kualalumpur, 1966.

31. Ramaswami, N., Formal and Informal Tamil. Ph.D. dissertation, Linguistics department, Kerala University, Trivandrum, 1979.

32. Rangan K., A Comparative study of educated and uneducated Harijans in South Arcot district, M.A. dissertation, Annamalai University, Annamalainagar, 1964.

33. Rangan and Gnanasundaram, "Negation in Mysore Tamil - A sociolinguistic study" , **IJDL** Vol.1. No.1, 1977.

34. Sakthivel, S., "A survey of Tamil dialects" in **Papers in Linguistics** : Dr. R.C. Hiremath Felicitation Volume. M.S. Sunkapur and J.S. Kulli (eds.), Sharat Prakashna, Mysore, 1981.

35. Sankaranarayanan, G., "Sociolinguistic Exploration in Brahmin Tamil" in **Sociolinguistics and Dialectology** (Eds.) S. Agesthialingam and K. Karunakaran, Annamalai University, Annamalai nagar, 1980.

36. Sethupillai, "Tamil Literary and Colloquial", **Annals of Oriental Research** of University of Madras, Vol.3 No.2, Madras, 1939.

37. Shanmugam, "Dialects in Inscriptional Tamil", **ORBIS**, XX:1, 1971.

38. Shanmugam Pillai, "Tamil-Literary and Colloquial", **LDSA,** pp.27-42 1972. I.L. 81, 1960.

39. Shanmugam Pillai, Discussion Panel (B) on "Languages stability and on the formal Vs. Informal dialects in Tamil", in the **Proceedings of the second International conference seminar of Tamil Studies**, Madras.

40. Shanmugam Pillai, "Tamil dialectology- A survey" in **Seminar papers on Dialectology**, pp.3-64, Dr. S. Arokkianathan (ed), Tamil University, Thanjavur, 1987.

41. Shiffman, Herald, "Diglossia and Purity, Pollution in Tamil", **Contribution to Asian Studies,** Vol.XI, 1978.

42. Shiffman and Arokkianathan, "Diglossic Variations in Tamil Film and Fiction", in **South Asian Languages,** (ed.) Bh. Krishnamurthy.

43. Siva Shanmugam, Social Stratification of Tamil in Coimbatore, Ph.D. Dissertation, Annamalai University, Annamalai Nagar, 1982.

44. Srinivasa Varma, G., "Comparative dialectology : A study of two Tamil dialects" in **Seminar on Dravidian Linguistics,** Annamalai University, Annamalai Nagar, 1971.

45. --------------------, "To̱ḻilpēccu Vaḻakkukaḷ" (Chapter 14) in **Kiḷai Moḻiyiyal** (Dialectology in Tamil), Anaittintiyat tamiḻ moḻiyiyal kaḻakam, Annamalai Nagar, 1992.

46. Srinivasa Varma and Ramaswamy, Harijan dialect of Chidambaram, Annamalai University, Annamalai Nagar, 1967.

47. Suseendiraraja, S., A descriptive study of Ceylon Tamil, Ph.D., thesis, Annamalai University, Annamalai Nagar, 1967.

48. Thananjayaraja Singam, S., Some Phonological features of the Jaffna dialect of Tamil in **UCB,** Vol.20:2, 1962.

49. Thirumalai, **Stylistics: A Linguistic approach** (Dr.R.P. SethuPillai Silver Jubilee Commemoration Lectures) University of Madras, Madras, 1978.

50. Thirumalai, M.S., **Aspects of Languages use,** All India Tamil Linguistics Association, Annamalai Nagar, 1983.

51. **Tolkappiam**, New Century Book House, Madras, Reprint 1981.

52. Vasantha Kumari, T., "The standard spoken Tamil" in **Studies in Dialectology** Vol.1 No.1 (ed) B. Gopinathan, Linguistics Department, Kariavattom (Mimeographed), Trivandrum, 1976.

53. Weinreich, Uriel, "Is structural dialectology Possible", in **Readings in American Dialectology** (ed) Harold B. Allen and Gary N. Underwood, Meridith Corporation, New York, 1971.

54. Zvelebil, Kamil, "Spoken Language of Tamilnad", **Archiev Orientalni** 32, 1964.

முதல் பேச்சுத் தமிழ் இலக்கணம்

அருள்திரு. அமுதன் அடிகள்

முன்னுரை

இந்திய மொழிகளுள் முதன் முதல் அச்சேறியவை தமிழ் நூல்களே என்பதை அறிஞர் த்னிநாயகம் அடிகளார் (1954, பக்.288-308) நிறுவிக் காட்டியுள்ளார். கார்த்தில்யா என்னும் பெயரால் சுட்டப்பெறும் சிற்றேடு முதல்முதலாக (1554) ஐரோப்பாவில் உரோமானிய எழுத்தில் அச்சேறியது உண்மையே எனினும் அண்டிறீக்கிப் பாதிரியார் தமிழில் இயற்றிய தம்பிரான் வணக்கம் (1578), கிரீசித்தியானி வணக்கம் (1579), அடியார் வரலாறு (1586) ஆகிய நூல்களே முதல்முதலாகத் தமிழ் எழுத்தில் அச்சேறிய தமிழ் நூல்கள். இவற்றில் முதல் நூல் கேரள நாட்டுக் கொல்லத்திலும், இரண்டாம் நூல் கேரள நாட்டுக் கொச்சியிலும், மூன்றாம் நூல் தென்பாண்டி நாட்டுப் புன்னைக்காயலிலும் அச்சிடப்பெற்றவை. 1577ஆம் ஆண்டில் கோவாவில் வார்க்கப்பெற்ற தமிழ் எழுத்துக்களைக் கொண்டு அச்சிடப்பெற்ற தமிழ் நூல்கள் எதுவும் நமக்குக் கிடைக்க வில்லை. மேற்குறித்த மூன்று நூல்களும் 1578ஆம் ஆண்டு

கொல்லத்தில் வார்க்கப்பெற்ற எழுத்துக்களைக் கொண்டு அச்சிடப்பெற்றவை.

இந்நூல்களை இயற்றிய அண்டிறீக்கிப் பாதிரியார் 'அச்சுத் தமிழின் தந்தை' என போற்றப்பெறுதல் முறையே. இவர் 1546ஆம் ஆண்டு முதல் 1600ஆம் ஆண்டு வரை தமிழகத்திலும் இலங்கையிலும் சமயப் பணியாற்றியவர். தாமே அரிதின் முயன்று தமிழ் கற்று, அம்மொழியில் உரையாற்றவும், எழுதவும் வல்லவரானார். உரோமையிலிருந்த தம் சபைத்தலைவர்களுக்கு எழுதிய மடல்களில் தாம் தமிழ் இலக்கணம் ஒன்றும், தமிழ் அகராதி ஒன்றும் இயற்றிவருவதாக அடிக்கடிக் குறிப்பிடுகின்றார். இவ்விரண்டுமே அச்சேறியதாகத் தெரியவில்லை.

அண்டிறீக்கிப் பாதிரியார் இயற்றிய இலக்கண நூலின் கையெழுத்துப் படியை 1954ஆம் ஆண்டு லிஸ்பன் நகரத்துத் தேசிய நூலகத்தில் தனிநாயகம் அடிகளார் (1954, பக்.219-20) கண்டார். போர்த்துக்கேய மொழியில் எழுதப் பெற்ற தமிழ் இலக்கணமாகிய இந்நூல் கையெழுத்துப் படியில் 160 பக்கங்களைக் கொண்டிருந்ததாக அடிகளார் குறிப்பிடுகின்றார். தமிழகத்தில் சமயப் பணியாற்ற வந்த யேசுசபைக் குருக்கள் போர்த்துக்கேய மொழியைப் பொதுமொழியாகக் கொண்டவராதலின், அவர்களுக்குப் பயன்படும் வகையில் அண்டிறீக்கிப் பாதிரியார் இவ்விலக்கணத்தைப் போர்த்துக்கேய மொழியில் இயற்றினார் என்பது தெளிவு.

அன்றைய ஐரோப்பியர் தமிழ்மொழியை 'மலபார்' என்று குறித்த வழக்கினை அடிப்படையாகக் கொண்டு 'மலபார் இலக்கணம்' என அண்டிறீக்கி பெயரிட்ட இந்நூலை 'முதல் ஐரோப்பியத் தமிழ் இலக்கணம்' (The first European Tamil Grammar) என்னும் தலைப்புடன் ஹான்ஸ் ஜே. ஃபெர்மீர் என்பார் ஆய்வுப் பதிப்பாக 1982ஆம் ஆண்டில் ஹைடல்பர்க் நகரத்து ஜூலியுஸ் க்ரூஸ் பதிப்பகத்தின் மூலம் வெளியிட்டுள்ளார்.

இப்பதிப்பையும், ஏற்கெனவே ஜீன் ஹைறன் அம்மையார் இவ்விலக்கணம் பற்றி எழுதிய கட்டுரையையும் அடிப்படையாகக் கொண்டு 'முதல் பேச்சுத் தமிழ் இலக்கணம்' என்னும் இக்கட்டுரை வடிக்கப் பெற்றுள்ளது.

பின்னணிச் செய்திகள்

1547ஆம் ஆண்டு தென்பாண்டி நாடு வந்தடைந்த அண்டிறீக்கிப் பாதிரியாருக்குத் தமிழ் மொழி அத்துணை எளிதாக இருக்கவில்லை. மொழிபெயர்ப்பாளரின் துணை கொண்டு அவர் சமயப் பணியாற்ற வேண்டியதாயிற்று. பின் புனித பிரான்சிஸ் சேவியரின் ஆணைக்கிணங்க 1548ஆம் ஆண்டில் தமிழ் கற்பதில் அவர் ஈடுபட்டார். ஐந்து திங்களுக்குள் தமிழ் பேச அவரால் முடிந்தது. ஆயினும் தமிழ் ஒலிப்புமுறை சரியாகக் கைவரப்பெறவில்லை. அடுத்த ஆண்டின் நடுவில் மொழிபெயர்ப்பாளரின் துணையின்றித் தமிழ் பேச அவரால் இயன்றது. 1575ஆம் ஆண்டில் சமயப் பொறுப்பினின்று விடுவிக்கப்பெற்று, தமிழில் கிறித்துவ நூல்கள் இயற்றும் கடமையை அவர் மேற்கொண்டார்.

தமிழ் இலக்கணம் இயற்றும் முயற்சியில் அண்டிறீக்கி 1548ஆம் ஆண்டிலேயே ஈடுபட்டதாக (விக்கி 1948) அறிகிறோம். புதிய சமயத் தொண்டர்களுக்குப் பயன்படுவதற்காகவே அவர் இந்நூலை இயற்றினார். 1552ஆம் ஆண்டில் இலக்கண நூலை இயற்றி முடித்துவிட்டதாகக் கூறும் அவர், 1565ஆம் ஆண்டில் அதைச் செப்பம் செய்து கொண்டிருப்பதாகத் தெரிவிக்கின்றார். தம் இலக்கண நூலை அண்டிறீக்கி முழுமையாக்கி நிறைவு செய்தது எப்போது என நம்மால் அறிய இயலவில்லை. அண்டிறீக்கிப் பாதிரியார் இயற்றிய இலக்கண நூலின் தொடக்ககாலப் படியே தங்களுக்குக் கிடைத்திருப்பதாகப் பதிப்பாசிரியர் கூறுகின்றார்.

தமது இலக்கணத்தைக் கொண்டு தமிழைக் கற்றல் எளிது என்பது அண்டிறீக்கியின் கருத்து. இலத்தீன் மொழியிலக்கணத்தின் அடிப்படையிலேயே தம் தமிழ் இலக்கணத்தை இயற்றியிருப்பதாகக் கூறும் அவர், இலத்தீன் மொழியறியாதோர், சுவாம் தெ பாரோஸ் இயற்றிய போர்த்துக்கேய இலக்கணத்தைப் படித்துக் கொள்ளலாம் என எழுதுகின்றார்.

எழுத்து முறை

நூலாசிரியர் தம் காலத்தில் தமிழ் மொழி எழுதப்பெற்ற முறையையே தம் நூலிலும் கையாள்கின்றார். எகர ஏகார, ஒகர ஓகார உயிர்மெய் எழுத்துக்களில் கொம்பு வேறுபாடு இல்லை. ஊகாரம் உகரத்தை அடுத்து ளகரம் வருவதாகவே

(உள) எழுதப்படுகின்றது. ககர வகையில் உயிர்மெய்-யெழுத்துக்களை எழுதும் ஆசிரியர் கானா, காவன்னா, கீனா, கீயன்னா எனப் பேச்சுத் தமிழ் முறையைப் பயன்படுத்தி எழுதுவதை நாம் காண்கிறோம். மெய்யெழுத்துக்கள் புள்ளி யின்றியே எழுதப்பட்டுள்ளன.

நூலின் பிரிவுகள்

நூலின் முதற் பகுதி பெயர்ச்சொற்களைப் பற்றியது. ஏறக்குறைய 30 பக்கங்களைக் கொண்டது. தமிழில் வேற்றுமை உருபுகள் உண்டேயன்றி, பெயர் ஈற்றின் அடிப்படையில் சொற்களை வகைப்படுத்துதல் இல்லை. ஆனால் இலத்தீன் மொழியில் ஈற்றின் அடிப்படையில் சொற்களை வகைப்படுத்தி அவை ஒவ்வொன்றும் வேறுபட்ட முறையில் வேற்றுமை உருபுகளை ஏற்கும் நிலை உண்டு. இத்தகைய இலத்தீன் இலக்கண முறையை ஆசிரியர் பயன்படுத்தித் தமிழ்ச் சொற்களை ஐந்து பெயர் விகற்பங்களாக (Five Declensions) பிரித்துக் கொண்டு, அவை ஒவ்வொன்றும் வேற்றுமை ஏற்பது எவ்வாறு என விளக்குகின்றார்.

தமிழில் வினைச் சொற்களை ஈற்றின் அடிப்படையில் தொகுக்கும் மரபு இல்லை. ஆனால் இலத்தீன் மொழியில் அம்மரபு உண்டு. இலத்தீன் மரபினைப் பயன்படுத்தி ஆசிரியர் தமிழிலும் ஒன்பது வினை விகற்பங்களைத் (Nine Conjugations) தொகுக்கின்றார். ஒவ்வொரு விகற்பமும் காலத்துக்கு ஏற்றவாறு ஈறுகளை எவ்வாறு ஏற்கின்றது என்பதை அவர் விளக்குகின்றார். இப்பகுதி நூறு பக்கங்களுக்கு மேற்பட்டதாக அமைகிறது.

பெயர் விகற்பங்கள் (Declensions of Nouns)

முதலாம் பெயர் விகற்பம்

இது ஆண்பால் ஒருமையில் அன் விகுதியும் பன்மையில் அர் விகுதியும் கொண்டது. பெண்பால் ஒருமையில் இ விகுதியையும் பன்மையில் யர், கள் விகுதிகளையும் கொண்டது. (எ.கா - தோட்டியன் - தோட்டியர், தோட்டிச்சி-தோட்டிச்சியர், தோட்டிச்சிகள்).

இவ்விகற்பம் சாதிப்பெயர்களையும் (பிராமணன், பிராமணத்தி), பணிப்பெயர்களையும் (கொல்லன், கொல்லத்தி), பிற பெயர்களையும் (குருடன்-குருடி, மனிதன் - மனிச்சி). அதாவது உயர்திணைப் பெயர்களையே கொண்டது.

தமிழில் காணும் வேற்றுமை வரிசையை ஒதுக்கிவிட்டு ஆசிரியர் இலத்தீன் வரிசையைப் பின்பற்றி முதலாம், ஆறாம், நான்காம், இரண்டாம், எட்டாம் வேற்றுமைகளை வரிசைப் படுத்துகின்றார். (எ.கா. - தோட்டியன், தோட்டியன் உடைய, தோட்டியனுக்கு, தோட்டியனை, தோட்டியா) .

உடைமைப் பொருள் சுட்டுவதற்கு ஒருமையும் பன்மையும் எப்போதுமே 'உடைய' உருபு ஏற்கும் என்கிறார்.

இரண்டாம் பெயர் விகற்பம்

இது ஒருமையில் இ, ஐ விகுதிகளையும், பன்மையில் யள், கள் விகுதிகளையும் கொண்டது. (எ.கா. - தொப்பி - தொப்பியள், தொப்பிகள், தலை - தலைகள், தலையள்). இது முதல்வகை.

இரண்டாம் வகை ல், ன், ர் விகுதிகளை ஒருமையிலும், கள் விகுதியைப் பன்மையிலும் கொண்டது. (எ.கா. கால் - கால்கள், பீங்கான் - பீங்காங்கள், ஊர் - ஊர்கள்) .

இவ்விகற்பம் அஃறிணைப் பெயர்களையே கொண்டதாக அமைந்துள்ளது.

மூன்றாம் பெயர் விகற்பம்

அஃறிணைப் பெயர்களைக் கொண்ட இது ஒருமையில் ம் விகுதியையும் பன்மையில் கள் விகுதியையும் கொண்டது. இச்சொற்கள் வேற்றுமை ஏற்கும்போது மகர மெய்க்குப் பதிலாக தகர மெய் இடம்பெறும் என எழுதும் ஆசிரியர் அத்துச் சாரியைப் பற்றி அறிந்திருக்கவில்லை என்பது தெளிவு. (எ.கா. - பண்டம், பண்டமுடைய, பண்டத்துக்கு, பண்டத்தை, பண்டத்திலே, பண்டமே) .

நான்காம் பெயர் விகற்பம்

பெரும்பாலும் உயர்திணைப் பெயர்களைக் கொண்ட இவ்விகற்பம் ஒருமையில் ஆ விகுதியும் பன்மையில் க்கள் விகுதியும் கொண்டது. (எ.கா. - பிதா - பிதாக்கள்) .

ஐந்தாம் பெயர் விகற்பம்

பெரும்பாலும் அஃறிணைப் பெயர்களைக் கொண்ட இது ஒருமையில் உ விகுதியும் பன்மையில் கள், க்கள் விகுதிகளையும் கொண்டது. இவ்விகற்பத்தில் மூன்று வகை உண்டு. (எ.கா. கம்பு-கம்புக்கு, உரு-உருவுக்கு, வீடு-வீட்டுக்கு)

ஐந்தாம் விகற்பத்தின் மூன்றாம் வகை டு, று என்னும் எழுத்துக்களை ஈற்றில் கொண்டிருப்பதால் ஒருமையில் உருபேற்குமுன் ஒற்று இரட்டித்து வரும் எனக் கூறும் ஆசிரியர், பன்மையில் ஒற்று இரட்டிக்காமல் கள் விகுதியேற்று (கம்புகள் போலவே) உருபேற்கும் என்கிறார். (எ.கா. வீடு- வீட்டுக்கு, சோறு - சோற்றுக்கு, வீடுகள் - வீடுகளுக்கு, சோறுகள் - சோறுகளுக்கு)

ஒருமையில் ஒற்று இரட்டிக்காவிடில் செவிக்கு நன்றாக ஒலிக்காது என்பதை அவர் காரணமாகக் குறிக்கின்றார்.

பெயர்ச்சொல் பற்றிய பிற குறிப்புகள்

கிளவனார், துப்பாசியார், தம்பிரானார், கிளவியார், பாதிரியார் போன்ற சில உயர்திணைச் சொற்கள் மதிப்புப் பன்மையாக ஆர் விகுதி பெற்றுவருவதையும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

உயர்திணை, அஃறிணை ஆகிய இலக்கணச் சொற்களை அறியாத ஆசிரியர் பணம், தலை, தொப்பி போன்ற (அஃறிணைச்) சொற்கள் பன்மையில் கள் விகுதியின்றி ஒருமை வடிவத்தில் (பால்பகா அஃறிணை) வருமென்பதைச் சுட்டுகிறார்.

இரண்டாம் வேற்றுமைத் தொகைபற்றியும் ஆசிரியர் குறிக்கின்றார். (எ.கா. பணம் கொண்டு வா)

சுத்தம் என்பது போன்ற பண்புப் பெயர் சுத்தமான எனப் பண்பு அடைச் சொல்லாகி (*adjective*), வன், வள், து விகுதிபெற்றுச் சுத்தமானவன், சுத்தமானவள், சுத்தமானது எனப் பால் விகுதி பெற்றுவருவதையும் ஆசிரியர் குறிக்கின்றார்.

நான், நீ, அவன் போன்ற மூவிடப் பெயர்கள் வேற்றுமை உருபுபெறுதலையும் ஆசிரியர் விளக்குகின்றார்.

வினை விகற்பங்கள்

ஐந்து பெயர் விகற்பங்களை விளக்கிய ஆசிரியர் வினை விகற்பங்கள் (*Conjugations*) ஒன்பது என வகுக்கின்றார். இதுவும் தமிழுக்குப் புறம்பானது எனினும் இலத்தீன் இலக்கண அடிப்படையில் ஆசிரியர் இவ்வாறு வகுத்துள்ளார்.

முதல் மூன்று வினை விகற்பங்கள் க்கிறேன் என்னும் ஈற்றினையும், அடுத்த மூன்று விகற்பங்கள் றேன் என்னும் ஈற்றினையும், எஞ்சிய மூன்றும் கிறேன் என்னும் ஈற்றினையும் கொண்டுள்ளதாக ஆசிரியர் விளக்குகின்றார். இவை தன்மை ஒருமை நிகழ்கால ஈறுகள் என்பது நினைவு கூரத்தக்கன. கிறு, கின்று, ஆநின்று என்பவையே நிகழ்கால இடைநிலைகள் என்னும் இலக்கணத்தை அறிந்துள்ள நமக்கு இது ஒவ்வாத-தாகத் தோன்றலாம். ஆனால் தமிழ் இலக்கணத்தை அறவே அறியாத ஆசிரியர், தாமாகவே பயின்ற பேச்சுத் தமிழை அடிப்படையாகக் கொண்டு ஒரு புதிய இலக்கணத்தைப் படைக்க முயன்ற முயற்சி இது என்பதனை நாம் மறந்துவிடக் கூடாது.

முதல் வினை விகற்பம் பெரும்பான்மை இக்கிறேன் என்னும் விகுதியையும், சிறுபான்மை ஐக்கிறேன், உக்கிறேன் என்னும் விகுதிகளையும் கொண்டது. இறந்த கால ஈறு சேன், எதிர்கால ஈறு பேன், செய என்னும் எச்ச வடிவம் (*Infinitive*) க எனவும் அமையும்.

மூவிடங்களுக்கும் நிகழ்கால வினை கீழ்க்கண்டவாறு அமையும்.

விச்சுவதிக்கிறேன் - விச்சுவதிக்கிறோம்
விச்சுவதிக்கிறாய் - விச்சுவதிக்கிறீர், விச்சுவதிக்கிறீயல்
விச்சுவதிக்கிறான் - விச்சுவதிக்கிறார்
விச்சுவதிக்கிறாள் - விச்சுவதிக்கிறார்கள்

முதல் விகற்ப நிகழ்காலத்தில் விச்சுவதிக்கிறேனே, விச்சுவதிக்கிறானே போன்ற வடிவங்கள் பற்றியும் ஆசிரியர் கூறுகின்றார். 'பகவதியை விச்சுவதிக்கிறானே அவனை இங்கே கூட்டிக் கொண்டு வா' என அவர் தரும் எடுத்துக்காட்டின் உதவியால், வினையாலணையும் பெயரை இலத்தீன் முறையில் அவர் விளக்க எடுத்துக் கொண்ட முயற்சியே இது என நாம் தெளியலாம்.

விச்சுவதிக்கிறேனாகில், விச்சுவதிக்கிறானாகில் போன்ற சார்பு நிலை வினைவடிவத்தையும் (*Conditional Verb*) ஆசிரியர் விளக்குகிறார்.

விச்சுவதிக்கிற என்னும் பெயரெச்சத்துடன் வன், வள் ஈறு சேர்த்தால் விச்சுவதிக்கிறவன், விச்சுவதிக்கிறவள்,

விச்சுவதிக்கிறது என்னும் வடிவம் (*Participle*) கிடைக்கும் என்பது ஆசிரியரின் கருத்து.

முதல் விகற்பம் விச்சுவதித்தேன் விச்சுவதிச்சேன் எனச் சேன் ஈறுபெற்று இறந்த காலமாகும் என்பார் ஆசிரியர். விச்சுவதித்தேன், விச்சுவதித்தாய், விச்சுவதித்தீயல், விச்சுவதித்தான், விச்சுவதித்தார்கள் என மூவிட ஒருமை பன்மை வடிவங்களைத் தொகுக்கின்றார் அவர்.

விச்சுவதித்தேனே, விச்சுவதித்தேனாகில், விச்சுவதித்தால், விச்சுவதித்தவன், விச்சுவதித்து இருக்கச்சொலே, விச்சுவதித்துக் கொண்டு (கொண்டே), விச்சுவதித்ததினாலே, விச்சுவதித்த பொழுது (போது), விச்சுவதித்த நேரம், விச்சுவதித்த உடனே முதலிய பலவகையான இறந்த கால வடிவங்களை ஆசிரியர் குறிக்கின்றார்.

விச்சுவதிப்பேன், விச்சுவதிப்பாய், விச்சுவதிப்பான், விச்சுவதிப்போம், விச்சுவதிப்பியல், விச்சுவதிப்பார்கள் என எதிர்கால வடிவங்களை எடுத்துரைக்கும் ஆசிரியர், விச்சுவதிப்பானாகில், விச்சுவதிப்பது (தொழிற்பெயர்) போன்ற வடிவங்களையும் பற்றி எழுதுகின்றார்.

செய்கிறேன் - செய்விக்கிறேன், விழுகிறேன் - விழுவிக்கிறேன் போன்ற தன் வினை, பிறவினை வடிவங்களைப்பற்றியும் ஆசிரியர் கூறுகின்றார்.

அவ்வாறே விச்சுவதி-விச்சுவதியாதே, விச்சுவதியுங்கோ-விச்சுவதியாதேயுங்கோ போன்ற ஏவல் - வியங்கோள் வடிவங்களையும் பற்றி இந்நூல் சுருங்கக் கூறுகிறது. விச்சுவதியேன் போன்ற எதிர்கால எதிர்மறை வினையையும் ஆசிரியர் குறிக்கின்றார். விச்சுவதியா விட்டால், விச்சுவதியாமல், விச்சுவதியாதிருக்கில் (லும்), விச்சுவதியாதிருந்தால் (லும்) போன்ற வினை வடிவங்களையும் ஆசிரியர் குறிக்கின்றார். நிகழ்காலம், இறந்த காலம், எதிர்காலம், எதிர்கால எதிர்மறை, ஏவல் - வியங்கோள், செய எனும் வினையெச்சம் போன்ற சிலவற்றைப் போர்த்துக்கேய மொழியில் பெயர் குறித்துக் கூறும் ஆசிரியர் ஏனைய வடிவங்களைப் பெயரின்றியே குறிக்கின்றார்.

வினைக் கருத்தினை எழுவாய்க்குப் பயனிலையாக்காமல் காட்டும் வினைவடிவம் தமிழில் செய என்னும் எச்ச வடிவாக

அமையும். இதை ஐரோப்பிய மொழிகளில் *INFINITIVE* என அழைப்பர். இவ்வடிவம் பற்றியும் ஆசிரியர் எழுதுகின்றார்.

இரண்டாம் வினைவிகற்பம் அக்கிறேன் (நிகழ்காலம்), அந்தேன் (இறந்தகாலம்), அப்பேன் (எதிர்காலம்) என்னும் ஈறுகளைக் கொண்டு முடிகிறது. பிளக்கிறேன், பிளந்தேன், பிளப்பேன், பிளக்கிறவாகு, பிளக்கிறாப்போலே, பிளக்கிறது, பிளக்கிறபொழுது (போது), பிளந்தானாகில், பிளந்தானில்லையாகில், பிளந்ததுகொண்டு, பிளந்தவுடனே, பிளந்ததினாலே, பிளப்பிக்கிறேன், பிள, பிளவுங்கோ, பிளவேன் எனப் பல வினைவடிவங்களை ஆசிரியர் விளக்குகின்றார்.

மூன்றாம் வினைவிகற்பம் ட்கிறேன், ர்க்கிறேன், ற்கிறேன் (நிகழ்காலம்), ட்டேன், ற்றேன், ன்றேன் (இறந்தகாலம்), பேன் (எதிர்காலம்) என்னும் ஈறுகளைக் கொண்டு முடிகிறது. கேட்கிறேன், விற்கிறேன், நிற்கிறேன் போன்ற எடுத்துக்காட்டுகளை ஆசிரியர் சுட்டுகிறார்.

நான்காம் வினைவிகற்பம் றேன், னேன், வேன் என்னும் (எ.கா. போறேன், போனேன், போவேன்) ஈறுகளை உடையது. எண்ணிறேன், எறிறேன், அறிறேன், களத்திறேன், பாடிறேன், உதவிறேன், நீக்கிறேன் போன்ற எடுத்துக் காட்டுகளை ஆசிரியர் தருகிறார்.

பருமாறுகிறேன், மன்றாடுகிறேன் போன்ற சில வினைச் சொற்கள் கிறேன் என்னும் ஈற்றைக் கொண்டிருக்கும். இவை பருமாறினேன், மன்றாடினேன் என இறந்தகால வடிவமும், பருமாறுவேன், மன்றாடுவேன் என எதிர்கால வடிவமும் ஏற்கும்.

ஐந்தாம் வினைவிகற்பம் ளிறேன், உறேன் என்னும் இருவகை ஈறுகளைக் கொண்டது.

முதல்வகை கொள்ளிறேன் (கொள்கிறேன்) போன்ற சொற்களைக் கொண்டது. இது இறந்த காலத்தில் கொண்டேன் எனவும், எதிர்காலத்தில் கொள்ளுவேன் எனவும் வடிவம் பெறும். ஆனால் சொல்விறேன் (சொல்கிறேன்) போன்ற சொற்கள் சொன்னேன், சொல்லுவேன் என வடிவம் பெறும்.

இரண்டாம் வகை புதுறேன் (புகுகிறேன்) போன்ற சொற்களைக் கொண்டது. இது இறந்த காலத்தில் பூந்தேன்

எனவும் எதிர்காலத்தில் புதுவேன் எனவும் வடிவம் கொள்ளும் என்பார் ஆசிரியர். தாரேன் (தருகிறேன்), வாறேன் (வருகிறேன்) போன்ற வினைகளையும் ஆசிரியர் இவ்விகற்பத்தில் அடக்குகின்றார்.

ஆறாம் விகற்பம் ய்றேன், ய்தேன், உவேன் என்னும் ஈறுகளைக் கொண்டது. (எ.கா. எய்றேன், எய்தேன், எய்யுவேன்).

ஏழாம் வினைவிகற்பம் டுகிறேன், டுறேன் என்னும் நிகழ்கால ஈறுகளையும், ட்டேன் என்னும் இறந்தகால ஈற்றையும், டுவேன் என்னும் எதிர்கால ஈற்றையும் கொண்டது. இடுகிறேன், போடுகிறேன் போன்ற சொற்கள் இட்டேன், போட்டேன் (இறந்தகாலம்), இடுவேன், போடுவேன் (எதிர்காலம்) என மாறிவரும்.

எட்டாம் வினைவிகற்பம் உகிறேன், உதேன், உவேன் என்னும் கால ஈறுகளைக் கொண்டது. (எ.கா. அழுகிறேன், அழுதேன், அழுவேன்).

ஒன்பதாம் வினைவிகற்பம் ன்கிறேன், ன்றேன் (அல்லது ண்டேன்) ன்பேன் என்னும் ஈறுகளை உடையது. உண்கிறேன், தின்கிறேன், என்கிறேன், களவாங்கிறேன் போன்ற எடுத்துக் காட்டுக்களை ஆசிரியர் தருகின்றார்.

செயப்பாட்டுவினை எனத் தலைப்பிட்டு எழுதத் தொடங்கும் ஆசிரியர் 'செயப்பாட்டு வினை என முறையாக அழைக்கப்படத்தக்க வினை இம்மொழியில் இல்லை' என எழுதிவிட்டு, 'ஆயினும் சில வினைவிகற்பங்களில் ஏறக்குறைய செயப்பாட்டுப் பொருள் தரும் வினைகளைக் காணலாம்' என்று தொடர்கிறார்.

ஆனால் செயப்பாட்டு வினைவடிவம் என ஆசிரியர் தருவது ஒன்றன்பால் வினையாக இருப்பதைக் காணலாம். (எ.கா. சட்டி உடைஞ்சிது, சட்டி உடைஞ்சு போச்சு, கதவு அடைச்சு கிடந்தது, சிலவிலியுது, மரம் பிளந்தது, நெல்லு விற்கிறது).

வாக்கிய அமைப்புப் பற்றி நூலின் இறுதிப்பகுதியில் ஆசிரியர் எழுதுகின்றார். வாக்கியத்தின் தொடக்கத்தில் எழுவாயும் இறுதியில் வினைச் சொல்லும் அமையும்.

வாக்கியத்தின் இடையில், நான்காம் வேற்றுமை முதலிலும் இரண்டாம் வேற்றுமை அதன் பின்னரும் வரும். (எ.கா. நீ சொவானிக்கு நாலு பணம் கொடு).

வினையெச்சம் வினைமுற்றுக்கு முன்னர் வரும். (எ.கா. நான் புன்னைக்காயலுக்கு சல்திக்கு போக இருக்கிறேன்).

பண்பு அடைச் சொல் பெயருக்கு முன் வரும். (எ.கா. நீ எனக்கு நல்ல பொத்தகம் தா).

எதிர்மறை உருபு வினைச்சொல்லை அடுத்துவரும். (எ.கா. நான் கோயிலுக்கு போனேன் இல்லை).

ஆய்வுக் குறிப்புகள்

மொழியறியாதவராகத் தமிழ் நாட்டுக்கு வந்து தூத்துக்குடியை அடுத்த கடற்கரை ஊர்களில் பணியாற்றி, அப்பகுதி மக்கள் பேசிய தமிழைத் தாமும் கற்று, தாமறிந்த இலத்தீன் இலக்கணத்தின் அடிப்படையில் அப் பேச்சுத் தமிழுக்கு இலக்கணம் வரைந்த அண்டிறீக்கிப் பாதிரியாரின் முயற்சி வியப்புக்கு உரியதாகும்.

பேச்சுத் தமிழைக் கற்ற ஆசிரியர் தாம் கேட்டவாறே தமிழ்ச் சொற்களை எழுதக் காண்கிறோம். (எ.கா. வாறேன், தாறேன், வரச்சொல்லே, போடுறேன், திரிய்றேன், படியுங்கோ, படிச்ச, விச்சுவதிக்கிறீயல்).

எனினும் அவர் திருத்தமான தமிழை அறிந்தவர் என்பதையும் காண்கிறோம். விளக்கவும் செய்தேன், விச்சுவதிக்கிறேனாகில், பாடுகிறேன், படியேன், பெற்றேன், கொண்டேன் போன்ற திருத்தமான சொற்களை நாம் இந்நூலில் காணமுடிகிறது.

நூலாசிரியர் தமிழை முறையாகப் படித்ததாகத் தெரிய வில்லையெனினும் அவர் உயிர், மெய் எழுத்து வரிசையைச் சரியான முறையில் எழுதியிருப்பதைக் கண்டு நாம் வியக்கிறோம். ல, ள, ழ, ர, ற போன்ற எழுத்துக்களுக்கிடையே உள்ள ஒலி வேற்றுமையையும் அவர் அறிந்திருந்தார்.

காலம் காட்டும் இடைநிலைபற்றி அவர் அறிந்திருக்கவே இல்லை. ஆகவேதான் வினையீறுகளைக் கொண்டு அவர் வினைச்சொற்களைப் பிரிக்கின்றார்.

விச்சுவதிக்காவிட்டால், வந்தான் இல்லை, விச்சுவதிக்க இல்லை போன்ற எதிர்மறை வினைவடிவங்களை நூலாசிரியர்

கூறினாலும், துணை வினையாக அன்றி வினைச் சொல்லின் அகத்தே அமைந்து எதிர்மறைப் பொருள்தரும் அறியேன், படியேன், விச்சுவதியேன் போன்ற எதிர்கால எதிர்மறை வினையினை ஆசிரியர் சிறப்பாக எடுத்தோதுகின்றார். Non என்னும் தனிச்சொல் எதிர்மறைப் பொருளைத்தரும் இலத்தீன் வழக்காற்றினின்று வேறுபட்ட தமிழ் எதிர்மறை ஆசிரியரின் கவனத்துக்கு உரியதாயிற்று என நாம் உணரலாம்.

இலத்தீன் மொழியைப் போலவே தமிழிலும் மூன்று காலங்கள் இருந்தாலும், இம்மூன்று காலங்களோடு தொடர்புடைய பிற வினை வடிவங்களையும் தொகுத்துக் காட்ட ஆசிரியர் மேற்கொண்டுள்ள முயற்சி வியப்புக்குரியது. ஏறக்குறைய 97 வினை வடிவங்களை அவர் தொகுத்துள்ளார். விச்சுவதிக்கிறேன், விச்சுவதிக்கிறேனாகில், விச்சுவதிக்கிற, விச்சுவதிக்கிறவாகு, விச்சுவதிக்கிறாப் போலே, விச்சுவதிக்கிறவன், விச்சுவதித்து இருக்கச் சொலே, விச்சுவதித்தாலும், விச்சுவதித்துக்கொண்டு, விச்சுவதித்த உடனே, விச்சுவதித்ததினாடீலே, விச்சுவதித்த நேரம், விச்சுவதித்ததுக்கு, விச்சுவதிப்பாயே, விச்சுவதிப்பாயாம், விச்சுவதிப்பது, விச்சுவதி, விச்சுவதியேன், விச்சுவதியாதே, விச்சுவதியாமல், விச்சுவதிக்க, விச்சுவதியாத, விச்சுவதிக்காவிட்டால், விச்சுவதிக்கலாம், விச்சுவதிக்காம்காட்டி, விச்சுவதிக்காமுன்னே, விச்சுவிதிக்கில் போன்ற வினை வடிவங்களை ஏதோ ஒரு வகையில் மூன்று காலங்களுக்குள்ளோ, செய என்னும் வாய்பாட்டு வினையுள்ளோ, எச்ச வினையுள்ளோ அடக்கிவிட அவர் பெரிதும் முயன்றுள்ளார்.

தமிழை முறையாகப் பயிலாத ஓர் ஐரோப்பியரால் இயற்றப்பட்ட இவ்விலக்கணத்தைச் சீகன்பால்கு, வீரமாமுனிவர் போன்றோர் இயற்றிய இலக்கணங்களுடன் ஒப்பிடுதல் பொருந்தாது. ஏனெனில் சீகன்பால்கு, வீரமாமுனிவர் போன்றோர் இலக்கியத் தமிழைப் பயின்றவர்கள். தமிழ் இலக்கண நூலுடன் அறிமுகமற்ற சீகன்பால்கு எழுதிய தமிழ் இலக்கணமும், தமிழ் இலக்கணங்களைச் செம்மையாகக் கற்று இலத்தீனிலும் தமிழிலும் செந்தமிழ் இலக்கணங்களை இயற்றிய வீரமாமுனிவரின் கொடுந்தமிழ் இலக்கணமும் அண்டிறீக்கிப் பாதிரியாரின் இலக்கண நூலைவிடச் சிறந்தவை என்பதில் ஐயமில்லை. ஆயினும் முன்னோர் துணையின்றித் தாமே தமிழ் இலக்கணம் வகுத்த அண்டிறீக்கிப் பாதிரியாரின் முயற்சி ஒப்பற்றது என்பதில் எத்தகைய ஐயத்துக்கும் இடமில்லை.

பயன்பட்ட நூல்கள்

1. Beschi, C.J., **Grammatica Latino Tamulica** (கொடுந்தமிழ்) , Puducheri, 1845.

2. Hein, J.H., Father Henriques' Grammar of Spoken Tamil, 1548, **Indian Church History Review,** X I - 2, Bangalore, 1977.

3. Thaninayagam, X.S., 'Tamil Manuscripts in European Libraries', **Tamil Culture** III 3-4, Madras, 1954.

4. " 'The First books printed in Tamil', **Tamil Culture** VII-3., Madras, 1958.

5. Vermeer, H.J., (Ed.), **The First European Tamil Grammar**, Heidelberg, 1982.

தமிழ்நாட்டில் கோயிற்கலை ஆய்வுகள்-இன்றைய நிலை

மருத்துவர் இரா. கலைக்கோவன்

தமிழ்நாட்டில் கோயிற்கலைகள் தொடர்பான ஆய்வுகள் கடந்த பத்தாண்டுகளில் மிகுதியாகியுள்ளன. அரசு சார் தொல்லியல் மற்றும் தமிழாய்வு நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த ஆய்வாளர்களும் தனியர்களாய்ப் பலரும் கோயிற் கலைகள் தொடர்பான கட்டுரைகளையும் நூல்களையும் அண்மைக் காலத்தே பலவாக எழுதி வெளியிட்டுள்ளனர். இவற்றுள் பெரும்பான்மையான வெளியீடுகள் பிழைகள் மலிந்த நிலையில் உள்ளமை துன்பம் தரும் உண்மையாகும். இவற்றைச் சுட்டிக்காட்டுவதும் இவற்றுக்கான காரணங்களை ஆராய்வதும் இவற்றைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளைச் சிந்திப்பதுமே இக்கட்டுரையின் நோக்கம்.

கோயிற்கலை ஆய்வு எளிதான செயல் அன்று. அதற்குப் பல்துறை சார்ந்த அடிப்படை அறிவு மிகத்தேவை. ஒரு கோயிலை ஆய்வதென்பது அதன் கட்டட அமைப்பு, அங்குள்ள சிற்பங்கள், ஓவியங்கள், வார்ப்புத் திருமேனிகள், சுதையுருவங்கள், கல்வெட்டுகள், அக்கோயில் சார்ந்த இலக்கியங்கள் என அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆய்வு

செய்வதாகும். இந்த ஆய்விற்கு ஆகம, இலக்கிய, வரலாற்றறிவு இன்றியமையாதது. கோயில் பல்வேறு கலைகளின் உள்ளடக்கமாய் விளங்குவதால், ஓரிரு கலைகளில் தேர்ச்சியுடையவர்கள்கூட கோயில் ஆய்வுகளில் ஈடுபடும் போது தடுமாறிப் போவதையும் தவறிழைப்பதையும் பார்க்க முடிகிறது. கலையறிவுப் பின்புலமே இல்லாதார் ஆய்வுகள் இங்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

கோயிற்கலை ஆய்வு முழுமையும் களம் சார்ந்த ஆய்வாகும். கோயில் தொடர்பான கட்டுரைகள், நூல்கள் எழுதும் ஆய்வாளர்களுள் பெரும்பான்மையோர் அவ்வக் கோயில்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து, பிறகே எழுதுகிறார்கள். ஒருசிலர் முன்னரே வெளியிடப் பட்டிருக்கும் கட்டுரைகள் அல்லது நூல்களின் அடிப்படையில் தங்கள் படைப்புகளை உருவாக்குகிறார்கள். சிற்ப, வார்ப்புருவ ஆய்வுகளில் ஈடுபடுவோருள் சிலர் தம் ஆய்வுக்குரிய வடிவங்களை நேரில் சென்று காணாமல் ஒளிப் படங்களைப் பார்த்தே ஆய்வுசெய்து எழுதிவிடுகிறார்கள்.

கடந்த ஐந்தாண்டுகளில் வெளிவந்த கோயிற்கலை ஆய்வு நூல்கள் மற்றும் கட்டுரைகளுள் எங்களுக்குக் கிடைத்த வற்றை ஆய்வுக்குட்படுத்தியபோது ஏறத்தாழ எண்பது விழுக்காட்டிற்கு மேற்பட்ட ஆய்வுகள் குறையுடையன வாகவே அமைந்திருப்பதை அறியமுடிந்தது. தேவையான துறைகளில் தகுதி சான்ற பயிற்சியின்மையாலும், முறையான ஆய்வு அணுகுமுறைகளைப் பின்பற்றாமையாலும், பிறர் கருத்துக்களை ஆராயாமல் அப்படியே எடுத்தாண்டமையாலும் இக்குறைகள் நேர்ந்துள்ளன என்று உறுதியாகக் கூறலாம்.

கோயில் ஆய்வுகளில் ஈடுபடும் அரசு மற்றும் பல்கலை சார்ந்த நிறுவன ஆய்வாளர்களுக்குக் கிடைக்கும் வசதிகளும் வாய்ப்புகளும் தனியார்க்குக் கிடைப்பதில்லை. இருந்த போதும் தனியார் ஆய்வுகளைவிட நிறுவன ஆய்வர்களின் படைப்புகளே குறைகளை மிகவாய்க் கொண்டுள்ளன.

1. தேவையான துறைகளில் தகுதிசான்ற பயிற்சியின்மை

சென்ற ஆண்டு நடந்து முடிந்த உலகத் தமிழ் மாநாட்டையொட்டிப் பல நூல்கள் வெளியிடப்பட்டன. அவற்றுள் தமிழர் நாகரிகம் முதல் தொகுதியும் ஒன்று. ஐந்து

கட்டுரைகளை உள்ளடக்கியுள்ள இந்நூலின் மூன்று கட்டுரைகளில் பிழைகள் பல உள்ளன. இக்கட்டுரைகள் தொழில்முறை ஆய்வாளர்களால் எழுதப்பெற்றுள்ளன. இவற்றுள் 'ஆடலும் பாடலும்' என்னும் தலைப்பில் அமைந்துள்ள கட்டுரையை மூன்று ஆய்வர்கள் இணைந்து உருவாக்கியுள்ளனர். ஆடல், பாடல் என்னும் இரு கலைகளின் வளர்ச்சி முகங்களைக் காலநோக்கில் ஆராய முனையும் இக்கட்டுரை மிக மேலோட்டமாகவே ஆய்வுப்பொருளை அணுகியுள்ளது. சங்ககாலத்தில் இக்கலைகள் பெற்றிருந்த வளர்ச்சியைச் சுட்டுமிடத்து, ஆடலுக்கான 'பாடுபொருள்' என்னும் தலைப்பின் கீழ் தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்களிலிருந்து சான்றுகள் தர முயன்றுள்ளனர்.

'திணை, துறைகள் மற்றும் ஒழுக்கங்களே ஆடலுக்கும் பாடலுக்கும் பாடுபொருளாய் அமைந்திருத்தல் வேண்டும். முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை, வாளமலை, கழல்நிலை, வாடாவள்ளி, வெறியாடல், உவகைக் கலுழ்ச்சி, துடியாடல் போன்ற தொல்காப்பியத் துறைகள் மேலெழுந்தவாரியாக இதனைப் புரிந்துகொள்ளப் பெரிதும் உதவுகின்றன'. கட்டுரையாளர்கள் தொல்காப்பியத்திலிருப்பதாக வரிசைப்படுத்தியிருக்கும் இந்த எட்டுத் துறைகளுள் பின்னிரண்டும் தொல்காப்பியத்தில் இடம்பெறவில்லை. உவகைக் கலுழ்ச்சி புறப்பொருள் வெண்பாமாலையில் இடம்பெற்றிருக்கும் துறையாகும். 'துடியாடல்' என்று ஒரு துறை தொல்காப்பியத்திலும் இல்லை, புறப்பொருள் வெண்பா மாலையிலும் இல்லை. 'துடிநிலை' என்றுதான் புறப்பொருளில் ஒருதுறை இடம்பெற்றுள்ளது.

பாடுபொருள் என்னும் அதே தலைப்பின்கீழ் நிலப்பண்பாடுகளைப் பேசும் கட்டுரையாசிரியர்கள் முல்லை நிலப் பண்பாடுகளாகச் சிலவற்றை வரிசைப்படுத்தும்போது, புதுப்புனலாட்டம், பரத்தையர் வசை என்னும் இரண்டையும் இணைத்துக்கொண்டுள்ளார்கள். இவையிரண்டுமே மருத நிலஞ் சார்ந்தவை. நெய்தல் நிலப் பண்பாடுகளில் ஒன்றாக 'உடன்போக்கை'க் குறிப்பிட்டுள்ளனர். கொண்டுதலைக் கழிதல் பாலைக்குரியது. இதையே இளம்பூரணர் உடன்போக்கு என்பார்.

இதுபோன்ற கருத்துப் பிழைகள் இந்தக் கட்டுரையில் பலவாக உள்ளன. இதற்குக் காரணம் தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஆழ்ந்த பயிற்சியின்மையேயாகும். எடுத்துக் கொண்ட ஆய்வுப்பொருள் தொடர்பான கருத்துக்களைத் திரட்டும்போது மிகுந்த கவனமும் எச்சரிக்கையுணர்வும் தேவை. ஆனால் பல ஆய்வாளர்கள் இது பற்றிக் கிஞ்சித்தும் கவலைப்படுவதில்லை. திருநாங்கூரை ஆய்வுசெய்து நூலொன்று வெளியிட்டிருக்கும் நிறுவன ஆய்வர் ஒருவர், பட்டினப்பாலையிலும் பொருநராற்றுப்படையிலும் திருநாங்கூர் சுட்டப்பட்டிருப்பதாகத் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவ்விரு இலக்கியங்களிலும் திருநாங்கூர் இடம் பெறவில்லை. தாம் ஆய்வு செய்த நாங்கூர்த் திருக்கோயில்களுள் ஒன்றிலுள்ள தெய்வத்திருமேனியை 'அலத்துக்கரியா' என்று குறிப்பிடும் ஆய்வாளர் அக்கோயில் பற்றிய பாசுரத்தையும் உடன் தந்துள்ளார். அப்பாசுரத்தில் பெருமாள் 'அளத்தற்கரியார்' என்று அழைக்கப்படுகிறார். பாசுர வரியையும் தெய்வத்தின் பெயரையும் ஒப்புநோக்கி உணரக்கூட முடியாத சூழல்களில் ஆய்வுக் கட்டுரைகள் எழுதப்படுவது இலக்கியப் பயிற்சியின்மையையும் அதில் ஈடுபாடு கொள்ளாமையுமே உணர்த்துகின்றன.

'கரக்கோயில்' என்று ஓர் ஆய்வுக் கட்டுரை. கரக்கோயில் என்றால் 'தேர்' என்று பொருள்கொள்ளும் இவ்வாய்வர் இலக்கியங்களில் காணப்படும் தேர்ச்செய்திகளை ஆய்வு செய்துகொண்டு இரண்டு தகவல்களைத் தருகிறார். 'தமிழகத்தில் சங்க இலக்கியங்களில் தேரைப் பற்றிய பல குறிப்புகள் காணப்படுகின்றன. இவ்விலக்கியங்களில், வேந்தரும் வீரரும் ஆண்மக்களும் தேரில் சென்றதாகக் குறிப்புகள் சொல்கின்றன. தேர்களைக் குதிரைகளே இழுத்துச் சென்றனவாம்'. கட்டுரையாளரின் இவ்விரு முடிவுகளுமே முழுமையானவையல்ல. தேரில் சென்றவர்களாய் வேந்தர், வீரர், ஆண்மக்கள் என்பாரை மட்டுமே இவர் குறித்திருக்கிறார். ஆனால் பெண்களும் தேர்ப் பயணம் மேற்கொண்டதைச் சங்க இலக்கியப் பாடல்களால் அறியலாம். 'தேர்தரவந்த நேரிழை மகளிர்' என்னும் அகப்பாடலும் (336) பத்தொன்பதாம் பரிபாடலும் இதற்குச் சான்றுகளாய் அமையும். தேர்களைக் குதிரைகளே இழுத்தன எனும் முடிவும் முழுமையானதல்ல. சிறுபாணாற்றுப் படையில் நல்லியக்கோடன் பாணர்களுக்களித்த தேரை இழுக்க

வெள்ளெருது வழங்கப்பட்டது. இது குதிரைகளினும் விரைந்து தேரிழுக்க வல்லதெனக் குறிக்கிறார்கள். ஆய்வுத் தரவுகளைத் தரும்போது, அதுவும் முடிந்த முடிவாகச் சில சொல்லுமிடத்துக் கட்டுரையாளர்கள் மிகுந்த காப்புணர்வுடன் செயற்படுவது இன்றியமையாதது. குறையுடைய முடிவுகளும் பிழைகலந்த தரவுகளும் ஆய்வுக் கட்டுரையின் உண்மைத் தன்மையைப் பெரிதும் குறைத்துவிடுகின்றன.

கோயிற்கலை ஆய்வாளர்களுள் பெரும்பான்மையோர் தாங்கள் ஆய்வு செய்யும் கோயில்களிலுள்ள சிற்பங்களைப் பற்றி விரித்துரைக்கும்போது அவற்றை முழுமையான ஆய்வுக்கு உட்படுத்துவதில்லை. சிற்ப நூல்களிலும் ஆடற் கலை நூல்களிலும் போதிய பயிற்சியின்மையே இதற்குக் காரணமாகும். காமராசர் மாவட்டத்திலுள்ள செவல்பட்டிக் குடைவரையில் காணப்படும் சிவபெருமானின் ஆடல் தோற்றச் சிற்பம் குறித்து ஆய்வறிஞர் ஒருவர் எழுதியிருக்கும் பதினைந்து வரிக் குறிப்புரையில் ஒன்பது பிழைகள் உள்ளன. இவற்றுள் பெரும்பான்மையான தோற்றம் குறித்த தரவுகளாகும். தமிழர் நாகரிகத்தில் 'ஆடலும் பாடலும்' கட்டுரையின் ஆசிரியர்கள், 'குடந்தை சாரங்கபாணி கோயில் கோபுரத்திலும் திருவண்ணாமலை, திருமுதுகுன்றம், திருவதிகைக் கோயிற் கோபுரங்களிலும் பரதர் குறித்த 108 நாட்டியக் கரணங்களும் சிற்பங்களாகச் செதுக்கப்பெற்றுக் காட்சியளிக்கின்றன' என்கின்றனர். இது பிழையான கூற்றாகும். கரணங்களைப் பற்றிய தெளிவான நோக்கின்மையே இதுபோன்ற பிழையான கூற்றுகளுக்குக் காரணமாகும். குறிப்பாகத் திருவதிகைக் கோபுரத்தில் காணப்படும் ஆடற் சிற்பங்களுள் கரணச்சிற்பங்கள் மிகமிகக் குறைவாகும். ஊரக ஆடல் தோற்றங்களே அங்குப் பலவாய் உள்ளன.

புதுக்கோட்டை மாவட்டம் மலையடிப்பட்டிக் குடைவரைகளைப் பற்றி ஆங்கிலத்தில் வெளியாகியிருக்கும், நிறுவனம் சார்ந்த பேராசிரியர் ஒருவரின் ஆய்வுக் கட்டுரையில் முப்பதிற்கும் மேற்பட்ட தவறுகள் உள்ளன. சிலவற்றுள் பல சிற்ப அமர்வு நிலைகள் தொடர்பானவை. சிற்பங்களை அடையாளம் காண்பதிலும் இவ்வாய்வறிஞர் தவறியுள்ளார். பெருமாள் குடைவரையின் கருவறைப் பின் சுவரில் காணப்படும் கொம்புகளோடு கூடிய விலங்குமுகமும்

மனித உடலும் கொண்ட வடிவத்தை இவ்வறிஞர் ஜாம்பவானென்று எழுதியுள்ளார். திருவதிகை வீரட்டானம் என்ற கோயிற்கலை ஆய்வு நூலின் ஆசிரியர் ஆடற்கோலச் சிவபெருமான் சிற்பமொன்றை வண்ணிக்கையில், 'கீழ் இடக்கரம் வீசிய நடனமுத்திரையில்' இருப்பதாகக் கூறுகிறார். 'வீசிய நடன முத்திரை' எந்த ஆடற்கலை நூலிலும் காணப்படாத ஒன்றாகும்.

திருவதிகை வீரட்டானம் திருக்கோயிலைப் பற்றிய இந்த ஆய்வு நூலின் எந்தப் பக்கத்திலும் கோயிலின் விமானக் கட்டமைப்பு பற்றிய சிறப்பு விளக்கங்கள் இல்லை. இக் கோயிலின் விமானக் கட்டமைப்பு தனித்தன்மை வாய்ந்ததாகும். இதுபோன்ற கட்டுமானமுடைய கோயில்கள் தமிழகத்தில் மிகச்சிலவே உள்ளன. எனினும் கோயிலை நீண்டகாலம் ஆய்வுசெய்து இந்நூலைத் தயாரித்துள்ளதாகக் கூறும் நூலாசிரியர் இக்கோயில் விமானக் கட்டமைப்பில் ஆர்வம் காட்டவில்லை. மிக இன்றியமையாத இவ்வாய்வை நூலாசிரியர் செய்யாமல் விட்டமைக்குக் கோயிற் கட்டட அமைப்புகளில் அவருக்குள்ள தெளிவுக் குறைவே காரணமெனலாம்.

சில ஆய்வாளர்கள் தங்கள் பணியாகக் கொண்டுள்ள துறை சார்ந்த ஆய்வுகளிலேயே பல பிழைகளைச் செய்துள்ளனர். 'ஆடலும் பாடலும்' கட்டுரையாசிரியர்களுள் ஒருவர் கல்வெட்டாய்வாளர். அவர்தம் கட்டுரையில் ஆடல் பற்றிய தரவுகளைக் கல்வெட்டுகளிலிருந்து தொகுத்துத் தந்துள்ளார். பல தரவுகளுக்கு அடிக்குறிப்புகள் இல்லையென்பதால் அவற்றைச் சரிபார்க்க முடியவில்லை. சரி பார்த்த அளவில் பல தரவுகள் பிழையாக உள்ளன. 'உத்தம சோழனின் காலத்துத் திருவிடைமருதூரில் தேசிக் கூத்தாட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது' என்று கட்டுரையாசிரியர் குறிப்பிடுகிறார். ஆனால் கல்வெட்டு 'தேசிப்பாட்டு' என்கிறது. 'உடையார் திருவோலக்கமாய் இருக்கத் தேசிப் பாடும் காசியபன்' என்பது கல்வெட்டு.

'ஆதித்த கரிகாலனின் கல்வெட்டு திருவிடைமருதூரில் தைப்பூச நாளிலும் வைகாசித் திங்களிலும் நிருத்தம் ஆடவும், அதன் பின்னர் சாக்கைக்கூத்து ஏழங்கம் ஆடவும் ஏற்பாடு செய்ததைக் குறிக்கிறது' என்கிறது கட்டுரையின் மற்றொரு

தரவு. இதற்குத் தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி பத்தொன்பதில் கல்வெட்டெண் 718 அடிக்குறிப்பாகத் தரப் பட்டுள்ளது. தொகுதி பத்தொன்பதில் இருப்பவையே 417 கல்வெட்டுகள்தான். இத்தொகுதியில் திருவிடைமருதூரி-லிருந்து படியெடுக்கப்பட்ட இருபத்துமூன்று கல்வெட்டுகள் தரப்பட்டுள்ளன என்றாலும் கட்டுரையாசிரியர் குறிப்பிடும் செய்திகளடங்கிய கல்வெட்டு அவற்றுள் இல்லை. பிற தொகுதிகளையெல்லாம் பார்த்த பிறகுதான், மூன்றாம் தொகுதியில் 202ஆம் எண் கல்வெட்டாகக் கட்டுரையாசிரியர் குறிப்பிடும் திருவிடைமருதூர்க் கல்வெட்டைக் காண முடிந்தது. கல்வெட்டு கட்டுரையாசிரியர் சொல்வதுபோல் ஆதித்த கரிகாலரின் நான்காம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது தான். ஆனால் செய்திதான் மாறாக உள்ளது. கட்டுரை ஆசிரியர் குறிப்பிடும் நிருத்தம் என்ற சொல்லே கல்வெட்டில் இடம்பெறவில்லை. 'தைப்பூச நாளிலும் வைகாசித் திங்களிலும் நிருத்தம் ஆடவும் அதன்பின்னர் சாக்கைக் கூத்து ஏழங்கம் ஆடவும்' என்கிறது கட்டுரையாசிரியரின் தரவு. 'தைப்பூசத் திருநாளில் ஒரு கூத்தாடுவதாகவும் தீர்த்தம் ஆடின பிற்றை நாள் துடங்கி மூன்று கூத்தாடுவதாகவும் வைய்காசி திருவாதிரையின் பிற்றை நாள் துடங்கி மூன்று கூத்தாடுவதாகவும் ஆக இந்தக் கூத்து இங்கேழும் ஆடுவதாகவும்' என்கிறது கல்வெட்டு. கட்டுரையாசிரியர் இக்கூத்தைச் சாக்கைக் கூத்து என்கிறார். கல்வெட்டு ஆரியக்கூத்தென்கிறது.

பாடலைப் பற்றிப் பேசுமிடத்து இதே கட்டுரையின் ஆசிரியர்கள் கல்வெட்டுத் தரவுகளின் அடிப்படையில் 'உத்தம சோழன் காலம் முதலே திருப்பதியம் பாடுவோர் கோயிலில் பணியமர்த்தப்பட்டனர்' என்ற முடிவைத் தருகின்றனர். பல ஆண்டுகளுக்கு முன்னரே 'பெரியபுராண ஆராய்ச்சி' என்னும் தம் நூலில் டாக்டர் மா. இராச மாணிக்கனார் மிகத்தெளிவாகப் பல்லவர் காலத்திலேயே திருப்பதியம் பாடுவோர் கோயில்களில் பணியமர்த்தப்பட்ட கல்வெட்டுச் செய்தியை உரிய அடிக்குறிப்புடன் எழுதிச் சென்றுள்ளார். முதலாம் பராந்தகர் காலத்தில் வயலூர்த் திருக்கற்றளிப் பரமேசுவரர் கோயிலில் திருப்பதியம் பாட பெண்கள் தரப்பட்ட கல்வெட்டுச் செய்தியைத் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் உரிய அடிக்குறிப்புடன் தம் நூலொன்றில் குறிப்பிட்டுள்ளார். இருந்தபோதும் கட்டுரை-

யாசிரியர்கள் திருப்பதியம் பாடுவோர் கோயிலில் பணி யமர்த்தப்பட்ட காலத்தைப் பின்னோக்கி இழுத்துள்ளனர்.

அண்மையில் வெளிவந்த ஆய்வரங்கத் தொகுப்பு நூல் ஒன்றில் பதினொரு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் இரண்டு கட்டுரைகளில் பிழைகள் மலிந்துள்ளன. இவற்றை எழுதியவர்களுள் ஒருவர் நிறுவனம் சார்ந்த பேராசிரியர். மற்றவர் தனியர் ஆய்வர். இந்தத் தனியர் ஆய்வரின் ஆடற்கலைக் கட்டுரையின் அடிக்கருத்துகள் விரிவான விவாதத்திற்குரியவை. இக்கட்டுரையில் தரப்பட்டிருக்கும் தரவுகளுள் பல முற்றிலும் தவறானவை. தஞ்சாவூர் ராஜராஜிசுவரத்தைக் கட்டிய மாமன்னர் முதலாம் இராசராசரைப் பல்லவ வேந்தராகக் காட்டும் இக்கட்டுரையின் தவறான தகவல்களுள் சிலவேனும் இங்கு நோக்கத்தக்கன.

'Shiva, the Lord of dance, taught abinaya to one of his desciple 'Thandi', who taught this art to Bharatan'.

நாட்டிய சாத்திரம் படித்தவர்கள் இந்தக் கூற்று எத்தனைப் பிழையானது என்பதை உணரமுடியும்.

'In Chidambaram Nataraja temple and Kumbakonam Sarangapani temple dance figures of women are carved or dance figures of both men and women are carved'

இந்தக் கருத்துக் குறிப்பின் நிச்சயமற்ற தன்மை, ஆய்வாளர் இந்த இரண்டு களங்களுக்குமே சென்றதில்லை என்பதை நிறுவுதல் காண்க.

'Not only temple but also historical monuments, literary and epigraphical references and descriptions prove the fact that Bharatanatyam was the dance of Tamils'.

உண்மையின் நிழற்கூடப் படாத இந்த ஆய்வு முடிவிற்கு யாரை நோவது!

'Most of the temples welcomes its devotees with the Dwarapalika posture carved on its walls and other postures like Swastika'.

கட்டுரையாளரிடம்தான் இதற்குப் பொருள் கேட்க வேண்டும்.

'One of the great patrons of this art (dance) during the period (7th and 8th Century) was Narasimha Varman, Parakesari Varman and Pallave Cholan were the people who built the dancing hall at Chidambaram with golden tiles'.

'The Pallava king Rajaraja built the great Brahadeeswara temple at Tanjore in 1003-1007 A.D'.

கட்டுரையாளரின் இந்தத் தரவுகள் அவர்தம் வரலாற்றறிவிற்கு விளக்கமாக அமைந்துள்ளன. ஆடல் பற்றிய இந்த ஆய்வுக்கட்டுரையில் சரியான தரவுகளைவிடப் பிழையான தரவுகளே எண்ணிக்கையில் அதிகமாயுள்ளன.

நிறுவனம் சார்ந்த பேராசிரியர் தம் கட்டுரையில் கட்டடக் கட்டுமானம் தொடர்பான ஒரு கருத்தை மூன்று இடங்களில் மூன்று விதமாக, ஆனால் அனைத்துமே பிழையாக அமையுமாறு சொல்லியிருக்கிறார்.

'இக்கோயில் விதானத்தின் அடித்தளத்தில் (இறையகத்தின் மேலாக) காணக்கூடிய தாண்டவச் சிற்பங்களும் உண்ணாழிகையில் காணப்படும் நடனக் காட்சிகளும் இக்கோயிலில் இப் பேரரசன் காலத்தில் நாட்டியக்கலை பெற்றிருந்த முதன்மை நிலையினை விளக்குவனவாக உள்ளன'

இதையே மற்றொரு விதமாகவும் ஆசிரியர் கூறுகிறார்.

'பெரிய கோயிலின் கருவறைக்கு மேலான விமான அடுக்கின் முதல் தளமாகிய ஆதி தளத்தின் திருச்சுற்றில் நடராசரே ஆடுவதாக அமைந்திருக்கக்கூடிய இத் தாண்டவச் சிற்பங்கள்'

இதே கருத்தை இன்னொரு விதமாகக் கூறும்போது, 'தாண்டவச் சிற்பங்கள் அனைத்தும் ஆதிதளத்தின் உண்ணாழிகையில் இடம்பெற்றுள்ளன' என்கிறார். இந்த மூன்று கூற்றுகளுமே கட்டுரையாசிரியர்க்குக் கோயிற் கட்டடக்கலையிலுள்ள தெளிவின்மையைச் சுட்டுகின்றன. ஆதிதளம், முதல்தளம், விமானம், விதானம், உண்ணாழிகை போன்ற கலைச்சொற்கள் பொருள் தெளிவின்றிக் கையாளப் பட்டிருப்பதை இக்கட்டுரை படிக்கும் கட்டடக்கலை பார்வையுடைய எவரும் எளிதில் அறிவர்.

இதுபோலவே ஆடற்கலைச் சொற்களையும் பொருள் விளங்காமல் தவறாக இவர் பயன்படுத்தியிருப்பதைக் கட்டுரையின் பல இடங்களில் பார்க்க முடிகிறது.

'முழங்கை அளவில் இரு கரங்களும் சற்றே நொடிக்கப் பெற்று இரு கரங்களும் இரு தொடைகளின் மேல் இருப்புக் கொண்டு 'கடி' என்ற எழிற்கையாக உள்ளது'.

'கடி' (Gati) என்றால் இடுப்பு. கடி அஸ்தம், கடி சூத்திரம் என்னும் சொற்கள் காண்க. கட்டுரையாசிரியரே இரு கைகளும் தொடைகளின்மேல் இருப்பு கொண்டுள்ளதாகக் கூறுகிறார். பிறகெப்படி அவை 'கடி' எனும் எழிற்கையாகும். இடுப்பில் இருந்தால்தானே அது கடி அஸ்தம்!

2. முறையான ஆய்வு அணுகுமுறைகளைப் பின்பற்றாமை

கோயிற்கலை ஆய்வாளர்களுள் பெரும்பான்மையோர் முறையான ஆய்வு அணுகுமுறைகளைக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. இவர்களுடைய கட்டுரைகளிலும் நூல்களிலும் காணப்படும் பல்வேறுவிதமான சிற்ப இட மாற்றங்களும் வண்ணனை வேறுபாடுகளும், குறிப்பெடுப் பதிலும் அவற்றைச் சரிபார்ப்பதிலும் இவர்களுக்குள்ள அக்கறைக் குறைவையே காட்டுவதாகக் கொள்ள வேண்டியுள்ளது.

திருவதிகை வீரட்டானம் நூலாசிரியர், இக்கோயிலில் உள்ள பிச்சையுகக்கும் பெருமாள் சிற்பத்தின் அருகில் மூன்று ரிஷிபத்தினியர் சிற்பங்கள் ஆடை நெகிழக் கைகளில் கரண்டிகளுடன் காட்சியளிப்பதாகக் கூறுகிறார். ஆனால் கோயிலில் ரிஷிபத்தினியர் சிற்பங்களைக் காணமுடியவில்லை. மாறாகக் கிருஷ்ணனும் கோபிகையருமே உள்ளனர்.

மலையடிப்பட்டிக் குடைவரைகளைப் பற்றி எழுதியிருக்கும் பேராசிரியர் அக்கோயிலின் முகமண்டபத் தென்சுவரிலிருக்கும் பெண் ஓவியத்தைக் கருடன் என்று குறிப்பிட்டிருக்கிறார். அதே கோயிலில் உள்ள சிற்பங்களை வண்ணிக்கும் மற்றொரு நூலாசிரியர், 'சிற்பங்களின் உருவ அமைப்பில் பல்லவர் பாணி பளிச்சிடுகின்றன. துவார பாலகர்கள்மீது பாம்புகளும் வலக்கரங்களில் தாமரை மலர்களும் காணப்படுகின்றன. இவை பாண்டி நாட்டுக் கலை வேறுபாட்டைக் காட்டுவதாக உள்ளன' என்று கூறுகிறார்.

இந்த வரிகளின் வழி பாம்பும் தாமரையும் வாயிற்கோட்டச் சிற்பங்கள் கொள்வது பாண்டிநாட்டுக் கலைமுறையென்ற முடிவையும், பளிச்சிடும் பல்லவர் பாணியிலிருந்து பாண்டியர் பாணியைப் பிரித்தறிய இந்த இரண்டும் வழிகாட்டல்கள் என்ற தெளிவையும் நூலாசிரியர் தருகிறார். ஆனால் இம்முடிவும் தெளிவும் சரியானவையல்ல. பல்லவர் பகுதி வாயிற்கோட்டச் சிற்பங்கள் சில இதுபோல் பாம்பும் தாமரையும் கொண்டு விளங்குகின்றன.

இதே கோயிலில் கருவறையின் கிழக்குச் சுவரில் காணப்படும் ஓவியக் கருடனைக் குடைவரைகள் பற்றிய தம் ஆய்வு நூலொன்றில் அரக்கனாய் அடையாளம் காட்டும் நூலாசிரியர், அவ்வரக்கன் வீடணனே என்று முடிவும் கூறியிருக்கிறார். இத் தனியர் ஆய்வர் குன்றக்குடி முதல் குடைவரையின் கருவறை வாயிலருகே இல்லாத வாயிற் காப்போரை இருப்பதாகக் கூறி அவர்களுக்கு வண்ணனை விளக்கங்கள் வேறு தந்துள்ளார்.

சூரக்குடிக்கோயிலின் நூலாசிரியர், 'தேவ கோட்டங்-களின் கீழுள்ள தாங்குதளக் கபோதத்தில் கொடுங்கையமைப்பும் மேல் மூலைகளில் யானை முகமும் காட்டப்பட்டிருப்பதாகக்' குறிப்பிடுகிறார். கோயிலில் இரண்டுமே இல்லை. மாறாகக் கபோதத்தின் மேல் மூலைகளில் மகர முகங்கள் காட்டப் பட்டுள்ளன.

திருநாங்கூர் என்னும் நூலின் ஆசிரியர், நின்ற நிலையில் கோயிலில் இருக்கும் சில திருமேனிகளைத் தம் நூலில் அமரவைத்திருக்கிறார்; அமர்ந்திருக்கும் சில திருமேனி களை நிற்கவைத்திருக்கிறார். குடமாடும் கூத்தரின் கருவறையில் கூத்தரின் கீழே காணப்படுவதாக இவர் கூறும் குடத்தைக் கோயிலில் பார்க்கமுடியவில்லை. புருடோத்தமர் கோயில் கருவறையில் ஆண்டாள் சிற்பம் இருப்பதாகக் கூறுகிறார். ஆனால் அப்படியொரு சிற்பம் கருவறையில் இல்லை. மதங்கீசுவரர் கோயிலில் தட்சிணாமூர்த்தி சிற்பத்தின் அருகே சனகாதி முனிவர்கள் இருப்பதாக எழுதியுள்ளார். ஆனால் முனிவர்களைக் காணமுடியவில்லை. இந்நூலில் இறைத் திருமேனிகள் நிற்கும் அல்லது அமர்ந்திருக்கும் தள அமைப்பு, திருமேனிகளின் கைகள் காட்டும் முத்திரைகள், கொண்-டிருக்கும் கருவிகள், திருமேனிகளின் தலைக்கோலங்கள் என்று பல நிலைகளில் தவறான தகவல்கள் தரப்பட்டுள்ளன. இதே

போன்றதொரு குழப்பமான நிலை திருவதிகை வீரட்டானம் நூலிலும் காணப்படுகிறது.

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி வெளியான 'தஞ்சாவூர்' என்னும் நூலில் ராஜராஜீசுவரம் திருக்கோயிலில் காணப்படும் தளிச்சேரிக் கல்வெட்டைப் பற்றி ஒரு பத்தி எழுதப்பட்டுள்ளது. இந்தப் பத்தியின் வரிகள் பதினெட்டு. இப்பத்தியில் சொல்லப்பட்டிருக்கும் செய்திகளில் உள்ள பிழைகள் பதினான்கு. தளிச்சேரிக் கல்வெட்டில் 'அனைத்துப் பணியாளர்களின் ஊரும் பெயரும் பதிவு செய்யப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்' என்று கூறும் இந்நூலாசிரியரின் ஆய்வுமுடிவு முற்றிலும் தவறானதாகும்.

ஆய்வு செய்கையில் சரியாகக் குறிப்புகள் எடுக்காமையும் எடுத்த குறிப்புகளை மீண்டும் சரி பார்க்காமையுமே இத்தகு பிழைகளுக்கெல்லாம் காரணங்கள். கூடுதல் கவனமும் முறையான அணுகுமுறையும் இத்தகு பிழைகளை முற்றிலுமாய்த் தவிர்த்துவிட முடியும். எந்த ஒரு பொருளை ஆய்வுக்கு உட்படுத்தும்போதும் அப்பொருள் பற்றி அவ்வப்போது அறியப்படும் தரவுகளைத் தவறாமல் ஏட்டில் குறித்துவருதல் இன்றியமையாதது. கோயிலாய்வு பலதுறைகள் சார்ந்ததாக இருப்பதால் அனைத்தையும் நினைவில் இருத்திக் கொள்வது இயலாததாகும். அதனால் கோபுரம், திருச்சுற்று, சுற்றுத் திருமுன்கள், மையக்கோயில் எனப் பகுத்துக்கொண்டு, அவ்வப்பகுதிகளில் உரிய தரவுகளைக் குறித்துக்கொள்ளல் நன்றாகும். முதலில் கட்டடம் பிறகு அவ்வப்பகுதிகளிலுள்ள சிற்பங்கள், சுதை யுருவங்கள், வார்ப்பு மேனிகள் என்று குறிப்பெடுக்கும் முறைமையை அமைத்துக்கொள்ளலாம். குறிப்பெடுத்தல் முடிந்தபிறகு அவற்றைக் கோயில் வளாகத்திலேயே ஒருமுறை படித்து, ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வது இன்றியமையாதது. அப்போதுதான் தவறுகளை உடனுக்குடன் சரிசெய்து கொள்வது இயலுவதாகும். ஆய்வுக்குட்படுத்திய பகுதிகள் அல்லது பொருட்களைப் பற்றிய தரவுகளைத் தொகுத்து ஆய்வு செய்த நாளன்றே கட்டுரையின் முன்வடிவொன்றை உருவாக்கிக்கொள்ளலாம். பார்த்தவை நினைவில் பசுமையாக இருக்குமானால் பெருங்குழப்பங்களுக்கு இடமிருக்காது. உடன் எழுதமுடியாது, பின்னாட்களில் கட்டுரைகளை உருவாக்குபவர்கள், ஐயப்பாடுகள் தோன்றின் ஆய்வு செய்த

இடத்திற்கு மீண்டும் சென்று சரிபார்த்துக்கொண்டு எழுதுவது நல்லது. இது தவறுகளைத் தவிர்க்கும்.

3. பிறர் கருத்துக்களை ஆராயாமல் அப்படியே எடுத்துக் கொள்வது

பிறர் கருத்துக்களை ஆராயாமல் அப்படியே எடுத்துக் கொண்டுள்ள போக்கைப் பல கோயிற்கலை ஆய்வுகளில் காணமுடிகிறது. இப்படிச் செய்யும் சிலர் அடிக்குறிப்பில் அக்கருத்துக்குரியவர்களின் பெயரைத் தந்துவிடுகிறார்கள். வேறு சிலரோ பிறர் கருத்தைத் தம் கருத்தே போல் தோன்றும்படி நூலில் அல்லது கட்டுரையில் சேர்த்துக் கொள்கிறார்கள். இந்த இரண்டு முறைகளுமே ஆய்வுகளின் உண்மைத்தன்மைக்கு ஊறாகின்றன.

'கோயிலும் குடியிருப்பும்' என்னும் கட்டுரையின் ஆசிரியர்கள் மறைந்த தொல்லியல் மேதை கூ.ரா. சீனிவாசனின் கருத்தொன்றைத் தங்கள் கருத்தே போல் கட்டுரையில் இடம்பெறச் செய்துள்ளனர். 'ஒருசில கோயில் அமைப்பில் நான்கு அங்கங்கள் மட்டுமே இடம்பெறுவதாய் உள்ளது. எடுத்துக்காட்டாக மாமல்லபுரத்து ஐந்து ரதக் கோயில்களில் திரௌபதி ரதம் எனப்படும் கோயிலைக் கூறலாம்!'

இக்கருத்தைக் கூ.ரா. சீனிவாசனின் தென்னிந்தியக் கோயில்கள் நூலில் பார்க்கலாம். 'The small Dravupadi Ratha illustrates.... a simple vimana.. with only four of the usual six angas of the vimana'. தம்முடைய பின்னாளைய நூல் ஒன்றில் கூ.ரா. சீனிவாசன் தம்முடைய இந்தக் கருத்துக்கு மாறுபட்ட செய்தியொன்றைத் தந்துள்ளார். நான்கு அங்கங்களே உள்ளதாகக் கூறும் கொற்றவைக் கோயிலில் பிரஸ்தரமும் இருப்பதாக அவர் எழுதியிருக்கும் இந்நூல், 'கோயிலும் குடியிருப்பும்' கட்டுரையாசிரியர்களின் கண்களில் படவில்லை போலும். இக்கொற்றவைக் கோயிலை அண்மையில் முழுமையான ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட டாக்டர் மா. இராச மாணிக்கனார் வரலாற்றாய்வு மைய ஆய்வர்கள் இக்கோயில் ஆறங்கக் கோயிலே என்பதை நிறுவியுள்ளனர். இந்த முயற்சியில் திரு. கூ.ரா. சீனிவாசனின் மற்றொரு கருத்தும் தவறாக இருந்ததை அறியமுடிந்தது. கொற்றவைக் கோயிலின் தூபி பற்றிப் பேசும்போது,

"Its stupi was carved out separately, sitting now on the platform, infront of the vimana, still not detached from the rock" என்கிறார். கள ஆய்வில் இது சரியான கூற்றாக இருக்க முடியாதென உணர்ந்தமையால் இக்கோயில் பற்றிய பழைய நூல்களையெல்லாம் தேடிப்படித்தபோது திரு. லாங்ஹர்ஸ்ட்டின் 'Pallava Architecture' நூலில் சான்று கிடைத்தது. 'The stone vase-shaped finial.. now stands at the foot of the steps leading up to the platform'. தேடினால் கிடைக்காதது இல்லை.

'கோயிலும் குடியிருப்பும்' கட்டுரையை எழுதியவர்கள் மண்டகப்பட்டிலுள்ள மகேந்திரவர்மரின் கல்வெட்டு பற்றிக் கூறுமிடத்து 'இக்குடைவரையை எடுத்த முதலாம் மகேந்திரவர்மன் நான்முகன், திருமால், சிவபெருமான் ஆகிய முப்பெரும் தெய்வங்களுக்கும் கல் இன்றி, மண் இன்றி, உலோகம் இன்றி, சுதையின்றி விசித்திர சித்தனாகிய தான் தோற்றுவித்ததாகக் கூறிக்கொள்கிறான்' என்கின்றனர். இந்த வரிகளுக்கு மேலேயே, 'ஏதத் அனிஷ்டகம், அத்ருமம், அலோகம், அசுதம் விசித்திர சித்தேந நிர்மாபிதம் நிருபேண பிரம்ம ஈசுவர விஷ்ணு லக்ஷ்திதாயதனம்' என்று மகேந்திரரின் வடமொழிக் கல்வெட்டையும் தந்துள்ளனர். அனிஷ்டகம் என்றால் 'செங்கல் இல்லாமல்' என்றும் அத்ருமம் என்றால் 'மரம் இல்லாமல்' என்றும் பொருள். 'கல் இன்றி மண் இன்றி' என்ற மொழியாக்கங்கள் எங்கிருந்து வந்தன? மகேந்திரன் கல் இல்லாமல் வேறெதில் குடைவரையமைத்ததாகக் கட்டுரையாசிரியர்கள் கருதுகின்றனர்?

திருவதிகை வீரட்டானம் நூலாசிரியர் இக்கல்வெட்டு மாமண்டூரில் இருப்பதாகக் கூறுகிறார். தமிழ்நாட்டு வரலாற்றுக் குழுவின் மேற்பார்வையில் எழுதப்பட்ட பல்லவர் கலை வரலாறு இக்கல்வெட்டு மலையடிப்பட்டி யிலிருப்பதாகக் கூறுகிறது.

முடிவுரை

இவையெல்லாவற்றையும் ஆழ்ந்து நோக்கும்போது ஒன்று தெளிவாகிறது. தமிழ்நாட்டில் கோயிற்கலை ஆய்வுகள் பெருகியுள்ளன. ஆனால் அவற்றுள் பெரும்பான்மையான-வற்றின் தரம் மிகத் தாழ்ந்துள்ளது. இதற்கு அடிப்படைக் காரணங்கள் இரண்டு. ஆய்வாளர்களுக்குள்ள பொறுப்புணர்ச்சிக் குறைவு முதற் காரணம். பல்கலைக் கழகங்கள், ஆய்வு

நிறுவனங்கள், கல்லூரிகள் ஆகியன கல்வெட்டிலும் தொல்லியலிலும் காட்டும் அக்கறையைக் கோயிற்கலைகளைப் பயிற்றுவிப்பதில் காட்டாமை இரண்டாம் காரணம். கோயிற் கலை ஆய்வு பல்துறை சார்ந்த ஆய்வென்பதால், அத்துறைகள் அனைத்திலும் தேவையான பயிற்சி பெறுதல் இதில் ஈடுபடும் ஆய்வாளர்க்கு இன்றியமையாத தகுதியாகிறது. முன்னோடிகள் சிலரின் நூல்களைப் படிப்பது மட்டுமே கோயிற்கலை ஆய்வுக்கு ஒருவரைத் தயார்செய்து விடமுடியாது. படிப்பு ஒரு பங்கென்றால் கள ஆய்வு பலபங்கு இருத்தல் அவசியம். கோயிற்கலையின் பல்வேறு துறைகளுள் ஒன்றிரண்டில் பயிற்சி பெறுபவர்கள் அவ்வத்துறைகள் சார்ந்து எழுதுவதுடன் நிறுத்திக்கொள்ள வேண்டும். மலையடிப்பட்டிக் குடைவரை களைப் பற்றி எழுதியுள்ள பேராசிரியர் அங்குள்ள தமிழ் எழுத்துக் கல்வெட்டொன்றை வட்டெழுத்துக் கல்வெட்டென்று அறிவித்திருப்பது, தெரியாத துறையில் நுழைவார்க்கு எச்சரிக்கையாக அமையவல்லது. முடிவாகத் தமிழ்நாட்டில் கோயிற்கலை ஆய்வுகள் இன்றைய நிலையில் எண்ணி மகிழும்படியான தகுதியில் இல்லை என்ற துன்பமான உண்மையைத்தான் பகிர்ந்துகொள்ள வேண்டியுள்ளது.

பயன்பட்ட நூல்கள், இதழ்கள்

1. இராசமாணிக்கம், தி., தமிழகக் குடைவரைக் கோயில்கள், கழக வெளியீடு, சென்னை, 1984.
2. இராசமாணிக்கம், தி., தென்னகக் குடைவரைக் கோயில்கள், கழக வெளியீடு, சென்னை, 1989.
3. இராசமாணிக்கனார், மா., பெரியபுராண ஆராய்ச்சி, பாரி நிலையம், சென்னை, 1978.
4. காசிநாதன், நடன., தமிழர் நாகரிகம் - முதல் தொகுதி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, சென்னை, 1994.
5. காசிநாதன், நடன., முத்தரையர், சேகர் பதிப்பகம், சென்னை, 1994.
6. சுந்தரமூர்த்தி, மா., சூரக்குடிக்கோயில், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
7. நெடுஞ்செழியன், கா., திருநாங்கூர், அருண் பதிப்பகம், ஜெயங்கொண்ட சோழபுரம்.

8. பல்லவர் கலை வரலாறு, தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, கைப்பிரதி.

9. பாலசுப்பிரமணியம், எஸ்.ஆர்., முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1966.

10. பாலசுப்ரமணியன், குடவாயில், தஞ்சாவூர், திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, 1995.

11. மார்க்சிய காந்தி, நா., திருவதிகை வீரட்டானம், அமுதன் பதிப்பகம், சென்னை.

12. வசந்தி, சீ., 'கரக்கோயில்', மங்கை, சனவரி, 1996.

13. வரலாறு, அரையாண்டு ஆய்விதழ், தொகுதிகள் 3,4,5, டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மைய வெளியீடு, திருச்சிராப்பள்ளி.

14. Bhagavathi, K., **Art and Architecture**, International Institute of Tamil Studies, Madras, 1994.

15. Kalidoss, Raju., **The Malaiyadipatti Cave Temples**, South Asian Studies, Vol.IV, 1988.

16. Longhurst, A.H., **Pallava Architecture,** Cosmo Publication, 1982.

17. Meister, W. Michael., **Encyclopaedia of Indian Temple Architecture,** American Institute of Indian Studies, 1983.

18. S.I.I. Vol.3, Part III, Ins.202.

19. S.I.I. Vol.23, Ins.233.

20. Sivaramamurti, C., **Nataraja in Art, Thought and Literature,** Publication Division, Ministry of Information and Broadcasting, Government of India, 1994.

21. Srinivasan , K.R., **Temple of South India**, National Book Trust, India, 1985.

சிறுதெய்வ வழிபாட்டில் கலைக் கூறுகள்

முனைவர் அ. அறிவுநம்பி

தமிழருடைய வழிபாட்டுச் செயல்பாடுகள் பொதுவாகவே கலைமயமானவை. கூத்துக்கலை வல்லானாக இறையைப் பார்க்கும் மனநிலை உட்படப் பல சான்றுகளை எடுத்துக் கூறலாம். நாட்டுப்புறங்களில் காணப்பெறும் வழிபாடுகள் கலைவடிவுகளிலே வெளிப்பட்டு நிற்கின்றன. கும்மி, குரவை, கோலாட்டம், தேவராட்டம், தெருக்கூத்து, இன்னபிற இன்றைக்குக் கலைகள் என்பதாகவே கருதப்பெறுகின்றன. இவை யாவும் நாட்டுப்புற வழிபாட்டு முறைகளில் ஒருசில. வழிபாடு, கலை இரண்டையும் பிரித்தறிய முடியாதவண்ணம் இவற்றிடையே அணுக்கம் மிகுதி. எனினும் இரண்டும் வெவ்வேறானவை. தைப்பொங்கல் நன்னாளில் வைக்கப்பெறும் பொங்கலும் உணவு விடுதிகளில் அன்றாடம் வைக்கப்பெறும் பொங்கலும் சுவையைப் பொறுத்தவரை ஒன்றுதான். ஆனால் முன்னது வழிபாடு. பின்னது சமையல் கலை.

வழிபாடும் கலையும்

பண்டைக்காலத்தில் கலைகள் தெய்வவழிபாட்டிலிருந்தே உருவாகின என்பது பொதுக்கருத்து. "தமிழ் நாடகம்

முதலில் உண்டானது மதவிடயமாகவே என்பது துணியப்படும். அது கடவுளர் திருவிழாக்காலங்களில் ஆடல், பாடல் களிரண்டையும் சேர நிகழ்த்துவதனின்றும் உண்டாயிற்று"[1] என்ற கூற்று 'நாடகவியல்' ஆசிரியரான வி.கோ. சூரிய நாராயண சாத்திரியாருடையது. கலைச்சிந்தனை ஏதுமின்றி வழிபாட்டெண்ணம் மட்டுமே முன்னிறுத்தப் பெற்றபோது அவை வழிபாடுகள் எனப்பெற்றன. காலப்போக்கில் வழிபாட்டுச் சிந்தனை சிறிதுமின்றிக் கலைக்கூறுகள் மட்டுமே முதன்மைப்படுத்தப்பெற்றபோது அவை கலைகளாயின. புனிதநீர் கொண்டதாகச் செம்பை உருவாக்கி, விரதமிருந்து, திருக்கோவிலைச் சுற்றி எடுத்துவரும்போது அது 'சக்திக் கரகம்' எனப்பெறுகிறது. அக்கரகம் கருவறை வரை செல்லும் தன்மையுடையது. சமயங்களில் அக்கரகத்தின் மேற்புறம் மஞ்சள் தூள் கொண்டு அம்மன் முகமாகவும் அமைக்கப் பெறுவதுண்டு. கோவிலுக்குள் அல்லாமல் பொதுவிடங்களில் செம்பில் மணல் நிரப்பப்பெற்று, பின்னணி இசைக்கருவிகளின் முழக்கத்திற்கேற்பத் தலையிலுள்ள கரகம் கீழே விழாமல் ஓடியாடும் ஆட்டம் கரகாட்டம் எனப்பெறும். முன்னது வழிபாடு. இரண்டாவது கலை. கலை என்பதற்குக் கீழ்க் கண்டாங்கு வரையறை கொள்ளவியலும். 'ஒருவரோ பலரோ ஒரு நிகழ்வினைப் பார்வையாளர்கள் மத்தியில் நடத்திக் காட்டுவது கலையாகும்'

தமிழகத்தைப் போன்றே உலகம் முழுவதும் வழிபாட்டினடிப்படையிலேயே கலைகள் உருவாகியுள்ளன. 'கிரேக்கத் திறந்தவெளி அரங்குகளில், பார்க்கஸ், டையானிசியஸ், அப்போலோ போன்ற தெய்வவழிபாடுகளின் போது ஆடப்பெற்ற ஆடல்களிலிருந்தே நாடகக்கலை தோன்றி வளர்ந்தது என்பர். சிரியாவில் மக்கள் போற்றி வழிபட்டுவந்த நீர்க்கடவுளாம் தம்முஸ்; வேளாண்மைக் கடவுளாம் அடானிஸ் ஆகியோரைப் பற்றிப் பாடியாடிய கூத்துக்களினின்றே நாடகம் தோன்றியது. சப்பானிய நாட்டில் எரிமலைக் கொந்தளிப்பு நேராவண்ணம் மக்கள் ஆடிவந்த சம்போசா என்ற நடனத்திலிருந்தே நாடகம் தோன்றியது. எகிப்தில் ஆசைரிஸ் என்ற தெய்வத்தை வழிபட்டு ஆடிய நடனங்களில் இருந்து நாடகம் தோன்றியது'[2] என்ற குறிப்பு

---

1. வி.கோ. சூரியநாராயண சாத்திரியார், நாடகவியல் (முகவுரை), ப.13.
2. சக்திபெருமாள், அரங்கக்கலை, ப.6.

கருதத்தக்கது. தமிழகத்தில் காணப்பெறும் வழிபாடுகளிலும் கலைப்பிறப்புக்கான களங்கள் அமைந்திருந்தன. காலப் போக்கில் இரண்டும் தனித்தனியாகக் கருதப்பெற்றன. எனினும் வழிபாட்டில் குறிப்பாகச் சிறுதெய்வ வழிபாட்டில் கலைக்கூறுகளின் பங்களிப்பு மிகுதி. அவற்றில் ஒன்றிரண்டை நினைவுகூர்தலே இக்கட்டுரையின் நோக்கம்.

ஒன்றுக்குள் ஒன்று

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் வழிபாடும், கலையும் அவ்வப்போது ஒன்றிலொன்றை இயைபாக்கிக் கொள்ளும். தஞ்சை, தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கலை விழாவின் ஒருபகுதியாகப் புரிசை கண்ணப்பத் தம்பிரானின் 'திரௌபதை வஸ்திராபரணம்' தெருக்கூத்து கோயில் முகப்பில், திருவிழா நாளில், இறையுருவின் முன்னிலையில் வழிபாடாக இரவு முழுவதும் நடத்தப்பெறும். இத்தெருக் கூத்து, பல்கலைக் கழக அரங்கில் பார்வையாளர்களின் முன்னிலையில், கலை நிகழ்வாக 2 மணி நேரம் நிகழ்ந்தது. கதையோட்டத்தின் இடையில், திரௌபதையின் துகில் உரியப்பெறும்முன், தட்டொன்றில் கர்ப்பூரமேற்றி, "அம்மா தாயே! பாஞ்சாலி! கதைக்காகத்தான் இப்படிப் பண்றோம்! எங்களைப் பொறுத்து வாழவைக்கணும் அம்மா!" என்று குழுவினாசான் உரக்கக்கூவி வழிபாடு நடத்தியபின்பு காட்சிகள் தொடர்ந்தன. கலைநிகழ்வில் வழிபாடு இணைந்தது. மறு தலையாகச் சிற்றூர்களில் கோழி, மாடுகன்றுகள் தொடர்ச்சியாக இறப்பின் ஊரில் சனீசுவரன் புகுந்து கொள்ளை கொள்கிறான் என்பதாகக் கருதி மாரியம்மன் போன்ற ஆலயமுகப்பில் அமையும் 'சனீஸ்வரச் சம்காரக் கூத்து' நிகழ்வைக் கருதவேண்டும். முழுக்கமுழுக்க வழிபாட்டிற்காகவே இக்கூத்து நிகழும். அம்மனை, இறையை ஏத்தும் நிகழ்வுகளுக்கிடையே தொப்பைக்கூத்தாடியும், கட்டியங்காரனும் வந்து அன்றைய அரசியல், ஊர்ச்செய்தி, நகைச்சுவைக் கதைகளை மொழிகுவர். இவை கலைக்கூறுகள். இவ்வாறு வழிபாட்டில் கலையும், கலையில் வழிபாடும் இடையே செருகப் பெறுவதுண்டு.

சிறுதெய்வ வழிபாட்டில் கலைக்கூறுகள்

வழிபாட்டில், வழிபாட்டுணர்வற்ற கலைக்கூறுகள் இடம்பெறுவதைக் கள ஆய்வுகளில் காணமுடிந்தது.

அவ்வாறான கலைக்கூறுகள் கீழ்க்கண்டாங்கு வகைப்படுத்தப் பெறுகின்றன.

1) வேண்டுதலின் அடிப்படையில்
2) குறியீட்டு நோக்கில்
3) போலச்செய்தல் நோக்கில்
4) கூடுதல் அழகு பற்றி

1. வேண்டுதல் நிலையில்

அங்காளம்மன் திருவிழாக்களில் குறிக்கத்தக்கது ‘மயானக் கொள்ளை’. ‘மயானக் கொள்ளை’ திருவிழா நிகழுமிடங்களில் மரக்கட்டைகளால் ஆன தெருக்கூத்தாடைகளை அணிந்தபடிப் பலர் உலவுவர். அவர்கள் நேர்த்திக் கடனாக இக்கோலம் புனைந்திருப்பர். நோய், பிறதுன்பம் பெற்றவர்கள் அவ்வாண்டுத் திருவிழாவின்போது அங்காளம்மனின் மெய்க்காவலனான பாவாடைராயனாக வேடமிட்டுக் கொள்ளுவதாக வேண்டிக்கொள்வர். வேண்டுதலை நிறைவேற்றுமுகத்தான் கூத்துக் கலைஞர்களிடமிருந்து பாவாடைராயன் தோற்றத்திற்கான ஆடையணிகளை வாங்கியணிந்து கொள்வர். வேண்டுதல் வழிபாட்டின் ஒருபகுதி என்றாலும், இவர்கள் கையில் கத்தியைச் சுழற்றியவண்ணம் வருதல் பார்வையாளர்களை ஈர்க்கச் செய்யும் கலை நிகழ்வாகவே அமைகிறது. இதனை வலுவாக்க மயானக் கொள்ளையின் மற்றொரு கூறு உடன் வைத்து எண்ணத் தகுவது. ஆலயத்திலிருந்து மயானம் நோக்கிக் கூட்டம் பகல் நேரத்தில் புறப்பட்டுச் செல்லும். மயானத்தில் வழிபாட்டு முறைகளை மேற்கொள்ளும். பூசாரியும் பிறரும், வழிபாட்டாளர்களுடன் செல்வர். இவர்களுடன் கூத்தின் ஆடைகளைப் புனைந்து காத்தவராயனும் பிறரும் பாடியும் ஆடியும் செல்வர். இவர்கள் வழிபாட்டு முறைமைகளை மேற்கொள்வதில்லை. ஆனால் வழிநெடுக இத்தகு கலை நிகழ்வுகளை நிகழ்த்திச் செல்வர். கோவில் திருவிழா உலாவின்போது நிகழும் பொம்மலாட்டம், புலி வேடம் போன்றது இது. ஆனால் வழிபாட்டினிடையே பார்வையாளர்கள் மத்தியில் ஒப்பனைக் கலையும் பிறவும் இணைந்த கலை நிகழ்வுகளாகவே இவை அமைகின்றன. வேண்டுதலை அடிப்படையாகக் கொண்டும் பிறவாறும், வழிபாட்டிற்கிடையே இத்தகைய கலைநிகழ்வுகளை மேற்கொள்ளுகின்றனர்.

2. குறியீட்டு நோக்கம்

சிற்றூர்களில் காமதகன விழா நிகழும். கூவாகம் போன்ற குறிக்கத்தகுந்த சிற்றூர்களில் அரவான் திருவிழா எனப்பெறும் அலிகள் விழா நிகழ்வுறும். இரண்டிலும் வழிபாட்டிற்கப்பால் காமனை எரிப்பதும், அரவானை எரிப்பதும் நிகழ்கின்றன. காமனுக்கு உருவு இல்லை என்பது தொன்மம். எனவே மனம்போன போக்கில் ஓர் உருவத்தை வைக்கோல், துணி, காகிதம் ஆகியவற்றின் உதவியால் உருவாக்குவர். இலாவணி பாடுதல் உட்பட யாவும் தொன்மக் கதையை அடியொற்றி நிகழும். மன்மதன் எரிப்பு மட்டும் அத்துடன் தொடர்ந்து நிகழ்வதில்லை. கடைசிநாளில் இறையுரு எதுவும் எழுந்தருளப் பண்ணப்பெறாத சூழலில் ஊர்நடுவில் மேற்குறித்த உருவம் வைக்கப்பெறும். இறையை-யேத்தும் பாடல்கள் இடம்பெறா. மாறாகக் களியாட்டம் மட்டுமே முதன்மைப்படுத்தப் பெறுவதுபோல் உருவம் கொளுத்தப்பெறும். காமன் எனக் கருதப்பெறும் பொம்மை குறியீடாக அமையக் கலைநிகழ்வு தொடரும். யாகம் நடத்தப் பெறும் இடத்தின் சாம்பல், துரியோதனனின் தொடை முறிப்புக்குப்பின் கூத்தில் இடம்பெறும் சாம்பல், பூக்குழி முடிந்ததும் அங்குள்ள சாம்பல் போல மன்மத எரிப்புச் சாம்பல் தொடப்பெறுவதும் இல்லை. நெற்றியில் ஏறுவது மில்லை. இந்நிகழ்ச்சியில் மட்டும் கோவிலைச் சார்ந்த பூசாரியோ பிறரோ இடம்பெறுவதில்லை. சிலர் மன மகிழ்ச்சிக்காக எரியூட்ட, பார்வையாளர்கள் கண்டு மகிழும் கலை நிகழ்வாகவே இது அமைகிறது. அரவான் திருவிழா விலும், மரத்தாலான அரவான் தலை பொருத்தப் பெற்ற பெரிய உருவம் சமைக்கப்பெறும். உருவினுள்ளே மரக்கட்டை, வைக்கோல் இவையே இடம்பெறும். அரவான் திருவீதி உலா வரும்போது 'கிலோ கணக்கில்' கர்ப்பூரம் எரிக்கப்பெற்று வழிபடுவர் பலவூர் அலிகள். கதைப்படி அரவான் பலியாக வேண்டும். உலாவின் முடிவில் அரவான் தலையைத் தனியே எடுத்துக் கோயிலுக்குக் கொண்டு சென்றுவிடுவர். அரவான் களபலியானான் என்பதன் குறியீடு இது. இதன்பிறகு எஞ்சிய உருவம் எரிக்கப்பெறும். தலை நீக்கப்பெறுவது வரை பூசாரி உடனிருப்பார். அலிகளின் தெய்வமான அரவான் வழிபடப்பெறுவார். உருவ பொம்மை பிரிக்கப்பெறுங்கால் பூசாரியும், அலிகளும் அருகிருப்பது இல்லை. கொளுத்தி விளையாடும் கலை தொடங்கும். இதில் குறிக்கத்தக்க செய்தி

என்னவெனில், ஒரு குறிப்பிட்ட சமயத்தார் மட்டும் என்றில்லாமல் எல்லாச் சமயத்தாரும் எரியூட்டுவர். கோவிலைச் சுற்றிவரும் அலிகள் திடீரெனக் குழுமி நின்று, தம் ஊர்ப்பெயர், சிறுவயதுப் பெயர் போன்ற சொந்தக் கதைகளை ஆடிப்பாடிக் கும்மியடிப்பர். அரவானைப் போற்றிய கும்மிகளாக இவை ஒருகாலத்தில் இருந்திருக்க வேண்டும். மாறாக இன்று வழிபாட்டின் இடையில் கலை நிகழ்வாக, மனமகிழ்ச்சியைக் காட்டும் குறியீடாக மட்டும் இவை நின்றுபோய்விட்டன.

3. போலச்செய்தல்

தொன்மக் கதைகளைத் திருவிழாவாக மேற்கொள்ளும்போது இறையும் பிறரும் 'விக்ரகங்கள்' எனப் பெறும் திருவுருவ அமைப்பில் திருவீதியுலா வருதல் நடைமுறை. சான்றாக, சுந்தரர் திருமணம் பற்றிய தொன்மம் திருவிழாவின் ஒருபகுதியாக நிகழுங்கால் சுந்தரர், பரவையார் போன்ற மானுடர்களும், ஆலவாயண்ணலாய ஆண்டவனும் உலோக உருவங்களாகத் திருவீதி வலம் வந்து, அரங்கத்தில் வைக்கப்பெறுவர். இவர்தம் திருவுருவுகள் மட்டுமே அதற்குரிய ஒப்பனைகளுடன் உலாவில் இடம்பெறும். அவர்களைப் போன்ற ஒப்பனை செய்துகொண்ட மனிதர்கள் இடம் பெறுவதில்லை. புதுவையில் நிகழ்வுறும் சூரசம்மாரத் திருவிழாவின்போது, முருகன் திருவுரு ஒருபுறமும், நேர் எதிரில் பெரிய, பயங்கர உருவத்துடனான சூரனின் பொம்மை மறுபுறமும் சப்பரங்களின் மேல்வைத்து உலாவாக்கப்பெறும். முருகன் தரப்பினராகப் பலரும் சூரன் தரப்பினராகப் பலரும் அமையத் 'தருக்கவாதம்' நிகழும். முழுவதும் பாடல் வடிவிலிருக்கும் இப்பகுதி முடிந்ததும் சம்கரித்தல் நிகழ்வு பாடப்பெறும். இங்கு, முருகன் தரப்பில் மட்டும் நாலைந்துபேர் முருகனாகவும், வீரபாகு போன்றோராகவும் வேடங்கொண்டு அமர்ந்து பாடுவர். முருக வேடதாரி ஆலயத்திலிருந்து 'வேல்' பெற்ற அருளாளர். ஆனால் சூரன் பகுதியில் இவ்வாறு வேடமிட்டோரோ, தனியாக அமர்ந்து பாடுவாரோ இல்லை. முருகனின் திரு விக்கிரகம் எழுந்தருளியுள்ள சூழலில் அங்கே வேடமிட்ட நிலையில் சிலர் வீற்றிருப்பது கருதத்தக்கது. கதை நிகழ்ச்சிகளைக் காட்சிகளாக நடத்திக் காட்டும் இப்போக்கில் கலையுணர்வே தலைதூக்கி நிற்கிறது. வேடம், காட்சிகளாக நடித்தல் போன்றவை குறிக்கத்தக்கன. ஏனைய இடங்களில் சூரன்

பொம்மை எரிக்கப்பெறும். இங்கு அந்நிகழ்வு கிடையாது. இதனையொட்டி அங்காளம்மன் வழிபாட்டின் ஒரு பகுதியாக வல்லாள மகராசனின் கதை நடத்திக் காட்டப்பெறும் நிகழ்வைச் சுட்டலாம். கதையின்படி அரசியின் வயிற்றைக் கிழித்து, அம்மன் தன் வாயில் இட்டுக் குடற் பகுதிகளைக் கிழிக்க வேண்டும். அம்மனாக மட்டும் வேடந்தாங்குதல் நிகழும். மணலில் உருவாக்கப்பெற்ற பெரிய உருவத்தின் வயிற்றுப்பகுதி சிதைவதாகக் காட்டி உள்ளிருந்து ஆட்டுக் குடலை வெளியே எடுப்பர். அதனை முறமொன்றில் வைத்தும் பல்லிடையே கடித்தும் 'நிகழ்ச்சிகளை' உருவாக்குவர். இவ்வாறமைபவை 'போலச்செய்யும்' உத்திகளில் அடங்கும்; ஆனால் வழிபாட்டின் ஒரு பகுதியாகவே அமையும். வேடப் புனைவு, காட்சிகளாக அமைதல், பார்வையாளர்கள் என்ற கூறுகளைக் கணக்கிடுங்கால் கலைக்கூறுகளாக இவற்றைக் கவனிக்க வேண்டியுள்ளது. திருவுருவுகள் எழுந்தருளப் பண்ணும்போது வழிபாடாகவும், காட்சியமைவுகளாக மனிதர் வேடமிடுங்கால் கலையாகவும் இவை நிகழ்கின்றன.

4. கூடுதல் அழகு

ஒரு காலத்தில் திருக்கோவிலைச் சுற்றித் திருவிழாவின் போது சதிராட்டம் நிகழ்ந்தது. வழிபாட்டின் ஒரு பகுதி அது. பிறகு கலைக்கூறுகளின் தாக்கம் மிகுதியாகித் திருமணவீடு, பல்சுவை நிகழ்ச்சி போன்றவற்றில் நடனம் இடம் பெறலாயிற்று. 'நாட்டியாஞ்சலி' வழிபாடாகவும், ஆண்டுவிழா நடனங்கள் கலையாகவும் அமைவதை நோக்குதல் பொருந்துவதாகும். ஆனால், ஒரேயிடத்தில் கூடுதல் சுவைக்காக மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இறைவனின் பேர் சொல்லிச் சிந்துப் பாடல் இசைக்க, தொலைவும் சுமையும் மறந்துபோகக் காவடி சுமந்து வழிபாடு நிகழ்த்தினர். காலப்-போக்கில் ஒரேமாதிரியான ஆடல் அலுத்தது. விளைவு: காவடி தோளிலிருந்து தலைக்கு ஏறும்; நெற்றிக்கு இறங்கும்; முதுகில் நெளியும்; இடுப்பில் சுழலும். கூடுதலாகத் தலையில் உள்ள காவடி கீழே விழாமல் நெற்றியால் பழத்தை நசுக்கல், கீழே கிடக்கும் உருபாய்த்தாளை எடுத்தல், கீழே விரிக்கப் பெற்றுள்ள சேலையை உடுத்தல், பிறகு நீக்கல் எனக் கலைக் கூறுகள் உட்புகுந்தன. திருக்கோயிலை நோக்கி நடப்பாருள் சிலர் இத்தகு கலை நிகழ்வுகளையும் நிகழ்த்திவருதல் கண்கூடு.

கரகம் தூக்கும்போது மங்கல ஒலி முழங்க நின்ற நிலை மாறி நையாண்டி மேளம் இசைக்கப்பெறுதலையும் உடன் காணலாம். வழிபாட்டுச் செயற்பாடுகளில் மெல்லமெல்லக் கலைக் கூறுகள் ஆட்சி செலுத்தி வருவதையே இவை சுட்டுகின்றன.

இவ்வாறு நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டில் கலைக் கூறுகள் மெல்லப் படர்ந்து வருகின்றன. முற்றிலுமாக வழிபாட்டிலிருந்து விலகிய நிலையில் கலையாட்டங்கள் நிகழ்வது மரபு. ஆயினும் ஆங்காங்கே ஒன்றையொன்று, தேவை கருதித் தழுவவேண்டியதாகிறது. வழிபாட்டு உணர்வைப் பின்தள்ளிய நிலையில் கலைநிகழ்வுகளைப் போலவே வழிபாட்டின் ஒருபகுதி இடம்பெறுவதையே இந்தக் குறிப்புகள் உணர்த்துகின்றன. குறிப்பாகச் சிறுதெய்வ வழிபாடு இத்தகு கலைக்கூறுகளுக்கு இடந்தருவதைக் கள ஆய்வுகள் எடுத்துரைக்கின்றன.

தமிழ் நாடக முன்னோடி காசி விசுவநாத முதலியார்

முனைவர் இரா . குமரவேலன்

தமிழில் முதன்முதலாகச் சமுதாயச் சீர்திருத்த நாடகத்தைப் படைத்து இத்துறையில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் சைதாபுரம் காசி விசுவநாத முதலியார் என்பவர் ஆவார். புராண இதிகாச பக்தி நாடகங்களையே கண்டுவந்த தமிழர்களிடையே புதுமையான சமுதாய நாடகங்களைப் படைத்து மேடையேற்றிப் புத்துணர்ச்சியை ஏற்படுத்தியவர் இவர். மக்களிடையே மிகுதியாக விளங்கிய ஒழுக்கக் கேடுகளைக் கண்டு மனம்நொந்த ஆசிரியர் இவற்றை வெளிப்படுத்துவதற்கும், ஆடவர், மகளிர், இளைஞர் முதலான அனைவரையும் திருத்தி நெறிப்படுத்துவதற்கும் ஒரு சிறந்த சாதனம் நாடகம் என்று அறிந்து, நாடகப் படைப்பில் ஈடுபட்டார்.

காசிவிசுவநாத முதலியார் படைத்த நாடகங்கள் மூன்று. அவை: டம்பாச்சாரி விலாசம் (1857க்கு முற்பட்டது), தாசில்தார் நாடகம் (1857), பிரம்ஹசமாஜ நாடகம் (1871) என்பன.[1] முதல் நாடகம், ஆடம்பரத்தால்

1. 'கூலிக்கு மாரடிக்கும் கூத்தாடிச்சி நடிப்பு' என்னும் நூல் ஒன்றை அவர்எழுதியதாகச் சொல்வர். இது, 'பிரம்ம சமாஜ நாடகத்தின்' ஒரு பகுதியாக விளங்குகிறது.

சீரழிந்து திருந்தும் ஒரு பணக்கார இளைஞன் பற்றிய சீர்திருத்த நாடகம்; இரண்டாவது, சமுதாயத்தில் பல்வேறு நிருவாகத் துறைகளில் நடைபெற்றுவந்த ஊழல்களைத் தயக்கமின்றி விளக்கிக் காட்டி ஒழுங்குபடுத்த முனையும் சமுதாய விழிப்புணர்ச்சி நாடகம்; மூன்றாவது, வடக்கே இராசாராம் மோகன்ராய் கண்ட பிரம்மசமாஜ இயக்கத்தின் கொள்கைகளை ஒரு கதை வாயிலாகத் தமிழக மக்களுக்கு உணர்த்தும் சமுதாயப் பிரச்சார நாடகம். இவ்வாறு மூன்று வேறுபட்ட நல்ல நாடகங்களைத் தமிழ்ச் சமுதாயத்திற்கு அளித்தவர் முதலியார்.

வாழ்க்கை

காசிவிசுவநாத முதலியாரின் வாழ்க்கை வரலாறு பற்றி மிகுதியாக அறிந்துகொள்ள இயலவில்லை. கிடைத்திருக்கும் சிற்சில குறிப்புகளைக் கொண்டு இவர் சென்னை சைதாபுரத்தில் (இன்றைய சைதாப்பேட்டை)[2] பிறந்தவர் என்றும், இவர் தந்தையார் தியாகராாச முதலியார் என்றும், இவர் பிறந்த ஆண்டு ஏறத்தாழ 1806ஆக இருக்கலாம் என்றும் முடிவுக்கு வரலாம். இவரது நாடக நூல்களின் 'சாத்துக்கவிகள்' பல அரிய செய்திகளை நமக்கு வழங்குகின்றன[3]. சைதாபுரம் என்னும் சைதாப்பேட்டை சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் வளவயல் சைதையாக, விளைவயல் சைதையாக, நந்தவனங்கள் சூழ் சைதையாக இருந்திருக்கிறது. இன்று இவற்றை அப்பகுதியில் பார்ப்பதற்கில்லை[4].

---

2. தமிழில் ஊர், பாடி, சேரி, பாக்கம், பட்டினம், புரம் என்பன மக்கள் வாழுமிடங்களைக் குறிக்க வருவன. பேட்டை என்பது எப்படி வந்தது என்று ஆய்தல் வேண்டும். இசுலாமியர் வருகையால் வந்ததா? சென்ற நூற்றாண்டில் இது பெருவழக்கில் வந்துவிட்டது. எனவே, சைதாபுரம், சைதாப்பேட்டை ஆயிற்று எனலாம்.

3. மிகுதியான அளவிற்குச் 'சாற்றுக் கவிகள்' பெற்ற நாடகம் இதுவே. அக்காலத் தமிழறிஞர்கள் அனைவரும் இதனைப் பாராட்டிக் கவிகளை இயற்றியுள்ளனர். இந்த அறிஞர்கள் பற்றியும், அவர்கள் எழுதிய கவிகள் பற்றியும் விரிவாக ஆய்தல் வேண்டும்.

4. மயிலை, அல்லிக்கேணி முதலான பழைய நகரப் பகுதிகளும் இந்த நிலையை அடைந்துள்ளன.

ஆசிரியர் 'முதலியார்' என்னும் வகுப்பைச் சேர்ந்தவர். அவர்களுள் இவர் 'கங்கைகுலம்' சார்ந்தவர் எனப்படுகிறார். 'ஒன்றிய சைதைவாழ் சுகுண கங்காகுல விளக்கு' என்று இவர் தந்தையாரைக் காஞ்சிபுரம் இராமசாமி நாயகர் பாராட்டுகிறார். ஆசிரியரைக் 'கங்கை குலத்தோர்' என்று புதுவை சுப்பராய முதலியாரும், 'மதிதரு கங்கைவரு குலத்தண்ணல்' என்று கோ. இராசகோபால் பிள்ளையும் குறிப்பிடுகின்றனர். இவற்றால் இவர் கைக்கோளர் அல்லர் என்பதும், வேளாளராக இருக்கலாம் என்றும் முடிவு கட்டலாம்[5].

காசிவிசுவநாத முதலியார் அக்காலத்தே கல்வி கேள்விகளால் பேரும் புகழும் பெற்று விளங்கியிருக்கிறார். ஏறத்தாழ ஐம்பதின்மருக்குமேற்பட்ட பெரும்புலவர்கள் இவரது நாடக நூல்களைப் பெரிதும் பாராட்டிப் போற்றியுள்ளனர் என்பதொன்றே இவருடைய பெருமைக்குச் சான்றாகும். சென்னைச் சகலகலா வித்தியாசாலைத் தமிழ்த் தலைமைப் புலவர் சீனிவாசராகவாசாரியார் இவரை,

"பாரார் புகழ்வளத்துச் சைதாபுர மகிபன் மேதா
திகழ்காசி விச்சுவநாதன்"

என்று பாராட்டுகிறார். இவர்தம் கல்வியை மட்டுமன்றி நல்லொழுக்கத்தையும், கொடையுள்ளத்தையும் கூட அறிஞர் பெருமக்கள் பாராட்டியுள்ளனர். இவரைக்

"கல்விக் ககத்தியன் சொல்விற்பனன்மிகு
கொடையிற் கன்னன் நடையினிற் றருமன்"

என்றும்,

"அலக்கணுற்றோருக்கு அருங்களை கண்ணாம்"

என்றும்,

"கருமுகி லனைய வண்கையான்"

என்றும்,

---

5. சென்ற நூற்றாண்டு வரை தமிழ் இலக்கிய இலக்கண நூல்களைப் படைத்தவர்களுள் 99 விழுக்காட்டினர் தமிழரே. பிராம்மணர்கள் அல்லர் என்பதற்கு இந்நாடக நூலுக்கு வழங்கப்பெற்ற சாற்றுக்கவிகளை எழுதிய ஆசிரியர்களின் நூற்பட்டியலே சான்று.

"நவநிதி மரபினன் நன்னெறி ஒழுக்கினன்"

என்றும் அறிஞர்கள் பாராட்டி மகிழ்ந்துள்ளனர்.

முதலியார் அரசு பணியில் நெடிதுகாலம் இருந்தவர்; வளம்பட வாழ்ந்தவர். அன்றைய மெட்ராஸ் பிரசிடென்சியில் பல பகுதிகளில் தொழில் புரிந்திருக்கிறார். தாசில்தார் நாடக முன்னுரையில் ஆசிரியர்,

'யான் 1832ஆம் ஆண்டுமுதல் சித்தூர் ஜில்லா கோர்ட்டு, புரொவின்சியால் கோர்ட்டு, கடப்பை ஜில்லா கோர்ட்டு, சதர்க் கோர்ட்டு, இதுகளில் திரான்ஸ்லேட்டர் உத்தியோகத்திலிருந்து, கடைசியில் பல்லாரி ஜில்லா கோட்டூருக்கு 1853ஆம் வருஷத்தில் சரகத்து முன்சீபாக நியமகமாகி, அவ்விடத்திலிருந்து இந்தக் கோயம்புத்தூர் ஜில்லா சேவூர் சரகத்து முன்சீப்பாக மாற்றப்பட்டு, இவ்விடத்தில் இரண்டரை வருஷமாய் அலுவல் பார்த்துக் கொண்டு வருகிறேன்' என்று கூறியுள்ளார். இதில் சேவூர் 1857 நவம்பர் 7 என்று இடமும் நாளும் குறிக்கப்பட்டுள்ளன. 1858இல் ஆசிரியர் அரசு பணியிலிருந்து ஓய்வுபெற்றார் என்பது அந்த நாடகத்து 1868ஆம் ஆண்டுப் பதிப்பில் (2ஆம் பதிப்பு) 'கோயம்புத்தூர் ஜில்லா, உடுமலைக்கோட்டை முன்சீபாயிருந்து இப்போது கெவரன்மெண்டு உபகார சம்பளம் பெற்றுக்கொண்டிருக்கிற'[6] என்று வருகிற குறிப்பால் அறியமுடிகிறது. எனவே இவர் இறுதியில் பணியாற்றிய இடம் உடுமலைக்கோட்டை (இன்றைய உடுமலைப்பேட்டை) என்று அறிய முடிகிறது.

காசிவிசுவநாதருக்குச் சோமசுந்தர முதலியார் என்னும் மகன் இருந்தார். இவரே தம் தந்தையாரது நாடக நூல்களைத் தமது ஸ்டார் ஆப் இந்தியா பிரஸ் அச்சகத்தில் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார். இந்த அச்சகம் அர்மேனியன் தெரு 103ஆம் இலக்கத்தில் இருந்தது.

முதலியார் தமிழோடு ஆங்கிலம், தெலுங்கு, வடமொழி ஆகியவற்றில் புலமை பெற்றிருந்தார்.

6. 1868இல் அவர் ஓய்வு பெற்றதாகக் குறிக்கப்படுகிறது. எனவே, அவர் 1809இல் (சற்று முன்பின்னாக) பிறந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

'சதர தாலத்துத் தனிநியாயத் தலத்து
அதி திராவிடமோடு ஆந்திரம் இங்கிலீஷில்
மொழிபெயர்த்திப்புரமுடியரசர்க்கு உளம்
கழிபெரும் களிகொளக் காட்டும் மதிவலோன்
முத்தமிழ்ப் புலமைகூர் முறைமையன்'

என்பதனால் இவர் மும்மொழிப் புலமையை உணரலாம்.

சான்றோர் இவரை அழகில் முருகன் என்று பாடியிருத்தலால் இவர் தோற்றத்தில் அழகுடையவராக இருந்தனர் என்று அறியப்படுகிறது. தம் நாடக நூலில் பல்வேறு பண்களில் பாடத்தக்க இசைப்பாடல்களை இவர் புனைந்து பாடியிருத்தற்கேற்ப இவரை அறிஞர் ஒருவர் 'சங்கீத கோலாகலன்' என்றும் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவரது தந்தையாரைச் 'சத்ரபதி தியாகராஜேந்திர பூபாலன்' என்றும், 'அளக்கருஞ் சீர்சால் தியாகராயச் செம்மல்' என்றும் புலவர்கள் பாடியிருப்பதால் ஆசிரியர் செல்வக் குடும்பத்தில் பிறந்து, கல்வி கேள்விகளிற் சிறந்து, கொடையுள்ளம் கொண்ட ஒழுக்க சீலராகத் திகழ்ந்திருந்தார் என்று கூறலாம்.

தமிழ் நாடகத் தந்தை என்று உலகு போற்றும் பம்மல் சம்பந்த முதலியார் காசிவிசுவநாத முதலியாரது பணிகளைப் பெரிதும் பாராட்டி எழுதியுள்ளமை ஈண்டு நினைவு கொள்ளத்தக்கது. தம் நூலில் பம்மல் சம்பந்தனார், 'தமிழ் நாடகமானது சுமார் 100 வருடங்களுக்கு முன்பு மறுமலர்ச்சி அடையத் தொடங்கின காலத்தில் அதை ஆதரித்துத் தமிழ் நாடகங்கள் எழுதி அச்சிட்டவர்களில் முக்கியமானவர்களுள் ஒருவர் காசிவிசுவநாத முதலியார் என்பவர்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் தந்திருக்கும் மற்றொரு செய்தி, காசிவிசுவநாத முதலியார் தம் நாடக நூல்களில் பல வர்ண மெட்டுக்கள் உள்ள பாட்டுகளை இயற்றுவதற்குத் துணையாக நின்றவர் தாயுமானஸ்வாமி முதலியார் என்னும் இசையறிஞர் என்பதாகும்.

காசிவிசுவநாத முதலியார் சாதி மதம் பாராதவர்; உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்னும் பேதம் கொள்ளாதவர்; கல்வியே பெருமை சேர்க்கும் என்று கருதியவர்; ஒழுக்கமும் கொடையும் மக்களால் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று எண்ணியவர்; வேசியர் தொடர்பு, மதுப்பழக்கம், குதிரைப்

பந்தயம், சீட்டாடுதல் முதலான தீயவற்றைக் கண்டித்தவர்; மறுமணத்தை ஆதரித்தவர்; இளவயது திருமணத்தை வெறுத்தவர்; சோதிடம், இராகுகாலம் என்று பழமையில் இருத்தல் தகாது என்று கூறியவர். சீர்திருத்தக் கருத்துகளும், மறுமலர்ச்சி எண்ணங்களும் உடைய ஒரு பெருந்தகை காசிவிசுவநாதர் எனலாம்.

படைப்புகள்

காசிவிசுவநாதர் தாம் எழுதிய மூன்று நாடகங்களுக்கும் மிகச்சிறந்த முன்னுரைகளை எழுதியிருக்கிறார். அவற்றில் தாம் அந்நூல்களை எழுதியமைக்கான காரணங்களையும் நோக்கங்களையும் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறார். இளைஞர்களிடையே ஒழுக்கம் நிலைபெற வேண்டுமென்பதற்காகத் தாம் 'டம்பாச்சாரி விலாசம்' எழுதவேண்டும் என அக்காலத்தில் வாழ்ந்த சில கனவான்கள் கேட்டுக்கொண்டபடியால் நாடகத்தை எழுதியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த நாடகத்தில் பணக்காரர்கள், வணிகர்கள், மருத்துவர்கள், பிராமணர்கள், வழக்கறிஞர்கள் முதலான பலரைக் குறித்தும் விமர்சனம் செய்திருக்கிறார் ஆசிரியர். அக்காலத்தவர்கள் பலர் இவை தம்மையே குறிப்பதாகக் கருதி வழக்குத் தொடரவும் முற்பட்டனராம். எனவே, அவர்களுக்கு விளக்கம் தரும் வகையில் தம் முன்னுரையை எழுதியிருக்கிறார் ஆசிரியர்.

"தக்க சாஸ்திர விசாரணை செய்து வைத்தியத்தில் நல்ல பேரெடுத்திருக்கிற சாம்பிரதாய வைத்தியரிடஞ் சேர்ந்து சரக்குகளின் சத்துருமித்துருத்துவம் அறிந்து செய்பாகம், கைபாகம் தெரிந்துகொண்டு கொடுக்கிற பிரமாணமறிந்து, காலம், தேசம், நோயாளியின் நிலை, தேகஸ்திதி, வயது, நோயின் நிச்சயம், குணம், குறி, நாடிக்குறி, முதலியவைகளைச் செவ்வையாகக் கிரிகித்து அல்லது இக்காலத்தில் இங்கிலீஷ் துரைத்தனத்தில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிற வைத்திய பாடசாலைகளில் சேர்ந்து 'அனாடமி' என்கிற அங்காதிபாத சாஸ்திரம், கெமிஸ்டரி என்கிற இரச வாத சாஸ்திரம் முதலாகியவைகளை வாசித்து, வைத்திய சாலையில் பழகி, அச்சாலைகளில் போதுமான திறமடைந்து இப்போது கொடுக்கப்பட்டு வருகிற தேவாமிர்தத்துக்கும் சஞ்சீவிக்கும் ஒப்பான அமிழ்தங்களை அறிந்து வைத்தியஞ் செய்து வருகிற பண்டிதரை யான் குறைத்துப் பேச எத்தனப்

படவில்லை; ஆனால், சில வாகட காளப்பா பாட்டுகள் மாத்திரம் கற்றுக்கொண்டு சரக்குகளின் சத்துருமித்துருத்துவம், அளவு அறியாமல் அகஸ்தியர் குழம்பு, சண்டபாகிதக் குழம்பு, லிங்கக் குழம்பு, கருங்குழம்பு, வீரம், பூரம், பாஷாணம் கையில் வைத்துக்கொண்டு வட்டுவப்பையைத் தூக்கிக்கொண்டு, 'நாசேதி மாத்திரா வைகுண்ட யாத்திரா', என்பதுபோல மருந்து கொடுத்துச் சீக்கிரத்தில் கைலாயத்திற்கும் வைகுண்டத்திற்கும் பரமண்டலத்திற்கும் அனுப்பிக்கொண்டு வருகிற நாட்டுகட்டாமுட்டி கால்மாட்டுத் தலைமாட்டு வைத்தியரைக் குறித்து மாத்திரம் சொல்லப் புகுந்தது" என்று தம் முன்னுரையில் குறிப்பிடுகின்றார் ஆசிரியர்.

கதிர்வேல் கவிராஜபண்டிதர் என்பவர் 'டம்பாச்சாரி விலாசம்' பற்றி எழுதும்போது,

"வேதமென்பர் சற்பிராமணர்கள் இப்புவிக்குள்ளே
விந்தையென்பர் சாதுசங்கர் தந்தையர் சுதர்க்குநற்
போதமென்பர் காளையோர் அநங்கநூலிதென்பர்கைப்
பொருளிதென்பர் மானிகள் அருளிதென்பர் ஞானிகள்
பேதமென்பர் கணிகைகட்கு மஞ்சளூர்ந்தரைப்பவர்
பெண்கடங்கண் மாங்கலிய பிட்சை நூலிதென்பர்
காதமென்று வாணர் நாவறண்டழன்று கொள்ளுவர்
காசிவிஸ்வ நாதனோது டம்பநூற் கருத்தையே"

என்று நூலின் பல்வேறு தன்மைகளை அழகாகக் கணித்துச் சொல்லியிருக்கிறார்.

இந்த நாடகத்தின் கதையை எடுத்துரைக்க வேண்டுவதில்லை. இது பற்றி அறிஞர் பலர் விரிவாக எழுதியுள்ளனர்.

"சீர்மிகுவளரு மிந்நாட்டுச் செல்வர்தம் புத்திரர்கள்
காரளக வேசையர்க்குக் காசழிக்காது - ஏர்பெறவே
டம்ப விலாசத்தைத் தமிழினாற் பாடுதற்குத்
தும்பிமுகன் தானே துணை"

என்னும் கடவுள் வணக்கப் பாடலிலேயே நாடகத்தின் மையக் கருத்தை ஆசிரியர் சொல்லியிருக்கிறார்.

தோடையம், மங்களம், கவிக்கூற்று, விநாயகர் வருகை, கட்டியங்காரன் வருகை, டம்பாச்சாரி வருகை என்று முதற்பகுதி பழங்காலத் தெருக்கூத்து நாடகப் பாங்கிலேயே அமைந்து நாடகம் தொடங்குகிறது. பின்னர், டம்பன்,

சட்டுவாஜி, சோக்கரா, தவசுபிள்ளை, உக்காபர்தார், பெத்தபோய், ரயிட்டர், தாருவி, கணக்கப்பிள்ளை ஆகியோருடன் தன் பணத்திமிர் வெளிப்பட அளவளாவுகிறான். தன் மனைவி குணபூஷணியை மதியாமல், குடிகேடன், ஜகஜாலப் புரட்டன், ஆயிரப்புளுகன், தலைப்பாகை மாற்றி, இன்சால்வென்ட் மாஸ்டர், டிஸ்கவுண்ட் மாஸ்டர், பகல்வேஷக்காரன், கதிர்வேல் கவிராயர், பரமலோலன் ஆகியோரின் தவறான வழிகாட்டுதலால் மனம் மாறிப் போகிறான் டம்பன். மதனசுந்தரி என்பவளோடு தொடர்பு கொண்ட டம்பன் அவள் தாய்க்கிழவியின் சூழ்ச்சியால் அனைத்துப் பொருளையும் இழக்கிறான்; கடனும் வாங்கி அல்லல் படுகிறான். இறுதியில் டம்பன் மனம் திருந்தி, திருவொற்றியூர் சென்று வழிபாடு செய்கிறான். அங்கு அப்பர் சுவாமிகளைச் சந்தித்து வணங்கி நிற்கிறான். அவர் அவனுக்கு உலகநீதியினை எடுத்துரைத்து நல்வழிப் படுத்துகிறார். அவனும் திருந்தி மனைவி குணபூஷணியோடு இனிது வாழ்க்கை நடத்துகிறான்.

இந்நாடகக் கதையின் ஆய்வு, பாத்திரப்படைப்பு, நாடக நலம், இசைப்பாடல்கள்-கீர்த்தனைகள், அறிவுரைகள், மொழிநடை முதலியன தனி ஆய்விற்கு உரியன.

காசிவிசுவநாதரின் இரண்டாவது நாடகமாகிய தாசில்தார் நாடகம் சமுதாயப் பிரச்சினை பற்றியது. தாசில்தார் அலுவலகத்திலும் ஏனைய அரசு அலுவலகங்களிலும் நடைமுறையில் பெருகியிருந்த லஞ்ச ஊழல் விவகாரத்தை வெளிச்சம்போட்டுக் காட்டி அவர்களைத் தெருட்டுவதாக அமைந்தது இது. தாசில்தார், முன்சீப், போலீஸ், கோயில் குருக்கள், கோயில் தர்மகர்த்தா, பிராமணர்கள், கணக்கர் முதலானோருடைய ஊழல்களையும், 'ஜமாபந்தி' நடக்கும்போது காணப்படும் தில்லுமுல்லுகளையும் இந்நாடகத்தில் ஆசிரியர் நகைச்சுவையுடன் எடுத்துக்காட்டியுள்ளார்.

"இவர்களுக்கெல்லாம் நல்ல சம்பளங்களேற்படுத்திக் கல்வியை விர்த்தியாக்கித் தக்கவர்களை வைத்து அந்தந்தத் தப்பிதங்களைக் குறித்து நல்ல கண்டனை தண்டனைகள் செய்துவந்தால் லஞ்சமும் அக்கிரமங்களும் பறக்காதா?' என்று வினவுகிறார் நாடகாசிரியர். நாடகத்தின் இறுதியில்

'தினவர்த்தமானி' வடிவில் கடவுள் வந்து அனைவருக்கும் அறிவுரை பகர்வதாகக் கதை நிறைவுபெறுகிறது.

கோயில் குருக்கள் ஒருவர் குடிப்பழக்கம் உடையவர். இதைக் கூறி அவரை ஏசினார் தருமகர்த்தா. குருக்களோ தாசில்தாரிடம் தருமகர்த்தாவின் ஊழல்களை வெளிப்படுத்தி விட்டார். அவர் தமிழ்நாட்டிற்குச் சொந்தமில்லாத விநாயகர், கோயிலில் எதற்கு என்று கூறித் தன் வீட்டுப் படிக்கல்லாக அதை ஆக்கிக் கொண்டவர்; உற்சவருக்கு நாலு கைகள் எதற்காக என்று கூறி இரண்டினை வெட்டித் தம்பலப் படிக்கம் செய்துகொண்டவர்; கோயிலில் கூரை இருக்க மரங்கள் ஏன் என்று அவற்றை வெட்டி எடுத்துக் கொண்டவர்; இறைவன் தன்னைக் காத்துக்கொள்வான்; அவன் கோயிலுக்கு மதிற்சுவர் எதற்கு என்று அதனை இடித்துக் கற்களைச் சொந்த வேலைக்குப் பயன்படுத்திக் கொண்டவர். இவற்றைத் தாசில்தாரிடம் சொல்வதோ-டன்றிக் கோயில் பாத்திரங்கள் அனைத்தும் தாசில்தார் வீட்டில் இருப்பது உங்களுக்கே தெரியுமே என்று கூறுகிறான். உடனே தாசில்தார் அவர் சாராயம் குடிப்பதை மன்னித்த-தோடு, இவற்றையெல்லாம் வெளியே யாருக்கும் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறார்.

ஊர்க்குளத்தில் பிராமணன் ஒருவனது பிணம் இருந்தது; அவனைக் கொன்றவர்கள் யார் என்று தாசில்தாருக்குத் தெரியும்; ஆனால், அவர் காவலர் உதவியுடன் ஊரிலுள்ள பணக்காரர்கள் பலரிடமும் சென்று அவர்களைச் சந்தேகப்படுவதற்குக் காரணமிருக்கிறது என்று கூறியும், அதிலிருந்து அவர்களை விடுவிக்கவேண்டுமானால் பணம் கொடுக்க வேண்டும் என்றும் கூறி, நிறைய பணம் புரட்டி விடுகிறார். இறுதியில் பிராமணன், வேதபாராயணம் செய்த போது கவனம் பாடத்தில் இருந்ததால் காலிடறிக் குளத்தில் வீழ்ந்து இறந்தான் என்று பொய்யாக எழுதி வழக்கை முடித்துவிடுகிறார் தாசில்தார். இப்படிப் பல நிகழ்ச்சிகளைக் கொண்டு ஊழல்களை அம்பலப்படுத்துகிறார் நாடகாசிரியர். ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன்னரே ஊழல் ஒழிப்பில் அக்கறை காட்டிய சமுதாய மறுமலர்ச்சியாளராக விளங்கினார் காசிவிசுவநாத முதலியார் எனலாம்.

ஆசிரியர் தீட்டிய மூன்றாவது நாடகம் 'பிரம்ஹ சமாஜ நாடகம்' (1877) என்பது. இதில் ஆசிரியர் தாம்

நினைத்திருந்த அத்தனைச் சீர்திருத்த கருத்துக்களையும் அழகாகச் சொல்கிறார். இதனை நாடகம் என்று சொல்வதை விடக் கொள்கைப் பிரச்சார நூல் என்றே கூறலாம்.

இந்த நாடகத்தின் கதாநாயகன் விவேகன் நல்லவன்; படித்தவன்; ஒழுக்கமானவன்; தீய பண்புகள் எதுவும் இல்லாதவன்; பகுத்தறிவுக் கொள்கை உடையவன்; விதவை மறுமணம் முதலானவற்றில் நாட்டம் கொண்டவன்; பிரம்ம சமாஜ கொள்கையாளன்.

கோயில் பூசை என நிறையச் செலவழிக்கும் தந்தையிடம் விவேகன் 'விக்கிரக ஆராதனை கூடாது' என்பதை ஆதாரங்களோடு விளக்கிச் சொல்கிறான்[7].

விவேகனுக்கும் வேதவல்லிக்கும் பிறந்த மரகதவல்லி என்னும் இளம்பெண்ணுக்குப் பால்ய விவாகம் செய்ய வேண்டும் என்று அவன் தந்தை வீண்புத்தி சொல்கிறான். நாள், நட்சத்திரம், சகுனம் பார்த்து மாமனுக்கு அவளை மணமுடித்து வைக்கத் திருமண மண்டபத்திலேயே மணமகன் இறந்து போகிறான்.

சில திங்கள் கழித்து நாகரிகன் என்பவன் வந்து தன் நண்பன் விவேகனிடம் அந்தப் பெண்ணிற்கு மறுமணம் செய்யலாமே என்கிறான். ஊரில் பெற்றோரும் நாட்டாண்மைக்காரரும் பிறரும் எதிர்த்ததைப் பொருட் படுத்தாது, அனைவருக்கும் பிரம்மசமாஜக் கொள்கையை விரிவாக எடுத்துச் சொல்லி, வேத சாஸ்திரங்கள் முதலியவற்றிலிருந்து 'விதவா விவாகம் ஏற்கத்தக்கதே' என்பதை நிரூபித்து, அவளுக்கு மறுமணம் செய்து வைக்கிறான் விவேகன்.

பின்னர், சைவர், வைணவர், பரம பாகவதர், பண்டார சந்நதிகள், கிறித்தவ போதகர், சூனியவாதி, ஆனை கண்ட குருடர், மலையாள சாமி, சூனியக்காரன், இரசவாதி, நாஸ்திகன் முதலான பலரோடும் விவேகன் உரையாடிப் பிரம்ம சமாஜக் கொள்கையை வலியுறுத்துகிறான்.

இந்த மூன்று நாடகங்களின் மூலம் காசிவிசுவநாத முதலியார் முதல் சமுதாய சீர்திருத்த நாடகாசிரியராகக்

---

7. இந்த நூலில் இடம்பெற்றுள்ள இசைப்பாடல்களும், உரையாடல்களும் மிகவும் புரட்சிகரமானவை. அவற்றைத் தொகுத்து வெளியிடுவது பகுத்தறிவியக்கவாதிகளின் கடமை.

காட்சியளிக்கிறார். 'என்னுடைய கருத்துகள் இந்த நாட்டு மக்கள் அனைவரையும் போய்ச் சேரவேண்டும்; அதற்கு உகந்ததும் கவர்ச்சியானதும் ஆன வடிவம் நாடகமே. எனவே அதனை நான் தேர்ந்தெடுத்தேன்' என்று தம் நாடக முன்னுரையில் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

"சமுதாயம், சமயம், தத்துவம் ஆகிய எந்தத் துறையிலும் மக்களை முன்னேற்றமடையச் செய்யாமல் தடுத்துக்கொண்டிருக்கும் இழிவான மூடப்பழக்க வழக்கங்களிலிருந்து அவர்கள் விடுபடுவார்களானால், நான்இந்த நாடகங்களை எழுதியதன் பலனை அடைந்தவன் ஆவேன்" என்று அவர் குறிப்பிடுவது அவரது உள்ளத் தூய்மையையும், குறிக்கோளையும் நோக்கத்தையும் இனிது காட்டுகிறது.

பண்டைத் தமிழகச் சுருங்கைகள்

முனைவர் கோ. தெய்வநாயகம்

"இந்தச் சுரங்கப்பாதை தஞ்சாவூரிலிருந்து தரங்கம்பாடிக்குப் போகுதுங்க".

"அந்தச் சுரங்கப்பாதை திருச்சிராப்பள்ளிக்குப் போகுதுங்க".

"எந்தச் சுரங்கப்பாதை மாரியம்மன் கோயிலுக்குப் போவுதுங்க".

தஞ்சையிலும் அதுபோலவே, தரங்கை, நாகை, திருச்சி, மாரியம்மன் கோயில் போன்ற ஊர்களிலும் இன்றும் இத்தகைய செய்திகளை அடிக்கடி கேட்க நேரிடும். இது பெரும்பான்மை தமிழகத்தின் எல்லாவூர்களுக்கும் பொருந்தும். அவ்வழக்கிற்குச் சான்றாக ஆங்காங்கே மரபுச் சின்னங்களில் அல்லது சார்ந்த பகுதிகளில் சில கட்டுமானச் சுருங்கை வழிகள் காணப்படுகின்றன. இவை தொடர்பாக ஆயத் தலைப்பட்டபோது பண்டைத் தமிழர்களுக்குச் சுருங்கைவழி அமைக்கும் தொழில்நுட்பம் கைவந்தகலையாக விளங்கியமையைத் தமிழிலக்கியச் சான்றுகள் கீழ்வருமாறு

புகல்கின்றன. பதிற்றுப்பத்தின் குறிப்புகள் பல்வகைச் சுருங்கை அமைப்புகளைச் சுட்டுகின்றன.

"குண்டுகண் அகழிய மதில்பல கடந்து" (பதிற். 45)

என்ற தொடர் அகழியினிருபுறமும் அமைந்த மதில்களின் கீழ்ப்புறத்தே ஆங்காங்கே அமைக்கப்பெற்றிருந்த நீர்போகு சுருங்கைகளைச் சுட்டுகிறது.

"தொல்புகழ் மூதூர்ச் செல்குவை யாயிற்
செம்பொறிச் சிலம்பொ டணித்தழை தூங்கும்
எந்திரத் தகைப்பின் அம்புடை வாயில்
கோள்வல் முதலைய குண்டுகண் அகழி
வானுற ஓங்கிய வளைந்துசெய் புரிசை" (பதிற்.53)

என்ற தொடர்கள் சேரநாட்டுக்கோட்டை, கோட்டை வாயில், தற்காப்பு எந்திர அமைப்புகள், வளைந்தமையும் 'இஞ்சி' அமைப்பு போல்வனவற்றை விளக்கம் செய்வதுடன் அகழியின் 'குண்டுகண்' அதாவது சுருங்கைகள் பற்றியும் குறிக்கின்றன.

வானுற ஓங்கி நிற்கும் உயரமான மதிலரண்களின்கண் அமைவதோடன்றி, குறுகிய அடிப்பரப்பைக் கொண்ட 'ஞாயில்' எனும் உட்கொத்தளத்தின் கண்ணும் இத்தகு குண்டுகண் அமைவதுண்டு என்பதனை,

"போர்சுடு கமழ்புகை மாதிரம் மறைப்ப
மதில்வாய்த் தோன்ற லீயாது தம்பழி யூக்குநர்
குண்டுகண கழிய குறுந்தாள் ஞாயில்
ஆரெயிற் தோட்டி வெளவினை யேறொடு"
(பதிற்.71)

என்ற தொடர்கள் விளக்கம் செய்கின்றன. அடியொற்றிய பாங்கில் "பெருங்குள மருங்கிற் சுருங்கைச் சிறுவழி, இரும்பெரு நீத்தம் புகுவது போல" என மணிமேகலை (12:79-80) பேசுகிறது. தங்காலத்து மதுரை மாநகரின் கோட்டை அமைப்பு அருமையினைச் சிலப்பதிகாரம் மிகத் தெளிவாக,

"வருந்தாதேகி மன்னவன் கூடற்
பொருந்துழி யறிந்து போதீங்கென்றலும்

இளைசூழ் மிளையொடு வளைவுடன்கிடந்த
இலங்கு நீர்ப்பரப்பின் வலம்புணரகழியிற்
பெருங்கை யானை இனநிரை பெயரும்
சுருங்கை வீதி மருங்கிற் போகி
கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
அடல் வாள் யவனர்க் கயிராது புக்காங்
காயிரங் கண்ணோ னருங்கலச் செப்பு
வாய்திறந் தன்ன மதிலகவரைப்பு"

(சிலம்பு. 14:60-69)

என்ற பகுதியில் புலப்படுத்துகிறது. இவ்வியக்கத்தினூடே யானைக் கூட்டமே செல்லத்தக்க உயரம், அகற்சி, நீளம் முதலிய பேரமைப்பினைக்கொண்ட சுருங்கை வீதி இருந்தமையும் அதனிருபுறவாயில்களிலும் யவனக்காவலர் காவலிருந்தமையும் குறிக்கப்பெற்றுள்ளன. இது பொதுமக்கள் புழக்கத்திற்கான பெருஞ்சுருங்கை வீதி தமிழகத்தில் அன்று இருந்தமையினைச் சுட்டுவதாகும். பெருங்கதையின்,

"யூகி கூறிய ஒளிநில மருங்கிற்
பெருங்கல நிதியம் பெய்துவாய் அமைத்த
அரும்பிலத்து யாத்த அச்ச மாந்தர்
வாயில்பெற்று வழிப்படர்ந்தாங்குப்
போக அமைத்த பொய்ந்நிலச் சுருங்கை"

(இலாவண 17 : 90)

என்ற பாடற் தொடர்கள் பெரும் நிதிக்குவியலை மறைத்து வைக்கப் பயன்பட்ட நிலவறை பற்றிக் குறிக்கிறது. அவ்வறை நிலமட்டத்தின் கீழ் இருந்ததை "அரும்பிலத்து" என்ற தொடரும் "யாத்த" என்ற தொடர் அது மனித முயற்சியால் உருப்பெற்ற இயல்பையும் சுட்டுகின்றன. அந்நிலவறைக்குச் செல்லப்புகும் சுருங்கைப் படிக்கட்டு "பொய்நிலச் சுருங்கையாக" இருந்துளது. அதாவது இயற்கையான நிலப் பரப்பு போன்ற மேல் தோற்றத்துடன் திகழ்ந்த கட்டுமானத்துடன் இருந்துள்ளது. மாந்தரை மயக்கும் அச்சுறுத்தும் இருள், முட்டுத்திருப்பம், திடீர்க் குழிகள், வழியடைப்பு போன்றவற்றுடனும் திகழ்ந்தமையினை இவ்வழிகள் மேலும் புலனாக்கிப் பண்டைத் தமிழகச் சுருங்கைத் தொழில்நுட்ப இயல்புகளை விளக்கி நிற்கின்றன.

மிக நீண்ட தொடர்புழையாக அமைந்த நீர்போகு சுருங்கைகள் பண்டைத் தமிழகத்திற்குப் பழக்கமான ஒன்றே என்பதனை,

"நீணிலம் வகுத்து நீர்நிரந்து வந்திழிதரச்
சேணிலத் தியற்றிய சித்திரச் சுருங்கைசேர்"

என்ற சிந்தாமணியின் 142ஆவது பாடல் வரிகளும் விளக்குகின்றன.

இவையன்றி, கட்டுமான வடிவாக்கங்களுள் மாடிகளின் மீதும் சுருங்கை அமைப்புகள் இடம்படுத்தப் பெற்ற கட்டுமானத் தொழில்நுட்பம்

மாடமேற் சுருங்கையிலிருந்து (சீகாளத்திப்புரா: 30)

என்ற இலக்கியத் தொடரால் விளக்கம் பெறுகிறது.

இவ்வாறு தமிழகக் கட்டுமானத் தொழில்நுட்ப வரலாற்றுள் பண்டைக்காலந்தொட்டே இருந்துவரும் இச்சுருங்கை அமைப்பினைத் தஞ்சையில் இன்றும் காணலாம். சில சுருங்கைகளை நுணுகி ஆய்ந்து அவற்றின் அமைவியல் திறத்தினைப் புலப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது. இத்தகைய "சுருங்கை"களாகத் தஞ்சையில் காணலாகும் பண்டைய கட்டுமானங்கள் யாவும் நிலமட்டத்திற்கும் கீழாக உள்ளமை அறியத்தக்கது.

சுருங்கைகளை

1) அரசர்களின் அவசரகால தப்புகை வழியாகவும்
2) குடிநீர் வழங்கும் புழைத் தொடராகவும்
3) சாய்க்கடை வழிகளாகவும்
4) நிலவறை வழிகளாகவும்

நால்வகைப் பாகுபாட்டில் காணமுடிகிறது.

தஞ்சைக் கோட்டை 16ஆம் நூற்றாண்டின் பழைமைச் சுவடுகளைக் கொண்டதாகும். இதில் உள்ள அவசரகால தப்புகை வழிகளாக உள்ள சுருங்கை வழிகளில் இரண்டு இன்றும் காணத்தக்க நிலையில் உள்ளன. அவை அரண்மனையில் மராட்டிய கொலுக்கூடத்திலும் சார்ஜா மாடிக்கட்டிடத்தின் மேற்குப்புறத்திலும் காணப்படுகின்றன.

குடிநீர்ப்புழைத் தொடர்களாக உள்ளவை சிவகங்கைக் குளத்தினின்றும் தொடங்கி, தஞ்சைக் கோட்டைக்குள் இருக்கும் நகர்ப்பகுதியின் பல பகுதிகளில் தொடர்ந்து காணப்படுகின்றன.

சாக்கடைகளாக உள்ளவை கோட்டைக்குள் காணப்படும் நாற்பெரு வீதிகளின் ஓரங்களிலும் இன்றியமையா உள் தெருக்களிலும் காணப்படுகின்றன.

நிலவறைக்கான சுருங்கைகள் அரண்மனையின் வேறு சில குடியிருப்புப் பகுதிகளில் உள.

இச்சுருங்கைகளின் கட்டுமான வடிவம், கட்டுமான முறை, பயன்படுபொருட்களின் தகுதி போன்றவை இவற்றின் "பயன்பாடு" பற்றிய அடிப்படையில் படைக்கப்பெற்றுள்ளன.

பெரும்பான்மை நிலமட்டத்திற்குக் கீழாகப் படைக்கப்பெறுகின்ற இச்சுருங்கைவழிகள், நிலப்பரப்பின் மீதாகவும் அமைக்கப்படுவதுண்டு. அப்போது அது கட்டுமானத் தொடரிடையே கீழ்ப்புறத்தில் தோற்றம் பெறுகிறது. அப்போது அதன் தொடர்ச்சித் தகுதி அல்லது இயல்பு குறுகி அகல உயரங்களில் பெருத்துக் கட்டுமானத் தொடரின் உருவாக்கத்திற்கேற்ப வடிவாக்கம் பெறுகிறது. இத்தகு சுருங்கை வழிகள் பண்டைய நகரியத் திட்டமிடுதலில் மழை அல்லது வெள்ளநீர் வடிகாலாக அல்லது ஆற்று, மதகுப் பாலக் "கண்களாக" உருப்பெற்றுள்ளன.

வடிகால் வழிகளாகத் தஞ்சைக் கோட்டையில் இத்தகு புழைகளிரண்டு உள. ஆறு அல்லது மதகுக் கண்களை நாமறிவோம்.

இச் "சுருங்கை வழிகளின்" பொதுவான இயல்புகள் யாவை? எனப் பார்க்கும்போது,

1. இவை தரைமட்டத்திற்குக் கீழ் அமைவன
2. கட்டுமானம் பெறுவன
3. பெரும்பாலும் செங்கல் சுண்ணக் காரைப் பற்றாசுப் பொருட்களால் உருப்பெறுபவை
4. வளைவுக் கூரை முகட்டைக் கொண்டவை

5. பெரும்நிலையில் சில நூறு அடிகள் வரை நீட்சியுடையவை

என்பன புலனாகின்றன. சிறப்பியல்புகளாகக் காணப் பெறுபவை வகைமைக்கேற்ப மாறுகொள்கின்றன. அவற்றுள் 'தப்புகை வழி' பற்றி அறிய முற்படுங்கால்,

1. ஓர் ஆள் செல்லத்தக்க வகையில் இரண்டு அல்லது இரண்டரை அடி அகலமும் ஆறு முதல் ஏழடி உயரமும் கொண்ட சந்து வழியாகவும்
2. நடுநடுவே கிளை வழிகளை உடையவையாயும்
3. அக்கிளை வழிகளிடையே பொய் அல்லது மயக்கு வழிகள் (முட்டுச் சந்துப்போல) உள்ளவையாயும்
4. தேவைக்கேற்ப ஒளி, காற்றுப்புழக்கம் வேண்டி ஆங்காங்கே சிறுசிறு ஓட்டைகளைப் பக்க வாட்டிலோ அன்றி கூரைப் பகுதியிலோ கொண்டவையாயும்
5. தரைப்பகுதி பாவுக்கற்களால் அல்லது நடைக் கற்களால் உருப்படுத்தப் பெற்றவையாயும்
6. சுவர்கள் செங்கற்களால் கட்டாய நெட்டாய கட்டுமுறைகளில் தேவைக்கேற்ப இடையிடையே செங்கற்சக்கைகளைக் கொண்டவையாயும்
7. பக்க அளவு மண்திணிப்பின் தகுதிக்கேற்ப சுவர்க்கனம் கூடியும் குறைந்தும்
8. அதுபோலவே "பிஞ்சு"களைக்கொண்டும்
9. முட்டுத் திருப்பங்களையும் மேல்கீழ் இறக்கங்களைக் கொண்டவையாயும்
10. கூடை வளைவு அல்லது சுடர் வளைவு, அல்லது பிறை வளைவுக் கூரை வடிவத்தைக் கொண்டவையாயும்
11. அக்கூரைகள் மேற்புறமும் கீழ்ப்புறமும் தட்டோட்டுப் பதிவுப் பரப்பாகவும் நடுவே சப்பைக்கல் சுண்ணப்பற்றாசுக்காரையால் உருப்பெற்றவையாயும்

12. நிலவிசைக்கேற்ப பொதுவான கட்டுமான ஒழுங்குகளைக் கொண்டவையாகவும்

13. பக்கச்சுவர்கள், கூரையின் உட்புறம் முதலியவை இருவகைக் களிமண் பூச்சுப் படிவங்களைக் கொண்டு ஒரே அளவான பரப்பாகவும்

14. முட்டுத் திருப்பங்களை ஒட்டிய மூலைப் பகுதிகளில் துளை அல்லது காடி அடிக்கப்பெற்ற கருங்கல் துண்டுகள் சுவரிடையே பதிக்கப்பெற்று, அக்காலத்திய தீவட்டிகள் செருகப்பெற்று ஒளி தரும் வகையிலும்

15. மேற்கூரை ஒருக்களித்த சப்பைச் செங்கல் அடுக்குகளைக் கொண்டு மிகுதியான காரைப் பற்றுடனும் உருவாக்கம் பெற்றுள்ள அருமை காணத்தக்கன.

இவையன்றி, சுருங்கை வழித் தொடரின் சுருக்கம், கட்டுமானப் பொருள் பெறும் வாய்ப்பு, சுற்றுப்புறச் சூழமைவு, இயற்கையின் கொடை இவற்றின் அடிப்படையில் கருங்கல் துண்டுகளைக் கொண்டு கட்டப்பெற்றும், பாறை நிலப்பகுதியைக் குடைந்தும், முன்னரே உள்ள மலைப்பிளவு, குகைகள் இவற்றைத் தேவைக்கேற்ப சிறு மாற்றம் அல்லது ஒழுங்குறச் செய்து தப்புகை வழியாகப் பயன்படுத்துவதும் உண்டு. இத்தகு பாதைகளைத் தமிழகத்தில் சித்தன்னவாசல் மலைப்பகுதியிலும், திருச்செந்தூர் வள்ளிகுகைப் பகுதியிலும் திருநெல்வேலி கழுகுமலைக் குன்றுப் பகுதியிலும், வீரசிகாமணி குன்றகப் பகுதியிலும் காணலாம். மதுராந்தகத்திற்கடுத்துள்ள வடதிருச்சிற்றம்பலப் பகுதியிலும் இவ்வகைத் தப்புகை வழி உண்டு என்பர்.

இத் தப்புகை வழியின் கூடிய சிறப்பு இதன் வளைவு முகட்டு முகப்பு உருவாக்கமேயாகும். இது இயற்கை அளித்த வடிவாக்கம். கருங்கல் மலைப்பகுதிகளில் மனிதனால் உருப் பெற்ற ஓரிரு குகை முகப்புகளைத் தவிர பிற இயற்கை மற்றும் கட்டப்பெற்ற சுருங்கைகள் யாவும் இவ்வளைவுகளை முகடாகப் பெற யாது காரணம்? ஏனெனில்

எனக் காணப்பெறும் வளைவின் உண்மை நீளம் அதன் இரு முனைப் பகுதிகட்குமிடைப்பட்ட சரியான அகலத்தைவிடக் கூடுதலாகும். மேலும் இச்சரிவான அகலம் நிறைவுற நிற்கும் செவ்வக அல்லது சதுர சந்து வழிக்கும் கூரையின் உட் பரப்பிற்கும் இடையே ஒரு வெற்று அறை அல்லது கால் வட்டக் கூடு உருவாவதை உணரலாம். இரு சுவர்க்கால்களில் இருபுறமும் பதிவு கொண்டு ஒரு அகலத்திற்கு உட்பட்டு ஒரு குறிப்பிட்ட ஆர அல்லது விட்ட அளவினை இடைவெளியாகக் கொண்டு எழுகின்ற இவ்வளைவு மேலுள்ள சுமையினைப் பல கோணங்களில் பகிர்ந்து ஏந்தித் தாங்கிப் புறப்படுத்தும் இயல்புடையதாகும். மேலும் இயற்கையின் காற்றுவிசை, ஒளித்தாக்கம், ஈர அரிப்பு, உதிர்தல் இயல்பு ஆகியவற்றின் இயல்பிற்கேற்ப, இயற்கை இயற்கையோடு முரணாமல், இயைபுகாட்டி தம்மைக் காத்துக்கொள்ளும் குணத்தின் வடிவாக இயற்கைப் பாழிகள், குகைகள் இவற்றது முகப்பு மற்றும் உருவாக்கம் இத்தகு வளைவுகளைக் கொண்டிருப்பதே இவ்வகை வளைவுகளின் கொள்வகை அடிப்படை எனலாம். இவ்வளைவுக் கூரைகளுள் கூர்வளைவு, கூடை வளைவு, பிறை வளைவு முதலிய வடிவங்கள் மேற்பகுதியில் உள்ள தரையியல்பிற்கேற்ப மாறுபடும். மேலும் கூரையின் மேற்பரப்பைக் கூர்முகடாகவும் உட்பரப்பை வளைவு, நெளி அல்லது நெறிமுகடாகவும் தேவை மற்றும் தோற்ற வனப்பு கருதி அமைத்துக்கொள்ளல் உண்டு. ஆகக் கூடுதலில் ஒரு சுருங்கை என்பது முகப்பு எத்தோற்றத்ததோ அதன் அடுக்கு நீட்சியாகவே பெரும்பான்மை தொடர்கட்டுமானத்தில் அமைய அதன் வடிவாக்கம் முட்டுத் திருப்பங்களிலேயே வேறுபாடு பெறுகிறது.


அ


ஆ

கூடை வளைவு முகடுகள் மணற்சாரியான மண்திணிப்பு அற்ற நிலப்பகுதியில் உருவாக்கப்பெறும் சுருங்கைகட்கு அமைந்து கூரைமீது போட்டு நிரவப்பெறும் மணற்பரப்பைக் கீழ்சரியாது காப்பதற்கும் ஏதுவாக உள்ளது.

சுவர்க் கட்டுமானத்தொடர் நீட்சியுடையதாயின் தேவைக்கேற்ப நடுநடுவே கட்டடத் தூண்களைச் சில்வாய் அமைப்பில் பக்கச்சுவர்களைப் பதிவுகொண்டவையாக உருவாக்கும் மரபும் காணப்பெறுகிறது. இத்தூண்களின் இருபுறப்பிதுக்கம் சுருங்கையில் இயற்கையாக இருக்கும் இருளில் ஒரு ஆள் தன்னைச் சுவரோடு சுவராக மறைத்துக் கொண்டு தப்பிக்கும் வழிவகையாகவும் அமைகிறது. இது கருதியே சுருங்கை வழிகளில் முட்டுத் திருப்பப் பகுதிகளிலேயே ஒளிக்கீற்றுகளையும் காற்றோட்டத்தையும் தரும் நேர்முக ஒட்டைகள் புறத்தோற்றத்திற்கு வேறொரு கட்டடப் பகுதியைச் சார்ந்தது போலமைந்து மெல்லிய குறைவான ஒளி தந்து நேர்த்தொடர்ச்சிப் பாதையின் இருளைச் சிதைவுறாமல் காக்கும் வகையில் அமைக்கப்பெறுகின்றன. காற்று வழங்கும் துளைகளும் இவ்வாறே வேறொரு கட்டடப் பகுதியில் வெளிப்புறத்தே திறப்புப்பெற்றுச் சுவர்களிடையே ¯|_ வடிவ அல்லது ┌┐ வடிவ அல்லது |_ வடிவம் போன்ற மடக்கு நிலையில் அமைக்கப் பெற்றுக் காற்றை வழங்குகின்றன. இவற்றின் புறமுகப்புக் காற்றை மிகுதிகொண்டு விசையுடன் வழங்கும் வகையில் 6 அங்குலம் அகலம் 2 1/2 அங்குலம் உயரம் கொண்ட செவ்வக வடிவு அல்லது 3" 3" சதுரவடிவு இவற்றைக்கொண்டு அமைக்கப்பெறுகின்றன.

குடிநீர்ப்புழைத் தொடர்களாகத் தஞ்சையின் 16ஆம் 17ஆம் நூற்றாண்டு குடிநீர் வழங்குந் திட்டம் அளித்துள்ள ஆழ்புழைத் தொடர்கள் இன்றளவும் செயலாக்கம் புரியத்தக்க சீர்மையுடன் உள்ளன. இப்புழைத் தொடரை மராட்டியர் காலத் தஞ்சை 'ஜலசூத்திரம்' எனக்கண்டு அவ்வப்போது சீருற மேலாண்மைபுரிந்து 1960 வரை இவையாவும் மிகச் சரியாக இயங்கின. இன்றும் சில இடங்களைத் தவிர பிறயாவும் செயல்புரியும் தகுதியுடன் உள்ளன. இவையாவும் செங்கல் சுண்ணக் காரை கொண்டு உருவாக்கம் பெற்ற புழைத் தொடர்களாகும். ஆங்காங்கே இவை சில கேணிகள் அல்லது குளங்களில் திறப்புப்பெற்று

மீளவும் அந்நீர்த்தடத்தின் பிற பகுதியில் கிளைத்துத் தொடரும் தகுதியுடன் உள்ளன. இவற்றது முகப்பு சிவகங்கைக் குளத்தின் கீழ்க்கரையில் படிக்கட்டுகளை ஒட்டிய தனிப்பகுதியில் உள்ளது. சதுர முகப்பாக உள்ள இப்புழைத் தொடர் முகப்பு மேற்புறத்தே கருங்கல் உத்திரங்களைக் கொண்டுள்ளது. கோட்டைக்குள்ளிருக்கும் வீடுகள், குளங்கள் யாவற்றுக்கும் தண்ணீர் வழங்கும் தகுதியில் விசையுடன் தண்ணீர் இப்புழைத் தொடருள் புகுத்தப் படுத்தற்கான வேறுசில எளிய ஆனால் சிறந்த நீர்த்தள்ளுப் பலகைகளை இயக்கும் நெடுங்கால் கம்பங்களே இன்றும் இங்கு விளக்குகளின்றி வெறுமனே நின்ற கல்மன்றத்தைப் படைத்து வருகின்றன. பராமரிப்பின்றியும் பாழ்படுத்தும் போக்கினாலும் இவ்வரிய நீர்ச் சுருங்கைகள் விரைவில் காணாமற் போகும் போக்கில் உள.

சாய்க்கடைப் புழைகளைப் பொறுத்தவரை தஞ்சை நகரமே கி.பி. 16ஆம் நூற்றாண்டிலேயே புதைவடிவ சாய்க்கடைகளைக் கொண்டிருந்த முன்னோடியாகத் திகழ்ந்துளது. இது கருதியே தஞ்சையின் நால்வகைச் சிறப்புகளுள் சாய்க்கடையையும் ஒன்றென்பர்.

நகர மக்கள் அப்புறமாக்கும் கழிவுகளை வீடுகள், சிறு சிறு சந்துக்கள், தெருக்கள் இவற்றில் உள்ள திறப்புச் சாய்[illegible]ள் வழியாகப்பெற்று ஒருசேரத் தம்முள் கொண்டு நாற்பெருவீதிகள் வழியாக ஒரே தொடராகக் கோட்டையின் கிழக்குப்புறத்தே அகழியையும் கடந்து தரிசுப் புறம்போக்கில் பாய்ந்து வளம் சேர்க்கும் வகையில் உள்ள இச்சாய்க்கடைச் சுருங்கைகள் அற்புதமான தஞ்சைப் படைப்பெனலாம். ஏனெனில்,

1) தஞ்சை கோட்டை-நகரின் நிலப்பரப்பின் தகுதிக்கேற்ப இச்சாய்க்கடைச் சுருங்கைகள் அளவுற 'வாட்டம்' கொண்டவையாக அமைக்கப்பெற்றுளதால் இன்றளவும் ஏன் எதிர்காலத்திலும் நன்கு பயன்படத் தக்கவையாக உள.

2) சாலைகளை ஒட்டியிருப்பதாலும், மக்கள் கழிவு செய்யும் பொருட்களை அப்புறப்படுத்தும் கருவியாதலானும் எப்போதும் அடைப்புகட்கு உள்ளாவது சாய்க்கடை இயல்பு. எனவே இச்சுருங்கைப் புழைகளின் கூரை பற்றாசுக் கற்கூரைத் தொடராக இருப்பின் பழுது அல்லது அடைப்பு

நீக்குவது கடுமையாயும் இயலாததாயும் ஆகிவிடும். மேலும் அடுத்தடுத்த இடைவெளியில் நேரும் காற்றமுத்தம் தண்ணீரை விசையுடன் அப்புறமாக்கும். எனவே ஆங்காங்கே கட்டை வளைவுக் கூரைகளைப் பற்றாசுக் கல்கூரையாக ஓரளவான இடைவெளியில் ஒன்றடுத்து ஒன்றாகப் படைத்து இடைவெளியைத் தற்காலிக மூடு அமைப்புக்களைக் கொண்டு மூடி நகரியம் பேணியது பழந்தஞ்சை அரசு. போற்றத்தக்க தொழில்நுட்ப மேலாண்மையன்றோவது!

இத்தகு சாய்க்கடை அமைவை இன்றும் தஞ்சைக் கோட்டை நகர்ப்புறத்தில் உள்ள தமிழ்ப் பல்கலைக்கழக அரண்மனை வளாகத்தை ஒட்டியதாகக் காணலாம்.

இனி நிலவறைச் சுருங்கைகளாகத் தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ளவை போல உள்ளவை நிலமட்டத்திற்குக் கீழே செவ்வக அல்லது சதுர வடிவில் அமைக்கப்பெற்றுள்ள நிலவறைகட்குச் செல்லப் பயன்படும் படி வரிசைகளேயாகும். கீழ்நோக்கி இறங்கும் படிகள் ஒவ்வொன்றும் கூரைக்கு இடையேயுள்ள இடைவெளியை மாறாத அளவில் பெறும் வகையில் மேற்கூரையும் படிவரிசையும் ஒரே அளவில் இறக்கக்கோண அளவீட்டில் அமைக்கப்பெறுவதில்லை.

இத்தகு சுருங்கையொன்றை மாரியம்மன் கோயிலுக்கு அருகில் உள்ள பாழ்மண்டபத்தில் இன்றுங் காணலாம்.

தமிழர் சமயம், தத்துவம் பற்றிய ஆய்வுப் போக்குகள்

முனைவர் ஜெ. அரங்கசாமி

முன்னுரை

'மறுஆய்வு', ஒரு கருப்பொருளைப் பகுத்தாய்ந்து கிடைக்கும் உண்மைகளைப் பதிவு செய்து அதன் தரத்தையும், பயன்பாட்டையும் மேம்பட வைக்கிறது. அதனால் கருப் பொருள் பற்றிய கோட்பாடுகள் வளம்பெறுவதுடன் புதியவொன்றைக் கண்டுகொள்ளவும், அதன் செயல்பாட்டைக் கட்டுப்படுத்தவும் முடிகிறது (John W/ Best & James V. Kahn 1986:18). ஆய்வுப்போக்குகள் பற்றி பி.என்.கோசு பின்வருமாறு கூறுகிறார்:

> "ஆய்வு, உண்மைகளை அறிவியல் அடிப்படையில் கண்டுபிடித்தலைச் சுட்டும். அதில் புதிய கோட்பாடுகளை, கருத்துக்களை ஊக்கத்துடன் அலசிப் பார்ப்பதாலும் பன்முகநிலையில் உசாவுவதாலும் அவற்றினு-டைய ஏற்புமை இறுதி செய்யப் பெறும். ஆய்வுக் கண்டுபிடிப்புகள் ஏற்கனவே இறுதி செய்யப்பட்டிருக்கும் முடிவுகளையும் கோட்பாடுகளையும் மறுப்பதாகவோ

> மாற்றியமைப்பதாகவோ அமையும். இதனால் அறிவின் அமைவிற்குப் புதிய கோணமும் புதிய நுண்ணறிவுத் திறமும் கிடைக்கும். ஆய்வாளர்களுக்குப் புதியதைக் காண வேண்டும் என்ற துடிப்பும் ஏற்கனவே இருக்கும் முடிவுகளின்மீது திருப்தியற்றத் தன்மையும் அடிப்படைகளாக அமைகின்றன. வளர்ந்துவரும் அறிவியல் போக்கைப் பொதுமைப்படுத்தும்பொழுது, முடிவுகள் காலத்தின் ஓட்டத்தில் மாறும் தன்மையதாய் அவற்றின் சிக்கல்கள் புதுப்பரிமாணம் பெற்று அவற்றிற்கென்று தீர்வுகள் கிடைப்பதாய் அமைகின்றன. இவ்வாய்வில் கருத்துக்களா-னவை புனைவுகோள், எதிர்புனைவுகோள், கருத்துக் கூட்டாக்கம் என்ற தொடர்நிலையில் ஆக்கம் பெற்று 'நிலைத்த உண்மைகளாக' மாற்றமடைகின்றன" (Ghose, B.N. 1986:305- 306).

இப்பின்னணியில் தமிழர் சமயம், தத்துவம் பற்றிய ஆய்வுகள், அவற்றின் சிக்கல்கள் பற்றி ஆயப்பெறும். அத்துடன் ஆயும் முறைகளை மாற்றியமைப்பதால் ஏற்படும் சமுதாய வளர்ச்சி பற்றியும் இன்றைய நிலையில் சிந்திக்கப் பெறும்.

ஆய்வின் இன்றைய நிலை

தமிழர் சமயம், சைவம், வைணவம், காணபததியம், கௌமாரம், சௌரம், சாக்தம் என்னும் அறுவகை சமயங்களை உள்ளடக்குகிறது என்றாலும் அவற்றில் சைவமும் வைணவமும் முன்னிலையில் இருக்கின்றன. இவ்விரு சமயப் பிரிவுகளை இறைவன் - உயிர் - கட்டு - கட்டு நீங்கும் வழி - இறையின்பம் என்று ஒன்றுபடுத்தலாம்.

சமயத்தையும் தத்துவத்தையும் கருதும்பொழுது அவை வேறுவேறானவை அல்ல. அறிவு சமய நம்பிக்கைகளைப் பகுத்துத் தத்துவங்களாக முறைப்படுத்தியது. இரண்டும் அறிதல் நிலையில் வேறாகத் தோன்றுமே அன்றி உண்மையில் ஒன்றுடன் ஒன்று இணைந்தே இருக்கின்றன. இச்சமயத்தைப் பற்றி இதுவரையில் தமிழகத்திலும் பிற பகுதிகளிலும் ஆய்வுகள் திறனாய்வுப் போக்கில் அமையவில்லை எனலாம். இந் நிலையில் அவ்வாய்வு முடிவுகள் மேலைநாட்டினரும் ஏற்கும்

வகையில் அமைந்திருக்கின்றனவா? என்ற கேள்விக்குப் பதில் இல்லை.

அறிவியல் கண்ணோட்டத்தின் வரையறை

சமய நம்பிக்கை வாழ்க்கைக்கு ஏற்புடையதாய், அறிவியல் உண்மைகளைத் தாங்கியிருப்பதாய், மாந்தர்குல அமைதிக்கும் இன்பத்திற்கும் காரணமாய் இருக்கின்றனவா என்ற வினாக்கள் எழுகின்றன. அத்துடன், 'இறைவன்' என்ற பேருண்மை அறிவிலிகளின் மனத்தில் எழுந்த, இயற்கையின் வினோதங்களுக்குக் காரணமாய் கற்பிக்கப்பெற்ற ஒரு முடிவு என்ற கருத்தும் நிலவுகிறது. இவ்வெதிர் கருத்துக்களை ஒதுக்கி விடாது சமய நம்பிக்கைகளை இன்றைய அறிவியல் நோக்கிற்கு உட்படுத்திச் சிந்தித்தல் நம் கடன்.

அறிவியல் கண்ணோட்டம், இயற்கையின் புதிர்களுக்கு விடையையும் முழுஅறிவையும் வழங்கவில்லை. இதுபற்றி ஹர்பெர்ட் ஸ்பென்சர்,

> 'அறிவியல் கண்டுபிடிப்புகள் இயற்கையின் புதிர்களை நேரடியாகக் காட்டுகிறது. அதன் வழி அறிவின் கட்டுப்பட்டத்தன்மையும் புலன் கடந்த உண்மைகளைப் பற்றி அறியும் நிலையில் அதன் எல்லையும் இயலாமையும் அறியப் பெறுகிறது' (Nirvedananda, Swami 1976:61).

என்று கூறுகின்றார். இவ்வுண்மை, அறிவியல் கண்ணோட்டத்தின் வரையறையைக் காட்டுகிறது. ஆய்வுக் கூடத்தில் பரிசோதனைகளைக் கூர்ந்து கவனிப்பதன் மூலமும், கணக்கீட்டுவழி காரண-காரிய அணுகுமுறையின் மூலமும் பல உண்மைகளை உறுதி செய்கிறோம். ஆனால் வரலாற்றில் அறிவியல் உண்மைகள் காலத்திற்குக் காலம் மாறிக்கொண்டே இருப்பதால் அவை சரியான அறிவை நமக்கு ஈன்றன என்று கொள்ள முடியாது.

சமய-தத்துவ அடிப்படைகளை அறிவியலின் மூலம் உரசிப்பார்ப்பது மட்டுமே ஏற்புடையதாகாது. வரலாற்றில் அவை ஒவ்வொரு முறையும் எதிர்கொள்ளும் அறிவியல் சார்பான தாக்குதல்கட்குப் பலத்த எதிரடி கொடுத்து மீண்டும் புதுப்பொலிவைப் பெற்றிருப்பதை அறிகிறோம். இறைக்கொள்கையை அறிவியல் ஆராய்ச்சிக்குக் கருது கோளாக வைக்கமுடியாது. மாறாக, ஒவ்வொரு அணுவின்

உள்ளீடாகவிருக்கும் உயிர்ப்பொருளின் தொகுப்பாய் இறைவனை உணரவேண்டும் (Nirvedananda, Swami 1979:63). மேலும், மனித உள்ளத்தின் உள்ளீடாகவிருக்கும் கழிவிரக்கத் திற்குக் காரணம் கூறமுடியாது. அதனை உணர்வாலன்றி அறிவால் முழுமையாக அறியமுடியாது. இதன் விரிவே தன்னுணர்வாகவும், ஆன்மவுணர்வாகவும், தன்னுயிரின் தன்மையைப் பிறவுயிரில் காணும் பேருணர்வாகவும் விரிந்து இறையுணர்வில் மூழ்குகிறது. உள்ளுணர்வே (Intuition) சமய உணர்வு தோன்றுவதற்கு அடிப்படையாகும். இவ்வுணர்வால் உலகின் மெய்ம்மை பற்றிய நேரடி அறிவைப் பெறமுடியும். இவ்வுணர்விற்கு என்று தக்க அடிப்படைகளை மனிதன் கடைப்பிடித்தால் அவ்வுணர்வின் வீச்சு விரிந்து இறை யுணர்வைப் பெறமுடியும்.

அறிவியல் கண்ணோட்டத்தின் தேவை

தமிழர் சமயத்தையும் தத்துவத்தையும் உள்ளுணர்வு, அறம் சார்ந்த மன அமைவு ஆகியவற்றால் மட்டும் அணுக முடியும் என்ற கருத்தை முன்வைத்தாலும் அவற்றை அறிவியல் போக்கில் அணுகவியலாது என்று கொள்ளமுடியாது. உலகம் நவீன சாதனங்களால் சுருங்கிவிட்டது. மேலைநாட்டு அறிவியல் கண்ணோட்டத்தில் நமது சமய நம்பிக்கையையும் தத்துவ உண்மைகளையும் வாழ்வியல் நிலையில் நோக்க வேண்டிய தேவை ஏற்பட்டுவிட்டது.

மேலைநாட்டாரின் அணுகுமுறை அறிவியல்வழி அமைந்ததால் அவர்களுக்கென்ற பண்பாடும் கலாச்சாரமும் பொருளாதாரத்தின் அடிப்படையிலும் தொழிற்புரட்சியின் அடிப்படையிலும் வளர்ந்திருக்கிறது. அதன் வெளிப்பாடாய் அவர்கள் சமய நம்பிக்கையில் வேரூன்றியிருப்பதுடன் பொருளாதாரத்திலும் மேலோங்கியிருக்கிறார்கள். ஆனால் நமது பண்பாடும் கலாச்சாரமும் ஆன்மீக நோக்கில் அமைந்து மேலைநாட்டவர்களுக்கு இணையான அறிவியல் பார்வை இல்லாதவர்களாக இருக்கிறோம். எடுத்துக்காட்டாக, நமது சமய-வாழ்வியல் கொள்கைகள் காண்டல், கருதுதல், உரை என்னும் அளவையியலை அடிப்படையாகக் கொள்கின்றன. இவற்றில் முதல் இரண்டு அளவைகளுக்கும் மேலை நாட்டி னருடைய அறிவியல் கண்ணோட்டத்தின் அடிப்படையில் விளக்கம் காணமுடியும். ஆனால் உரையளவை பற்றி ஆராயும் நிலையில் ஒரு வெற்றிடம் இருப்பதாகத் தோன்றுகிறது.

இதனையும் காரணகாரிய அணுகுமுறையில் ஆய்ந்து அறிவியல் கண்ணோட்டத்திற்கு உட்படுத்த வேண்டும்.

காலக்கணிப்பும் அதன் வெளிப்பாடும்

நாம் குறுகிய காலத்தை நிமிச, க்ஷண, நாழிகை, யாமம், மாதம், வருடம் என்றும், நீண்ட காலத்தை கிரேத, திரேத, துவாபர, கலியுக என்று நான்கு யுகங்களாகவும் பிரிக்கிறோம். மேலும் அது திரும்பத் திரும்ப வந்திடும் ஒரு சுழற்சியாகவே கருதுகிறோம். மாறாக, மேலைநாட்டினர் காலமானது நேரான அச்சில் முன்னேறி செல்வது, தொடர்ச்சியற்றது, நிலையற்றது, சிறிய அளவில் மட்டும் ஓரளவு அளக்கக்கூடியது என்று கருதுகின்றனர் (Kumar, Ravinder, n.d:10).

மேலைநாட்டார் காலத்தை நேர்கோட்டில் கருதியமையால் அவர்கள் முதிர்ந்த அனுபவத்தைக் கொண்டு சமுதாயத்தில் புதுப்பொலிவைப் பொருளாதாரத்தின் அடிப்படையில் அரசியல் நோக்கில் ஏற்படுத்தியுள்ளனர். அவர்கள் காரண-காரிய அணுகுமுறை அடிப்படையில் பன்முக வளர்ச்சியை அகப்படுத்தி அதன் உள்ளீடாக நிகழ்ந்த-நிகழும்-நிகழப்போகும் செயல்களின் தன்மைகளைத் துல்லியமாக அறிந்தனர். மாறாக, நாம் காலத்தைச் சுழல்வதாகக் கொண்டு அதன் உள்ளாகவே சமய-தத்துவ கருத்துக்களை வைத்து அறிவியல் புதுமைகளை மேலைநாட்டாருக்கு இணையாகக் காணத் தவறினோம். அதில் தொடர்ச்சியற்ற பாரம்பரியத்தையும் வரையறுக்கப்பட்ட மன அமைவையும் கொண்டு சமுதாயத்தை முன்னேற்றப் பாதையில் மாற்றியமைக்க வேண்டும் என்ற உந்துசக்தியை இழந்தோம்.

இவ்விரு மாறுபட்ட நிலைகளையும் ஆய்ந்த ஜேம்ஸ் ஜாய்சி, வெர்ஜீனியா என்னும் மேலைநாட்டு ஆய்வாளர்கள், காலத்தை நேர்கோட்டில் கருதுவதே சமுதாய மறுமலர்ச்சிக்கு வித்திடும் என்கின்றனர் (Kumar, Ravinder, n.d:13). ஆகவே மேலைநாட்டாரின் காலக்கணிப்பை நமது பண்பாட்டுடன் இணைத்துப் பார்ப்பது தேவையாகிறது.

அண்ட அமைப்பைப் பற்றிய இன்றைய நிலை

அறிவியல், அண்டத்தில் வரையறை கடந்த வெளியில் கணக்கிட முடியாத பால் மண்டலங்கள் அணிவகுத்துச்

சுழல்கின்றன என்கின்றது. அவற்றில் பூமியில் மட்டும் ஒன்றை உணர்ந்துகொள்ளும் 'உணர்வுத்தன்மை' (consciouness) இருக்கிறது. மாறாக இந்திய, குறிப்பாகத் தமிழ்ப்புராணங்கள், பேரண்டமானது மேலுலகமாகப் பூவுலகம், புவருலகம், சுவர்க்கவுலகம், மகருலகம், ஞானவுலகம், தவவுலகம், சத்திய வுலகம் என்றும் கீழுலகம் அதல, விதல, சுதல, தளாதல, மகாதல, பாதல என்றும் போன்ற பதினான்கு உலகங்கள் ஒன்றின்மீது ஒன்றாக அடுக்குநிலையில் இருக்கின்றன என்றும் கூறுகின்றன. புராண விளக்கமும் அறிவியல் கண்டுபிடிப்புகளும் வேறு வேறாக இருப்பது அறிவிற்குக் குழப்பத்தை விளைவிக்கின்றன.

பிரகிருதியின் உள்ளீட்டில் வேறுவேறு உலகங்கள் அவற்றிற்கென்று தனித்த நிலைப்பாட்டுடனான நுணுக்கம் கொண்ட அலைவதிர்வுகளைக் (vibrations) கொண்டிருக்கின்றன. அவ்வதிர்வுகள் இன்றைய அறிவியல் சுட்டும் வெளியின் (space) தன்மையில் எவ்விதத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தாது. அதாவது, அண்டத்தின், 'முழுமையான பேரறிவு' (cosmic mind) நுணுக்க நிலையில் வேறுவேறு நிலைகளில் 'உறுவளவை' அல்லது 'அளவுக்கூறுகளைக்' (different dimensions) கொண்டிருக்கிறது. அண்ட உலகங்கள் உள்ளீட்டு நிலையில் ஒன்றையொன்று எவ்விதத்திலும் சார்ந்தோ முரண்பட்டோ இல்லாமலிருக்கின்றன. பிரபஞ்சப் 'பேரறிவின்பால்பட்ட உணர்வு' நிலையின் (cosmic consciousness) நுணுக்கங்கள் உள்ளீட்டு நிலையில் ஒன்றினுள் ஒன்றாக வட்டங்கள் அதனுள் அமையும் வட்டங்கள் என்றும் வேறு வேறு நிலைகளில் ஒன்றை அடுத்த, அடுத்த நிலையிலிருக்கும் அலைவரிசை, உள்வட்டத்தைவிட ஆழங்கால்பட்டவாறு நுணுக்கத்தைப் பெற்றிருக்கிறது. ஆகவே ஒவ்வொரு உலகமும் வேறுவேறு நிலைகளில் நுணுக்க அலைவதிர்வுகளைக் கொண்டவை என்ற உண்மை இன்றைய அறிவியல் நோக்குடன் இணைத்துப் பார்ப்பதற்கு ஏற்புடையதாய் இருக்கிறது.

புராணங்கள் உருவகமாகக் (allegorical) கூறுவதை விஞ்ஞான ரீதியில் அறியவேண்டும். அதாவது, உயிரானது புனிதத் தன்மையை அடைந்து ஆன்மீக நிலையில் வளரும் பொழுது (spiritual evolution) பிரபஞ்சத்தில் வேறுவேறு படிநிலைகளில் உள்ள உலகங்களுடன் தொடர்புகொண்டு முற்றிலும் புனித இறையுலகமான சத்தியவுலகை அடைகிறது.

இவ்விளக்கத்தை உள்வாங்கி, சுருங்கக்கூறின், உணர்வு என்பது தனித்த நிலையிலான நம் மூளையில் ஏற்படும் மாற்றங்களின் விளைவுகளாகும். அதன் பண்பட்ட தன்மைகளுக்கு ஏற்றாற் போன்று அதிர்வலையின் குணத்தை உணர்ந்து வேறுவேறு உலகங்களுடன் தொடர்பு கொள்கிறது.

நியதிவாதமும் (Determinism) தன்விருப்பவாதமும் (Free will)

நியதிவாதம், மனிதனுடைய செயலானது அவனுடைய துணிவாற்றலை உள்ளடக்காது எல்லாச் செயல்களும் புறப் பொருள் தூண்டுதல் ஆற்றல்களாலேயே துணியப்படுகின்றன என்ற கருத்தைச் சுட்டும். உலகச் செயல்கள் இறைவனுடைய திருவிருப்பத்தின் அடியாகவே நிகழ்கின்றன என்று இக்கோட்பாடு செப்பும் (The Encyclopaedia of Philosophy (1967) ed. Edwards, Paul, Vol.2:361). இந்நிலையில் தமிழர் சமயம் மனித முயற்சிக்கு ஓரளவு முக்கியத்துவம் கொடுத்தாலும் அவனுடைய செயல்பாடு வினைக்கொள்கை என்னும் கோட்பாட்டால் கட்டுப்படுத்தப்படுகிறது என்று விளக்கும் இவ்வினைக் கொள்கையும் இறைவனுடைய விருப்பத்திற்கு இணங்கவே செயல்படுகிறது.

தன்விருப்பவாதம், மனிதனது செயல்கள் தானான நிகழ்வுகள் என்றில்லாமல் அவனால் செய்யப்பட்டவை என்று கருதுகிறது. உலகச் செயல்கள் மனிதமுயற்சியால் ஒரு குறிக் கோளுடன் செய்யப்பட்டதாக அமையும். மனிதன் தனக்கு முன்னிருக்கும் செயல்களின் வகைகளை அறிந்து அதில் சரியானதை முடிவுசெய்து அதனையே செயல்வண்ணம் பெற வைக்கிறான் (The Encyclopaedia of Philosophy (1967) ed. Edwards, Paul, Vol.2:377). இக்கொள்கையின் அடிப்படையில் உலக நடவடிக்கைகள் மனித விருப்பத்தின் வழிப்பட்ட தாகின்றன. அவற்றின் வெற்றி-தோல்வி அவனுடைய மன அமைவைப் பொறுத்ததாகவோ முயற்சியின் வீச்சினைச் சார்ந்ததாகவோ அமைகின்றன. இந்நிலையில் தனியொரு-வனுடைய விருப்பமும் சமுதாய விருப்பமும் ஒன்றாகி அதன் எழுச்சி விரிவடையும்பொழுது சோதனைகள் சாதனைகளாகிச் சமுதாயம் முன்னேறும்.

நியதிவாதத்தையும் தன்விருப்பவாதத்தையும் முறையே நமதுசமயமும், மேலைநாட்டாரும் பின்பற்றி

வந்தமையை வரலாற்றிலிருந்து அறிகிறோம். இவ்விரண்டும் சமுதாயத்தில் ஏற்படுத்திய மாற்றங்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மேலைநாட்டு மாற்றங்கள் சமுதாயத்தை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் சென்றிருப்பது அறியப் பெறுகிறது. மாறாக, நமது இறைவிருப்பக் கொள்கையும் வினைக்கொள்கையும் மனிதனை ஒரு வட்டத்திற்குள் உட்படுத்திவிடுகின்றன. நமது செயல் நமது விருப்பத்திற்கு ஏற்பப் பயன் கொடுக்கவில்லை எனில் அங்கு வினைக் கொள்கையை முன்வைத்து மனஅமைதி கொள்கிறோம். இம்முடிவு நமது பொறுப்புகளிலிருந்து தப்பிக்க வழிவகுக்கிறது.

முடிவுரை

"புதியன புகுதலும் பழையன கழிதலும் வழுவல கால வகையினானே" என்னும் முதுமொழிக்கிணங்க ஆய்வு உண்மைகள் காலத்திற்கேற்றாற்போல் நிறம் பெற்று உருமாறும் தன்மையுடையன. ஆய்வுப் போக்குகளைக் காலம்-இடம்-அவற்றை அணுகுபவர்களுடைய மனப்போக்கு மற்றும் சமுதாய, பொருளாதாரக் கொள்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் மாற்றியமைத்து ஆய்வு முடிவுகளுக்குப் புதிய கோணத்தையும் நிலைப்புத்தன்மையையும் கொடுக்க வேண்டும். இப்பின்னணியில் தமிழர் சமய, தத்துவங்களுடைய மூலத்தை விஞ்ஞான வழிகளை விடுத்து மெய்ஞ்ஞான வழிகளின் மூலம் அணுகுவதே ஏற்புடையதாகும். அதே சமயம், நமது சமயத்தின் வாழ்வியல் கொள்கைகளை மேலை நாட்டாருடைய அறிவியல் கண்ணோட்டத்திற்கு உட்படுத்துவது முக்கியமானதர்கும். எடுத்துக்காட்டாக, காலத்தைப்பற்றியும், அண்டத்தின் அமைவைப் பற்றியும், நியதிவாதம் பற்றியும் இணைத்துப் பார்க்கும் நிலையில் அறிவியல் அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொண்டு குறைநிறைகளைக் காணுதல் உடனடித் தேவை.

பயன்பட்ட நூல்கள்

1. Clark, Stephen R.L., **The Mysteries of Religion**, Oxford, 1986.

2. Devadoss, T.S., **(Ed.) Abstract Papers, Seventh International Congress of Vedanta**, Madras, 1996.

3. **Encyclopaedia of Philosophy**, Ed. Edwards, Paul, London, Vol.2, 1967.

4. Ghosse, B.N., **A Dictionary of Research Methods**, New Delhi, 1986.

5. John W.Best & James V. Kahn, **Research in Education,** New Delhi, 1986.

6. Kumar, Ravinder, (n.d) **Reflection on the Propal: "A History of Science, Philosophy and Culture in Indian Civilization"** (ICPR Occasional Paper-3), New Delhi.

7. Mukhopadhyay, P.K., (n.d) **History of Science and Two Metamorphoses of Mind** (ICPR Occasional Paper-9), New Delhi.

8. Nirvedananda, Swami , **Religion and Modern Doubts,** Calcutta, 1979.

9. Tapasyananda, Swami, Tr. **Srinad Bhagavata,** Vol.I, Madras, 1980.

10. Tillich, Paul, **What is Religion?**, London, 1969.

இசுலாமியத் தமிழ் இலக்கியங்களில் அத்துவைதக் கருத்துகள்

முனைவர் பீ. டாக்டர் நசீம்தீன்

பல்வேறு காலகட்டங்களில் பலவிதமான இறைக் கொள்கைகள் உலகில் தோன்றியிருக்கின்றன. இவற்றின் அடிநாதமாக இயங்கும் இறைக் கொள்கைகளை ஆராய்ந்து பார்த்தால் 'முழுமுதற் பரம்பொருள்' எனும் தரிசனத்தில் ஒன்றுபடுவதனைக் காணலாம். பரம்பொருளை அருவ நிலையில் காணுகின்ற இறைக்காட்சி பலசமயங்களிலும் வலியுறுத்தப்படுவதனைக் காண்கிறோம். இறைக்கோட்பாடுகள் அல்லது தரிசனங்கள் மக்களை வந்து அடையும் முகத்தான் இலக்கியங்கள் வழி அவற்றை எடுத்து மொழிவது ஆன்றோர்தம் கடமையாயிருந்திருக்கிறது.

தமிழ் இலக்கியங்களில் பல்வேறு இறைக்கொள்கைகள் பல காலகட்டங்களில் இம்மரபு சார்ந்து எடுத்துரைக்கப் பட்டுள்ளன. காப்பியங்களாகவும், சிற்றிலக்கியங்களாகவும், சமய சாத்திரங்களாகவும் இவ்வெளிப்பாடுகள் அமைந்துள்ளன. இவற்றில், இறையனுபவ வெளியீட்டில் தனித் தன்மை காட்டுகின்ற சித்தர் பாடல்களைப் பிரித்து ஆராயும் மரபு ஏற்பட்டது. சித்தர்கள் கண்ட ஞான தரிசனமானது சமயங்களில் மேம்போக்கான சமயக் கொள்கைகளை விலக்கி, பரம்பொருளினை ஞானத்தேடலால் கண்டுணர்த்துகின்றது.

அப்பரம்பொருளையும், அப்பரம்பொருள் சார்ந்த நம்பிக்கையையும் அனுபவத்தால் உணர்வது 'மெய்ஞ்ஞானம்' எனப்படுகின்றது. சனாதனதர்மத்தில் இது துவைதம், அத்துவைதம், விசிஷ்டாத்துவைதம் என்றெல்லாம் பலமுறைகளில் எடுத்தோதப்படுகின்றது. இம்மெய்ஞ்ஞான நிலையை இசுலாமியர் 'சூபித்துவம்' எனக் குறிப்பிடுகின்றனர்.

இசுலாமும் அத்துவைதமும்

உலகில் தோன்றிய இறைக் கொள்கைகளின் விளக்கங்களில் 'அத்துவைத' நிலையானது நேரடியாகவோ, உருவகமாகவோ, மறைமுகமாகவோ எடுத்தோதப்பட்டிருப்பதனை உணரலாம். பரம்பொருளும் (பரமாத்மா - பிரம்மம்), ஆத்மாவும் வேறுவேறு அல்ல, 'ஒன்றுதான்' (சத்) என உணர்த்துவது அத்துவைத தரிசனமாகும். இந்திய ஞான தரிசனங்களில் சங்கராச்சாரியாரின் அத்துவைதக் கொள்கையானது மிக நுண்மையானதும் ஆழமானதுமாகக் கருதப்படுகிறது.[1] 'பரம்பொருள் (பரமாத்மா) இல்லையெனில் உலகில் எதுவுமே இல்லை' என்பதே மாயாவாதக் கோட்பாட்டின் அடிப்படை நிலை. இக்கோட்பாட்டு அடிப்படையில் உலகில் எல்லா உயிர்களும் (ஜீவாத்மா) சமம் என்றாகிறது. இதனைக் கருத்தில் கொண்டே சமணர்கள் தாவரங்களுக்கும் உயிர் இருக்கிறது (அறிவு முதலானவை) என வாதிடுகின்றனர். தொல்காப்பியத்தில் "ஓரறிவுயிர்" எனத் தொடங்கும் விளக்கமும் இது சார்ந்ததெனக் கருதலாம்.

இக்கொள்கையை ஏற்றுக்கொள்ளும்போது ஓர் உயிர் வாழ்வதற்காகப் பிற உயிரைக் (உடலை) கொல்வது அல்லது குறை செய்வது ஏன் என்ற வினா ஞானிகளுக்கு எழுந்தது. அதற்கான விளக்கத்தைச் சமணர்களது கோட்பாட்டிலேயே காணலாம். ஓர் உயிரைக் (உயிருடைய உடலை) கொல்லக் கூடாது எனக் கட்டாயப்படுத்துகிறது சமணம்; ஆனால் பிறர் கொன்றதை உண்ணுவது கூடாது என விலக்கவில்லை. இந்நோக்கிலேயே இன்றும் சைவத்தை வலியுறுத்தும் சில பிரிவினர் மீனைச் சைவ உணவாகக் கொள்வதனைக் காணுகிறோம். தானியங்களிலும் உயிர் உறங்குகிறது என்கின்றனர்.

---

1. R. Karunakaran, **The concept of Sat in Advaita Vedanta**, pp.178-189.

எனவே, உயிர் வாழ்வதற்காகப் பிற உயிர் உறையும் பகுதியை (உடலை) உண்பது தவிர்க்க இயலாததாகிறது. இதற்கு மேலும் விளக்கம் காணுகின்றபோது உடல் என்பது வேறு, உயிர் என்பது வேறு (சரீரா, சரீரி, பாவா, அந்தர்யாமி என்றெல்லாம் விளக்குவர்); உடலில் இருந்து பிரியும் உயிரானது பிறவி எடுக்கிறது அல்லது பரம்பொருளைச் சென்றடைகிறது.

இந்நிலையானது இசுலாமியத் தத்துவத்தில் வேறு வகையாக உணர்த்தப்படுகிறது. இறைவன் உலகிலுள்ள தாவரங்கள், விலங்குகள், மலக்குகள் (தேவர்) எனப் படைத்துத் தன்னை உணர முற்பட்டான். இறுதியில் உலகில் முதல் மனிதரான ஆதம் அவர்களை மண்ணிலிருந்து உருவாக்கினான். தனது மூச்சை ஊதி அவருக்கு உயிரளித்தான். பின்னர் அவ்வா (ஏவாள்) அவர்களைப் படைத்தான். உலக மானிடரெல்லாம் அவ்விருவர் வழிவந்தவர்களே. அதனால் இசுலாம் குறிப்பதுபோல, உலக மக்கள் எல்லாம் சகோதர நிலையுடையோரே. இசுலாம் என்றாலே 'சகோதரத்துவம்' என விளக்கங்கள் அமைவதும் இதனால்தான். இறைவனின்- படைப்புக்களின் உடல் மண்ணிலிருந்து, உயிர் விண்ணிலிருந்து (இறைவனிடமிருந்து). எல்லா உயிர்களும் (ஜீவன்கள்) இறைவனின் மூச்சை அடிப்படையாகக் கொண்டவையே. இதுதான் இசுலாம் உணர்த்தும் அத்துவைதம்.

அண்ணல் நபியவர்களின் அருள்மொழிகள் இதற்குச் சான்று பகர்கின்றன. "எல்லாப் படைப்புக்களும் ஆண்டவனுடைய குடும்பமாகும். எல்லாப் படைப்புக்களிலும் அல்லாஹ்வுக்குப் பிரியமானவன் அல்லாஹ்வின் குடும்பத்திற்கு நன்மை செய்வோனே" (ஹதீஸ்). காரணமின்றி உயிர்க்கொலை செய்வதைக் கண்டித்த நபியவர்களின் கூற்றும் இதனை மேலும் விளக்கும். பூர்வகாலத்து நபிகளில் ஒரு நபியை (இறைத்தூதரை) ஓர் எறும்பு கடித்துவிட்டது; எறும்புகளின் இருப்பிடங்களை நெருப்பால் எரித்துவிடும்படி அந்த நபி கட்டளையிட்டார். அதனால், 'ஓர் எறும்பு உம்மைக் கடித்துவிட்டதற்காகத் தங்கள் இறைவனின் கீர்த்தியைக் கொண்டாடிக் கொண்டிருக்கிற (உம்மைப் போன்ற) ஓர் இனத்தையே நீர் எரித்துவிட்டீரே' என இறைவனின் வசனம்

இறங்கியதாக முகம்மது நபி (ஸல்) மொழிந்தார்கள்.[2] எனவே உலகப் படைப்புக்களின் வாழ்வியல் முறைகள் வேறாக இருப்பினும் அப்படைப்புக்களில் உள்ள உயிர் (ஜீவாத்மா) இறைவனுடையது எனவும், இதனால் சகோதரத்துவமும், சமாதானமும் இறைவழியில் சிறந்தது எனவும் இசுலாம் வலியுறுத்துகிறது.[3]

இசுலாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்களும், அத்துவைதமும்

இசுலாமியத் தமிழ் மெய்ஞ்ஞானப் புலவர்களை மூன்று பிரிவாகப் பிரிப்பர். ஞானத்தேடலால் பரம்பொருளை உணர முற்படுகின்ற புலவர்களது படைப்புக்களை முதற்பிரிவிலடக்கு வர்.[4] இவர்களது பாடல்களில் தீன் விளக்கம், தன்னிரக்கம், இறைஞ்சி நிற்கும் பண்பு ஆகியன முனைப்பாகக் காணப்படு கின்றன. எல்லாம் வல்ல பரம்பொருளான அல்லாஹ்வையும், அவனது தூதர்களையும், ஒலியுல்லாக்களையும் போற்றுகின்ற பாடல்கள் இப்படைப்புக்களில் மிகுதி. இரண்டாவது பிரிவில் தனிப்பாடல்கள் வழி இறையனுபவத்தை வெளியிடுகின்ற அப்துல்கனி சாகிப், சேக் முஸ்தபா, சையது முகமது காதிர், குஞ்ஞாலி சேக்முகையதீன் சாகிப், சேக் முகம்மது அப்துல்லா சாகிப் போன்றோரை அடக்குவர். இறைவனின் அளவில்லாக் கருணையையும் வல்லமையையும் புகழ்ந்து பாடுகின்ற மெய்ஞ்ஞான வெளிப்பாட்டை இவர்தம் படைப்புக்களில் காணலாம்.

---

2. 'அண்ணல் நபி அருள்மணிகள்' (மொ.பெ.) நூரி, சித்தையன் கோட்டை, ப.93.

3. மண்ணால் படைக்கப்பட்ட மனித உடல் மண்ணிலிருந்து உருவான பிற உடல்களை உண்டு நிலை கொள்கிறது. உயிர் பிரியும்போது மண்ணில் அவ்வுடல் ஐக்கியமாகிறது.

4. M.M. Uwise, Muslim Contribution to Tamil Literature, p.165.
   1) ஞானியார் சாகிப் - மெய்ஞ்ஞானத் திருப்பாடல் திரட்டு.
   2) சேக்தம்பி ஞானியார் சாஹிப் - மெய்ஞ்ஞான விளக்கம்.
   3) கலீபத்து செய்கு சாகுல் ஹமீது அப்பா - ஞானத் திருப் பாடல் திரட்டு.
   4) செய்து உமர் ஒலியுல்லா - திரு மெய்ஞ்ஞானப் புலம்பல் கண்ணிகள்.
   5) சின்ன ஆலிம் அப்பா-மழைக்காவியம்; ஞானரை வென்றான்.
   6) சைகு அப்துல்ஹஸன் - ஞான ரத்தின மாலை.
   7) சைகு சுலைமான் காதிர் - மெய்ஞ்ஞானப் பஃறொடை.
   8) கச்சிப்பிள்ளையம்மாள் - மெய்ஞ்ஞான மாலை; மெய்ஞ்ஞானக் குறம்.

இந்தியத் தத்துவங்களை உள்வாங்கிக் கொண்டு இசுலாமிய நெறிசார்ந்த சூபித்துவத் தத்துவங்களை விளக்கும் மெய்ஞ்ஞானிகள் மூவர். குணங்குடி மஸ்தான் சாகிப், காளங்குடி மச்சரேகைச் சித்தர், தக்கலை பீர்முகம்மது சாகிப் ஆகியோரின் இலக்கியங்களில் இவ்வெளிப்பாடு முனைப்பாக அமைந்திருப்பது ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குணங்குடியாரின் முகியித்தீன் சதகத்தில்,

"ஆதிமுன் னிற்கவே யகதுகது வாகிதிய்
யத் தெனதுமுன் னிற்கவே
அத்துவித வஸ்து முன்னிற்கவே" (மு.ச.1)

"நீக்கமற எங்கெங்கு நின்று நிறைகின்ற பொருள்
நேரிலென் முன்னிற்கவே" (மு.ச.2)

"கண்டபொரு ளத்தனையு மாகிநின் றவைகளுங்
காணாத காரணத்தை" (மு.ச.17)

என்றெல்லாம் அத்துவிதக் கொள்கையினை விரித்துணர்த்து-வதனைக் காண்கிறோம்.

பரம்பொருளான இறையிலிருந்து ஆத்மாக்களாகப் படைப்புக்கள் உருவாதலைச் சூஃபித்துவத்தில் (Swfism) தனஸ்ஸுலாத் என்று குறிப்பிடுவர். இந்த 'அவதார' நிலைக்கு முன்னரான துரியாதீத நிலையினைத் தாத் (நிர்க்குண பிரம்மம்) என்பர். இதற்கடுத்து அமையும் மூன்று நிலைகளை அஹதிய்யத், வஹ்தத், வாஹிதிய்யத் (ஒருமையில் மும்மை நிலை) எனவும் சூஃபித்துவம் பிரித்துரைக்கிறது. இதனைக் குணங்குடியார்,

"அகதுகது வாகிதிய்யத் தெனது முன்னிற்கவே", எனும் அடிகளில் எடுத்து மொழிகின்றார்.

இறைவனை அறிந்துணரும் செயலுக்கு வழி காட்டியாகக் 'குரு'வினைக் கொள்வது ஞானிகளின் வழி முறையாகும். 'குருவினைப் போற்றுதல் இறைவனைப் போற்றுதலுக்கு ஒப்பானது' என மெய்ஞ்ஞானிகள் கருதினர். குணங்குடியார், தமது ஞானகுருவாக அவருக்கு 400 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த முகையித்தீன் அப்துல்காதிர் ஜிலானி அவர்களை ஏற்றுக்கொள்கிறார். இவரது பாடல்களில் பெரும்பாலானவற்றில் இவ்வுணர்வு வெளிப்படுவதைக் காண்கிறோம்.

"அருவாகி உருவாகி அருவுருவமற்ற அறிவாதார மோனமாகி
தந்தையாகி அருள்தந்தகுரு ஆகிஎன்
தன்னுயிர்க் குயிருமாகி" (மு.ச. 37)

எனவும்,

"ஏதமில்லாத குரு வடிசென்னி மீதெடுத்
தேந்துவதும் எக்காலமோ" (மு.ச.103)

எனவும் குணங்குடியார் குருவை இறைமுகூர்த்தமாகக் காணுகிறார். இது இசுலாம் மார்க்கம் ஏற்றுக்கொள்ளாத ஒன்று. மேலும் இவர்தம் பாடல்கள் தாயுமான சுவாமிகளின் பாடல்களுடன் ஒப்புமையுடையனவாகக் காணப்படுவதனைப் பேராசிரியர் உவைஸ் சுட்டிக் காட்டுகின்றார். இந்து மதத் தொன்மங்களும் கருத்துக்களும் மஸ்தான் சாகிப் பாடல்களில் காணப்படுவதனையும் எடுத்துக்காட்டியுள்ளார்.[5]

இசுலாம் இல்லறத்தைச் சிறப்பித்துக் கூறுகிறது; குணங்குடியார் துறவுநிலையைச் சார்ந்து நின்றார். இதனை,

நீச்சுநிலை யற்ற யோனிக்கேணி யாழ்ந்தடிமை
நீந்தாது னருள்பு ரியவும்
நட்டுக் கருந்தேளை யொத்தமுலை யென்றன்மேல்
நாட்டாம லருள் புரியவும்
நாறுநாரி யர்கள்புண் ணாற்றமோர் கணவினு
நாடாம லருள்பு ரியவும் (நியமநிலை: 8)

எனப்பாடியுள்ளார்.

அத்துவைதம் ஓதும் ஞானிகள் சாதிமதபேதங்களை வெறுத்தனர். சிவவாக்கியரது பாடலில்,

"கோயிலாவது ஏதடா? குளங்களாவது ஏதடா?
கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே
கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே" (30)

எனுங் கருத்து வலியுறுத்தப்படுவதனைக் காணுகிறோம். இதனைக் குணங்குடியார்,

"சாத்திரங்களோதுஞ் சழக்கார் தமக்குமருள்
மாத்திரைப் போதேனும் வருமோ நிராமயமே"
(நிராமயக்கண்ணி: 44)

5. M.M. Uwise, **Muslim Contribution to Tamil Literature**, pp.185; 187.

"தீதுமத பேதங்களற்றுமே எங்குமிது
செல்வதுவும் எக்காலமோ" (மு.ச.103)

"மதபேதம் ஓதிமதி கெட்டவர்க்கு எட்டாத
வான்கருணை வெள்ளம்" (மு.ச.42)

"மதமத்தமைனயுமற்ற மதமுற்று யானும்உம்
மதமாக அருள்புரியவும்.." (சமாதிநிலை-7)

என்றெல்லாம் விதந்தோதுகின்றார்.

எல்லாவுயிர்களையும் ஒப்பாகக் காணுகின்ற நெறி சார்ந்தவர்கள் ஞானிகள். அத்துவைதக் கோட்பாட்டின் தாக்கத்தாலும் இவ்வுணர்வு கூர்மையடைந்திருக்கலாம். குணங்குடியார் இதனை,

"கொல்லா விரதத்தைக் கொல்லக் கொலைஞருள்ளங்
கல்லாகத் தானோ கணித்தாய் நிராமயமே" (நி.க.61)

என்று வெளிப்படுத்துகின்றார். குணங்குடியாரின் அத்துவைதக் கருத்துக்களில் இந்தியத் தத்துவங்களின் தாக்கங்கள் மிகுந்திருப்பதை இதுபோன்ற பாடல் பகுதிகள் வலியுறுத்துகின்றன.

காளங்குடிமச்சரேகைச் சித்தரது பாடல்களும் இது போன்ற தன்மையுடையனவே. இதனால் இவரது பாடல்களைப் புரிந்துகொள்ள இந்துமத, இசுலாமியத் தத்துவங்களை ஆழமாகக் கற்றிருக்க வேண்டுமென்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[6] மச்சரேகைச் சித்தரும் சாதிமத பேதங்களைக் கடிகின்றார்.

"சாதிமத பேதமோடு ஓது பல சாத்திரம்
சாது தங்கத்திலில்லை" (ஹம்துப் பதிகம்: 9)

எனத் தனது 'திருப்பாடல்', மோட்ச சதகத்தில் இதனை வெளியிடக் காண்கிறோம்.

தக்கலை மாமேதை பீர்முஹம்மது சாகிப் அவர்களது படைப்புக்களில் இத்தத்துவம் பலநிலைகளில் உட்கருத்துப் பொதிந்து வெளியிடப்பட்டுள்ளது.

---

6. M.M. Uwise Ibid, p.192.

"அவ்விருளா யங்கோ ரணுவுமியங் காமலெழுந்
தெவ்வுயிரும் தானா யிருப்பவனே"
(ஞானப்புகழ்ச்சி:606)

என்றும்,

"உகந்தெனக்கு ளீரொன்றான வுட்கலந்த சோதியைப்
பகர்ந்திடிற் பராபரத்தி லுற்றமான மந்திரம்"
(ஞானமணிமாலை: 224)

என்றும் அத்துவைதக் காட்சியைத் தெளிவாக விளக்குகின்றார் 'அப்பா' அவர்கள்.

இறைவன் நமக்குள்ளேயே இருக்கின்றான் என்ற கொள்கையை ஞானிகள் ஏற்றுக்கொள்வதுண்டு. இறைத் தூதர் நபிபெருமானே ஒருமுறை அபுல் ஹிகமிடம், 'நம்மிலே இருக்கக்கூடிய ஆண்டவனை நமக்குள்ளேயே உணர்ந்து வழிபடுவதை விட்டு வெளியில் ஏன் தேடவேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்களாம்.[7] சித்தர்களில் ஒருவரான சிவ வாக்கியர் இக்கருத்தினை,

"நட்டகல்லைத் தெய்வமென்று நாலு புஷ்பம் சாத்தியே
சுற்றிவந்து முணமுணென்று சொல்லுமந்திரம் ஏதடா?
நட்டகல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ"
(சிவவாக்கியர்: 482)

என்று பாடியுள்ளார்.

பீர்முஹம்மது அப்பா அவர்கள் உயிர், உடல் எனப் பிரித்து நோக்கி ஆத்மா, பரமாத்மாக்களின் தன்மையைக் குறிப்பால் ஒரு பாடலில் உணர்த்துகின்றார்.

"நீதிபெறு முயிர் தன்னையோ விண்ணோர்
நெறிசே ருடலையோ கேட்பார் பின்னே
சோதியருட்படி நரகி லிட்டுச்
சுடும்போது படுந்துயரவனோ நாமோ"
(ஞானப்புகழ்ச்சி: 24)

மற்றொரு பாடலில் அடியார்களின் உடலில் உறைந்துள்ள பரம்பொருளைக் காணுகிறார் அப்பா.

7. மணவை முஸ்தபா, தமிழில் இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்கள், ப.172.

"அடியருடல் நின்றடிமைகொள்பவனு நீயே"
(ஞா.பு. 59)

அனைத்துப் படைப்புக்களும் இறைவனின் கருணைசார்ந்த ஒன்றுநிலை பெற்றவை என்பதனைப் பலவாறாக அப்பா அவர்கள் வலியுறுத்துகின்றார்.

"ஜின்னும் வெகு சீவனுறு தேவுகளு நீயே
செங்கமல மங்கொளிது லங்குவது நீயே"

"குறைபடுங் காயந் தனக்கரசாய்நின்ற கொற்றவனே"
(ஞா.பு. 105)

"நீயே படைத்துயி ரெல்லார்க்குமீந்து நிலைபெற்றதால்"
(117)

"பார்த்திபனே பர மானவனேபடைத் தெவ்வுயிர்க்கும்
பூத்துயி ரானதெல் லாமறியப் பொது வானவனே"
(ஞா.பு. 392)

"....எட்டாதிருப் போனை - நினைத்துப் போய்க்
காட்டிலே தேடினாற் காணாது காணுமுடல்
வீட்டிலே தேடாய் விரைந்து"
(ஞானமணிமாலை: 128)

"உகந்தெனக்கு ளீரொன்றான வுட்கலந்த சோதியைப்
பகர்ந்திடிற் பராபரத்திலுற்ற மான மந்திரம்"
(ஞானமணிமாலை: 224)

"சரியை யொடு கிரியை வழி தானறிந்து சேரத்
தாண்டு பனிரண்டுபரி தன்னிடமே சாரத்
துரியதுரி யாதீத யோகமதிற் கூடச்
சுடரொளி" (ஞானப்பூட்டு)

பீர்முஹம்மது அப்பா அவர்களின் பாடல்களுக்கும் அப்பரின் தேவாரப் பாடல்களுக்கும் சில ஒப்புமைகளைக் காணுகிறார் பேராசிரியர் உவைஸ்.[8]

தமிழில் இசுலாமிய இலக்கியங்கள் பலவாகத் தோன்றியுள்ளன. இவற்றில் மெய்ஞ்ஞானப் பாடல்கள் தனித் தன்மையுடையனவாகக் காணப்படுகின்றன. இஸ்லாம்

8. M.M. Uwise, Ibid, p.195.

காட்டுகின்ற அத்துவைதம் ஒருநிலையிலும், இந்தியத் தத்துவங்கள் காட்டுகின்ற அத்துவைதம் ஒருநிலையிலும் இப்படைப்புக்களில் தாக்கம் கொண்டுள்ளன. குணங்குடியார், மச்சரேகைச் சித்தர், பீர்முகம்மது அப்பா ஆகியோர் பாடல்களில் இந்தியத் தத்துவங்களின் தாக்கம் மிகுதியாகக் காணப்படுகின்றன. ஞானநெறி நின்ற துறவிகள் இவர்கள். உலகப் படைப்புக்களில் சாதிமத பேதம், ஏற்றத்தாழ்வுகள் எவையுமே கருதக்கூடாது எனும் உயர்நோக்கம் இம்மூவரது பாடல்களிலும் வெளிப்பட்டு நிற்கின்றன. உலகளாவிய சிந்தனையில் இம்மெய்ஞ்ஞானிகள் ஒற்றுமை கொண்டுள்ளமை வெளிப்படுகின்றது. இறைவனின் (பரம்பொருளின்) இருப்பிடமாய் ஆத்மாக்களைக் கொள்கின்ற ஞானக்காட்சியை இம்மகான்கள் உலகுக்கு உணர்த்தியுள்ளனர். இசுலாம் காட்டுகின்ற சகோதரத்துவ நிலையும் சமாதான நிலையும் உலகில் தோன்றுகின்ற நிறபேதம், வர்க்கபேதம், மதபேதம் ஆகியவற்றைப் போக்கச் சிறந்த கருவி என்பது உணரப்படல் வேண்டும். ஆதம் நபியை முதல் மனிதராகக் கொண்டு தோன்றிய மனித வர்க்கத்தினர் சாதிமத பேதங்கூறிப் போரிடும் இந்நாளில் இசுலாம் கூறும் அத்துவைதக் கருத்துக்களை மனதிலிருத்த வேண்டியது தவிர்க்கமுடியாதது ஆகும்.

பயன்பட்ட நூல்கள்

1. அப்துல் ரகுமான் (குறிப்புரை). குணங்குடியார் பாடற் **கோவை,** செல்மா, 2, சிவன் கோவில் தெற்குத் தெரு. சிவகங்கை, *1990.*
2. கோவேந்தன், த., *சித்தர் பாடல்கள்* (4-ஆம் பதிப்பு), பூம்புகார் பதிப்பகம், சென்னை, *1987.*
3. பீர்முகமது அப்பா. *மெய்ஞ்ஞானப் பாடல்கள்.* அஞ்சு வன்னம் பீர்முஹம்மதியா முஸ்லிம் அசோஸியேஷன், தக்கலை. *1995.*
4. மணவை முஸ்தபா. *தமிழ் இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்கள்,* மீரா பௌண்டேஷன். சென்னை-*40.*
5. *மஸ்தான் சாகிபவர்கள் பாடல்,* பி. ரத்தினநாயகர் சன்ஸ், சென்னை.
6. Karunakaran. R., **The concept of Sat in Advaita Vedanta**, Sri Sankara Sanskrit Vidyapeetham, Quilon, 1980.
7. Uwise, M.M., **Muslim Contribution to Tamil Literature**, 5th I.J.T.L Conference, Kilakarai, 1990.

தமிழகமும் கணபதி வழிபாடும்

நடன. காசிநாதன்

தமிழகத்தில் கணபதி வழிபாடு தொன்றுதொட்டு நிலவியதா அல்லது ஒரு கால கட்டத்தில் வேறு இடத்திலிருந்து தமிழகத்துக்கு வந்ததா என்பது பற்றி இன்றும் கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. ஆனால் பெரும்பாலான கருத்து இவ்வழிபாடு சாளுக்கிய நாட்டின் தலைநகரான வாதாபி யிலிருந்து கி.பி. 7ஆம் நூற்றாண்டில் பல்லவப் பெருவேந்தன் நரசிம்மவர்மன் காலத்தில் அவரது தளபதியான பரஞ்சோதி என்னும் சிறுத்தொண்டரால் தமிழகத்தில் தொடங்கப்பட்டது என்பதாகும்.

இக்கருத்தை, அண்மைக் காலங்களாகக் கிடைத்து வரும் தொல்பொருள் சான்றுகளால் மாற்றிக்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. இதற்கு முன்பாக, இந்தியாவின் வடபகுதியில் கணபதி பற்றிய, தொடக்கக் காலக் கருத்து என்ன, பின்பு நாளாவட்டத்தில் எக்கருத்து உருவானது என்பவற்றைப் பார்க்கலாம்.

தொடக்கத்தில், ரிக் வேத காலத்தில் கணங்களின் தலைவனாகத்தான் 'கணபதி' மதிக்கப்பட்டார். 'கணம்' என்பதைப் பழங்குடி மக்கள் என்ற பொருளில் தான்

வேதகால மக்கள் கொண்டனர்[1]. வேதகால மக்களும் கிட்டத் தட்ட அதே நிலையில் இருந்ததால் கணங்களைத் தங்கள் நண்பர்களாகவே பாவித்தனர். கணபதியை அவர்களது தலைவராகவே கொண்டனர். வேதகாலத்துக்கு அடுத்த காலக் கட்டத்தில் நிகழ்ந்தது போன்று, கணங்களை அவர்கள் வெறுக்கவில்லை என்று தேவிபிரசாத் சட்டோபாத்யாயா கூறியுள்ளார்[2]. அலிஸ் கெட்டி என்பார், 'கணபதி திராவிடர்களின் கடவுள் என்றும் சூரியனை வணங்கி வந்த பழங்குடியினர் கணபதியை வழிபட்டு வந்தனர் என்றும் சில அறிஞர்கள் கருதுகின்றனர்' என்று குறிப்பிட்டுள்ளார்[3]. ஆனால் கி.மு. 5ஆம் நூற்றாண்டளவில், 'மாணவ க்ருஉற்ய சூத்திரத்தில்' தீமைகளின் மொத்த உருவமாகக் கணபதி விவரிக்கப்பட்டுள்ளார்[4].

மனுதர்மசாஸ்திரம், 'கணயாகம்' செய்பவர்களைக் கரும காரிய விருந்திலிருந்து (இறந்தவரை அடக்கம் செய்த பின் உண்ணும் விருந்து) நீக்கி வைக்கப்படுதல் வேண்டும் என்று தெரிவிக்கிறது[5]. மேலும் கணபதி ஒதுக்கப்பட்டவர் களின் - அதாவது சூத்ரர்களின் கடவுள் என்று கூறுகிறது[6]. சூத்ரர் என்போர் மனுதர்ம சாஸ்திரப்படி கிழிந்த ஆடைகளைத் தரித்து, கழிக்கப்பட்ட உணவுகளை உண்போர் ஆவர்[7].

யக்ஞவல்க்யம், தீமைகளை ஏற்படுத்தலுக்காக, கணங்களின் தலைவனாக, விநாயகர் ருத்ரனாலும், பிரம்மாவினாலும் நியமிக்கப்பட்டார் என்று கூறுகிறது.[8]

தீமை செய்வதற்காக நியமனம் செய்யப்பெற்றவர் தீமைகளைக் களையும் கடவுளாகப் பின்னாளில் மதிக்கப் பட்டுப் போற்றப்படலானார். அக்கொள்கையே இற்றை நாளில் நிலவி வருகிறது.

---

1. **SED** 343
2. **Lokayata,** p.146 (pub.1978)
3. **Tamil Culture** Vol.II, No.2, p.170.
4. **Manava Grithya Sutra,** ii 14
5. **Manu Dharma Sastra** iii 164
6. **Manu** V. Q 1931-2. 475.
7. **Manu**, X 125
8. **Yajnavalkya**, 1. 271 ff Free rendering

கணங்கள் என்ற பழங்குடி மக்களின் தலைவனான கணபதி, வேதகால மக்களின் நண்பனாக மதிக்கப்பட்டு, கி.மு. ஐந்தாம் நூற்றாண்டளவில் 'தீமைகளின் மொத்த உருவம்' என்று வருணிக்கப்பட்டு, மனு காலத்தில் சூத்திரர்களின் கடவுளாகக் கொள்ளப்பட்டு, யக்ஞவல்க்யர் காலத்தில் தீமை களை உண்டாக்குவதற்காக ருத்ரனாலும் பிரம்மாவாலும் நியமனம் செய்யப்பட்டவர் என்று கருதப்பட்டுள்ளார். அக் கடவுள் பின்னாளில் தீமைகளைக் களைபவராக வணங்கப்பட்டார்.

இந்நிலைகள் தமிழகத்தில் ஏற்பட்டனவா என்று பார்ப்பது பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. கணபதி வழிபாடு மிகப் பழங்காலந்தொட்டே தமிழகத்தில் தொடங்கியிருக்க வேண்டும் என்று ஊகிப்பதற்கு அண்மைக் காலங்களில் இலக்கிய மற்றும் தொல்லியல் தடயங்கள் கிடைத்துள்ளன.

முதலாவதாகச் சில ஆகமங்களைக் குறிப்பிடலாம். அனைத்துச் சிவாகமங்களும் கணபதி வழிபாட்டு முறையை விளக்குகின்றன. கணபதி வழிபாடு தனிப்பட்டோர் வழிபாடாகவும், கூட்டு வழிபாடாகவும் விவரிக்கப்பட்டுள்ளது. ஆகமங்களின் காலம் புத்தர் காலத்துக்கு முன்பாக அதாவது கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்பாகக் கருதப்படுகிறது. மேலும் இவை தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில், சிவாச்சாரியர்களால் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது. ஆதலால் கணபதி வழிபாடு கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்பாகவே தமிழகத்தில் நிலவியிருக்க வேண்டும் என்று அறிய முடிகிறது[9].

சிறந்த நாகரிகக் காலமாக விளங்கிய சங்க காலத்திலேயே, ஒரு பக்கம் மலை வாழ் மக்களாகிய பழங் குடியினரும் வாழ்ந்திருக்கிறார்கள். ஏனெனில் சங்க காலப் புலவர்களில் பலர் பல்வகைக் குடிகளைச் சார்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். உதாரணமாகக் கடுவனிளமள்ளனார், கடுவனிள வெயினனார், எருமைவெளியனார், எழும்பன்றி நாகன் குமாரன், ஓதலாந்தையார் ஆகியோரைக் காட்டலாம். (நண்டு, எருமை, பன்றி, ஆந்தை ஆகிய குடிகளை இவை காட்டா நிற்கும்). அத்தகைய பழங்குடிகள் இந்தியாவின்

---

9. SIS Vol.II M. Arunachalam p.32

அனைத்துப் பகுதிகளிலும் வாழ்ந்திருக்கின்றனர். அவ்வாறு வாழ்ந்த பழங்குடிகளுள் ஒரு குடியினர் யானையைத்தம் குலச் சின்னமாகக் கொண்டிருத்தல் கூடும். மற்றொரு குடியினர் எலியைத் தங்கள் குலச் சின்னமாகப் பெற்றிருக்கலாம். 'மூஷிக' வமிசம் என்ற ஒரு குடியினர் தென்னிந்தியாவில் இருந்திருக்கின்றனர் என்பது மகாபாரதத்தில் குறிப்பிடப் படுவதாக ஜயஸ்வால் கூறியுள்ளார்.[10] மேலும் காரவேலனின் ஹஸ்திகும்ப கல்வெட்டும், காரவேலன், மூஷிகர்களைத் தோற்கடித்து, அவர்களது தலைநகரத்தைக் கைப்பற்றிக் கொண்டதாகக் கூறுகிறது.[11] ஆதலால் யானையைக் குலச் சின்னமாகக் கொண்டவர்கள் எலியைக் குலச் சின்னமாகக் கொண்டவர்களை வென்றிருப்பதையே இது காட்டுகிறது என்று கருதப்படுகிறது.[12] மேற்கூறப்பட்ட யானையைக் குலச் சின்னமாகக் கொண்டவர்கள் தங்கள் தலைவனுக்கு யானை உருவ முடி சூட்டி மகிழ்ந்திருப்பர். அவர்களது தலைவன் இறந்த பிறகு அதே உருவில் தலைவனுக்கு உருவம் அமைத்து வழிபட்டிருப்பர். 'மூஷிக' உருவத்தைக் குலச் சின்னமாகப் பெற்றவர்களை வென்ற காரணத்தால் அவ்வெலியைத் தலைவனுடைய காலினடியில் கிடத்திவிட்டனர். இப்படித் தான் இந்தியாவில் கணபதி வழிபாடு தொடங்கப்பட்டிருத்தல் கூடும். ஆதலால் தான் இவ்வழிபாடு சூத்ரர்களால் கொள்ளப் பட்டது என்று கூறப்பட்டிருக்கிறது. பழங்குடி மக்களிடையே நிலவிய இவ்வழிபாடு நாகரிகம் பெற்ற மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்குச் சில நூற்றாண்டுகளாகிவிட்டன. ஆதலால் சங்க காலத்திலிருந்து தமிழகத்தில் கணபதி வழிபாடு செல்வாக்குப் பெறத் தொடங்கிவிட்டது எனலாம்.

இக்கருத்துக்குச் சான்றாகச் சங்ககாலத் தமிழிலக்கிய-மான புறநானூற்றுப் பாடல் ஒன்றைக் காட்டலாம்.

> "நல்லவும் தீயவும் அல்ல; குவியிணர்ப்
> புல்லிலை எருக்கம் ஆயினும் உடையவை,
> கடவுள் பேணேம் என்னா; ஆங்கு,
> மடவர் மெல்லியர் செல்லினும்
> கடவன் பாரிகை வண்மையே"[13]

10. J. Bors iii 442
11. Ibid, iii 462
12. Debiprasad Chattapadhyaya, **Lokayata**, p.144
13. புறம். *106.*

என்ற பாடலாகும் அது. கடவுள், எருக்கம் இலையைத் தந்து வழிபட்டாலும் எல்லா பக்தர்களையும் ஒன்றாகத் தான் கருதும்; வேறுபாடு காட்டாது என்பது இப்பாடலின் மையப் பொருள். இங்கு எருக்கு இலை குறிப்பிடப்படுவது கணபதி வழிபாட்டை நினைவுபடுத்துகிறது. ஏனெனில் எருக்கு மாலையைத் தான் கணபதிக்குச் சூட்டி மக்கள் வழிபடுவர். ஆதலால் சங்க காலத்திலேயே கணபதி வழிபாடு இருந்தது என்பது இதன் மூலம் தெளிவுறும்.[14] மேலும் திருச்சி மாவட்டம் குளித்தலை வட்டம் திருக்காம்புலியூர் மற்றும் முசிறி வட்டத்திலுள்ள அலகரை ஆகிய இடங்களில் சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறை கண்டுபிடித்துள்ள கணபதி மற்றும் அவரது வாகனமான எலிகளின் சுடுமண் உருவங்களைக் காட்டலாம்.[15] இவ்வுருவங்களின் காலம் கி.பி. 4-5ஆம் நூற்றாண்டு என்று தொல்லியலாளர்களால் கூறப்பட்டுள்ளது.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திலுள்ள, பிள்ளையார்பட்டியில் காணப்பெறும் குடைவரைக் கோயிலில் ஒரு பழமையான கல்வெட்டும், கணபதியின் புடைப்புச் சிற்பமும் அருகருகே காணப் பெறுகின்றன. இக்கல்வெட்டு,

> 'எருகாட்டூரு
> க்கோன் பெருத்தசன்'

என்று எழுதப்பட்டுள்ளது. இதன் காலத்தைத் திரு. ஐ.மகாதேவன் அவர்கள் கி.பி. 5-6ஆம் நூற்றாண்டெனக் கணித்துள்ளார்.[16] இக்கல்வெட்டுப் பொறிக்கப்பெற்ற காலத்திலேயே தான் அங்குள்ள கணபதியின் உருவமும் செதுக்கப் பெற்றிருத்தல் வேண்டும். ஆதலால் கி.பி. 5-6ஆம் நூற்றாண்டிலேயே கணபதி வழிபாடு மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்குப் பெற்றுவிட்டது என்று கருதலாம். எருக்காட்டூர் சங்ககாலத்திலிருந்தே நிலவி வரும் ஊர் என்பதை 'எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்' என்ற சங்கப் புலவரின் பெயர் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

---

14. M. Arunachalam, S.I.I. Vol.II. p.45
15. T.V. Mahalingam, **Report inthe excavations in the Lower Kavery Valley, 1970**, pp.59, 105.
16. **கல்வெட்டுக் கருத்தரங்கு,** 'Corpus of the Tamil Brahmi Inscriptions', p.68

கி.பி. ஆறாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்திய தாகக் கருதப்படும் புடைப்புச் சிற்பத் தொகுதிகள் சிலவற்றில் கணபதி உருவம், பிரமன், சிவலிங்கம், பார்வதி, முருகன் ஆகிய உருவங்களோடும், மற்றொன்றில் மூத்தோள் (சேட்டை) உருவத்துடனும் காணப்படுகிறது.[17] இவ்வளர்ச்சி, பழங்குடி மக்களின் (சூத்ரர்களின்) இறைவனாக இருந்த கணபதி நாகரிகம் பெற்ற மக்களின் இறைவனாக மாற்றம் பெற்ற காலமாகும். அதனால் தான் மும்மூர்த்திகளான பிரம்மன், சிவன், திருமால் ஆகியோரோடு ஒருங்கே வைத்துப் பூசிக்கப் பட்டிருக்கிறார். இப்புடைப்புத் தொகுதிகளிலுள்ள கணபதி உருவத்துக்கும் பிள்ளையார்பட்டி கணபதி உருவத்துக்கும் மற்ற உருவங்களுக்கு உள்ளது போன்றே இரண்டு கரங்கள் தான் காணப்படுகின்றன. மேலும் வலம்புரி வினாயகராகவே உள்ளனர். எனவே தமிழகத்தில் தொடக்கக் காலத்தில் கணபதி தும்பிக்கையையும் சேர்த்து முக்கரத்துடனே வழிபடப் பட்டிருக்கிறார்.

செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்தில், வல்லத்தில் மகேந்திரவர்மன் காலத்தியதாகக் கருதப்படும் குடைவரைக் கோயிலில், ஒரு சன்னதியின் முன்பாக உள்ள இரு தூண்களில் ஒன்றில் கணபதியின் உருவமும் மற்றொன்றில் சேட்டையின் சிற்பமும் செதுக்கப்பட்டிருக்கின்றன.[18]

விநாயகர் மும்மூர்த்திகளோடு ஒருசேரக் கொண்டு வரப்பட்டுவிட்டாலும் சிறு தெய்வங்களோடு அவரைச் சேர்த்து வழிபடும் முறையும் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. சேட்டைத் தெய்வத்தோடு தொடக்கத்தில் இவர் வழிபடப்பட்டது போன்றே பின்னாளில் சப்தக்கன்னியர் சிற்பங்களோடு கணபதியின் உருவம் வைத்து வழிபடப் பட்டிருக்கிறது. சென்னைக்கு அருகிலுள்ள குன்றத்தூரில்தான் தாய்மார் எழுவரின் மிகப் பழமையான சிற்பங்கள் காணப் படுகின்றன. அவற்றோடு கணபதியின் சிற்பமும் அங்கு உள்ளது.[19] இச்சிற்பங்கள் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதிக்

17. Natana Kasinathan, **Art Panorama of Tamils**, 'Exquisits Panel Sculptures of Tamilnadu', pp.25-28.

18. M. Arunachalam, **S.I.S. Vol.II**, 'Purananuru and a re-thinking on Ganapathi Worship in Tamilnadu', pp.41-46.

19. நடன. காசிநாதன், கல்வெட்டு (காலாண்டிதழ்) எண்.14

காலத்தையோ அல்லது ஏழாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தையோ சார்ந்தவையாகும்.

உமையோடு கணபதி சேர்க்கப்பட்ட பின்னர் சிவனின் மகனாக அப்பர் பெருமானால் கீழ்வரும் பாடல் வரிகளில்

"தக்கனது வேள்விகெடச் சாடினானைத்
தலை கலனாப் பலியேற்ற தலைவன் தன்னைத்
தொக்கரைகச் சரிவீணைப்பாணியானைக்
கோணாகம் பூணாகக் கொண்டான் தன்னை
அக்கினொடும் என்பணிந்த அழகன் தன்னை
ஆறுமுகனோடு ஆனைமுகற்கப்பன் தன்னை
நக்கனை வக்கரையானை நன்பாற் றானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே"

என்று பாடப்பட்டுள்ளார்.[20] அப்பரது காலம் கி.பி. 580 முதல் 660 என்று வரையறுத்துள்ளனர்.

முத்தமிழ் ஞானசம்பந்தரும்,

"சந்தநன் மலர் அணி தாழ்சடையன்
தந்த மதத்தவன் தாதையோதான்"

என்று பாடியுள்ளார்.[21]

எனவே சிறுத்தொண்டர் என்ற பரஞ்சோதி காலத்துக்கு முன்பாகவே அப்பராலும் ஞானசம்பந்தராலும் கணபதி கூறிக்கப்பட்டுள்ளமை இதன் மூலம் தெரியவரும்.

சம்பந்தர் திருச்செங்காட்டாங்குடியில் இருந்த கோயிலைச் சிறுத்தொண்டர் 'கணபதீச்சுரம்' என்றுதான் கூறியுள்ளார்.

"பொன்னம்பூங் கழிக்கானற்
புணர்ந்துணையோ டுடன் வாழ்
அன்னங்காள் அன்றில் காள்
அகன்றும் போய் வருவிர்காள்
கன்னவில் தோள் சிறுத்தொண்டன்

---

20. மூவர் தேவாரம்:தலைமுறை (அடங்கல்முறை) திருநாரையூர், ப.289 (காஞ்சி மடம், கும்பகோணம் வெளியீடு, 1988).

21. Ibid. திருவிராமனதீச்சுரம், ப.819

கணபதீச்சுரம் மேய
இன்னமுதன் இணையடிக்கீழ்
எனதல்லல் உரையீரே"
(திருஞானசம்பந்தர் தேவாரம், திருச்செங் காட்டங்குடி பதிகம், பாடல் 2)

சிறுத்தொண்டர் கணபதிக்குக் கோயில் எடுப்பித்தார் என்று பொருளில்லை. சிறுத்தொண்டர் வழிபட்ட கணபதீச்சரம் என்றுதான் கொள்ளல் தகும். ஏனெனில் சிறுத்தொண்டருக்கு முன்பாகவே திருச்செங்காட்டங்குடியில் கணபதியால் வழிபடப்பட்ட ஈச்சுரம் அங்கு இருந்ததாலே யாகும். நரசிம்ம பல்லவ மன்னனின் வெற்றிகளைப் பட்டிய-லிட்டுத் தரும் அவன் காலத்திய செப்பேடுகளோ மற்றும் கல்வெட்டுகளோ பரஞ்சோதி வாதாபியிலிருந்து கணபதி உருவத்தைக்கொண்டு வந்ததாக யாங்கணும் தெரிவிக்க வில்லை. மன்னர்கள் வெற்றிப்பரிசாகக் கலைப் பொருட்களைப் பிற பகுதியிலிருந்து கொண்டு வந்திருக்கின்றார்கள். முதலாம் இராஜேந்திரன், விஜய இராஜேந்திரன் ஆகியோர் காலங்களில் வெற்றிச் சின்னங்களாகப் பிற பகுதிச் சிற்பங்கள் கொண்டு வரப் பட்டிருக்கின்றன.[22] ஆனால் நரசிம்மன் காலத்தில் வாதாபியிலிருந்து கணபதியின்உருவம் கொண்டுவரப் பட்டதாகச் சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. அப்படிக் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று வரலாற்று வித்தகர் திரு. சதாசிவ பண்டாரத்தார் ஊகித்திருக்கிறார், அவ்வளவே. சிறுத்தொண்டர் வரலாற்றைக் கூறும் பெரியபுராணமும்

"மன்னவர்க்குத் தண்டுபோய்
வடபுலத்து வாதாபித்
தொன்னகரம் துகளாகத்
துளை நெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும்
பகட்டினமும் பரித்தொகையும்
இன்னவெண்ணிலகவர்ந்தே
இகலரசன் முன்கொணர்ந்தார்"
(சிறுத்தொண்டர் புராணம் பாடல் 6)

என்ற வரிகளில், பரஞ்சோதி கணபதி உருவத்தை வாதாபி யிலிருந்து கொண்டுவந்ததாகக் குறிப்பிடவில்லை.

---

22. தி.வை. சதாசிவபண்டாரத்தார், இலக்கியங்களும் கல்வெட்டுக் களும், மணிவாசகர் பதிப்பகம், வெளியீடு 1977, ப.96.

மன்னவனை விடைகொண்டு தம்பதியின் வந்தடைந்து
பன்னுபுகழ் பரஞ்சோதியார் தாமும் பனிமதிவாழ்
சென்னியரைக் கணபதீச்சரத்திறைஞ்சித் திருத்தொண்டு
முன்னை நிலைமையில் வழுவா முறையன்பிற் செய்கின்றார்.
(சிறுத்தொண்டர் புராணம் பாடல் 11)

என்று குளிர்ந்த பிறையைத் தலையிலே சூடிய சிவபெருமானைக் கணபதீச்சரத்தில் வணங்கித் தம் திருத்தொண்டுகளைப் புரிந்துவந்தார் என்றுதான் சேக்கிழார் கூறியுள்ளார். ஆதலால் கணபதி வழிபாடு தமிழகத்தில் சங்க காலத்திலிருந்து தொடர்ந்து நிலவி வருகிறது என்று கொள்வதே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது.

திருமுறைகளில் சங்கரர்க்கு முற்பட்ட வேதாந்தச் சிந்தனைகள்

முனைவர் சோ.ந. கந்தசாமி

இந்திய மெய்ப்பொருள் சிந்தனைகளில் வேதாந்தம் எனப்படும் அத்துவிதச் சிந்தனை சிறப்பாகப் பேசப்பெறுகிறது. பிரமசூத்திரம், உபநிடதம், கீதை ஆகிய மூன்று அடிப்படைப் பனுவல்களிற் பொதிந்துள்ள மெய்ப்பொருட் கோட்பாட்டினை உரையாசிரியர்கள் தத்தம் சிந்தனை வளத்திற்கும் உணர்வுத்திறனுக்கும் ஏற்ப விரித்து விளக்கவும் நிலை நாட்டவும் முயன்றுள்ளனர். அவர்களுள் ஆதிசங்கரர் வழங்கிய விளக்கம் வேதாந்த மெய்ப்பொருளாக முழுமை பெற்றது. இப்பெரியார் கி.பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சேரநாட்டில் காலடிஎன்ற ஊரில் அந்தணர் குலத்தில் தோன்றியவர். மேற்சுட்டப்பெற்ற பிரத்தானத் திரையத்திற்கு இவர் எழுதியுள்ள பேருரைகளிலும், உபதேச சகத்திரி, விவேக சூடாமணி முதலிய மூல நூல்களிலும் வேதாந்தக் கருத்துக்களை விரிவாகக் கூறி அத்துவித உண்மையினை நிலைநாட்டியுள்ளார். சங்கரர் பாடியுள்ள சௌந்தரியலகரியில் தமிழ்க் குழவியாகிய திருஞானசம்பந்தரையும், சிவானந்த லகரியில் கண்ணப்பரையும் போற்றிப் பரவியுள்ளார். எனவே, சங்கரர்க்குத் திருமுறைப் பயிற்சியும் சிவனடியார்களிடத்தில் ஈடுபாடும் மிகுதியும் இருந்திருத்தல் வேண்டும் என்று உய்த்துணரலாம்.

சங்கரரின் ஆசிரியர் கோவிந்தர். அவரின் ஆசிரியர் கௌடபாதர். இப்பரமாசாரியர் கி.பி. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர்[1]. மாண்டூக்கிய உபநிடதத்திற்கு வேதாந்த விளக்கமாக இவர் இயற்றியுள்ள கவிதைப் பேருரை மாண்டூக்கிய காரிகை என்று பெயர் பெறும். அன்றியும், சங்கரரின் மூத்த சமகாலத்தவராக எண்ணப்பெறும் மண்டண மிசிரர் எழுதியுள்ள பிரமசித்தி என்ற நூலும் அத்துவித விளக்கமாக அமைந்துள்ளது. கிருதகோடி என்னும் சான்றோர் பிரமசூத்திரத்திற்கு உரை எழுதியுள்ளார். இவரை உபவருஷர் என்றும் போதாயணர் என்றும், திரமிடாசாரியர் என்றும் இந்தியவியல் அறிஞர்கள் வேறுவேறாகக் கருதுகின்றனர்[2]. எனின், இவர் எட்டுப் பிரமாணங்களை ஏற்றுக்கொண்டவர் என்பது மணிமேகலை வழங்கும் செய்தியாகும்[3]. எனவே, சங்கரர் காலத்திற்கு முன்பு வேதாந்த மெய்ப்பொருள் வடமொழிப் பனுவல்களில் போதிய அளவில் பொறிக்கப் பெற்றிருந்த உண்மை புலனாகும்.

திருமுறை ஆசிரியர்களில் சிறப்பாகச் சுட்டுதற்குரியவர்கள் திருமூலர், காரைக்காலம்மையார், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய அறுவரும் ஆவர். இவர்களில் முதலிருவரும் மூவர்க்கும் முற்பட்டுச் சுமார் கி.பி. 5ஆம் நூற்றாண்டளவில் விளங்கியவர்கள் என்பது அறிஞர் பலரின் துணிபு[4]. சம்பந்தரும் அப்பரும் கி.பி. 7ஆம் நூற்றாண்டினர். சுந்தரர் கி.பி. 8ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும், மாணிக்கவாசகர் கி.பி. 8ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலும் வாழ்ந்தவர்கள். இவர்கள் சிவபிரானை முழு முதற் கடவுளாகப் போற்றியவர்கள். இவர்தம் பாடல்களில் பயின்றுள்ள பல கருத்துக்களைத் தொகுத்துச் சைவ சித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கையாக மெய்கண்ட சாத்திர நூல்களில் சந்தான குரவர்கள் நிலைநாட்டியுள்ளனர். எனின், பிரத்தானத் திரையம் எங்ஙனம் வேதாந்தக் கோட்பாட்டிற்கு மட்டுமன்றி, விசிட்டாத்துவிதம், துவிதம்

---

1. S. Radhakrishnan, **Indian Philosophy**, Vol.II, p.452.
2. சோ.ந. கந்தசாமி, *தமிழும் தத்துவமும்*, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1976, ப.213-6.
3. *மணிமேகலை, 27:5-8; 14-52.*
4. C.V. Narayana Aiyar, **Origin and Early History of Saivism in South India,** University of Madras, 1974. pp.122-444.

முதலிய வேறுபட்ட தத்துவங்களின் விளக்கத்திற்கும் மேற்கோளாக அமைந்துள்ளதோ, அங்ஙனமே திருமுறைகளில் சைவசித்தாந்தக் கோட்பாட்டிற்குரிய பகுதிகள் பல காணப் பெறுதலுடன், வேதாந்தக் கோட்பாட்டிற்குரிய பகுதிகளாகக் கொள்ளுதற்குரிய பாடல்களும் காட்சி தருகின்றன. எனவே, தமிழகத்தில் பிறந்துள்ள சங்கரர் வேதாந்தத்தின் விற்பன்னராக விளங்குதற்கு வடமொழிப் பனுவல்களுடன் திருமுறைப் பாடல்கள் பலவும் உறுதுணையாக உதவியுள்ளன என்று எண்ணுதற்கு இடம் உண்டு.

எனவே, சங்கரர்க்குக் காலத்தால் முற்பட்ட திருமுறைகளில் பொதிந்து காணப்படும் வேதாந்தச் சிந்தனைகள் சிலவற்றை இக்கட்டுரையில் ஆராய்ந்து காண்போம்.

தமிழ்ப் பனுவல்களில் வேதாந்தம் என்ற தத்துவம் பல்வேறு பெயர்களினால் வழங்கப்பெறுதல் சுட்டுதற்கு உரியது. அத்துவிதம், மாயாவாதம், வேதாந்தம், ஏகான்ம வாதம், ஆன்மப்பிரமவாதம், சீவேசுவரஐக்கியவாதம், பிரதிபிம்பவாதம், அவச்சேதவாதம் என்பன ஒருபொருட் பன்மொழியாக வேதாந்தத்தைச் சுட்டுவன. சங்கரர்க்கு முதன்மை தந்து சங்கரமதம் என்ற பெயரினாலும் இத் தத்துவம் வழங்கி வருகின்றது. எனினும், திருமுறைகளில் வேதாந்தம், மாயாவாதம் என்ற இருபெயர்களினால் இம் மெய்ப்பொருளியல் சுட்டப்பெறும் பாங்கினைச் சற்று உற்று நோக்குவோம்.

வேதாந்தம்

வேதங்களின் அந்தம்-முடிபுப் பகுதியாகத் திகழும் உபநிடதங்களின் சாரமாக விளங்குதலின், அத்துவிதம் வேதாந்தம் என்று உபசரிக்கப்பட்டது. உபநிடதங்களில் ஆன்மா, பிரமம் ஆகிய இரண்டும் ஒன்றே என்றும், உலகும், உலகிற் காணப்பெறும் பொருள்களும் மாயை என்ற சக்தியின் உந்துதலால் தோன்றுவன என்றும் பிரமஞானம் வந்ததும் ஒருபொருளே என்ற உண்மை அனுபவப்படும் என்றும், அதுவே பிரமம் என்றும் கூறப்பெற்றுள்ளன. கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவராகிய திருஞான சம்பந்தர் **வேதாந்தன்** என்ற சொல்லைத் திட்டைத் திருப்பதிகத்தில் பயின்றுள்ளார்:

"உண்ணிலா ஆவியாய் ஓங்குதன் தன்மையை
விண்ணிலார் அறிகிலார் வேதவேதாந்தன் ஊர்
எண்ணிலார் எழில்மணிக் கனகமாளிகை இளம்
தெண்ணிலா விரிதரும் தென்குடித்திட்டையே"[5]

இறைவனை 'வேத வேதாந்தன்' என்று சம்பந்தர் கூறியிருப்பதை இருவகையாகப் புரிந்துகொள்ளலாம். வேதங்களும் வேதாந்தங்களுமே தமக்கு உருவமாகக் கொண்டவர் என்று எண்ணலாம். சம்பந்தரே மற்றொரு பாடலில், 'ஆகமச் செல்வனார்' என்று போற்றுதலினால், இறைவன் ஆகமச் சொரூபமாகவும் ஒளிர்பவர் என்று கருதலாம். ஞானநூல்களை, ஞானமயமான இறைவனாக உபசரித்துக் கூறுதல் ஒரு மரபு.

'வேத வேதாந்தன்' என்பது வேதங்களினாலும் வேதாந்தங்களினாலும் ஆராய்ந்து அறியப் பெறுவன் என்று இன்னொரு பொருள் கொள்ளலாம். வேத வேதாந்தங்களை அருளிச் செய்தவன் என்றும் எண்ணலாம். எங்ஙனமாயினும், திருஞானசம்பந்தர், வேதாந்தன் என்று ஈசனைப் போற்றுவதால், அவர் காலத்தில் 'வேதாந்தம்' என்ற சொல் நன்கு அறிமுகம் ஆகியிருந்த உண்மை புலனாகும். சம்பந்தர்க்கு மிகவும் பிற்பட்ட காலத்தில்தான் வைணவர்கள் 'வேதாந்தன்' என்ற சொல்லைத் தமிழில் பயின்றுள்ளனர் என்பதும் இங்கு இயைபு நோக்கி இயம்புதற்கு உரியது.

சம்பந்தர்க்குக் காலத்தால் முற்பட்டவராகக் கருதப் பெறும் திருமூலர் ஆறுவகை அந்தங்களில் வேதாந்தத்தையும் ஒன்றாக எண்ணியுள்ளார்[6]. ஒரு பாடலில் வேதாந்தம், மாயாவாதம் என்ற இரண்டையும் குறித்துள்ளார்.

"ஆகின்ற தொண்ணூறோ டாறும் பொதுவென்பர்.
ஆகின்ற ஆறாறு அருஞ்சைவர் தத்துவம்;
ஆகின்ற நாலேழ் வேதாந்தி; வைணவர்க்கு
ஆகின்ற நாலாறு; ஐயைந்தும் மாயாவாதிக்கே"[7]

இப்பாடலில் சைவசித்தாந்தம், வைணவம் என்பன இரண்டும் குறிக்கப்பெறுவதுடன், வேதாந்தமும் மாயாவாதமும் சுட்டப்

5. மூன்றாம் திருமுறை, 35.4.
6. திருமந்திரம் (காசிமடம் பதிப்பு), 2370.
7. திருமந்திரம் 2179.

பெற்றன. பின்னிரண்டும் அத்துவிதத்திற்குரிய பெயராக வழங்கப்பெறினும், ஒருசில காரணம் பற்றித் திருமூலர் அவ்விரண்டையும் வேறுபிரித்துக் கூறியிருத்தல் கூர்ந்து நோக்கத்தக்கது. வேதாந்தி 28 தத்துவங்களையும் மாயாவாதி 25 தத்துவங்களையும் பேசக்கூடியவர்கள் என்பது திருமூலர் காலத் தமிழகத்தில் சமயக் கணக்கரிடையே நிலவிய ஒரு கருத்தாகும். இதற்குமேல், இவ்விரு வகையினர்க்கும் உரிய ஏனைய வேறுபட்ட கருத்துக்கள் பொறிக்கப்படவில்லை. ஒருவேளை, அத்துவிதத்தின் இரு கிளைகளாக வேதாந்தமும் மாயாவாதமும் இருந்தனவோ என்று எண்ணத் தோன்றுகின்றது. எனின், இவ்விரண்டும் முடிந்த முடிபாகப் பார்க்குமிடத்து ஒரு மூலக் கொள்கையினை வலியுறுத்துவனவாகத் திகழ்கின்றன. அதுவே, ஒருபொருள் உண்மைக் கொள்கை (Monism) ஆகும்.

பல பனுவல்களில் வேதாந்தத்தின் பரியாயப் பெயராகவே மாயாவாதம் என்ற பெயர் வழங்கக் காண்கின்றோம். இப்பெயர்ச்சுட்டுக் குறித்தும் சிறிது ஆராய்தல் நலம் தரும்.

மாயாவாதம்

வேதாந்த மெய்ப்பொருட் கோட்பாட்டினை மாயா வாதம் என்று சுட்டுதற்கு முன்பே, நாகார்ச்சுனரின் மாத்தியமிகக் கொள்கை இப்பெயரினால் சுட்டப்பெற்ற உண்மையினைப் பேராசிரியர் தாசுகுப்தா ஆராய்ந்து கூறியுள்ளார்[8]. வாமன் சிவராம் ஆப்தே என்னும் அறிஞர் பதிப்பித்துள்ள வடமொழி ஆங்கிலேயப் பேரகராதியிலும் இக்கருத்து இடம்பெற்றுள்ளது[9]. மகாயான பௌத்தப் பனுவல்களில், ஏமாற்றுக் காட்சி, போலிப் பொருள், உருவெளி முதலியன மாயை என்ற சொல்லினால் சுட்டப்பெற்றன. அட்டா சாகத்திரிகா பிரஞ்ஞாபாரமிதை என்ற பனுவல் உடற்கூறு, உளக்கூறுகளாகிய ஐவகைக் கந்தங்களினால் காட்சிதரும் அனைத்துமே மாயை என்றும் சூனியம் என்றும் இயம்புகின்றது[10]. தோற்றங்கள் யாவும் மறைந்து காணப்படும்

8. S.N. Das Gupta, **History of Indian Philosophy**. Vol.I. p.470.
9. Vaman Sivaram Apte, **The Practical Sanskrit English Dictionary**, 1890. p.299.
10. **History of Indian Philosophy**, Vol.I. p.470.

குணம் குறியற்ற பாழ் அல்லது சூனியமே மேலான ஞானமாகப் பேசப்பெற்றது. கௌடபாதர் என்னும் வேதாந்தப் பெரியார், மாத்தியமிகப் பனுவல் பயிற்சியினால் தான் வேதாந்தத்தில் மாயைக் கோட்பாட்டினை வளர்த்துக் கொண்டார் எனச் சிலர் எண்ணினர்[11]. உலகக் காட்சி மாயையின் உந்துதலின் விளைவு என்ற கருத்து உபநிடதங்கள் சிலவற்றிலும் காணப் பெறுதலின், கௌடபாதர் மகாயானப் பனுவல்களுடன் உபநிடதங்களிலிருந்தும் இக்கருத்தினைக் கற்றுக் கொண்டிருத்தல் வேண்டும் என்பர் சிலர்.

எனின், திருமந்திரத்தில் சுட்டப்பெறும் மாயைக் கோட்பாடு அத்துவித வேதாந்தத்திற்கு உரியதாக அமைந்துள்ளது.

பிரமம் ஒன்றே உள்பொருள். எங்கும் எப்பொழுதும் அதுவே நிறைந்து இலங்குவது. மாயையின் ஆதிக்கத்தால் பொருட்பன்மையும், நிலைபேறின்மையும்,மாற்றமும் காட்சி தருவன. அவித்தை என்பது மாயையின் மற்றொரு பெயர். இதன் விளைவாகவே ஒருபொருளில் அதில் இல்லாத ஒன்றைக் காண்பதும், உள்ள பொருளை மறைத்தலும் நிகழ்கின்றன. மாயை என்பது பிரமத்தைப் போல உள்பொருளோ எனின் அன்று. ஆகாயப்பூப் போல இல்பொருளோ எனின் அன்று. எனவே, அதனைச் சொல்லொணாதது (-அநிர்வசனியம், அவாச்சியம்) என்பர். பாவரூபமே (Bhāva rūpa) அதன் வடிவமாகப் பேசப்படுவது. மாயையில் சத்துவம், இராசதம், தாமதம் என்ற முக்குணங்களும் உள்ளன. சத்துவகுண மாயையில் பிரமத்தின் தோற்றமே ஈசுவர தத்துவம் என்றும்; இராசத, தாமதகுண மாயையில் பிரமத்தின் தோற்றமே சீவதத்துவம் என்றும் வேதாந்தம் விளம்புகிறது. மாயை எண்ணற்ற உருவங்களையும் பெயர்களையும் கற்பிக்க வல்லது. என்றும் எங்கும் இருப்பதாகிய பிரம சொரூபத்தை நாம ரூபங்கள் மூடியுள்ளன. மாயைக்குரிய ஆவரண சக்தியைத் திருமந்திரத்தில்,

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
மரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
மரத்தின் மறைந்தது பார்முதற் பூதம்"[12]

---

11. Ibid.

12. திருமந்திரம், 2290.

எனவரும் பாடல் தெளிவுறுத்தக் காணலாம். உண்மைப் பொருளை மறைப்பதும், பொய்ப்பொருளைத் தோற்று வித்தலும் முறையே ஆவரணம், விட்சேபம் என்றும், இவ் விரண்டும் மாயையின் முக்கியச் சக்திகள் என்றும் வேதாந்த நூல்கள் விளம்பியுள்ளன. பிரமஞானத்தினால்தான் மாயையின் மறைப்பு, தோற்றம் என்ற ஆற்றல்கள் அகலும் என்பதைத் திருமூலர் தெளிவாக உணர்ந்தவர். எனவேதான்,

“மாயை மறைக்க மறைந்த மறைப்பொருள்
மாயை மறைய வெளிப்படும் அப்பொருள்
மாயை மறைய மறையவல் லார்கட்குக்
காயமும் இல்லை கருத்தில்லை தர்னே”

என்று தெளிவுறுத்தியுள்ளார்[13]. அவித்தை எனப்படும் மாயை ஆன்மஞானம் எனப்படும் பிரமஞானத்தினால் மட்டுமே அகலும். ஆன்மஞானம் பெற்றவர் பிறவார் என்பதைக் கடைசிப்பகுதி காட்டுகிறது.

மடம், ஐயம், திரிபுக் காட்சிகளுக்குக் காரணம் அறியாமை (-அவித்தை, அஞ்ஞானம்) ஆகும். இது மாயையின் மற்றொரு பெயர். மாயையும் அவித்தையும் ஒன்றெனக் கூறினும், முன்னது புறவயமானது (objective); பின்னது அகவயமானது(subjective). பிரமமும் ஆன்மாவும் ஒன்றெனல் போல், மாயையும் அவித்தையும் ஒன்றென்பர். ஈசுவர தத்துவத்தின் உபாதி மாயை என்றும், சீவ தத்துவத்தின் உபாதி அவித்தை என்றும் கூறுப.

கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தமிழகம் எங்கும் வேதாந்தம் எனப்படும் மாயாவாதம் சுழற் காற்றுப்போல வீசத் தொடங்கியது. இத்தத்துவ வாதிகள் தருக்க அறிவினாலும் சொல் வீச்சாலும் மக்களிடையேயும் மதவாதிகளிடையேயும் தம் கருத்துக்களைப் பலபடப் பேசியுள்ளனர். இவர்தம் போக்கினைத் தாங்கமுடியாத தன்மையில்,

“மிண்டிய மாயா வாதம் என்னும்
சண்ட மாருதம் சுழித்தடித் தார்த்து”

---

13. திருமந்திரம், 2548.

என்று மாணிக்கவாசகர் எடுத்துக்கூறுவதால் உய்த்துணரலாம்[14]. மற்றும்,

"ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறு மாயைகள் தொடங்கின"

என்றும் முடிவற்ற மாயையின் வரம்பற்ற ஆற்றலை வாதவூரர் குறித்துள்ளனர்[15]. தெற்கிலிருந்து வடக்கின் பல பகுதிகளுக்கும் பயணம் சென்று வேதாந்தத்தைத் தருக்கவாதங்களினால் நிலைநிறுத்திய ஆதிசங்கரரின் செயற்பாட்டினை மேற்குறித்த திருவாசகப்பகுதி உணர்த்துகின்றதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

கி.பி. 14ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுந்த சிவஞான சித்தியார் பரபக்கத்திலும் வேதாந்தம் மாயாவாதம் என்ற பெயரினாலேயே வழங்கப்பெறுதலின், தமிழ்ச் சமய இலக்கிய மரபில் இப்பெயர் கூடுதல் முதன்மை பெற்றிருந்த உண்மை புலனாகும்.

எனவே, அத்துவிதத் தத்துவம் வேதாந்தம், மாயாவாதம் என்ற இருவகைப் பெயர்களினால் முற்காலத் திருமுறைகளில் வழங்கி வந்துள்ளமை போதரும்.

இனி, திருமந்திரத்தில் காணப்பெறும் வேதாந்தக் கருத்துக்கள் சிலவற்றைத் தொகுத்துக் காண்போம்.

திரிபுடி ஞானம்

அறிபவன் (ஞாதுரு), அறியப்படும் பொருள் (ஞேயம்), அறிவு (ஞானம்) என்ற மூன்றையும் திரபுடி என்று தொகையாகச் சொல்லுதல் வேதாந்த மரபிற் காணப்படுகிறது. விழிப்பு நிலை, கனவுநிலைகளில் ஞாதுருவின் உணர்வு விளங்கித் தோன்றினும், கனவற்ற சுழுத்திநிலையில் காட்சிப் பொருள் அல்லது கருத்துப்பொருளை அறிதல் நிகழ்வதில்லை. இந் நிலையில், அறிபவன், அறிபொருள், அறிவு என்பன மூன்றும் ஒருமைநிலை உறுவதால் உணர்வு ஒன்றுதான் உள்பொருளாக விளங்கும். கௌடபாதரின் கருத்துப்படி, ஆன்மா அறிபவனாகவும் அறிபொருளாகவும் திகழ்கிறது[16]. வேதாந்திகள் கருத்துப்பொருள் உண்மை வாதிகள் (Idealists) ஆதலின்,

14. திருவாசகம், 4.54-5.

15. திருவாசகம், 4.44-5.

உள்ளமே உலகப் பொருளாக விரிந்து காட்சி தருதலின், உணர்வும் அதன் வெளிப்பாடாகிய பல்வகைப் பொருளும் அபேதமாகக் கொள்ளப் பெற்றன. ஆன்மாவில் மாயையின் உந்துதலால் உலகம் காட்சி தருகிறது. ஆன்மாவைத் தவிர, பன்மையாகக் காட்சிதரும் பொருள்கள் யாவும் மாயை, உருவெளி. எனவே, ஞாதுருவாகிய ஆன்மா மட்டுமே உள்பொருள் என்பதும் ஞானம் ஆன்மாவின் சொரூபம் என்பதும், மாயையின் தொடக்கினால் ஆன்மாவின் வெளிப்பாடாகவே உலகப் பொருள்கள் காட்சி தருவன என்பதும் வேதாந்தக் கருத்தாகும். திருமந்திரத்தில் ஒன்பது பாடல்களில் திரிபுடிஞானம் பேசப்படுகின்றது[17]. ஞாதுரு, ஞானம், ஞேயம் என்ற தலைப்பில் காணப்படும் இப்பாடல்கள் வேதாந்த விளக்கமாக அமைந்துள்ளன. ஆன்மாவாகிய தான் என்றும், பரமான்மாவாகிய அவனென்றும் வியவகார நிலையில் இரண்டாகப் பேசப்படும் தத்துவம். இவ்விரண்டையும் தன்னில் சுவானுபூதியாகக் கண்டு (-தரிசித்து), தான் என்ற மலரினை அவன் (-பரமான்மாவின்) அடியில் சார்த்தினால், நான் அவன் என்ற பேதக்காட்சி நீங்கி, சீவேசுவர ஐக்கியம் சித்திக்கும் என்கிறார் திருமூலர்:

> "தான்என் றவன்என் றிரண்டாகும் தத்துவம்
> தான்என் றவன்என் றிரண்டும் தனிற்கண்டு
> தான்என்ற பூவை அவனடி சாத்தினால்
> நான்என்று அவன்என்கை நல்லதுஒன் றன்றே"[18]

இதே பகுதியில்,

> "... சிவமாக்கி ஞேயத்தால்
> அச்சங் கெடுத்தென்னை ஆண்டனன் நந்தியே"[19]

> "தன்னை அறியப் பரனாக்கித் தற்சிவத்
> தென்னை அறிவித்து இருந்தனன் நந்தியே"[20]

> "ஞேயம் புகுந்தற்ற,
> மூலச் சொரூபன் மொழி ஞாதுருவனே"[21]

---

16. a. **History of Indian Philosophy**, Vol.I, p.470.
 b. **Indian Philosophy**, Vol.II. p.457.
17. திருமந்திரம், 1605-13.
18. திருமந்திரம், 1607.
19. திருமந்திரம், 1608.
20. திருமந்திரம், 1609.

எனவரும் பாடலடிகள் குருவின் அருளினால் ஆன்மா தன்னைச் சிவமாக அறியும் பேற்றினை உணர்த்துதல் நோக்கத்தக்கது.

திருமூலரின் காலத்தவராகக் கருதப்பெறும் காரைக் காலம்மையார் வேறுபாடகன்ற ஒருமை உணர்வு பெற்ற சுகானுபவத்தை அற்புதத் திருவந்தாதியில் அழகுறப் பாடியுள்ளார். ஞாதுரு, ஞேயம், ஞானம் மூன்றும் கரைந்து ஞான சொரூபமே உள்பொருளாகக் கண்டவர் அம்மையார். இவர்தம் அனுபவத்தை,

> "அறிவானும் தானே அறிவிப்பான் தானே
> அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற
> மெய்ப்பொருளும் தானே விரிசுடர் ஆகாசம்
> எப்பொருளும் தானே அவன்"

எனவரும் பாடல் உணர்த்துகின்றது[22]. இப்பாடலில், "தான்" என்ற படர்க்கைச் சொல்லினால் குறிக்கப்பெறும் பரம் பொருள் ஒன்றே முற்றமுடிந்த பரமார்த்திக நிலையில் மெய்ப் பொருள் (Reality) என்பதும், உபநிடதத்தில் சுட்டப்பெறும் "தத்" பதத்தின் பொருளும் இதுவே என்பதும் எண்ணற்பாலன.

தன்னையறிதல்

வேதாந்தத்தின் மற்றொரு கோட்பாடு தன்னை அறிதல் அல்லது ஆன்மஞானம் பெறுதல் என்று இயம்பப் பெறும். பண்டைய கிரேக்க ஞானிகள் **Know Thyself** என்று போதனை புரிந்தனர். எட்டாம் தந்திரத்தில் அறிவுதயம் என்ற அதிகாரத்தில்,

> "தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
> தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
> தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
> தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே"

எனவரும் பாடலில் திருமூலர் ஆத்ம ஞானத்தைப் பேசியுள்ளார்[23].

தன்னைத் தேகம், அந்தக்கரணம், பிராணன் முதலிய கோசங்களின் வேறு பிரித்து அறிபவன் பிரமஞானி

---

21. திருமந்திரம், 1613.

22. அற்புதத் திருவந்தாதி, 20.

23. திருமந்திரம், 2355.

ஆகிறான். பிரமத்தின் வேறல்லாத அவன் புரியும் வழிபாடு அவனையே போய்ச் சேருகிறது. மற்றும் ஒரு பாடலில்,

> "என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலேன்"

என்று இயம்புகின்றார்[24]. ஆத்ம ஞானமே முடிவானது என்பதும், இந்த ஞானம் எய்தியபின் அறிவதற்கு ஒன்றும் எஞ்சவில்லை என்பதும் புலனாகும்.

திருமூலரின் கருத்தினை வழிமொழிதல் போல், பழுத்த வேதாந்தியாகிய தாண்டவராய சுவாமிகள்,

> "உன்னைநீ அறிந்தா யாகில் உனக்கொரு கேடும்
> இல்லை"

என்று கைவல்லிய நவநீதம் என்ற பனுவலில் பகர்ந்துள்ளனர்[25].

இனி, மகாவாக்கியப் பொருண்மை திருமந்திரத்தில் விளக்கப் பெற்றுள்ள பாங்கினைக் காண்போம்.

திருமந்திரத்தில் தத்துவமசி

சாந்தோக்கிய உபநிடதத்தில் சொல்லப்பெறும் தத்துவம் அசி என்ற மகாவாக்கியத்திற்கு வேதாந்த விளக்கம் வழங்கப் பெற்றது. திருமந்திரத்தில் பல பாடல்களில் இம்மகாவாக்கியப் பொருள் விரிவாக ஆராயப் பெற்றுள்ளது[26]. மகாவாக்கியம் என்ற வடசொல்லினைப் பேருரை என்று திருமூலர் இனிய தமிழில் தந்துள்ளார். மாவாக்கியம் என்றும் கூறினர். இவர்க்குப் பின் வந்த அப்பர் பெருமான், பெரும் பெயர்க்கிளவி என்று மகாவாக்கியத்தைக் குறித்தனர்.

மகாவாக்கியத்தில் இடம்பெற்றுள்ள பதங்கள் மூன்றாதலின், எட்டாம் தந்திரத்தில் முப்பதம் என்ற தலைப்பின்கீழ் மெய்ப்பொருளாய்வு திருமூலரால் மேற்கொள்ளப் பெற்றமை சுட்டத்தக்கது. தத்துவம் அசி என்ற வாக்கியப் பொருளை உள்ளவாறு உணர்பவன் சிவமாகிறான் (-பிரமமாகிறான்) என்று திருமூலர் கூறுகின்றார். துவம் என்ற சொல்லினைத் தொம் என்றும் தத் என்ற சொல்லினைத் தற்பதம் என்றும், அசி என்ற சொல்லினை அசிபதம் என்றும்

---

24. திருமந்திரம், 2366.

25. கைவல்லிய நவநீதம், 20.

26. திருமந்திரம், 2437-2451; 2488-2505; 2568-2586.

வழங்கியுள்ளார். தத் என்ற சுட்டினால் (-அது) பிரமமும், துவம் என்ற முன்னிலைப் பெயரினால் (-நீ) ஆன்மாவும் அசி என்ற வினைச்சொல்லினால் சீவேசுவர ஐக்கியமும் குறிக்கப்பெற்றமை காணலாம். துவம் பதத்தினை முதலில் வைத்துத் தொடங்கும் முறைமையும் திருமந்திரத்தில் காணப்படுகின்றது. இத்திறனை,

"தொம்பதம் தற்பதம் தோன்றும் அசிபதம்
நம்பிய சீவன் பரன்சிவ னாய்நிற்கும்"

எனவரும் திருமந்திரச் செய்யுள் உணர்த்துகின்றது[27]. தொம்பதத்தினை முதலில் வைத்துத் தொடங்கும் தமிழாக்கத் தொடராக,

"நீ அது வானாய் எனநின்ற பேருரை"

என்ற பாடற்பகுதியும் திருமந்திரத்தில் இடம்பெற்றுள்ளது[28]. ஆன்மா தன்னைப் பரமான்மாவின் வேறல்ல என்று உணர்தலே வாழ்க்கையின் இறுதிக் குறிக்கோளாகத் தத்துவஞானிகள் பலரும் கருதினர் எனலாம். முடிந்த நிலையில் பிரமம் ஒன்றே உள்பொருள் என்ற ஞானம் பெறுதலே வீடாக எண்ணப் பெற்றது. இந்நிலைபெறுதலைச் சிவமாதல், சிவமாக்கல் என்ற சொற்களினால் திருமூலர் குறித்துள்ளனர்[29]. மாணிக்க வாசகரும் இங்ஙனம் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்றமை யினைத் திருவாசகத்தில் சுட்டியுள்ளார்.

சீவன் முத்தர்களாகிய அணைந்தோர் தன்மையினைப் பேசும் பகுதியில்,

"கடவுளும் நானும் ஒன்றானேன்"[30]

என்று திருமூலர் தெளிவாகக் கூறும் வேதாந்த அனுபவத் தினைப் பிரகதாரண்யக உபநிடதத்தில், அகம் பிரம்மாஸ்மி எனவரும் வாக்கியப் பொருளோடு இணைத்து நோக்குதல் ஏற்புடையது. முடிந்த நிலையில், ஆன்மா-பிரமம் ஒன்றே என்ற உபநிடதப் பொருள் திருமூலர்க்கு அனுபவமாக அமைந்துள்ளமை நோக்கத் தக்கது. வியவகாரிக நிலை கடந்து

---

27. திருமந்திரம், 2441.
28. " 2577.
29. " 2493, 2570-1, 2577.
30. " 2958.

பாரமார்த்திக நிலையில் திருமூலர்க்குச் சித்தியாகிய சீவேசுவர ஐக்கியம் அப்பர் பெருமானுக்கும் வாய்த்துள்ளது. இவ்வுண்மையினை,

"தானும் யானும் ஆகின்ற தன்மை யானை"

எனவரும் தாண்டகப் பாடல் தெளிவுறுத்துகின்றது. இவ்வரிய அனுபவம் சுந்தரர்க்கும் வாய்த்தது. இவ்வுண்மையினை

"நாற்றானத்து ஒருவனை .நானாய பரனை"

எனவரும் தேவாரப் பாடற் பகுதியால் அறியலாம். நனவு, கனவு, சுழுத்தி ஆகிய முந்நிலைகளைக் கடந்த பொழுது துரிய நிலையில் மாயையின் தோற்றமாகிய உலகம் தோன்றாமல், எல்லாம் பிரமமாகவே காட்சி தரும் என்பது உபநிடதக் கருத்து ஆகும். இதனைச் சுந்தரர், நாற்றானத்து ஒருவனை என்ற தொடரினால் உணர்த்தினார். நாற்றானம் என்பதும் சதுர்த்தம் என்று உபநிடதம் சுட்டுவதும் நாலாம் நிலையாகிய துரியத்தையே ஆகும். திருவாசகத்திலும் பரம்பொருள் இங்ஙனம் சுட்டப் பெறுதல் காணலாம். சுந்தரர், நான் ஆய பரன் என்று கூறும் பகுதியில், அகம் பிரம்மாஸ்மி என்ற பிரகதாரண்யக உபநிடதப் பொருளைத் தம் அனுபவமாக வெளியிட்டிருத்தல் கூர்ந்து நோக்கத்தக்கது. உபநிடதத்தில்,

"சிவம் சாந்தம் சதுர்த்தம்"

என்று இயம்பப்பெறுதல் இயைபு கருதி இங்கு எண்ணத்தக்கது.

எனவே, உபநிடதகால இருடிகள் பெற்ற அனுபவமும் திருமுறை ஞானிகள் பெற்ற அனுபவமும் ஓராற்றான் ஒத்து விளங்குதல் உணரத்தக்கது.

மூவகை இலக்கணை

மகாவாக்கியப் பொருளை உணர்ந்து கொள்ளுதற்கு வேதாந்த விற்பன்னர்கள் இலக்கணத்திரையம் என்ற உத்தியைப் பயன்படுத்தியுள்ளனர். ஒரு சொல் தரும் நேர் பொருளை முக்கியார்த்தம் அல்லது வாச்சியார்த்தம் என்பர். சிற்சில சூழல்களில் அதே சொல் இயைபுப் பொருள் தரும். இதனை இலட்சியார்த்தம் என்பர். இலட்சியார்த்தத்தினை 1. சகல்லட்சணம், 2. அசகல்லட்சணம், 3. சகல் அசகல் லட்சணம் என்று மூன்றாக வேதாந்தம் உணர்ந்த வடமொழி வாணர் வழங்குவர். இம்மூன்றனையும் இலக்கணத்திரையம்

என்ற தலைப்பில் திருமந்திரம் விளக்குதல் காணத்தக்கது[31]. இவற்றை முறையே 1. விட்ட இலக்கணை, 2. விடாதது, 3. விட்டுவிடாதது என்று இனிய தமிழில் திருமூலர் வழங்கியுள்ளார். இவற்றுள், மூன்றாவது இலக்கணையினைத்தான் எடுத்துக்காட்டுடன் விளக்குகின்றார்:

"ஆகிய வச்சோயம் தேவ தத்தன் விடத்து"[32]

"ஆகிய வச்சோயம் தேவதத் தன்னிடத்து
ஆகிய விட்டு விடாத இலக்கணை"[33]

என்பன திருமந்திரப் பாடற்பகுதிகள். கி.பி.17ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் தலைசிறந்த வேதாந்த வித்தகராக விளங்கிய தாண்டவராய சுவாமிகள் தாம் பாடிய கைவல்லிய நவநீதம் என்ற பனுவலில், மூவகை இலக்கணைகளுக்கும் விரிவாகப் பொருள் கூறியுள்ளார் என்பதும் இங்குக் கூறுதற்குரியது. அவரும் மூன்றாவது வகை இலக்கணைக்குத் திருமூலர் கூறிய எடுத்துக்காட்டினையே மேற்கோள் கூறியிருத்தல் காணத்தக்கது.

"சோ அயம் தேவதத்தன்" என்ற தொடர் 'அவனே இத்தேவதத்தன்' என்ற பொருள் பயப்பது. இத்தொடரில் இடம்பெறும் அவன், இவன் என்ற சுட்டுப்பெயர்கள் இடம், பருவம், வயது, தோற்றம், தகுதி, நிலை முதலிய பல்வேறு உபாதிகளினால் வேறுபாட்டினைச் சுட்டினாலும், இரசமாயும் பிண்டமாயும் உள்ள தேவதத்தன் ஒருவனே என்ற உண்மையினை நுட்பமாகப் புலப்படுத்தும். அதுபோல, 'தத்' என்ற சொல்லினால் சுட்டப்பெறும் பிரமமும், துவம் என்ற சொல்லினால் சுட்டப்பெறும் சீவனும் உபாதிகளினால் வேறுபட்டதுபோல் தோன்றினும், உபாதி களைந்து நோக்கும் ஞானம் உதித்தபின், ஐக்கியப் பொருளாகவே அனுபவமாகும் என்பது விட்டுவிடாத இலக்கணையினால் விளங்கிக் கொள்ளுதற்குரிய வேதாந்தப் பொருளாகும். ஆத்ம ஞானம் பெற்றதும் சீவன், சிவன் என்ற அனுபவம் பெறுதலை,

"மெய்யறிவு
ஆகிய சீவன் பரசிவன் ஆமே"[34]

---

31. திருமந்திரம், 2566-7.
32. " 2493.
33. " 2570.
34. " 2493.

"ஆகிய சீவன் பரசிவன் ஆமே"[35]

எனவரும் திருமந்திரச் செய்யுள்கள் தெளிவுறுத்துகின்றன.

மேலும் சில சிந்தனைகள்

உபாதி என்ற வேதாந்தக் கலைச்சொல், ஒரு பொருளை மட்டுப்படுத்திக் காட்டுதற்குரிய வரையறைகளைச் (Adjuncts) சுட்டுவது. வேதாந்தத்தில் சீவர்க்கு உரிய உபாதிகள் ஏழினையும் காரிய உபாதிகள் என்றும், ஈசுவரனுக்கு உரிய உபாதிகள் ஏழினையும் காரண உபாதிகள் என்றும் கூறப்பெறும். எட்டாம் தந்திரத்தில், காரிய காரண உபாதி என்ற அதிகாரத்தில் ஐந்து பாடல்களில் இருவகை உபாதிகளையும் திருமூலர் விரிவாகப் பேசியுள்ளார்[36]. உபசாந்தம் என்ற தலைப்பில் ஒருபாடலும் இப்பொருள் பற்றி இயம்புகின்றது[37].

பொறி, புலன் கடந்த அப்பாலை மெய்ம்மையினைப் (Transcendental Reality) பாழ் என்ற தூய தமிழில் வழங்குவர். இதனைச் சூனியம் என்று மாத்தியமிகரும் வேதாந்திகளும் விளம்புவர். சித்தர் பாடல்களிலும் இத்தகைய வழக்கு வந்துள்ளது. திருமந்திரத்தில், சூனியம், பாழ் என்பன விரிவாகப் பேசப்பெறுதல் காணலாம்[38].

ஒரு பாடலில் வேதாந்திகள் கூறும் நிர்க்குணப் பிரமத்தைத் திருமூலர் குறித்துள்ளார்[39]. இதே பாடலில், சீவர்களின் மூவகை அவத்தைகளையும் குறித்துப் பேசியுள்ளார். நனவுநிலை என்பது சத்துவகுணத்தின் மிகுதியால் அமைவது. கனவுநிலை என்பது இராசதகுணத்தாலும், சுழுத்திநிலை என்பது தாமத குணத்தாலும் அமைவன. இம் முக்குண நிலைகளையும் தாண்டி, குணமும் குற்றமும் அற்ற துரியநிலையினை (Cosmic Consciousness) உணரும்பொழுது தான் பூரணஞானப் பிரமமாக எல்லாம் விளங்கும் என்ற வேதாந்தக் கருத்து இப்பாடலில் பொதிந்துள்ளது. திருமூலர், சுத்தப்பிரம துரியம் என்றே குறித்துள்ளார். இந்நிலையில் சிவானந்தப் பேரொளி எங்கும் பிரகாசிக்கும் என்கின்றார்.

---

35. " 2570.
36. " 2501-5.
37. " 2507.
38. " 2488-2500.
39. " 2296.

பிரம்ம், துரியாதீதமாகவும் திகழ்வது. இந்நிலையே பாழ் என்றும் பேசப்பெற்றது[40]. நிருவாணம் என்ற சொல்லினாலும் முத்திப்பேறு கூறப்பட்டது[41]. ஒன்பதாம் தந்திரத்தில், சிவசொரூப தரிசனம், முத்திபேதம், கரும நிருவாணம் என்ற பகுதிகளில் அத்துவிதம் விதந்து விளம்பும் வீடுபேற்றியல்பு விளக்கப்பெறுதல் காணலாம்[42].

பரம்பொருள் உணர்வுமயமானவன். அவனே ஆன்மா. எண்ணங்களைக் கடந்தவன். மலரில் பிரிப்பரிய மணம்போல் பரமனில் சீவன் இரண்டற இணைந்துள்ளான் என்கிறார் திருமூலர்[43]. உயிர்க்கும் சிவத்திற்கும் (-பிரம்ம) பேதம் இல்லை என்பது திருமந்திரம். துரியநிலையே உயிரின் ஆதி சொரூபம். இந்த ஒருமை உணர்வுற்ற நிலையில் குற்றமற்ற நிருவாணப் பேறு (-வீட்டின்பம்) சித்திக்கும் என்கிறார் திருமூலர்[44].

இதுகாறும் எழுதியவாற்றால், சங்கரர் காலத்திற்கு முன்பே தமிழில் தோன்றியுள்ள திருமுறைப் பாடல்களில் சிறப்பாகத் திருமந்திரத்தில் வேதாந்தத்தின் அடிப்படைச் சிந்தனைகள் போதிய அளவு இடம்பெற்றுள்ளன என்பது புலனாகும். எனவே வேதாந்த ஞானிகள் பலர் சங்கரர்க்கு முன்னமே தென்னகத்தில் மெய்ப்பொருள் ஆய்வு மேற்கொண்டிருந்தனர் என்ற உண்மை உய்த்துணரத்தக்கது. திருமந்திரம் சித்தாந்த சாத்திரம் என்று பொது நிலையில் கூறப்பெறினும் வேதாந்தம், தாந்திரிகம் முதலிய சிந்தனைப் பதிவுகளும் தன்பால் கொண்டு விளங்குவது என்பது ஆராய்வார்க்குப் புலனாகும்.

---

40. " 2863.
41. " 2864.
42. " 2856-65.
43. " 2857.
44. " 2864.

தமிழியலில் நாட்டுப்புறவியல் ஆய்வுகள்

முனைவர் ஆறு. இராமநாதன்

தமிழியல் ஆய்வு கடந்த அரை நூற்றாண்டு காலமாகப் புதிய சிந்தனைகளை ஏற்றுப் பல்வேறு நிலைகளில் வளர்ச்சிபெற்று வந்துள்ளது. இந்த வளர்ச்சிக்கு நாட்டுப்புற வியலும் சிறந்த முறையில் பங்களித்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

இன்றைய நிலையில் தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வு தாயகத் தமிழரிடையேயும் அயலகத் தமிழரிடையேயும் தமிழரல்லாதோரிடையேயும் எவ்வாறு வளர்ச்சி பெற்று வருகிறது என்பதையும் அவை தமிழியல் ஆய்வின் பரப்பினை எவ்வாறு விரிவடையச் செய்து செழிப்படையச் செய்கிறது என்பதையும் இக்கட்டுரையில் சுருக்கமாகக் காணலாம்.

தாயகத் தமிழரிடையே

தங்களால் ஆளப்படும் மக்களை நன்கு புரிந்து கொள்வதற்காக ஆங்கிலேய ஆட்சியாளர்களும் தங்கள் மதங்களைப் பரப்புவதற்காக இங்குள்ள மதங்களையும் மக்களையும் புரிந்துகொள்ள ஐரோப்பியப் பாதிரியார்களும் தமிழ் உள்ளிட்ட இந்திய மொழிகளில் நாட்டுப்புற வழக்காறு

களைச் சேகரித்து ஆராயத் தொடங்கியபோது, அவர்களுக்கு உதவும் நோக்கத்தோடு தாயகத் தமிழறிஞர்களும் அப் பணியைச் செய்யத் தொடங்கினர். பின்னர், தேசிய உணர்வு காரணமாக நாட்டுப்புற வழக்காறுகளைச் சேகரிக்கும் போக்கு இந்திய அறிஞர்களிடையே உருவானபோது தமிழறிஞர்களின் கவனம் நாட்டுப்புற வழக்காறுகளின் பக்கம் திரும்பத் தொடங்கியது. பாடல்களைச் சேகரித்துக் கற்பித வருணனை செய்யும் போக்கு காணப்பட்டது.

பொதுவுடைமைக் கருத்துக்களைப் பரப்பவும் மக்களைப் புரிந்துகொள்ளவும் இலக்கியங்கள் சிறந்த கருவிகளாக அமையமுடியும் என்ற கருத்தோட்டத்தின் காரணமாக 1960களில் பேராசிரியர் நா. வானமாமலை நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரித்து ஆய்வு மேற்கொண்ட பின்னரே தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வில் அறிவியல் பூர்வமான அணுகுமுறை ஏற்படத் தொடங்கியது. இதன் பிறகு கல்வி நிறுவனங்களில் ஆய்வுப்பட்டம் பெறுவதற்காக நாட்டுப்புற வழக்காறுகளில் ஆய்வு மேற்கொள்ளும் போக்கு உருவாகிப் படிப்படியாக வளர்ச்சி பெற்று வருகிறது.

இன்றைய நிலையில் தமிழ்ப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் நாட்டுப் புறவியலுக்கெனத் தனித்துறைகள் செயல்படுகின்றன. இங்கு நாட்டுப்புறவியல் உயர் ஆய்வுகள் ஊக்குவிக்கப்படுகின்றன. பாளையங்கோட்டை புனித சவேரியர் கல்லூரியில் நாட்டார் வழக்காற்றியல் துறையும் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையமும் உள்ளன. எம்.ஏ. பட்டப்படிப்பும் சிறந்த நூலகமும் ஆவணக் காப்பகமும் இங்குள்ளன. ஆயிரக்கணக்கான ஒலி, ஒளிப் பேழைகளும் புகைப்படங்களும் சுவடிகளும் சேகரித்துப் பாதுகாக்கப்படுகின்றன. சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் நாட்டுப்புறவியல் சான்றிதழ் பட்டய வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தமிழகத்தின் பிற பல்கலைக்கழகங்களிலும் புதுவைப் பல்கலைக் கழகத்திலும் சில தன்னாட்சிக் கல்லூரிகளிலும் தமிழ்ப் பட்ட வகுப்புகளுக்கு நாட்டுப்புறவியல் தாள் இடம்பெறுவதைக் காணமுடிகிறது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், ஆசியவியல் ஆய்வு நிறுவனம், புதுவை மொழியியல் பண்பாட்டு ஆய்வு நிறுவனம் முதலான நிறுவனங்கள் நாட்டுப்புறவியல் ஆய்வினை ஊக்கப்படுத்தி வருகின்றன. தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் கருத்தரங்குகள், செயலரங்குகள் நடைபெற்று வருகின்றன.

தமிழாய்வுக் கருத்தரங்குகள் அனைத்திலும் நாட்டுப்புறவியல் அமர்வுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. பேராசிரியர் அகத்தியலிங்கம் உருவாக்கிய 'இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகம்' (அண்ணாமலை நகர்), பேராசிரியர் தே. லூர்து உருவாக்கிய 'நாட்டார் வழக்காற்றியல் கழகம்' (பாளையங்கோட்டை), இளம் ஆய்வாளர்களின் கூட்டு முயற்சியால் உருவான 'களம்' (தஞ்சாவூர்) முதலான நாட்டுப்புறவியல் அமைப்புகள் வாயிலாக முறையே நாட்டுப்புறவியல், நாட்டார் வழக்காற்றியல் என்னும் இதழ்களும் கட்டுரைத் தொகுப்புகளும் வெளியிடப்படுகின்றன. சமீபத்தில் சு. சண்முகசுந்தரம் 'தன்னனானே' என்னும் இதழைத் தொடங்கியுள்ளார். தாமரை, செம்மலர், ஆராய்ச்சி, புலமை, தமிழ்க்கலை, தமிழியலாய்வு, Tamil Civilization, Journal of Asian Studies, PILC Journal of Dravidic Studies முதலான இதழ்களும் நாட்டுப்புறவியல் கட்டுரைகளை வெளியிட்டு வருகின்றன. தன்னார்வக் குழுக்களும் நாட்டுப்புறக் கலை இலக்கியங்களைச் சேகரித்து ஆய்வு செய்து பயன்படுத்தும் போக்கினைக் காணமுடிகின்றது. தமிழ் நாட்டுப்புறவியலில் நூற்றுக்கணக்கான எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி. ஆய்வேடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. பல ஆய்வுகள் நூல்களாகவும் வெளிவந்துள்ளன. இத்துறையில் தமிழ் படித்தவர்களே அதிகம் ஈடுபட்டு வருகின்றனர். மொழியியல், இசை, வரலாறு, நாடகம், சமூகவியல், மானிடவியல் துறையினரும் சமீப காலங்களில் இத்துறையில் ஈடுபாடு காட்டத் துவங்கியிருப்பது இத்துறை வளர்ச்சிக்கான நல்ல அறிகுறியாகக் கருத முடிகிறது.

அயலகத் தமிழரிடையே

அயலகத் தமிழரிடையே - குறிப்பாக இலங்கைத் தமிழரிடையே நாட்டுப்புறவியல் ஆய்வுகள் சிறப்புடன் திகழ்வதைக் காணலாம். தாயகத் தமிழர்கள் நாட்டுப்புற இலக்கியங்களைத் தொகுத்து வெளியிட்ட 1960களிலேயே இலங்கைத் தமிழர்களும் நாட்டுப்புற இலக்கியங்களைச் சேகரித்து வெளியிடத் தொடங்கினர். வ.மு. இராமலிங்கம், சு. வித்தியானந்தம், எல்.எக்ஸ்.ஸி. நடராசா முதலியோர் இத்தகைய பணியில் ஈடுபட்டவர்கள். 1980களின் தொடக்கத்தில் பேராசிரியர் கா. சிவத்தம்பி முயற்சியால் அங்கு ஒரு நாட்டுப்புறவியல் கருத்தரங்கம் நடைபெற்றது. பேராசிரியர் கைலாசபதி உள்ளிட்டோர் தரமான பல

கட்டுரைகள் எழுதியிருந்தனர். கட்டுரைகள்உருளச்சு செய்து நூல் வடிவில் வெளியிடப்பட்டன. 1990களின் தொடக்கத்தில் நடைபெற்ற கருத்தரங்கிலும் நாட்டுப்புறவியல் கட்டுரைகள் பல இடம்பெற்றன. தமிழக நாட்டுப்புறவியல் அறிஞர்களுள் ஏ.என். பெருமாள், தே. லூர்து, ஆ. சிவசுப்பிரமணியன் போன்றோர் இக்கருத்தரங்குகளுக்கு அழைக்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டனர். இலங்கையிலிருந்து வெளிவரும் 'பண்பாடு' என்னும் இதழில் பல்வேறு தரமான நாட்டுப்புற-வியல் கட்டுரைகள் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன.

மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் படிக்கப்பட்ட மலேசியத் தோட்டத் தொழிலாளர்களின் நாட்டுப்புறப் பாடல்களை ஆராய்ந்த கட்டுரை அங்குக் குடியேறியுள்ள தமிழரின் நிலையைத் தெளிவுபடுத்துவதாக உள்ளது.

தமிழரல்லாதோரிடையே

தமிழரல்லாதோர் தமிழ் நாட்டுப்புற வழக்காறுகளை வெவ்வேறு நோக்கங்களுக்காக ஆராய்ந்து வருகின்றனர். இவர்களை இந்திய அறிஞர்கள், உலக அறிஞர்கள் என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

இந்திய அறிஞர்களின் பணிகள் பெரும்பாலும் தங்கள் மொழி வழக்காறுகளோடு தமிழ் வழக்காறுகளை ஒப்பிட்டு ஆராயும் போக்கினதாக அமைந்துள்ளன. தேசிய உணர்வு காரணமாகவும் தேசிய உணர்வினை வளர்க்க வேண்டும் என்ற அரசு நல்கை நிறுவனங்களின் நோக்கம் காரணமாகவும் இத்தகைய ஆய்வுகள் நிகழ்கின்றன. இவ்வகையில் இந்தியப் பாரம்பரிய விழாக்கள், நடனங்கள், கலைகள், இலக்கியங்கள் குறித்த ஆய்வுகள் பல நிகழ்ந்துள்ளதைக் குறிப்பிடலாம். பக்தவத்சல ரெட்டி, டாக்டர் நசீம்தீன் முயற்சியால் திருவனந்தபுரத்திலிருந்து செயற்படும் தென்னிந்திய மொழிகளின் நாட்டுப்புறவியல் கழகம் (Fossils) தமிழ் உள்ளிட்ட தென்னிந்திய மொழிகளின் நாட்டுப்புறவியல் ஆய்வுகளை ஊக்கப்படுத்தி அவர்களுக்கான ஆய்வுக் களத்தை உருவாக்கித் தருகின்றது. தென்னிந்திய நாட்டுப்புறக் கலைகள், கலைஞர்கள் பற்றிய கையேடு தயாரிக்கும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ள இவ்வமைப்பு ஆங்கிலத்தில் செய்தி மடல் ஒன்றையும் வெளியிடுகின்றது. கேரளப் பல்கலைக் கழகம், திராவிட மொழிகளின் மொழியியல் ஆய்வு நிறுவனம்

(DLA) ஆகியவை நாட்டுப்புறவியல் ஆய்வை ஊக்கப்படுத்து கின்றன. பெங்களூர் பல்கலைக் கழகத்தில் ஒரு மாணவர் கன்னட - தமிழ் நாட்டுப்புறப் பாடல்களை ஒப்பிட்டும் பகல்பூர் பல்கலைக் கழகத்தில் (பீகார்) ஓர் ஆசிரியர் இந்தி-தமிழ் நாட்டுப்புறப் பாடல்களை ஒப்பிட்டும், டெல்லி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜானகிதேவி மகாவித்தி-யாலயாவில் ஓர் ஆசிரியர் அவதி-பிரிஜ் நாட்டுப்புற வழக்காறுகளைத் தமிழ் வழக்காறுகளோடு ஒப்பிட்டும் ஆய்வு செய்து வருவதை இங்குக் குறிப்பிடலாம்.

அயல்நாட்டு அறிஞர்கள் தமிழ் நாட்டுப்புற வழக்காறுகளைச் சேகரித்து ஆராய்வதற்கான நோக்கங்கள் மாறுபடுகின்றன. சுசுமு ஓனோ என்ற ஜப்பான் நாட்டு அறிஞர் ஜப்பானிய மொழியின் மூலத்தை அறிய ஆவல் கொண்டவர். தமிழ்-ஜப்பானிய மொழிகளுக்கிடையே காணப்படும் ஒற்றுமைக் கூறுகள் பற்றி ஆய்வு செய்து வரும் இவர் இருமொழி பேசும் மக்களுக்கிடையே காணப்படும் பண்பாட்டுக் கூறுகளின் ஒப்புமை குறித்தும் கவனம் செலுத்தி வருகிறார். அவ்வகையில் இவர் ஜப்பானிய புத்தாண்டு விழாவையும் தமிழரின் பொங்கல் விழாவையும் ஒப்பிட்டு எழுதிய ஆய்வு குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க-ஐரோப்பிய நாட்டுப்புறவியலாளர்கள் தமிழ் வழக்காறுகள் பலவற்றை ஆராய்ந்து வருகின்றனர். இவர்களது ஆய்வுகளில் நாட்டுப்புறச் சமயம் குறித்த ஆய்வுகளே மிகுதியாக உள்ளன. நிகழ்த்துகலைகள், நாட்டுப்புற இலக்கியங்கள் முறையே அடுத்தடுத்த இடங்களைப் பெறுகின்றன. ஸ்டூவர்ட் பிளாக்பர்ன், அல்ப்ஹில்டலைட்டல், எவலின் மேயல், டேவிட் சுல்மான், பிருந்தாபெக், ரிச்சர்ட் பிராஸ்கா, ஜார்ஜ் ஹார்ட், ஹில்டே லிங் போன்றோர் இத்தகைய ஆய்வுகளில் ஈடுபட்டு வருபவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள்.

நாட்டுப்புறவியல் ஆய்வுகளின் பங்களிப்பு

தமிழர் மற்றும் தமிழரல்லாதோரிடம் நடைபெற்று வரும் தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வுகள் தமிழியல் ஆய்வு வளர்ச்சிக்குப் பெரிதும் பங்களித்துள்ளன. இது குறித்து இக்கட்டுரையாளரின் தமிழியல் ஆய்வுக்கு நாட்டுப்புற வியலின் பங்களிப்பு (தமிழ்க்கலை, 1990, 8, 1-4) என்னும்

கட்டுரை விரிவாக எடுத்துரைக்கின்றது. அதன் முடிவுகள் மட்டும் இங்குச் சுருக்கித் தரப்படுகின்றன:

நாட்டுப்புறவியல் ஆய்வு முறைகளிலிருந்து தமிழியல் ஆய்வுக்குப் புதிய ஆய்வு முறைகள் கிடைத்துள்ளன.

நாட்டுப்புறவியல் கோட்பாடுகள் பல தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. தமிழ்த் தரவுகள் அக்கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளன.

பல்துறைக் கலப்பாய்வின் (inter disciplinary research) அவசியமும் ஒப்பாய்வின் அவசியமும் நாட்டுப்புறவியல் ஆய்வுகளில் பெரிதும் வலியுறுத்தப்பட்டன.

மக்களின் சமூகப் பண்பாட்டு வரலாற்றை அறிந்துகொள்ள நாட்டுப்புற வழக்காறுகள் மிகச் சிறந்த தரவுகளாக இருக்கும் என்பது தெளிவுபடுத்தப்பட்டது. இலக்கிய இலக்கணங்களை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்பட்ட இத்தகைய ஆய்வுகள் மறு சிந்தனைக்குரியவை என்பதை நாட்டுப்புறவியல் ஆய்வுகள் தெளிவுபடுத்தின.

களப்பணி வழிப்பட்ட ஆய்வுகள் வ்ளர்ச்சிபெற்றன. அதன் அவசியம் உணரப்பட்டது.

மிகப்பெரிய அளவில் நிகழ்ந்துள்ள நாட்டுப்புற இலக்கியச் சேகரிப்பால் தமிழுக்குப் பல புதிய இலக்கிய வடிவங்கள் கிடைத்துள்ளன. எனவே, தமிழியலில் இலக்கிய இலக்கணம் குறித்த மாறுபட்ட கண்ணோட்டம் உருவாயிற்று.

நாட்டுப்புற மக்களின் வழிபாடு குறித்த ஆய்வுகள் தமிழரின் சமய ஆய்வுகளை மறுசிந்தனைக்கு உட்படுத்தியுள்ளன.

இதுவரை தமிழியல் ஆய்வில் புறக்கணிக்கப்பட்டு வந்த நாட்டுப்புறக் கலைகள், மரபுவழி இசை, அறிவியல், தொழில்நுட்பம், விளையாட்டுகள், மந்திரம் சடங்குகள், மருத்துவம் முதலான பல்வேறு கூறுகள் நாட்டுப்புறவியலில் ஆராயப்பட்டு வருகின்றன.

சுருங்கக் கூறினால் நாட்டுப்புற வழக்காறுகளைப் புறக்கணித்துச் செய்யப்படும் தமிழியல் ஆய்வு முழுமை

பெறாது என்பது நாட்டுப்புறவியல் துறையினரால் உணர்த்தப்பட்டுள்ளது என்றே கூறலாம்.

நாட்டுப்புறவியல் துறை மேலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய துறை என்பதையும் அதன் வாயிலாகத் தமிழியல் துறை மேலும் வளம்பெறும் என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.

பயன்பட்ட நூல்கள்

நிகழ்ந்து கொண்டிருக்கும் அனைத்துத் தமிழ் நாட்டுப் புறவியல் ஆய்வுகள் குறித்தும் தனித்தனியே இக்கட்டுரையில் விவரிப்பது இயலாது. அவற்றை விரிவாக அறிந்துகொள்ள விரும்புவோர் பின்வரும் நூலடைவுகளையும் ஆய்வுகளையும் காண்க:

1. இராமநாதன், ஆறு., நாட்டுப்புறவியல் ஆய்வுகள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1986.

2. இராமநாதன், ஆறு., (பதிப்) நாட்டுப்புறவியல் ஆய்வு முறைகள், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1991.

3. இராமநாதன், ஆறு., தமிழியல் ஆய்வுக்கு நாட்டுப்புற வியலின் பங்களிப்பு, தமிழ்க்கலை, 8, 1-4, 1990.

4. சக்திவேல், சு., நாட்டுப்புறவியல் நூலடைவு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1988.

5. சக்திவேல், சு., நாட்டுப்புறவியல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1992.

6. சண்முகசுந்தரம், சு., நாட்டுப்புற இலக்கிய வரலாறு (இ.ப), மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1988.

7. சண்முகம், ஆ., நாட்டுப்புறவியல் நூலடைவு (1985-93), தமிழ்ப் பல்கலைக் கழகம் (அச்சிடப்படாதது), 1994.

8. Blackburn, Stuart, H., & Ramanujam, A.K., (Ed.) **Another Harmony,** 1986.

தமிழ் நாட்டுப்புற வழக்காற்றியல் ஆய்வுகளில் அகத்தாரும் புறத்தாரும்

முனைவர் சு. சண்முகசுந்தரம்

I

இருபதாம் நூற்றாண்டு முடிந்துகொண்டிருக்கிற இக்காலக்கட்டத்தில் தமிழ் நாட்டுப்புற வழக்காற்றியல் ஆய்வு குறிப்பிடும்படியாக வளர்ந்துள்ளது என்பதில் ஐயமில்லை. ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்குமேல் தொகுத்தல், வகைப்படுத்தல், ஆய்தல் என்ற மூன்று பணிகளில் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி வருவது வரலாற்று உண்மையாகும்.

ஒரு குறிப்பிட்ட மக்கள் திரள் பெற்றிருக்கும் அடையாளத்தை அல்லது பண்பாட்டு வேர்களைக் கண்டறிய இவ்வாய்வு பெரிதும் உதவும். இன்னும் சொல்லப்போனால் இவ்வாய்வு மட்டுமே இந்த வாய்ப்பைத் தருகிறது. அதனால் தமிழ் நாட்டுப்புறவியல், இந்திய நாட்டுப்புறவியல், ரசிய நாட்டுப்புறவியல் என்று பிரித்துப் பார்க்கிறோம். பிறசமூக விஞ்ஞான துறைகளை இப்படிப் பார்ப்பதில்லை.

இதுவரை நிகழ்ந்த நாட்டுப்புறவியல் ஆய்வுகளில் பலதரப்பட்டவர்கள் பலதர நிலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களைப் பட்டியல் இடுவதைவிட, இட்டுள்ள பட்டியல் களைப் பின்புலமாக்கி ஆய்வாளர்களை அடையாளப்படுத்த முடியுமா என்ற முயற்சி இது.

நாட்டுப்புற வழக்காறுகளை ஆராயும்போது, அந்தப் பிரதி (Text)யை வழங்குகிறவரின் வயது, சாதி, மதம், ஊர், காலம், சூழல், நோக்கம், பயன், கருதுகோள் போன்றவற்றைக் கவனிப்பது எவ்வாறு ஆய்வை ஆழப்படுத்திக்கொள்ளப் பயன்படுமோ அதுபோலவே, ஆய்வாளர்களை அறிய-ஆராய-மேற்கண்ட விபரங்களைக் கணக்கிலெடுத்துக்கொண்டு ஆய்வு செய்ய இயலுமா என்ற சோதனை (Experiment) முயற்சிதான் இது. இதற்காக ஆய்வாளர்களைப் பிறந்து வளர்ந்த நிலப்பரப்பு, பேசும் மொழி, பின்பற்றும் கொள்கை, கடைப்பிடிக்கும் சாதி மதம் சார்ந்த கலாச்சாரச் சூழல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு அகத்தார் (insiders) புறத்தார் (outsiders) என்று பகுத்துவிட முடியுமா, பகுத்துப் பார்ப்பதன் மூலம் அவர்களின் ஆய்வின் தரம், தன்மை, நோக்கம், பயன் போன்றவற்றைச் சீர்தூக்கிப் பார்க்க முடியுமா என்று பார்ப்பதுதான் இக்கட்டுரையின் நோக்கம்.

வெளிநாட்டுக்காரர்களைப் புறத்தார்களாக அடையாளம் காண்பதில் சிக்கல் இல்லை. ஆனால் தமிழகத்திற்குள் சாதீய மேட்டிமையுள்ள பிராமணீயர்களையும், பிறமொழி பேசுவோர்களையும், கிறித்தவம் இசுலாம் சார்ந்த பிற மதத்தவர்களையும், தமிழ் நாட்டுப்புற ஆய்வுலகில் அகத்தார் களாக ஏற்றுக்கொள்ள இயலுமா? ஏற்றுக் கொண்டால் அவர்களது ஆய்வு முடிவுகளுக்கான அர்த்தங்களைக் கண்டு கொள்ள இயலுமா? தமிழனாகப் பிறந்து தமிழ் நாட்டுப்புற வாழ்வியலில் பங்குகொண்டு அதன் சாராம்சத்தைக் காக்க - வளர்த்தெடுக்க முயல்பவர்களை அகத்தவர்களாகக் கொள்ளலாம். எனினும் இவர்களிடமும் உள்ள பலங்கள் யாவை, பலவீனங்கள் யாவை என்பனவற்றை ஆராய்வது இன்றைய மிக அவசியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது.

“தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வுகள் ஆழமாக அமைய வில்லை. எனவே கல்விப்புல ஆய்வுகளைக் கேலியாகவும்

கேவலமாகவும் நோக்கும் நிலை உள்ளது" என்று டாக்டர் லூர்து குறிப்பிடுகிறார்[1].

கேலி செய்பவர் யார்? கேவலமாகப் பார்ப்பவர் யார்? ஏன்? இதில் நியாயம் உண்டுமா? இல்லாவிட்டால் ஏன்? இருந்தால் அ;ந்ற்கான காரணிகள் யாவை?

இது கேள்விகளின் காலம். பதில்கள் இன்றில்லா விட்டால் நாளை, அதுவும் இல்லாவிட்டால் நாளை மறுநாள் தோன்றவேண்டும், தோன்றும் என்பதுதான் இந்த ஆய்வின் நோக்கமாகும்.

II

தமிழில் நாட்டுப்புறவியல் ஆய்வின் தொடக்கத்தைச் சேகரிப்புக்காலம் (1871-1959) அல்லது மிஷனரிகள் காலம் என குறிப்பிடுவர்[2]. நாம் இதனைப் புறத்தார் காலம் என்று குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கலாம். இக்காலக் கட்டத்தில் இத்துறையில் பணியாற்றியவர்கள் முழுக்கமுழுக்க வெளிநாட்டினரும் வெளிநாட்டு அடிமைகளுமே.

19ஆம் நூற்றாண்டில் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியார் சர்வவல்லமை படைத்தோராய் இருந்தனர். இவர்கள் வாணிபப் போட்டியில் ஈடுபட்ட வணிக முதலாளித்துவ காலக்கட்டத்தில் (Mercantile Capitalist Phase) கீழ்த்திசை நாடுகளில் நிலைகொள்ளலும் இலாபம் பெறுதலுமே இலக்கு சக்திகளாகச் செயல்பட்டனர். தொழில் புரட்சியின் முத்தாய்ப்பாக 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் இங்கிலாந்தில் ஆலைத் தொழில் வழிப்பட்ட முதலாளித்துவம் (Industrial Capitalist Phase) வளரத் தலைப்பட்டபோது புதிய நோக்கு நிலையைக் கைக்கொண்டனர். காலனி நாடுகளை ஆங்கில ஏகாதிபத்தியத்தின் நிரந்தர சந்தைகளாக வைத்திருக்க நினைத்தபோது அதற்கான தேவை ஏற்பட்ட போது நாட்டுப்புற வழக்காற்றியலில் கவனம் செலுத்தினர்[3].

1. டாக்டர் லூர்து, நாட்டார் வழக்காற்றியல் I, முன்னுரை, 1991.
2. ஆ. சிவசுப்பிரமணியம், தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வு முறைகள், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை, 1990. ஜவஹர்லால் ஹண்டு, டாக்டர் லூர்து காட்டும் மேற்கோள், மேற்படி நூல்.
3. பொ. வேலுசாமி, 'நாட்டுப்புற ஆய்வுப் பார்வைகள், நாட்டுப்புறவியல்' I, 1987, ப.24.

தமிழ் நாட்டுப்புறவியலைச் சேகரித்து ஆய்வதன் மூலம் தமிழ் மக்களின் வாழ்க்கை நிலைகள், கலாச்சார முறைகள், மக்களின் மனோநிலை (Psych) போன்றவற்றை அறிந்துகொள்ளலாம். இவை ஆதிக்கவாதிகளுக்கும் மதவாதிகளுக்கும் பெரிதும் பயன்படும்.

எனவே 'புறத்தாராகவே' வந்த பிரிட்டிஷ் போன்ற பிறநாட்டார் மதமாற்றம், ஏகாதிபத்தியம் என இரு நோக்கங்களுக்காகவே நா.வ. தரவுகளைச் சேகரிக்க ஆரம்பித்தனர்.

எட்கர் தர்ஸ்டன் சாதிகளையும் சகுனங்களையும் நம்பிக்கைகளையும் தொகுத்து ஆய்ந்தார். நீலகிரி மக்களின் வாழ்வியலைப் பிரீக்ஸ், பிரான்ஸிஸ், பால்ஹாக்ங்ஸ், எம்னோ, ரிவர்ஸ் போன்றவர்கள் ஆராய்ந்தனர். ஒயிட்ஹெட் கிராமியக் கடவுளர்களையும், பெர்சிமாக்வின் பாடல்களையும்; வாரி, பீட்டர் பெர்சிவல், ஹெர்மன் ஜென்சன், ஜான்லாசர்ஸ் போன்றோர் பழமொழிகளையும் தொகுத்து ஆய்ந்தனர். 1870இல் வெளிவந்த Indian Antiquaryஇல் நாட்டுப்புறக் கதைகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றை வில்லியம் குரூக்ஸ், திருமதி எப்.ஏ. ஸீப், லெட்டினென்ட்டெம்பிள், பிவனி, வால்ஹஸ் எனும் ஐரோப்பிய அதிகாரிகள் தொகுத்து எழுதினர்.

இப்புறத்தார்களின் நோக்கம் எவ்வாறு நிறைவேறிற்று என்று பார்ப்பதும் இவர்கள் இங்குள்ள அகத்தார்களையும் அவர்களது கலாச்சாரத்தையும் எவ்வாறு கணித்தனர் என்பதையும் காணுவது அடுத்த நிலையாகும்.

அடக்கி ஆள்வதற்குத்தான் தமிழ் நாட்டுப்புறத்தவர் லாயக்கானவர்கள் என்றும் மதம் மாறினால்தான் மீட்பு என்றும் கருத்து பரப்பலுக்கான வழிகளைத் தங்கள் ஆய்வுகள் மூலம் வெளிப்படுத்தினர். அதோடு மேற்கிலிருந்து வந்த தங்களை உயர்ந்தவர்கள் என்றும் இங்குள்ளவர்களைத் தாழ்ந்தவர்கள் என்றும் இவர்களை இவர்களுக்குக் காட்டுவதே தம் பணி, அதுவும் தம்மால்தான் முடியும் என்றும் கருதினர். இவற்றுக்கான சான்றுகளை ஏராளமாகப் பரக்கக் காணலாம்.

1. தர்ஸ்டன் இங்குள்ள நம்பிக்கைகளை மூடநம்பிக்கைகள் (Superstitions) என்று குறிப்பிட்டார்.

2. நீலகிரி மக்கள் காட்டுப் பன்றிகளையும் கரடிகளையும் போன்று வாழ்கின்றனர் எனக் கீழ்ப் பார்வையை வைக்கிறார்.[4]

3. 1797இல் சார்லஸ் கிராண்ட், சிறிது சிறிதாக இந்துக்களுக்கு நமது மொழியைக் கற்பித்தலும் பின்னர் அதன் வாயிலாகப் பல்வேறு பொருள் குறித்த இலக்கிய படைப்புகளோடு தொடர்புறுத்தலும் பின்னர் நமது தத்துவங்களையும் சமயத்தையும் புகுத்துதலும் நமது அதிகார வரம்புக்குட்பட்டதுதான் என்கிறார்.

போதை தரும் மதக்கோட்பாடு, கிளை உணர்வு, தேவையற்ற ஆச்சாரங்கள், முதலாளிகளின் கொடுமைகள், பெண்ணடிமை முறைகள், தகாத பாலியல் உணர்வுத் தன்மைகள், ஆண்டான் அடிமை முறைகள், தீண்டாமை போன்ற பிற்போக்குத்தனமான கருத்துக்கள் நாட்டுப்புற வழக்காறுகளில் உள்ளன என்று கூறி, அவற்றை மீண்டும் மக்களிடம் பரவச்செய்ய தொகுத்தளிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இது ஒரு அரசியல் தந்திரம்.

கால்டுவெல் போன்றவர்கள் இங்குள்ள புரட்சித் தலைவர்களை (கட்டபொம்மு, புலித்தேவர்) கொள்ளைக்காரர்கள் என்று எழுதியதோடு இவர்களைப் பற்றிப் பாடும் கதைப்பாடல்களைக் 'கற்பனை' என்று தள்ளுகின்றார். இது புரட்சியையும் விழிப்புணர்வையும் மழுங்கடிக்க அவர்கள் கையாண்ட தந்திரம்.

தங்களது நாட்டின் மதிப்பீடுகளையும் குடியேற்ற நாடுகளில் திணித்து, சுதேசி மதிப்பீடுகளைத் தேவையான அளவிற்குத் திருத்தித் தகவமைத்துக்கொள்ளவும் தங்கள் ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ளவும் இவற்றை அவசியமான ஒன்றாகக் கருதினர்.

இங்குள்ள கிராமிய மருத்துவம், தொழில் நுட்பம் போன்றவற்றையும் நாட்டுப்புற வழக்காற்றியல் மூலம் அறிந்து தம் நாட்டிற்குக் கொண்டு சென்றனர். இத்தகைய அறிவுத் தேட்டம் இவர்களை மேலும் ஈடுபடச் செய்தது.

---

4. Edcar Thurston, **Castes and Tribes of Southern India,** Madras, 1909, Introduction.

தங்கள் ஆட்சி நிலைப்பதற்குத் தங்கள் மதத்தினர் தேவை என்று எண்ணியது போலவே தங்கள் மொழி பேசுகிறவர்களும் தேவை என்று மெக்காலே திட்டமிட்டார். இரத்தத்தாலும் நிறத்தாலும் இந்தியர்களாகவும் அகத்தில் ஆங்கிலேயர்களாகவும் இருக்கக்கூடிய ஒரு வர்க்கத்தை இடைத்தரகர்களாக உருவாக்கிட கல்வி முறையை நுழைத்தார். பல்வேறு வகையில் மதமாற்றமும் நிகழ்ந்தது.

இந்துக் குருமார்களைக் கேலி செய்ய நாட்டுப்புறக் கதைகளைத் தொகுத்து ஆய்ந்து அதே பாணியில் 'பரமார்த்த குரு கதைகள்' எழுதினார் வீரமாமுனிவர்.

புறத்தார்களுக்கான சிக்கல்கள் இவர்களுக்கும் இருந்தன. பழமொழிகளை மொழிபெயர்ப்பது மிகக் கடினம். அந்நிய மொழியில் இதன் சாத்தியங்கள் குறைவு.

லாசரின் பழமொழித்தொகுதி ஏமாற்றம் தந்தது எனவும் தவறான விளக்கங்கள் உடையது என்றும் ஹெர்மன் ஜென்சன் குறைகூறுகிறார்[5].

சார்லஸ் இ. கோவரின் நாட்டுப்புறப் பாடல் தொகுதியில் திருக்குறளும் திருவாசகமும் மாட்டிக் கொள்கின்றன[6]. புறத்தார்களுக்கு நாட்டுப்புற இலக்கியத்தை இனங்காணுவதில் உள்ள சிக்கல் இது.

மாக்வீன் பாடல்கள் தொகுக்கும்போது ஒரு வரிக்கு இத்தனை அணா என்று கொடுத்தது புறத்தாரின் வியாபாரப் புத்தியைக் காட்டும். இது தவறான அணுகுமுறையாகும்.

இவ்வாறு புறத்தார்களின் முயற்சிகளில் சிறுகுறைகள் இருப்பினும் செய்த பணி பெரிது; நோக்கமோ அவர்களுக்கு உதவுவது. எட்வர்டு செய்து கூறுவதுபோன்று கீழை அறிவு என்பது மேலை அறிஞர்களால் கட்டமைக்கப்பட்டு, ஆள்வதற்கு ஏற்றவகையில் திருத்தியமைக்கப்பட்டதுதான்[7].

---

5. Rev. Herman Jenson, **A Classified Collectionof Tamil Proverbs,** Asian Educational Services, 1986, Introduction.
6. Charles E. Gover. **Folksongs of Southern India**, First Edition 1871, S. Edition 1959, Madras.
7. Edward Said, **Orientalism**, Vintage Books, New York, 1979.

III

இவ்வாறு விடுதலைக்கு முன்பு புறத்தார்களின் நாட்டுப்புற வழக்காற்றியல் பணி நோக்கம் தெளிவாக இருப்பதுபோல, விடுதலைக்குப் பிறகு புறத்தார்களின் ஆய்வு நோக்கம் புலப்படவில்லை.

பிருந்தாபெக் அண்ணன்மார் சுவாமி கதையையும், அல்ப்ஹில்ட் பெய்டல் திரௌபதை வழிபாட்டையும், ஸ்டூவர்ட் எச் பிளாக்பர்ன் வில்லுப்பாட்டையும், ஸ்டீபன் கிங்லிஸ் சுடுமண் சிற்பங்களையும், டேவிட் சுல்மான் கோவில் புராணங்களையும், மேயல் எவிலின் அங்காள பரமேஸ்வரி வழிபாட்டையும், ரிச்சர்ட் ஃப்ராஸ்கா தெருக்கூத்தைப் பற்றியும், அன்னா கட்டைக்கூத்து பற்றியும் ஜார்ஜ் ஹார்ட் மணிக்குறவன் கதையையும், ஹோலிபேக்கர் பெண்களின் நோன்பையும், மார்கரட் டி. எக்னர் பறையர்களின் ஒப்பாரியையும், செல்ட்மேன் பொம்மலாட்டத்தையும், கமில் ஸ்வலபில் மதன காமராசன் மற்றும் மயில் ராவணன் கதைகளையும் ஆராய்ந்துள்ளனர்.

அவர்களுக்குக் கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள நிறுவனங்கள் நிதி உதவி செய்து வருகின்றன. அவர்களும் இங்கு வந்து 10 அல்லது 20 ஆண்டுகள் கடினமாக முயன்று உழைத்து ஆய்ந்து நூலாகவும் வெளியிடுகின்றனர்.

இப்புறத்தார்களுக்கு இந்திய/தமிழ் நாட்டுப்புற வியலில் ஏன் அக்கறை வந்தது? அறிவுத்தேடல் மட்டும் தானா? வேறு நோக்கங்கள் உண்டுமா? அவர்கள் இங்கு வந்து இங்குள்ளவர்களின் உதவியைப் பெற்றுத் தம் ஆய்வே உயர்வானது என்று தம்பட்டம் அடிப்பது சரியா? இங்குள்ள வர்கள் எல்லாம் மேலைக் கோட்பாடுகளைப்பற்றிப் பக்கம் பக்கமாக மொழிபெயர்த்துத் தள்ளும்போது அவர்கள் ஏன் அவற்றைத் தம் ஆய்வுக்குத் தேர்ந்தெடுத்துக் கொள்வதில்லை. மத மாற்றங்கள் ஆங்காங்கே நடந்து கொண்டு இருப்பதால் இவர்களது சிறுதெய்வ வழிபாடுகள் மீதான ஆய்வுகளுக்கு அடிநோக்கமாக மதமாற்றமும் இருக்குமா? இவை இனிமேல் தான் ஆராயப் படவேண்டியவை.

புறத்தார்களுக்கான சிக்கல்கள் பல இவர்களிடமும் உள்ளன.

1. அகத்தார்களைக் குறைகூறுவது. பிருந்தா அம்மையார் சக்திகனலின் தொகுப்பைக் குறை சொன்னது இதற்குச் சான்று.

2. அந்நிய மொழியைத் தவறாகப் புரிந்துகொள்வதும் தப்பாக மொழிபெயர்ப்பதும் பிருந்தா அம்மையாரிடமும் உள்ளது. தாமரையை வேட்டுவர்கள் கவர்ந்து சென்றதாகவும், 'கனத்த முடி'யை மகுடத்திற்குப் பதிலாக தலைமுடி என்றும் கய்யாட்சி என்ற சொல்லுக்குக் கை கொண்ட பொருள் என்பதற்குப் பதிலாக ஆச்சி எனப் பொருள் கொள்ளுவதும் அசட்டுத்தனம் என்பர்[8].

IV

நாட்டுப்புற வழக்காற்றியல் ஆய்வின் இரண்டாவது காலகட்டத்தை நாம் அகத்தார் ஆய்வுக் காலம் என்றே அழைக்க வேண்டும். இதனைத் தேசிய காலகட்டம், கல்விபுலக் காலகட்டம், ஆய்வுக்காலம் எனப் பலவாறு அழைக்கின்றனர்[9].

தேசிய எழுச்சியும் சுதந்திரம் பெற்ற இந்தியாவில் அகத்தார்களின் அக்கறையும் கல்விபுல வளர்ச்சியும் இக்கால கட்டத்தைச் செழுமைபடுத்திற்று.

ஆலன் டண்டிஸ் சொல்வதுபோல, "எந்த நாட்டினர் கடந்த காலத்தில் அல்லது இக்காலத்தில் கலாச்சார தாழ்வுணர்வு கொண்டவர்களாக இருக்கிறார்களோ அவர்களது நாடுகளில் நாட்டுப்புற வழக்காறுகள் செழித்தோங்கும். தம் நாட்டு வழக்காறுகளைச் சேகரித்து வெளிப்படுத்துவதன் மூலம் அவற்றைக் கொண்டாடுவதன் மூலம் தங்களை அடையாளம் கண்டுகொள்கிறார்கள்"[10].

விடுதலைக்குமுன் ஆங்கிலேயருக்கு எதிரான முயற்சிகளாக இருக்க வாய்ப்புண்டு. இத்தகைய ஆய்வை யாரும் செய்யவில்லை.

---

8. கோ.ந. முத்துகுமாரசாமி, அண்ணமார் சுவாமி கதை, பதிப்பாசிரியர் சக்திகனல், ஆய்வுரை, 1995.
9. அடிக்குறிப்பு 2.
10. மேற்கோள், முருகானந்தம், நாட்டுப்பாடல்களில் வரலாற்றுச் செய்திகள், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், 1994.

விடுதலைக்குப்பின் தமிழ் இலக்கியப் பெருமையைப் பலர் ஏட்டு இலக்கியங்களில் நிரூபிக்க முனைந்தபோது தூரன், மு. அருணாசலம், அன்னகாமு, அ.மு.ப., ச.வே.சு., சோமலெ என்பவர் நாட்டுப்புற இலக்கியங்களில் தேடினர்.

இக்காலத்து ஆய்வைக் கல்விப்புலம் சார்ந்தது சாராதது என்றும் நிறுவனம் சார்ந்தது சாராதது என்றும் பகுத்துப் பார்த்தனர். இதனை அவ்வாறு துல்லியமாகப் பகுக்க முடியாது. நா.வா. போன்றவர்கள் கட்சிப்பணியாக இதனைச் செய்தாலும் தெ.பொ.மீ. மூலம் பல்கலைக் கழகத்தினுள் நுழைந்தது.

அகத்தாரின் ஆய்வுகளில் சில சிக்கல்கள் ஏற்பட்டன. சுத்தத் தமிழ் நேயம், தமிழ் அரசியல் நேயம், தலித் அரசியல் நேயம், வர்க்க அரசியல் நேயம் என மொழி, சாதி, கட்சி காரணமாகச் சிக்கல்கள் எழும்பின.

அடுத்த கட்டமாகத் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொள்ளாத, கிறிஸ்தவம் இசுலாம் போன்ற பிற மதம் சார்ந்த ஆய்வாளர்களை அகத்தாரில் சேர்ப்பதா விடுவதா என்ற பிரச்சனை. கொஞ்சம் விரிவாகப் பார்க்கலாம்.

V

முதலில் அகத்தாரின் சிக்கல்கள் எழுந்தன. சுத்தத் தமிழ் நேயர்கள், பண்டிதர்கள் நாட்டுப்புற மொழி வழக்கைக் கொச்சை, அருவருப்பு, கீழானது, என்று ஒதுக்கினர். மொழித் தூய்மைகூட ஒருவகை மேல்சாதி குணம்தான்.

முதலில் கே.பி.எஸ்.ஹமீது நாட்டுப் பாடலில் ஆய்வேடு சமர்ப்பித்தபோது ஏளனம் செய்யப்பட்டார்[11]. இன்னொருவர் 'தாலாட்டு அழகப்பன்' என்ற கேலி செய்யப்பட்டார். வையாபுரிப்பிள்ளைகூட கதைப்பாடல்களை ஒதுக்கினார்[12].

இராமசாமிப் புலவர் 'தென்னாட்டுப் பழங்கதைகளில், கொச்சை' என்று நடையைத் திருத்தினார் (முன்னுரை). மு. அருணாசலம் காத்தவராயன், மதுரைவீரன், சுடலை மாடன் போன்ற சிறு தெய்வங்களைக் கிரிமினல், ரௌடி,

11. டாக்டர் வி.ஐ.சு.. நாட்டார் வழக்காற்றியல், முன்னுரை.

12. M. Arunachalam, **Ballad Poetry,** Introduction.

கீழானவர்கள், அயோக்கியர் என்றும் இவர்களைப் பற்றிய கதைப்பாடல்களைக் கீழானவை என்றும் தாக்குதல் செய்கிறார்[13]. இது சுத்தத் தமிழ்க் கலாச்சாரச் சிக்கல்.

தற்கால தமிழன் பாரீஸ், பாண்டிச்சேரி, மட்டக் களப்பு எங்கு வாழ்ந்தாலும் அவனுக்குள் அடிமனதில் காலம் காலமாகச் சேகரிக்கப்பட்ட ஒரு தமிழ்ப் பண்பாட்டுக் கிடங்கு குறியீடுகளின் முகமூடி அணிந்து மேலெழுந்து வருகிறது. சிற்பம், ஓவியம், பாம்படம், புலியாட்டம் எல்லாம் குறியீடுகளின் மொழியைப் பேசிக்கொண்டு உலவுகின்றன. புதிர் அவிழ்த்துப் பார்க்கையில் தமிழ் (நாட்டுப்புற) அழகியல் புரிகிறது என்பார் இந்திரன்[14]. இது தமிழ் அரசியலில் வளர்க்க வேண்டிய கூறு. நம்மை - நம் அடையாளங்களின் தேடல்.

எழுபதுகளில் தமிழியல் ஆராய்ச்சி உலகில் ஒரு புரட்சி ஏற்பட்டது. பல எதிர்ப்புகளுக்கிடையில் தெருக்கூத்து, தோற்பாவை நிழல்கூத்து, தாலாட்டு, ஒப்பாரி என்பவை ஆராய்ச்சிக்கு உரியவை ஆயின. தமிழ் ஆய்வு தமிழியல் ஆய்வு ஆயிற்று என்று டாக்டர் முத்து சண்முகம் பாராட்டினார்[15].

ஆமாம் உண்மைதான். தமிழ்க் கலைகளையும் நாட்டுப்புற வழக்காறுகளையும் காக்கப்பலர் முன்வந்தனர். எம்.ஏ., எம்.லிட்., எம்.பில்., பிஎச்.டி., என்று ஆய்வு பட்டங்களுக்குப் பலர் திரண்டனர்.

நான் வட்டாரப் பற்றுடன் என் மாவட்ட (நெல்லை) நாட்டுப்புறப் பாடல்களை பிஎச்.டி.க்கு முதலில் (1973) ஆராய வந்தேன். என்னைத் தொடர்ந்து அனைத்து மாவட்டங்களையும் ஆய்ந்தனர். இதுபோல் டாக்டர் இராமசாமியைத் தொடர்ந்து கலை வடிவங்களையும், நாட்டுப்புறத் தெய்வங்களையும், சாதீய முறையில் வாழ்வியலையும் ஆராய்ந்து முடித்தனர். இன்னும் பலர் தொடர்கின்றனர்[16].

---

13. M. Arunachalam, **Ballad Poetry**, Introduction.
14. இந்திரன், தமிழ் அழகியல், ப.101.
15. டாக்டர் முத்துசண்முகம். தமிழில் தெருக்கூத்து (அறிவு நம்பி), முன்னுரை.
16. சண்முகசுந்தரம், **நவீனத்தமிழும் பின் நவீனத்துவமும்** (தமிழவன்), ப.140.

இதில் அகத்தாரின் அன்பும் அக்கறையும் வெளிப்பட்டன. "இவற்றைச் சேகரிப்பதன் மூலம் இவற்றின் ஆன்மாவை நசுக்காமல் அவற்றிலிருந்து வளர்ச்சி பெறலாம். இதுபோலவே கலாச்சாரத்தின் உட்கூறுகளாகிய கலை இலக்கியங்களிலும் இவற்றின் ஆதார சுருதியாகிய ஆன்மாவைக் காயப்படுத்தாமல் சமூக வளர்ச்சிக்கேற்ப அவற்றை வளர்த்தால் மட்டுமே அவற்றினின்றும் சிறந்த கலை இலக்கிய வடிவங்களைப் பெறமுடியும்" என்பார் டாக்டர் மு. இராமசாமி.[17]

இதைத் தவிர அமைப்பியல் ஆய்வு, வரலாற்று நிலவியல் கோட்பாட்டாய்வு, நிகழ்த்துதல் கோட்பாட்டாய்வு, உளவியல் ஆய்வு, ஒப்பியல் ஆய்வு, அவியல் ஆய்வு (எல்லாம் கலந்த சௌசௌ) எனப் பலர் தூள் கிளப்பினர்.[18] இருந்தாலும் லூர்து கல்வி புலம் சார்ந்தவராகச் சில விமர்சனங்களை வைத்தார். வழிகாட்டிகளை அறியாமையும் பரந்த மனப் பான்மையும் இல்லாதவர்கள் என்றும் ஆய்வாளர்களைத் தேடல் மனப்பான்மை இல்லாதவர்கள் என்றும் குற்றம் சாட்டினார். கோட்பாட்டாய்வுகளை வலியுறுத்தினர்[19]. ஆனால் தமிழண்ணலோ அள்ளி விழுங்கி அஜீரணம் ஆகி வாந்தி பண்ணுவதை விரும்பவில்லை[20].

அடுத்துக் கட்சிக்காரர்களின் சிக்கல்களைக் கவனித்தால் நிறுவனச் சார்புடைய ஆய்வுலகம் கற்றுச் சொல்லிகளாலும் எழுத்துவிலைப்போகிகளாலும் கிளிப் பிள்ளைகளாலும் பட்டியல் தயாரிக்கும் எந்திரங்களாலும் தமிழாய்வு பிரபுக்களாலும் எதிலும் பட்டும் படாமல் நழுவிச் செல்லும் போக்கிரிகளாலும் சிந்தனை வாசலை மூடிவிட்ட சட்டாம்பிள்ளைகளாலும் பெரிதும் தலைமை தாங்கப்பட்டு வருகின்றன என்பார் கோ. கேசவன்.[21] நியாயமா என்று பார்க்கலாம்.

---

17. மு. இராமசாமி, **தோற்பாவை நிழல் கூத்து**, முன்னுரை.
18. பார்க்க: 16.
19. டாக்டர் தே. லூர்து, **நாட்டார் வழக்காற்றியல் I**, முன்னுரை.
20. தமிழண்ணல், **நாட்டுப்புற வழக்காற்றியல் ஆய்வுகள்**, (முன்னுரை).
21. கோ. கேசவன், **கதைப்பாடல்களும் சமூகமும்**, தோழமை வெளியீடு, குடந்தை, 1985, ப.10

கல்விபுலத்தினர் கோட்பாடுகளுக்கு அடிமை ஆவது போலவே இவர்கள் கட்சிக்குக் கட்டுப்பட்டவர்கள். 'ஏகாதிபத்தியத்துக்கு எதிரான உலகளாவிய போராட்டத்தின் அங்கம்; மூன்றாம் உலக நாடுகளின் சமூக உளவியல் அடித்தளத்தை அறிந்துகொள்ளும் மூலம்' என்றனர்.

பேரா. நா.வா., பொன்னீலன், ஆ.சி., கோ. கேசவன் போன்றவர் இதன் உறுப்பினர்கள். கலை இலக்கியப் பெருமன்றத் தலைவரான நா.வா. கட்சிப்பணி போலவே பிற உறுப்பினர்கள் மூலம் பாடல்களைத் தொகுத்தார். 'மருண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய்தான்'. எங்கும் எதிலும் வர்க்கப்பார்வைதான்.

இவர்கள் ஈடுபாட்டிற்குக் கட்சி அரசியலே காரணம். மக்களாட்சியில் மக்களின் முக்கியத்துவம் உணரப்பட்டபோது மக்களை மதிப்பதாகக் காட்டிக் கொள்ள, மக்களைத் தங்கள் பக்கம் ஈர்த்துக்கொள்ள வேண்டிய அவசியமும் அரசியல் கட்சிகளுக்கு ஏற்பட்டது.

வர்க்கப் பார்வை சில சிக்கல்களை ஏற்படுத்தின. நா.வா. தனது 'தமிழ்நாட்டுப் பாமரர் பாடல்கள்' நூலின் முன்னுரையில் 'மாம்பழத்தைக் கீறி வயலுக்கு உரம்போட்டு' எனப் பாடினால் மேல்தட்டுத் தாயின் தாலாட்டு என்றும் 'வெத்துக் குடிசையிலே விளையாட' என்றால் ஏழைப் பெண்ணின் தாலாட்டு என்றும் பிரகடனம் செய்கிறார்.

அதோடு 3 கதைப்பாடல் பிரதிகள் கிடைத்தால் 4வது பிரதியை உருவாக்கிவிடுகிறார். இது ஒருவகை 'கொலாஜ் கோட்பாடு' எனலாம். இப்போது இசைக்குழுக்கள் மூலம் புதிய கட்சிப்பாடல்களை, நாட்டுப்பாடல்கள் என்ற பேரில் போலிப் பாடல்களை (Fake songs) உலவவிடுகின்றனர்.

மற்றவர்களையும் சோதித்தால் உண்மை வெளிச்சத்துக்கு வரலாம்.

தலித் பார்வையும் நாட்டுப்புறவியலுக்குள் கே.ஏ. குணசேகரன், ஞானசேகரன், ராஜ்கௌதமன் போன்றோர் மூலம் நுழைந்துள்ளது. இவற்றில் பறையர்இன மக்களின் ராசாராணி ஆட்டத்தில் நையாண்டித்தனம் என்ற

கே.ஏ.கு.வின் கட்டுரை குறிப்பிடத்தக்கது.[22] தலித்துகளே இந்த மண்ணின் அகத்தார்கள் என்பது இவர்களது ஆய்வுகளால் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இவர்களின் நோக்கம் கருதி இவற்றை வரவேற்கலாம்.

VI

அடுத்துப் பிராமணர்களையும் கிறித்தவர்களையும் இசுலாமியர்களையும் பிறமொழியாளர்களையும் அகத்தார்களாக ஏற்றுக்கொள்ள முடியுமா என்பது இனி செய்யவேண்டிய ஆய்வாகும்.

தமிழ்நாட்டில் வாழும் பிராமணர்களைத் தமிழ் பிராமணர்கள் என்று அழைக்க முடியுமா? அவர்கள் தம் தாய்மொழியாகத் தமிழைக் கருதுகிறார்களா? இவர்கள் மொழியளவில் தமிழைவிடச் சமஸ்கிருதத்திற்கு மதிப்புக் கொடுக்கிறார்களா? தங்கள் தமிழையும் சமஸ்கிருதம் கலந்ததாகப் பயன்படுத்துகிறார்களா? இவர்கள் ஆரியர்களா? அல்லது ஆரியர்களோடு கலந்தவர்களா? அல்லது ஆரியர்களாக வந்து தமிழர்களோடு கலந்தவர்களா?

எது எப்படி இருந்தாலும், இவர்களின் மொழி தமிழிலிருந்து அந்நியப்பட்டது; இவர்களின் வழிபாட்டு முறைகள் தமிழர்களிடமிருந்து அந்நியப்பட்டது; இவர்களின் சாதிமுறை தமிழர்களிடமிருந்து அந்நியப்பட்டது. எல்லா நிலைகளிலும் தம்மை உயர்ந்தவர்களாக எண்ணும் தமிழகத்திலுள்ள பிறசாதியினரைத் தீண்டத்தகாதவர் களாகப் பார்க்கும் உயர்வுணர்ச்சி உள்ளது. தமக்குரிய சமஸ்கிருதத்தைத் தேவபாஷையாகவும் தமிழை நீச பாஷையாகவும் கருதும் போக்கு உள்ளது. தமது வழிபாட்டு முறையைப் பெருமரபு என்றும் (Great tradition) நாட்டுப்புற வழிபாட்டு முறையை சிறுமரபு (Little tradition) என்றும் பார்க்கும் இயல்பு உள்ளது. தமிழ் இருக்கும் தெற்கைவிட வடக்குச்சார்பு அதிகம் கொண்டவர்கள். 'விலகல், வெறுத்தல், காய்தல் என்பவை இவர்தம் நடப்பியல் கூறுகள். இவர்களை நெருங்க இயலாது. கடக்கவியலாத தடை இடையில் உள்ளது' என்று துபாயீஸ் கூறுவது போன்றும் அம்பேத்கார் பெரியார் போன்றவர்களின் கூற்றுப்படியும் இவர்களைப்

22. கே.ஏ. குணசேகரன், தலித் அரங்கியல், ப.34.

புறத்தார்களாகவே கருத முடியுமா? அல்லது இவர்களே தங்கள் வாழ்முறையால் நம்பிக்கைகளால் புறத்தார்களாகவே கருதிவருகிறார்கள் என்று சொல்ல முடியுமா?

தமிழ் நாட்டுப்புற வழக்காற்றியல் தரவுகளைச் சேகரிப்பதில் இவர்களின் பங்கு தொடக்க காலத்தில் பிரிட்டிஷாருக்கு உதவுவதாக இருந்தது. எட்கர் தர்ஸ்டனுக்கு கே. ரங்காச்சாரி, அனந்தகிருஷ்ண அய்யர், என். சுப்ரமணிய அய்யர் ஆகியோர் உதவியாளர்களாகப் பணிபுரிந்தனர்.

அடுத்துப் பிரிட்டிஷார் தொகுத்ததைச்சோதித்துப் பதிப்பிக்கும் பணியிலும் ஈடுபட்டனர். சான்றாகப் பார்சி மாக்வினின் தொகுப்பை மலையருவி என்ற பெயரில் 1958இல் கி.வா.ஜ. வெளியிட பதிப்பாளராகப் பணியாற்றினார். அப்போது அவரால் ஒருபுறத்தாராகவே நடந்துகொள்ள முடிந்தது. "இடக்கராக இருந்த பல பாடல்களை விட்டுவிட்டேன்" என்று கி.வா.ஜ.வும் 'சில பாடல்கள் சபைக்கு அருகமில்லாமல் இருந்தன' என்று கௌரவ காரியதரிசி எஸ். கோபாலனும் கூறுவன கவனிக்கத்தக்கன[23]. இடக்கர், சபைக்கு அருகமில்லாதல் போன்ற அளவுகோல் களால் ஒரு கலாச்சாரத்தில் உள்ளவற்றை விலக்குவது அல்லது தணிக்கை செய்வது மேட்டிமைத்தனமல்லாமல் வேறாக இருக்க முடியாது.

நாட்டுப்புறப் பாடல்களை 'நாடோடி இலக்கியம்' என்று அறிமுகப்படுத்தியது (1967) நாட்டுப்புற மக்களை நாடோடிகள் என இழிவுபடுத்துவதாகவும் எடுத்துக் கொள்ளலாம். தமிழ்ப் பழமொழிகளைத் தொகுத்து வெளியிட்டுள்ள இவர் அத்தொகுதியில் கொன்றை வேந்தன், ஆத்திச்சூடி இலக்கியக்கூறுகளையே பெரும்பாலும் தொகுத்துள்ளாரே தவிர வழக்காற்றியல் கூறுகளுக்குச் செல்லமுடியவில்லை. காரணம் அவர் சொற்பொழிவுகளுக்குப் போன இடங்களில் சந்தித்த பிராமண முதிய பெண்மணி களிடம் தொகுத்ததுதான். நாட்டுப்புற வாழ்விற்கு முற்றிலும் புறத்தவராக வாழும் அவர்களிடம் செவ்விலக்கியக் கூறுகளே கிடைக்கும்.

பண்டித நடேச சாஸ்திரி நாட்டுப்புறக் கதைகளைத் தொகுத்துப் பல தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். Indian

---

23. கி.வா.ஜ., மலையருவி, முன்னுரை.

Antiquaryஇல் இப்பணியைத் தொடர்ந்து செய்தார். இக்கதைகள் முதலாளித்துவத்துக்கு முந்தைய சமூக அமைப்பில் உள்ள நிலபிரபுத்துவ மதிப்பீடுகளையே பெரும்பாலும் கொண்டுள்ளன. இவற்றை மீண்டும் கிராம மக்களிடைப் பரப்புவது இவர்களின் நோக்கமாயிற்று என இக்கதைகளை ஆழ் ஆய்வு செய்யும்போது புலப்படுகிறது. சி.ஆர். சீனிவாச சாஸ்திரி பழமொழி போதனை என்ற தொகுதியை வெளியிட்டார். இதில் போதனை கவனிக்கத் தக்கது.

இந்த ஆய்வாளர்கள் நாட்டுப்புற வழக்காறுகளைச் சமஸ்கிருத மயமாக்குவதையும் தங்கள் குறிக்கோள்களாகக் கொண்டுள்ளனர். கி.வா.ஜ. சில வழிபாட்டுக்குரிய நாட்டுப் புறப் பாடலை மச்சுவீடு எனும் தலைப்பில் வியாக்கியானங்கள் செய்துள்ளார். இதில் மச்சு என்பதே மேல்நிலையை உருவகப்படுத்துவதுதான். ந. முத்துசாமியின் கூத்துப் பட்டறை முயற்சிகளும் தெருக்கூத்துப் பற்றிய விளக்கக் கட்டுரைகளும் (அன்று பூட்டிய வண்டி) இத்தன்மை உடையன. டாக்டர் சிவராமகாரந்த் கன்னட யக்ஷகானத்தைச் சமஸ்கிருதமயமாக்கிச் செவ்வியல் கூத்தாக்கியதைப் போன்றே தெருக்கூத்தையும் செவ்வியலுக்குரியதாக்க முயல்கிறார் என்ற கூற்றுகளும் கவனிக்கத்தக்கன.

மேற்குமயமாதலும் பிராமண நாட்டுப்புறவியல் ஆய்வாளர்களிடம் படிந்துள்ள இன்னொரு கூறாகும். ஏ.கே. ராமானுஜத்தின் தமிழ் நாட்டுப்புறக் கதைகளைப் பற்றிய ஆய்வுக் குறிப்புகள் இத்தகையன என்பர். டாக்டர் சரஸ்வதி வேணுகோபாலும் நாட்டுப்புறவியலாளரின் பெருமை உலக அரங்கில் (மேற்கில்) ஓங்க இறைவனை இறைஞ்சுகிறேன் என்று தனது 'கோட்பாடுகள்' நூல் முன்னுரையில் குறிப்பிடுவதும் இதனோடு இணைத்துப் பார்க்கத்தக்கது.

சியாமளா பாலகிருஷ்ணனின் நாட்டுப்புற இசை மற்றும் ஆடல் பற்றிய ஆய்வும்கூட நாட்டுப்புற இசைக்குள் சாஸ்திரீய இசையைத் தேடிப்பிடிக்கும் முயற்சிதான். கோ. கேசவன் "முதலாளித்துவத்துக்கு முந்தைய சமூகத்தில் உடல் உழைப்பில் ஈடுபடாத சாதியாகப் பிராமணர்கள் இருந்தனர். எனவே நாட்டுப்புறக் கலைகள் எவற்றிலும் ஆர்வமும் பங்கெடுப்பும் ஈடுபாடும் இவர்களுக்கில்லை" என்பார். இவர்கள் உழைப்பிலிருந்து மட்டுமல்ல நாட்டுப்புற வாழ்வியலில் இருந்தே அந்நியமானவர்கள்.

"இவர்கள் தாலாட்டு (நலுங்கு, கோலாட்டு) போன்ற பாடல்களைப் பாடினாலும் அவை பண்பாட்டுக் கலப்பு, பண்பாட்டுத் தாக்கம், பண்பாட்டுப் பரிமாற்றம் போன்றவற்றால் வந்திருக்க வேண்டும். அதோடு அவற்றில் மண்ணின் மணம் இல்லாமல் நாலாயிர திவ்வியபிரபந்தங்கள், பெரியாழ்வாரின் பாசுரங்கள் புராணங்கள் போன்றவற்றின் துணுக்குகள் அல்லது அவற்றின் தாக்கங்கள் இருக்கும். இவர்களின் நாட்டுப்புறக் கதைகளும் புராண இதிகாசத் துணுக்குகளாகவே அல்லது அவற்றின் பாதிப்புகளாகவே இருக்கும்" என்று எஸ். முருகானந்தம் கூறுவதும் சிந்தனைக்குரியது[24]. இதற்கான சான்றுகளைப் பரவலாகக் காணலாம்.

இவர்கள் தம்மைப் புறத்தாராக்கிக்கொள்ளவே விரும்புகிறார்கள் என்பது சரியா? இவர்களால் நம் நாட்டுப்புற வழக்காறுகளுக்கு ஏற்படும் இடையூறுகள் யாவை? இவர்கள் நம் நாட்டுப்புறக் கலாச்சாரத்தைச் சரியானபடி மேனாட்டிற்கு ஏற்றுமதி செய்வார்களா? இவற்றுக்கான பதில்களை இனிமேல்தான் தேட வேண்டும்.

கிறிஸ்தவ நாட்டுப்புறவியலாளர்கள் கிறிஸ்தவத்தைப் பரப்புவதில் அக்காலத்தில் முழுமூச்சாக ஈடுபட்டனர். எம்.ஆர்.டி.பி. சொஸைடி விவிலிய விடுகதைகளை 1897இல் வெளியிட்டது. அந்தோணிமுத்து ஞான சவுந்திரியம் (1899) என்றும் இயாக்கோபு சாமுவேல் ஆதாம் ஏவாளின் விலாசம் (1885) என்றும் நாட்டுப்புற நாடகங்களை வெளியிட்டனர். தற்போதும் இம்முயற்சிகள் தொடருகின்றன. ஏசு சபையினரின் ஆசிர்வாதத்தோடு பாளையங்கோட்டையில் நாட்டார் வழக்காற்றியல் நிறுவனம் பல பணிகளைச் செய்து வருகின்றது. தமிழகத்திலேயே முதன்முதலாகத் தொடங்கப் பட்ட ஒரு முதுகலைத் துறையின் பொறுப்பை டாக்டர் தே. லூர்து ஏற்றுள்ளார். இதற்குக் காரணம் மதுரை ஏசு சபை பண்பாட்டுச் செய்தித் துறையாகும்.

லூயிதுமோன், பிரெண்டாபெக், ஸ்டூவர்ட் ப்ளாக்பர்ன், எவிலின் மாசிலாமணி மேயர், ரெய்னீஷ் போன்றோர் கள ஆய்வு செய்து நல்ல பல ஆய்வுகளை

24. அடிக்குறிப்பு: 10.

வெளியிட்டுள்ளனர். ஆனால் தமிழ்நாட்டில் இத்துறையில் முறையான ஆய்வுகள் வரவில்லை என்று கல்லூரி முதல்வர் அருள்திரு. பாக்கியராஜ் கூறுகிறார். இது மிகவும் விவாதத்திற் குரிய ஒன்று. இக்குரலின் பின்னணி மதமா/மேற்குமயமா, உண்மையிலேயே தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வு மோசமானதா என்று விவாதிக்க வேண்டும்.

டாக்டர் லூர்து அவர்கள் நாட்டார் வழக்காற்றியல் இதழின் முன்னுரையில் குறிப்பிடுபவை கூர்ந்து கவனிக்கத் தக்கவை. "ஆய்வு நெறியாளரின் பயிற்சியின்மை, அறியாமை, பரந்த மனப்பான்மை இன்மை, ஆய்வில் தொடர்ந்து ஈடுபாடு இன்மை, ஆய்வு மாணவன் கூர்ந்த அறிவு நுட்பமும் உழைப்பும் உடையவனாக இருப்பின் தம்மினும் தம்மக்கள் அறிவுடைமை கண்டு மகிழாது அவர்களை வளரவிடாது தடுத்துவிடுகின்றன. தன் மகனுக்கே தான் அறிந்த மருத்துவத்தைச் சொல்லிக்கொடுக்க விரும்பாத தமிழ் மருத்துவ மனப்பான்மை இதிலிருந்து புலப்படுகிறது. எங்கே தன் மாணவன் தன்னைவிடச் சிறந்த ஆய்வாளனாக வந்துவிடுவானோ என்ற ஆசிரியர் இந்திய மனப்பாங்கு இதிலிருந்து தெரிகிறது" என்று எழுதுகிறார்.

இதில் மேற்பார்வையாளர்களை இவர் ஒரு மேற்பார்வையாளராக இருக்கும்போதே குற்றம் சாட்டுவது இருக்கட்டும் அதென்ன தமிழ் மருத்துவ மனப்பான்மை, இந்திய மனப்பாங்கு என்று மட்டம் தட்டுவது, இந்த மனப்பான்மையும் மனப்பாங்கும் எப்படி வந்தன? எங்கிருந்து வந்தன? தனக்கு எல்லாம் தெரியும். தான் மட்டுமே சரியாக இருக்கிறோம் என்ற உயர்வு மனோபாவத்திற்கும் தமிழை விட்டு விலகும் அந்நியத்தனத்திற்கும் உரிய காரணிகளை ஆராயவேண்டுமா? "ஆய்வுத் திறம் கொண்ட மதப் போதகர்களும் ஆய்வு அலுவலர்களும் நாட்டு வழக்காறுகள் என்று அவர்கள் எழுதியவற்றையும் அவற்றிற்குச் சமமான வழக்காறுகளையும் இந்திய துணைக்கண்டத்திற்குள்ளும் வெளியிலும் நிருணயிக்க முயன்றனர். வழக்காறுகளை ஏற்றுமதி செய்ய அவற்றிற்கு ஒரு மதிப்பும் கிடைத்தது" எனும் கூற்றில் அந்நிய ஆதரவும் மதிப்பு மோகமும் வெளிப்படுவதாகத் தெரிகிறது.

இவ்வாறு இவர் தம்மைப் புறத்தாராக்கிக்கொள்ள அடிமனதில் ஆசைப்படுகிறாரோ என்று எண்ணத்

தோன்றுகிறது. 'புனித பழமரபுக் கதைகள் - நாட்டார் வழக்காறுகள்' என்ற தலைப்பில் ஜோசப் இருதய சேவியர் புனித சவேரியாரின் சிறப்பினை நாட்டார் நம்பிக்கை வழி ஏசுபெருமானின் திருவடி வணங்கி ஆராய்ந்தார். இதனை 1994இல் தூய சவேரியார் தன்னாட்சி கல்லூரி வெளியிடுகிறது. இதில் சவேரியார் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்களிடம் கொண்டிருந்த அன்பும் ஒடுக்கப்பட்டோருக்குப் பாசத்தோடு பணியாற்றிய சிறப்பும் விளக்கப்பட்டுள்ளன. இயற்கை இறந்த கூறுகள் பற்றியும் உள்ள கதைகளை எடுத்தாளும்போது தன்னிகரில்லாத தலைவனது வியத்தகு பண்புகளைப் புகழும் நோக்கம் மேலோங்கி நிற்கிறது என்று கல்லூரி முதல்வர் புளகாங்கிதம் அடைகிறார். மதப்பெரியார்களை மகிமைப்படுத்துவதற்கு நாட்டுப்புற வழக்காறு ஆய்வுகளைப் பயன்படுத்தும் நெறிமுறை புரிகிறது. பாரதம் சமயச் சார்பற்ற நாடு என்ற பரந்த தார்மீக மந்திரத்தைக் கொண்டு விளங்குகிறது. சகிப்புத் தன்மையும் சகோதரத்துவமும் இந்நாட்டில் வேரூன்றிய ஆலவிழுதுகள். வந்தாரை வரவேற்கும் மனப்பான்மையும் எல்லோரையும் ஒருநிறையாகக் கருதிவந்த பாரதத்தின் வரலாறு புனிதமானது என ஆய்வாளர் பாரத-தமிழகப் பண்பைப் பாராட்டுகிறார்.

ஆனால் 1541இல் சவேரியார் வந்து 7 லட்சம் பேரை மதம் மாற்றினார் என்று மகிழ்வதும் கிறித்துவம் ஒடுக்கப் பட்டோருக்காகச் சுரண்டும் வர்க்கத்தினரை எதிர்க்கும் இயக்கமாக வளர்ந்தது என்று பிரச்சாரம் செய்வதும் ஆய்வுக்குட்படுத்தி இதற்குள் மத அரசியல் செயல்படுவதை ஆய்ந்தறிய வேண்டும்.

இவ்வாறே டாக்டர் என். ஸ்டீபன்சாமின் 'கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களின் வாழ்வியல் ஓர் ஆய்வு' என்ற நூலில் 'கிறிஸ்தவ மதத்தின் இயல்பான எளிமை, கருணை, நவீனத்துவம் அப்போதிருந்த மீனவ மக்களுக்குப் பெரும் வசீகரமாய் இருந்தது'. என்ற கூற்றுக்கு, கே.எம். பணிக்கரின், "ஒரு கையில் வாளையும் மற்றொரு கையில் சிலுவையையும் ஏந்திக்கொண்டு வந்த போர்த்துக்கீசியரின் ஆதிக்கத்திற்குப் பரதவர்கள் ஆட்பட்டனர்" என்ற கூற்று எதிரான கூற்றாக இருப்பதைக் கவனிக்க வேண்டும். சகோதரி த.ஜேம்ஸ் மரிய ஆரோக்கியம் 'பரதவர் வாழ்வியல்' என்ற நூலில் தூத்துக்குடி ரோமன்

கத்தோலிக்கப் பரதவர் வாழ்வியலை ஆராய்கிறார். இதன் மூலம் பரதவர்களின் தொன்மையான நாட்டுப்புற வழக்காற்றுக் கூறுகள் இன்றும் மறையாமல் இருப்பதை வெளிப்படுத்துகிறார்.

மார்க்கரெட் சாந்தி என்பவர் வேளாங்கண்ணி கன்னி மேரியை ஆராய்ந்து மேரி புராணங்களில் இந்து மரபுகள் இருப்பதை விளக்குகிறார். இசக்கி போன்ற நாட்டுப்புறத் தெய்வங்களைத் தீய ஆவி சிறு தேவதைகளான நிலையை விவரிக்கிறார். ஆக இந்துமயமாதலை ஆதரிப்பதும் நாட்டுப்புற வழிபாட்டினைத் தாழ்த்துவதும் அடியோட்ட-மாக உள்ளதை ஆராய முடியுமா என்று பார்க்க வேண்டும்.

தெய்யம் பற்றி ஆராய்ந்த ஜே.ஜே. பல்லாத் என்னும் கிறித்துவ கேரள நாட்டுப்புறவியல் ஆய்வாளர் தனது குழந்தைப் பருவத்தில் தன் வீட்டார் தெய்யம் போன்ற வழிபாடுகளை எவ்வாறு தடுத்தார்கள் என்றும் குறிப்பிடுவார். இத்தடையே அவருக்கு ஆர்வத்தைக் கிளறச் செய்து, இந்த ஆய்வில் ஈடுபடச் செய்தது என்கிறார். இதே மனநிலை தமிழ்க் கிறித்தவர்களிடமும் காணலாம். அவர்களும் நாட்டுப்புறத் தெய்வங்களைப் பேய், பிசாசு, சாத்தான், தீய ஆவி என்று குறிப்பிடும் வழக்கம் உள்ளதை இதனோடு இணைத்துப் பார்க்கலாம்.

இசுலாம் மதமும் புறமதம்தான். தமிழ் இசுலாமியர்கள் சிலர் நாட்டுப்புறவியலில் ஆர்வமும் ஆய்வும் கொண்டு விளங்குகின்றனர்.

அலியார் புலவர் 'இந்திராயன் படைப்போர்' என 1871இலும் அப்துல் காதர் சாயபு 'மலுக்கின் முலுக்கின் படைப்போர்' என 1876இலும் கதைப்பாடல் வடிவில் தம் மதக் கதைகளை எழுதினர். மகமது இப்ராகிம் 'அப்பாசு நாடகத்தையும்' வண்ணக்களஞ்சியப் புலவர் 'அலிபாதுஷா நாடகத்தையும்' 1873இல் நாட்டார் நாடகங்களாக வெளியிட்டுள்ளனர்.

கண்ணான மச்சி என்ற பெயரில் எம்.ஸி.எம். ஸீஸர் 1969இல் இலங்கை மட்டக்களப்பு தமிழ் இசுலாமியரிடமுள்ள காதல் தெம்மாங்குப் பாடல்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

இவற்றில் மதப்பிரச்சாரம் இல்லை. மத ஆர்வமும் அக்கறையும் மட்டுமே உள்ளன.

இவற்றை மீறி 1987இல் டாக்டர் மீ.அ.மு. நாசீர் அலி நாட்டுப்புறப் பண்பாட்டியல் என்ற பெயரில் தனது திருச்சி மாவட்ட நாட்டுப்புறப் பாடல் பற்றிய ஆய்வினை வெளியிட்டுள்ளார். இவர் ஜீனத் அம்மாள் எனும் ஒரே ஒரு இசுலாமிய பெண்ணிடம் மட்டுமே தாலாட்டுப் பாடலைத் தொகுத்துள்ளார். இதில் இசுலாமியர் தமிழ் நாட்டுப்புற வாழ்வியலுக்குப் புறத்தார் என்றும் ஆய்வாளரோ அகத்தாராக ஆய்ந்திருப்பதும் தெரியவருகிறது. டாக்டர் நசீம்தீனும் இப்படித்தான். இவர் Fossil எனும் நாட்டுப்புறவியல் கழகப் பொறுப்புச் செயலாளர். இடுக்கி மாவட்டப் பழங்குடிகளின் நாட்டுப்புறவியல் பற்றி ஆராய்ந்து 1989இல் நூலாக வெளியிட்டுள்ளார். இவர் இளம்பருவத்தில், இரவு நேரத்தில் பாட்டி கூறிய கதைகளில், குழந்தைகளோடு சேர்ந்து பாடிய விளையாட்டுப் பாடல்களில், அந்த குடிசைகளிலிருந்து எழுந்த தாலாட்டுகளில், வயல்வெளிகளில் எழும் உழவுப்பாடல்களில், இரவுநேர மாட்டுவண்டிப் பயணங்களில் கேட்டு இரசித்த தெம்மாங்குப் பாடல்களில் கவரப்பட்டு அகத்தாராக மத அரசியல் இல்லாது ஆய்வு செய்து வருகிறார். எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழில் முதல்முதலாக நாட்டுப்புறவியல் ஆய்வு செய்தவரே பி.எஸ்.ஹமீது எனும் இசுலாமியர்தான். பாடல்கள் பற்றிய இவரது ஆய்விலும் சமயப் பார்வை இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் ஆலன் டண்டிசைப் பின்பற்றி ஒரு புராணக் கதையையும், பிராப் மற்றும் டண்டிசை இணைத்துக் கண்ணகி மற்றும் நீலிக் கதையையும் ஆய்வு செய்துள்ளார். இது புறத்தின் ஆரம்பம்.

பிறமொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தும் தமிழ் நாட்டுப்புறவியலில் ஆர்வம் கொண்டவர் கி.ரா. இவரது நாட்டுப்புறக் கதைத் தொகுதிகள், வட்டார வழக்குச் சொல் அகராதி போன்றவை குறிப்பிடத் தக்கவை.

“இந்த மண்ணின் பூர்வீக மக்களைத் தேடுவதும் அவர்களிடம் மிச்சமுள்ள தொன்மங்களைக் கண்டு

சேகரிப்பதும்தான் என்னுடைய இப்போதைய வேலை" என்பார்[25].

எனினும் இவரது சுய அடையாளத்தைத் தேடுவது தான் நாவல்களாக (கோபல்ல வரிசை) வந்துள்ளன.

VII

ஆக, வெளிநாட்டவரைப் புறத்தார் என்பதில் சிக்கல் இல்லாதது போலவே இம்மண்ணின் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, தமிழ் நாட்டுப்புறவியல் வேர்களைத் தேடும் ஆய்வாளர்களை அகத்தார் என்பதிலும் சிக்கல் இல்லை.

ஆனால் பிராமணர்களாகவும் கிறித்தவர்களாகவும் இசுலாமியர்களாகவும் பிறமொழிக்காரர்களாகவும் (தெலுங்கு) உள்ள நாட்டுப்புறவியல் ஆய்வாளர்கள்தான் அகத்தார்களாகவும் வேர் ஊன்ற முடியாமல் புறத்தார்களாக விழுது இறக்கவும் முடியாமல் அகப்புறத்தார்களாகத் தவிக்கிறார்கள்.

அகத்தார்களாக் இருப்பவர்கள் புறத்தாரிடம் கொள்ள வேண்டியவற்றைக் கொண்டு தள்ள வேண்டியவற்றைத் தள்ளலாம். நமது மரபுவழிப் பாதைகளை அடையாளம் காட்டுவதும் நகரியமாதல், எந்திரமயமாதல், ஊடக மயமாதல் போன்றவற்றால் மாறிவரும் இன்றைய கலாச்சார முறைகளில் தேவையான மரபுகளை வாழ்வில் உட்கொள்ளவும் நமது பாரம்பரியத்தின் எச்சங்களையும் அடையாளச் சின்னங்களையும் பார்த்து மதிப்பீடு செய்து மறுபரிசீலனை செய்வதும் தமிழ் நாட்டுப்புறவியலாளர்களின் அகத்தாரின் முதன்மையான நோக்கமாக இருக்க வேண்டும்.

புறத்தார்களின் கைகளில் நம் நாட்டுப்புற வழக்காற்றியல் ஆய்வு சிக்கித் திணறாமல் சிதையாமல் பார்க்க வேண்டியதும் அகத்தாரின் பணிகளில் ஒன்றாகும்.

இக்கட்டுரை முடிவல்ல; ஒரு முடிவுக்கான தொடக்கம்.

---

25. கி.ரா., மக்கள் தமிழ் வாழ்க, அன்னம், 1994, முன்னுரை.

இந்தியாவின்
பிறபகுதிகளில்

சண்டிகரில் தமிழும் தமிழரும்

குு. இராமகிருட்டினன்

வட இந்தியாவில் ஒரு சிறந்த இடமான சண்டிகர் ஓர் அழகிய புதிய நகரம். இங்குத் தமிழர்கள் பலர் வாழ்கின்றனர். தமிழ் மொழியும் பண்பாடும் ஓம்பப்படு-கின்றன. இவண் தமிழர் பல பகுதிக்ளில் சிதறி வாழ்கின்றனர்; பல நிலைகளில் வாழ்கின்றனர்; அரசு ஆட்சியிலும், பல்கலைக் கழகத்திலும், வங்கிகளிலும், தனியார் நிறுவனங்களிலும் பணிபுரிகின்றனர். நிறையப் பேர் பொதுப்பணித் துறையில் பணியாற்றுகின்றனர். தமிழர்கள் தமிழ்மொழியையும், கலையையும், பண்பாட்டையும் போற்றி வருகின்றனர். ஆயின் இளைய தலைமுறையினர் இவற்றில் ஈடுபாடு காட்டவில்லை; எனினும் பெற்றோர்களின் ஊக்கத்தாலும் தூண்டுதலாலும் இவற்றைப் பின்பற்றுகின்றனர்.

சண்டிகர் நகரம் பஞ்சாபு, அரியானா இரண்டிற்கும் தலைநகராக இருப்பதோடு நடுவண் ஆட்சியின் நேரடிப் பார்வையில் இருக்கிறது. எனவே இது மூன்று ஆட்சிகளுக்குத் தலைநகராக உள்ளது. இங்கு மூன்று ஆட்சிகளின் அலுவலகங்-களும் செயல்படுகின்றன. சண்டிகர் எம்மாநிலத்திற்கும் இதுவரை வழங்கப்படவில்லை எனவே இரண்டும் இதனை உரிமை கோரி வருகின்றன.

சண்டிகரில் தமிழ் மொழி இங்குள்ள பல்கலைக் கழகத்தாலும், பள்ளியாலும், தமிழ் மன்றத்தாலும், மக்களாலும் ஓம்பப்படுகிறது. சண்டிகரில் பஞ்சாபு பல்கலைக் கழகம் அமைந்துள்ளது. இப்பல்கலைக் கழகம் நாட்டுப் பிரிவினைக்குமுன் இலாகூரில் செயல்பட்டது. பிரிவினைக்குப் பின் இந்தியாவில் பல இடங்களில் செயல்பட்டது. சண்டிகர் நகரம் புதிதாக அமைக்கப்பட்டது. உடனே, இப் பல்கலைக் கழகம் 1956ஆம் ஆண்டு சண்டிகரில் செயல்படத் தொடங்கியது. இப்பல்கலைக்கழகத்தில் தென்னிந்திய மொழிகள் துறை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. தனியாகத் தேர்வெழுதும் மாணவர்களுக்குப் பயன்படுமாறு மொழி பெயர்ப்புக்காகத் தமிழையும் சேர்த்துக்கொண்டது. ஆங்கிலத் தாளில், தமிழிலிருந்து ஆங்கிலம் ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழிபெயர்ப்புச் செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டது. பின்பு கூடுதல் மொழியாகப் பிறமொழிகளோடு தமிழும் ஒரு தாளாகியது. இந்தக் கூடுதல் விருப்பமொழித் தாள் 50 மதிப்பெண்கள் கொண்டது. ஆனால் ஆசிரியரின்றியே தென்னிந்திய மொழிகள் துறை அமைக்கப்பெற்றது.

இக்கட்டுரையாளர் 1.6.1967இல் தமிழ் விரிவுரையாளராகப் பொறுப்பேற்றதும் இத்துறை தனியாகச் செயல்படத் தொடங்கியது. அவ்வாண்டே தமிழ்ச் சான்றிதழ் வகுப்புத் தொடங்கியது. 1968-69இல் பட்டய வகுப்புத் தொடங்கியது. ஐந்து ஆண்டுகளுக்குப்பின் உயர் பட்டய வகுப்பு (Advanced Diploma Course in Tamil) ஏற்படுத்தப் பட்டது. இம்மூன்று வகுப்புகளிலும் மாணவர்கள் பயிலத் தொடங்கினர். பன்னிரண்டாம் வகுப்புத் தேறியவர்களே சான்றிதழ் வகுப்பில் சேரலாம். சான்றிதழ் ஓராண்டுக்குரிய வகுப்பு. இதில் தமிழைத் தொடக்க முதல் எழுதவும், படிக்கவும், பேசவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் வகுப்பு நடைபெறும். சிறு கட்டுரை எழுதவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. பட்டய வகுப்பும் ஓராண்டுக் குரியதே. சான்றிதழ் வகுப்பில் தேறிய மாணவர்கள் பட்டய வகுப்பில் சேரலாம். இலக்கணம், இலக்கியம், கட்டுரை முதலியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மொழிபெயர்ப்புச் செய்யவும் பயிற்சி பெறுகிறார்கள். உயர்பட்டய வகுப்பும் ஓராண்டுக்குரியது. பட்டய வகுப்பில் தேறிய மாணவர்களே உயர் பட்டய வகுப்பில் சேர ஒல்லும். உயர்இலக்கணம், தற்கால, இடைக்கால, சங்க இலக்கியங்களில் சில பகுதிகள்,

கதை, கட்டுரை நூல்கள் இவர்களுக்குப் பாடங்களாகும், தென்னிந்திய மொழிகள் துறையில் இம்மூன்று வகுப்புகள் மட்டுமே நடைபெறுகின்றன. இத்துறையில் இக்கட்டுரை யாளர் மட்டுமே ஆசிரியராக உள்ளார்.

மேலும், தனியாகத் தேர்வெழுதும் மகளிர், போர்ப் படைகளில் பணியாற்றுவோர், இப்பகுதியில் வாழ்ந்துகொண்டு பணிபுரிபவர் முதலியோர் கலை இளவல், அறிவியல் இளவல், வணிகவியல் இளவல் வகுப்புகளில் தமிழை ஒரு பாடமாக எடுத்துக்கொண்டு பஞ்சாபு பல்கலைக் கழகத் தேர்வெழுது கின்றனர். கலை இளவல் வகுப்பில் மாணவர்கள் படிக்கும் மூன்று பாடங்களில் (Electives) தமிழ் ஒன்றாக உள்ளது. மூன்றாண்டும் தமிழைச் சிறப்புப் பாடமாக எடுத்துக்கொண்டு தேர்வெழுதலாம். மேலும் ஆங்கிலத் தாளில் தமிழ் மொழி பெயர்ப்புக்குரிய பகுதியாகவும் உள்ளது. அறிவியல் இளவல், வணிகவியல் இளவல் வகுப்புகளில் ஓராண்டில் மட்டுமே தமிழ் ஒரு விருப்பப் பாடமாக (Optional) உள்ளது. இவ்விருப்பப் பாடத்தில் மொழிபெயர்ப்பு, இலக்கணம், பழமொழி, மரபுத்தொடர், கலைச்சொல் மொழிபெயர்ப்பு முதலியவை அடங்கும்.

அடுத்ததாகக் குறிப்பிடத் தகுந்தது இங்குத் தமிழ் கலை முதுவர் தேர்வுக்குரிய பாடமாகும். ஆறு ஆண்டுகளுக்கு முன் தமிழ் ஒரு தேர்வுக்குரிய பாடமாக ஆகியது. முதலாண்டில் நான்கு தாள்கள் உள்ளன. அவை தற்கால இலக்கியம், இடைக்கால இலக்கியம், இலக்கணம் (எழுத்து, சொல்), இலக்கியத் திறனாய்வும் தமிழக வரலாறும் ஆகும். இரண்டாம் ஆண்டிலும் நான்கு தேர்வுத் தாள்கள் உண்டு. அவை சங்க இலக்கியம், இலக்கணம் (பொருள்), தமிழ் மொழி வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு ஆகும். ஆண்டுக்கொருமுறை, தேர்வு நடைபெறும். கலை இளவலில் தமிழைப் பாடமாகக் கொண்டோர் கலை முதுவர் தேர்வெழுதலாம். அறிவியல் இளவல் பட்டம் பெற்றோரும் கலை முதுவர் தேர்வெழுத வாய்ப்புண்டு. கலை முதுவர் தேர்வெழுதுவோர் தனியாகத் தேர்வெழுதுவோரே.

சான்றிதழ், பட்டய வகுப்பு, உயர் பட்டய வகுப்பு என்ற மூன்று மட்டுமே தென்னிந்திய மொழிகள் துறையில் கற்பிக்கப்பெறுகின்றன. கலை இளவல், அறிவியல் இளவல், வணிகவியல் இளவல், கலை முதுவர் தேர்வெழுதுவோர்

தாங்களாகவே பயிலவேண்டும். எக் கல்லூரியிலும் பாடமாக இல்லை; தமிழ் ஆசிரியரும் இல்லை. அவர்கள் சிலசமயம் துறைக்கு வந்து ஐயம் களைந்து செல்லலாம்.

தென் இந்திய மொழிகள் துறை ஆராய்ச்சிகள் மேற்கொண்டுள்ளது. மேலும் பாரதியார் பாடல்களைப் பஞ்சாபியில் மொழிபெயர்க்க இக்கட்டுரையாளர் துணை புரிந்தார். அந்நூலைப் பஞ்சாபு பல்கலைக் கழகப் பாடநூல் குழு வெளியிட்டுள்ளது. தமிழ்ப் பாடல்கள் பஞ்சாபியில் பாடல்களாக மொழியாக்கம் செய்யப் பட்டுள்ளன. மேலும் திருக்குறளைப் பஞ்சாபியில் மற்றொருவருடன் சேர்ந்து மொழிபெயர்க்கும் பணியில் இக் கட்டுரையாளர் ஈடுபட்டுள்ளார்.

இங்குள்ள கல்லூரிகளிலோ, பள்ளிகளிலோ தமிழ் மொழி பாடமாக இல்லை. இருப்பினும் இரு பள்ளிகளில் தமிழை ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை சொல்லிக் கொடுக்கின்றனர். தமிழே ஐந்தாம் வகுப்பு வரை பயிற்று மொழியாகவும் உள்ளது. அதுபற்றிய சிறு விளக்கம் வருமாறு:- இங்குள்ள ஏழை மக்கள், பொதுப்பணித் துறையிலும், சாலை அமைப்பு வேலைகளிலும் பணியாற்றுவோர், தம் குழந்தைகளைப் பள்ளிக்கு விடுக்காமல் இருந்தனர்; தம் மக்கள் பிறமொழி வழியாகப் படிக்கவியலாது என்றும் தமிழ்மொழி வழியே படிக்கவேண்டும் என்றும் கூறினர். இங்குள்ள தமிழ் மன்றம் என்ற அமைப்பு அவர்களுக்காக ஒரு தமிழ்ப்பள்ளி ஓராசிரியரைக் கொண்டு ஏற்படுத்தியது; இக் கட்டுரையாசிரியர் அப்பள்ளிப் பொறுப்பை ஏற்றார். எண்பதுக்கும் மேற்பட்டோர் பயின்றனர். சில காலத்திற்குப் பின்பு சண்டிகர் அரசே அப்பள்ளியை ஏற்றுக்கொண்டது. ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழிலேயே எல்லாப் பாடங்களும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. அரசின் நடுநிலைப் பள்ளியின் ஓர் உறுப்பாக ஆக்கிக்கொண்டது. பின்னர் இரண்டு நடுநிலைப் பள்ளிகளில் தமிழிலேயே வகுப்புகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு பள்ளியிலும் ஒவ்வோர் ஆசிரியரே ஐந்து வகுப்புகளையும் நடத்துகிறார்; மாணவர் மிகுதி. பிற தமிழ் மக்களின் குழந்தைகள் ஆங்கிலம் வழிக் கல்வி கற்கின்றனர்.

இங்குள்ள நடுவணரசு பள்ளிகளிலும் தமிழில்லை; தமிழாசிரியரில்லை. ஆயின் தமிழ்ப் பாடத்தில் தேர்வெழு-தலாம். சண்டிகரில் அடிமட்டத்திலிருக்கும் தமிழர்கள் வாழும்

ஓரிடத்தில் இளஞ்சிறார்களைப் பாதுகாக்கும் இடத்தில் தமிழில் மழலை வகுப்பு நடக்கிறது, தனியார் அமைப்பு ஒன்று நடத்துகிறது; தமிழ் மன்றம் அதனை ஏற்று நடத்தத் திட்டமுள்ளது.

தமிழைப் பேணவும், தமிழ்க்கலை, பண்பாட்டைப் புரக்கவும் சண்டிகரில் ஓரமைப்பு உருவாகியது. இக்கட்டுரை யாளர் 30.3.1969இல் சண்டிகரில் 'தமிழ் மன்றம்' என்ற அமைப்பை நிறுவி முதற் செயலாளராகப் பணிபுரிந்தார்; தற்பொழுது அதன் துணைத் தலைவராக உள்ளார். தமிழ் மன்றம் பல இயல், இசை, நாடக நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது. கதை, கட்டுரை, பாட்டுப் போட்டிகளும் பேச்சுப் போட்டிகளும் நடைபெற்று வருகின்றன. தமிழகத்திலிருந்தும் உள்ளூரிலிருந்தும் பல சிறந்த கலைஞர்கள் வாய்ப்பாட்டு, இசைக்கருவி இன்னிசை நல்கினர். உள்ளூர் நாடகக் குழுக்களும் தில்லியிலுள்ள நாடகக் குழுக்களும் இங்கு நாடகங்கள் அரங்கேற்றின. உள்ளூர்த் தமிழ் மக்களுக்கும் பிறமொழியினர்க்கும் தமிழ் மன்றம் பாலமாக விளங்குகிறது. தமிழ்த் திரைப்படங்கள் சிலவற்றைத் திரையிட்டது. மனை ஒன்று வாங்கியுள்ளது. ஆயின் பணமுடையால் தமிழ் மன்றக் கட்டடம் கட்டவியலவில்லை. ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. 1971இல் தமிழ் மன்றம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் மன்றமே அன்றி, வான்படையினர் மூன்று தமிழ்ச் சங்கங்கள் அமைத்துள்ளனர். அவர்களும் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழைப் போற்றி வருகின்றனர். பொதுப் பணித் துறையிலுள்ளோரும் ஒரு தமிழ்ச் சங்கம் அண்மையில் அமைத்துள்ளனர்.

இங்குத் தமிழ்களும் பிற மக்களும் ஒற்றுமையுடன் உள்ளனர். பிறரும் தமிழ்க்கலை, பண்பாடு வளரத் துணை புரிகின்றனர். பல்கலைக் கழகத்தில் தென்னிந்திய மொழிகள் துறையில் பயில்வோர் தமிழரல்லாதாரே. எப்பொழுதாகிலும் சில தமிழறியாத தமிழ் மக்களும் வெளிநாடுகளில் (குறிப்பாக மொரீசியசு, பிஜி, மலேயா) வாழும் தமிழறியாத தமிழர்களும் தமிழ் படிக்கின்றனர்.

தென்னிந்திய மொழிகள் துறையிலும், பல்கலைக் கழகப் பொது நூலகத்திலும் நிறையத் தமிழ் நூல்கள் உள்ளன. பல்வகையான நூல்கள் பல உள. குறிப்பாக

இலக்கண, இலக்கிய நூல்கள் மிகுதி. பிற தமிழ் அமைப்புகளிலும் நூலகம் வைத்துள்ளனர். தமிழ் மன்றத்துக்கும் நூல்கள் உண்டு. ஆனால் கட்டடம் இல்லாததால் குறிப்பிட்ட ஒருவர் (செயலாளர் அல்லது வேறு பொறுப்பிலுள்ளவர்) இல்லத்தில் நூலகம் செயல்படுகின்றது.

இங்கு முருகன் கோயிலொன்று தமிழர்களாலேயே நிறுவப்பட்டுள்ளது. தமிழகக் கோயில் கட்டட அமைப்பில் உருவாகித் தமிழர்கள் அடிக்கடிச் சென்றுவரும் இடமாக இங்குள்ள 31ஆம் பகுதியில் உள்ளது. தமிழில் வழிபாடும் நடைபெறுகிறது. வான்படையினர் குடியிருப்புக்கிடையில் இஃது அமைந்துள்ளதால் வான்படையினரின் நேரடிப் பாதுகாப்பில் உள்ளது. தமிழர்கள் கூடும் பொதுவிடமாகவும் ஆகியுள்ளது.

பெரும்பாலோர் தமிழ் பேசுகின்றனர். அடிக்கடி மாறிச் செல்லும் இயல்புள்ள வான்படையினர், வங்கிகளில் பணியாற்றுவோர் தமிழ் பேசி வருகின்றனர்; தம் மக்களோடும் தமிழில் பேசி வருகின்றனர். ஆனால் சண்டிகரில் தங்கியுள்ள சில தமிழர்கள் குழந்தைகள் தமிழில் உரையாடுவதில்லை, அவர்கள் ஆங்கிலம் அல்லது இந்தியிலேயே உரையாடுகின்றனர். தமிழ் படிக்கத் தெரியாத தமிழர்கள் உரையாடும்போது இந்திமொழிச் சொற்களை நிறையக் கலந்து பேசுகின்றனர். வியப்போ வருத்தமோஅடையாது இயல்பு என்று எடுத்துக்கொள்ளலாம் என்பர் சிலர்.

இங்குக் குறிப்பிடத்தக்க செய்தி என்னவெனில், தமிழர் மிக உயர்ந்த நிலையிலும் உள்ளனர்; அவர்கள் குறைவே. மிகத் தாழ்ந்த நிலையிலுள்ளோரே மிகுதி. சண்டிகர் நகர் அமைக்கத் தொடங்கிய காலமுதல் தமிழர்கள் பொதுப் பணித்துறையிலும், சாலை அமைப்புகளிலும் பணியாற்றுகின்றனர். சண்டிகரில் இத்தகையோரின் எண்ணிக்கையே மிகுதி. பத்தாயிரத்துக்கும் மேலாக இவர்கள் சண்டிகரின் பதினொரு பகுதிகளில் வாழ்கின்றனர். வேற்று மாநில மக்களைக் காட்டிலும் சாலைகளில் வேலை செய்யும் தமிழர்களே மிகுதி எனலாம்.

சாலை வேலைகளிலும் பொதுப் பணித்துறையிலும் பணியாற்றுவோரில் பெரும்பாலோர் வள்ளலார் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். குறிப்பாகத் திருமுதுகுன்றம்

பகுதியைச் சுற்றியுள்ளவர்கள். அவர்கள் மாரியம்மன் கோயிலொன்றும், முருகன் கோயிலொன்றும் கட்டியுள்ளனர். மாரியம்மன் விழாவும் தைப்பூசமும், பங்குனி உத்திரமும் குறிப்பிடத்தக்க விழாக்களாகும். வேறோர் இடத்திலும் சிறு கோயில் கட்டியுள்ளனர். கிறித்தவர்கள் சிலர் தமிழிலேயே வழிபடுகின்றனர்.

இங்குள்ள தமிழர்கள் சிறப்பாகக் கொண்டாடுவது பொங்கலும் ஒளிவரிசைத் (தீபாவளி) திருநாளும் ஆகும். இங்குள்ள மக்கள் கொண்டாடும் ஒலித்திருநாளிலும் கலந்து கொள்வர். தமிழ்ப் புத்தாண்டும் கொண்டாடுவர். விழா நாட்களில் கோயில்களுக்குச் சென்று வருவர்.

சண்டிகரில் தமிழ் மொழி வளர்ந்து வருகிறது. தமிழ்மொழியை வளர்க்கப் பல்கலைக் கழகமும், பள்ளியும், தமிழ் மன்றமும் பிற அமைப்புகளும் துணைபுரிகின்றன. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் வளர்வதற்குத் தமிழர்கள் முயன்று வருகின்றனர். தமிழர்கள் சிலர் மேனிலையில் உள்ளனர். வான்படையிலும், போர்ப் படையிலும், வங்கிகளிலும் பணியாற்றுவோர் சிலகாலம் சண்டிகருக்கு வந்து வேறிடம் மாறிச் செல்லும் இயல்பினர். எனவே சண்டிகர் தமக்கு உரிய இடம் என்று தமிழர்கள் பற்றில்லாது உள்ளனர். இங்கு வீடு, மனை வாங்கியுள்ளோர் ஒருசிலரே. பெரும்பாலும் தமிழகத்துக்கே திரும்பிச் செல்பவர்கள். தமிழக அரசு தமிழ் மொழி வளரவும், தமிழ் மக்கள் கலை, பண்பாட்டை வளர்க்கத் தமிழ் மன்றத்துக்குப் பொருளுதவி செய்யவும் முன்வர வேண்டும். இங்குத் தமிழ் மேலும் வளர வாய்ப்புண்டு; தமிழர்கள் மேலும் சிறப்படைவர் என நம்பலாம்.

சாந்திநிகேதனில் தமிழியல் ஆய்வு

முனைவர் சொ. முத்தையா

சாந்திநிகேதனில் தமிழாய்வு என்னும் இக்கட்டுரையில் விசுவ-பாரதி நடுவண் பல்கலைக் கழகத்தில் குறிப்பாகவும் சிறப்பாகவும் தமிழ்த்துறையில் மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ஆராய்ச்சிகளும், தமிழ் ஆராய்ச்சி தொடர்பான நூல் வெளியீடுகளும், வங்காள மொழியிலிருந்து தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட வங்காளப் பழமொழிகள் என்னும் நூலும், தமிழிலிருந்து வங்காள மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட சிறுகதைகள், புதினம், பாரதிதாசன் கவிதைகள், கட்டுரைகள் ஆகியனவும் சுட்டப்படுகின்றன.

விசுவ-பாரதி நடுவண் பல்கலைக் கழகத்தில் இருபத்தி நான்கு மொழித்துறைகள் உள. 1. வங்காள மொழித்துறை, 2. இந்தி மொழித்துறை, 3. ஒரியா மொழித்துறை, 4. சமற்கிருத மொழித்துறை, 5. ஆங்கில மொழித்துறை, 6. சீன மொழித்துறை, 7. ஜப்பானிஸ் மொழித்துறை, 8. அராபிக் மொழித்துறை, 9. ரஷ்ய மொழித்துறை, 10. பாலி மொழித்துறை, 11. உருது மொழித்துறை, 12. தமிழ் மொழித் துறை, 13. இந்தோ-திபெட்டன் மொழித்துறை, 14. பிரெஞ்சு

மொழித்துறை, 15. ஜெர்மனிய மொழித்துறை, 16. அசாமீஸ் மொழித்துறை, 17. மராத்திய மொழித்துறை, 18. சந்தாலி மொழித்துறை, 19. டச் மொழித்துறை, 20. இத்தாலிய மொழித்துறை, 21. ஸ்பானிஸ் மொழித்துறை, 22. போர்த்துக்கீஸ் மொழித்துறை, 23. பெர்ஷிய மொழித் துறை, 24. லேட்டின் மொழித்துறை என்பன அம்மொழித் துறைகள் ஆகும். தொடர்ந்து விடுப்பில் இருப்பதாலும், ஆசிரியப் பெருமக்கள் இன்மையாலும் ஒரு சில மொழித்துறைகள் செயல்பாடின்றி இருக்கின்றன. இவைகளில் அசாம் மொழித்துறை, டச் மொழித்துறை, இத்தாலிய மொழித்துறை, ஸ்பானிஸ் மொழித்துறை, போர்த்துக்கீஸ் மொழித்துறை, பெர்ஷிய மொழித்துறை, லேட்டின் மொழித்துறை ஆகியவை அடங்கும்.

சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவரும், பேராசிரியருமான மறைந்த முனைவர் ந. சஞ்சீவி அவர்களால் விசுவ-பாரதி நடுவண் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழ்த்துறையின் நோக்கம்

தாய்மொழி தமிழ் அல்லாத பிற மாநில மாணாக்கர்கட்கும், ஆராய்ச்சியாளர்கட்கும், ஆசிரியப் பெருமக்கட்கும் தமிழ் பயிற்றுவித்தல் விசுவ-பாரதி நடுவண் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் தலையாய நோக்கமாகும். தமிழ் இலக்கியம், பண்பாடு இன்ன பிறவற்றையும் பற்றி ஆசிரியப் பெருமக்களும், பிற மாநில மாணாக்கர்களும் அறிந்து கொள்ளும் வகையில் கருத்தரங்குகளுக்கு ஏற்பாடு செய்வதும் இத்துறையின் மற்றோர் நோக்கமாகும். தமிழ் நாட்டிலிருந்து அறிஞர்களை அவ்வப்போது சாந்திநிகேதனுக்கு அழைத்து வந்து வங்க மொழி மக்கட்கும், ஆசிரியப் பெருமக்கட்கும் அறிமுகப்படுத்துதலும், பிறமொழிகளோடு தமிழை ஒப்பிட்டு நோக்குதலுமாகிய பல பணிகளையும் உள்ளடக்கமாகக் கொண்டது தமிழ்த்துறை.

மொழியாக்கம்

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்று பாடினான் பாட்டுக்கொரு புலவன் பாரதி. அவன் கருத்து ஏட்டுக்குள்ளே இருந்து விடாமல் நாட்டுக்குள்ளே பரவும்படி நடைமுறைக்குக் கொண்டு

வந்தனர் நல்லெண்ணம் கொண்ட சிலர். பிறமொழியில் காணப்படும் சிறந்த படைப்புகளைத் தமிழில் மொழியாக்கம் செய்து வெளியிட்டனர். "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்ற பாரதியின் கருத்திற்கேற்ட பிற மொழியிலிருந்து தமிழ் மொழிக்குக் கொண்டுவரப்பட்ட மொழியாக்கங்கள் ஏராளம். ஆயின் தமிழ் மொழியிலிருந்து பிற மொழிக்குக் கொண்டு செல்லப்பட்ட மொழியாக்கங்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய நிலையிலேயே இருக்கின்றன என்பதை நாம் இங்கே குறிப்பிட்டே ஆக வேண்டும். இம்மொழியாக்கத்தில் நாம் நடந்துவந்திருக்கும் தூரம் மிகக் குறைவு. நாம் போகவேண்டிய தூரமோ நெடியது.

திருச்சி, பாரதிதாசன் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியரும், தலைவருமான முனைவர் மா. எழில்முதல்வன் (இராமலிங்கம்) அவர்கள் தஞ்சையில் நிகழ்ந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அக்கருத்தினை இங்கே நினைவு கொள்வது மிகப் பொருத்தமாக அமையும்.

> "நவீன இலக்கியப் படைப்பாளர்களைத் தனியே எடுத்துக்கொண்டு ஆய்வு செய்வதை விட இந்திய அளவில் ஒப்பாய்வையும் மேற்கொள்ள வேண்டுவது மிகவும் அவசியம். இதற்கு ஏனைய இந்தியமொழிப் படைப்புகள் தமிழில் ஆக்கம் பெறுவதும், தமிழ்ப் படைப்புகள் பிற இந்திய மொழிகளில் ஆக்கம் பெறுவதும் உடனடித் தேவையாகும். எனவே மொழிபெயர்ப்பை ஊக்குவிப்பது மிகமிகத் தேவை. நல்ல மொழிபெயர்ப்புக்குக்கூட பல்கலைக் கழகங்கள் முனைவர் பட்டம் வழங்க முன்வருதல் வேண்டும். மொழி பெயர்ப்பு வாயிலாகவும் முனைவர் பட்டம் பெறலாம் என்னும் நிலை ஏற்பட்டால் பலர் இத்துறைக்கு முன்வருவர்"[1]

என்பது அவர் கருத்தாகும்.

1. மா. இராமலிங்கம் (எழில்முதல்வன்), 'ஆய்வு சிந்தனைக்குச் சில குறிப்புகள்', *தினமலர் நாளேடு*, நாள்: 04.01.1995, ப.3.

கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியரும், தலைவருமான முனைவர் கி. நாச்சிமுத்து அவர்கள் 'தமிழியல் ஆய்வு:நேற்று-இன்று-நாளை' என்னும் ஆய்வுக் கட்டுரையில் முனைவர் எழில்முதல்வன் அவர்கள் கூறிய கருத்தை வேறொரு கோணத்தில் நின்று வலியுறுத்திச் சொல்கிறார்.

> "தமிழாய்விற்குத் தமிழ்மொழி இலக்கிய அறிவு மட்டும் போதும் என்ற எண்ணமும் நம்மைக் கிணற்றுத் தவளைகளாக்கிவிட்டது. வட மொழி, பிராகிருதம் போன்ற பழைய மொழிப் பயிற்சி, இக்கால இந்திய மொழிப் பயிற்சி இவை எல்லாம் ஆழமாக ஏற்பட்டால் ஒழியத் தமிழாய்வு ஆழமும், திட்பமும் பெறஇயலாது"[2]

என்று குறிப்பிடுகிறார். மேலும்,

> "தமிழியல் பாடத்திட்டத்தில் மொழியியல், ஒப்பியல் இலக்கியம், பிறமொழிப் பயிற்சி முதலியவற்றிற்குச் சிறப்பிடம் கொடுக்க வேண்டும். பயன் துறைகளான மொழிபெயர்ப்பியல், மொழி கற்பித்தல், அகராதியியல், சுவடியியல், மூலபாடத் திறனாய்வு முதலியவற்றைப் பாடத்திட்டத்தில் சேர்த்து மாணவர்க்குப் பயிற்சி நல்கலாம்"[3]

என்ற கருத்தையும் சுட்டுகிறார்.

பேராசிரியர் எழில்முதல்வன் அவர்கள், பேராசிரியர் கி. நாச்சிமுத்து அவர்கள் கருத்துக்கிணங்க விசுவ-பாரதி நடுவண் பல்கலைக் கழகத்தில் - தமிழ்த்துறையில் ஒப்பாய்வில் இலக்கியங்களும், மொழியாக்கங்களும் மிகச் சிறப்பான முறையில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. வங்க, ஒரிய மற்றும் இந்தி மொழி பேசுகின்ற பிறதுறையினர் தமிழ் மொழியின் இலக்கியச் செறிவைப் பற்றி அறிந்துகொள்ள மிக ஆர்வமாய் இருக்கின்றனர். தமிழின் இலக்கியச் செறிவைப் பற்றி அறிந்துகொள்ளத் துடிக்கும் பிற துறையினரின் இலக்கிய

---

2. கி. நாச்சிமுத்து, 'தமிழியல் ஆய்வு: நேற்று-இன்று-நாளை', தமிழ் உலா, தொகுதி-I, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1993. ப.101.

3. மேலது.

ஆர்வமே ஒப்பாய்வு இலக்கியங்களையும், மொழியாக்கங்களையும் துவங்குவதற்கு மூல காரணமாக அமைந்தது எனலாம்.

பக்தி இலக்கியத்தில் மிகச் சிறந்த இலக்கியப் படைப்புகள் வங்க மாநிலத்தில் படைக்கப்பட்டன. ஜெயதேவரின் ஜெயகோவிந்தம் வைணவ இலக்கியத்தில் தலைசிறந்து நிற்கக்கூடிய மதநூலாகத் திகழ்கிறது. ஜெயதேவர் வங்க நாட்டின் ஆதி கவி என்பதும், பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்பதும், இவர் வங்கநாட்டில் பிர்பூம் மாவட்டத்திலுள்ள கேண்டுலி என்ற சிற்றூரைச் சேர்ந்தவர் என்பதும் பெரும்பான்மையோரின் கருத்து. பக்தி இலக்கியத்தின் படைப்பாளர்களில் ஒருவராக ஜெயதேவர் திகழ்வது போலவே, இந்திய இசையை உருவாக்குவதில் பெரும்பங்கு கொண்ட ஒரு மேதையாகவும் இவர் விளங்குகிறார். ஜெயதேவரைப் போன்றே சண்டிதாஸ் என்பவரும் வைணவக் கவிஞராகத் திகழ்ந்தவர். இவரும் பிர்பூம் மாவட்டத்திலுள்ள நாநுர் என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர். 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். சைத்தந்நயப் பிரபுவும் வங்கத்தில் வாழ்ந்தவர். 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். தமிழ் இலக்கியத்தில் தோன்றிய பக்தி இலக்கியம் போன்று வங்காள இலக்கியத்திலும் பக்தி இலக்கியம் தோன்றியது. ஆயின் ஒரு வேறுபாடு உண்டு. அதாவது தமிழ் இலக்கியத்தில் பக்தி இலக்கியம் ஆறாம் நூற்றாண்டே தோன்றிவிட, வங்காள இலக்கியத்தில் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் பக்தி இலக்கியமே தோன்ற ஆரம்பித்தது. வங்காளத்தில் பக்தி இலக்கியம் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குப் பின்னர் தோன்றியது போலவே இந்தி இலக்கியத்திலும் பக்தி இலக்கியம் பதினைந்தாம் நூற்றாண்டுக்குப் பின்னரே தோன்ற ஆரம்பித்தது. தத்தம் பக்தி இலக்கியத்தில் மனம் தோய்ந்த வங்க, இந்தி ஆசிரியப் பெருமக்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தோன்றிய தமிழ் பக்தி இலக்கியத்தைப் பற்றி அறிந்துகொள்ள ஆர்வம் உள்ளவர்களாக இருப்பதில் வியப்பில்லை. இந்தப் பின்னணியில் இந்திய மொழித் துறைகளுக்கெல்லாம் தலைவராக இருந்த இந்தி மொழித் துறை முன்னாள் பேராசிரியரும், தலைவருமான டாக்டர் ராம்சிங் தோமார் அவர்கள் முன்வந்து பல்கலைக் கழக மானியக் குழுவை வற்புறுத்தி, தமிழ் வைணவ இலக்கியத்தை இந்தி மொழியில்

வெளிக்கொணர அரும்பாடுபட்டார். இவரின் பெரு முயற்சியின் காரணமாகத்தான் சாந்திநிகேதனில் தமிழ்த் துறையே உருவானது. ஒரு இந்தி மொழிக்காரரின் தமிழ்க் காதலால்தான் சாந்திநிகேதனில் தமிழ்மொழிக்கு ஓர் உயர்வான இடம் கிடைத்தது என்றால் அது மிகையில்லை. அவருக்குத் தமிழர்கள் நன்றிக்கடன் பட்டவர்கள் ஆவர்.

வைணவ இலக்கியத்தை இந்திமொழியில் ஆராய்ச்சி நெறியோடு நல்ல முறையில் மொழியாக்கம் செய்யவேண்டும் என்ற நோக்குடன் பேராசிரியர் ராம்சிங் தோமார் அவர்கள் சென்னை வந்திருந்தார்கள். சென்னையில் பலநாட்கள் தங்கி இருந்து பிரதிவாதி அன்னங்கராச்சாரியார், மறைந்த தமிழ்ப் பேரறிஞர்களான் கி.வா.ஜ., மு.வ., தெ.பொ.மீ., போன்றவர்களைச் சந்தித்தார். தமிழிலுள்ள வைணவ இலக்கியங்களை - ஆழ்வார் பாடல்களை ஆராய்ச்சி மனப்பாங்குடன் இந்தியில் யாரும் விரிவாகச் செய்யவில்லை என்றும், தமிழிலுள்ள வைணவ இலக்கியங்கள் இந்தி மொழியில் ஆராய்ச்சி நோக்குடன் மொழிபெயர்க்கப்பட்டால் ஒப்பாய்வுகள் நிகழ்த்துவதற்கு மிகுதியான வாய்ப்புகள் ஏற்படும் என்றும், வைணவ இலக்கியத்தில் தோய்ந்த ஒருவர் மொழிபெயர்ப்பாளராக அமைவாரேயானால் பயன் பெரிதும் விளையும் என்றும் கூறி, இப்பணிக்காக இந்தி. தமிழ், ஆங்கிலம் தெரிந்த பேராசிரியர் ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்குமாறு தமிழ் அறிஞர்களை வேண்டிக்கொண்டார்.

தமிழ் வைணவ இலக்கியத்தைப் பற்றி ஏனைய மொழிகளில் குறிப்பாக இந்தி மொழியில் ஆராய்ச்சி செய்து எழுதுவது என்பது கடினமான செயல். இத்துறையில் வல்லுநர்கள் மிகக் குறைவு. இப்பணிக்காக இந்து ஆங்கில நாளேட்டின் இலக்கியப் பிரிவைச் சேர்ந்தவர்களையும் சந்தித்து அவர்களோடு கலந்துரையாடினார் பேராசிரியர் ராம்சிங் தோமார். பல அறிஞர்களின் ஆலோசனைப்படி பேராசிரியர் ஏ. சீனிவாச ராகவன் அவர்கள் இப்பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் புதுக்கோட்டை ராஜா கல்லூரியில் சமற்கிருதத் துறையில் பேராசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்தவர்.இவர் 'நிருசிம்ஹபிரியா' என்றவொரு வைணவப் பத்திரிகைக்கு ஆசிரியராகவும் பலவாண்டுகள் பணிபுரிந்தவர். பேராசிரியர் ராம்சிங் தோமாரின் அழைப்பிற்கிணங்கி இவர் சாந்திநிகேதன் வந்து பணியை மேற்கொண்டார். வங்க, இந்தி, சமற்கிருதப்

பேராசிரியர்களோடு தொடர்புகொண்டு அவர்களின் உதவியோடும், சிந்தனையோடும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல்களை இந்தியில் மொழியாக்கம் செய்தார். சாந்திநிகேதனில் மூன்றாண்டுகள் இருந்தபொழுது தமிழ்நாட்டில் பக்தி இலக்கியம் தோன்றிய சூழ்நிலை பற்றியும், தமிழ் வைஷ்ணவ இலக்கியம் பற்றியும், வைணவ சித்தாந்தங்கள் பற்றியும் பல சமயங்களில் சொற்பொழிவாற்றினார். வைணவ இலக்கியம் பற்றிய சொற்பொழிவுகள் அடிக்கடி ஏற்பாடு செய்யப்பட்டமையால் சாந்திநிகேதனில் வாழ்கின்ற மாணாக்கர்கள், ஆசிரியர்கள் தமிழ் இலக்கியம் பற்றியும், பக்தி இலக்கியம் பற்றியும் தெரிந்துகொள்ள நல்லதொரு வாய்ப்புக் கிடைத்தது.

தமிழிலுள்ள ஆழ்வார் பாடல்கள் இந்தி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. இதன் முதல் தொகுதி ஐநூறு பாசுரங்களைக் கொண்டது. இதன் முதல் தொகுதி[4] 1980ஆம் ஆண்டு இந்தியத் தலைமை அமைச்சராக இருந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்களால் வெளியிடப்பட்டது. ஆழ்வார் பாடல்கள் அனைத்தும் மொழிபெயர்க்கப்பட்டு 8 தொகுதிகளாக வெளிவந்திருக்கின்றன.[5]

தமிழும் வைணவமும் குறித்துப் பேராசிரியர் சீனிவாச ராகவன் அவர்கள் இந்நூலின் முன்னுரையில் மிக விரிவாக எழுதியுள்ளார். இது ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை ஆகும். இவ்வாராய்ச்சிக் கட்டுரையில் தூய தமிழ்ச் சொற்கள், சமற்கிருதச் சொற்கள், சமற்கிருதச் சொற்கள் தமிழ்ச் சொற்களாக மாறியிருத்தல் போன்றவற்றையும் குறிப்பிட்டிருக்கிறார். வைணவ இலக்கியத்தை ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் மட்டுமே ஏற்றிப் போற்றிக்கொண்டு வந்த ஒரு காலமும் இருந்தது. அப்படிப்பட்ட வைணவ இலக்கியம் இப்போது இந்திய மொழிகளுக்கு - குறிப்பாக இந்தி மொழிக்குத் தெரிய வந்திருக்கிறது. நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தை - ஆழ்வார் பாடல்களைத் தமிழில் எவ்வாறு பிழையின்றி உச்சரிக்கிறோமோ அதேபோன்று பிற மொழிக்காரர்களும் சிறிதும் பிழையின்றி உச்சரிப்பதற்கேற்றவாறு தேவநாகரி வரி

---

4. திவ்ய பிரபந்த (ஆழ்வாரோ கி வாணியா), ஹல்வாஸியா ஸோத் கிரந்தமாலா, Part I, 1980.

5. திவ்ய பிரபந்த (ஆழ்வாரோ கி வாணியா) ஹல்வாஸியா ஸோத் கிரந்தமாலா, Part-I, 1980; Part-II, 1982; Part-III, 1983; Part-IV, 1984; Part-V, 1988; Part-VI, 1988; Part-VII, 1989; Part-VIII, 1989.

பெயர்ப்பில் தமிழ்ப் பாடல்கள் இந்நூலின் ஒருபக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலின் எதிர்ப்புறத்தில் அப்பாடல்களின் ஒட்டு மொத்தமான மொழிபெயர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட மொழிபெயர்ப்பால் சாந்திநிகேதனிலுள்ள வங்க, இந்தி மொழி பேசும் மாணாக்கர்களும், ஆசிரியர்களும் பல தூய தமிழ்ச் சொற்களை நல்லமுறையில் சரியான தமிழ் உச்சரிப்புப்படிச் சொல்லக் கற்றுக்கொண்டிருக்கின்றனர். எடுத்துக்காட்டாகத் தமிழ் என்ற சொல்லைத் தமில் என்றும் ஆண்டாள் என்ற சொல்லை ஆண்டால் என்றும் வங்க, இந்தி மொழி பேசுவோர் முன்பு கூறினர். காரணம் வங்காளம், இந்தி போன்ற மொழிகளில் ஒரே ஒரு லகரம் மட்டும் உள்ளது. அதனால் அவர்கள் தமிழ், ஆண்டாள் என்ற சொற்களை முறையே தமில், ஆண்டால் என்று உச்சரித்தார்கள். இப்போது நிலைமை அப்படி இல்லை. ஆழ்வார் பாடல்கள் மொழிபெயர்க்கப்பட்டவுடன் தமிழ்ச் சொற்களை உள்ளது உள்ளபடியே ஒலித்துச் சொல்கிறார்கள்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன முன்னாள் இயக்கு-நரான முனைவர் க.த. திருநாவுக்கரசு அவர்கள், பேராசிரியர் சீனிவாசராகவன் அவர்களோடு சேர்ந்து பணியாற்றினார் என்பதும் இங்கு நினைவுகூரத் தக்கது. பேராசிரியர் சீனிவாச ராகவன் அவர்களோடு சேர்ந்து பணியாற்றிய காலத்தில் முனைவர் க.த. திருநாவுக்கரசு அவர்கள் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதினார். எடுத்துக் காட்டாக 'நப்பின்னையும் ராதையும்' என்ற தலைப்பில் மிகச் சிறந்த கட்டுரை ஒன்றினைக் கலைமகள் தீபாவளி மலரில் (1980) எழுதினார். இக்கட்டுரையும், இதுபோன்ற வைணவத் தொடர்பான கட்டுரைகள் சில எழுதுவதற்கும் உறுதுணை-யாக இருந்தவர் பேராசிரியர் சீனிவாசராகவன் அவர்கள்.

பேராசிரியர் சீனிவாச ராகவன் அவர்களின் செயற்கரிய இப்பணியைப் பாராட்டும் முகமாக நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை இந்தி மொழியில் மொழியாக்கம் செய்ததற்காக முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் மாண்புமிகு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பேராசிரியருக்குப் பொன்னாடை போர்த்தியும், பொற்காசு வழங்கியும் சிறப்புச் செய்தார்கள். இவ்வெகுமதி பெற்றபொழுது பேராசிரியர் கூறிய வார்த்தைகள் நினைவுகூரத் தக்கன. 'என்னால் தமிழ் உயர்ந்தது என்பதைவிட தமிழால் நான் உயர்ந்தேன்' என்று

சொல்லிப் பெருமைபட்டுக் கொண்டார். இந்தியில் மொழியாக்கம் செய்யப்பட்ட ஆழ்வார் நூல்களுக்குக் குறிப்பாகவும், சிறப்பாகவும் இந்தி மொழி பேசுகின்ற மாநிலங்களில் நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது என்பதையும் இங்குச் சுட்டியே ஆகவேண்டும். தமிழிலிருந்து இந்தி மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட வைணவ இலக்கியங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு உத்திரப்பிரதேசத்திலுள்ள கோரக்பூர் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் விஸ்வநாத் பிரசாத் திவாரி என்பாரின் மேற்பார்வையில் ஒருவர் முனைவர் பட்டத்திற்கான ஆய்வினை மேற்கொண்டிருக்கிறார். "தமிழிலும் இந்தியிலும் வைணவ இலக்கியம் ஓர் ஒப்பீடு" என்பது அவ்வாய்வேட்டின் தலைப்பு.[6] பேராசிரியர் சீனிவாச ராகவன் அவர்களின் தமிழ் வைணவ இலக்கிய ஆராய்ச்சி நூல் இல்லையென்றால் தமிழ் வைணவ இலக்கிய ஒப்பாய்வினை இந்தி மொழிக்காரர் முனைவர் பட்ட ஆய்வாக மேற்கொண்டிருக்க முடியாது. சூர்தாஸ், கும்பன்தாஸ், பரமானந்ததாஸ், நந்ததாஸ், கிருஷ்ணதாஸ், சத்துர்புஜதாஸ், சீத சுவாமி, கோவிந்த சுவாமி ஆகிய எட்டுப்பேர்களும் இந்தி வைணவக் கவிஞர்களாக அழைக்கப்படுகின்றனர். எட்டு வைணவக் கவிஞர்களை அஷ்டசாப் என்று இந்தியில் அழைக்கின்றனர். இந்தி மொழியிலுள்ள இந்த எட்டு வைணவக் கவிஞர்களையும், தமிழ் மொழியிலுள்ள பன்னிரண்டு ஆழ்வார்களையும் அடிப்படையாக வைத்துக்கொண்டு ஒருவர் முனைவர் பட்டத்திற்கான ஆய்வினை மேற்கொண்டிருக்கிறார். ஆர். கோவிந்தராஜன் என்பார் பீகார் மாநிலத்தில் ராஞ்சிப் பல்கலைக் கழகத்தில் "அஷ்டசாப் எபங் திவ்யப்பிரபந்தமே பக்தி அபிவிஞ்சனா"[7] என்ற தலைப்பில் ஒப்பாய்வினை மேற்கொண்டிருக்கிறார். மேலே குறிப்பிட்டுள்ள "அஷ்டசாப் எபங் திவ்யப்பிரபந்தமே பக்தி அபிவிஞ்சனா" என்ற இந்தித் தலைப்புக்குப் பொருள் இந்தி மொழியிலுள்ள எட்டு வைணவக் கவிஞர்களின் பக்தி வெளிப்பாடும், தமிழ்

---

6. 'தமிழ் அவுர் வைஷ்ணவ பக்தி சாகித்திய துலநாத்மக் அத்யயந்' ஆய்வாளர்: ஸதானந்த ஸாஹு, 1994.

7. இந்தி மொழித் துறைப் பேராசிரியரும் தலைவருமான டாக்டர் திநேஸ் பிரஸாத் என்பவரின் மேற்பார்வையில் ஆர். கோவிந்தராஜன் என்பவர் 1995இல் இவ்வாய்வினை மேற்கொண்டிருக்கிறார்.

மொழியிலுள்ள பன்னிரண்டு ஆழ்வார்களின் பக்தி வெளிப்பாடும் என்பதாகும்.

இதுபோன்ற ஒப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் பிறமொழியைச் சார்ந்த அறிஞர்கள் நமது செந்தமிழில் சொல்லப்பட்ட கருத்துகளை ஆராயவும், தமிழ் மாநிலத்தின் கலாச்சாரம், பண்பாடு இவைசுளைத் தெரிந்துகொள்ளவும், தமிழ் மிகப் பழமையான மொழி அதில் ஒரு பண்பாட்டுக் களஞ்சியமே புதைந்து கிடக்கிறது என்பது போன்ற. செய்திகளை அறிந்துகொள்ளவும் ஏதுவாக அமைகின்றன.

இவ்வகை மொழியாக்க ஆராய்ச்சியின் மூலமாக நல்லதொரு முன்னேற்றமும், வெற்றியும் தமிழ்த்துறைக்கு வாய்த்தபிறகு இதே பாணியில் சைவ இலக்கியத்தையும் தொட்டுத் துவங்கலாம் என்ற எண்ணம் தோன்றியது. இவ்வெண்ணத்திற்கு முழு உருவம் கொடுத்தவரும் இந்தி மொழித்துறை முன்னாள் பேராசிரியர் ராம்சிங் தோமார் தான். "தமிழ் வைணவ இலக்கியத்திற்கு என்னால் முடிந்த அளவு தொண்டு செய்துவிட்டேன். தென்னாடுடைய சிவனே போற்றி என்பார்கள். அந்தச் சிவனைப் போற்றுகின்ற சைவ இலக்கியத்திற்கும் என்னாலான தொண்டைச் செய்தாக வேண்டும். இல்லையெனில் என்பணி முழுமையாகாது" என்று கூறி, சைவ இலக்கியத்தையும் இந்தி மொழியில் கொண்டுவருவதற்கு மிகத் தீவிரமாகப் பாடுபட்டார். சைவ இலக்கியத்தை இந்தி மொழியில் கொண்டு வருவதற்காக முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் மாண்புமிகு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் மூலமாகப் பல்கலைக் கழக மானியக் குழுவை நாடினார். குடியரசுத் தலைவர் முயற்சியின் காரணமாகவே திருமுறை மொழியாக்கம் செய்தல் என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்படவும் இப்பணிக்கு இந்தி, தமிழ், ஆங்கிலம் தெரிந்த ஒரு வல்லுநரைத் தேர்ந்தெடுக்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ராஞ்சிப் பல்கலைக் கழக இந்தி மொழித் துறைத் தலைவர் மூலமாகப் பேராசிரியர் ந. சுந்தரம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். பேராசிரியர் ந. சுந்தரம் அவர்கள் மொழிபெயர்ப்புத் துறையில் மிகவும் தேர்ச்சி பெற்றவர். ஏற்கெனவே தமிழ் நூல்கள் சிலவற்றை இந்தி மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறார்.

டாக்டர் மு.வ.வின் கரித்துண்டு,[8] கலைஞர் கருணாநிதியின் ஒரே ரத்தம்[9] போன்ற புதினங்களை இந்தியில் மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கிறார். இதைத் தவிர பாரதியாரின் தேசியப் பாடல்கள் எந்த வடிவத்தில் இருக்கின்றனவோ அந்த வடிவத்தில் இந்தியிலும் அமைத்து நூலாக[10] வெளியிட்டிருக் கிறார். இந்த நூலுக்கு நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது. இந்தி மொழிக்காரர்கள் பலர் இந்நூலை மேற்கோள் காட்டிப் பாரதியார் பற்றிய நூல்களை எழுதியுள்ளனர். N.C.E.R.T. (National Council of Education Research and Training) என்ற அமைப்பில் பாரதியார் நூல்கள் சில வெளிவந்துள்ளன. சாகித்திய அகாதமி வழி வெளிவந்த நூல்களிலும் முதலாவ-தாகவும், முன்னோடியாகவும் எழுதப்பட்ட டாக்டர் சுந்தரம் அவர்களின் நூல் மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கிறது. பேராசிரியர் சுந்தரம் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட பாரதியாரின் தேசியக் கவிதைகள் பல ஜபல்பூர் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றப்பட்டுப் பாராட்டுப் பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. இப்பாடல்களில் பல இந்தி நாளேடுகளிலும் வெளிவந்திருக்கின்றன[11].

பழமொழி பற்றி மூன்று தொகுதிகள் வெளி வந்துள்ளன.[12] இப்பழமொழி மூன்று தொகுதிகளில் தமிழ்ப் பழமொழி என்னும் பகுதிக்கு முனைவர் சுந்தரம் அவர்கள் ஆசிரியராக இருந்து இந்தி மற்றும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கொடுத்திருக்கிறார். இவருடைய ஆராய்ச்சித் தலைப்பு "மீரா அவுர் ஆண்டாள்கா துலநாத்மக் அத்யயந்" (மீராவும் ஆண்டாளும் - ஓர் ஒப்பாய்வு) என்பதாகும். இவ்வாராய்ச்சியும் நூலாக வெளிவந்து இருக்கிறது.[13] இந்தி

---

8. கோயலே கா டுக்டா, சாமயிக பிரகாஸந், டில்லி, 1973.
9. ஏக் ஹி ரக்த், வாணி பிரகாஸன், நஇ டில்லி, 1989.
10. சுப்ரமணிய பாரதி கி ராஷ்டிரிய கவிதாயே, லோகி பாரதி பிரகாஸந், இலஹாபாத், 1972.
11. ஆஜ்கல், தர்மயுக், சாப்தாஹுக், ஹிந்துஸ்தாந், நவபாரத், நஇ துநியா, பிரசார சமாச்சார் போன்ற பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன.
12. பாரதிய கஹாவத் கோஸ், தொகுதிகள் I, II, III, பதிப்பாளர்: V.D. நரவணே, திரிவேணி சங்கம், பூனா, 1974.
13. மீரா அவுர் ஆண்டாள் கா துலநாத்மக் அத்யயந், ஹிந்தி ஸாஹித்ய சம்மேலந், பிரயாக், 1971.

மற்றும் தமிழ் ஒப்பாய்வுத் துறையில் வெளிவந்த முதல் நூல் இது எனலாம். கபீருடைய கூற்று ஒன்றும் இங்கு நினைவுகூரத் தக்கது. "பக்தி உபஜி திராவிடி" என்றார் கபீர். அதாவது திராவிட நாட்டில்தான் பக்தி இயக்கமே தோன்றியது என்ற கருத்தைப் பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த கபீர் வெளிப்படுத்தி இருக்கிறார். கபீர் கூறிய கருத்து எந்த அளவுக்குச் சரியானது என்பதை அறிந்துகொள்ள வேண்டுமானால் டாக்டர் ந. சுந்தரம் அவர்களின் ஒப்பாய்வு நூலைப் படிக்க வேண்டும். திராவிட நாட்டில்தான் முதன்முதலில் பக்தி இயக்கமே தோன்றியது என்பதை டாக்டர் சுந்தரம் அவர்கள் கபீரின் கருத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு தன் ஆய்வேட்டில் நிறுவுகிறார். இதைத்தவிர இந்தியிலிருந்து தமிழிலும் மொழியாக்கம் செய்திருக்கிறார். ஹிமாம்சு ஜோசி என்பார் எழுதிய புதினம்[14] ஒன்றை "உனக்காக" என்னும் தலைப்பில் மொழிபெயர்த்து 1988இல் வெளியிட்டார். இந்நூல் மலைவாழ் மக்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கிறது. ஸ்ரீஹித் ஹரிபங்ஸர் என்பவர் ராதையைப் பற்றி 84 பாடல்கள் எழுதியுள்ளார். பேராசிரியர் சுந்தரம் அவர்களும், அமெரிக்கப் பேராசிரியர் சார்லெஸ் ஒயிட்டும் சேர்ந்து கொண்டு ஸ்ரீஹித் ஹரிபங்ஸரின் பாடல்களை நூலாக[15] வெளியிட்டிருக்கின்றனர். N.C.E.R.T. வெளியீட்டுக்காக "ஆஓ தமிழ்நாடு சலே" என்ற நூலையும்[16] எழுதிக் கொடுத்தார். இந்நூலில் தமிழ்நாட்டின் கலாச்சாரம், பண்பாடு, இலக்கியம், மக்களின் பழக்க வழக்கங்கள், கோயில்கள், திருவிழாக்கள், சுற்றுலாப் பகுதிகள், தொழிற்சாலைகள் தொடர்பான பல செய்திகளைத் தொகுத்துத் தந்திருக்கிறார். ஜஸ்டிஸ் மகாராஜன் அவர்களின் திருவள்ளுவர் என்ற ஆங்கில நூலையும்[17] சாகித்திய அகாதமிக்காக இந்தி மொழியில் மொழியாக்கம் செய்து கொடுத்திருக்கிறார். தமிழிலும், இந்தியிலும் வெளிவந்த புதுக்கவிதை பற்றி ஒரு ஒப்பாய்வு என்ற நூலையும்[18] பல்கலைக் கழக மானியக் குழுவுக்காகச்

---

14. தும்ஹாரே லியே, சந்தி யா பிரகாஸந், டில்லி, 1993.

15. ஸ்ரீ ஹித் ஹரிபங்ஸ் கா சௌராஸீ பத், ஏஸியந் ஸ்டடிஸ், ஹவாஇ, 1977.

16. ஆஓ தமிழ்நாடு சலே, N.C.E.R.T, New Delhi, 1990.

17. திருவள்ளுவர், சாகித்ய அகாதமி, நியு டில்லி, 1987.

18. பாரதிய அஷ்மிதா கே பரிப்ரேட்சிய மே தமிழ் அவுர் ஹிந்தி சமகாலிந் கவிதா.

செய்து முடித்திருக்கிறார். இந்நூல் மிக விரைவில் வரவிருக்கிறது. இந்நூலில் இந்தியப் பண்பாடு எவ்வாறு பிரதிபலிக்கப்பட்டிருக்கிறது என்பதை இவர் சுட்டிக்காட்டி இருக்கிறார். இதில் ந. பிச்சமூர்த்தி தொடங்கி மு. மேத்தா வரையில் புதுக்கவிதை எழுதிய பல கவிஞர்களை அறிமுகப் படுத்தியிருக்கிறார்.

முனைவர் சுந்தரம் அவர்கள் சென்னை மாநிலக் கல்லூரியில் 1966 முதல் 1988 வரையில் பேராசிரியராகப் பணியாற்றினார். இதற்கு முன்பு இவர் புதுக்கோட்டை ராஜா கல்லூரியில் ஆறு ஆண்டுகள் (1958-1963) பணிபுரிந்தவர். இடைப்பட்ட காலத்தில் (1964-1965) இவர் தம் ஆய்வுக்காக ஜபல்பூர் சென்று தன் ஆராய்ச்சியை முடித்து மாநிலக் கல்லூரியில் சேர்ந்தார். புதுக்கோட்டையில் பணியாற்றிய பொழுது முனைவர் க.த. திருநாவுக்கரசு, பேராசிரியர் சீனிவாச ராகவன், முனைவர் நஞ்சுண்டன் போன்ற பேராசிரியர் களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

தமிழிலும், இந்தியிலும், ஆங்கிலத்திலும் மொழியாக்கங்கள் பல செய்த பேராசிரியர் சுந்தரம் அவர்கள் தமிழ் இலக்கியங்களிலும் தேர்ச்சி பெற்றவர். மயிலாப்பூர் சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் தலைவராக இருந்துவரும் 'சித்தாந்தச் செல்வர்', 'சிவநெறிச் செம்மல்' கொ.நீ. சிங்காரவேலு அவர்களிடமும், அந்த மன்றத்தோடு தொடர்புடைய பல அறிஞர்களோடும் தொடர்புகொண்டு, சைவசித்தாந்தக் கொள்கைகளை முறையாகக் கற்றவர். சைவசித்தாந்தத்தில் இவர் தோய்ந்தவராதலின் திருமுறை மொழியாக்கத் திட்டத்தில் பணியாற்ற இசைந்தார்.

தமிழ் சைவ இலக்கியத்தைப் பற்றி மிக விரிவான ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றை விசுவ-பாரதி என்ற காலாண்டு ஆராய்ச்சி இதழில்[19] அண்மையில் வெளியிட்டிருக்கிறார். சைவ இலக்கியம், சமயம் தொடர்பான சொற்பொழிவுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு, பேராசிரியர் சுந்தரம் அவர்கள் இடையிடையே சாந்திநிகேதனில் சொற்பொழிவு ஆற்றி வருகிறார். இவருடைய ஆராய்ச்சியின் முதற்கட்டமாக மாணிக்கவாசகரின் திருவாசகம் முழுமையாக இந்தி

19. விஸ்வ-பாரதி பத்திரிகா, ஏப்ரல் 1992, இவ்விதழ் வெளியானது மார்ச் 1995.

மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டு அச்சாகிக் கொண்டிருக்கிறது. இந்தி மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட திருவாசகம் என்ற நூலில் ஒரு பக்கம் தேவநாகரி வரி வடிவத்தில் மாணிக்கவாசகரின் மூலபாடலும், அதற்கு எதிர்ப் புறம் மூலபாடலுக்கு இணையான இந்தி மொழிபெயர்ப்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தி மொழிபெயர்ப்பு ஓரளவுக்குப் பாடல் வடிவிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. நடராஜர், சிவன், காளி போன்ற சைவ சித்தாந்தத்தைக் குறிக்கக்கூடிய சித்திரங்கள் பாடல்களின் தலைப்பில் சேர்க்கப்பட்டிருக் கின்றன. மாணிக்கவாசகரின் உருவம், அவர் வழிபட்ட கோயில்கள் இவைகள் நூலின் இணைப்பாகச் சேர்க்கப் பட்டுள்ளன.

திருவாசக நூலின் முன்னுரையில் மாணிக்கவாசகரின் விரிந்த வாழ்க்கை வரலாறும், திருவாசகப் பாடல்களின் கருத்தாழமும், பாடல்களின் நயமும் விரிவாக எழுதப் பட்டிருக்கின்றன. ஏறத்தாழ ஐம்பது பக்கங்கள் கொண்ட இவ்வாராய்ச்சி முன்னுரையில் மறைமலையடிகள், தெ.பொ.மீ. போன்ற அறிஞர்களின் கருத்துகளும் சுட்டப்பட்டிருக்கின்றன. மாணிக்கவாசகரின் திருவாசகம் என்னும் இந்தி மொழியாக்க நூல் பெரும்பாலும் வருகிற ஜூன் திங்களில் (1996) வெளிவந்துவிடும். இந்நூல் ஹலவஸ்யா என்னும் அறக்கட்டளையால் வெளியிடப்படுகிறது. இந்நூல் வெளியிடுவதற்காக ரூபாய் ஒரு லட்சத்திற்கு மேல் செலவிடப்பட்டிருக்கிறது.

விசுவ-பாரதி நடுவண் பல்கலைக் கழகத்தின் பொன்விழா தொடர்பாக இந்தியக் குடியரசுத் தலைவர் மாண்புமிகு டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் சாந்திநிகேதன் வருகை தந்தபொழுது வரவேற்பு அளிக்கப்பட்டது. உபாச்சார்ஜொ (துணைவேந்தர்) டாக்டர் திலீப்குமார் சிந்ஹ அவர்கள் தமிழ்த்துறையின் மூலமாக மேற்கொள்ளப்பட்டுவரும் திருமுறை மொழி பெயர்ப்புத் திட்டத்தைப் பற்றியும் அவ்வரவேற்பில் விரிவாக எடுத்துரைத்தார்கள் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.[20]

தென்னாட்டில் சைவ மதம் சமண, புத்த மதங்க ளோடு எப்படியெல்லாம் போராடியிருக்கிறது என்பதையும்,

---

20. பிஸ்ப-பாரதீ ஸமாபர்தந் உத்ஸப், உபாசார்ஜொ அத்யாபக் திலீப்குமார் ஸிந்ஹ பாஷண், செப்டம்பர் 10, 1995.

அதில் வெற்றியும் கண்டு தழைத்தோங்கியிருக்கிறது என்பதையும் வரலாற்று நோக்கோடு பார்ப்பதற்கு இத் தேவார மொழிபெயர்ப்பு நூல்கள் பிறமொழிக்காரர்களுக்குப் பெரிதும் பயன்படும். ஏன் சமணர்களை வெறுத்தார்கள், சமண, புத்த மதங்கள் தமிழ் நாட்டில் பரவியிருந்தால் நிலைமை என்னவாயிருக்கும் என்பது போன்ற கேள்விகளுக்கு இம்மொழிபெயர்ப்பு நூல்கள் ஒரு விடையாகவே அமைந்திருக்கின்றன. தமிழ்நாட்டுக் கோயில்கள், கோவில்களை ஒட்டிய பண்பாடு, நடராஜர் தத்துவம், அம்பரக் கூத்தனின் ஆடல் இவைகளைப் பற்றித் தமிழ் அல்லாத பிறமொழி மக்கள் தெரிந்துகொள்ள இந்நூல்கள் பயன்படும். தமிழிலிருந்து பிற மொழியில் இப்படிப்பட்ட மொழியாக்க நூல்களை வெளிக் கொணர விசுவ-பாரதி நடுவண் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை முனைப்பாகவும், முன்னோடியாகவும் செயல்படுகிறது.

விசுவ-பாரதி நடுவண் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் மேற்பார்வையில் மானியக் குழுவின் பண உதவியோடு மேற்கொள்ளப்பட்டு வந்த - வருகின்ற சைவ, வைணவ இலக்கிய மொழியாக்கம் பற்றி இதுவரையில் குறிக்கப்பட்டன. இனி, இக்கட்டுரையாளரும், விசுவ-பாரதி நடுவண் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைப்பேராசிரியருமான முனைவர் சொ. முத்தையா அவர்களால் செய்யப்பட்ட மொழியாக்கங்கள் பற்றிக் குறிக்கப்படுகின்றன.

I. வங்காள மொழியிலிருந்து தமிழில் மொழியாக்கம்: நூல்

'பங் ளா பிரபாத்' என்னும் வங்காள மொழி நூலை அடிப்படையாக வைத்து 'வங்காளப் பழமொழிகள்'[21] என்னும் தலைப்பில் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு நூலாக வெளியிடப்பட்டுள்ளது. எனினும் இக்கட்டுரை ஆசிரியரால் செவிவழியாகக் கேட்ட சில வங்காளப் பழமொழிகளும் இந்நூலில் ஆங்காங்கே சேர்க்கப்பட்டுள்ளன. வங்காளப் பழமொழிகள் என்னும் தலைப்பில் அமைந்த இந்நூல் 1. வங்காளப் பழமொழிகள் - தமிழில் விளக்கம், 2. வங்காளம், தமிழ், ஆங்கில மொழிகளில் பழமொழி ஒப்புமை, 3. வங்காளப் பழமொழிகளில் கதை என மூன்று இயல்களாக அமைக்கப்

21. வங்காளப் பழமொழிகள், முனைவர் சொ. முத்தையா, பேராசிரியர் & தலைவர், தமிழ்த்துறை, விசுவ-பாரதி நடுவண் பல்கலைக் கழகம், சாந்திநிகேதன், மேற்கு வங்காளம், 1995.

பட்டுள்ளது. முதலிரண்டு இயல்கள் வங்காள மொழி உயிர் எழுத்துகளை அடிப்படையாக வைத்துத் தொகுக்கப் பட்டுள்ளன. மூன்றாவது இயல் கதையை அடிப்படையாகக் கொண்டு சேர்க்கப்பட்டுள்ளது. பொதுமக்களிடையே பெரு வழக்காக வழங்கப்படுகின்ற வங்காளப் பழமொழிகள் மட்டும் இந்நூலில் சுட்டப்பட்டுள்ளன. வங்காளப் பழமொழிகளின் உச்சரிப்பு அப்படியே தமிழில் எழுத்துப் பெயர்ப்பில் (Transliteration) கொடுக்கப்பட்டுள்ளன. வங்காளப் பழமொழிகளுக்கு இணையான ஆங்கில எழுத்துப்பெயர்ப்பும் கொடுக்கப் பட்டுள்ளன. இதன்வழி வங்காளிகள் மட்டுமல்லாது பிறமொழிக்காரர்களும் வங்காளப் பழமொழிகளின் சரியான உச்சரிப்பைப் படித்துத் தெரிந்துகொள்ளலாம்.

II. தமிழிலிருந்து வங்காள மொழியில் மொழியாக்கம் : சிறுகதைகள்

அ. ஞானபீடப் பரிசு பெற்றவர்

அகிலன்

பதினேழு புதினங்களையும், நூற்றி எழுபத்தொரு சிறுகதைகளையும், ஒரு நாடகத்தையும், நான்கு சிறுவர் இலக்கிய நூல்களையும், ஒரு பயணக் கட்டுரை நூலையும், மூன்று மொழிபெயர்ப்பு நூல்களையும், இரண்டு திறனாய்வு நூல்களையும் படைத்த அகிலன் சிறந்த எழுத்தாளர். இவர் மாநில அளவிலும், இந்திய அளவிலும் பெற்ற பரிசுகள் ஏராளம். ஞானபீடப்பரிசு பெற்றவர் இவர். 'இன்பத் தீ', 'செங்கரும்பு', 'யார் தியாகி', 'அழகின் ரகசியம்', 'கரும்பு தின்னக் கூலி', 'இதயச் சிறையில்', 'கறவையும் காளையும்', 'இரு சகோதரிகள்' என்னும் தலைப்பிலமைந்த அகிலனின் சிறுகதைகள் எட்டு மொழியாக்கம் பெற்றுள்ளன. இச்சிறு கதைகள் முறையே 'ஸீக்கேர் ஆகுந்', 'காஜலா ஆக்', 'கே தியாகீ?' 'ஸௌந்தர் ஷேர் ரஹஸ்ய', 'ஆக் காஓயார் மஜுரி', 'ஹிருதயேர் காராகாரே', 'பலத் ஓ காபீ', 'துஇ போந்' என்னும் வங்காளத் தலைப்பில் மொழியாக்கம் செய்யப்பட்டு வங்க இதழ்களில் வெளிவந்துள்ளன.

ஆ. சாகித்திய அகாதமி பரிசு பெற்றவர்கள்

ஜெயகாந்தன்

சிறுகதைத் துறையில் மேலைநாட்டு மாப்பஸான் போன்று புகழ்பெற்று விளங்குபவர் ஜெயகாந்தன் ஆவார்.

இவர் மாநில அளவில் பல பரிசுகளைப் பெற்றதோடு சாகித்திய அகாதமி பரிசும் பெற்றவர். 'தாம்பத்யம்', 'தர்க்கம்', 'அன்புக்கு நன்றி', 'வேலை கொடுத்தவன்', 'அடல்ட்ஸ் ஒன்லி', 'அக்னிப் பிரவேசம்', 'இதோ ஒரு காதல் கதை', 'பூ உதிரும்', 'அந்தக் கோழைகள்', 'புதுச்செருப்புக் கடிக்கும்' என்னும் தலைப்பில் அமைந்த ஜெயகாந்தனின் பத்துச் சிறுகதைகள் முறையே 'தாம்பத்யம்', 'தர்க்கொ', 'ஆப்நார் தயார் ஜொந்நே தந்யபாத்', 'ஓகே காச் தேஓயா ஹெயே சி லொ', 'ஏ டால்ட்ஸ் ஒந்லி', 'அக்நி பிரபேஸ்', 'ஏட்டா ஏக்டா பாலுபாஸார் கல்ப்பொ', 'ஃபூல் ஸொரே ஜாபே', 'ஓஇ காபுருஷ்', 'நதுந் ஜுதொய் ஃபொஸ்கா பொடுபே' என்னும் வங்கத் தலைப்புகளில் மொழிபெயர்க்கப் பட்டு வங்க இதழ்களில் வெளிவந்துள்ளன.

கல்கி

வரலாற்றுப் புதினத் தந்தை என்றழைக்கப்படும் கல்கி அவர்களைத் தமிழ்நாட்டின் வால்டர் ஸ்காட் (Walter Scott) என்பர். வரலாற்று நாவல்களைப் படைத்த இவர் சிறுகதைகளையும் எழுதியிருக்கிறார். சாகித்திய அகாதமி பரிசு பெற்றவர். இவரின் 'அமர வாழ்வு' என்னும் சிறுகதை சுதந்திரப் போராட்டத்தையும், நேத்தாஜி சுபாஸ் சந்திர போஸையும் அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது. வரலாற்றுக் கண்ணோடு காதலையும் பின்னி மிக நேர்த்தியான கற்பனை நயத்தோடு எழுதியிருக்கிறார். 'அமர வாழ்வு' என்னும் தலைப்பில் அமைந்த இவரின் சிறுகதை வங்காள மொழியில் 'அமர் ஜீபஞ்' என்னும் தலைப்பில் வங்க இதழில் வெளிவந்தது.

நா. பார்த்தசாரதி

நா. பார்த்தசாரதி தமிழ் இலக்கியம் பயின்றவர். புதுமை இலக்கியம் உணர்ந்தவர். பழமையில் கால்கொண்டு புதுமையில் கிளைவிடும் இவர் கதைகள் அரிய படைப்புகளாக உள்ளன. சாகித்திய அகாதமி பரிசோடு பல பரிசுகளையும் பெற்றவர். இவரின் 'மறுபடியும் ஒரு மஹிஷாசுர வதம்' என்னும் சிறுகதை ஒன்று 'ஆபார் ஏக்டா மொஹிஷாஸுர் பத்' என்னும் தலைப்பில் வங்காள இதழில் வெளி வந்திருக்கிறது.

கு. அழகிரிசாமி

மணிக்கொடி எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர் கு. அழகிரிசாமி. சிறுகதைகள், நாடகம், கட்டுரைகள் எழுதியவர். சாகித்திய அகாதமி பரிசு பெற்றவர். இவரின் 'ஞாபகார்த்தம்' என்னும் சிறுகதை ஒன்று 'ஸ்மிருதிமாக்கா உபஹார்' என்னும் தலைப்பில் வங்க இதழில் வெளிவந்தது.

தி. ஜானகிராமன்

பல புதினங்களையும், சிறுகதைகளையும், நாடகங்களையும், பயண நூல்களையும் எழுதியவர்களில் குறிப்பிடத் தக்கவர் தி. ஜானகிராமன். இவரின் படைப்புகள் பல ஆங்கில, இந்தி, கன்னட, ரஷ்ய மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டிருக்கின்றன. சாகித்திய அகாதமி பரிசு பெற்றவர். இவரின் சிறுகதையான 'மணம்' வங்காள மொழியில் 'ஸீகந்தொ' என்னும் தலைப்பில் வெளிவந்தது.

இ. இதழ்களில் பரிசு பெற்றவர்கள்

வேம்பத்தூர் லலிதா

இவர் ஆனந்த விகடனில் விழிப்பு உணர்வுச் சிறுகதை யினை எழுதி ரூ. 5000/- பரிசு பெற்றார். 'ஒரு மௌனத்தின் அலறல்' என்னும் தலைப்பில் அமைந்த இவரின் சிறுகதை ஒன்று 'ஏக்ஜொந் மௌநேர் ஆர்தநாத்' என்னும் வங்கத் தலைப்பில் வெளிவந்தது.

கே. பி. ஜனார்த்தனன்

இவர் அமரர் கல்கி நினைவுப் போட்டியில் கலந்து கொண்டு இரண்டாம் பரிசு பெற்றார். இவரால் எழுதப்பட்ட சிறுகதை 'புதிய சுவடுகள்' என்பதாகும். இச்சிறுகதை வங்க மொழியில் 'நூதந் பதகேப்' என்ற தலைப்பில் வெளியானது.

ஈ. இன்றைய முன்னணி எழுத்தாளர்களின் சிறுகதைகள்

மேலே குறிப்பிட்ட எழுத்தாளர்களைத் தவிர இன்றைய முன்னணி எழுத்தாளர்களின் சிறுகதைகள் சிலவும் வங்காள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு இதழ்களில் வெளி வந்திருக்கின்றன. இந்துமதி, சி.ஆர். ராஜம்மா, கீதா பென்னெட், பட்டுக்கோட்டை ராஜா, ப்ரியா கல்யாணராமன்,

வேத கோபாலன், கண்ணகுமார் விஸ்வரூபன், ஜே.டி.ஆர், திண்டிவனம் இரவிச்சந்திரன், பசுதனபாலன், புவனேஸ்வர் பாண்டியன், ஜேசுதாஸ், டி. குலசேகர், தமயந்தி, ஆர். கணபதி, ராஜேஸ்குமார், அய்க்கண், எஸ். கல்யாணராமன், பி. முருகேசன், உஷா தீபன், எஸ்.எச். நிஹ்மத், எம். வேலு, ராம் பிரபு, கே. பிரகாஷ், எஸ். வெங்கட்குமார், திரியாம்பிகா, சுகந்தி, நியுகலா, மதுமணி, கே.எஸ். நடராஜ், லவர்ஸ், கே. கந்தவேல், இரவிச்சந்திரன், என். நாகராஜன், குமரசித்தன், கமலநாதன், ஜெயந்தன் ஆகியோரின் சிறுகதைகளும் வங்க இதழ்களில் வெளிவந்துள்ளன. இவர்களின் சிறுகதைகள் கல்கி, குமுதம், குங்குமம், ஆனந்த விகடன், இதயம் பேசுகிறது, தினமணி, தினமலர் போன்ற இதழ்களிலும், நாளேடுகளிலும், வானதி பதிப்பகம், ஐந்திணை பதிப்பகம் வழி வெளிவந்த நூல்களிலும் வெளிவந்தவை. இவர்களில் கீதா பென்னெட் என்பாரின் சிறுகதைகள் இரண்டும், அய்க்கண் என்பாரின் சிறுகதைகள் நான்கும், டி. குலசேகர் என்பாரின் சிறுகதைகள் ஐந்தும் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளன. மேலே குறிப்பிட்டுள்ள ஏனைய எழுத்தாளர்களின் சிறுகதைகள் தலா ஒன்று வீதம் வங்காள மொழியில் ஆக்கம் பெற்றிருக்கின்றன. தமிழிலிருந்து வங்காள மொழியில் இதுவரை எழுபத்திரண்டு சிறுகதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

உ. புதினம்

கீதா பென்னெட்

'விளையாட்டுப் பிள்ளை' என்னும் தலைப்பில் கீதா பென்னெட் என்பார் புதினம் ஒன்றைக் குமுதம் இதழில் எழுதிவந்தார். 'கேலுடே செலெ' என்னும் வங்கத் தலைப்பில் மொழியாக்கம் பெற்று இந்நாவல் வங்க இதழில் வெளிவந்தது.

ஊ. கவிதைகள்

புரட்சிக் கவிஞர்: பாரதிதாசன்

பாரதிதாசன் தமிழ் இயக்கத்திற்கு ஊற்றுக்கண். அவர், தமிழின் உயர்வுக்காகப் பாடினார்; தமிழர் உயர்வுக் காகப் பாடினார். துறைதோறும் தமிழ் வளம்பெற, நலம்பெற வழி பல காட்டினார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் 'நிலா' 'அழகு' 'கோடைக் கொடுமையும் மாரியின் வரவும்' 'இயற்கைச் செல்வம்' 'கோடை தரும் நன்கொடை' 'கடல்'

'இயற்கையில் இல்லை மனிதருக்கு ஏன்?' 'கல்வி பயில்' 'பெண் கல்வி' 'ஆறு' 'தென்றல்' 'அறிவு கெட்டவன்' 'குன்றம்' 'செந்தாமரை' 'ஞாயிறு' 'ஆல்' 'சிற்றூர்' 'ஞாயிறு' 'சுதந்திரம்' 'தந்தை பெண்ணுக்கு' என்னும் தலைப்புகளில் அமைந்த கவிதைகள் முறையே 'சாந்த்' 'ஸௌந்தர்ஜெ' 'கிரிஸ்மேர் நிஷ்டுரதார் பொர் நாம்லொ பிரிஷ்டி' 'பிராக்ரிதிக் ஸம்பத்' 'புஸ்ப தாநேர் உபஹார்' 'ஸமுத்ர' 'பிரகிருதிதே பிபேத்நெஇ' 'மாநுஷே மாநுஷே கேநொ' 'லெக்கா பொடா லெக்கொ' 'நாரி ஸிக்ஷா' 'நொதி' 'தொக்கி நா ஸ மீரந்' 'நிர்போத் பக்தி' 'டிலா' ஃபெக்கே லால் பத்தொ' 'ஸிர்ஜெ' 'பட்காச்', 'சோட்டோகிராம்' 'ஸ்பாதி நதா' 'பிதா கந்யாகே' என்னும் வங்க மொழித் தலைப்புகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு வங்க இதழ்களில் வெளி வந்துள்ளன.[22]

III. ஆய்வுக் கட்டுரைகள்

இக்கட்டுரை ஆசிரியர் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். வங்காளப் பழமொழிகள் பற்றியும், வையம் புகழ் கொண்ட வங்கக் கவிஞர் ரபீந்திரநாத் டாகுர் பற்றிச் சில கட்டுரைகளும் எழுதியுள்ளார்.[23]

---

22. பிரேமாந்தர், ஸப்தர்ஷி, ஊஷஸி, பாலோ லெக்காபாலோ கொத்தா, ரிதிஜ, திரஸாந்தர் ஆகிய வங்காள மொழி இதழ்களில் சிறுகதைகள், புதினம், பாரதிதாசன் கவிதைகள் வெளிவந்துள்ளன.

23. 'டாகுரின் சிறுகதைகளில் நகைச்சுவை', அனைத்திந்தியத் தமிழ் இலக்கியக் கழக மூன்றாம் கருத்தரங்க ஆய்வுக்கோவை, தஞ்சாவூர், 1989, தொகுதி II, பக்.470-475.

'தமிழில் டாகுர் நூல்கள்', இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற இருபத்து மூன்றாம் கருத்தரங்க ஆய்வுக்கோவை, புதுதில்லி, 1992, தொகுதி இரண்டு, பக். 212-216.

'கருவின் அடிப்படையில் டாகுரின் சிறுகதைத் தலைப்புகள்', இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற இருபத்து நான்காம் கருத்தரங்க ஆய்வுக்கோவை, கோயம்புத்தூர், 1993, தொகுதி இரண்டு, பக்.633-637.

'வங்க, தமிழ், ஆங்கில மொழிகளில் பழமொழி ஒப்புமை', இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற இருபத்து ஐந்தாம் கருத்தரங்க ஆய்வுக்கோவை, மதுரை, 1994, தொகுதி இரண்டு, பக்.834-838.

'வங்கப் பழமொழிகளில் கதை', மேலது, பக்.1102-1106.

'தமிழும் டாகுரும்', எட்டாவது உலகத் தமிழ் மாநாடு, தஞ்சாவூர், 1995, ஆய்வுச் சுருக்கம், பக்.235-237.

இன்று மொழியாக்கம் என்ற ஒன்று இந்திய அளவில்-உலக அளவில் மிக மிக இன்றியமையாத ஒன்றாக விளங்குகிறது. இதனைப் பேராசிரியர் எழில் முதல்வன் அவர்களும், பேராசிரியர் சி. நாச்சிமுத்து அவர்களும் வலியுறுத்திக் கூறுகின்றனர். தமிழியல் ஆய்வில் மொழியாக்கப் பணிகள் செம்மையாகச் செய்யப்பட்டால் ஒப்பிலக்கியத்துறை மேலும் மேலும் வளர்வதற்கு வழிவகுக்கும். இத்தகைய மொழியாக்கங்களால் ஏற்படும் ஒப்பிலக்கியம் ஒன்றே தேசிய ஒருமைப் பாட்டினையும், உலக ஒருமைப்பாட்டினையும் வளர்க்கக் கூடியது; ஆக்கம் அளிக்க வல்லது; அமைதியைப் பரப்ப வல்லது. உலக நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் மிகச்சிறிய அளவிலேயே இது செயலாக்கம் பெற்று வருகிறது. தனித் தமிழ் இலக்கியம் மிகச் சிறப்புடையது. அதில் எவ்விதமான ஐயப்பாடும் இல்லை. ஆயினும் அதன் சீரிய தன்மை, உலக இலக்கியங்கள், ஏனைய இந்திய இலக்கியங்களுடன் ஒப்புமை செய்யும்போது பாங்குடன் வெளிப்பாடு அடைகிறது என்பது ஒருபுறமிருக்க, பிற இலக்கியங்களும் ஆழப்படுத்தப்படுகின்றன; அகலப்படுத்தப்படுகின்றன என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. நமது பண்பாடு, கலாச்சாரம் போன்றவை இந்திய அளவில் அல்லது உலக அளவில் போய்ச் சேரவேண்டுமானால், ஒப்பிலக்கியம் மூலமே அதைச் செய்ய முடியும். அந்த ஒப்பிலக்கியங்களுக்கு மொழியாக்கங்கள் பெரிதும் தேவை. உலகப் புகழ் பெற்ற இலக்கியங்களை அவரவர் தாய்மொழியில் கற்றுணரவும், இலக்கியத் துறையில் உலகளாவிய சிந்தனை ஓங்கவும் மொழிபெயர்ப்பு பெருந்துணை புரிந்துவருகிறது. இந்நிலையில் இன்றியமையாத பணிகளில் ஒன்றாக மொழியாக்கங்களையும் எடுத்துக்கொண்டு போர்க்கால அடிப்படையில் செயல்பட்டால் நமது மொழி மேலும் வலிவும் பொலிவும் பெறும்.

'மாணிக்கவாசகரும் டாகுரும்', இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற இருபத்து ஆறாம் கருத்தரங்க ஆய்வுக்கோவை, வேலூர் - சேலம், 1995, தொகுதி இரண்டு, பக்.1007-1011.

'மாணிக்கவாசகர், கண்ணதாசன், டாகுர் பாடல்கள் - ஓர் ஒப்பாய்வு' புதுவை மொழியியல் மற்றும் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுவை.

'சித்தரும் டாகுரும்', இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற இருபத்து ஏழாம் கருத்தரங்க ஆய்வுக்கோவை, காரைக்குடி, 1996, தொகுதி.

வங்காளத்தில் தமிழ்க் கல்வி

முனைவர் ரங்கநாயகி மகாபாத்ரா

மேற்கு வங்கத்தில் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் மட்டுமே தமிழ் மாணவர்க்கு முதுகலை நிலையிலும், உயராய்வு நிலையிலும் தமிழ்க் கல்விக்கு வசதியுள்ளது. தமிழுடன் இணைத்துப் பிறதுறை மாணவரும் முனைவர் பட்டத்திற்கான ஆய்வை அவரவர் துறையில் பதிவு செய்து கொண்டு தமிழ்த்துறை ஆசிரியர்கள் வழிநடத்திச் செய்து முடிக்கப் பல்கலைக் கழகச் சட்டங்கள் வழி வகுத்துள்ளன.

(பள்ளியில் முதல் வகுப்பிலிருந்து மேனிலைப் பள்ளி வகுப்பு வரை தமிழ்க் கல்வியுள்ளதே தவிர இளங்கலை நிலையில் எந்தக் கல்லூரியிலும் பாடமாகத் தமிழில்லை. வேண்டுவோர் தாமே படித்து இளங்கலைத் தேர்வு எழுதலாம்).

இது தவிரத் தமிழரல்லாதார்க்குப் பல்கலைக் கழகம் மாலை வகுப்புகளில் ஓராண்டுச் 'சான்றிதழ்' பாடத் திட்டமும், அடுத்த ஆண்டு 'பட்டயம்' (Diploma) பெறப் பாடத் திட்டமும் வைத்துள்ளது. எழுத்துத் தமிழ் பயிற்றலே எதிர்பார்க்கப்படுகிறது (மற்ற பல இந்திய, வெளிநாட்டு

மொழிகளுக்குள்ள பாடத் திட்டத்திற்கிணைய). மாணவர்கள் விரும்புவதால் பேச்சுத் தமிழையும் ஆசிரியர்களே சேர்த்துக் கொள்கிறோம். 'சான்றிதழ்', 'பட்டய' வகுப்புகளில் தமிழ் பயிலும் வசதி மேற்கு வங்கத்தில் ஜாதவ்பூர், சாந்திநிகேதன் ஆகிய இரு பல்கலைக் கழகங்களிலும் கூட உள்ளது. ஜாதவ்பூர் பல்கலைக் கழக ஒப்பிலக்கியத் துறையில் இளங்கலை வகுப்பில் (50 மதிப்பெண்களுக்கு) தமிழ் மொழி அறிமுகமும், முதுகலை வகுப்பில் மொழிபெயர்ப்புகளின் துணையில் தமிழ் இலக்கியப் பகுதிகளின் அறிமுகமும் இடம்பெறுகின்றன.

சான்றிதழ் வகுப்பில் தமிழ் கற்க வரும், வங்காளி மாணவர்க்குத் தமிழ் மொழியைக் கற்பிக்கும்போது எதிரிடும் சில சிக்கல்கள், அவற்றைச் சமாளித்து மொழி பயிற்றலைச் சற்று எளிதாக்க எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் ஆகியவற்றை இக்கட்டுரை விளக்கும். பாரதி தமிழ்ச் சங்கம் போன்ற இலக்கிய அமைப்புகளில் தமிழ் பயில வரும் வங்காளிகள் காட்டும் ஊக்கமும் இப்பணிகளுக்குத் தூண்டுகோலாகின்றது.

இச்சிக்கல்களை இருவகையாகப் பிரிக்கலாம்.

1) தமிழ் மொழியமைப்பிலேயே அடங்கியுள்ள சிக்கல்கள்.

2) வங்காளி மாணவரின் தாய்மொழியின் இடையீட்டால் ஏற்படும் சிக்கல்கள். இரண்டாம் மொழியாகக் கற்கும் பொழுது முதல் மொழியின் தாக்குரவு பல சிக்கல்களை உருவாக்குவது இயல்பே.

(1) தமிழ் உயிர் ஒலியன்களின் குறில்-நெடில் வேறுபாடு வங்காளிகளுக்கு இடர் தருவது. இந்தியைப் போல் வங்காளியில் உயிரொலிகள் குறில் நெடிலால் வேறுபடுவதில்லை. வங்காளியில் உள்ளவை -/ɔ:a/;/i:e/;/e-æ/;/ɔ-o/;/o-u/ - முரண்பாடுகள். எனவே தமிழின் குறில் நெடிலை மிகக் கடுமையான பயிற்சியாலேயே கற்றுக்கொள்ள முடிகிறது.

(2) தமிழின் குற்றியலுகரம் வங்காளியில் இல்லாதது மட்டுமில்லை, தமிழின் வரிவடிவத்திலும் அதற்குத் தனியாக வடிவம் இல்லை என்பதும் இடர்ப்பாட்டை உண்டாக்குகிறது. கு முதல் று வரை வடமொழி எழுத்துகள் உட்பட வரிவடிவத்திலிருந்து குற்றியலுகரம் எது.

முற்றியலுகரம் எது என்று கண்டுபிடிக்க வழியில்லாமல் [ʊ], [u] இரண்டும் ஒலியன்களாக வேறு இருப்பதால் அவர்கள் எல்லாவற்றையும் முற்றியலுகரமாகவே ஒலித்துவிடுகிறார்கள். இந்த முரண்பாடு சொல்லின் இறுதியிலேயே உள்ளதால் ([naṛʊ] [naṛu]; [kaṛʊ] -· [kaṛu]) வருமொழி முதலில் உயிர் வரும்பொழுது புணர்ச்சி விதியிலும் தடுமாற்றம் நேரிடுகிறது.

தமிழின் வரிவடிவத்தில் மெய்யொலிகளில் (தடை யொலிகளில்) உயிர்ப்பொலிகளுக்கும், உரசொலிகளுக்கும் தனி வரிவடிவமில்லாததால் பிறமொழியாளர்க்கு ஏற்படும் குழப்பங்கள் நாமறிந்தனவே. ஒரே எழுத்து ஒன்றுக்கு மேற்பட்ட ஒலிகளை உணர்த்தும் வகையை மொழியியல் பார்வையில் விளங்க வைக்கலாம்.



இவ்வகையான வரிவடிவங்கள் ஒலிகளிடையே உறவுகள், ஒலியன்கள், மாற்றொலிகள் ஆகிய பலவற்றையும் முறையாக விளக்கவே தமிழ்த்துறை 'Tamil - Script and Sound' என்ற ஒரு சிறு நூலைவெளியிட்டிருக்கிறது (*1992*)

மொழியியற் பயிற்சி பெற்றவர், பெறாதவர் ஆகிய இருபாலார்க்கும் உதவும்படி அதை எழுதியிருப்பதாகக் கருதுகிறோம். தமிழின் ஒலிகளுக்கு ஏற்ற எழுத்துகள் வட இந்திய மொழிகளில் தேவநாகரியில் மட்டுமே பெரும்பாலும் இருப்பதாலும், பெரும்பான்மையான வட இந்தியர் அறிந்தவை என்பதாலும் phonetic transcription ஆகிய ஒலிப்பு வடிவத்-தோடு, வடமொழி எழுத்துகளையும் பயன்படுத்தியிருக்கிறோம்.

இந்த உதவிகளோடு தமிழின் வரிவடிவங்கள் எந்த ஒலிச்சூழல்களில் எப்படி மாற்றியொலிக்கப்பட வேண்டும் என்று மிக விரிவாக விளக்கி முடித்த அடுத்த கணமே,

இவையெல்லாம் தமிழிலே புழங்கும் கடன் வாங்கிய சொற்களுக்குப் (loan words) பயன்படா என்றும் கூற வேண்டியுள்ளது. பிற திராவிட மொழிகள், வடமொழி, ஆங்கிலம் என்று பலவற்றிலிருந்தும் பெயர்ச்சொற்கள் கலந்து வரும்போதும் வங்காளி மாணவர் தம் பெயர்களைத் தமிழில் எழுதிப் பார்க்க முயலும்போதும் முற்கூறப்பட்ட விதிகள் ஏதும் இங்கே செயற்படாததைக் கேட்டுக் குழப்பமடைகிறார்கள்.

கற்பிக்கப்பட்ட இலக்கணம் -		மீறப்படும் இடம்	
க - (மொழி முதலில்)	[k]	[g] காந்தி	[gāndi]
		கம்பீரம்	[gambīram]
- (ஈருயிர் நடுவில்)	[h]	[g] லகான்	[lagāN]
- (மூக்கொலிக்குப்பின்)	[g]	[k] ஸ்ரீலங்கா	[śrīlaṅkā]
ச - மொழி முதலில்	[ś]	[c] சர்ச்	[carc]
மூக்கொலியின் பின்	[j]	[c] பென்ச்	[benc]
ட - இரட்டித்தால்	[ṭṭ]	[ḍḍ]வட்டி	[vaḍḍi]
		லட்டு	[laḍḍu]
ப - மொழி முதலில்	[p]	[b] பலூன்	[balūn]

பொருள் மாறாமல், ஒலிப்பும் பெரும்பாலும் மாறாமல் அவர்களுக்கும் பழக்கத்திலுள்ள ஆங்கில, வடசொல்லாக அவை இருந்தால் எப்படியாவது சமாளித்துவிடுவார்கள். அதாவது 'லட்டு' 'பலூன்' போன்றவை ஊகம் செய்யக் கூடியவை. 'வட்டி'யிலிருப்பது [ṭṭ]யா? [ḍḍ]யா? என்பதை எந்த விதியால் விளக்குவது? தமிழல்லாத பிறமொழிச் சொற்களின் ஒலிப்பை முடிந்தவரை அனுமதிக்கிறோம் என்று மட்டும்தான் சொல்லமுடிகிறது.

மற்றொரு இடர் தரும் இடம்: மெய்களில் இணை யொலிகள் (consonant clusters). தமிழில் வடமொழி, ஆங்கிலம் போன்றவற்றில் - ஒலிப்பில் மட்டும் இடம்பெற்று, வடிவத்தில் தமிழ்ப் படுத்தப்பட்ட சில சொற்களைக் காணலாம்.

	நாம் ஒலிப்பது	மாணவர் படிப்பது
கிராமம்	[grāmam]	[kirāmam]
வியாபாரி	[vyābāri]	[viyābāri]
இரகசியம்	[rahaśiyam]	[irahaśiyam]

இவற்றை விதிமுறைகள் கொண்டு (Tamil Script and Sound - பக். 50-53) விளக்கலாமே தவிர எவை தமிழல்லாத சொற்கள் என்று கண்டுபிடிக்க அவர்களுக்கு உதவ முடிய வில்லை. கிராம்பு என்பதைக் [grāmbu] என்பதா [krāmbu] என்பதா என்பதைத் தமிழாசிரியர்களேகூடத் தெளிவாகக் கூற முடியவில்லை. தவிரவும் சொல்லின் முதலில் ர, ல, ய ஆகியவற்றுக்கு முன் வரும் இ, உ ஆகியவை விடப்பட வேண்டியவை என்று எளிமைப்படுத்த முடியாது.

இலங்கையை [laṅgay] என்றால் இலந்தையை [landay] என்பார்கள். இரகசியம் [rahaśiyam] ஆவது போல இலவசம் [lavaśam] ஆகும், இரவல் [raval] ஆகும். இதற்காகவாவது, பழந்தமிழ் இலக்கண ஆசிரியர்கள் வடசொற்களை அடையாளமிட்டுக் காட்ட முயன்றது போல இவ்வாறு விடப்பட வேண்டிய ஒலிகளையும் ( ) குறியிட்டுக் காட்டலாம் என்று தோன்றுகிறது - (இ) ராமன். பொதுவாக மாணவர்களின் கேள்விகள்: உயிர்ப்பொலிகள் தமிழிலேயே (மூக்கொலிக்குப் பின்) இருக்கையில், உரசொலிகளுக்கும் குறியீடுகள் இருக்கையில், இருக்கும் வசதியைப் பூட்டி வைத்துவிட்டுப் பழமையைக் காப்பாற்றுவதேன்? இவையின்றிப் பிறமொழிச் சொற்களைக் குலைக்க வேண்டுமா? என்பவை. குறிப்பாகத் தங்கள் பெயரைச் சிதைத்தும் தழுவியும் மாற்றி எழுதுவதை யாரும் ரசிப்பதில்லை. எ.டு. 'மஹுஆ' என்றே [mahua] என்ற பெண் தன் பெயரை எழுதவேண்டுமென்று வற்புறுத்துகிறாள். [prɔbɔl] தன் பெயரை 'ப்ரொபொல்' என்று எழுதலாமே? என்கிறாள்.

தமிழுக்கும் வங்காளிக்கும் பொதுவாகப் புழக்கத்திலிருக்கும் வடசொற்களை ஒரு பட்டியல் போட்டோம். அது தரும் செய்திகள்: ஒலியமைப்பு, பொருள் இரண்டு நிலையிலுமே தமிழர்கள் வடசொற்களை மாற்றியிருப்பதுபோல வங்காளிகளும் தமக்கே உரிய முறையில் மாற்றியிருக்கிறார்கள். எனவே பெரும்பாலும் தமிழாக்கம் செய்யப்பட்ட வடசொற்களை அவர்களால் இனங்காண முடியாது. கண்டாலும் அது அவர்களது தமிழ்ப் பயிற்சிக்கு ஊறு செய்யுமே தவிர உதவி செய்யாது. சில எடுத்துக்காட்டுகள்:

தமிழில் வடசொல்	வங்காளியில் அதன் ஒலிப்பு	பொருள்
பிரச்சினை	[prɔsno]	கேள்வி
முக்கிய	[mukkhɔ]	Chief (தலைமையான)
விவகாரம்	[bɛhɔhar]	behaviour (நடவடிக்கை)
விவஸ்தை	[bɛbɔstha]	arrangement (ஏற்பாடு)
அபராதம்	[ɔpɔradh]	fault, offence (தவறு)
விபத்து	[bipɔd]	accident

மேற்குறிப்பிட்ட தமிழ்ச் சொற்கள் வடசொற்கள் என்று அறிந்தால் அவர்களால் இரட்டை உச்சரிப்புப் பழகுவது எளிதன்று.

அடுத்தபடி, தமிழின் சொல்லிலக்கணத்தில் ஆசிரியர், மாணவர் இருவரையுமே அலைக்கழிக்கும் பகுதி - தமிழ் வினையடிகள் - கால இடைநிலைகளை ஏற்கும் முறை. குழந்தையாக முதல் மொழியைக் கற்கும்போது தெரியாமல் எத்தகைய இலக்கணத்தையும் இயல்பாகத் தன்வயப் படுத்திவிடும் ஒருவர், வளர்ந்த பிறகு இரண்டாம் மொழியைக் கற்கையில் ஒவ்வோர் அடியிலும் தெளிவான, திடமான, நம்பகமான விதிகளை, ஒழுங்கைத் தேடி அவற்றின் உதவியால் அம்மொழியைக் கற்கப் பார்க்கிறார். இந்தத் தேடலே இலக்கணம் பிறக்கத் தூண்டுகோல்.

இந்த நோக்கில் தமிழின் வினையடிகளை ஓர் ஒழுங்கான வகைப்பாட்டிற்குள் கொண்டுவரும் முயற்சியை Beschi (*1948*) முதல், Renius, Graul, Pope மற்றும் Arden ஆகிய பலர் செய்தாகிவிட்டது. தற்கால மொழியியல் அறிஞர் களிடையேயும் Lisker (*1951*) முதல், கோதண்டராமன், அகஸ்தியலிங்கம், பாலசுப்பிரமணியம், குமாரசாமி ராஜா, Schiffman (*1979*) ஆகியோர் செய்துள்ளனர். இவர்களுள் குமாரசுவாமி ராஜாவின் பகுப்பும் (*1963*) இல் ரங்கநாயகியின் (இக்கட்டுரையாளர்) வகைப்பாடும் Graulஇன் முறையைத் தழுவியவை. *1986*இல் ராஜாராமும் Graulஇன் அடிப்படையில், தம் 'Pedagogical Dictionary'யை வெளியிட்டுள்ளார்.

ஏறத்தாழ *2500* ஆண்டுகளின் சொற்களஞ்சியம் தன் இலக்கண மரபுகளை மாற்றாமல் சுமந்துகொண்டு

வந்திருப்பதால் இன்றைய நிலையில் 'வினையடி - கால இடை நிலை' அமைப்பை எளிதான வகைப்பாட்டிற்குள் அடக்க முடியவில்லை என்பதை அனைவருமே உணர்கிறார்கள். மொழியியற்கலை நுட்பத்தின் அடிப்படையில் திறமையாகச் சுருக்கமான வாய்பாடுகளுக்குள் அடைத்துவிட்டாலும், 'மொழி பயிற்றுவித்தல்' என்ற முயற்சியில் இறங்கும்போது அவ்வாய்பாடுகளை விரித்து விளக்கம் தரும் முறைகள் மொழியைக் கற்கப் புகும் (மொழியியல் அறியாத) மாணவர்க்குப் பயன்படா. எனவே Graul செய்தபடி இறந்த கால இடைநிலைகளின் அடிப்படையில் வினையடிகளைத் தனித்தனிப் பிரிவுகளாகத் திரட்ட மட்டுமே முடிகிறது. அவற்றின் உட்பிரிவுகளை வேண்டுமானால் தமக்குள் ஏதேனும் ஒலிவரையறைக்குட்பட்டனவாக அமைக்கலாம். இந்த முறையில், இக்கட்டுரையாளர் தம் இன்றைய தமிழ் இலக்கிய வழக்கும் எழுத்து வழக்குமென்ற நூலில் (1984) தரப்பட்டுள்ள வினையடி வகைப்பாட்டைப் பயன்படுத்திக் கல்கத்தா பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் மொழிப் பயிற்சித் திட்டங்களை அமைப்பதோடு அண்மையில் ஒரு Padagogical dictionaryயையும் வெளியிட்டுள்ளார். (திரு. ராஜாராம் அவர்களது நூல் ஏ.சி. செட்டியாரின் ஆங்கில-தமிழ் அகராதியின் அடிப்படையில் அமைந்து, தமிழ்ச் சொற்களை ஒலிப்பு வடிவத்தில் தரும் ஆங்கில-தமிழ் அகராதி. கட்டுரையாளருடையது தமிழ்-ஆங்கில அகராதி. தமிழ்ச் சொற்கள் தமிழில் தரப்பட்டுப் பொருள் ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ளது)

இத்தகைய அகராதியை உருவாக்கக் காரணம், தமிழில் வினையடிகளை ஈற்றொலியின் அடிப்படையிலோ, அசை அமைப்படிப்படையிலோ, தன்வினை-பிறவினை அடிப்படையிலோ பிரித்துப் படித்துக் கற்பித்தல் இயலாது. நிகழ்கால, எதிர்கால இடைநிலைகள் வினையடிகளுடன் சேரும் வகையில் ஓர் ஒழுங்கு இருந்தாலும் இறந்தகால இடைநிலைகளையும் கருத்தில் வைக்கும்போது எளிமையான எந்தப் பகுப்பும் இயலாது.

எனவே இறந்தகால இடைநிலைகளின் அடிப்படையில், முக்கால இடைநிலைகளின் தேர்வையும் கருத்தில் கொண்டால் கீழ்க்காணும் பிரிவுகள் தேறுகின்றன.

	இறந்தகால இடைநிலை	நிகழ்கால இடைநிலை	எதிர்கால இடைநிலை உயர்திணை	எதிர்கால இடைநிலை அஃறிணை
I.	[d~d~tt] a,b,c. (a.செய், b. உண், c.சுடு)	[hIR]/[hINDR]	[v~b]	∞ Ø
II.	[dr ~ nd] a, b (a.செல், b.உடை)	[hIR]/[hINDR]	[v]	∞ Ø
III.	[nd] (இரு, நட முதலியன)	[KKIR]/[KINDR]	[p]	∞ Ø
IV.	[i] - அஃறிணை விகுதிகளின்முன் 1. (தூங்கு, ஓடு முதலியன) 2. [iN] - உயர்திணை விகுதிகளின்முன்	[hIR]/[hINDR]	[v]	∞ Ø
V.	[tt] (சிரி, உடை)	[KKIR]/[KKINDR]	[pp]	∞ Ø
VI.	[TR] (கல், ஏல்)	[KIR]/[KINDR]	[p]	∞ Ø

VII. -- விதிவிலக்குகள் - 15 வினையடிகள் (இறந்தகால இடைநிலை வேறுபட்டோ, முக்கால இடைநிலைக் கூட்டமைப்பிலோ, உருபொலியனியல் (Morpho-phonemic) விதிகளிலோ மாற்றங்காட்டுவனவாகவோ இருப்பவை).

மொழியியல் இலக்கணப்படி மேற்கூறிய 10 இறந்த கால இடைநிலைகளை மூன்றாகக்கூடக் குறைக்கலாம்; நிகழ் கால உருபன்களை /KIR/, /hIR/; /KINDR/, /hINDR/ என்று குறைக்கலாம்; எதிர்காலத்தில் [pp, p] /p/ என்று ஒன்றாகும். ஆனால் இவ்வளவு சிக்கலான இலக்கணப் பகுதியை, வாய்பாடுகளைக் கொடுத்து, அவற்றை விரிக்கச் செய்து, அதற்கான கூடுதல் விதிகளையும் கற்கவைத்து, உருபொலி யனியல் விதிகளையும் பெருக்கிக் கற்றுக் கொடுப்பது -

அதுவும் இலக்கணம் என்ற பெயரே நடுக்கம் தரும் - மொழியியலறியாத சராசரி மாணவர்க்கு, பிற மொழியாளருக்குக் கற்றுக்கொடுப்பது இயலாது. தமிழ் மிகவும் கடினமான மொழி என்று ஏற்கெனவே அவர்கள் பரவலாக அஞ்சுவதையே உறுதிப்படுத்தும்.

தமிழின் வினையடிகளை வகைப்படுத்த இவ்வளவு முயற்சிக்குப் பின்னும் நாம் வினை-கால இடைநிலை உறவின் சூத்திரத்தைத் திறவுகோலை, மாணவர்களுக்குத் தரவில்லை. ஒரு குறிப்பிட்ட வினையடி எந்த இடைநிலையைத் தேர்ந்தெடுக்குமென்பதை அறிய அப்பிரிவின் எண் தெரிய வேண்டும். அவ்வினையடியை எந்தப் பிரிவில் தேடவேண்டுமென்பதற்கே அதன் (1) இறந்தகால இடைநிலையும் (2) கால இடைநிலைக் கூட்டணியும் தெரிந்திருக்க வேண்டும். எனவே மாணவன் தன் முயற்சியால், இந்த அட்டவணையால் தன் வினைக்குரிய கால இடைநிலைகளை அறியமுடியாது.

எனவே பிறமொழி மாணவர்க்கு நம் கடமை, நாம் செய்யக்கூடிய உதவி, தேவையான அத்தனை வினையடிகளுக்கும் வேண்டிய செய்திகளை அகராதி வடிவில் தந்து விடுவதுதான். அந்தப் பணியைத்தான் எங்கள் தமிழ்த்துறை செய்து, பயனை, அதற்குக் கிடைக்கப் போகும் வரவேற்பை எதிர்நோக்கிக் காத்திருக்கிறது.

எனவே இவ்வகராதியில் வினையடிகள் Ia, IIb, போன்று குறியிடப்பட்டுள்ளன. I பெரும்பிரிவைக் குறிக்கும். அருகில் a,b,c, போன்றவை அதற்குள் உட்பிரிவுகளைக் குறிப்பன.

Ia.வைச் சேர்ந்தவை முறையே [d], [hIR/hINDR], [v] ஆகிய இறப்பு, நிகழ், எதிர்கால இடைநிலைகளை ஏற்கும். (அஃறிணை விகுதிகள் எதிர்காலத்தில் காலவிகுதியேற்கா).

Ia. இவை *[ய்]* அல்லது *[ழு]*வில் முடியும் வினையடிகள்.

எ.டு. செய் - [śey-d-āN] உழு [uḻu-d-āN]
[śey-hIR-āN] அல்லது [śeyhINDR-āN]
[śey-v-āN], [sey(y)-um]

II. பெரும்பிரிவிலும் [ய்]இல் முடியும் வினையடிகள் இருக்கின்றன. ஆனால் அவை [nd - hIR/hINDR/-v] ஆகியவற்றை ஏற்பவை.

எனவே இவ்வகராதியில் ஏறத்தாழ 2000 தனிவினையடிகளும், கூட்டுவினையடிகளும், கலவை வினையடிகளும் (Simple, Compound & Complex Verb bases) முதல் வினையாகவும், துணை வினையாகவும் (Main and auxilary verb) இடம்பெற்றுள்ளன.

பிரிவுகளின் I a, II b, VI போன்ற குறியீட்டுக்கு நேராக அட்டவணைகளில் விளக்கமான செய்தியைத் தந்திருந்தாலும் மாணவர்களின் பொறுமையைச் சோதிக்காமல் அவர்கள் இவ்வட்டவணையைப் பார்க்காமலும் அகராதியிலிருந்தே உடனடியாகக் கால இடைநிலைகளைப் பெற எளிய குறுக்கு வழியும் தந்திருக்கிறோம். அதாவது, இவ்வகராதியில் ஒவ்வொரு வினையடியின் பின்னும் அதன் செயவென்னெச்சம் (Infinitive), இறந்தகால வினையெச்சம் (Past Participle), எதிர்கால இடைநிலை அமைந்த தொழிற்பெயர் (Verbal Noun) ஆகிய மூன்றும் தரப்பட்டுள்ளன.

செய்	Ia.	செய்ய, செய்து, செய்வது
மெல்	IIa	மெல்ல, மென்று, மெல்வது
இரு	III	இருக்க, இருந்து, இருப்பது
ஓடு	IV	ஓட, ஓடி, ஓடுவது
விரி	V	விரிக்க, விரித்து, விரிப்பது
கல்	VI	கற்க, கற்று, கற்பது
வா	VII	வர, வந்து, வருவது
போ	VII	போக, போய், போவது

இவற்றில் வினையெச்சத்திலிருந்து* இறந்தகால இடைநிலையும், தொழிற்பெயரிலிருந்து எதிர்கால இடைநிலையும் கிடைக்கும். செயவென்னெச்சத்திலிருந்து நிகழ்கால இடைநிலையை ஊகம் செய்யலாம் அல்லது எதிர்கால இடைநிலையோடு நிகழ்கால உருபனுக்குள்ள ஒழுங்குமுறையினால் நிகழ்கால உருபனை அறியலாம்.

* போ, ஆ, சொல் என்ற மூன்று வினையடிகளுக்கு மட்டும் கிடைக்காது. வினையெச்சத்திற்குப் பதிலாக இறந்தகாலப் பெயரெச்சத்தைத் தந்திருந்தால் இந்தக் குறையும் தீரும் (போன, ஆன, சொன்ன). ஆனால் வினையெச்சமே இன்னும் அதிகமான வினை வடிவங்களுக்குத் தளம் அமைப்பதால் அதையே தந்துள்ளோம்.

எதிர்கால உருபன்		நிகழ்கால உருபன்
[b]	ஆனால்→	[hIR] / [hINDR]
[v]	”	[hIR] / [hINDR]
[pp]	”	[KKIR] / [KKINDR]
[p]	”	[KIR] / [KINDR]

எனவே இம்மூன்றும் Ready Reckoner ஆக - உடனடிச் செய்தி தர முடிவதால் மாணவர்கள் பயன்பெறக் கூடும்.

இவ்வகராதியின் முதற்பகுதியான அறிமுகம் தமிழ் வினைச் சொற்களின் இலக்கணச் செய்திகளையும் பயில்வோர் தேவையையும் கருத்தில் கொண்டு ஏறத்தாழ ஒரு Pedagogical Grammar என்ற அளவில் தருகிறது.

இங்ஙனம் பிறமொழியாளர்க்குரிய தேவைகளாகத் தமிழ்த்துறை (1) Tamil - Script and Sound (2) A Pedagogical Dictionary of Tamil Verbs என்ற இந்த இரு நூல்களைத் தவிர (3) Learn Tamil என்ற (Reader in Written Tamil) சிறிய நூலையும் வெளியிடும் தருவாயில் உள்ளது. தமிழ் - ஆங்கிலம் - வங்காளி மொழியில் ஒரு மும்மொழி அகராதி - Learners' Dictionary உருப்பெறுகிறது.

லட்சக் கணக்கில் கல்கத்தாவிலும் பிற வட இந்திய மாநிலங்களிலும் இருக்கும் தமிழர் இல்லங்களில் அவர்கள் குழந்தைகளுக்குத் தமிழ் பேச மட்டுமே தெரியும். எழுதப் படிக்கப் பள்ளிகளில் வசதியோ, நேரமோ இல்லாமல் இருக்கலாம். தூண்டலும் இல்லாதபோது தமிழ்க்கல்விக்கே இடமில்லை. அத்தகையவர்கள், வீட்டிலேயே எழுத்துத் தமிழ் கற்க 'வீடு தேடிவரும் தமிழ்' என்ற திட்டத்தில் படங்கள் வழியாக, அவர்கள் அறிந்த இந்தி வரிவடிவத்தையும் தந்து தமிழ் எழுத்துகளை அறிமுகப்படுத்திப் பிறகு சிறு சொற்றொடர்களைப் பழக்கப்படுத்தினோம். தமிழ் தாய்மொழி; வீட்டில் பேசும் சூழலும் உள்ளதால் தெரிந்த பேச்சுத் தமிழின் இலக்கணத்தைத் தெரியாத எழுத்துத் தமிழின் இலக்கணத்தோடு தொடர்புபடுத்துவதே இதன் குறிக்கோள். ஆங்கில, இந்திப் பயிற்சி நூல்களில் (work books) உள்ளது போலப் பயிற்சியும் தந்து தங்களைச் சோதித்துக் கொள்ள வழியும் தரப்பட்டுள்ளது. மிகக் குறுகிய காலத்தில் இக்கல்வி முடியவேண்டுமென்ற நோக்கத்தில் சொற்றொடர்களை எளிமையாக அமைத்துப் பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்குமிடையில் 'மாற்ற விதி'களிலும் (Conversion Rules) பயிற்சி தரப்படுகிறது.

நூலாக அச்சிடப்பட்டால் பெற்றோரும் அதன் வழியாகத் தம் குழந்தைகளைத் தமிழ் கற்க ஊக்குவிக்க முடியும். ஆனால் படங்களால் பொருட்செலவு மிகுதியுமாகு மென்பதால் இந்நூல் கையேட்டுப் படிவமாகவே உள்ளது. தமிழ் வளர்ச்சிக் கழகம் அல்லது வேறு நிறுவனங்கள் உதவி செய்தால் அச்சிடலாம். கடல் கடந்த நாடுகளிலும் தமிழ்க் குழந்தைகள் பயன்பெற முடியும். ஆங்கிலமும் இந்தியும் இணைப்பு மொழிகளாக உதவிசெய்யும்.

இவை தவிரக் கையெழுத்துப் படிகளாக இருப்பவை

(1) தமிழ் - வடமொழி - வங்கமொழிப் பொதுச் சொற்கள் பட்டியல் (ஒலி, பொருள் இரண்டிலும் ஒற்றுமை வேற்றுமை காட்டுபவை)

(2) பேச்சுத் தமிழ்ப் பாடங்கள் (ஒலிப்பதிவு நாடாவில் பதியத் திட்டம்)

(3) A Dictionary of Spoken Tamil (Tamil - Hindi - Bengali) (உருவாகிறது). இங்குப் பல்கலைக் கழக மொழியியல் துறையின் M.A. வகுப்பில் 'திராவிட மொழி ஒப்பியல்' பாடத்திட்டத்திலும் தமிழ் மொழியறிவு அறிமுக நிலையில் இடம்பெற்றுள்ளது. வரலாற்றுத் துறை யிலும் ஒரு தாளுக்குரிய பாடமாகத் தமிழை அறிமுகப்படுத்த ஆர்வம் எழுந்துள்ளது. M.A. in Tamil Studies என்ற பாடத் திட்டத்தில் தமிழரல்லாதோரும் தமிழ் பற்றிய அறிவு பெறும் வழியில், 'இந்திய இலக்கிய'ப் பார்வையில் தமிழின் பங்களிப்பு உரிய இடம் பெறக் கருத்துகளை முன்வைத்திருக்கிறோம்.

தமிழ்த் துறையின் பிற பணிகள்

இத்தமிழ்த் துறையில் மொழிப் பயிற்சிக்கான பணிகள் தவிரத் தமிழ் இலக்கியத்தை வங்க மக்களுக்கு அறிமுகம் செய்யவும், வங்க இலக்கியத்திலிருந்து தமிழுக்கு வளம் சேர்க்கவும் (1) மொழிபெயர்ப்பு, (2) ஒப்பாய்வு ஆகிய இரண்டு நிலையிலும் பணிகள் நடைபெறுகின்றன. (3) இவை தவிரச் சமயம், பண்பாடு என்ற நிலையிலும் தமிழக, வங்க உறவுகள் பற்றிய ஆய்வுகளும் இந்திய மொழிகளின் இலக்கிய இலக்கண வரலாற்றில் தமிழின் பங்களிப்பு, இடம் ஆகியன விளங்குமாறு, இந்தியப் பொதுமைக் கூறுகள் பற்றிய ஆய்வுகளும் ஒப்பாய்வின் வழி மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ்த்துறை ஆசிரியர்களின் நூல்கள்

1) இன்றைய தமிழ் - இலக்கிய வழக்கும் பேச்சு வழக்கும் (இலக்கண ஒப்பாய்வு) - டாக்டர் ரங்கநாயகி மகாபாத்ரா, 1984.

2) Tamilnadu-Bengal Cultural Relations, கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு - வெளியிட்டோர் - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1987.

3) வங்கச் சிறுகதை மணிகள் - டாக்டர் பி. பானுமதி, வங்காளியிலிருந்து தமிழாக்கம், 1985.

4) Tamil Script and Sound - தமிழ்த்துறை, 1992.

5) பருவம் தப்பிய வசந்தம் - டாக்டர் பி. பானுமதி, வங்காளியிலிருந்து தமிழாக்கம் (சாகித்ய அகாதெமி), 1998.

6) Selected Poems from Sangam Literature, வங்கமொழி பெயர்ப்பு - டாக்டர் சுக்லா சக்ரவரத்தி, 1994.

7) மீதி சரித்திரம் - டாக்டர் பி. பானுமதி - பாதல் சர்க்காரின் வங்கமொழி நாடகத்தின் தமிழாக்கம், சாகித்ய அகாதெமி பரிசு பெற்றது (க்ரியா வெளியீடு).

8) Revival of the Tamil Vaishnava Bhakti Movement in North India - Dr. Ranganayaki Mahapatra, 1995.

(வைணவப் பக்தி இலக்கிய மறுமலர்ச்சி - வட இந்தியரால் ஆழ்வார் இலக்கியங்கள் பிற இந்திய மொழிகளில் மொழிபெயர்ப்பு - இந்திய ஒருமைப்பாடு)

9) வங்க நாவல்களின் தமிழ் மொழிபெயர்ப்புகள் ஒரு திறனாய்வு - டாக்டர் பி. பானுமதி (அச்சில்).

10) A Pedagogical Dictionary of Tamil Verbs - (டாக்டர் ரங்கநாயகி மகாபாத்ரா, டாக்டர் பானுமதி, டாக்டர் சுக்லா சக்ரவர்த்தி), 1996.

11) தமிழ் இலக்கிய வரலாறு - வங்க மொழிபெயர்ப்பு டாக்டர் சுக்லா சக்ரவர்த்தி (அச்சேறவிருப்பது).

12) திருக்குறள் ஆய்வுகள் - முதல் தொகுதி (அச்சில்) (வடமொழி. பாலி அறநூல்களோடு ஒப்பாய்வு).

13) தமிழ் மொழி கற்க (A Reader in Tamil) - டாக்டர் ரங்கநாயகி மகாபாத்ரா (அச்சில்).

இவை தவிரப் பாரதி, பாரதிதாசன் கவிதைகள், கட்டுரைகள் ஆகிய பல, வங்கமொழியில், வங்காளி இதழ்களில் வெளிவந்துள்ளன. பாரதிக்கெனத் தனிச் சிறப்பிதழே வெளி வந்தது.

திருக்குறளை இந்திய இலக்கியப் பார்வையில் பிறமொழி நீதி நூல்களோடும் சமயத் தத்துவங்களோடும் ஒப்பிட்டுக் கருத்தரங்குகள் நடைபெற்றன. வங்கமொழித் துறையில் M.Phil., பாடத் திட்டத்தில், பாரதிதாசனார் - வங்கப் புரட்சிக்கவி நஜ்ருல் இஸ்லாம் ஒப்பாய்வுகள் இடம் பெறுகின்றன.

பௌத்த நிகாயங்களோடு புறநானூறு, பாலிமொழி இலக்கியங்களில் அறம் (தம்மம்) - திருக்குறளோடு ஒப்பீடு, பிராகிருத காதாசப்தசதியோடு சங்க இலக்கியக் காதல், சமண நூலான அனுசாசனாவளி (ஜயாசாரியரின் நூல்) யோடு திருக்குறளின் பொருளடக்கம் ஆகிய ஒப்பாய்வுகள் நிகழ்த்தப் பெற்றுத் தமிழகக் கருத்தரங்கு மலர்களில் வெளிவந்துள்ளன. பாலி - தமிழ் சொற்பட்டியல் உருவாகிறது.

திருக்குறளை இந்திய நீதி நூல்களோடு ஒப்பிட்டு ஆழ்வாய்வு நடத்தப் பல்கலைக் கழக நல்கைக் குழுவின் (UGC) ஒப்புதல் கிடைத்துள்ளது.

பிறநாடுகளில்

அமெரிக்காவில் தமிழ்க்கல்வி: இன்றைய நிலை

முனைவர் ஜெ. நீதிவாணன்

சமுதாயப் படிநிலைகளின் எந்த நிலையைச் சார்ந்தவராக இருப்பினும் தாயகத்தை விட்டுச். சென்று வெளிநாடுகளில் குடியேறுவோரது அடிப்படைக் கவலையெல்லாம் தம்முடைய பொருளாதார நிலையை மேம்படச் செய்வதுதான். தாய்மொழியைப் பேணுதல், தாயகப் பண்பாட்டு வழக்கங்களைப் பின்பற்றுதல் என்பனவெல்லாம் இதன் அடிப்படையிலேயே நிகழ்கின்றன. வெளிநாடுகளில் சென்று குடியேறிய தமிழர்கள் பெரும்பாலும் தம் தாய்மொழியை இழந்து அந்நாட்டு மொழியினை மேற்கொள்வதென்பது கண்கூடாகக் காணப்படுகின்ற நிலை. 'எவ்வளவு காலத்தில் இழக்கின்றனர்' என்பதில்தான் வேறுபாடு காணப்படுகின்றதே தவிர 'இழப்பது' என்ற முடிவில் வேறுபாடில்லை. அமெரிக்க அய்க்கிய நாடுகளில்

---

* இக்கட்டுரை பெரிதும் கட்டுரையாளரது அனுபவம், அண்மையில் அமெரிக்காவில் மேற்கொண்ட சிறிய ஆய்வு, அமெரிக்காவில் தொண்டாற்றும் பொதுநிறுவனங்கள் வெளியிட்டுள்ள கைக் குறிப்புகள், அமெரிக்கத் தமிழர்கள் தனிப்பட்ட முறையில் தெரிவித்த கருத்துகள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே எழுதப்பட்டுள்ளது.

தமிழர்கள் குடியேறத் தொடங்கியது அண்மைக் காலத்தில் தான். இப்போது பள்ளிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் படிக்கின்ற இளந்தமிழர்கள் இரண்டு அல்லது மூன்றாவது தலைமுறையைச் சார்ந்தவர்கள். தம் பெற்றோர் முதல் சமூகத்தில் உள்ள பிற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் அவர்களுடன் ஆங்கிலத்திலேயே பேசுபவர்கள். இவர்களது ஆங்கில மொழியாற்றல் பிற ஆங்கிலேயருடன் ஒத்ததாகும்.

அமெரிக்க அய்க்கிய நாடுகள் (அமெரிக்கா) பல மொழி பேசப்படும், பல்வேறு இனத்தவரது நாடு; ஒரு வழியில் அது யாருக்கும் சொந்தமானதல்ல; (அதன் மூல உரிமையாளர்கள் இன்று மிகக் குறைந்த எண்ணிக்கை அளவில், தம்முடைய பண்பாடு, மொழி ஆகியவற்றைப் பெரிதும் இழந்து, அரசியல் செல்வாக்கு எதுவுமின்றி ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றனர்); பல்வேறுபட்ட மொழிக்குடும்பங்களைச் சார்ந்த மொழிகள் ஒரு சிலராலாவது பேசப்படும் நாடு. பல்வேறு மொழிகளைக் கற்பதற்குரிய வாய்ப்பு கல்விக்கூடங்களில் கிடைக்கும் சூழலும் அங்குண்டு. ஒரு மொழியைக் கற்பது, அதனைப் பற்றிக் கற்பது, அதன் வழியே கற்பது எனப் பல்வேறு நிலைகளில் மொழிக்கல்வி நிகழ முடியுமாயினும் 'மொழிவழிக் கல்வி' எனும் நிலையில் ஆங்கிலமே அங்குக் கல்வியுலகில் ஆட்சி செய்கிறது. பிறமொழிக் கல்வி, முதல் இரு நிலைகளிலேயே காணப் படுகிறது. அத்தகைய கல்வி, கல்விக்கூடங்களில் மட்டுமன்றி, தனிப்பட்டோர் அமைப்புக்களின் மூலமும் கிடைக்கின்றது. அப்படிக் கற்கும் மொழி, தாய்மொழியாகவோ பிற மொழியாகவோ, 'இனக்குறியீடு' என்ற காரணத்தினாலோ, சமுதாயத் தேவைகளின் காரணமாகவோ, விருப்பத்தின் பேரிலோ, கட்டாயத்தின் பேரிலோ கற்கப்படலாம். இந்தியாவில் ஆங்கிலக் கல்வி சமுதாயத் தேவையின் காரணமாக முதலில் கட்டாயத்தின் பேரில் கற்கப்பட்டு இன்று அதே காரணத்திற்காக விருப்பத்தின் பேரில் கற்கப்படுவதை அறிவோம். அறிவு வளர்ச்சி, இனக்குழுவின் ஒற்றுமையைப் பேண வேண்டும் என்ற வேட்கை, பிற இனத்தவரைப் புரிந்துகொள்ள வேண்டுமென்ற அவா முதலானவை மொழிக்கல்வியின் நோக்கத்திற்குக் காரணமாகின்றன. இவ்வடிப்படையிலேயே, குடிபெயர்ந்த தமிழரது தாய்மொழிப் பேணல், தாய்மொழிக் கல்வி ஆகியவற்றைப் புரிந்துகொள்ள முடியும்.

அமெரிக்காவில் தமிழ்க்கல்வி மற்றொரு கோணத்திலிருந்தும் அணுகப்படவேண்டும். தமிழர்களது தாய்மொழிக் கல்வி என்பது மட்டுமன்றி, ஆசியப் பண்பாடு, அரசியல், வரலாறு ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்டு இவற்றைத் தனிப் புலமாக வளர்த்துக்கொண்ட பல மேலை நாட்டு அமெரிக்க அறிஞர்கள் கொண்ட தமிழ்க்கல்வி, அதன் நிலை ஆகியவற்றையும் நாம் சுட்டிக்காட்ட வேண்டும். அய்ரோப்பிய நாடுகளில் இந்தியப்படிப்பியல் என்பது பெரிதும் சமஸ்கிருத மொழியையே சுற்றி வளர்ந்தது. அமெரிக்காவில் நிலப்பரப்பின் பாகுபாட்டின் அடிப்படையில் ஆசியப்படிப்பியல் வளர்ந்தது. தூர கிழக்காசியா, தென்னாசியா, மத்திய ஆசியா போன்ற நிலப் பாகுபாட்டு அடிப்படையில் ஆசியப்படிப்பியல் வளர்ந்தது. தென்னாசியப் படிப்பியல் இந்திய மொழிகளில் கவனம் செலுத்தியது. இந்நிலப்பரப்புக்களின் வரலாறு, அரசியல், பண்பாடு ஆகியவற்றைப் புரிந்துகொள்ள மொழியறிவு அவசியம் தேவை என்பதை இத்துறைகளைச் சார்ந்த அமெரிக்க அறிஞர்கள் பெரிதும் உணர்ந்தனர். ஒரு வரலாற்றறிஞர் இந்திய வரலாற்றின் ஏதாவது ஒரு நிகழ்ச்சியைப் பற்றி ஆய்வு செய்ய விரும்பினாலும் முதலில் அந்நிகழ்ச்சி நடைபெற்ற வட்டாரத்தின் மொழியைக் கற்கவேண்டியவரானார். இத்தகைய சூழலில், தமிழ் மொழியானது அமெரிக்காவில் தாய்மொழியாக மட்டுமின்றிப் பிறமொழியாகவும் கற்கப்படலாயிற்று.

ஆசிய மொழிகளைப் பெரிதும் கற்கும் போக்கு அமெரிக்கர்களிடையே வளர்ந்த காலம் ஏறக்குறைய வியட்நாம் போர் தொடங்கிய காலம் எனலாம். ஆசியாவில் அமெரிக்கர்களது ஈடுபாடு உச்சகட்டத்தை எட்டிய காலம் அது. எனவே ஆசிய மொழிகளைக் கற்கவேண்டிய தேவை வளர்ந்ததில் வியப்பில்லை. ஆசியப் படிப்புத்துறைகளுக்கு அரசாங்கம் பெருமளவில் நிதியுதவி வழங்கியது. இத்துறைகள் பல மாணவர்களை ஈர்த்தன. தமிழ் மொழிக்கல்வி கலிபோர்னியா, சிக்காகோ, பென்சில்வேனியா போன்ற புகழ்பெற்ற பல்கலைக் கழகங்களில் வழங்கப்பட்டது. தொடக்க காலங்களில் இவற்றில் பெரும்பாலும் அமெரிக்க மாணவர்களே சேர்ந்தனர். காலப்போக்கில் அமெரிக்காவில் குடியேறிய ஆசியர்கள் எண்ணிக்கை சிறிது சிறிதாகக் கூடத் தொடங்கியது. தமிழர்கள் இந்தியா, இலங்கை, மலேசியா

போன்ற நாடுகளிலிருந்து குடியேறினர். முதல் தலைமுறையினர் தம் தாய்நாடுகளில் உயர்கல்வியை முடித்துவிட்டு அமெரிக்காவில் பெரும்பதவிகளை நாடிச் சென்றனர். தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் புலமை பெற்றிருந்த அவர்கள் அமெரிக்காவில் கல்விக்கூடங்களுக்குச் சென்று தமிழ்க் கல்வி பயில வேண்டிய நிலையிலில்லை. இக்கால கட்டத்தில் தமிழ்க்கல்வி அமெரிக்க மாணவர்களின் பிறமொழிக் கல்வியாகவே விளங்கியது.

அமெரிக்கத் தமிழர்களின் இரண்டாம் தலைமுறை அமெரிக்கக் கல்விக்கூடங்களில் தமிழ் வகுப்புக்களின் மாணவர் தன்மையில் மாறுதலை ஏற்படுத்தியதெனலாம். இத் தலைமுறையினர் பெரும்பாலும் தம்முடைய மிக இளம் வயதில் தாயகத்திலிருந்து அமெரிக்காவிற்குத் தம்முடைய பெற்றோரைச் சென்றடைந்தவர்கள்; அல்லது அவர்களுடன் மிகக் குறைந்த வயதில் சென்றவர்கள். இவர்கள் பல்கலைக் கழகங்களில் சேரும் வயதில் தமிழ் மொழி வகுப்பு சிலரைக் கவர்ந்தது. இந்தியாவைப் போலன்றி, பெரும்பாலும் அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள் பொதுவாகவே மொழிக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதனால் ஏதாவதொரு மொழியை மாணவர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் படித்தாக வேண்டுமென்னும் கட்டாயம் அங்கிருப்பதனால், இரண்டாம் தலைமுறைத் தமிழர்கள் சிலர் தமிழ் வகுப்புக்களில் சேர்ந்தனர். முழுக்க முழுக்க அமெரிக்க மாணவர்களே இருந்த வகுப்பறைகளில் சில தமிழர்களும் காணப்படலாயினர். 1972இல் அமெரிக்காவில் ஊஸ்டர் கல்லூரியில் இக்கட்டுரையாளர் தமிழ் கற்பித்தபோது முழுக்க முழுக்க அமெரிக்க மாணவர்களே வகுப்பில் இருக்க, 1991-93இல் பென்சில்வேனியாவில் தமிழ் கற்பித்தபோது முக்கால் பங்கிற்கு மேற்பட்ட மாணவர்கள் தமிழர்களாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்றாம் தலைமுறைத் தமிழர்கள் அமெரிக்காவிலேயே பிறந்தவர்கள். முந்தைய தலைமுறையினர் அமெரிக்கா சென்றபின் அந்நாட்டுக் குடியுரிமையையோ, குடியுரிமை பெறுவதற்கான முன்னுரிமையோ பெற்றவர்கள். மூன்றாந்தலைமுறையினர் அங்கேயே பிறந்த முழு உரிமை பெற்ற அமெரிக்கக் குடிமக்கள். இவர்களுடைய வளர்ப்பு முறைகளும், பண்பாட்டு உணர்வுகளும், முழுக்க முழுக்கப்

பிற அமெரிக்கர்களைப் போன்றதே. இவர்களுடைய தாயகம் அமெரிக்காவே. இந்தியாவோ, இலங்கையோ, மலேசியாவோ இவர்களைப் பொறுத்த வரையில் மூதாதையர் நாடுகள் தாம்; விடுமுறைக்காலங்களில் பெற்றோர்களின் வற்புறுத் தலுக்காகச் சென்று திரும்பும் இடங்கள். இவர்களில் சிலரும் இன்று தமிழ் வகுப்புக்களில் சேருகின்றனர். இதற்கு முக்கியமான காரணங்களாக இரண்டைச் சுட்டலாம். தமிழ் வகுப்பில் சேர்ந்தால் சற்று எளிதாக நல்ல மதிப்பெண்கள் பெறலாம் என்ற நம்பிக்கை ஒன்று (இன்றைய தமிழகப் பள்ளி மாணவர்கள் பிரெஞ்சு மொழியைப் படிப்பதைப் போல). இத்தலைமுறையினரது தாத்தா - பாட்டிமார்கள் தமிழகத்தில் வாழ்கின்றனர். அவர்களுக்குக் கடிதம் எழுதும்போது, அல்லது தொலைபேசியில் பேசும்போது இரண்டொரு தொடர் தமிழில் இருக்குமானால் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள். அதற்குத் தேவையான அளவுக்குத் தமிழறிவு இருந்தால் போதும் என்று எண்ணுவது இரண்டாவது காரணம். தொடக்ககாலத்தில் அமெரிக்க மாணவர்களிடையே காணப்பட்ட உயர் ஆய்வுக்கான மொழி யறிவு என்ற நோக்கம் இன்றைய தமிழ் மாணவர்களிடையே மிகவும் அருகிக் காணப்படும் ஒன்றாகும். அடிப்படையான உரையாடல் தமிழறிவு மட்டுமே முக்கியமான நோக்கமாக இவர்களிடையே காணப்படுகிறது. அடிப்படைத் தமிழ் வகுப்புக்களுக்கு மேல் வழங்கப்படும் மேனிலை இலக்கிய வகுப்புக்களில் ஆண்டுக்கு ஒரு மாணவர் சேர்வதே அரிதாகவுள்ளது.

தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கத் தொடங்கிய அமெரிக்க மாணவர்களுக்காக எழுதப்பட்ட பாட நூல்களே இன்று தமிழ் மாணவர்களுக்கும் பயன்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இவை பெரும்பாலும் உரையாடல் தமிழாற்றலை வளர்ப்பதையே முதல் நோக்கமாகக் கொண்டவை. உரையாடல் தமிழை நன்கு கற்ற பின்னரே தமிழின் பிற ஆற்றல்களைத் தமது தேவைக்குத் தக்கவாறு இம்மாணவர்கள் தொடக்க காலத்தில் கற்றலாயினர். இன்று, பெரிதும் உரையாடல் தமிழோடு பலரும் நின்றுவிடுகின்றனர்.

திராவிட மொழிக் குடும்பத்தைப் புரிந்துகொள்வ தற்குத் தமிழின் இன்றியமையாமை, தமிழின் இலக்கிய வளம். இருபது நூற்றாண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ச்சியாகக் காணப்படும் அரசியல் வரலாறு, திராவிட இயக்கத்தின்

வளர்ச்சி ஆகியவை தொடக்க கால அமெரிக்க மாணவர்களைக் கவர்ந்த அளவிற்கு இன்றைய மூன்றாம் தலைமுறை அமெரிக்கத் தமிழர்களைக் கவரவில்லை; ஒரு இனக்குறியீடு என்ற அளவிலேயே தமிழ் மொழி இவர்களால் உணரப் படுகிறது.

அண்மையில் நிகழ்த்தப்பெற்ற ஓர் ஆய்வு, மூன்றாம் தலைமுறையினர் தமிழ்மொழியை ஏறக்குறைய முற்றிலுமாக இழந்துவிட்டனர் என்பதைத் தெளிவாக்கியுள்ளது. இவர்கள் தமிழ்மொழியைக் கற்பதில் ஆர்வம் காட்டினாலும், அவர்களைப் பொறுத்த அளவில் அது ஒரு இரண்டாம் மொழியைக் கற்பதைப் போன்றதே ஆகும். அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் வலியுறுத்தப்படும் ‘மொழித்தேவை’யை நிறைவு செய்யவே தமிழ் மொழி வகுப்புக்கள் பயன்படுகின்றன. இவ்வகுப்புக்கள் ஒரு இரண்டாம் மொழியைக் கற்பிக்கும் உத்திகளையே அமெரிக்கத் தமிழ் மாணவர்களுக்கும் பின்பற்றுகின்றன. இத்தமிழ் மாணவர்களுக்குத் தாங்கள் கற்கும் மொழி, வீட்டு மொழி அல்லது தாய்மொழி என்ற நிலையிலிருந்து விலகி ஒரு பண்பாட்டு மொழியாகவே இன்று விளங்குகிறது என்ற உண்மை புரியாமலில்லை. இந்த உணர்வு கூட இன்னும் இரண்டு அல்லது மூன்று தலைமுறைகளுக்குப் பின்னர், இன்று இருக்கிற முதலிரண்டு தலைமுறைகளும் மறைந்த பின்னர் அமெரிக்கத் தமிழர்களிடையே காணப்படுமா என்பதைக் காலந்தான் கணிக்க முடியும். அமெரிக்கப் பல்கலைக் கழகங்களின் தமிழ் வகுப்புக்களில் ஆங்கில மாணவர்களது எண்ணிக்கை குறைந்து, அமெரிக்கத் தமிழ் மாணவர்கள் எண்ணிக்கை கூடியுள்ளது என்பதே இன்றைய நிலை.

தமிழ் வகுப்புக்கள் அமெரிக்க மாணவர்களை இன்று அவ்வளவு கவராமல் இருப்பதற்குப் பிற காரணங்களைச் சுட்டலாம். அமெரிக்க அரசாங்கப் போக்கில் ஏற்பட்ட மாறுதல் ஒரு முக்கியமான காரணமாகும். அண்மைக் காலங்களில், தென்னாசியப் படிப்புத்துறைகளுக்கு முன்னர் வழங்கப்பட்டதைப் போன்ற அளவிற்கு நிதியுதவி வழங்கப்படுவதில்லை. அமெரிக்காவின் கவனம் இப்போது பெரிதும் தூர கிழக்காசிய நாடுகளின் மீதே உள்ளது. ஜப்பான், கொரியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சி, அமெரிக்காவை இந்நாடுகளோடு நெருங்கிய உறவு வைத்துக்கொள்ளத் தூண்டியுள்ளது.

பல்கலைக் கழகங்களில் இந்நாட்டு மொழிகளது படிப்பிற்குப் பெரிதும் வரவேற்புக் காணப்படுகிறது. உலகில், பொதுவாக, ஆப்பிரிக்க நாடுகளை அடுத்துத் தென்னாசிய நாடுகளே இன்னும் பொருளாதார வளர்ச்சியில் பின்னடைந்து காணப்படுவது குறிப்பிடத் தக்கது. இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேசம், பர்மா, இலங்கை போன்றவை உள்ளடங்கிய இப்பகுதி ஒரு காலத்தில் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் கீழிருந்தவை என்பதும் குறிப்பிடத் தக்கது. இந்த முன்னாள் ஆங்கிலேய ஆதிக்க நாடுகளின் பொருளாதாரப் பின்னடைவு, அமெரிக்கப் பொருளாதார வளர்ச்சிக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. அது மட்டுமன்றி மற்றொரு முக்கியமான காரணமும் அமெரிக்கர்களால் இப்போது சுட்டப்படுகிறது. இந்த முன்னாள் ஆங்கிலேய ஆதிக்க நாடுகள் அனைத்திலும் ஆங்கிலம் இயல்பாக வழங்குகிறது. இந்நாடுகளோடு எத்தகைய உறவையும் ஆங்கிலம் வழியே வளர்த்துக்கொள்ள முடியும். உள்நாட்டு மொழிகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற கட்டாயம் இங்கில்லை. "நாங்கள் உங்கள் மொழியில் பேசினாலும் நீங்கள் ஆங்கிலத்தில்தான் பதில் கூறுகிறீர்கள்; ஆனால் தூர கிழக்காசிய நாடுகளில் அந்நாட்டு மொழிகளின் துணையின்றி ஒன்றும் செய்ய முடியாது; எனவே இப்போது நாங்கள் அம்மொழிகளைக் கற்பதில் ஆர்வம் காட்டுகிறோம்" என்பது பலரின் வாதமாகும்.

சில அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள் தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களுடன் ஏற்படுத்திக் கொண்ட உறவின் வழியாக ஆண்டுதோறும் குறிப்பிடத்தக்க அமெரிக்க மாணவர்கள் சில தமிழ் மொழித் திட்டங்களில் சேர்ந்து தமிழகத்திற்கு வராமலில்லை. இவர்களது எண்ணிக்கையைப் பார்க்கும்போது அமெரிக்க மாணவர்களது தமிழார்வம் இன்னும் குறையவில்லை என்று எண்ணத் தோன்றுகிறது. இத்திட்டங்களின் மூலம் வரும் மாணவர்கள் தமிழகம் வருமுன் அமெரிக்காவில் சில கோடை வகுப்புக்களில் சேர்ந்து அறிமுக நிலைத் தமிழைக் கற்று, தங்கள் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக ஒரு பருவத்தைத் தமிழகத்தில் கழிக்க வருகின்றனர். இங்கு வந்ததும் தமிழ் மொழியையும், பட்டப்படிப்பில் தங்களது அடிப்படைப் பாடத்தில் ஒரு ஆய்வுத் திட்டத்தையும் மேற்கொள்கின்றனர். அது வரலாறு, சமயம், அரசியல், இசை, நாட்டியம் என்று எதுவாகவும் இருக்கிறது. இவ்வாய்வுத் திட்டம்தான் இம்மாணவர்களது

இன்றியமையாத குறிக்கோளாக உள்ளது. இம்மாணவர்களில் எவ்வளவு பேர் தங்களது தமிழ் மொழிக் கல்வியைத் தொடர்ந்து மேற்கொள்கின்றனர் என்பதும், அவர்களுடைய தமிழ் மொழி அறிவின் தரம் என்ன என்பதும் இன்னும் கணிக்கப்படவில்லை. பெரும்பாலும் இம்மாணவர்கள் இத்தகைய தமிழ் மொழித் திட்டங்களை இந்தியாவிற்கு வருவதற்குத் தேவையான நுழைவுரிமம் பெறுவதற்கான ஒரு வழியாகவே மேற்கொள்கிறார்களோ என்று எண்ண வேண்டியுள்ளது. பட்ட மேற்படிப்பு மாணவர்கள் ஒருசிலரும் சில தமிழ்த் திட்டங்கள் மூலம் தமிழகம் வருகின்றனர். இவர்களது எண்ணிக்கை மிக மிகக் குறைவானதாகும். ஒரு பெரிய ஆய்வுத் திட்டத்தோடு வரும் இவர்கள் தமிழை முறையாகப் பல ஆண்டுகள் கற்று, இங்கும் தொடர்ந்து கற்று, தம்முடைய ஆய்வுத் திட்டங்களுக்குப் பயன்படுத்திக் கொள்கின்றனர். அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் தமிழ்க் கல்வி பெரிதும் இவர்கள் மூலமாகவே அணையாமல் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது எனலாம்.

பல்கலைக் கழகங்களில் தமிழ்க்கல்வி குறைந்து வருவது ஒருபுறம் இருக்க மற்றொரு நிலையில் அது வளரத் தலைப்பட்டுள்ளது. கல்விக்கூடங்களில் மட்டும் அளிக்கப்பட்ட தமிழ்க்கல்வி, தமிழாய்வு ஆகியவை இன்று தனிப்பட்டோராலும், பொதுநிறுவனங்களாலும் வளர்க்கப்படுகின்றன. இவற்றில் ஈடுபட்டுள்ள பலரும் பிற துறைகளில், குறிப்பாகக் கணிப்பொறியியல் துறையில் பணியாற்றுபவர்கள். இவர்கள் தமிழ் மொழியின் புதுமையாக்கத்திற்குத் தொண்டாற்றி வருகின்றனர். கல்விக்கூடங்களில் தமிழ் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்த தமிழ்ப் பேராசிரியர்களும்கூட காலத்தின் வளர்ச்சிக்கேற்பத் தமிழ்மொழியைக் கணிப்பொறி மூலம் கற்றுக் கொடுக்கும் உத்திகளை உருவாக்குவதிலும், தமிழ் ஆய்வுக்குக் கணிப்பொறியைப் பயன்படுத்துவதிலும், தமிழ் வடிவங்களைக் கணிப்பொறியைக் கொண்டு எழுத வைப்பதிலும் முயன்று வெற்றி கண்டுள்ளனர். ஜார்ஜ் ஹார்ட், வி.எஸ். ராஜம், ஜேம்ஸ் லிண்ட் ஹோம் போன்றவர்கள் இத்துறையில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவர்கள்.

கல்விக்கூடங்களில் பணியாற்றாமல் பிற துறைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கும் பல்வேறு தமிழன்பர்கள் கணிப்பொறியைப் பயன்படுத்திப் பலவகையிலும் தமிழ்க் கல்வியை வளர்த்துக்கொண்டு வருகின்றனர். இவர்களது

முயற்சியின் காரணமாகப் புதிய வரிவடிவங்கள், தமிழில் சொற்றொகுப்புச் செய்தல், கல்வி புகட்டும் முறைகள் போன்றவை வெளிவந்துள்ளன. மேரிலாந்திலுள்ள பி. குப்புசாமி, தம்முடைய சாஃப்ட் டெக் கிரியேஷன்ஸ் என்ற நிறுவனத்தின் மூலம், அடிப்படைத் தமிழ்க் கல்விக்குத் தேவையான அகரம், அல்ஃபபெட்ஸ், ட்ராப்ஸ் எனும் மூன்று கணிப்பொறித் தட்டுகளை உருவாக்கி வெளியிட்டுள்ளார். தமிழ் வரிவடிவங்களையும் அதற்குத் தக்கவாறு உருவாக்கியுள்ளார். சிக்காகோவிலுள்ள தமிழ்மொழிக் கல்விக்கழகம் தமிழ்மொழிக் கல்விக்குத் தேவையான பல படிப்புச் சாதனங்களையும், அச்சு, ஒலிநாடா, ஒளி நாடா, கணிப்பொறித்தட்டு என்ற பல வடிவங்களில் உருவாக்கி யுள்ளது. இதன் நெறியாளர் ஜேம்ஸ் லிண்ட்ஹோம் பல ஆண்டுகள் சிக்காகோ பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்றுக் கொடுத்தவர். திரைப்படங்களையும் தமிழ்க் கல்விக்காகப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளையும் கண்டறிந்து, இரண்டு தமிழ்த் திரைப்படங்களுக்கான ஒளிநாடா, ஒலிநாடா, உரையாடல், சொற்பட்டியல், கைக்குறிப்பு ஆகியவற்றைத் தயாரித்து உள்ளார். இன்னும் பல கணிப்பொறித் திட்டங்களில் லிண்ட் ஹோம் ஈடுபட்டுள்ளார்.

ஒக்லஹோமா நகரத்தில் தமிழ்ச்சங்கத்தை நிறுவிய பரசுராம் மற்றொரு தமிழ்ச் சொற்றொகுப்புச் சாதனமாக 'பாரதி'யை உருவாக்கியுள்ளார். இது ஆங்கிலத்திலும், தமிழிலும் கலந்து செயல்படக்கூடிய இருமொழிச் சாதனம்.

சிக்காக்கோவில் உள்ள உலகத் தமிழ்மொழி அறக் கட்டளை தனக்கெனச் சில திட்டங்களை மேற்கொண்டு, பிற தமிழர்கள் அமெரிக்காவில் செய்துவரும் மொழித் தொண்டுத் திட்டங்களை ஒருங்கிணைத்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

டெக்சாஸ் நகரிலுள்ள நா. கணேசன் தமிழர்கள் பற்றிய எழுத்துப் படைப்புக்களின் அகராதித் தொகுப் பினைக் கணிப்பொறி வழியே உருவாக்கி வருகிறார். இதற்காக அமெரிக்கப் பல்கலைக் கழக நூலகங்களில் உள்ள சுமார் 30,000 நூல்களின் தலைப்புக்களையும் அவற்றின் உள்ளடக்கத்தையும் திரட்டிவருகிறார்.

தமிழ் நூற்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற வேட்கை இந்த அமெரிக்கத் தமிழர்களிடையே எவ்வளவு

தூரம் காணப்படுகின்றது என்பதனைக் கணேசனின் கீழ்க்காணும் வரிகள் உணர்த்துகின்றன.

> "ஏன் இந்த இன்றியமையாமை? 1920இல் மதுரைத் தமிழ்ச் சங்க நூலகத்தில் ஏற்பட்ட தீ விபத்தும், 1976இல் யாழ்ப்பாண நூலகம் கொளுத்தப்பட்டதும், 1985இல் சென்னை மூர் மார்க்கட் தீக்கிரையானதும், 1992இல் சென்னைப் புத்தகக் கண்காட்சியில் ஏற்பட்ட தீ விபத்தும் நமக்கு மிகத் தெளிவான விடையைத் தருகின்றன"

இது மட்டுமின்றி, அருந்தமிழ் ஏட்டுச்சுவடிகளையும் அச்சேற்றிப் பதிப்பித்து வருகிறார். அண்மையில் 'மோரூர்ப் பாம்பலங்காரர் வருக்கக் கோவை'யைப் பதிப்பித்துள்ளார்.

மேற்குறிப்பிட்டவர் அனைவருமே தொழில் முறையில் கணிப்பொறியாளர்கள். அவர்களுடைய தமிழார்வம் தமிழ் மொழியைக் கணிப்பொறிக்குள் கொண்டு செலுத்தியுள்ளது. இப்படிப்பட்ட வளர்ச்சி, தமிழகத்திலேயே காணப்பட முடியாதபோது, அமெரிக்காவில் காணப்படுவது, அது பெருமைக்குரிய வளர்ச்சிதான்.

அமெரிக்கத் தமிழர்கள் தமிழ்மொழி வளர்ச்சியைக் கணிப்பொறிக் காலத்திற்குகந்தவாறு கொண்டு செல்வதைக் காணும்போது அமெரிக்காவில் தமிழ்க்கல்வியின் எதிர்காலம் சிறப்பாகவே காட்சியளிக்கிறது. ஆனால் இன்று இத்துறையில் ஈடுபட்டுள்ளோர் அனைவருமே முதல் அல்லது இரண்டாவது தலைமுறையைச் சார்ந்தவர்கள். இவர்கள் ஆக்குகின்ற கணிப் பொறிப் பாடங்கள் யாரைச் சென்றடையப் போகின்றன? மூன்றாம் தலைமுறையினர் தமிழ் கற்பதிலுள்ள ஆர்வம் குறைந்துகொண்டே வரும் நிலையில், அமெரிக்க மாணவர்கள் தமிழ் கற்பதற்கான அரசாங்க ஆதரவும் குறைந்துகொண்டு வரும் நிலையில், தமிழ்க் கணிப்பொறி வல்லுநர்களின் உழைப்புக்கு எந்த அளவில் ஊதியம் கிடைக்கப் போகிறது? தமிழகத்தில் இவற்றைப் பயன்படுத்த வேண்டுமென்று எண்ணினாலும், அந்த அளவிற்கு இங்குக் கணிப்பொறி அறிவு வளரவுமில்லை; நிதி நிலைமையுமில்லை. பிற துறைகளில் நம் நாடு பத்துப் பதினைந்து ஆண்டுக்காலம் பின்தங்கியே இருப்பதைப்போலக் கணிப்பொறித் துறையிலும் நாம்

பின்தங்கியே இருப்போமானால் அமெரிக்கத் தமிழர்களது ஆய்வுகள் எவ்வளவு தூரம் நம்மை எட்டப் போகின்றன என்பதைக் காலம்தான் முடிவு செய்யவேண்டும்.

முதலிரண்டு தலைமுறைகளுக்குப் பின்னர், அமெரிக்காவில் வாழும் மூன்றாம் தலைமுறைத் தமிழர் இத்தகைய தமிழாய்வுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வார்களா என்பதும் இன்று தெளிவாகவில்லை. கல்லூரியில் பயிலும் இத்தலைமுறை மாணவர்களிடையே நடத்திய ஆய்வு கீழ்க்காணும் தகவல்களைத் தந்துள்ளது.

தொடர்புகொள்ளப்பட்ட மாணவர்களில் 53 விழுக்காடு ஏதேனும் ஒரு கட்டத்தில், ஒரு பருவம், ஓராண்டு அல்லது ஈராண்டுக்காலம் ஒரு கல்விக்கூடத்தில் தமிழ் வகுப்பில் சேர்ந்து படித்துள்ளனர். ஆனால் தமிழ்க் கல்வியை உங்களது மேற்படிப்பிற்குத் தொடர்ந்து மேற்கொள்வீர்களா என்ற கேள்விக்கு 13 விழுக்காட்டினரே ‘ஆம்’ என்று விடையளித்துள்ளனர். மூன்றாம் தலைமுறையில் பதின்மூன்றாக உள்ள இந்த எண்ணிக்கை அடுத்த தலைமுறைகளில் என்னவாகும் என்பது கேள்விக்குரியது. எனினும், ‘தமிழ் படிப்பதில் உங்களுக்குள்ள ஆர்வத்திற்குக் காரணம் என்ன?’ எனும் கேள்விக்கு மூன்றில் ஒரு பங்கினர் “என்னுடைய அடையாளத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காக” என்று பதிலளித்துள்ளனர். வேற்று இனத்தவருக்கிடையே வாழும்போது தான் தமிழன் என்ற அடையாளத்தை இவர்கள் இழக்க விரும்பவில்லை. அதைப்போலவே, ‘ஒரு நல்ல செயலுக்காக நன்கொடை அளிக்க வேண்டிய சூழலில், எந்தச் செயலுக்கு முன்னுரிமை அளிப்பீர்கள்?’ என்ற கேள்விக்கு மூன்றில் ஒரு பங்கினர் “தமிழ்க் கல்விக்கென ஒரு அறக்கட்டளை நிறுவுவதற்கு” என்று விடையளித்துள்ளனர். இத்தகைய எண்ணங்களே அமெரிக்காவில் தமிழ்க் கல்வியின் எதிர்காலத்திற்கு அடிப்படை.

ஆப்பிரிக்க நாடுகளில் தமிழியல் ஆய்வு

முனைவர் க.ப. அறவாணன்

---

* தென்னிந்தியாவிற்கும், ஆப்பிரிக்காவிற்கும் இடையே உள்ள தொடர்பு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து தொடங்குகிறது. மானுடவியல் ஆய்வும், தென்னிந்தியப் பழங்குடி மக்களாய்வும் ஆப்பிரிக்கப் பழங்குடி மக்கள் நீக்ராய்த் எனும் ஓர் இனத்தைச் சார்ந்தவர் என்றே குறிக்கின்றன.

* இரு பகுதி மக்களுக்குமிடையே தெய்வ வழிபாடு, மர வழிபாடு, பாம்பு வழிபாடு, முன்னோர் வழிபாடு ஆகியனவும், பல நம்பிக்கைகளும் ஒத்துள்ளன. பல்லாங்குழி முதலாய தொல்பழம் விளையாட்டுகள் இரு பகுதிகளிலும் விளையாடப் பெறுகின்றன. இது பற்றிய விரிவான ஆய்வுகள் நடந்துள்ளன. குறிப்பாக, செனகால் நாட்டுத் தக்கார் பல்கலைக் கழகம் இந்தியவியல் துறை என்ற ஒன்றை அமைத்து இரு பகுதி மக்களின் ஒப்பியல் ஆய்வை நிகழ்த்தி வருகிறது.

* இரு பகுதி மக்கள் பேசுகின்ற மொழிகளிடையேயும் ஒற்றுமைகள் உள்ளன. மொழிக் குடும்பம் இரு இடங்களிலும் ஒட்டுநிலை மொழிக் குடும்பமாகவே உள்ளது. ஓம்பர்கர், செங்கோர், சேக் திதியான் ஞாய், உபாத்தியாயா ஆகியோர் மொழிக் குடும்பம் பற்றிய ஆராய்ச்சி செய்துள்ளனர்.

* ஆப்பிரிக்கக் கண்டத்திலுள்ள 50 நாடுகளைப் பிரெஞ்சு மொழி ஆட்சியில் இருப்பவை, ஆங்கில மொழி ஆட்சியில் இருப்பவை, அராபிய மொழி ஆட்சியில் இருப்பவை எனப் பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவை அனைத்துமே அயல் நாடுகளில் இருந்து இறக்குமதியான மொழிகள். இம்மொழிகள் இல்லாமல் ஆப்பிரிக்கருக்குச் சொந்தத் தாய்மொழிகள் உள்ளன. இவை பெரும்பாலும் பேச்சு மொழிகளாகவே இருந்து வருகின்றன. எழுத்து அமைக்கும் முயற்சி நடந்து வருகிறது. சோமாலி, எத்தியோப்பியா ஆகிய ஆப்பிரிக்க மொழிகள் உயிர்ப்பிக்கப் பெற்று எழுத்து வடிவம் பெற்றுள்ளன.

* தமிழியல் தொடர்பான ஆய்வு பிரெஞ்சு ஆட்சி மொழியில் இருக்கும் நாடுகளில் செனகால் தக்கார் பல்கலைக் கழகத்திலும், மொரிசீயசிலும் ஓரளவு நடந்து வருகிறது. ஆங்கில மொழி ஆட்சியில் இருக்கும் தென் ஆப்பிரிக்காவில் ஓரளவு நடந்து வருகிறது. இம்மூன்று நாடுகளிலும் நிகழும் முயற்சியைத் தமிழ்க் கல்வி முயற்சி, சைவ சமயக் கல்வி முயற்சி, ஒப்பியல் ஆராய்ச்சி என்று வகைப்படுத்தலாம். ஒப்பியல் ஆராய்ச்சி நிகழும் இடம் தக்கார் பல்கலைக் கழகத்தில் மட்டுமே. ஏனைய இரண்டு இடங்களிலும் தமிழைக் கற்கும் முயற்சியும், அதுவும் சமயத்திற்காகக் கற்கும் முயற்சியும் நடந்து வருகின்றன.

* IN ONE of the most rewarding sessions of the World Hindu Conference in South Africa, papers were presented on similarities between African and Hindu traditions from ancient times, opening new vistas in areas of global co-operation and understanding. The conference at the University of Durban-West-ville last month was a first in the history of Hinduism and South Africa. About 3,000 scholars, religious leaders, artists, students and social workers from all over the world attended.

Historians have long acknowledged that Africa may well be the cradle of mankind. That there may have been prehistoric contact between South Indians and Africans was a point elaborated convincingly by Dr. Cyril Hromnik, an American historian of the Bantu and Quena peoples of Southern Africa.

He said that the South Indian traders were the earliest explorers of the African continent, having called it Kliyadvipa or the island of the blacks.

Dr. Hromnik, who drew consistent applause from the packed hall, traced the discovery of the gold to the peoples of Eastern Transvaal region, known as Ma-koma-ti-desa, who are possibly descended from the South Indian seafarers who hailed from around the Gomati river.

Illustrating his talk with extensive slides of the stone ruins of a chariot temple discovered at a historical site in Komatiland, he explained how the astrologically-inspired temple seems to have been a tribute to the Sun and the 27 stars of the Universe. It was probably built around the first century AD.

Mr. Reuben Thuku, another scholar from Nairobi, Kenya, spoke of the meta-physical concepts in traditional African and Indian societies, high lighting the four fundamental principles of the immanence of the Spirit or Atman, the law of Karma or Action, the theory of rebirth and the ultimate goal of the human soul, Nirvana or Moksha.

He also pointed out that the importance of chanting, singing and dancing in honour of the Earth goddess Oodua or Onile among the Yoruba peoples of Nigeria was very similar to some of the Hindu rituals and celebrations for the Mother Goddess.

Interestingly, many of the traditional designs and colour symbolism of the bead necklaces, bracelets, and bands worn by the native Africans reflect similarities in symmetry, form and function.

Their deftly-woven baskets and pots also capture geomatric and floral patterns, often resembling the Hindu ritual diagrams called Yantra.

(Traditions of Southern India and Africa have many links, - Radhika Srinivasan, Indian Express, 18.8.1995).

ஆப்பிரிக்காவில் தமிழர் குடியேற்றத்திற்கான காரணங்கள்

1. தமிழகம், தொன்று தொட்டே 'வானம் பார்த்த பூமி' மழையை நம்பும் மண்; மண்ணை நம்பும் மக்கள். அதனால்தான் மாரியை ஒட்டியே வழிபாடுகள் தோன்றின; திருவள்ளுவத்தில் கடவுள் வாழ்த்தை அடுத்து மழை வாழ்த்தும் அமைந்தது. 'மழைவளங் கரப்பின் வான் பேரச்சம்' என மன்னனும் முழங்கினான். மழையின்மை, பன்னீராண்டு தொடர்ந்தது; பஞ்சமும் தொடர்ந்தது. சிலப்பதிகார உரையும், இறையனார் களவியல் உரையும், ஆண்டாள் பாட்டும் இதனை உணர்த்துகின்றன. மழையற்று, மண் வறண்ட காலத்தில் மக்கள், பிழைப்பிற்காக வேறிடம் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இறையனார் களவியல் தோற்றக் காரணம், பஞ்சக் காலத்தில் புலவரும் இடம்பெயருவர் என்பதை எடுத்துக்காட்டுகிறது. பஞ்சம் பிழைக்க வந்தவர்கள் என்ற வழக்கும், இன்றும், தஞ்சை மாவட்ட நாற்று நடுங்காலங்களில் தென்மாவட்டங்களில் இருந்து பஞ்சம் பிழைக்க வரும் போக்கும் தமிழர், தம் இடங்களில் பெரும்பஞ்சம் வரும்போது, வளமான பகுதிக்குக் குடியேறுவதை உறுதி செய்வன.

ஒரு நாட்டின் எல்லை தாண்டி, வேறு நாட்டிற்கும் செல்லுதல் உண்டு என்பதைப் பாலைப் பிரிவுப் பாக்கள் காட்டும். பாலை என்ற பண்டை நில அமைவே, மழையின்மையால் தோன்றியதாகும். மழையற்ற காலங்களில் - வேனிலில் சித்திரை வைகாசி ஆனி ஆடி (ஏப்ரல், மே, ஜுன், ஜுலை) பொருள் ஈட்டுவதற்காக ஆடவர், வேறு நாடுகளுக்குச் சென்றதைப் பாலைத்திணைப் பாடல்களும், பாலைக் கோட்பாடும் தெரியப்படுத்துகின்றன.

நில எல்லை கடந்து மட்டுமல்ல; கடலெல்லை கடந்தும் பொருள் தேடச் செல்வதை 'முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை' என்ற தொல்காப்பிய நூற்பா, கணவன் வரக் கல்லுருவம் நீத்த சிலப்பதிகாரப் பத்தினிக் கதை, மணிமேகலையில் வரும் சாதுவன் வரலாறு, காரைக்கால் அம்மையார் வரலாறு, பிற்காலச் சோழர் வரலாற்றுச்

செய்திகள், சீனம் சென்றுவந்த சித்தர் வரலாறு, 'திரை கடலோடியும் திரவியம் தேடு' எனும் பிற்கால ஔவை மொழி ஆகியன உணர்த்துகின்றன.

ஆகத் தமிழர்தம் பொருள்தேடும் முயற்சி இருவகைப் பட்டது.

1. வறட்சியால் வந்த வறுமை போக்க வெளிநாடு செல்லுதல்

2. வளமை தேடி வெளிநாடு செல்லுதல்

மேற்கண்ட இரண்டும், தமிழர், ஆப்பிரிக்கக் குடியேற்றத்திற்குக் காரணங்கள். ஐரோப்பியர் குறிப்பாக, ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரரும் ஆப்பிரிக்க, ஆசியக் கண்டங்களில் ஆதிக்கக் குடிகளாகக் குடியேறி, தம் அரசையும், சமயத்தையும், வணிகத்தையும் பரப்பியபோது, தென்னிந்தியாவினின்று கட்டாயக் குடியேற்றமும் ஆப்பிரிக்காவில் நிகழ்ந்தது.

இவற்றைச் சற்றே விரிவாகப் பார்ப்போம்.

வறுமை வீச்சு

1858-1900 ஆகிய 42 ஆண்டுகளில் பிரிட்டிஷ் இந்தியாவில் இருபதுக்கும் மேற்பட்ட பஞ்சங்கள் வந்தன. பஞ்ச நிலையைப் பயன்படுத்திக்கொண்ட ஆள்சேர்க்கும் தரகர்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கவர்ச்சி காட்டி, இந்தியத் துறைமுகங்களில் வெளிநாடுகளில் வேலை செய்ய மக்களைக் குவித்தனர்.

பிரிட்டிஷ், இந்திய நிலங்களுக்கு விதித்த வரிமுறை உள்ளூர் மக்களை வதைத்தது. நிலச் சொந்தம் இல்லாக் குத்தகைதாரர்கள், விளைந்தாலும் விளையாவிட்டாலும் வாரம் கொடுத்தாக வேண்டும். இது 50% வரை இருந்தது. பண்டைய தமிழக முறை ஆறில் ஒரு பங்கே அரசிற்குச் செலுத்தவேண்டிய பங்காகும்.

வேளாண்மையையே நம்பியிருந்த கூலிகள், போதிய வேலையின்றி, வாழ்விற்காக வட்டிக்கடைக்காரர்களிடமும் சிக்க வேண்டியிருந்தது. ஆங்கிலேயர் வரவால் ஏற்பட்ட ஒரு முறை இதுவாகும். வட்டிமுறை என்பதே தமிழர் அறியாமுறை.

ஐரோப்பியத் தொழில்மயமாதல், எந்திரமயமாதல் ஆகியவற்றால் தமிழகக் கைவினைஞர்களின் நெசவு முதலான தொழில் நசிந்தது. அத்தகு தொழில்களில் ஈடுபட்டோர் வறுமையால் அவதியுற்றனர். மொரிசியசு நாட்டிற்குச் சென்றோரில் பலர் கைவினைஞர் ஆவர்.

வறுமை வேட்கை

பீகார் சகாபாத் எனும் பகுதிவாழ் போஜ்பூரி மொழி பேசும் மக்கள் கடுமையான உழைப்பாளிகள். வயல் வெளிகளில் கையில் தடியுடன் கம்பீரமாக நடந்து செல்லும் இவர்கள், ஆர்வத்தின் காரணமாக வெளிநாடு சென்றனர்; பேரளவு பொருள் திரட்டினர்; தாயகத்திற்குத் திரும்பினர்; அவர்தம் புதிய வளமை, மற்றவர்களையும் ஈர்த்தது. தமிழரிடையே, பர்மா, மலேயா, சென்று திரும்பி நிலபுலன், மாடுமனை வாங்கிச் செழிப்பாக இருந்தோரைப் பார்த்த ஏனைய தமிழர், ஆப்பிரிக்கா முதலிய அயல்நாடு செல்ல ஆர்வம் காட்டினர்.

கட்டாயக் குடியேற்றம்

1619இல் ஆப்பிரிக்காவினின்று, அடிமைகளை வாங்கி, ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் விற்று வந்த அடிமை வியாபாரம் 1807இல் பிரிட்டனிலும், 1833இல் பிற இடங்களிலும் சட்ட வடிவில் நிறுத்தப்பெற்றது. வெள்ளைக் காரர்களின் கரும்பு வயல்களிலும், சுரங்கங்களிலும், தோட்டப் பண்ணைகளிலும் பெரும் மந்தம் ஏற்பட்டது.

1. முன்னைய ஆப்பிரிக்க அடிமைகள் இரவு பகலாக வேலை செய்ய மறுத்தனர்.

2. தாயக வெள்ளைக்காரர்கள், வெப்ப நாடுகளுக்கு வர விரும்பவில்லை; விரும்பின் மிக ஊதியம் கேட்டனர்.

3. சீனரை அமர்த்தினர்; உழைப்புக் குறைவும், உரிமை கோரல் மிகுதியும் இருந்தன.

எனவே உழைப்பு மிக்கவராயும், ஊதியக் குறைவின ராயும், போராட்ட உணர்வற்றவராயும் கூலிகளைத் தேடிய போதே, நேட்டால் வெள்ளை முதலாளிப் பார்வையில் தென்னிந்தியர் பட்டனர்.

புதுச்சேரி முதலிய இடங்களிலிருந்தே அடிமைகளை விலைக்கு வாங்கி மொரீசியசு போன்ற நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பெற்றனர். அயல்நாட்டு ஆவணங்கள் (1823 British Paramouncy and Indian Renaissance 1982, Part II, p.279, R.C. Majumdar) மட்டும் அன்றி, ஆனந்தரங்கப் பிள்ளையின் நாட்குறிப்பும் இதனை உறுதி செய்கிறது.

<u>அடிமை விலை விபரம் 1823இல்</u>

ஒரு பையன்	-	ரூ.4 - 15
ஒரு பெண்	-	ரூ16 - 24
ஓர் ஆண்	-	ரூ24 - 160.

(நம்பி ஆரூரன், பக்.67, தமிழ்க்கலை, மார்ச் 1983).

தமிழ் பேசும் பகுதியினின்று குடியேறிய மக்களின் சமூகநிலை வருமாறு:

<u>1870</u>

இந்து-முசுலீம் விகிதம்	86:14
பிராமண உயர்சாதியினர்	16%
வேளாண் தொழிலாளியர்	32%
கைவினைஞர்	9%
கீழ்ச்சாதியினர்	43%

(Emigration of Indian Labour, p.29)

ஆகக் குடியேற்றச் சூழலை இப்படி, வரைபடமாக்கலாம்.

உள்நாடு:

I பஞ்சம்
II பிரிட்டிஷ் நிலவரிமுறை
III வட்டிமுறை
IV சாதிய ஒடுக்குமுறை
V பொருள் வேட்கை

வெளிநாடு

குடிபெயர்ந்த தமிழர்களின் கல்விநிலை

குடிபெயர்ந்த தமிழருள் 84% படிக்காதோரே. எனவே, அன்னோர், அயற்புலம் சென்றபோது, தமிழை வெறும் பேச்சு மொழியாகவே கொண்டு சென்றிருப்பர். அயற்புலச் சூழலில், தமிழில் உரையாடுவதன் தேவை மிகக் குறைந்தே இருந்திருக்கும். இரயோல், ஆப்பிரிக்கான் என்ற கலப்பட மொழிகளின் அறிமுகமே அவர்களுக்குத் தேவையாக இருந்தது.

அன்றியும், தமிழ், அவர்களுக்குரிய தாய்மொழியாக இருப்பினும், அது அவர்களுக்குச் சோறு போடாத மொழியாகவே (இன்றுபோல) அன்றும் இருந்தது. எனவே தம் மொழியைத் தம் தலைமுறையின் இறுதியிலேயே (1850 வாக்கில்) அவர்கள் இழக்கத் தொடங்கிவிட்டனர். தொடர்ந்த தலைமுறைகளில் முற்றுமாக இழந்தேவிட்டனர்.

மொரீசியசும், புதுவையும் பிரஞ்சு அடிமை நாடுகளாக இருந்தமையால், பிரஞ்சு முதன்மை பெற்றிருந்த அளவு தமிழ் முதன்மை பெற்றிருக்கவில்லை; மொரீசியசில் முற்றுமாக அது அரசு வழக்கில் இல்லை. ஆங்கில, பிரஞ்சு என்ற ஆட்சி முரண்களால், ஆங்கில அடிமை நாடாக இருந்த தமிழகத்தின் மக்களிடையே ஓரளவு மணந்துகொண்டிருந்த தமிழ், மொரீசியசுக்குச் செல்ல வாய்ப்பும், மொரீசியசு சுதந்திரம் பெறும் வரை பேரளவு வாய்க்கவில்லை.

தென்னாப்பிரிக்கா, வெள்ளை இன அரசு என்பதால், இந்தியப் பகை நாடாக 1990 வரை இருந்து வந்தது. இந்தியர் தமிழர் யாரும், தென்னாப்பிரிக்காவிற்குச் செல்லத் தடையும் இருந்தது. எனவே தமிழர் மிகுதியாக வாழும், தென்னாப்பிரிக்காவும், தமிழரிடமிருந்து வெட்டப்பட்டிருந்தது.

எனவே, தமிழ், தமிழ்க்கல்வி என்பனவற்றிற்கான வாய்ப்பு மிகக் குறைவாகவே இருந்தது. தமிழாராய்ச்சி என்ற ஒன்றின் தேவையே அங்கு ஏற்படவில்லை. எனினும், அனைத்துப் பகுதிகளும் விடுதலை அடைந்த நாளில், நிலைமை மாறத் தொடங்கியது.

தமிழர், அயல்புலத்து வாழும் இடங்களில், தம்மைச் சுற்றித் தம்மைப் போலவே விடுதலை அடைந்த மொழியின மக்களின் நோக்கையும் போக்கையும் உற்றுப்பார்க்கத் தொடங்கினர். ஏனையோர், தம் மொழியடையாளத்தை முன்னிறுத்தி ஒன்றுபடுதலும், உரிமைக்காகக் குரல் கொடுத்தலும், மொழி, இன, நலங்களுக்காகச் செயல்படுதலையும், அயற்புலம் வாழ் தமிழர் நேரில் - கண் முன்னால் பார்க்கத் தொடங்கினர்.

மொரீசியசுப் பள்ளியளவில் விருப்பப் பாடமாகத் தமிழ் இருந்து வருகிறது. தமிழ் கற்பிக்கத் தகுந்த ஆசிரியர்கள் இல்லை. சிலர் தமிழகத்தினின்று தருவிக்கப் பெற்றனர். மொரீசியசிலிருந்து தமிழ் கற்க, தமிழகத்திற்குச் சிலர் வந்தனர்.

இராயல் கல்லூரியிலும், மகாத்மா காந்தி நிறுவனத்திலும் தமிழ் பயிற்றுவிக்கப்பெறுகிறது. 8701 மாணவர் தமிழைக் கற்று வருகின்றனர்; 219 தமிழாசிரியர்கள் தமிழைக் கற்பித்து வருகின்றனர் (சு. இராசாராம், தமிழ்க் கலை, 1987)

வானொலியில் நாளொன்றிற்கு அரை மணி நேரத்திற்குத் தமிழ் ஒலிபரப்பு நிகழ்ந்து வருகிறது. 'ஒளி', 'சக்திவேல்' எனும் இரு வார ஏடுகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

தென்னாப்பிரிக்காவில் ஐரோப்பியர் வரவிற்கு முன்பு, கல்வி கற்றவரே அங்கில்லை. 1873க்கு முன்பிருந்த கல்வி நிலையங்களில், வெள்ளையர் மட்டுமே கற்க முடியும். 1867இல் சபோர் எனும் கிறித்தவப் பாதிரியார், ஈழத்தினின்று தமிழ் நூல்கள் வாங்கி 30 மாணவர்கட்குத் தமிழ் கற்பித்தார்.

1959க்குப் பிறகு மாற்றங்கள் வரத் தொடங்கின. அனைத்தின மக்களையும் ஊக்கமுறுத்தும் போக்கினவாக அமைந்தன. 1961இல் டர்பன் சாலிசுப்ரித் தீவில் பல்கலைக் கழகம் ஒன்று தோன்றியது. இதன்கண், மொழித்துறை வழி அராபி, இந்தி, சமஸ்கிருதம், தமிழ் ஆகியன கற்பிக்கப் படுகின்றன (K. Nambiaaruran - Indians in South Africa, 1985).

தக்காரில் தமிழியல் ஆய்வு

மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள செனகால், விடுதலை பெற்றபோது (1960), விடுதலைக்குரிய தந்தையாகிய லியோபோல்டு செதார் செங்கோரையே முதல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. அவர் பிரஞ்சுப் பேராசிரியராக இருந்தவர்; புகழ்பெற்ற 'அக்ரிகே' தேர்வில் வெற்றி பெற்றவர்; மொழியியல் அறிஞர். செல்வி ஓம்பர்கரின் மாணவர். திராவிட மொழிகட்கும், ஆப்பிரிக்க மொழிகட்கும் இடையே ஒற்றுமைகள் என்று முதன்முதலாக எழுதியவர் ஓம்பர்கரே. எனவே, அவர்தம் மாணவரான, செங்கோர், தாம் பதவிக்கு வந்த காலத்தில், திராவிட-ஆப்பிரிக்க ஒப்பீட்டாய்வை ஊக்கப்படுத்தினார். தக்கார் பல்கலைக் கழக இணைவாக உள்ள ஆப்பிரிக்க அடிப்படை ஆய்வகத்தில் (IFAN) இந்தியவியல் துறையைத் தோற்றுவித்தார். அதன் வழி இந்திய அறிஞர்களையும் (உ.பி. உபாத்தியாயா, க.ப. அறவாணன், திருமதி தாயம்மாள் அறவாணன்) அழைத்து

அமர்த்தினார். பல ஆய்வுகள் வெளிவந்தன. அத்துடன், முதன்முறையாகப் பல்கலைக் கழக அளவில் தமிழ் - விருப்பப் பாடமாக ஆப்பிரிக்கர்களுக்குக் கற்பிக்கப் பெற்றது (1978 முதல்). அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வழி, மொழியியல் பிஎச்.டி. பெற்ற மூன்று செனகால் நாட்டினர் தொடர்ந்து இங்கு மொழிப் பயிற்சியும் மொழியாராய்ச்சியும் செய்து வருகின்றனர்.

ஆக, ஆப்பிரிக்காவில், தமிழ்க் கல்வியையும், தமிழியல் ஆராய்ச்சியையும் ஊக்கப்படுத்தப் பின்வரும் வழிமுறைகளைத் தமிழகம் ஊக்கப்படுத்திச் செயற்படுத்தலாம்.

1. தமிழ் மொழிப் பாடமாக அயல்மொழிச் சூழலில் கற்பிக்க உதவியாகப் பாடநூல்களை உருவாக்குதல்.

1.1. ஆங்கிலம் வழி

1.2. பிரஞ்சு வழி

1.3. தமிழ் வழி

2. தமிழியல் ஆய்விற்கும், தமிழ்க்கல்விக்கும் உதவியாக அடிப்படை நூல்களை உருவாக்குதல் - இருமொழி அகராதி முதலியன.

3. தமிழக அரசு, தன் சொந்தச் செலவில் தகுதிபெற்ற ஆசிரியர்களை அனுப்புதல்.

4. இலவசமாகவோ சலுகை விலையிலோ நூல்களைத் தருதல்.

5. தமிழ் கற்க விரும்பும் ஆப்பிரிக்கர், தமிழகம் வர, தங்கிப் பயில அனைத்துதவிகளையும் செய்தல்.

பயன்பட்ட நூல்கள்

1. அறவாணன், க.ப., கட்டுரைகள் நூல்கள்.

2. இராசாராம், சு., மொரீசியசில் தமிழ், தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு.

3. தமிழ்க்கலை ஏடுகள், கு. நம்பி ஆரூரன், சு. இராசாராம், ஆ. கார்த்திகேயன், க.ப. அறவாணன் கட்டுரைகள் 1983, 1987.

4. Anjali Sarcar, **Celebrating African Art,** Hindu, Feb.26, 1996.

5. Nambi Arooran, K., **Indians in South Africa,** Tamil University, 1985.

ஈழத்தில் சைவசித்தாந்த ஆய்வு

க. கணேசலிங்கம்

தமிழ், சைவம் என்ற இருதுறைகளிலும் ஈழத் தமிழரின் பங்களிப்பு கணிசமானது; வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. சைவத்தையும் சிவநடனத்தையும் உலகறியச் செய்த பெருமை ஈழத்துக் கலாயோகி ஆனந்தா குமார சாமியைச் சாரும். இந்து பௌத்த மதங்களைச் சார்ந்த துறைகளில் பல அரிய ஆய்வுகள் செய்த இவர், சிவநடன தத்துவத்தைச் சைவசித்தாந்த அடிப்படையில் விளக்கியது குறிப்பிடத்தக்கது.

சைவசித்தாந்தம் வடமொழியிலுள்ள வேதாகம நூல்களின் கருத்துக்களை மூலமாகக் கொண்டதென்பது சிலர் கருத்து. அப்படியில்லாமல் அது தமிழகச் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டது, அதன் கூறுகளைப் பழந்தமிழ் நூல்களில் காணலாமென்பது வேறு சிலரின் கருத்து. இக்கட்டுரையில் சைவசித்தாந்தம் தமிழ்மொழியிலுள்ள மெய்கண்ட சாத்திர நூல்களை மூலமாகக் கொண்டதாகவும், சைவத் தமிழ் மக்களின் சமய தத்துவமாகவும் கொள்ளப் படுகிறது. இந்த அடிப்படையிலே ஈழத்தமிழரின் சைவ சித்தாந்த ஆய்வு முயற்சிகள் சுருக்கமாகத் தரப்படுகின்றன.

சித்தாந்த ஆய்வின் முன்னோடி

மெய்கண்ட சாத்திர நூல்களிலே மெய்கண்டார் (கி.பி.1232) எழுதிய சிவஞானபோதத்தை, முதன்மை நூலாகக் கொள்வது மரபு. இதற்குப் பின்வந்த சிவஞான சித்தியார் அதன் விருத்தியுரையாகவும் சிறந்த ஆய்வு நூலாகவும் விளங்குகிறது. பிற சமயக் கொள்கைகளை ஆய்வு செய்து, அன்றிருந்த அளவுமுறைகளால் சைவமே சிறந்த சமயமென்று நிலைநாட்டுகிறது. சுபக்கம், பரபக்கம் என இரு பகுதிகளாக அமைந்த இந்நூலின் முதற்பகுதிக்கு அறுவர் உரை எழுதியுள்ளனர். அவர்களுள் ஒருவரான ஞானப்பிரகாசர் (17ஆம் நூற்றாண்டு) யாழ்ப்பாணத்தில் பிறந்தவர்.

போர்த்துக்கேயர் ஆட்சியில், அவர்களின் கொடூரமான சைவ நிந்தனைகளைச் சகிக்க முடியாதவராக இவர் தமிழ்நாடு சென்று, அங்கிருந்து வடக்கே போய் வடமொழியும் சாத்திரமும் படித்தார். பின்னர் தமிழ்நாடு திரும்பி, திருவண்ணாமலை ஆதீனத்தில் சேர்ந்தார். வடமொழியிலே ஒன்பது நூல்களும் தமிழிலே சிவஞான சித்தியாருக்கு ஒரு உரையும் செய்தார். இந்தச் சித்தியாருரை அவர் காலத்திலும் பின்னரும் பெரும்புயலைக் கிளப்பியது. சிவஞான சித்தியாரிலே சிவசமவாதக் கொள்கையைக் காண முனைந்துள்ளார் என்று பின்னால் வந்த சிவஞான சுவாமிகளால் (18ஆம் நூற்றாண்டு) வன்மையாகக் கண்டிக்கப்பட்டவர் ஞானப்பிரகாசர். சிவஞான முனிவர் சிவஞான போதத்துக்குப் பேருரை ஒன்றும் சிற்றுரை ஒன்றும் எழுதியவர். முன்னையது 'சிவஞான மாபாடியம்'. இது சிறந்த நூலாகக் கருதப்பட்டுத் 'திராவிட மாபாடியம்' எனப் போற்றப்படுவது; சைவ சித்தாந்தத் தத்துவ விளக்கமாக அமைந்தது.

ஞானப்பிரகாசரின் ஆய்வு நோக்கு அவர்காலத்து அறிஞரின் நோக்கிலிருந்து விலகியிருந்ததென்பது பலரின் கருத்து. ஆயினும் அவரின் சிந்தனைத் திறனும் தர்க்கத் திறமையும் பலராலும் போற்றப்படுவது. சித்தாந்த அறிஞர் டாக்டர் சேனாபதி பின்வருமாறு கூறுகிறார்.

'He holds the view that souls at release are equal to Siva in every respect, a view which is interesting and ably argued but totally in variance with Siddhanata......Though Jnanaprakasar

attempts to read sivasamavada, into Siddhiyar, he deserves credit for following an unusual line of thought'. (Dr. V.A. Devasenapathy, Saiva Siddhanta, University of Madras, 1974).

> "முத்தியிலே எல்லாவகையிலும் சிவத்திற்கு ஒத்த நிலையின் உயிர்கள் இருக்கும் என்ற கருத்தை இவர் கொண்டுள்ளார். இந்தக் கருத்து சிந்தனையைத் தூண்டுவது; வாதத் திறமையுடையது; ஆனால் சித்தாந்தத்துக்கு முற்றிலும் வேறுபட்டது.... சிவசமவாதத்தைச் சித்தியாரில் காண விழைந்தாலும், ஞானப்பிரகாசர் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த சிந்தனையைக் கடைப்பிடிப்பது பாராட்டத் தக்கது"

தர்க்கத்தின் அடிப்படையிலும் அறிவுபூர்வமாகவும் ஆய்வு நடத்திய ஞானப்பிரகாசரை ஈழத்தில் சித்தாந்த ஆய்வின் முன்னோடி எனலாம்.

ஆறுமுகநாவலர்

சித்தாந்த ஆய்வுக்கு முன்னோடியாக ஞானப் பிரகாசரைக் கொண்டால், ஈழத்தில் சித்தாந்தச் சிந்தனை வளர்ச்சிக்கும், பின்வந்த ஆய்வாளர் முயற்சிக்கும் ஒரு உந்து சக்தியாக விளங்கியவர் ஆறுமுகநாவலர் (1822-1879) எனலாம். சைவத்தையும் தமிழையும் அழிவிலிருந்து காப்பாற்ற அவர் மேற்கொண்ட பரந்துபட்ட பணிகளில் சைவ சித்தாந்த ஆய்வு சிறிதே. ஆயினும் அவரின் வழியிலே ஒரு ஞானபரம்பரை உருவாகி இன்றுவரை சைவத்துக்கும் தமிழுக்கும் ஆக்கம் அளித்து வருகிறது. சித்தாந்த ஆய்வு என்னும் போது நாவலரில் தொடங்கி, சபாபதி நாவலர், சங்கர பண்டிதர், சி.வை. தாமோதரம் பிள்ளை, செந்திநாதையர், பொன்னம்பல பிள்ளை, குமாரசாமிப் புலவர், சபாரத்தின முதலியார், சிவபாத சுந்தரம், கணபதிப் பிள்ளை என்று நீண்ட மரபு கண்டு இன்றுள்ள பண்டிதர் மு. கந்தையாவிலே முடிக்கலாம். இவர்கள் எல்லோரின் பணிகள் குறித்து ஒரு கட்டுரையிலே எழுதுவது முடியாத தாகையால் முக்கியமான சிலரின் சில ஆய்வுகள் குறித்ததாக இக்கட்டுரை அமைகிறது.

ஒரு பெரிய நிறுவனமே செய்ய முடியாத பணிகளைத் தனிமனிதராக நின்று செய்த ஆறுமுகநாவலரின் பார்வை சைவசித்தாந்தத்தை ஆய்வதல்ல. ஆயினும் அவரின் எழுத்துக்களூடே சித்தாந்த ஆய்வுகளைக் காணமுடிகிறது.

நாவலர் தன் பெரியபுராணப் பதிப்பில் எழுதிய உபோற்காதமும் குசனங்கள் என்ற வகையில் அமைந்த பல கட்டுரைகளும், பெரியபுராண உள்ளுறையாகிய அதன் உள்ளார்ந்த சித்தாந்த தத்துவங்களை வெளிப்படுத்துகின்றன. இதனை அவர் சைவ நூல்களின் சான்றுகளோடு, சைவத்திருமுறைகளுக்கும் சித்தாந்த நூல்களுக்கும் முரணாகாத வகையில் ஆய்ந்து எழுதுகிறார்.

சாந்தோக்கியோபநிடதம், கைவல்லியோபநிடதம் முதலியவற்றிலிருந்து மேற்கோள்கள் காட்டி, அவை குறித்த தகரவித்தையையும், அதனை உபாசிக்கும் முறையையும் விளக்கி, சைவர்களுக்கு மிகமுக்கியமான கோயிலாக விளங்கும் சிதம்பரத்தையும், அதன் தத்துவத்தையும் விளக்குகிறார். இங்ஙனம் விளக்கி, சிதம்பரம் பூதாகாசம் போல் சடமாகாது, அது சித்தென்று நிறுவுகிறார்.

வடமொழி, தமிழ்மொழியிலுள்ள பலநூல்களை ஆதாரமாகக் கொண்டு சிவன் ஆனந்த நடனமிடும் இடம் உடம்பிலே இடகலைக்கும், பிங்கலைக்கும் நடுவிலுள்ள சுழுமுனையென்று கூறுவதும், அதனைச் சிதம்பரத்துடன் ஒப்புநோக்குவதும் அவரின் தர்க்கத் திறமைக்கும் நூலறிவுக்கும் ஆய்வுத்திறமைக்கும் தக்க சான்றுகள்.

அவர் வேதத்தைப் போற்றினும், அவரின் ஆய்வு முடிவுகளில் வேதத்துக்கு மேலான இடம் கொடுக்கப்பட வில்லை. சைவசித்தாந்த சிந்தனைகளே மேலான இடத்தைப் பெறுகின்றன. அவரின் உபோற்காதத்தில் பின்வருமாறு எழுதுகிறார்.

> "இதுகாறும் கூறியவற்றால். சைவசித்தாந்தத் தன்றி பரமுத்தி சித்தியாதென்பதும்,...... வேதத்துள் விதித்த வேள்வி முதலியன வெல்லாம் அநித்தியமாகிய காமியங்களைப் பயப்பன என்பதும் பெறப்பட்டன. வேள்வி முதலியன ஞானத்தைப் பயவாமை மாத்திரையேயன்றி, தீவினைபோல் அது நிகழவொட்டாது தடைசெய்து நிற்றலும் உடையனவேயாம்"

இத்தகைய எழுத்துக்கள் மூலம் சைவத்துக்கு வேத நூல்கள் பிரமாணங்கள் அல்ல என்பதைத் தெளிவுறக் காட்டியுள்ளார்.

சித்தாந்தக் கொள்கைகள் எளிதாக எல்லோருக்கும் விளங்கும் வகையில், ஒவ்வொரு தரத்தினருக்கும் ஏற்றவிதத்தில் படிக்கிரமமாக எழுதப்பட்டவை அவரின் நூல்கள். இதற்கு அவரின் சைவவினாவிடை நூல்கள் நல்ல உதாரணங்கள்.

அவர் சித்தாந்தக் கொள்கைகளை ஆய்ந்து நிறுவும் முறை எவரும் மறுக்கமுடியாத வகையில் அமைந்தது. ஆய்வு முடிவுகளில் திருமுறைகளுக்கு முரணாகாமல் சித்தாந்த உண்மைகள் நிறுவப்பட்டு இருக்கும்.

செந்திநாதையர்

நாவலரின் மாணாக்கராக இருந்து பின்னர் அவரின் பணிகளைத் தொடர்ந்தவர் செந்திநாதையர் (1858-1922). காசியில் பத்தாண்டுகள் தங்கி வடமொழி நூல்களை ஆய்ந்தவர். இதனால் இவர் காசிவாசி செந்திநாதையர் என்று அழைக்கப்படுபவர்.

நாவலர், செந்திநாதையர் ஆகியோர் பணிகளை ஈழத்திலும் பார்க்கக் கூடுதலாகத் தமிழகம் போற்றிப் பாராட்டியது. தமிழகத்துத் திருவாவடுதுறை ஆதீனம் நாவலர் என்ற பட்டமளித்து ஆறுமுகத்தை ஆறுமுகநாவலர் ஆக்கிக் கௌரவித்தது. செந்திநாதையருக்குச் 'சித்தாந்த பானு', 'சித்தாந்த சிகாமணி' போன்ற பட்டங்கள் அளித்து அவரின் சைவப்பணிகளை ஊக்குவித்தது. திரு.வி.க.வின் இளமைக்காலக் குருவாகிய யாழ்ப்பாணத்துச் சதாவதானி கதிரைவேற் பிள்ளைக்கு 'மாயாவாததும்சகோளரி' என்ற பட்டத்தைச் செந்திநாதையர் மூலம் கொடுத்துப் போற்றியது. இப்படிப் பல ஈழத் தமிழறிஞரைப் போற்றி அவர்களால் பயனடைந்தது தமிழகம். தமிழகத்தினால் ஈழத்தமிழர் ஆக்கம் பெற்றனர்.

செந்திநாதையர் எழுதிய நூல்கள் இருபதுக்கு மேற்பட்டன. வைதிக சுத்தாத்துவித சித்தாந்தப் படம் என்று ஒன்று வெளியிட்டு, அன்று ஒரு புதுமுறை விளக்கமளித்தவர் இந்த அறிஞர். இவரின் தர்க்கரீதியான வாதத்திறமை பலரையும் வியக்கவைத்தது; பகைவரை அஞ்சவைத்தது.

வேதாகம நூல்களிலும் தமிழ் நூல்களிலும் ஆழ்ந்த புலமை கொண்ட செந்திநாதையரின் ஆய்வு முடிவுகள் எவராலும் மறுக்க முடியாமல் அமைந்தவை. அத்வைத வேதாந்தமும் விசிட்டாத்வைதமும் ஒரேயொரு பிரம சூத்திரத்துக்கு இருவேறு விளக்கங்களை எப்படிக் காண முடியும் என்று எண்ணினார். இதன் விளைவாக மூல நூல்களை ஆராய்ந்து, அதன் விளக்கமாக அமைந்த சில கருத்துகள், மூலநூலிலுள்ளவற்றை மாற்றியும் திரித்தும் வெளிவந்தவை என்று கூறினார். இங்ஙனம் எழுதப்பட்டதே இவரின் நீலகண்ட பாஷ்யத் தமிழ் பெயர்ப்புக்கு இவரால் எழுதப்பட்ட இரு நீண்ட உபக்கிரக மணிகைகள். ஒன்று உபநிடத உபக்கிரகமணிகை, மற்றொன்று பிரமசூத்திர உபக்கரகமணிகை. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறந்த ஆய்வு நூலாக விளங்க வேண்டியவை. தர்க்க ரீதியாகவும் கதைகள் மூலமும் பிரமசூத்திரத்தில் காணும் கருத்து வேறுபாடுகளையும், மயக்கங்களையும் செந்திநாதையர் விளக்குவது அன்றிருந்த வழியிலிருந்து வேறுபட்டிருந்தது.

பின்வந்த உபநிடதத்தையே வேதாந்தம் என்று பலர் கூறுவர். இது காரணப் பெயராக வந்தது. வேதம் காட்டும் ஆத்மானந்த அனுபவ ஞானமே வேதாந்தம் என்பதன் பொருள்; அது காரண இடுகுறிப்பெயராக வந்தது என்பது செந்திநாதையர் கருத்து. அவரின் 'சைவ வேதாந்தம்' என்னும் நூல் இதனை விளக்குகிறது. வேதங்களிலுள்ள கருத்துக்களையும் தேவாரத்திலிருக்கும் சித்தாந்தக் கருத்துக்களையும் ஒப்பிட்டு ஆய்வு செய்து, அவற்றிற்கிடையில் உடன்பாடு கண்டு எழுதப்பட்ட நூல் 'தேவாரம் வேத சாரம்'.

யாழ்ப்பாணக் கலாச்சாரத்தைக் கந்தபுராணக் கலாச்சாரம் என்று ஈழத்துப் பேரறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை குறிப்பதுண்டு. கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற்புராணம் போன்ற நூல்களை மக்கள் தேவை கருதி எளிமையான வசன நடையில் எழுதியவர் ஆறுமுகநாவலர். அவற்றின் உள்ளார்ந்த சித்தாந்தக் கருத்துக்களையும் கொள்கைகளையும் விளக்கும் நோக்குடன் எழுதியவர் செந்திநாதையர். இந்த வகையில் எழுதப்பட்ட ஒரு நூல் 'கந்தபுராண நவநீதம்'. சைவ அறிஞர் உலகைப் பெரிதும் கவர்ந்த நூல் இது.

செந்திநாதையரின் வேதாந்த சித்தாந்தப் புலமைக்கும் எழுத்துப் பணிக்கும் அவரின் 'சிவஞான போத வசனாலங்கார தீபம்' என்ற நூலின் முன்னுரையில் தமிழகத்துச் சித்தாந்த அறிஞர் ஜே.எம். நல்லசாமிப் பிள்ளை எழுதிய கருத்துக்கள் சான்றாக அமையும்.

> "எமக்குத் தெரிந்தமட்டில், இத்தமிழ் நாட்டில், இருமொழியிலும் வல்லுனராகி, அதிலும் வேதாகம நூல்களின் பயின்று, நம்மாகமாந்தங்களையும் அதன் பூர்னேத்திரங்களையும் பூர்த்தியாயுணர்ந்து, அதிலும் அவ்வுண்மைகளை நம்மனோர் உணரும் பொருட்டு அநேகக் கணக்கான நூல்களையும் பத்திரிகைகளையும் பதிப்பித்து நம் சைவத்தை வளர்த்து வந்தவர்களில் நம்மையரவர்களைவிட இன்னும் பெரியாரைக் கண்டிலம். நம் சைவத்துக்கும் பூர்வாச் சாரியாராகிய ஸ்ரீ நீலகண்டசிவம் செய்தருளிய வேதாந்த சூத்திர பாஷ்யத்தைத் தமிழ் விருத்தியுடன் வெளிப்படுத்தியதொன்றே நம்மையரவர்களின் புகழை நம் வடமொழி தென்மொழி வாழ்ந்திருக்கும் வரை நிலை நாட்டுமென்பதற்கு ஐயமின்று".

ஆறுமுகநாவலர் கொள்கை அடிப்படையிலே வேதக் கருத்துக்களிலும் பார்க்க தமிழிலுள்ள திருமுறைகள் சாத்திர நூல்களிலுள்ள கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். இதற்கு ஆகம நூல்களைத் துணையாகக் கொள்கிறார். செந்திநாதையர் அவற்றுக்கிடையில் ஒரு உடன்பாடு கண்டு சித்தாந்த சைவத்தை விரிந்த ஒரு நோக்கில் பார்க்கிறார்.

சபாரத்தின முதலியார்

செந்திநாதையரின் சமகாலத்தவரான சபாரத்தின முதலியார் (1858-1922) அரசாங்க பதவிகள் வகித்தவர். தமிழிலே சீவனபோதம், ஈசுரநிச்சயம், பிரபஞ்ச விசாரம் ஆகிய நூல்களும், ஆங்கிலத்திலே Essentials of Hinduism, Philosophical Saivaism, Life of Thirugnana Sambanthar போன்றவைகளும், பல கவிதைகளும் எழுதியவர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், சார்லி பிரட்லாப் (Charley Bradlaugh) போன்ற ஆங்கில எழுத்தாளர் பலர், பொருள் முதல் வாதக் கொள்கையை (Materialism) முன்னிறுத்தி கடவுள் மறுப்புக் கொள்கையைப் (நாத்திகத்தை) பரப்பினார்கள். இதனை எதிர்த்துப் பல கட்டுரைகளை இளமையிலே சபாரத்தின முதலியார் எழுதினார். இக்கட்டுரைகள் பின்னர் 'ஈசுர நிச்சயம்' (1889) என்ற பெயரில் நூலாக வெளிவந்தது.

செந்திநாதையரும் அவர் முன்னால் வந்தவர்களும் மரபுவழி ஆய்வு முறைகளைக் கடைப்பிடிக்க இவரின் ஆய்வுமுறைகள் அன்றிருந்த மேற்கத்திய முறைகளையும் தழுவியிருந்தன. விஞ்ஞான நோக்குடன் அன்று ஐரோப்பிய நாடுகளில் நிலவிய சமதர்மக் கொள்கை (Socialism) போன்ற அரசியல் பொருளாதாரச் சிந்தனைகளையும் உள்வாங்கித் தன் ஆய்வுகளைச் செய்திருப்பதைக் காணலாம்.

சபாரத்தின முதலியாரின் நூல்கள் பலவுக்கும் முக்கிய காரணமாக அமைந்தது அன்றுள்ள பிறமதத்தவரின் (கத்தோலிக்கரின்) சைவநிந்தனையே. அவர்களின் அவதூறுகளையும் பொய்புனைந்த கட்டுரைகளையும் எதிர்த்துத் தர்க்கரீதியாக எழுதப்பட்டவை அவரின் பல கருத்துக்கள். இந்த வகையில் எழுதப்பட்ட ஒரு சிறந்த நூல் "Essentials of Hinduism in the Light of Saivasiddhanta". இன்னொரு நூல் "Philosophical Saivaism". இவற்றில் விஞ்ஞான ரீதியாக எழுதப்பட்ட கட்டுரைகளும் உண்டு. முதல் குறிப்பிட்ட நூலில் உள்ள "Conflict with Science" என்ற கட்டுரை இவரின் விஞ்ஞான நோக்குக்கும் அறிவுக்கும் நல்ல ஒரு எடுத்துக்காட்டு.

சிவபாதசுந்தரம்

சைவப் பெரியார் சோ. சிவபாதசுந்தரம் (1878-1957) ஆசிரியராகப் பணிபுரிந்தவர். பாடநூல் திட்டத்துக்காகச் சமய நூல்கள் எழுதத் தொடங்கியவர். இதனால் அவரது எழுத்தில் எளிமையும் விளக்கமும் இருக்கும்.

தர்க்க ரீதியாகவும் தெளிவாகவும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஒரு நூல் "The Saiva School of Hinduism". இதனை இங்கிலாந்திலுள்ள "George Allen and Unwin Ltd.,"

என்னும் உலகப் புகழ்பெற்ற பிரசுர நிறுவனம் 1934இல் பதிப்பித்தது.

சபாரத்தின முதலியார் போன்று சிவபாதசுந்தரமும் அன்றிருந்த கத்தோலிக்க, கிறித்தவ மதத்தினரின் சைவத்திற்கெதிரான கருத்துக்களையும் பிரசாரங்களையும் மறுப்பதற்காக எழுதியவை பல. வயலெற் பரஞ்சோதி என்ற பெண்மணி தனது முனைவர் பட்டத்துக்கான ஆய்வுப் பொருளாக 'சைவசித்தாந்தம்' (Saiva Siddhanta) என்ற தலைப்பில் எழுதினார். இது நூலாக வெளிவந்தது. பிற மதத்தினரால் முதல்முதல் சைவசித்தாந்தத்தில் செய்யப் பட்ட முனைவர் பட்டத்துக்கான ஆய்வு இது. இதில் பல தவறான, சித்தாந்தத்துக்கு முரணான கருத்துக்கள் இருந்தன. இதற்கு ஒரு மறுப்பெழுதி உண்மையை விளக்க தகுந்த அறிஞர் சிவபாதசுந்தரமே என்று தமிழகத்திலுள்ள தருமபுர ஆதீனம் கருதியது. இந்த ஆதீனத்தின் வேண்டுகோளின் படி அவர் எழுதிய நூல் "An outline of Sivagnanabodham with a Rejoinder to a Christian Critic" - இதுவும் அவரின் பிற நூல்களும் கட்டுரைகளும் பல நூல்களை ஆய்ந்து சிந்தனைத் தெளிவுடன் எழுதப்பட்டவை.

படிமுறை வளர்ச்சி

ஆறுமுக நாவலர், செந்திநாதையர், சபாரத்தின முதலியார் போன்றோரின் ஆய்வுகளை நோக்குமிடத்து ஒரு படிமுறை வளர்ச்சியைக் காணமுடிகிறது.

நாவலர் சைவ சித்தாந்தத்தைத் தமிழகத்துச் சமய தத்துவமாகக் காட்ட முனைந்துள்ளார். செந்திநாதையர் அப்படிக்காட்ட முனைந்தாலும் அதற்கான தரவுகளைத் தமிழகத்துக்கு வெளியிலே பெரிதும் கண்டு, வேதாகம நூல்களுக்கும் தமிழிலுள்ள சித்தாந்தக் கருத்துக்களுக்கும் இடையில் ஒரு இணைப்பை உருவாக்கியுள்ளார். சபாரத்தின முதலியார் உலகளாவிய தத்துவ விஞ்ஞான அடிப்படையில் பார்த்துச் சித்தாந்த உண்மைகளை நிறுவுகிறார். சிவபாத சுந்தரத்தின் நூல்கள் எளிமையுடன் சித்தாந்த சைவத்தை ஆய்வனவாக உள்ளன.

இன்றைய நிலை

ஆறுமுக நாவலர் காலம் முதல் இன்று வரை ஈழத்தில் சைவசித்தாந்தச் சிந்தனை வளர்ச்சியடைந்து வருவதைக் காண

முடிகிறது. அவர் மரபில் வந்த இன்றுள்ள சித்தாந்த அறிஞர் பண்டிதர் மு. கந்தையாவின் கட்டுரைகளும், 'சித்தாந்தச் செழும்புதையல்', 'சிவஞான சித்தித் திறவுகோல்' போன்ற நூல்களும் சிறந்தவையாகக் கருதப்படுகின்றன.

இன்றைய உலகில் எந்த ஆய்வுக்கும் ஒரு விஞ்ஞான நோக்கு வேண்டும். தற்கால ஆய்வுமுறைகளின் (Modern Research Methodology) அடிப்படையிலான சிந்தனை தேவை. இத்தகைய ஒரு ஆய்வை, சைவசித்தாந்தத் துறையில், ஈழத்தில் இன்று காணக்கூடியதாக இருக்கிறது. இதற்குத் தளமாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமும், ஈழத்தமிழறிஞர் சிலரும் விளங்குகின்றனர். ஆயினும், இன்றுள்ள சூழ்நிலையில், அங்குள்ள தமிழர் பல இழப்புக்களையும் பண்பாட்டுச் சிதைவையும் சந்திக்கும் வேளையில், இந்த நம்பிக்கை ஒளி தொடர்ந்து சுடர்விடுமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

பயன்பட்ட நூல்கள்

1. ஆறுமுகநாவலர், சைவ வினாவிடை 1ஆம் புத்தகம், மே.கு., 1991.
2. ஆறுமுகநாவலர், சைவ வினாவிடை 2ஆம் புத்தகம், மே.கு., 1991.
3. ஆறுமுகநாவலர், திருத்தொண்டர் புராணம், ஆறுமுக நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை அறக்கட்டளை, சிதம்பரம், 1951.
4. ஆறுமுகநாவலர் சபை, நாவலர் நூற்றாண்டு மலர், இலங்கை, 1979.
5. கணேசலிங்கம், க., காசிவாசி செந்திநாதையர், செந்திநாதையர் ஞாபகார்த்த சபை, யாழ்ப்பாணம், 1978.
6. கந்தையா, மு., சிவஞானசித்தித் திறவுகோல், குமரன் பதிப்பகம், சென்னை, 1991.
7. கைலாசபிள்ளை, த., ஆறுமுகநாவலர் சரித்திரம், மே.கு., 1991.
8. செந்திநாதையர், கந்தபுராண நவநீதம், யாழ்ப்பாணம்.
9. செந்திநாதையர், சிவஞானபோத வசனாலங்கார தீபம், சைவ வித்தியானுபாலன யந்திர சாலை, சென்னை, நளவருடம், சித்திரை மாதம்.

10. சுப்பிரமணியம், நா., *இந்தியச் சிந்தனை மரபு*, சவுத் ஏசியன் புக்ஸ், சென்னை, 1993.

11. லஷ்மணன். கி., *இந்திய தத்துவ ஞானம்*, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1987.

12. Devasenapathy, V.A., **Saiva Siddhanta,** University of Madras. 1974.

13. Ramachandran, T., **Saiva Siddhantam,** Dharmapura Adhinam, Vol.I.,1984.

14. Sabaratna Mudaliyar, S., **Essentials of Hinduism,** Meikandan Press, Madras, 1913.

15. Saveri, N.M., **A Catholic-Hindu Encounter,** 1978.

16. Saveri, N.M., **Journal of Siddhanta Studies**, Jaffna. July, 1974.

17. Sivapathasundaram, S., **The Saiva School of Hinduism,** Malaya Arulneri Thirukkoottam, Malaysia, 1975.

ஐரோப்பியத் தமிழ்க் கல்வி
(தோற்றமும் வளர்ச்சியும் இன்றைய நிலையும்)

முனைவர் எஸ். ஆரோக்கியநாதன்

சங்க காலத்தில் தமிழ்க் கல்வி என்பது தாய்மொழி யாளர்களுக்கு இலக்கியத்தைக் கற்றுத்தருவதாக அமைந்தது. தமிழ்க் கல்வி என்ற பெயரால் தமிழ் மொழியின் இலக்கியப் புரிதலுக்கான இலக்கணம் கற்றலும் இலக்கியம் படித்தலும் தமிழ்க் கல்வியாகக் கருதப்பட்டது. இலக்கியம் படித்தலும் இலக்கியம் படைத்தலுமாகிய இரு இலக்குகளைக் கொண்டு தமிழ்க் கல்வி தாய்மொழியாளர்களுக்கு வழங்கப்பட்டது. 'காரிகை கற்றுக் கவி பாடுதல்' எனும் வழக்கு இதன் காரணமாக எழுந்தது எனலாம்.

தமிழகத்தில் வாழ்ந்த பிறமொழியாளர்களும் தமிழ் மொழி பேசினர் என்பதற்கு உரையாசிரியர்களின் கூற்றில் மறைமுகச்சான்று உள்ளது. மெய்ப்பாடுகளில் ஒன்றாகிய நகையின் தோற்றவாயிலைக் கூற வரும்போது, 'ஆரியர் பேசும் தமிழின் கண்ணும் நகை தோன்றும்' எனக் கூறுவதிலிருந்து உணரலாம். ஆனால் ஆரியர்கள் - அயலவர்கள் முறையான கல்வி வழி தமிழ்ப் பேசக் கற்றுக் கொண்டனர் என்று கூறுவதற்கு எவ்வித சான்றுகள் இல்லை

யென்றும் தானாகப் பழக்கவழக்கத்தின் அடிப்படையில் தமிழ் பேசக் கற்றுக்கொண்டனர் என்றும் யூகிக்கவே வாய்ப்புள்ளது.

ஆரிய மன்னன் பிரகதத்தனுக்குத் தமிழ் உணர்த்த வேண்டி 261 அடிகள் கொண்ட குறிஞ்சிப்பாட்டினைக் கபிலர் பாடினார் என்ற செய்தி, பிறமொழியாளரிடம் தமிழிலக்கியப் புரிதலுக்கான முயற்சியும் அதற்காக ஓர் இலக்கியத்தைப் படைத்தலும் மேற்கொள்ளப்பட்டுள்ளதை உணர்த்துகிறது. இன்றைய தமிழர்களுக்கே குறிஞ்சிப்பாட்டின் வழி, தமிழை உணர்த்த முடியுமா என்ற ஐயம் இருக்கும்போது ஆரிய மன்னனுக்குக் கபிலரால் உணர்த்தப்பட்டது தமிழ் இலக்கிய அறிவா, தமிழ் மொழி அறிவா, அல்லது தமிழில் ஓர் இலக்கியம் படைக்கப்பட்டுள்ளது என்ற செய்தியா என்ற ஐயப்பாடு எழலாம். கவிதை பாடி, இலக்கியம் படைத்து, அரசனிடம் பொருள் பெறும் பரிசில் வாழ்க்கை மேற் கொண்டிருந்த புலவர் வரிசையினைச் சார்ந்த கபிலர் பிற மொழியாளனாகிய பிரகதத்தனுக்கு அவன் ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பில் பேசும் தமிழ் மொழியில் ஓர் இலக்கியம் படைக்கப்படுகிறது என்ற செய்தி போய்ச்சேரவே முயன்றிருத்தல் கூடும். அவனும் அவருக்குப் பரிசில் வழங்கித் தன் மொழிப்பற்றினை அந்த அளவில் வெளிப்படுத்திக் கொள்ள வாய்ப்புப் பெற்றிருக்கலாம்.

எவ்வாறாயினும் தமிழ்க்கல்வி முறையாகக் கற்றுத் தரப்படவில்லையெனவும் அதற்கான பாடநூல்கள் என எதுவும் இருந்ததற்கான சான்றுகள் இல்லையெனவும் அறியலாம். 'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே' என்பது கடும் முயற்சியை உணர்த்துகிறதேயன்றிக் கற்பிக்கும் பாடமுறை பற்றிக் குறிக்கவில்லை.

பண்டைக் காலத்தில் மொழிக்கல்வி என்பது இலக்கியக் கல்வியாகக் கருதப்பட்டு வந்துள்ளது. மொழியும் இலக்கியமும் வேறுபடுத்த முடியாதபடி இணைந்து கருதப் பட்டது. இலக்கியம் கற்பித்தலே மொழிக் கல்வியாக வழங்கப் பட்டது. ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னரே மொழிக் கல்வி வேறு இலக்கியக் கல்வி வேறு என்று உணரத் தலைப் பட்டனர். ஆனால் இன்றுங்கூட மொழியாசிரியர்களில் சிலர் இந்த உண்மையை ஏற்றுக் கொள்ள மறுப்பதைக் காணலாம்.

ஐரோப்பியர் ஆட்சிக்குத் தமிழகம் உட்பட்டபோது ஐரோப்பிய அதிகாரிகள் ராஜீய பரிபாலனத்திற்கு உள்நாட்டு மக்களுடன் தொடர்புகொள்ள தமிழ் மொழியறிவு தேவைப் பட்டது. மேலும், ஆட்சி விஸ்தீரணத்துடன் கிருத்துவ மதப் பரப்புதலும் தொடர்ந்து நடந்துவந்ததால், சமயப் பெரியோர்கள் உள்நாட்டு மக்களுடன் நல்லதொரு நட்புறவு ஏற்படுத்திக்கொண்டு மதப்போதகத்தை மேற்கொள்ள தமிழ்மொழியறிவுத் தேவைப்பட்டது.

இந்த இரு அவசியத் தேவைகளே ஐரோப்பியர்களைத் தமிழ் கற்றுக்கொள்ளக் கட்டாயப்படுத்தின. ஐரோப்பிய நாடுகளில் பிறமொழிகளை முறையாகக் கற்கும், கற்பிக்கும் பயிற்சிகள் செம்மையடைந்து பிறமொழி கற்றல்/கற்பித்தல் என்பது ஒழுங்குபட்ட ஓர் அறிவியல் துறையாக வளர்ந்திருந்த காரணத்தால் அந்த அனுபவங்களின் துணையோடு தமிழகம் வந்த ஐரோப்பியர்கள் சிலர் தமிழாசிரியர் சிலரிடம் தமிழ் கற்க முயன்றனர். மரபுவழி இலக்கணமும் இலக்கியமும் அவர்களுக்கு நம்மவரால் கற்றுத் தரப்பட்டதாக ஐரோப்பியர்கள் எழுதியுள்ள குறிப்புகளிலிருந்து அறியலாம். இவ்வாறு நம் மரபு வழித் தமிழ் கற்ற ஐரோப்பியர்கள், பின்னர் தாம் கற்ற தமிழை, பிற ஐரோப்பியர்களுக்குக் கற்றுத்தரும் பொருட்டு, அயல்மொழி கற்கும் ஐரோப்பிய அணுகுமுறைக்கு ஏற்ப வெறும் மொழி கற்பிக்கும் இலக்குடன் மாற்றியமைத்தனர். நான்-என், நீ-உன் என இடப்பெயர்கள் அட்டவணையிடப்பட்டதும் நான் இருக்கிறேன், நீ இருக்கிறாய், அவன் இருக்கிறான் என வினைச்சொல் ஒருமை பன்மை வேறுபாட்டுடன் மூவிடத்திற்கும் பட்டியலிடப் பட்டதும் நிகழ்ந்தன. இலத்தீன் மொழிக் கற்றல் முறையினை யொட்டி ஆங்கிலத்திலும் I am, you are, he is என வரிசைப் படுத்திக் கற்பித்தலைப் போன்று, தமிழ்மொழி போதனா முறை அயலவர்களால் உருவாக்கப்பட்டது.

தமிழ்ப் பண்டிதர் அல்லது அறிஞர் ஒருவரிடம் ஒரு ஐரோப்பியர் முதலில் மரபு முறைப்படித் தமிழ்க் கற்றுப் பின்னர் தாம் கற்ற தமிழ் இலக்கிய இலக்கணக் கல்வியைத் தமிழ்மொழியை மட்டும் கற்பிக்கும் ஐரோப்பிய அணுகு முறைக்கு ஏற்ப மாற்றி அமைத்து அதற்கேற்ப ஐரோப்பியர் களே பாடநூல்கள், இலக்கண நூல்கள், அகராதிகள் ஆகியன உருவாக்கி அதன்பின்னர் அந்த ஐரோப்பியரே பிற

ஐரோப்பியர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியராக மாறிய வரலாறே நமக்கு இருக்கிறது.

*1728*இல் 'A Grammar of the Common Dialect of Tamil Language' எனும் நூலினை எழுதிய பெஸ்கி நூல் முன்னுரையில் 'மதம் பரப்புதலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இந்நூல் துணை புரியும்' எனக் கூறுவதால் சமயப்பணி மேற்கொண்டவர்களின் உதவிக்குத் தமிழ் நூல்களை - மொழி நூல்களை ஐரோப்பியர்கள் உருவாக்கினர் என அறியலாம். மொழியியலாளர்களின் வருகைக்கு முன்னர் ஐரோப்பியர்களையன்றி நம்மவர்கள் தமிழை இரண்டாம் மொழியாக அயலவர்களுக்குக் கற்றுத்தர எவ்வித பாடநூல்களையும் முறையாக உருவாக்கவில்லையென்றே கருத வேண்டியுள்ளது.

தமிழகம் வந்த அயலவர்கள் தமிழ் கற்கும் நிலை விரிவடைந்து அயல்நாட்டில் அயலவர்கள் தமிழ் கற்கும் நிலை உருவானது. ஐரோப்பியர்கள் உருவாக்கிய பாட நூல்களின் துணைகொண்டு தாமே கற்றுத் தமிழகம் வந்த ஐரோப்பிய அதிகாரிகளும் மதபோதகர்களும் அயல்நாடுகளில் தமிழ்க் கல்விக்குக் கால்கோள் அமைத்தனர். நம்மிடையே நம்மவர்களால் ஆங்கிலமொழிக் கற்பித்தல்போல அயல்நாடுகளில் தமிழ்க்கல்வி நிகழ்ந்தது. தமிழ் உச்சரிப்பதற்கு மட்டும் நம்மவர்கள் அப்போது கிடைக்கும் பட்சத்தில் பயன்படுத்தப் பட்டார்கள்.

அயல்நாட்டில் அயலவர்க்குத் தமிழ்க் கற்றுத்தரும் சூழலில் தமிழ்மொழியில் நிலவும் இரட்டை வழக்குநிலை மொழி கற்போரைப் பெரிதும் அச்சுறுத்துகிறது. தமிழகத்துக்கு அப்பால் மொழியின் பேச்சு சூழலிலிருந்து முற்றும் விலகி, தமிழ்மொழியின் எழுத்து மற்றும் பேச்சு வழக்குகளில் ஏதாவது ஒன்றினை மட்டும் கற்றவர்கள் ஏதாவது ஒரு சூழலில் தாம் கற்காத ஒரு வாக்கினைக் கேட்க நேரிட்டால் புதியதொரு மொழியினைக் கேட்ட வியப்புக்குள்ளாகின்றனர். இரட்டை வழக்குடைய தமிழில் எவ்வழக்கினை எளிதில் கற்றுத்தருவது என ஐயம் வரலாம். கற்பித்தலில் எளிமை, கற்றலில் விரைவு ஆகியன இவ்விரு முறைகளின் சிறப்பினை மதிப்பிடப் பயன்படும் கூறுகளாக அமையும். இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தில் இரண்டாம் மொழியாகத் தமிழைப் பிறமொழியாளர்களுக்கு, ஆசிரியர்களுக்குக் கற்பிக்கும் சூழலில் ஒருமுறை முதலில்

எழுத்து வழக்கினையும் தொடர்ந்து பேச்சு வழக்கினையும் கற்றுத் தந்துள்ளனர். பின்னர் ஒருமுறை முதலில் பேச்சு வழக்கினையும் அதைத் தொடர்ந்து எழுத்து வழக்கினையும் கற்றுத் தந்துள்ளனர். இவ்விரு அணுகுமுறைகளுக்கிடையே கற்றல் கற்பித்தல் ஆகிய நிலைகளில் மிகப் பெரிய வேறு-பாடுகள் எதுவுமில்லையென்றே கண்டறிந்துள்ளனர். ஆயினும் எழுத்து மற்றும் பேச்சு வழக்கு இரண்டிற்கும் இடையே சொற்களிடை காணும் மாற்றங்களை மாற்றல் விதிகள் மூலம் விளக்க முயலும்போது எழுத்து வழக்கிலிருந்து மாற்றல் விதிகளின் வாயிலாகப் பேச்சு வழக்குச் சொற்களைப் பெறுவது எளிதாக இருக்கிறது - மாற்றல் விதிகளை எளிதாக அமைக்க முடிகிறது எனும் நடைமுறைப் பயனைக் கண்டறிந்துள்ளனர்.

இதனடிப்படையில், இன்று பெரும்பாலும் பேச்சு வழக்கினைக் கற்றுத்தரத் தொடங்கி, நெடுங்கணக்காகிய தமிழ் எழுத்துக்களை அறிமுகப்படுத்தி எழுத்துக்கள் வழி, பேச்சு வழக்கினைக் கற்றுத்தந்து, இருவழக்கிற்கும் பொதுவான இலக்கணத்தோடு பேச்சுவழக்கிற்குரிய சிறப்புக் கூறுகளையும் விளக்கிய பிறகு எழுத்து வழக்கினைக் கற்பித்து, பின்னர் எழுத்து வழக்கிலிருந்து சொற்கள் பேச்சு வழக்கில் எவ்வாறு சில மாற்றல் விதிகள் மூலம் பெறப்படுகின்றன என்று விளக்கிச் செல்வதே நடைமுறைக்கு உகந்ததாகக் கருதப்படுகிறது.

தாய்மொழிக் கல்வி, பிறமொழிக் கல்வி என்று வகைப்படுத்துவதைவிட மொழிக்கற்றல் சூழலின் அடிப்படையில் முதலாம் மொழியாகக் கற்றல், இரண்டாம் மொழியாகக் கற்றல், மூன்றாம் மொழியாகக் கற்றல் என பட்டநாயக் போன்ற வல்லுநர்கள் வகைப்படுத்தியுள்ளனர். வீடு, பள்ளி, சமூகம் ஆகிய மூன்று சூழல்களிலும் ஒரே மொழிப்பயனாகி, கற்பிக்கப்படும்போது அதனை முதலாம் மொழியாகக் கற்றல் எனக் கருதுவர். வீட்டைத் தவிர, பள்ளி மற்றும் சமூகச் சூழல்களில் பயன்படும் மொழியே கற்பிக்கப்படும்போது அதனை இரண்டாம் மொழியாகக் கற்றல் என்பர். வீடு, பள்ளி, சமூகம் ஆகிய மூன்று சூழல்களில் பயன்படாத ஒரு மொழியைக் கற்கும்போது அதனை மூன்றாம் மொழியாகக் கற்றல் என்பர். இதனைக் கீழ்க்காணும் அட்டவணை விளக்கும்.

கற்கும் மொழியும்-பயன்படு சூழலும்	கற்கும் மொழி வகை		
	முதலாம் நிலை	இரண்டாம் நிலை	மூன்றாம் நிலை
வீடு	✓	x	x
பள்ளி	✓	✓	x
சமூகம்	✓	✓	x

தமிழகத்தில் தமிழ்ச் சிறுவர்கள் கற்றல் முதலாம் மொழி நிலையாகும். கர்நாடகத்தில் தமிழர்கள் பெருமளவில் வாழுமிடங்களில் தமிழ் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப் படுகிறது. சிங்கப்பூர், மொரீசியஸ், இலங்கை போன்ற அயல் நாடுகளில் தமிழ்க்கற்றல் இரண்டாம் நிலையாகக் கருதலாம். தமிழ்ச் சமூகம் பெருமளவு வாழும் இடங்களில் உள்ள பள்ளிகளில் தமிழ்க் குடும்பத்தைச் சார்ந்த தமிழ்ப் பேசத் தெரியாத குழந்தைகளுக்குத் தமிழ்மொழி இரண்டாம் மொழியாகக் கற்றுத்தரப்படுகிறது. குடும்பம், சினிமா, தொலைக்காட்சி போன்ற மக்கள் தொடர்பு சாதனங்கள் வாயிலாக வெளிச்சூழல்களில் தமிழ்மொழியை இயல்பாகக் கேட்கிற வாய்ப்புகள் நிறையவே உள்ளன. இதைத்தவிர அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் தமிழ்மொழி அயலவர்களுக்கு மூன்றாம் மொழியாகக் கற்றுத்தரப்படுகிறது. தமிழர்கள் அதிகம் இல்லாத தொலைதூர வடமாநிலங்களில் வாழும் வடவர்கள் வகுப்பறையில் தமிழ் கற்றல்கூட மேற் கூறிய மூன்றாம் மொழியாகக் கற்கும் நிலைக்கு ஒப்பாகும். இந்திய மொழிகளுக்கிடையே ஒலியியல், தொடரியல் போன்ற மொழியியல் கூறுகளில் காணும் ஒற்றுமையின் காரணமாக அயல்நாட்டவரைவிட இந்தியர்கள் மூன்றாம் மொழியாகக் கற்கும் இந்திய மொழி எதனையும் (ஆரிய, திராவிட மொழிகள்) தாய்மொழியாளர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் அளவிற்கு ஓரளவு செம்மையாகவும் விரைவாகவும் எளிதாகவும் கற்றுக் கொள்கின்றனர். அடிப்படை ஒலி யமுத்தக் கூறுகளால் அயல்நாட்டவர்கள் வேறுபட்டிருப் பதால் அவர்களின் இந்திய மொழி உச்சரிப்பு அந்நியப்பட்டு இருப்பதை நாம் எளிதாக உணரமுடிகிறது.

அயல்நாட்டவர்க்கும் இந்தியர்க்குமிடையே நிலவும் தெளிவான பண்பாட்டு வேறுபாடுகளால் மூன்றாம் மொழி

யினைப் பயன்படுத்தும் உரைக்கோவை சிக்கலடைகிறது எனலாம். இந்தியர்களுக்கிடையே நிலவும் பொதுமைப் பண்பாட்டுக் கூறுகளால் அயல்நாட்டவர்களைவிட இந்தியர்கள் மூன்றாம் மொழியில் உரையாடலை மேற்கொண்டு எளிதில் புரிந்துகொண்டு செயல்பட முடிகிறது.

மேலைநாடுகளில் கடையொன்றில் நுழையும் வாடிக்கையாளரைப் பார்த்து புன்னகைபுரிந்து வரவேற்று 'உங்களுக்கு உதவலாமா' என்றோ 'நான் உங்களுக்கு என்ன உதவி புரிய வேண்டும்' என்றோ கேட்டு வியாபாரத்தையும் உரையாடலையும் தொடங்கும் பண்பாட்டிலிருந்து வரும் அயல்நாட்டவர்கள் தமிழகக் கடைகளில் அலுத்துக்கொண்டு வேண்டா வெறுப்பாக முகத்தை நிமிர்த்தி என்ன வேண்டும் என்று கேட்பதை ஒருவித பேச விரும்பாத எதிர்ச்செயலாகக் கருதிச் சங்கடமடைகின்றனர். உரைக் கோவையைத் தொடர்வது மேலும் கடினமாகிவிடுகிறது. 'கூட்டம் 6 மணிக்குத்தொடங்கும்' என்பதன் தொடரியல் பொருளைத் தெளிவாகக் கற்றுக்கொண்ட அயல்நாட்டவர் 6 மணி என்பதால் 8 மணிச்சுமாருக்குக் கூட்டம் தொடரும் என்ற மொழிப் பயன்பாட்டுப் பொருளையும் அவசியம் அறிந்து கொள்ள வேண்டும்.

மூன்றாம் மொழியாக ஒரு மொழி கற்பிக்கப் படும்போது பண்பாட்டுப் பொதுமை ஒரு கூறாக அமைய வேண்டும். பண்பாட்டு இயைபுடையவர்களுக்குக் கற்றுத் தருவதும் பண்பாட்டு அயலவர்களுக்குக் கற்றுத்தருவதும் மூன்றாம் மொழிக் கற்றலின்/கற்பித்தலின் அணுகுமுறைகளில் பெரும் வேறுபாட்டினை ஏற்படுத்துகிறது.

50களில் ஐரோப்பிய அமெரிக்கப் பல்கலைக் கழகங்களிலிருந்து மொழியியல் தரவுகளைத் தேடி இந்தியா நோக்கி ஆர்வமாக வந்த அயல்நாட்டு அறிஞர்கள் சிலர் தமிழைக் கற்றுச் சென்று மொழியியல் பாடத் திட்டத்தின்கீழ் மொழிக் கற்றல் என்ற நிலையில் தமிழ்மொழியைக் கற்றுத் தந்தனர். தெரிவு நிலை பாடமுறையின் காரணமாகவும் தமிழகத்தோடு எவ்வாறோ ஒருவகையில் தொடர்புபெற்ற அமெரிக்க மாணவர்கள் சிலர்-மிகச் சிலர் தமிழ் மொழியினைக் கற்க ஆரம்பித்தனர். அமெரிக்காவில் சிகாகோ, வாஷிங்டன், கலிஃபோர்னியா போன்ற ஊர்களில் உள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ்க் கற்பித்தலும் அதன்

பயனாய், தமிழ் ஆய்வுகளும் நடந்தன. தமிழ்க் கற்றலுக்குப் பின் நேர்முகப் பயிற்சிக்குத் தமிழகம் வர விரும்பும் அமெரிக்க மாணவர்களுக்கு நிதியுதவி கிடைப்பது அரிதாகிவிடுகிறது. இந்திய அரசு இந்தி மொழி கற்க இந்தியா வருபவர்களுக்கு முதல் வகுப்பு விமானப் பயணக் கட்டணத்துடன் இந்தியாவில் தங்கி ஓராண்டிற்குப் படித்துச் செல்லப் போதுமான செலவுத் தொகைகளையும் வழங்குகிறது. அயல்நாட்டிலுள்ள இந்திய தூதரகங்கள் இந்திமொழிக் கற்றலுக்கு எல்லாவித உதவிகளையும் புரிகின்றன.

தமிழ் கற்க வரும் மாணவர்களுக்குத் தமிழக அரசு விருந்தினர் மாளிகைகளில் இலவசமாகத் தங்கவோ அல்லது கட்டணச் சலுகையுடன் தங்கவோ அனுமதி வழங்க வேண்டும். அயல்நாட்டு மாணவர்களை ஊக்குவிக்காத நிலையில் தமிழ்மொழிக் கற்றல் அமெரிக்காவிலும் பிற ஐரோப்பிய நாடுகளிலும் மிகவும் குறைந்து வருகிறது. கோட்பாட்டு ஆய்வுகளில் ஈடுபட்டிருந்த மொழியியல் துறைகளேகூட அரசின் தாராள நிதியுதவி வேண்டி மொழியியலின் பயன்பாட்டுத் துறைகளாகிய கணிப்பொறி மொழித் தொடர்பான செயற்கை அறிவுத்திறனியல்களில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளனர். இச்சூழலில் மேலை நாடுகளில் அரிதாக அறியப்படும் தமிழ் போன்ற மொழிகளைக் கற்கும் ஆர்வம் அயல்நாட்டவர்களிடம் குறைந்து வருகிறது. மாநில அரசுகள் தங்கள் மொழி வளர்ச்சியில் அதற்கான நிதி ஒதுக்கீட்டில் அயல்நாட்டவர்க்கு மொழிக் கற்பித்தல் என்ற பணிக்குச் சிறப்பு ஒதுக்கீடு நல்கிட வேண்டும். இல்லையெனில் அயல்நாட்டில் தமிழ் மொழிக் கல்வி மெல்ல இனி மறையத் தொடங்கும் அச்சத்தைத் தோற்றுவிக்கும்.

கலைச்சொல்லாக்கமும் தரப்படுத்தல் வங்கியும்

முனைவர் கா.பொ. இரத்தினம்

இலங்கை அரச கரும மொழித் திணைக்களத்தில் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராயிருந்து ஆட்சிச் சொற்களைத் தமிழில் ஆக்கும் பணியில் 1956ஆம் ஆண்டு தொடக்கம் ஆறாண்டுகளுக்கு மேல் ஈடுபட்டேன். இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் மட்டுமன்றி மலேசியா சிங்கப்பூர் எனும் நாடுகளிலும் ஆக்கப்பட்ட ஆட்சிச் சொற்களையும் வழக்கிலிருந்த ஆட்சிச் சொற்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்தேன். ஆங்கிலச் சொற்களுக்கு ஈடாகத் தமிழில் வழங்கிய சொற்களிற் பல நாடுதோறும் வேறுபட்டனவாகக் காணப்பட்டன. ஒவ்வொரு நாட்டிலும் வழங்கிய சொற்களிலும் வேறுபாடுகள் காணப்பட்டன.

வேறுபாடுகள்

பாராளுமன்றம் என்பதைக் குறிக்க நாடாளுமன்றம், மக்கள் மன்றம், லோக் சபா முதலியன பயன்படுத்தப்பட்டன.

அலுவலகம் என்பதைக் குறிக்க ஆபீஸ், கந்தோர், செயலகம், பணிமனை, பணியகம் முதலியன வழக்கிலிருந்தன. திணைக்களம் என்பதனுடன் துறை, பகுதி, இலாகா முதல்யனவும் வழங்கப்பட்டன.

டாக்டர், முனைவர், பண்டாரகர், கலாநிதி, டாக்ரர், டாக்குத்தர் என்பன ஒரு பொருள் குறிக்குஞ் சொற்களாகக் காட்சியளிக்கின்றன.

ஸமஸ்கிருதம், சமஸ்கிருதம், சமசுகிருதம், சமற்கிருதம், சமக்கிருதம் என்றும் எழுதுகிறார்கள். காப்பி, கோப்பி, கருந்தேறல், குளம்பி முதலியன ஒருபொருள் குறிக்குஞ் சொற்களாகவுள. வாக்குச்சீட்டு, ஒப்போலை, வோட்டு, ஓட்டு என்பன ஒருபொருட்சொற்களாக வழக்கிற் காணப்படுகின்றன.

சிமெந்து, சிமேந்து, சீமேந்து, சிமிண்டு, சிமென்டு, சிமிட்டு, சிமிட்டி, சிமெண்டு, சிமின்ட், சிமின்ட்டு, சிமெண்ட், சிமெண்ட்டு எனவும் எவ்வித நெறிமுறைக்கும் அமையாமல் எழுதுகிறார்கள். Chemistry என்பதற்குக் கெமிஸ்தம், வேதி, வேதிநூல், இயைபுநூல், ரசாயனம், ரசாயனவியல், இரசாயனவியல் என்றும் Hydrogen என்பதற்கு ஐருதம், அய்ஜனகம், நீரகம், ஹைடிரஜன், ஐதிரஜன், ஹைட்ரஜன், நீர்வாயு, அயட்ரசன் என்றும் Physiology என்பதற்குச் சுகரணம், சுகரணவாதம், உடலியல், சரீரசாஸ்திரம், உடற்றொழிலியல், உடலியல் என்றும் கலைச்சொற்கள் ஆக்கப்பட்டுள.

தமிழ் நாட்டில் இயக்குநர் எனும் சொல் குறிப்பதை இலங்கையில் பணிப்பாளர் எனுஞ் சொல் குறிக்கிறது. இலங்கையில் திணைக்களம் என்பதைத் தமிழ் நாட்டில் துறை எனக் கூறுகின்றனர். Section - துறை.

எனவே, இந்த நாடுகளில் வழங்கும் சொற்களை ஒன்றுபடுத்துதற்கு - தரப்படுத்துதற்கு உரிய பணியை விரைவில் மேற்கொள்ள வேண்டும் என்பதை 1956ஆம் ஆண்டிலிருந்தே அமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் வற்புறுத்தி வந்தேன். 1956இல் இலங்கையில் இன்பத் தமிழ் எனும் நூலிற் பின்வருமாறு குறிப்பிட்டேன்.

1956இல் யான் விடுத்த வேண்டுகோள்

"தமிழகத்திலும், தமிழ் மக்கள் தொகையாக வாழும் இலங்கை, மலாயா, பர்மா, தென்னாப்பிரிக்கா, பீச்சித்தீவு, மொறிசியசு முதலிய பல நாடுகளிலும் தமிழ் மொழியின் ஆக்கங் கருதிப் பல முயற்சிகள் நடைபெறுகின்றன. வீட்டு மொழியாய் அஃது அடிமைப் பட்டுக் கிடந்த காலம் போய்விட்டது. கல்லூரிகளிலும், ஆட்சி நிலையங்களிலும் ஆலயங்களிலும் அது முதன்மை பெற்று வருகிறது. இவ்வாறு

பல துறைகளிலும் வளருந் தமிழ் மொழியின் வளர்ச்சியினை ஒருமுகப்படுத்தி, நாடுதோறும் வேறுபட்டுக் கிளை மொழிகளாகப் பிரிந்துவிடாமல் அதனைப் பாதுகாத்தற்கு ஓர் அகில உலகத் தமிழ் கலை மன்றம் அமைக்கப்படல் வேண்டும். இம்மன்றம் தமிழ் வழங்கும் எல்லா நாடுகளிலும் உள்ள தமிழ்மக்களோடும்-சிறப்பாகத் தமிழ் அறிஞர்களோடும் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். இந்த மன்றத்தின் தலைமை அலுவலகம் தமிழ்நாட்டில் இருத்தலே பொருத்தமானது. ஏனைய நாடுகள் ஒவ்வொன்றிலும் கிளை அலுவலகம் நிறுவப்படுதல் வேண்டும். இம்மன்றம் அரசியல் தவிர்ந்த ஏனைய துறைகளிலுஞ் சிறப்பாக மொழி, கலை, பண்பாடு முதலிய துறைகளிலும் உலகமெங்கும் வாழுந்தமிழ் மக்களிடையே தொடர்பை உண்டாக்கித் தமிழ் மொழியினதும் தமிழினத்தினதும் ஆக்கத்துக்கு உழைத்தல் இன்றியமையாதது".

இம்மன்றம் செய்யவேண்டிய பணிகள் பலவுள. இவற்றுள் உடனே செய்யப்பட வேண்டியது கலைச்சொற் கோவை ஒன்றினை அமைத்தலாகும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்பொழுது இலங்கையிலும் மலாயாவிலும் தமிழகத்திலும் பலகலைகளையுந் தமிழிற் கற்பிக்கத் தொடங்கியுளர். சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் ஒரு கலைச் சொற்கோவையினையும், சென்னை அரசினர் வேறொரு கலைச்சொற் கோவையினையும் வெளியிட்டுள்ள னர். பௌதிகம், இரசாயனம், கணிதம், புவியியல் முதலிய கலைகளுக்குரிய சொற்கோவைகளை இலங்கை அரசினர் வெளியிட்டுளர். ஏனைய கலைகளுக்குரிய சொற் கோவைகளையும் வெளியிட அவர்கள் முயல்கிறார்கள். இன்று வரை தமிழில் வெளிவந்த இக் கலைச் சொற்கோவை களிலுள்ள வேறுபாடுகள் பலவாகும். ஏறக்குறைய எழுபத்தைந்து சதவீதமான சொற்களிடையே வேற்றுமையும் முரண்பாடும் உண்டு. இந்த வேறுபாடுகளை நீக்க முயலுதல் தமிழார்வம் படைத்த பெருமக்களுடைய பெருங்கடனாகும்.

உலகிலுள்ள எல்லாத் தமிழ்ப் பாடசாலைகளும் கல்லூரிகளுங் கையாளுங் கலைச்சொற்கள் ஒரு தன்மையன வாகவே அமைதல் வேண்டும். ஆங்கிலம் போன்ற உலக மொழிகளில் இருப்பதுபோல், தமிழ்மொழியிலும் நாடுதோறும்

வழங்கும் கலைச் சொற்கள் எவ்வித வேறுபாடுமற்றனவாய் இருத்தல் வேண்டும். ஒரு நாட்டில் வெளியாகும் தமிழ்ப் பாட நூல்கள் ஏனைய நாடுகளுக்கும் பயன்படத் தக்கனவா யிருத்தல் வேண்டும். தமிழ் மொழி பல கிளை மொழிகளாகப் பிரிந்து போகாமல் இருத்தற்கும் இஃது இன்றியமையாதது.

கோலாலம்பூர் மாநாட்டில் முன்மொழிவு

இதனோடமையாது தமிழ்நாட்டுத் தமிழ்ப் பேரறிஞர் களுக்கும் தமிழ் நாட்டரசுக்கும் இதனைச் சுட்டிக்காட்டி ஆவன செய்யுமாறு வற்புறுத்தினேன்.

*1966*இல் கோலாலம்பூரில் நடைபெற்ற முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பின்வரும் எனது முன் மொழிவை நிறைவேற்றச் செய்தேன்.

"தமிழ் வழங்கும் நாடுகளில் பயன்படுத்தப்படும் கலைச்சொற்கள் யாவும் வேறுபாடின்றி இருத்தல் தமிழ் மொழியின் வாழ்வுக்கும் வளத்துக்கும் இன்றியமையாதது. இந்நாட்டரசுகள் ஒன்றோடொன்று தொடர்புகொண்டு இணைப்புக்குழு ஒன்றினை அமைக்க உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இம்மாநாடு இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் அரசுகளைக் கேட்டுக்கொள்வதுடன் இக்குழுவுக்கு அமைப்பாளராகத் தமிழக அரசினர் பணியாற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றது".

அம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட இம்முன் மொழிவினை அப்பொழுது தமிழ் நாட்டரசின் கல்வி தொழில் அமைச்சராயிருந்த முனைவர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு அனுப்பி இதனை நடைமுறைப்படுத்துமாறு கேட்டேன். இதனிற் குறிப்பிடப்பட்ட இணைப்புக் குழு ஒன்றை நிறுவுமாறு அவரை வற்புறுத்தினேன். அவர் எனக்கு இதுகுறித்து எழுதிய மறுமொழி எனக்கு எழுச்சியையும் மகிழ்ச்சியையும் நல்கியது.

அமைச்சரின் மறுமொழி

"சென்ற ஆண்டு கோலாலம்பூரில் நடைபெற்ற முதலாவது உலகத் தமிழ்க்கருத்தரங்கில் செய்த முடிவிற் கேற்ப மலேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளிலும் வழங்கிவரும் கலைச்சொற்களை ஒருமைப்படுத்தும் முயற்சிக்கான பணியை இவ்வரசு மேற்கொண்டு உள்ளது.

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய அரசுகளுக்கு விபரங்கள் கேட்டு எழுதினோம். மலேசியா, இலங்கை அரசுகள் பதில் எழுதியுள்ளன. சிங்கப்பூர் அரசின் பதில் இதுவரை கிடைக்க வில்லை. அந்த அரசின் பதிலும் கிடைத்தவுடன் தாங்கள் எழுதியுள்ளவண்ணம் ஒரு கூட்டத்தைச் சென்னையில் கூட்டுவதுபற்றி ஆராய்ந்து முடிவு செய்ய எண்ணியுள்ளோம்".

இஃது அமைச்சர் எழுதிய மறுமொழியின் ஒரு பகுதியாகும்.

கலைச் சொற்களைத் தரப்படுத்தலின் இன்றியமை யாமையைப் பின்னரும் 1968இல் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் "அரங் கேற்றி விவாதிக்கப்பட்ட" எனது "கலைச் சொல்லாக்கம்" எனும் ஆய்வுரையிலும் பின்வருமாறு வற்புறுத்தினேன்.

சென்னை மாநாட்டில் மீண்டும் வற்புறுத்தல்

"கலைச் சொல்லாக்கத் தந்தையாக விளங்கும் கிறீன் வைத்தியர் வடசொல்லாக்கத்திற்கு இலக்கண நூலாக விதி வகுத்ததைப் போன்று, தாமும் சில விதிகளை வகுத்தே கலைச் சொற்களை ஆக்கினர். அவர் இலங்கையிலிருந்து பணியாற்றினாரெனினும் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் வழக்காறெய்தும் கலைச்சொற்கள் வேறுபாடற்றனவா-யிருத்தல் வேண்டுமெனும் நோக்கம் உடையவராயிருந்தார்; இந்நோக்கத்தை நிறைவேற்றத் தமிழ் நாட்டுடன் தொடர்பு கொண்டார். மேனாட்டு மொழிகளிலும் கலைச்சொற்கள் தொடங்கிய காலத்திலே அவை வேறுபாடுகளையுடையன-வாயிருந்தன. இவற்றைச் சீர்ப்படுத்தப் பல கழகங்கள் பணியாற்றின. உலகம் முழுவதும் வழங்கும் தாவரவியல், விலங்கியல் சொற்களை ஒன்றுபடுத்துவதற்கு உலக ஆணைக் குழுக்கள் உழைத்தன. எனவே, இன்று தமிழ் வழங்கும் நாடு களின் அரசுகளும் தமிழ் ஓம்புங் கழகங்களும் கலைச்சொற் களை ஒருமைப்படுத்துதற்கு ஒன்றுபட வேண்டியது இன்றியமையாதது"

இன்றுவரை தமிழ்க் கலைச் சொற்களைத் தரப் படுத்துதற்கு நான் தொடர்ந்து வற்புறுத்தி வந்ததற்கிசைய எவ்வகையான இணைப்பு முயற்சிகளும் மேற்கொள்ளப் படவில்லை.

சில கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன. கட்டுரைகள் எழுதப்பட்டுள. எனினும் இவையாவும் தமிழ்நாட்டுக் குள்ளேயே முடங்கியுள.

நான் முன்னர்க் குறிப்பிட்டவாறு தமிழ் நாட்டில் மட்டுமன்றி இலங்கையிலும் சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் தமிழ் பல துறைகளில் வளர்ந்து வருகிறது. இந்நாடுகளில் கலைச் சொல்லாக்கக் குழுக்கள் இயங்கி வருகின்றன. இந்நாடுகளிலும் பல நாளேடுகளும் கிழமை, திங்கள் ஏடுகளும் தமிழில் வெளிவருகின்றன.

இலங்கையிலே ஆட்சியியல்-அறிவியல் கலைச் சொல்லாக்கம் நூலாக்கம் முதலியன தமிழ் நாட்டுடன் போட்டி போடுகின்றன. சில துறைகளில் இவை இலங்கையில் பெரும் முன்னேற்றம் அடைந்துள. அங்கே பாலர் வகுப்பி-லிருந்து பல்கலைக் கழக வகுப்புக்கள் வரை சிங்களத்தைப் போலத் தமிழும் கட்டாய, பயிலும் மொழியாக்கப்பட்டுளது. இந்தக் கட்டாய நிலை தமிழ் நாட்டில் இன்னும் தோன்ற வில்லை. இதனால் இத்துறைகளிலே தமிழின் வளர்ச்சி தளர்ச்சியடைகிறது.

தமிழ் நாட்டிலே தமிழ் மக்களின் தொகை ஏனைய நாடுகளிலுள்ள தமிழர்களின் தொகையிலும் மிகக் கூடியதெனினும் பிற நாடுகளிலுள்ள தமிழ் மக்களின் தொகையை நூற்று வீதமாகக் கணித்து ஒப்பிடும் பொழுது இந்தியத் தமிழ் மக்களின் நூற்றுவீதம் குறைவாகவே உளது. இலங்கையிலே தான் கூடிய நூற்றுவீதத்தினர் உளர்.

தமிழ் பேசும் மக்கள் இலங்கையில் 30%. இந்தியாவில் 8%. மலேசியாவில் 11%. சிங்கப்பூரில் 6.5% ஆவர். இந்தக் கணிப்பைத் தமிழக மக்கள் எப்பொழுதும் உளத்திருத்தித் தமிழ் மொழி ஆக்கப் பணிகளில் ஏனைய நாடுகளுக்கும் உரிய மதிப்பையும் பங்கையும் வழங்குதல் இன்றியமையாதது. இந்த நாடுகளில் மட்டுமன்றி இப்பொழுது பீச்சித் தீவு, மொறிசியசு, பர்மா, தென் ஆப்பிரிக்கா, கனடா, இங்கிலாந்து, பிரான்சு, சேர்மனி முதலிய நாடுகளிலும் வாழும் தமிழர்கள் தங்கள் மொழியையும் பண்பாட்டையும், கலையையும் ஓம்புதற்குப் பல தொல்லைகளுக்கிடையில் முயல்கிறார்கள் என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் மறத்தல் கூடாதென்-பதையும் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

இணைப்புக்குழு

எனவே கலைச் சொல்லாக்கத்திலும் மொழி பெயர்ப்பிலும் ஈடுபட்டுள்ள நாடுகளின் பேராளர்களைக் கொண்ட ஓர் இணைப்புக் குழு இப்பொழுதேனும் நிறுவப்படல் இன்றியமையாதது. இக்குழு கலைச் சொல்லியல் மொழிபெயர்ப்பியல் முதலிய பணிகளை ஒருமுகப்படுத்தற்கும் தரப்படுத்தற்கும் விரைந்து தொழிற்படல் வேண்டும்.

இத்துறையிலே தமிழ்ப் பல்கலைக் கழகம் நல்ல பணிகள் சிலவற்றைச் செய்து வருகிறதெனினும் அஃது பன்னாட்டறிஞர்களைக் கொண்ட இணைப்புக் குழுவினை நிறுவி விரைந்து தொழிற்படல் வேண்டும். இக்குழுவினை நிறுவுதற்குத் தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் நிதியையும் தமிழ் நாட்டரசு உடனே நல்கல் வேண்டும். தமிழ் நாட்டரசின் பேராதரவின்றி இப்பணியை எந்நிலையமும் தொடர்ந்து நன்கு செய்ய முடியாது. இதனை நன்கு உணர்ந்தமையாலேயே 1964இல் நான் தமிழ் நாட்டரசினை இந்த இணைப்புக் குழுவை நிறுவுமாறு தூண்டினேன்.

கலைச் சொற்களைத் தரப்படுத்தும் பணியினை மேற்கொள்ளும் இணைப்புக் குழுவினர் கலைச் சொல்லாக்கப் பொது விதிகளை நன்கறிந்தவர்களாயிருத்தல் இன்றியமை யாதது. 1968இல் இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் ஆராயப்பட்ட எனது கலைச் சொல்லாக்கம் எனும் கட்டுரையில் தமிழ் கூறு நல்லுலகத்தில் 1968ஆம் ஆண்டுவரை நடைபெற்ற கலைச் சொல்லாக்கப் பணி களையும் ஆக்கப்பட்ட கலைச் சொற்களின் தரத்தையும், தன்மையையும், அடிப்படை வேறுபாடுகளையும், கலைச் சொல்லாக்க முறைகளையும், இடர்ப்பாடுகளையும் விளக்கியுள்ளேன். 1968 வரை வெளியிடப்பட்ட கலைச் சொற்பட்டியல்களையும் கால அடைவின்படி சுட்டிக் காட்டியுள்ளேன். இக்கட்டுரை அம் மாநாட்டுக் கருத்தரங்கு நிகழ்ச்சிகள் - மூன்றாம் தொகுதியில் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ் உணர்ச்சி எனும் எனது நூலிலும் இடம் பெற்றுளது.

தரப்படுத்தும் முறை

இப்பொழுது ஏறக்குறைய இரண்டு இலட்சம் கலைச் சொற்கள் உருப்பெற்றுள. இவை தரப்படுத்தப்படல்

வேண்டும். பொருத்தமான - மிகப் பொருத்தமான சொற்களையே அறிவியலில் எல்லோரும் வழங்கல் வேண்டும். காட்சிப் பொருள் கருத்துப் பொருள்களைக் குறிப்பதற்கு ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சொல்லை மட்டுமே பயன்படுத்தல் இன்றியமையாதது. இச் சொற்களைத் தகுதி வாய்ந்த அறிஞர்களைக் கொண்ட இணைப்புக் குழு தெரிந்தெடுத்தல் வேண்டும். இக்குழுவினுடைய முடிவை யாவரும் ஏற்கும் கட்டுப்பாடு இன்றியமையாதது. இக்குழு தேர்ந்து குறிக்கும் சொற்களிலும் சிறந்த சொற்களிருப்பின் அன்றேல் புதியனவாக நல்ல சொற்கள் ஆக்கப்பட்டால் அவற்றை இக்குழுவுக்கு அனுப்புதல் வேண்டும். குழு அவற்றை ஆய்ந்து முடிவு செய்து மாற்றங்களை இடையிடையே வெளியிட வேண்டும். தரப்படுத்தலினால் உறுதியாக்கப்பட்ட சொற்களில் மாற்றஞ் செய்தல் தொடர்ந்து நடைபெறல் இன்றியமையாதது. தமிழ் வழங்கும் நாடுகள் யாவும் இக்குழுத் தேர்ந்தெடுத்து வெளியிட்ட பட்டியல்களிலுள்ள சொற்களையே வழங்குதற்கு உடன்படல் வேண்டும்.

ஆறு கோடிக்கு மேற்பட்ட சொல்வளத்தையுடைய ஆங்கில மொழி இப்பொழுதும் புதுச் சொற்களைச் சேர்த்துக் கொள்கின்றது. பல நாடுகளில் கலைச் சொல்லாக்கக் குழுக்கள் தொடர்ந்து இயங்குகின்றன. எனவே தமிழும் எப்பொழுதும் புதுச் சொற்களை ஆக்கித் தன் வளத்தைப் பெருக்கிக் கொள்ளுதற்குத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நிலையான இணைப்புக் குழுவும், கலைச்சொல்லாக்கக் குழுக்களும் தொடர்ந்து பணியாற்றல் இன்றியமையாதது.

கலைச்சொல் வங்கி

இந்த இணைப்புக்குழு ஒரு கலைச்சொல் வங்கியாகப் பணியாற்றல் இன்றியமையாதது. இந்தக் கலைச்சொல் வங்கி தமிழ்நாட்டரசின்கீழ் அரசின் பொருளுதவியுடன் சில அமைப்பு விதிகளுக்குட்பட்டுத் தொடர்ந்து தொழிற்படல் வேண்டும்.

முன்னர்க் குறிப்பிட்டவாறு தரப்படுத்தப்பட்ட சொற்கள் யாவற்றையும் தொகுத்து இவ்வங்கி ஒரு கலைச் சொல் அகர முதலியை வெளியிடல் வேண்டும்.

இந்த அகரமுதலியிலுள்ள சொற்களுக்குச் சிறந்த மாற்றுச்சொற்களை உருவாக்குவோர் தம் சொற்களை இந்த வங்கிக்கு அனுப்புதல் வேண்டும். இவ்வாறு அனுப்பப்படுஞ்

சொற்கள் சிறந்தன என வங்கி கருதினால் அவற்றையே ஆளுமாறு ஆணையிடல் வேண்டும்.

வங்கி ஏற்கத்தக்க சொற்களை அனுப்புவோருக்கு வங்கி பாராட்டும் பரிசிலும் வழங்கி ஊக்குதல் வேண்டும். புதுச்சொற்களை ஆராய்ந்து பரிந்துரை செய்தற்கு இந்தக் கலைச்சொல் வங்கி அறிஞர் குழு ஒன்றைத் தன் உறுப்பாக நிறுவுதல் இன்றியமையாதது.

இந்தக் கலைச்சொல் வங்கியை உலகத் தமிழர்கள் தங்கள் வங்கியாக ஏற்று அதனைப் பேணிப் போற்றுதல் வேண்டும். ஆங்கிலச் சொற்களுக்கு ஈடான கலைச் சொற்கள் தேவைப்படுவோர் இந்த வங்கியுடன் தொடர்பு கொள்ளலாம்.

தமிழ்நாட்டரசின் கடமை

இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் அரசுகளுடன் தொடர்புகொண்டு இந்த வங்கியை அமைத்தால் அவ்வரசு களும் இந்த வங்கியின் வழிப்படுத்தலை ஏற்றுக்கொள்ளும்.

இந்நாட்டரசுகளுடன் தொடர்புகொண்டு இந்தக் கலைச்சொல் வங்கியை அமைத்தற்கு வாய்ப்பும் உரிமையும் தகுதியும் முதன்மையும் தமிழ்நாட்டு அரசுக்கே உரியது. எனவே, இந்த வங்கியை நிறுவத் தமிழ் நாட்டரசு உடனே நடவடிக்கை எடுத்தல் இன்றியமையாதது.

தமிழ் மணக்கும் போலந்து

முனைவர் இராம. சுந்தரம்

போலந்து நாட்டின் தலைநகரான வார்சாவிலுள்ள வார்சா பல்கலைக் கழக இந்தியவியல் துறையின் தமிழ்ப்பிரிவு தனது வெள்ளிவிழாவை அடுத்த ஆண்டு கொண்டாட இருக்கிறது. 1955 முதல் முதுகலைப் பட்டப்படிப்பு நிலையில் நடைபெற்றுவரும் இந்தியவியல் படிப்பின் வளர்ச்சியாக 1972இல் தமிழ்மொழிப் பிரிவு தொடங்கப்பெற்றது. அந்தப் பிரிவைத் தொடங்கிவைத்து 1979 வரை ஏழு ஆண்டுகள் அங்குப் பணியாற்றியவன் என்ற நிலையில் சில கருத்துகளைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

முதுகலைப் பட்ட வகுப்பு ஐந்து ஆண்டு காலவரையறை உடையது. மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, தத்துவம், வரலாறு தொடர்பான பாடங்கள் கற்பிக்கப் படுகின்றன. ஆய்வேடு ஒன்றும் (50 பக்க அளவு) அளிக்கப் பட வேண்டும். வடமொழி கட்டாய பாடம். முதல் இரண்டு ஆண்டுகள் அனைவருக்கும் இது கற்பிக்கப்படுகிறது. இரண்டாமாண்டு முதல் இரண்டாவது இந்திய மொழி ஒன்று கற்பிக்கப்படும். மூன்றாம்/நான்காம் ஆண்டுகளில் மூன்றாவது இந்திய மொழி கற்றுத்தரப்படும். ஒரு மாணவர் எந்த

மொழியில் சிறப்பார்வம் காட்டுகிறார் என்பது அவர் இரண்டாம் ஆண்டில் தேர்ந்தெடுக்கும் மொழியையொட்டித் தெரியவரும். வடமொழியில் ஆர்வம் காட்டுபவர் ஐந்து. ஆண்டுகளும் வடமொழியும், மூன்றாமாண்டிலிருந்து இந்தி/ வங்காளியும் கற்பார். தமிழ் மொழியில் ஆர்வம் காட்டுபவர் இரண்டாமாண்டு முதல், படிப்பு முடியும் வரை தமிழில் தேர்ச்சி பெறுவார். இவருக்கு மூன்றாவது/நான்காவது ஆண்டில் மலையாளம் துணை மொழியாக ஓராண்டு கற்றுத்தரப்படும். இந்தி மொழி மாணவர் வங்காளத்தைத் துணைமொழியாகவும் வங்காள மொழி மாணவர் இந்தி மொழியைத் துணை மொழியாகவும் கற்பார். மாணவர் களைத் தேர்ந்தெடுக்க ஒரு நேர்காணல் நடத்தப்படும்.

கடந்த 23 ஆண்டுகளில் ஏறத்தாழ 50 மாணவர்கள் தமிழ் பயின்றனர். இவர்களுள் சிலர் தமிழ் இலக்கியம், இலக்கணம், பண்பாடு தொடர்பான தலைப்புகளில் ஆய்வேடுகள் தயாரித்துள்ளனர். திருமுருகாற்றுப்படையை அடிப்படையாக வைத்துத் தமிழ்நாட்டு முருக வழிபாடு பற்றிய ஆய்வேட்டில் திருமுருகாற்றுப்படை போலிஷில் மொழி பெயர்க்கப்பட்டது. இதைச் செய்த தனுத்தாவிஞ்சு கேவிச் என்ற மாணவி தமிழ்ப் பழமொழிகளையும் போலிஷ் பழமொழிகளையும் ஒப்பிட்டு ஆய்வுக்கட்டுரை வரைந்தார். 'தனிமரம் தோப்பாகாது' என்பதற்கிணையான பழமொழி போலிஷில் உண்டு. சில மரபுத்தொடர்கள்கூட இரண்டுக்கும் பொதுமையாக உள்ளன (உ-ம்) 'நெஞ்சில் கைவைத்துச் சொல்'. இவர் தமிழில் நன்கு எழுதவும் பேசவும் திறமை பெற்றதோடு ஓராண்டு காலம் சென்னைப் பல்கலைக் கழகத்தில் போலிஷ்-தமிழ் அகராதி தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

கதஷீனா என்ற மாணவி நன்னூல் சந்தி விதிகளை ஆராய்ந்தார். பாலைபாடிய பெருங்கடுங்கோவின் கலித்தொகைப் பாடல்கள். திருவெம்பாவையும் பக்தி இலக்கியமும். இருள மக்களின் பழக்க வழக்கங்கள், தமிழில் ஆக்கப்பெயர்கள் என்ற தலைப்புகளிலும் ஆய்வேடுகள் அளிக்கப்பட்டன. மாணிக்கவாசகரிடம் ஈடுபாடு கொண்ட ததேயுஸ் ஹெர்மன் திருவெம்பாவை. திருப்பாவை ஆகியவற்றை அழகிய போலிஷில் மொழிபெயர்த்து Literature na Swiecie (உலக இலக்கியம்) என்ற இதழில்

வெளியிட்டார். இவர் தற்போது அங்குத் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். இவரும் தமிழகத்தில் சில திங்கள் தங்கித் தமிழியல் ஆய்வை மேற்கொண்டார்.

மாணவர்கள் உதவியுடன் ஜெயகாந்தன் சிறுகதை ஒன்றும், பாரதியார் பாடல்கள் சிலவும், லலிதாம்பிகை அந்தர்ஜனத்தின் மலையாளக்கதை ஒன்றும் மொழி பெயர்க்கப்பட்டன. இவற்றுள் ஜெயகாந்தனின் 'யுக சக்தி' என்ற கதை 'பாட்டி' என்ற பெயரில் வெளியாயிற்று. எனது துணையுடன் பேர்க்தான் ஹெம்பார்ஸ்கி திருக்குறளைப் போலிஷில் மொழிபெயர்த்தார். குறள் வடிவில் மொழி பெயர்க்கப்பட்ட இந்த நூல் 'திருக்குறள் - தென்னிந்திய பைபிள்' என்ற தலைப்பில் 1977இல் வெளியாயிற்று. இதற்கு நல்ல வரவேற்பு. 10,000 படிகள் மிக விரைவில் விற்பனை யாயின. 1958இல் வந்தா தினோவ்ஸ்கா என்பவர் திருக்குறளைப் போலிஷ் உரைநடையில் வெளியிட்டார் என்பது குறிப்பிடத் தக்கது. 'Peezja' என்ற இதழில் திருக்குறள் பற்றிய என் கட்டுரை வெளியாயிற்று. மேலும், பாலைப்பாட்டு, வரிப்பாட்டு, தமிழிலக்கியம் - சில குறிப்புகள் என்ற பொருளில் கட்டுரைகள் வெளியிட்டேன். 'இந்திய இலக்கிய வரலாறு' என்ற தொகுப்பில் வெளிவரும் வண்ணம் மலையாள இலக்கியம் பற்றிய கட்டுரையை எழுதிக் கொடுத்தேன். தமிழிலக்கியத்துக்குக் கிறிஸ்தவர் தொண்டு, தெருக்கூத்து பற்றிய கட்டுரைகளும் பிறகு வெளிவந்தன. இந்திய இயல் வளர்ச்சிக்குப் போலந்தின் பங்களிப்பு பற்றிய போலிஷ் கட்டுரை ஒன்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டேன். மாணவர்கள் பயன்பாட்டுக்காகத் 'தமிழ் வாசகம்' ஒன்றும் பல்கலைக்கழகம் வழி வெளியிடப்பட்டது.

டாக்டர் இந்திரா பார்த்தசாரதி, டாக்டர் தி.சு. நடராசன், டாக்டர் கே. சுப்பிரமணியன் ஆகியோர்கள் 1980 தொடக்கம் அங்குப் பணியாற்றினர். தற்போது டாக்டர் நாச்சிமுத்து பணியாற்றி வருகிறார். இவர்களது வழி காட்டலில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் திருக்குறள், குறவஞ்சி நாடகம் பற்றிய ஆய்வுகள் குறிப்பிடத்தக்கன. அன்னாருஷியோ என்ற மாணவி தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தங்கி, குறவஞ்சி நாடகம் பற்றிய ஆய்வைத் தொடர்ந்தார். நதாலயா என்ற மாணவி மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் கல்வெட்டியல் ஆய்வு மேற்கொண்டார்.

டாக்டர் இந்திரா பார்த்தசாரதி 'ஏசுவின் தோழர்கள்' என்ற நாவலை, போலந்தை மையப்படுத்தி எழுதி வெளியிட்டார்.

போலந்து-இந்திய நட்புறவுக் கழகமும், இந்தியத் தூதரகமும் இந்தியவியல் படிப்புக்கு உதவுகின்றன. நட்புறவுக் கழகத்தின் சார்பில் நான் சில சொற்பொழிவுகள் நிகழ்த்தினேன். தூதரகம் தினமணி, தாமரை, மாத்ருபூமி ஆகிய இதழ்களை நல்கின. மாணவர்கள் தற்காலத் தமிழ், மலையாளம் பற்றி அறிய இவை பெரிதும் துணைபுரிந்தன.

இந்தியவியல் துறையில் தமிழியல், திராவிடவியல் தொடர்பான நூல்கள் கணிசமான அளவில் உள்ளன. இந்திய பண்பாட்டு உறவுக் கழகம் (Indian Council for Cultural Relations, New Delhi) தமிழறிஞர்களை வார்சா பல்கலைக் கழகத்துக்கு ஆசிரியர்களாக அனுப்புவதோடு, நூல்களையும் கொடுத்துதவுகின்றது.

தமிழ்-போலிஷ் அகராதி இல்லாத குறையைத் தமிழ்-ரஷ்ய அகராதி ஓரளவு தீர்க்கிறது என்றாலும், தமிழ்-போலிஷ் அகராதிப்பணி உடனடியாகச் செய்ய வேண்டியதாகும். அதேபோல, தமிழ் இலக்கணம் ஒன்றும் போலிஷ் மொழியில் எழுதப்படவேண்டும். சமஸ்கிருத மொழிக்கான இலக்கணம் ஒன்று ஆந்திரே கவ்ரோன்ஸ்கி என்பவரால் எழுதப்பட்டு 1932இல் வெளியாயிற்று. இவர் கிரேக்க-சமஸ்கிருத நாடகங்களை ஒப்பிட்டு ஆராய்ந்தவர்.

போலந்தில் தமிழியல் கல்வி வளர்ச்சி பெறப் போலந்து மக்களின் இந்தியப் பற்றுதான் காரணமாகும். 'வெள்ளத்தனைய மலர் நீட்டம்' என்பதற்கேற்ப, போலந்து மக்களின் ஆர்வமே தமிழ் மொழி வளர்ச்சிக்கு உதவுகிறது. போலந்து, இந்திய அரசியல் உறவுக்கு 50 ஆண்டுதான் ஆகிறது. ஆனால் இந்தியவியல் படிப்புக்கு 170 ஆண்டு ஆகிறது எனலாம்.

1809இல் வாலெந்தெ ஸ்கொரோகுத் மயேவ்ஸ்கி என்பவர் வடமொழி நெடுங்கணக்கு, வடமொழி-போலிஷ் சொல் ஒப்புமை பற்றி ஆய்வு நடத்தினார். தமது சொந்தச் செலவில் வடமொழி அச்செழுத்துகளை வரவழைத்து, பிரஹ்ம வைவர்த்த புராணத்தைக் குறிப்புரையுடன் வெளி-யிட்டார். இராமாயணச் சுருக்கத்தையும் போலிஷில் வெளியிட்டார். மனோவ்ஸ்கி என்பவர் 1870களில் சமஸ்கிருத-

சிலாவிக் மொழிகளை ஒப்பிட்டு ஆய்வுரைகளை வெளியிட்டார். 1930களில் இந்தியவியல் துறை பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டது. இந்தியவியல் துறையில் 15 ஆண்டுகள் பேராசிரியராகப் பணியாற்றிய டாக்டர் ஸ்வுட்சிகியேவிச் அர்த்த சாஸ்திரம், இராமாயணம் முதலியவற்றில் சிறந்த ஆய்வுகள் செய்தவர். பன்மொழிப் புலவரான இவர், பௌத்த மதக் கருத்துக்களிலும் ஈடுபாடு காட்டினார்.

இந்தியத் தத்துவம், புத்தர், மகாத்மா காந்தி, யோக சாஸ்திரம், கலை, பண்பாடு முதலியவற்றில் போலந்து மக்களுக்கு ஆர்வம் உண்டு. இதை அவர்கள் இந்திய மக்களிடம் பழகும் முறை கொண்டு அறியலாம். தமிழ் இலக்கியப் பகுதிகள் வெளிவந்த காலக்கட்டத்தில் அதில் ஆர்வம் காட்டினர். திருக்குறளைப் படித்த ஒரு இராணுவ வீரர் அதைப் பாராட்டிச் சொன்னபோது 'வான்புகழ் கொண்ட வள்ளுவனை'த் தரிசிக்க முடிந்தது. இந்த ஆர்வந்தான் இன்னும் அங்குத் தமிழ் மணக்க உதவுகிறது.

போலந்தில் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்றுவரும் தமிழியல் படிப்பின் விளைவாகக் கீழ்க்கண்டவற்றைக் கூறலாம்:

1) ஏறத்தாழ 50 மாணவர்கள் தமிழ் கற்றனர். இவர்களில் இருவர் தற்போது அங்குத் தமிழாசிரியர்களாய்ப் பணிபுரிகின்றனர்.

2) இம்மாணவர்களுள் சிலர் தமிழில் எழுத, படிக்க, பேசத் திறன் பெற்றனர்.

3) திருக்குறள், திருமுருகாற்றுப்படை, திருப்பாவை, திருவெம்பாவை, பாலைக்கலி, நன்னூல் சந்தி விதிகள், ஜெயகாந்தன், பாரதி படைப்புக்கள், குறவஞ்சி நாடகங்கள் போலிஷில் வெளியாயின.

4) தமிழ் இலக்கியம், பண்பாடு பற்றிய செய்திகள் போலிஷில் அறிமுகப்படுத்தப்பட்டன.

5) திராவிட இயல், தமிழியல் தொடர்பான நூல்கள் சேகரிக்கப்பட்டன.

6) தமிழ்-போலிஷ் ஒப்பாய்வு, அகராதிப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

மொரீசியசில் தமிழியல் ஆய்வு

முனைவர் சு. இராசாராம்

தமிழியல் ஆய்வு என்பது தமிழ் இலக்கியம், மொழி, சமூகம், பண்பாடு, கல்வி என்னும் தளங்களில் தற்சார்பின்றி நிகழ்த்துவது எனக் கொண்டால் மொரீசியசைப் பொறுத்தவரையில் தமிழியல் ஆய்வின் தளம் தமிழ்க்கல்வி ஒன்றே எனலாம். தமிழ் இலக்கியம், மொழி, சமூகம், பண்பாடு ஆகியவை குறித்த ஆய்வுகள் இங்கு இன்னும் வளரவில்லை. இவ் ஆய்வுச்சூழலுக்கு மொரீசியசின் தமிழ்மொழிச் சூழமைவு (language situation) முக்கிய காரணமாகும். இந்நாட்டின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட பத்து விழுக்காட்டினர் தமிழர்களாவர். இருப்பினும் தமிழைப் பேசுவோர் எண்ணிக்கை மிகவும் குறைவு. தமிழ் பேச்சு வழக்கில் இல்லை என்றே கூறலாம். ஆனால் சிறுபான்மையினர் மொழியும் பண்பாடும் காக்கப்பட வேண்டும் என்னும் மொரீசியஸ் அரசின் குறிக்கோள் காரணமாகக் கல்வித்திட்டத்தில் தமிழ் கட்டாயப் பாடமாக்கப்பட்டுள்ளது. கல்வித் திட்டத்திலும் மேனிலைப் பள்ளியோடு தமிழ்க்கல்வி நிறைவுபெற்று விடுவதால் பல்கலைக் கழக நிலையில் ஆய்வு மேற்கொள்ளும் வாய்ப்பும் வசதியும் இங்கு இன்னும் உருவாகவில்லை. இவ் ஆய்வுச் சூழலை மொரீசியஸ் தமிழர்களின் குடியேற்ற

வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு கல்வி மொழியியல் (Educational Linguistics) அணுகுமுறையில் விரிவாகக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஆங்கிலக் காலனி நாடுகளில் 1834ஆம் ஆண்டு அடிமை முறை ஒழிக்கப்பட்டு ஒப்பந்தக் கூலிகளாக இந்தியர் குடியேற்றம் நடைபெற்ற காலத்தில் தமிழர் மொரீசியசில் குடியேறினர். 1861ஆம் ஆண்டிலிருந்து சென்னைத் துறைமுகம் வழியாகத் தமிழரும் தெலுங்கரும் மராத்தியரும் மொரீசியசுக்குக் குடிபெயர்ந்தனர். இவ்வாறு குடிபெயர்ந்த தமிழர்களுள் பெரும்பாலோர் செங்கல்பட்டு, வடஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கடலூர், கும்பகோணம், வேலூர், சென்னை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். தமிழகத்திலிருந்து மொரீசியசில் குடியேற இத்தமிழர்களுக்கு எத்தனையோ இடித்தல், ஈர்த்தல் காரணிகள் (Push and Pull factors) இருந்தன.

இவ்வாறு ஒப்பந்தக்கூலிகளாக மொரீசியசில் குடியேறியவர்கள் தமிழ் மட்டுமே அறிந்த ஒருமொழியாள ராக, (monolinguals) இருந்தனர். இவர்கள் அடிப்படையில் எழுத்தறிவு இல்லாதவர்களாகவும், சமுதாய அடுக்கில் கீழ் அடுக்கு நிலையைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தனர். ஒருமொழியாளராக இருந்த இவர்கள் பிற இனத்தவரோடு தம் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள மொரீசியன் கிரியோல் என்னும் மொழியைப் பயன்படுத்த ஆரம்பித்தனர். நாளடைவில் தமிழ் மட்டுமே தெரிந்த முதலாவது தலைமுறையினரைத் தொடர்ந்து தமிழும் கிரியோல் மொழியும் தெரிந்த இருமொழியாளராக இரண்டாவது தலை முறையினர் உருவாயினர். இவ்விருமொழி (bilingual) நிலையில் கிரியோல் ஒரு தொடர்பு மொழியாக (contact language) மிகக் குறைந்த பயன்பாட்டுடன் வழங்கி வந்தது.

மூன்றாவது தலைமுறையினரும் இருமொழியாளராக விளங்கினர். ஆனால், இவர்கள் மொழிப் பயன்பாட்டில் கிரியோல் முழு ஆதிக்கம் செலுத்தியது. வீட்டில் மட்டும் அவ்வப்போது தமிழைப் பயன்படுத்தி வந்தனர். ஐரோப்பியர் களுக்கும் ஆப்ரோமொரீசியர்களுக்கும் இடையே தொடர்பு மொழியாக இருந்துவந்த கிரியோல் இந்திய ஒப்பந்தக்கூலிகள் மற்றும் சீனர்கள் வரவால் தொடர்புமொழிக்கு மேலாக வளர ஆரம்பித்தது. வீட்டுப் பயன்பாட்டளவில் சுருங்கிப் பல

இந்திய தாய்மொழிகள் மொழி இழப்பின் ஆரம்பக் கட்டத்திற்கு அடியெடுத்து வைத்தது இக்காலகட்டத்தில் தான்.

நான்காவது தலைமுறையினர் முற்றிலும் தாய் மொழித் தமிழை இழந்தனர். மொரீசியசில் குடியேறிக் கிட்ட தட்ட 120 ஆண்டுகளில் குடும்பம் போன்ற முக்கியமான மொழியாட்சிப் பகுதிகளில் (language domains) தமிழ்ப் பயன்பாடு குறைந்தது. மீண்டும் கிரியோல் மட்டுமே தெரிந்த ஒருமொழியாளராகப் பெரும்பாலான தமிழர் மாறினர். 1940களில் தமிழ் மீட்டெழுச்சிக்கான (Tamil language revival) விதையூன்றப்பட்டபோது இருந்த தமிழ்மொழியின் நிலையைத் துல்லியமான ஆய்வுக்கு உட்படுத்திப் பார்ப்போமேயானால் நான்காவது தலைமுறையினரிடையே நடந்துபோன தமிழ்மொழி இழப்பின்அழுத்தத்தை நன்கு உணர முடியும். ஐந்தாவது தலைமுறையைச் சார்ந்த பெரும்பாலோருக்கு மொழி ஊக்கம் (reinforcement) பெறும் சமூகச் சூழலுமின்றித் தமிழ் ஓர் அன்னியமொழி ஆகி விட்டதையும் பார்க்கும்போது ஸ்பால்ஸ்கி (Ṡpolsky) குறிப்பிடுவதுபோல் நான்கு படிநிலைகளில் தமிழ்மொழி இழப்பு நேர்ந்திருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்த முடிகிறது.

I.	குடியேறிய தலைமுறையினர்	தமிழ்+ (மொரீசியன் கிரியோல்)
II.	குடியேறிய தலைமுறையினரின் குழந்தைகள்	தமிழ் + மொரீசியன் கிரியோல்
III.	குடியேறிய தலைமுறையினரின் பேரக் குழந்தைகள்	மொரிசீயன் கிரியோல் + (தமிழ்)
IV.	குடியேறிய தலைமுறையினரின் கொள்ளுப் பேரக் குழந்தைகள்	மொரீசியன் கிரியோல்

இவ்வாறு முதலாவது தலைமுறையினர் தாய் மொழி யாளராகக் குடியேறி, இரண்டாவது மற்றும் மூன்றாவது

தலைமுறையினர் இருமொழியாளராக விளங்கி, நான்காவது தலைமுறையினர் மீண்டும் குடியேற்ற நாட்டின் மொழி மட்டுமே தெரிந்த ஒருமொழியாளராக மாறித் தாய்மொழித் தமிழை இழந்து போயினர். இம்மொழி இழப்பிற்குப் பல்வேறு மக்கள் தொகை காரணிகள் (demographic factors), அரசியல் காரணிகள் (political factors), சமுதாயக் காரணிகள் (social factors), சமுதாய மொழியியல் காரணிகள் (socio-linguistic factors) பொறுப்பாயின என்பது மொரீசியஸ் தமிழர் மொழி வரலாறு காட்டும் உண்மை.

படிப்படியாகத் தமிழை இழந்துவந்த காலத்திலும் தம் குழந்தைகளுக்குத் தமிழ்மொழியையும் பண்பாட்டையும் கற்பிப்பதில் மொரீசியஸ் தமிழர் ஆர்வம் காட்டினர். கோவில் களிலும், திண்ணைப் பள்ளிகளிலும் தமிழ் கற்பிக்கப்பட்டு வந்தது. 1850ஆம் ஆண்டு வரை அப்போது ஆட்சியிலிருந்த ஆங்கில அரசு இந்தியர்களுக்கென பொதுவான கல்விமுறை ஒன்றை வகுக்கவில்லை. 1850ஆம் ஆண்டில் மொரீசியஸ் கவர்னராக இருந்த ஹிக்கின்சன் தமிழ்க் கல்வியில் ஆர்வம் காட்டித் தமிழ்ப் பள்ளிகளைத் திறந்தார்.

தொடர்ந்து, இந்தியா விடுதலை அடைந்த காலத்தில் இந்திய மொழிக் கல்விக்குப் புதிய ஊக்கம் அளிக்கப்பட்டது. இக்காலத்தில் மொரீசியஸ் அரசியலில் இந்தியத் தலைவர்கள் செல்வாக்குப் பெற்றிருந்தனர். 1947ஆம் ஆண்டு கீழைமொழி களைப் பேசவும் எழுதவும் தெரிந்த படித்தவர்கள் அனைவரும் ஓட்டுரிமை பெறத் தகுதி உடையவர்கள் என்ற அரசியலமைப்புச் சட்டமொன்று அமலுக்குக் கொண்டு வரப்பட்டது. சீனம், குஜராத்தி, மராத்தி, இந்தி, தமிழ், தெலுங்கு, உருது ஆகிய மொழிகள் இச்சட்டத்தின் மூலம் முதன்முதலாக அரசின் அங்கீகாரம் பெற்றன. இச்சட்டம் கீழைமொழிக் கல்வி மேம்பாட்டுக்கு வழிவகுத்தது. 1948இல் நடந்த பொதுத் தேர்தல்களில் தொழிலாளர் கட்சி 19 இடங்களில் 10 இடங்களைப் பெற்றது. இச்செல்வாக்கைப் பயன்படுத்தி இந்தியாவிலிருந்து இந்தியமொழி அறிஞர்களை மொரீசியசுக்கு வரவழைத்துக் கீழைமொழிக் கல்வியை வளர்க்கப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. அரசும், கல்வியாளர்களும், ஆசிரியர்களும் கீழை மொழிக் கல்வியைத் தீவிரமாகச் செயற்படுத்தத் தொடங்கியது இக்கால கட்டத்தில்தான். மொரீசியஸ் அரசின் இச்சட்டமும் கீழை மொழிக் கல்விமீது காட்டிய ஈடுபாடும் மொரீசியஸ் இந்தியர்

களின் மொழி மனப்பாங்கில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை விளைவித்தது. குறிப்பாகத் தமிழர்களைப் பொறுத்த வரையில் இழந்துபோன தமிழ்மொழியைத் தமிழ்க்கல்வி மூலம் மீட்டெடுக்க இச்சட்டம் வழிகோலியது.

*1968*இல் மொரீசியஸ் ஆங்கிலேயர் காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது. அப்போது இந்தி, தமிழ், மராத்தி, தெலுங்கு, வங்காளம், சீனம் முதலான மொழிகளுக்கான கீழைமொழிக் (Oriental languages) கல்வி மொழிக் கலைத்திட்டத்தில் முக்கிய இடம்பெற்றது. மொழி ஆசிரியர் பயிற்சிக்குப் புதிய ஊக்கம் அளிக்கப்பட்டது. எண்பதுகளில் புதிய பாடநூல்களும் தயாரிக்கப்படவே தமிழ்க்கல்வியில் புத்துணர்வும் உத்வேகமும் உண்டாயின. அரசியல் ரீதியாக மொரீசியசின் மொழிக்கொள்கை அவ்வப்போது விவாதிக்கப் பட்டுக் கீழைமொழிக் கல்வியின் இன்றியமையாமை எல்லா நிலைகளிலும் முக்கியமாகக் கருதப்பட்டது. கீழைமொழிகளையும் அம்மொழிகளைப் பேசுவோரின் பண்பாடுகளையும் போற்றிப் பாதுகாக்கும் ஒரு பன்மைப் பண்பாட்டுச் சமுதாயத்தை உருவாக்குவது மொரீசியஸ் அரசின் நோக்கமாக அமைந்தது. இந்நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் கீழைமொழிக் கல்விக்கென மகாத்மா காந்தி நிறுவனம் தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்தின் தமிழ்த் துறை தமிழ்ப் பாடத்திட்டம் உருவாக்குவதிலும் பாட நூல்கள் எழுதுவதிலும் ஈடுபட்டது. மொரீசியசின் தமிழ்ச் சூழமைவுக்கேற்ற மொழிக் கல்வியைத் தமிழ் மாணவரின் மொழித்திறன் அறிந்து வழங்க இத்துறையில் பல ஆய்வுகள் நடத்தப்பட்டன. இன்றும் பாடநூல் உருவாக்கமும் தமிழ்க் கல்வியியல் ஆய்வும் மொரீசியஸ் கல்வி நிறுவனத்தோடு (Mauritius Institute of Education) இணைந்து நடைபெற்று வருகின்றன. இவ் ஆய்வுகளைத் தவிர நிறுவன நிலையில் மொரீசியஸ் பல்கலைக் கழக மொழியியல் துறை அவ்வப்போது தமிழர் குடியேற்றம் பற்றியும், தமிழ்மொழி மற்றும் பண்பாடு பற்றியும் மேற்கொண்டு வருகின்ற ஒருசில மொழியியல் ஆய்வுகளையும் குறிப்பிடலாம்.

குடியேற்றம், தாய்மொழி இழப்பு, தாய்மொழிக் கல்வி, தாய்மொழி மீட்டெழுச்சி என்னும் படிநிலைகளில் அமைந்துள்ள மொரீசியஸ் தமிழர் வரலாற்றைச் சமுதாய மொழியியல் நோக்கில் பார்க்கும்போது தாய்மொழி இழப்பிற்கு இலக்கான ஒரு சமுதாயம் திட்டமிட்ட மொழிக்

கல்வி மூலம் மீட்டெழுச்சிக்குத் தயாரான வளர்ச்சிநிலையைக் காணமுடிகிறது. விடுதலைக்குப் பின்னர்க் கீழைமொழித் திட்டத்தில் தமிழ்மொழிக்கும் பண்பாட்டுக்கும் மொரீசியஸ் பாதுகாப்பு அளித்தது. இதனை ஆதாரமாகக் கொண்டு தமிழ்ச் சமூகத்தினர் இழந்துபோன தமிழை மீட்டெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இன்றைய இளைய தலைமுறையினரிடம் தமிழ் ஓரளவு பயன்பாட்டுப் பெருமையைப் பெற்றிருப்பது இத் தமிழ்க் கல்வித் திட்டத்தாலேயாகும். மொரீசியஸ் அரசின் இத்திட்டத்தை இவர்கள் நன்றியுணர்வோடு கருதிப் பார்க்கின்றனர். தமிழ்மொழியையும் பண்பாட்டையும் நீண்டகாலம் காத்துநிற்கவும், தமிழ்க்கல்வி வளர்ச்சியில் ஏற்றம் காணவும் கீழைமொழிக் கல்வித் திட்டத்தையே ஆதாரமாகக் கருதுகின்றனர். தமிழனை அடையாளம் காணும் இவ் ஒரே மொழியாட்சிப் பகுதியிலும் தமிழ் போற்றப்படாவிட்டால் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு பற்றிய சிந்தனைக்கும் உயர்நிலை ஆய்வுக்கும் தேவையில்லாமல் போய்விடும். எனவே, மொரீசியசில் இன்று தமிழியல் ஆய்வு தமிழ்க்கல்வி வளர்ச்சியை ஆதாரமாகக் கொண்டுள்ளது எனலாம்.

தமிழ் இலக்கிய ஆய்வைப் பொறுத்தவரையில் ஈழத்துத் தமிழ் இலக்கியங்கள், மலேசியத் தமிழ் இலக்கியங்கள், சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியங்கள் என்று கூறத்தக்க வகையில் மொரீசியசில் தமிழ் இலக்கியங்கள் அதிகமாக எழுதப்படவில்லை. இங்கு எழுதப்பட்டவையெல்லாம் சிறுசிறு பக்திமாலைகளும் கட்டுரைகளும் மட்டுமே. எழுத்திலக்கியங்கள் தோன்றுவதற்கான கல்விச் சூழல் குடியேறிய காலத்திலிருந்தே இத்தீவில் இல்லை. அத்துடன் படிப்படியாக நடைபெற்ற தமிழ்மொழி இழப்பும் படைப்பு இலக்கிய உருவாக்கத்திற்கு வழிவகுக்கவில்லை. ஓரளவு படித்த தமிழர்கள் சமூக அந்தஸ்தும், செல்வப் பெருக்கும் உடையவர்களாக இருந்ததால் தாய்மொழித் தமிழை மறந்து ஐரோப்பிய மொழிகளில் தேர்ச்சி பெறுவதிலும் ஐரோப்பிய நாகரிகத்தைப் பின்பற்றுவதிலும் நாட்டமுடையவராக இருந்தனர். 1947இலிருந்து வலியுறுத்தப் பட்டு வந்திருக்கிற தமிழ்க்கல்வி பல்கலைக்கழக நிலைக்கு உயரும்போது தமிழ் இலக்கிய ஆய்வு மொரீசியசில் நடைபெற வாய்ப்பு ஏற்படலாம்.

கிட்டத்தட்ட முற்றிலுமாக இழந்துபோன தாய் மொழித் தமிழை மொழிக்கல்வித் திட்டத்தின் மூலம்

மீட்டெடுக்க மொரீசியஸ் தமிழ்ச் சமூகத்தினர் முயன்று வருகின்றனர். இம்முயற்சி கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இதற்காக ஆண்டுதோறும் ஏராளமான குழந்தைகள் தமிழ்க்கல்வியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். பல தமிழாசிரியர்கள் தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழ் பயின்று தமிழ்க் கல்வித்தரத்தை உயர்த்தி வருகின்றனர். இவர்களுள் சிலர் முனைவர் பட்ட ஆய்வை மேற்கொண்டு வருகின்றனர். மகாத்மா காந்தி நிறுவனத்தில் பணியாற்றிக்கொண்டே தமிழகப் பல்கலைக் கழகங்களில் இவர்கள் இவ் ஆய்வுப்படிப்பை மேற்கொண்டு வருகின்றனர். இன்னும் சில ஆண்டுகளில் பள்ளிக் கல்வித் தொடர்பான ஆய்வுகளுக்கு மேலாகத் தமிழ் இலக்கியம், மொழி பற்றிய மேனிலை ஆய்வுகள் மொரீசியசில் நடைபெறும் வாய்ப்பு ஏற்படும்.

இந்நிலையில் மொரீசியசில் இன்று உருவாகியுள்ள இரண்டு முக்கியமான மொழிச் சிக்கல்களை இங்குக் குறிப்பிட வேண்டியது இன்றியமையாததாகும். முதலாவது சிக்கல் கீழைமொழிக் கல்வித்திட்டத்தோடு தொடர்புடையது. இரண்டாவது சிக்கல் தமிழ்க்கல்வியின் மீது தமிழ்ச் சமூகத்தினரின் மாறிவரும் மனப்பாங்கோடு தொடர்புடையது.

ஆரம்பக் கல்வி நிலையிலிருந்தே இந்தி, தமிழ், தெலுங்கு, மராத்தி, உருது, தற்கால சீனம் ஆகிய மொழிகள் தற்போது கற்பிக்கப்பட்டு வருகின்றன. மேனிலை வகுப்புத் தேர்வில் கீழைமொழிகளில் மாணவர் பெறும் மதிப்பெண்களை 'மதிப்புத் தரத்தை' (ranking) நிர்ணயிக்கச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்னும் கோரிக்கை நீண்டகாலமாக இருந்து வந்தது. இது தொடர்பான சட்ட திருத்தமொன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வரவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டு வந்தது. கீழைமொழியினரின் இவ்வேண்டுகோளை மொரீசியஸ் பிரதம மந்திரியால் நிறைவேற்ற இயலவில்லை. இதன் விளைவாகச் சமீபத்தில் மொரீசியஸ் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. பின்னர் நடைபெற்ற தேர்தலில் எதிர்க்கட்சி வெற்றிபெற்று அரசு அமைத்துள்ளது. கீழைமொழியினரின் வேண்டுகோள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அரசின் இப்போக்குக் கீழைமொழிக் கல்விமுறையில் பெருத்த மாற்றத்தை விளைவித்துவிடப் போவதில்லை என்பது உண்மை.

இருந்தாலும் தமிழ்க் கல்வி இனம்புரியாத அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதோ என்ற அச்ச உணர்வை மொரீசியஸ் தமிழ் ஆர்வலர்களால் முற்றிலுமாக விலக்கிக்கொள்ள முடியவில்லை.

முறையான மொழித்திட்டமிடுதலால் (language planning) மொழிப் பயன்பாட்டில், எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்த முடியும். மொரீசியஸ் அரசு தமிழ் உட்பட சில கீழைமொழிகளின் மீட்டெழுச்சிக்கு மொழிக்கல்வி மூலம் உதவ இயலும் எனக் கருதினால் அதற்கேற்ப மொழிக் கொள்கைகளை வகுத்துக் கல்வித் திட்டத்தில் மாற்றங் களைக் கொண்டு வரலாம். ஆரம்பக் கல்வியில் கீழை மொழிகளைக் கட்டாயப் பாடமாக ஆக்கியிருப்பதோடு மேனிலைக் கல்வியில் இம்மொழிகளில் மாணவர் பெறும் மதிப்பெண்களை 'மதிப்புத்தரத்தை' நிர்ணயிக்கவும் சேர்த்துக்கொண்டால் இம் மொழிகளைக் கற்பதில் மாணவர்க்கு ஆர்வம் மிகும். இதன் மூலம் தமிழ் மீட்டெழுச்சிக்குப் புத்துயிர் அளிக்க முடியும். எல்லாவற்றுக்கும் மேலாக மொழிக் கல்வி வழியாகக் கீழை மொழியினரின் மொழியையும் பண்பாட்டையும் காப்பது என்னும் அரசின் நோக்கமும் நிறைவேறும்.

இரண்டாவது சிக்கல் நாம் முன்னரே குறிப்பிட்டது போல் தமிழர்களின் மொழிமனப்பாங்கோடு தொடர்பு டையது. இன்று மொரீசியஸ் ஆரம்பப் பள்ளிகளில் தமிழ் கற்க வரும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. தமிழர்களிடையே ஏற்பட்டு வருகின்ற சமூகப் பொருளாதார மேம்பாடு இதற்குக் காரணமாக இருந்தாலும் பொதுவாகத் தாய்மொழிக் கல்வி தம் சமூகத்தைப் பிற சமூகங்களிலிருந்து தனிப்படுத்திவிடும் என்று அஞ்சும் பிற கீழை மொழியாளர் களிடமிருந்து தமிழர்களைப் பிரித்து நோக்க முடியவில்லை. இவ்வச்சம் எல்லாக் கீழைமொழியினரிடமும் காணப்படுகிறது. எனவே, மொரீசியஸ் குடியேறியவர்களின் நாடாக (Settlers' island) வரலாறு படைத்திருந்தாலும் 'மொரீசியனிசம்' என்னும் பொதுவான தேசிய உணர்வு உருவாக வேண்டியதன் தேவையையும் கட்டாயத்தையும் இன்று மொரீசியர்கள் உணர்ந்துள்ளனர். இத் தேசிய உணர்வு மொரீசியர்களே மொரீசியர்களுக்காக மொரீசியசிலே உருவாக்கியுள்ள பொதுமொழி (Mauritian Creole) பொதுப்

பண்பாடு (Mauritian Culture) அடிப்படையில் வளரவேண்டும் எனப் பல மொரீசியர்கள் கருதுகின்றனர். ஆனால், மொரீசியன் கிரியோலைப் பண்படாத மொழி என இன்றும் கருதும் பலர் மொரீசியசில் வழங்கும் அனைத்து மொழிகளுக்கும் பண்பாடுகளுக்கும் மதிப்பளிக்கும் ஒரு பன்மைப் பண்பாட்டுச் சமுதாயமாக இத்தீவு விளங்க வேண்டும் எனக் கூறி வருகின்றனர். இக் குழப்பமான சூழலில் பாதுகாப்பு கருதித் தமிழர் தாய்மொழிக் கல்வியை மேனிலைக் கல்வியில் அதிகமாக நாடவில்லை. ஆனால், முந்திய தலைமுறையைக் காட்டிலும் இளைய தலைமுறையினரிடையே காணும் தமிழார்வமும், தமிழ்ப் பயிற்சியும் மொரீசியஸ் அரசின் கீழை மொழிக் கல்வித்திட்டத்தால் விளைந்த பயன்கள் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. தம் இன அடையாளம் தொலைந்து போகாத அளவுக்குத் தமிழ்க்கல்வியைப் போற்றும் மனப்பாங்கு இன்றும் தமிழர்களிடமிருந்து முற்றிலுமாக மறைந்துவிடவில்லை.

மொரீசியசில் தமிழின வளர்ச்சிக்குத் தமிழ்க் கலவி எவ்வளவு ஆதாரமாக விளங்குகிறதோ அவ்வளவுக்குத் தமிழியல் ஆய்வுக்குத் தமிழ்க் கல்வி ஆதாரமாக விளங்குகிறது. எனவே, தமிழ்க்கல்வியில் ஏற்படும் சிறு மாற்றம் கூடக் குறைந்த அளவிலாவது நடைபெற்று வரும் தமிழியல் ஆய்வைப் பாதிக்கும் என்பது திண்ணம். மொரீசியஸ் தமிழியல் ஆய்வு தமிழ்க் கல்வியியல் ஆய்வோடு தொடர்புடையது. இவ்விரண்டையும் பிணைக்கும் மெல்லிய நூலிழையின் உறுதியில்தான் மொரீசியஸ் தமிழரின் இன அடையாளமும் பண்பாட்டு அடையாளமும் இன்று பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

பயன்பட்ட நூல்கள்

1. இராசாராம், சு., மொரீசியஸ் தமிழரும் தமிழும், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1991.

2. Ammigan, T., **Oriental Languages in Mauritius**, Mauritius: Ardwin Printing. 1981.

3. Burton, Benedict, **Mauritius Problems of a Plural Society**, London : Pall Mall Press. 1965.

4. Kennedy, Chris, **Language Planning and Language Education,** London : George Allen & Unwin. 1983.

5. Moag, Rodnew, F., "Casual Factors in the loss/maintenance of Minority Language : The Case of Tamil in Fiji" **International Journal of Dravidian Linguistics,** Vol.XVI No.1. Trivandrum : Dravidian Linguistics Association, 1987.

6. Spolsky, Bernard, **Educational Linguistics : An Introduction,** Rowlev:Newburv House Publishers. Inc., 1978.

7. UNESCO **The Use of Vernacular Languages in Education.** Monographs on Fundamental Education, Paris : UNESCO, 1953.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 600 113

அண்மை வெளியீடுகள்

செந்தமிழ் அகராதி	150. 00
சொற்பிறப்பு – ஒப்பியல் தமிழ் அகராதி	200. 00
ஐங்குறு நூறு	85. 00
நன்னூல் மூலமும் விருத்தியுரையும்	225. 00
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்	40. 00
தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி	30. 00
பொருள் புதிது	35. 00
ஆளும் தமிழ்	28. 00
தமிழின் பா வடிவங்கள்	35. 00
சங்க இலக்கியம் – கவிதையியல் நோக்கு...	110. 00
நாடக மேடை நினைவுகள்	160. 00
சின்னணைஞ்சான் கதை	65. 00
தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள்	110. 00
நன்னூல் மூலமும் கூழங்கைத்தம்பிரான் உரையும்	65. 00
யாப்பருங்கலம்	170. 00
மண்டல புருடர் வழங்கிய சூடாமணி நிகண்டு	65. 00
தமிழ் நாடகமேடை முன்னோடிகள்	40. 00
காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் – ஓர் ஆய்வு	60. 00
திருக்குற்றாலநாத சுவாமி கோயில் வரலாறும் பண்பாடும்	60. 00
வெள்ளுடை வேந்தர் தியாகராயரின் வாழ்வும் பணியும்	65. 00
தமிழ்நாட்டு வரலாற்றில் இலக்கிய ஆதாரங்கள்	100. 00
இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள், தொகுதி – 1	100. 00
கதிர்வேற்பிள்ளை – தமிழ்ச் சொல்லகராதி, மூன்று பாகங்கள்	600. 00
சங்கத் தமிழர் வாழ்வியல்	75. 00
வேதகிரியார் சூடாமணி நிகண்டு	65. 00
தமிழக மேடை நாடகப் பெண் கலைஞர்கள் – குறிப்பேடு	25. 00
Persona in Tolkapiyam	50. 00
Studies in Tamil Prosody and Poetics	45. 00
Literary Criticism in Tamil and Sanskrit	45. 00
Tamil India	40. 00
Critical Studies in Kural	30. 00
Tani pacura togai (மொ.நூ.ம.ப)	30. 00
Dedication (மொ.நூ.ம.ப)	25. 00
Temple chimes (மொ.நூ.ம.ப)	20. 00
Nala venba (மொ.நூ.ம.ப)	45. 00
Tamil Heroic Poems (மொ.நூ.ம.ப)	40. 00
Six Long Poems From Sangam Tamil (மொ.நூ.ம.ப)	30. 00